உ

கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தினின்று

மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

பதினான்காந்தொகுதி.

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

1915—1916.

162399
JL
O31m21',No2
N02.14

உ

செந்தமிழின்
பதினொன்றாந்தொகுதியுள்ளுறை.

அந்தகக்கவிவீரராகவ முதலியார் காலம்:—	ஸ்ரீமத்-வே. ஜோ தம்பிப்பிள்ளையவர்கள்.	சஎரு
அருண்மாட்சி:—	,, வ. மு. இரத்தினேசுவரையரவர்கள்.	கசுசு
அன்பைப்பற்றிய பாடல்கள் :—	,, T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள்.	ககஉ
அனுதாபக்குறிப்பு:—	,, பத்திராதிபர்.	ருகக
ஆகாப்பத்து:—	ஸ்ரீமத்-வை. சா. வேங்கடராமன் அவர்கள்.	ருஉசு
இந்தியாவின் அரசியல்:—	,, M. S. சேஷையங்காரவர்கள்.	அசு, ககஎ, உஎஎ
இப்பொழுதுகிடைத்த வினாயாபதிச் செய்யுண் முதலியன:—	,, T. K. இராமாநுஜஐயங்காரவர்கள்.	ருஎக
இரங்கற்பாக்கள்:—	,, வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள்.	ருகக
இரண்டு வேதாரணியத்துச் சாஸனங்கள்	,, சோமசுந்தரதேசிகரவர்கள்.	ருசுரு
இலக்கணதீபம்:—	பத்திராதிபர்.	உருஅ
உவமானசங்கிரகம்:—	ஸ்ரீமத்-A. M. சடகோபராமாநுஜாசாரியரவர்கள்.	கசுக
எத்துணையோபரி பாடல் என்பதைப் பற்றிய ஒரு குறிப்பு	,, வே. முத்துஸாமி ஐயரவர்கள், M. A., L. T.	சுக
ஏலேயகாவியம்:—	,, S. மயில்வாகனம் அவர்கள்.	உஅக

ஐயவினுத்தொடர்:—	,, ஊ. சா. வேங்கடராமன் அவர்கள்.	கஉ...
ஒரு திருவாரூர்ச் சாசனம்:—	,, சோமசுந்தரதேசிகரவர்கள்.	௪அ...
ஒரு பொதுக்கூட்டத்தின் தீர்மானம்:—	,, ஆ. ச. ஆறுமுகம்பிள்ளையவர்கள்.	௩௪...
ஒசனேயென்பது காவதமோ நாற்காவதமோ?	,, டி. எஸ். குப்புசாமிசாஸ்திரியவர்கள்.	௫௦
ஓர் வேண்டுகோள்:—	,, வி. ஏ. வி. காசிநாதன் செட்டியாரவர்கள்.	க௫...
கல்விப்பயிற்சிக்குரிய தாய்மொழி:—	,, இராதாகிருஷ்ணபிள்ளையவர்கள்.	௩௪௫...
காவேரிபாக்கத்துச் சாசனம்:—	,, து. அ. கோபிநாதராவ் அவர்கள் M. A.	௪௯...
குடிதாங்கியைப்பற்றியோர் குறிப்பு:—	,, சோமசுந்தரதேசிகரவர்கள்.	௪அ...
குறுந்தொகை:—	,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்.	௩௩...
குறுந்தொகையுரையாராய்ச்சியும் பாடாந்தரமும்:—	,, கந்தசாமியாரவர்கள்.	கஅ௫...
கோகழிவிளக்கம்:—	,, கந்தசாமியாரவர்கள்.	௪௪...
கோச்செங்கணன் காலமெது? :—	,, S. சுப்பிரமணியசாஸ்திரியவர்கள்	௪க...
சில வகுப்பார்களின் பட்டப்பெயர்களைப் பற்றிய குறிப்புகள்:	,, ஜி. ஏ. சுந்தரமையரவர்கள், B. A., B. L.	௩உஉ
சிறுபஞ்சமூலம்:—	,, சோமசுந்தரதேசிகரவர்கள்.	௩...
சேதுபதி மஹாராஜா அவர்கள் செய்த உபந்யாசம்:—	ஆனரபிள் ஸ்ரீமத்-ராஜராஜேச்வர சேதுபதி மஹாராஜா அவர்கள்.	௩உ...

உள்ளுறை

சைவசமயிகளுக்கு விக்ஞாபனம்:—	ஸ்ரீமத்-தி. அ. சு. அ. ராமநாதன் செட்டியாரவர்கள்.	உ௫உ
ஞானதரிசினி:—	,, M. M. நாராயணஸாமி ஐயரவர்கள்.	க௫௪
தமிழ்நாடுகள்:—	,, S. சுப்பிரமணியசாஸ்திரியவர்கள்.	௪கஎ, ௪௬௫
தமிழகம்:—	,, வே. இராதாகிருஷ்ணன் அவர்கள், பி. ஏ.	௪௬௬
தமிழர் ஆரியரே:—	,, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள்.	௩௪௦
தமிழெழுத்துத் தமிழெழுத்தே:—	,, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள்.	உ௬
தக்ஷிணதேசமும் தக்கநாடும் ஒன்றுமன்று வேறுமன்று:—	பத்திராதிபர்.	௫௩
தக்ஷிணதேசமும் தக்கநாடும் ஒன்றா? வேறா? :—	ஸ்ரீமத்-T. S. குப்புஸ்வாமிசாஸ்திரியவர்கள்.	௪௬
திரிகடுகம்:—	,, சோமசுந்தரதேசிகரவர்கள்.	௬உ
திருவள்ளுவரும் ஞானவெட்டியும்:—	,, T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள்.	கஎக
திருவெண்காட்டுச் சாசனங்கள்:—	,, து. அ. கோபிநாதராவ்அவர்கள் M. A.	௩௬க
நக்கீரர்செய்தநிகண்டு:—	,, தமிழ்கற்போன்.	௪௬அ
நட்பு:—	,, சு. ஹரிஹரையரவர்கள்	௩௬௫
நெற்குன்றைவாண முதலியார்:—	,, சோமசுந்தரதேசிகரவர்கள்.	௪கக
பசுவின் பெருமை:—	,, M. M. நாராயணஸாமி ஐயரவர்கள்.	எ௫

பதார்த்ததீபிகை:—	,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்.	௩ள' களஎ, ௩0௨
பழமொழி:—	,, அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்.	சச0
பழமொழி முதற்பாட்டும் சில பிழை திருத்தமும்:—	பத்திராதிபர்.	சங.அ
பாண்டியன்மாகீர்த்தி:	ஸ்ரீமத்-S. சுப்பிரமணியசாஸ்திரியவர்கள்.	சசஅ
பிழைதிருத்தம்:—	பத்திராதிபர்.	சகசு, சகூச
புத்தகமதிப்புரை:—	பத்திராதிபர்.	சுசு, அஅ, க௨அ, ௨கங, ௨அவ, ௩௨எ, ௩கூஎ, சகசு
பூர்வீக இந்தியர்களின் வியாபார வழக்கம்:—	சுதேசமித்திரன்.	க௨க
பெண்கல்வி:—	ஸ்ரீமதி-ரா. சுப்புத்தாயவர்கள்.	௨எ0
பேராவூர்—பிடவூர்:—	ஸ்ரீமத்-சோமசுந்தரதேசிகரவர்கள்.	௨0அ
போர்க்கருவிகள்:—	,, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள்.	கஅ௨
மக்கட்பேறு:—	,, I. M. முருகையவாத்தியாரவர்கள்.	கஙங
மகளிர்மணம்:—	,, T. N. அப்பணையங்காரவர்கள்.	௩அக
மகாசனங்களுக்கு விண்ணப்பம்:—	,, சங்கத்தலைவரவர்கள், கரந்தை.	சகூஅ
மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்பதினைந்தாம் வருஷோத்ஸவ மங்கலவாழ்த்து:—	,, வி. திருஞானசம்பந்தம் அவர்கள்.	௨எ௫
௸	,, ம. கோபாலகிருஷ்ணையரவர்கள்.	௨எசு

௸	,, T. K. இராமாநுஜ ஐயங்காரவர்கள்.	௩0க
௸	,, சு. நல்லசிவன்பிள்ளையவர்கள்.	௩0௨
மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்கு அளித்த விசேஷ நன்கொடை	மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியதரிசிகள்.	௨௩க
மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபையின் தீர்மானங்கள்:—	மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் மானேஜரவர்கள்.	கஎசு, ௨௩ச, ௩௨௫.
மதுரைத்தமிழ்ச்சங்கப் பரீக்ஷைகளின் தேர்ச்சி விவரம்:—	மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியவர்கள்.	௨கஎ
மதுரைநாயக்கர் வம்சத்தரசர்கள்:—	ஸ்ரீமத்-R. S. நாராயணஸாமி ஐயரவர்கள், B. A., B. L.	௩கங, ௩௫௩, ௩அ௫, சஅ0.
மறைசைக்கலம்பகம்:—	,, நடராசபிள்ளையவர்கள்.	கஎ0
மானிடர்கடமை:—	,, நமச்சிவாயத்தம்பிரானவர்கள்.	௨௫௩
மும்முரசம்:—	,, வே. இராஜகோபாலனவர்கள்.	ச௫க
மேற்கோள்விளக்கம்:—	,, S. இராதாகிருஷ்ணையரவர்கள், B. A., F. M. U.	க
௸:—	,, S. முத்தாரதமுதலியாரவர்கள்.	கக௫
ரஸாயனநூல்:— (Chemistry)	,, R. S. நாராயணஸாமி ஐயரவர்கள், B. A., B. L.	௩ச, சு௫, க0௫, கச௫, ௨சசு, ௩0௫.
ராமாயணகுசேலன்:—	,, வி. சுப்பிரமணிய ஐயரவர்கள்.	ககஎ
ருக்மிணிவிவாஹ பராமர்சம்:—	பத்திராதிபர்.	௨௨, கஎ.

ருதுமதீவிவாஹம்:— ஸ்ரீமத்-M. R. ஸ்ரீநிவாஸையரவர்கள். கஅ, அகூ, உ0க.

வண்டின் ஒலி:— ,, R. வேங்கடாசலம்பிள்ளையவர்கள். சகரு

வறுமையிற்செம்மை:— ,, ஸ. சா. வேங்கடராமன் அவர்கள். உகூரு

வாழ்த்துப்பாக்கள்:— ,, வே. முத்துஸாமி ஐயரவர்கள், M. A., L. T. கசச

வேள்பாரியின் கொடைவிறல்:— ,, வ. மு. இரத்தினேசுவரையரவர்கள். உக0

ஸ்ரீரங்கத்துச்சாசனங்கள் ,, து. அ. கோபிநாதராவ்அவர்கள், M. A. கஎரு

செந்தமிழ்ப் பதினான்காந்தொகுதியில் வெளிவந்தநூல்:—

(முற்றுப்பெறாதது.)

பழமொழி மூலமும் உரையும்:— பத்திராதிபர். க, உ, ௩, ச, ரு, சு, எ, அ, கூ, க0, கக, கஉ தொகுதிகள்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கச.] ராக்ஷஸ௵ கார்த்திகை௴ [பகுதி-க.

Vol. XIV. November—December, 1915. No. 1.

மேற்கோள் விளக்கம்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட

கலித்தொகைப்பாட்டுக்களின் அட்டவணை.

முன்னுரை.

தொல்காப்பியப் பொருளதிகாரம் கற்றுக்கொள்பவர்களுக்கும், கலித்தொகைவாசிப்பவர்களுக்கும் உபயோகப்படலாமென்றுநினைத்துப் பின் அச்சிட்டிருக்கும் அட்டவணையை யமைக்கலாயினேன். வேறொருவர் உதவியின்றி என்வேலையாகவே இது இயன்றதனால் நான் காட்டியிருக்கும் உத்தேசம் நானூறுமேற்கோள்களுக்குமேல் எனக்குவிளங்காத பலமேற்கோள்களிருக்கலாம். அவற்றுள் இருபதுக்குக்குறையாமல், செந்தமிழ்ப்பத்திரிகையிலச்சிட அப்பத்திரிகையின் மானேஜரவர்களுக்கு மேற்கோள்களை முற்பட்டனுப்புகிறவர்களுக்கு மேற்கோள்ஒன்றுக்கு அணா எட்டுவீதம் இனாம்கொடுக்கச்சித்தமாயிருக்கிறேன் என்று செந்தமிழிற்பிரசுரம்செய்யும்படி மானேஜரவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

கலித்தொகையின்பாட்டுக்களை யார்யார் எழுதினார் என்பது விளங்காதவிஷயமாகவேயிருக்கிறது. 142-ஆம் பாட்டாகிய "புரிவுண்ட" என்னும் நெய்தற்கலியுரையிற்கூறியதை ஆதாரமாகக்கொண்டு இந்நூன்முழுவதையும் நல்லந்துவனாரே எழுதினார்என்றுசாதிப்பது தவறு

என்பது, (ஐங்குறுநூற்றில்உபயோகித்திருப்பதுபோல்) கலித்தொகையின் 88-ஆம்பாட்டாகிய "ஒரூஉக், கொடி"என்னும் மருதக்கலியிற் பிரயோகித்திருப்பதையறிந்தும், 136-ஆம்பாட்டினுரையில், "புள்ளிக் கள்வன்"என்றார் மருதத்தினும் என்றுகூறுதது "புள்ளிக்கள்வன்"மென்றார்பிறரும் என்று நச்சினார்க்கினியரெழுதிய உரையினால்விளங்கும்.

"பெருங்கடுங்கோன் பாலை குறிஞ்சி கபிலன்
மருதனிள நாகன் மருதம் - மருஞ்சோழ
னல்லுத் திரன்முல்லை நல்லந் துவனெய்தல்
கல்விவலார் கண்ட கலி"

என்னும் ஒருவெண்பா சேர்னாப்பட்டு வித்யாபாநு என்ற பத்திரிகையிற் காணப்படுகிறது. கலித்தொகையின் ஐந்துபிரிவுகளையும் முறையே பாலைபாடியபெருங்கடுங்கோமுதலிய ஐந்துபுலவர்களும் பாடினார்கள் என்று இவ்வெண்பா கூறுகிறது.

இப்பாட்டு உற்றதையுரைக்கும் பழையபாட்டோ? அல்லது பிற்காலத்தாரொருவர் யுக்தியைச்செலுத்தி இயற்றிய புதுப்பாட்டோ?

"பாலைபாடியபெருங்கடுங்கோ"என்ற சிறப்புப்பெயரைத்தாங்கிய வரைப் பாலைக்கலியுடன்சம்பந்தப்படுத்துவதும், ஐங்குறுநூற்றுள் நூறுகுறிஞ்சிப்பாட்டுக்களையும், பத்துப்பாட்டில் (பொருளதிகாரம் 19-ஆஞ்சூத்திரவுரையிற்கூறியபடி) பெருங்குறிஞ்சியையும்பாடிக் குறிஞ்சி பாடுவதிற்றேர்ந்தவர் என்று பெயர்பெற்ற கபிலரைக் குறிஞ்சிக்கலிப் பாக்களுடன்சேர்ப்பதும், கலித்தொகை 142-ஆம்பாட்டின் ஆதாரத்தைவைத்துக்கொண்டு நெய்தற்கலிப்பாக்களுடன் நல்லந்துவனாரைச் சேர்ப்பதும், மருதம் இளநாகனார் என்பதுதான் இவர்பெயரோ என்று எண்ணும்விதம் மருதனிளநாகன் என்ற பெயரையுடைய ஒருவரை மருதத்துடன்சம்பந்தப்படுத்துவதும், ஒருவர் வித்வத்தையும், விவேகத்தையும்விளக்கும். ஆனால் விஷயம் இவ்விதம்தானா?

ஐங்குறுநூற்றைப்போல் வெண்பாவிற்கண்டிருக்கும் ஐந்துபுலவர்களும் சமமான இலக்கமுள்ளபாடல்களைச்செய்திருந்தால் இவர்கள் ஓர் ஏற்பாட்டின்மேற் கலிப்பாக்களை இயற்றினார்களென்றுகொள்ளலாம். விஷயம் இதற்குமாறாகவிருக்கிறது. பாலை, குறிஞ்சிமுதலிய பிரிவுகளில் முறையே 35, 29, 35, 17, 33-பாடல்கள் இருக்கின்றன. ஆயினும் இவ்வாக்ஷேபம் வலியதன்று.

அளவிலாவியப்புடன் கலித்தொகைக்கு உரையெழுதின "புலவர் உச்சிமேற்கொள்" நச்சினார்க்கினியர் மேலேகண்ட ஐவர்பெயர்களையும் எங்கேயாவது சூசிப்பித்திருக்கக்கூடாதா?

"ஊர்க்கானிவந்த" என்னுங் குறிஞ்சிக்கலியுரையில் "ஞாழல் முடித்தாளென நெய்தற்றலைவிபோலவும், "ஊர்க்கானிவந்தபொதும்ப"ரென்றதனான் மருதத்துக்கண்டான்போலவுங்கூறிக் குறிஞ்சிப்........ பொருளாகமுடித்தானாதலிற் குறிஞ்சியுட்கோத்தார்"என்று நச்சினார்க்கினியரெழுதியிருக்கிறார். யார்கோத்தார்? கபிலரா? நல்லந்துவனாரா? பலர்பாடிய பல குறிஞ்சிக்கலிகளை ஆராய்ந்து திணைமயக்கமுள்ள இப்பாட்டையும் மேற்கூறியகாரணத்தாற் குறிஞ்சிக்கலியென்றே தீர்மானித்து அவ்வகைக்கலிப்பாக்களில் மேலான இருபத்தொன்பது கலிப் பாக்களைக் குறிஞ்சிக்கலியென்று சேர்த்துவைத்தார் கபிலர் என்று கொள்வோமா? அல்லது இவ்விதவேலையை நல்லந்துவனாரேசெய்தாரென்று நினைப்போமா?

இப்படியே கூன்பாட்டாகிய "என்னோற்றனை"யென்னும் மருதக் கலியுரையில் "இஃது ஊடற்பகுதியாகலின் மருதத்துக்கோத்தார்"* என்று கூறியிருக்கிறது. இதன்பொருளும் விளங்கவில்லை.

கடவுள்வாழ்த்துப்பாட்டுரையில் "பாலைத்திணையையுந் திணையாக ஆசிரியர் நல்லந்துவனார்கோத்தார்........"என்று கூறியிருக்கிறதே. இதன்பொருளென்ன? பெருங்கடுங்கோ, "பாலைக்கலி"என்று முப்பத்தைந்துபாட்டுக்களை இயற்றிவைத்திருந்ததைக் கலித்தொகையென்ற நூலில் நல்லந்துவனார்சேர்த்தார் என்பதைத்தானா இவ்வுரை குறிக்கிறது? பலர்செய்து பரந்துகிடந்த கலிப்பாக்களை ஆராய்ந்து அவற்றுள் மேலான பாலைக்கலிப்பாக்களைத் தனியாகஎடுத்துப் பாலையையும் தனித்திணையாகக்கொண்டு, கலித்தொகையென்றநூலை நான்குதிணை நூலாகக்காட்டாமல் ஐம்பெரும்பிரிவுகளாக ஆக்கியதற்கு வேண்டுங் காரணத்தை இவ்வுரை குறிக்கின்றதென்று நினைக்கக்கூடாதா?

மறுபடி நெய்தற்கலியுரையின்முடிவில் "இத்தொகையைப் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தலென இம்முறையேகோத்தார் நல்லந்துவனார்" என்னும் உரைக்கு (நல்லந்துவனாருட்பட்ட) ஐவர் ஐந்து

---

* தொல்காப்பியப்பொருளதிகாரம் 13-ஆஞ்சூத்திரத்தின் உரையையும் பார்க்க.

நூல்களாக எழுதிவைத்திருந்தவற்றை மேற்கண்டமுறையேகோத்தார் என்பதுதானுபொருள்?

தொல்காப்பியம் பொருளதிகாரம் 15-ஆம் சூத்திரவுரையில் "இச்சூத்திரவிதி உண்மையிற் சான்றோர் அகத்தினும், கலியினும், ஐங்குறுநூற்றினும், பாலைக்கண்ணே உடன்போக்குநிகழ்ந்தசெய்யுட்களைக் கோத்தாரென்றுணர்க." என்று கூறியிருக்கிறது. அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய மூன்றுநூல்களையும் ஒரேமாதிரியாகக் கூறும் இவ்வுரை இவ்வாராய்ச்சிக்கு ஒருவிதப்பயனுள்ளதாகவும் தோற்றவில்லை.

"கற்றறிந்தாரேத்துங்கலி" என்று சிறப்பிக்கப்பட்ட இந்நூல் சொன்னயத்திலும், பொருணயத்திலும் சிறந்தது. இதன்பெருமையைக் கோணுப்பட்டு "வித்யாபாநு" என்ற பத்திரிகையினின்றெடுக்கப் பெற்ற பின்வரும்வெண்பா விளக்கும்.

"திருத்தகு மாமுனிசிந் தாமணி கம்பன்
விருத்தக் கவிவளமும் வேண்டேம்—திருக்குறளோ
கொங்குவேண் மாக்கதையோ கொள்ளே னனியார்வேம்
பொங்குகலி யின்பப் பொருள்."

இந்நூலின் அருமையை அதைப்படித்தே அறியவேண்டும். இப்புத்தகத்தை இதுவரை பார்த்திராதசிலருக்காகச் சூரியன்வெளிச்சத்தைக்காட்டத் தீவட்டிகளையெரிப்பதுபோல் இந்நூலின்சிலபாகங்களை எடுத்தெழுதத் துணிந்தேன்:—

1. தோணல முண்டு துறக்கப் பட்டோர்
வேணீ ருண்ட குடையோ ரன்னர்;
கூடினர் புரிந்து குணனுணப் பட்டோர்
சூடின ரிட்ட பூவோ ரன்னர்; (பாலை—23.)

2. துணிநீராற் றாய்மதி நாளா லணிபெற
வீன்றவ டிதலைபோ லீர்பெய்யுந் தளிரொடு
மான்றவ ரடக்கம்போ லலர்செல்லாச் சினையொடும்
வல்லவர் யாழ்போல வண்டார்க்கும் புதலொடு
நல்லவர் நுடக்கம்போ னயம்வந்த கொம்பொடு
மூணர்ந்தவ ரீகைபோ லிணரூழ்த்த மரத்தொடும்
... ...
நயந்தார்க்கோர் நல்லைம னிளவேனி லெம்போலப் (பாலை—32.)

குன்றக னன்றுடன் வாய்மையிற் பொய்தோன்றிற்
திங்களுட் டீத்தோன்றி யற்று.
... ...
நிழற்கயத்து
ணீருட் குவளைவெந் தற்று. (குறிஞ்சி—5.)

நல்லாய்கேள்.....................
பேதுற்றாய் போலப் பிறரெவ்வ நீயறியா
யாதொன்றும் வாளா திறந்தீவாய் கேளினி
நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமருந் தவறிலர்
நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க வென்னா
விறையே தவறுடை யான். (குறிஞ்சி—20.)

தமக்கினி தென்று வலிதிற் பிறர்க்கின்னா
செய்வது நன்றாமோ மற்று. (குறிஞ்சி—26.)

கனவினா னெய்திய செல்வத் தனையதே
யைய வெமக்குநின் மார்பு. (மருதம்—3.)

நெட்டிருங் கூந்தற் கடவுளர். (பரத்தையர்) மருதம்—28.

மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்
றொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய
நல்லினத் தாயர்...........(முல்லை—4.)

அச்சத்தான் மாறி யசைவினுற் போத்தந்து
நிச்சந் தமொறு மெல்லிய லாய்மகண்
மத்தம் பிணித்த கயிறுபோ னின்னலஞ்
சுற்றிச் சுழலுமென் னெஞ்சு. (முல்லை—10.)

அகன்ஞாலம் விளக்குந்தன் பல்கதிர் வாயாகப்
பகனுங்கி யதுபோலப் படுசுடர் கல்சேர
விகன்மிகு நேமியா னிறம்போல விருள்வர
நிலவுக்காண் பதுபோல வணிமதி போதரக்
கண்பாயல் பெற்றபோற் கணைக்கா லலர்கூம்பத்
தம்புகழ் கேட்டார்போற் றலைசாய்த்து மரந்துஞ்ச
முறுவல்கொள் பவைபோன் முகையவிழ்பு புதனந்தச்
சிறுவெதிர்ங் குழல்போலச் சுரும்பிமிர்ந் திம்மெனப்
பறவைதம் பார்ப்புள்ளக் கறவைதம் பதிவயிற்
கன்றமர் விருப்பொடு மன்றுநிறை புகுதர
மாவதி சேர மாலை வாள்கொளா
வந்தி யந்தண ரெதிர்கொள வயர்ந்து
செந்தீச் செவ்வழ லொடுங்க வந்ததை
வாலிழை மகளி ருயிர்பொதி யவிழ்க்குங்
காலை யாவ தறியார்
மாலை யென்மனுர் மயங்கி யோரே. (நெய்தல்—2.)

காட்டாயேன், மண்ணகமெல்லா மொருங்கு சுடுவேனென்
கண்ணீ ரழலாற் றெளித்து;
பேணுன், துறந்தானை நாடு மிடம்விடா யாயிற்
பிறங்கிரு முந்நீர் வெறுமண லாகப்
புறங்காலிற் போக விறைப்பேன் முயலி
லறம்புணை யாகலு முண்டு. (நெய்தல்—27.)

மேற்கோள் விளக்கம்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட கலித்தொகைப்பாட்டுக்களின் அட்டவணை.

வரிசை நிர்.	பொருளதிகாரப் புத்தகத்தின் பக்கம்.	மேற்கோள்.	கலித்தொகைப் பாட்டினெண்.	அடிகள்.
1	10	பாடிமிழ்......பரவுதும்	105	69—70
2	,,	படை......புகின்	109	19—20
3	11	வையைப்......தெளிப்பேன்	98	31—32
4	,,	சினை......வியையவதோ	16	11—12
5	,,	வளிதரு......மியையவதோ	,,	11
6	16	விடியல்......லகலறை	45	1
7	,,	அணை......பெற்றதை	66	9—12
8	,,	தணந்தனை......காணிய	71	17—20
9	17	கலியின்கண் மாலைக்காலம்நெய்தலில் வந்தவை	118,119, 120, 123	
10	20	பகைவென்று......சுடும்பனி	31	17—20
11	24	அருந்தவமாற்றியார்	30	பொதுவாக
12	25	புனையிழைநோக்கியும்	76	,,
13	,,	அலர்ந்திகழ்நறுங்கொன்றை	150	,,
14	27	தொல்லெழில்......படர்ந்தே	29	1—26 முழுவதும்
15	28	தொல்லூழி......நீ	129	1—20
16	,,	ஆய்தூவி......அறியாயோ	56	15—18
17	,,	கொல்லேற்றுக்......மகள்	103	63—64
18	29	வளியா......மகடோள்	,,	68—70
19	,,	முள்ளெயிற்றேரிவளைப்.......கொள்பவன்	104	18—21
20	,,	எழின்மருப்பெழில்வேழம் என்றது முதலியநாலுபாட்டும்	138,139, 140, 141	பொதுவாக
21	,,	மாமேலாநின்று......பட்டு	139	15—17
22	,,	புரிவுண்டபுணர்ச்சி என்றதுமுதலிய ஆறு பாட்டும்	142,143, 144,145, 146, 147	
23	,,	கூனுங்குறளும்......மருதத்துட் கோத்தார்	94	பொதுவாக

24	29	கல்லா......மாறு	112	3
25	,,	நடாஅக்கரும்பமன்ற......எமர்	,,	6—7
26	,,	நறவினைவரைந்தார் என்னுங்கலி	99	பொதுவாக
27	,,	ஈண்டுநீர்மிசை யென்னுங்கலி	100	முழுவதும்
28	,,	தொடங்கற்......மற்றைறஇய	2	1—10
29	33	தருக்கேம்......கால்	69	21—24
30	35	கலியினும் பாலைக்கண்ணே உடன்போக்குச்செய்யுட்களைக் கோத்தார்	9, 11முதலியவை	
31	37	அலர்ந்திகழ்நறுங்கொன்றை	150	பொதுவாக
32	39	தாமரைக்கண்ணியை......நீவரின்	52	7—8
33	,,	உடையிவ......தகைப்பன	3	6—9
34	,,	கன்மிசை......விரும்பார்கொல்	27	13—16
35	41	தீம்பால்கறந்த......களைகுவைமன்	111	1-23மு
36	,,	ஆயர்மகனையும்......மருந்து	107	25—27
37	43	நம்முணருதற்......தொட்டேன்	94	35—36
38	,,	பேயும்பேயும்......வேண்டுவல்	,,	39—40
39	,,	போற்றாய்......நீருண்பவர்	62	9—11
40	,,	மேபுநிரை......மகன்	108	11—13
41	44	புனத்துளான்......மேய்க்கிற்பதோ	,,	29—31
42	,,	வழங்கா......வெமர்	112	13—14
43	,,	பல்கால்......செலற்கே	113	20—26
44	45	தாமரைக்கண்ணியை......மாலையை	52	7—11
45	46	பகைவென்று......விடுவதோ	31	17—18
46	48	பொய்பற்ற......லொல்வதோ	15	14—15
47	49	மயங்கமர்......விடுவதோ	31	9—10
48	,,	பகைவென்று......மிசையவர்	,,	17
49	,,	நீளுயர்......தொடியெழுவே	,,	25
50	50	ஒருகுழை......தூதே	26	1-25மு
51	51	பல்வினை......வலித்திமன்	17	6
52	,,	தோற்றஞ்சான்றோருகுபொருள்	,,	10
53	,,	பகையறுபயவினை	,,	14
54	,,	வேட்டபொருள்	,,	18
55	52	நெஞ்சு......சொல்லென்னுயிர்	24	1-17மு
56	67	சீர்கெழு......அனையளே	9	15—17
57	69	எறித்தரு......மற்றதுவே	,,	1-24மு
58	76	அரிதாய......கேளினி	11	1—5
59	77	புத்தியானை......தங்கினேன்	97	7
60	78	கடவுட்பாட்டால்	93	பொதுவாக
61	,,	ஒரூஉக்......கூறு	88	முழுவதும் 1-21மு

62	81	நுண்ணெழின்மாமை......னென்னும்	4	17—20
63	82	நெஞ்சுநடுக்குற	24	பொ. மு
64	,,	உறவியாம்......உளராயின்	30	13—16
65	83	அரும்பொருள்......தாற்கு	18	1-12 மு
66	,,	பொய்பற்ற......மறுத்தலொல்வதோ	15	14—15
67	84	அரிதாயவறனெய்தி	11	பொ. மு
68	85	திசைதிசை......முன்றுறை	26	13
69	,,	பாடின்றிப்பசந்தகண்	16	பொதுவாக
70	86	இணைந்துநொந்து......சார்ந்து	142	60—66
71	87	குரவை......புலகே	103	75—79
72	,,	கடவுட்பாட்டுமுதலியன	93,95,96, 97, 98	
73	,,	மரையா......வெமக்கு	6	1-11மு
74	,,	எல்வளை......வல்லவோ	13	10—13
75	,,	அணையவை......பெரிதழியாதி	,,	23—24
76	88	விரிகதிர்......நல்லூர	71	1—8
77	89	பாஅலஞ்செவி	5	பொதுவாக
78	90	வீங்குநீர்......நல்லூர	66	1—8
79	92	வாருறு......பழியே	58	1-23மு
80	93	இவடந்தை......வேண்டுவலியான்	61	13—17
81	,,	காராரப்பெய்த என்னுங்கலி	109	பொதுவாக
82	94	சான்றவிர்......கடனே	139	1-37மு
83	,,	ஊர்க்கத்துமேலு......சிறிது	94	17—21
84	95	புரிவுண்டபுணர்ச்சியென்னும்பாட்டு	142	பொதுவாக
85	,,	எளியிவைதொத்தன்......மற்று	62	1—8
86	97	மலிதிரையூர்ந்து என்னுமுல்லைக்கலி	104	
87	,,	ஆங்கணையர்வர்தழூஉ	,,	1—61
88	,,	பாடுகம்வம்மின்	,,	62
89	,,	நெற்றிச்சிவலை......மகள்	,,	63—67
90	,,	ஒருங்குநாம்......மகன்	,,	68—71
91	,,	கோளரி......மதித்து	,,	72—75
92	101	ஏறும்......கொண்டு	101	46—49
93	116	தாமரைக்கண்ணியை ....சிறுகுடியோயே	52	7—10
94	196	கார்முற்றி......புனலூரன்	67	1—5
95	,,	மீளிவேற்றானையர்....கொடியெழுவே	31	24—25
96	199	நிலம்பூத்த......உள்ளார்கொல்	27	9—12
97	200	கன்மிசை......விரும்பார்கொல்	,,	13—16
98	,,	திசைதிசைதேனார்க்கு...உறைபவர்	26	13—16

99	200	புனவளர்பூங்கொடி என்னும் மருதக் கலி	92	பொதுவாக
100	227	இலங்கு......மலை	41	18—20
101	,,	செவ்விரல்......புரைத்ததை	76	6—9
102	261	சுடர்த்தொடீஇ......மகன்	51	1-16 முழுவதும்
103	263	பகைவென்று......கடும்பனி	31	17—20
104	264	இலங்கு..... மலை	41	18—20
105	,,	பொய்த்தற்கு . ...தீத்தோன்றியபற்று	,,	21—24
106	265	வாரிநெறி......இயல்பன்றே	114	1-21 மு
107	267	வளைமுன்கை......தெருமந்திட்டு	51	10
108	271	கொடியவுங்......யரி	54	1—3
109	,,	அகனுல்......தோழி	,,	15—16
110	273	புனையிழை .....பாலதினி	76	1-22 மு
111	276	தெருவின்கட்... ..கொள்ளுதெவண்	60	12—14
112	279	மின்னொளி......தொழி	55	1-23 மு
113	282	நன்னுள்......அன்றோ	39	30—35
114	291	கொடியவுங்......புரைமே	54	1-20 மு
115	302	அரவின்......வேண்டும்	50	6—11
116	316	கடிமலர்......கிடவாதோ	135	6—14
117	320	தெருமந்துசாய்த்தார்தலை	39	25
118	321	மாமலர்......நின்றேரே	133	1-19 மு
119	329	அவனுந்தான் எனல்......மகன்	39	7—10
120	,,	எனவாங்கு......யாய்	,,	19—21
121	334	வினவுதியாயின்	76	5
122	,,	கொடியவுங்கோட்டவும் என்பதன் சுரிதகம்	54	15—20
123	338	வீழ்பெயற்......உகுபவால்	48	8—11
124	341	இருவர்கட்......தலை	39	24—25
125	,,	எனவாங்கு......யாய்	,,	19—21
126	342	நெறியறி......முந்துறீஇ	,,	45
127	,,	சேயுயர்......வினியே	,,	49—50
128	352	தெரியிழாய்......பாடிக்காண்	,,	26—29
129	354	பொய்யற்ற......படிவத்தான்	15	14—15
130	356	என்னைநீ......கால்	73	14—17
131	357	புலவியாற்......புகும்	92	39—41
132	,,	ஏதப்பாடெண்ணி......யார்	81	25—28
133	358	யாரிவன்..... மாறு	89	1—3
134	359	ஓரிரா......உயிரே	5	14—19
135	360	நெஞ்சுநடுக்குற என்னும் பாலைக்கலி	24	பொதுவாக
136	371	நோதக்காயென......வந்துரையாக் கால்	73	6—9
137	,,	மண்டு......மருண்டு	,,	19—22
138	,,	பூங்கட்......தந்து	79	20—23
139	373	மையற......படர்தகநாம்	81	1—37
140	,,	வனப்பெலாம்......விடல்	86	11—16
141	,,	தந்தை......பெற்றமகன்	,,	28—29
142	374	கண்ணிநீ... . துகளினை	72	9—20
143	,,	ஏந்தெழின்......ஏறியசெல்	96	1—38 முழுவதும்
144	375	மெய்யை......	95	25—33
145	376	உறுவளி......தவறுடையேன்	84	1—40 முழுவதும்
146	377	அணியொடு......தந்து	79	7—23
147	,,	அவட்கினிதாகி......நின்றெழில்	82	22—35
148	378	மறைநின்று......பெற்றமகன்	86	23—29
149	,,	வேற்றுமை......கூறு	88	15—21
150	380	நீரார்செறுவின் என்னும் மருதக்கலி	75	பொதுவாக
151	381	நுண்ணெழின்......னென்னும்	4	17—20
152	384	பூங்கட்......பலபாராட்டி	79	20
153	,,	நாடிநின்......வாக்கினை	72	13—16
154	385	அரிதாயவறனெய்தி என்னுங்கலி	11	பொதுவாக
155	,,	புல்லுவிட்டிறைஞ்சிய.....தகைப்பன	3	13
156	386	அறனின்றியயறாற்றும்(பாலைக்கலி)	,,	பொதுவாக
157	,,	யாணிற்கூறவும்......யாயினை	,,	19
158	395	பொய்ந்நல்கல்......பெறலுயிரே	5	17—19
159	398	கண்டேனின்மாயம் என்னும் மருதக் கலி	90	பொதுவாக
160	399	அடக்கமில்......போன்றனள்	82	12—14
161	403	ஆரா... அமையுமோ	90	10—18
162	408	கலந்தநோய்......வெல்குவை	46	23—24
163	,,	புலந்தாயு......வெல்குவை	,,	24
164	,,	கனைபெயல்......யானுக	,,	18—21
165	409	கண்டவரில் . ...விடினே	125	1—24 முழுவதும்
166	410	ஆயிழாய் .....தவறு	88	8—9
167	,,	நின்னுணை..... யார்	81	27—28
168	,,	கடியதமக்கியார்......யார்	88	5
169	411	மாசற......பெறுகிற்பின்	77	16—19
170	414	உண்கடன்......வேட்கை	22	1—8

171	423	இல்லென......பிளிவெனக்	2	15
172	424	போழ்திடை......செய்தும்	4	10—11
173	,,	முள்ளெ(ளெயெ)யிற்று....செய்தும்	,,	13—14
174	,,	அரிதாயவறனெய்தி	11	பொதுவாக
175	428	நிலநாவிற்......உரைத்ததை	35	15—20
176	,,	நடுநின்று......வென்றார்	24	11—12
177	429	அன்ன......கொண்டு	92	59—68
178	436	அறியவும்......மடநெஞ்சே	123	14
179	,,	போர்......வந்தாயோ	120	15—16
180	,,	பாய்திரை......சிறுகுழல்	129	9—17
181	437	அலந்தாங்கு......போலவும்	128	10—17
182	439	சேளல......நெஞ்சத்தேம்	63	10—11
183	,,	இனிப்புணர்ந்த .....நெஞ்சே	67	14—17
184	440	மாண்மறந்து......முண்டு	89	12—15
185	,,	குதிரைவழங்கிவருவல்	129	6
186	443	காமர்கடும்புனல்	39	பொதுவாக
187	444	ஈர்ந்தண்......காவலரே	52	11—14
188	446	தமக்கினிதென்று......மற்று	62	7—8
189	,,	எறித்தபடைபோ......னுயிர்	94	9—12
190	,,	உழுந்தினும்......பிறப்பு	,,	27—28
191	,,	புள்ளிக்கள்வன்......கூறு	88	10—14
192	,,	குதிரையோவீறியது	96	23
193	447	குறிபின்றி......துறந்ததை	127	10—13
194	,,	பசலையால்......ரொழிந்தக்கால்	15	13
195	,,	தோணலமுண்டு......பூவோரன்னர்	23	8—13
196	449	இடுமுணெடு......உள்ளத்ததை	12	1—10
197	,,	எல்வளை......வல்லவோ	13	10—13
198	,,	பொய்பாக......மார்பின்	37	17
199	451	அதிர்வில் .....எல்லா	81	29—33
200	,,	எல்லாநீ......பெறுததிதென்	61	7—9
201	,,	எல்லாவிஃதொத்தன்	,,	1
202	452	என்றேளெழுதிய......தொய்யிலும்	18	3
203	,,	நெய்தலிதழுண்......மன	39	43
204	,,	நின்கண்ணுற்......யான்	,,	42
205	456	அன்பற......உண்டு	19	8—13
206	,,	வலைபுறு......போலவும்	128	16—19
207	,,	அணைமருள்......துனியாகுதலே	14	1—9
208	457	இலங்கு......பொய்த்தான்மலை	41	18—20
209	458	வேங்கை......நாம்	43	1—7
210	,,	அரிதாயவறன்	11	பொதுவாக

211	459	நுண்ணெழின்மாமை	4	17
212	460	பொன்னென......கற்பின்	77	12—15
213	461	மல்கவமும்......சார்ந்து	142	8—66
214	463	திருந்திழாய்கேளாய்	65	பொதுவாக
215	464	என்செய்தான்......முடைந்து, முதலியவை	60	9—11...
216	,,	ஈதலிரந்தார்......முதலியவை	61	11-12...
217	,,	அணிமுகமதி......பண்டு	64	1—7
218	465	ஆர்வுற்றார்... ..தவன்	42	13—15
219	,,	பொருடான் .....பிரிவோய்	21	10—12
220	466	உலகம்புரப்பான்......உடையன்	47	1—2
221	,,	தாமரைக்கண்ணியை......யோரே	52	7—10
222	,,	நெஞ்சத்த......தீவாயோ	69	14—15
223	,,	அகலநீ......தெடுப்புமே	70	11—14
224	467	விரிகதிர்மண்டிலம்	71	பொதுவாக
225	468	இதுவுமோர்......றுடைத்து	89	1—2
226	469	நாளும்......பிறப்பிலி	60	29
227	,,	தொடிஇயவெமக்குநீயாரை	88	3
228	,,	செவ்விய......வினி	19	1—6
229	,,	உறலியாம்......ருளராயின்	30	13—16
230	478	திறனல்ல......மகன்	86	21—22
231	479	தானுற்ற......பன்னுளும்	37	4—5
232	,,	சேயேன்மன்......துயரிழப்பேன்	,,	7
233	481	ஒன்று, இரப்பான்......சொல்லும்	47	1—2
234	482	அன்னுன்......சுடரிழாய்	,,	7—8
235	484	ஒரூஉநீ......கடை	87	1—2
236	,,	சேய்நின்று......யார்	81	27—28
237	,,	வல்லார்......யவள்	141	19—20
238	,,	அடன்மா......தவள்	,,	9—10
239	485	வையம்......செய்தாள்	,,	12—14
240	,,	முறஞ்செவி......புலிசெற்று	52	பொதுவாக
241	486	ஊனுடை......வெண்பாய்	12	10—11
242	,,	பெண்டிர்......மலை	40	23—24
243	,,	துயிலின்றி......மன்னே	30	5—6
244	488	அரிதாய..... களித்தலும்	11	1
245	500	ஒருக்குநாம்......மகன்	104	68—71
246	501	மாண்மறந்து......சேர்தலுமுண்டு	89	12—15
247	,,	நோய்சேர்ந்த......கற்பின்	77	18—19
248	504	இனியான்......வாழேன்	23	6—7
249	,,	அலந்தாங்......போலவும்	128	10—15

250	504	கனவிஞ......மார்பு	68	24—25
251	,,	வானினிலங்கு......மலே	41	19—20
252	505	தூதவர்......குயிலாலுமரோ	33	24—25
253	,,	பழிதபு......வென்று	143	22—26
254	506	பலவின்......பாடுகம்வா	41	16—17
255	,,	மென்றேணெகிழ்த்தான்......பிற	142	49—50
256	,,	பையெனக்......கரந்து	,,	35—36
257	,,	பிறங்கிரு......யாகலுமுண்டு	144	46—48
258	508	பின்னீதல்......பெரிதே	48	21—24
259	510	சினைவாட......வியைவதோ	16	11—12
260	,,	அச்சாறுக......ஞகுவல்	75	20—21
261	,,	நற்றூரகலத்து......முண்டு	93	35—37
262	511	இடனின்றி......அல்லதை	2	19—22
263	514	அவனுந்தான்......மகன்	39	7—10
264	,,	முல்லே......யார்	108	15—18
265	,,	கண்ணியள்......கூர்ந்து	37	3—6
266	,,	அவன்......துயருழப்பேன்	,,	6—7
267	515	பெண்......நமக்காயின்	,,	9
268	,,	நெய்தனெறிக்கவும்......ஆள்பவன்	143	31—38
269	,,	உழுந்தினு......பிறப்பு	94	27—28
270	519	கடைக்கண்ணுற்......ஞேக்கி	51	15
271	521	நுதலுமுக .....கிளியுமன்று	55	7—14
272	524	அடைமரை......காணூஉ	84	10—11
273	,,	வேயமன்றன்று......மன்று	55	11
274	,,	பூவமன்றன்று......மன்று	,,	12
275	528	தூதுணம்......னெழினலம்	56	16
276	530	ஊறுநீர்......மெயிற்றாய்	20	11
277	,,	யாழ்கொண்ட......மாலே	29	17
278	,,	உரல்புரைபாவடி	21	1
279	,,	மாணெழில்......வரிற்றூங்கும்	20	15
280	,,	நறுமுல்லே......நிரைத்த	22	15
281	531	பான்மருண்......பாவடி	21	1
282	535	ஈரத்துள்......வெந்தற்று	41	30—31
283	,,	மல்லரை......நாடகேள்	52	5—6
284	536	நீருட்குவளேவெந்தற்று	41	31
285	542	ஒழிந்தோராயின்வரையறையின்மையிற் காட்டாமாயினும் அவை வந்துழிக்காண்க	69-ஆம் கலி.	
286	548	முதிர்கோங்கின்......முலே	56	23—24
287	588	அரிதாய......களித்தலும்	11	1

288	589	பாஅலஞ்செவி..... மானிரை	5	1
289	,,	உறுபுலி......வேங்கை	38	6
290	,,	காமர்கடும்புனல்......ஆடுவாள்	39	1
291	594	அரிதாய......களித்தலும்	11	,,
292	,,	அடிதாங்கும்......வெம்மையால்	,,	6
293	,,	பண்டரங்க......மென்றேண்	1	9
294	595	அரிதாய......களித்தலும்	11	1
295	596	அரிதாய......களித்தலும்	,,	,,
296	599	அரிதாய......களித்தலும்	,,	,,
297	607	அவனுந்தான்......புண்டியங்கும்	39	7
298	626	தகைமிகு......ரினமாக	,,	46
299	628	காரெதிர்......கறங்க	105	24
300	,,	நேரிதழ்......நிறப	,,	26
301	,,	மலர்மலி......பணேஇ	102	23
302	,,	புரிபுபுரிபுபுக்க......குத்தினவேறு	103	22—23
303	,,	இரிபெழு......யிஃதொன்று	104	39—41
304	631	செய்தான்......மகன்	51	16
305	,,	நின்கண்ணுற்......யான்	39	42
306	634	இணேநல......சென்றோர்	11	19
307	,,	மெல்லியான்......புகுதாக்கால்	70	20—23
308	656	பாஅலஞ்செவி......மயங்கி	5	1—2
309	671	அரிதாயவறனெய்தி	11	1
310	678	அரிதாய......களித்தலும்	,,	,,
311	685	ஒரூஉக்......தவர்	88	1—4
312	,,	உகுவதுபோலு......மயில்	33	17—18
313	689	வலிமுன்பின்......ளென்றோழி	4	1—8
314	,,	காழ்விரி......னென்னும்	4	9—12
315	,,	நீயே......நில்லாவே	7	9—12
316	691	காணுமை......மடநெஞ்சே	123	6—8
317	,,	இன்......காணீ	125	16—19
318	692	நீரார்..... கொண்மார்	75	1—2
319	693	கருங்கோட்டு......நெஞ்சே	123	1—19
320	,,	ஞாலமூன்றடி......செலவே	124	1—21
321	694	நகைமுதலாக......நோய்	137	13—17
322	695	நச்சல்கூடாது......வேண்டுவல்	8	19—20
323	696	தன்னகர்விழைய	8	22
324	,,	கோடு .....நாடன்	38	9
325	,,	ஞாலமூன்றடித்தாய	124	பொதுவாக
326	,,	கருங்கோட்டுநறும்புன்னே	123	,,
327	,,	பாடின்றி......தான்	16	14

328	696	செய்பொருட்......திறத்தே	16	17—21
329	699	கல்லெனக்......கொண்டமைவாளோ	5	10—11
330	,,	ஓரிரா......வாழ்வாளோ	,,	14—15
331	709	ஆறறியந்தணர்......	1	1
332	,,	படுபறை	,,	5
333	,,	மண்டமர்	,,	8
334	,,	கொலைபுழுவைத்	,,	11
335	,,	எனவாங்கு, பாணியுந்	,,	14—15
336	719	அரும்பொருள்......தாற்கு	18	பொதுவாக
337	720	மரையா......வறப்ப	6	,,
338	,,	தீம்பால......கனைவைமன்	111	1—23
339	721	தாதுசேர்......காண்கும்	80	25—26
340	,,	கரந்தாங்கே......பண்பு	141	15—16
341	722	சான்றவிர்......கடனே	139	1—37
342	,,	கண்டவி......ரதுவே	140	1—34
343	,,	என்றாலும், பாடெனிற்பாடவும்...... சிறிதாங்கே	,,	13
344	,,	காராரப்பெய்த......	109	21—26
345	,,	அரிதினிற்......தமர்	141	1—25
346	,,	வாழிசான்றீர்......	,,	10—20
347	,,	அம்மசான்றீர்......	,,	14
348	723	புரிவுண்ட......கொள்ளாது	142	3
349	,,	இணைந்து......நீடுயிர்த்தன	,,	60
350	,,	எல்விரா... மெல்ல	,,	61—62
351	725	செவ்விய......வினி	19	1—6
352	,,	செல்லினி......படுதலுமுண்டு	,,	7—13
353	,,	மாமலர்......டொருங்குடன்	133	பொதுவாக
354	,,	மின்னொளி......போல்	55	,,
355	,,	வெல்புகழ்......வொழுக்கத்தான்	118	,,
356	,,	அருளுர்ந்த......செய்யான்	120	,,
357	,,	நயனும்......நடுவும்	130	,,
358	,,	கொடியவுங்கோட்டவும்......கோதை	54	,,
359	726	பான்மருண் ......பாவடி	21	,,
360	,,	எஃகிடை......போல்	32	,,
361	,,	அகன்ஞாலம்......வாயாக	114	,,
362	727	ஒன்று......உடையன்	47	1—2
363	,,	வேணிலுழந்த......களிறு	7	பொதுவாக
364	,,	வனவிதணத்......மகன்	39	7—10
365	,,	புனவேங்கை......மன்றே	,,	32—35
366	,,	பாஅய்ப்பாஅய்ப்......தோள்	36	12—13

367	727	மலிதிரை......வெளவலின்	104	1
368	728	இரிபெழ......கண்டை	,,	38—41
369	,,	தாமெழ......தலைச்சென்று	,,	44
370	,,	காலவை,......சுற்றொடு	85	பொதுவாக
371	731	அரிநீரவிழ்......பனிச்சம்	91	,,
372	,,	காணின்......பெட்பச்செயல்	,,	23—24
373	,,	நலமிகநந்திய......தடமென்றோள்	113	பொதுவாக
374	,,	வாரிநெறிப்பட்......தாழ்ந்த	114	,,
375	,,	கணங்கணி	60	,,
376	,,	ஒருஉநீ......கொளல்	87	,,
377	735	நெஞ்சநடுக்குறக்கேட்டு	24	,,
378	,,	சுடர்த்தொடீஇகேளாய்	51	,,
379	,,	திருந்திழாய்கேளாய்	65	,,
380	736	கால்பொரா......சிதைத்தழைத	45	8—11
381	,,	அறனிழல்......உற்றளை	99	8—10
382	750	நோய்சேர்ந்த......சுற்பின்	77	18—19
383	,,	விருந்தேதீர்......புலவி	75	27—29
384	,,	திறனல்ல......பெற்றமகன்	86	26—27
385	751	சீர்கெழு......கல்லதை	9	15
386	752	தெரிகணை......தலை	39	22—25
387	754	மலைபுரை......கணையமை	9	14—20
388	755	சான்றவிர்...... றென்னும்	139	பொதுவாக
389	759	மையற......பூணணைத்த	81	1—2
390	760	பாரிவ ......படி றடைத்த	89	1—2
391	761	கொழுநிழன்......கூழை	56	2—3
392	768	நெறியறி......மம்பலும்	39	45—47
393	787	கடுங்களிற்றொருத்தல்	2	26
394	788	பொரி......கோடும்	13	3—4
395	,,	நறவேவிறெழுதிய......தொட்டு	84	23
396	792	மரையா... ...வறப்ப	6	1
397	795	எறித்தரு......முக்கோலும்	9	1—2
398	802	துகளூர்பு......யவைபத்தாரோலை	94	43

S. இராதாகிருஷ்ணையர்,

B. A. F. M. U.

உ

ருதுமதீவிவாஹம்.

"செந்தமிழ்" (தொகுதி-கக-பகுதி-கo-ல்) கஅரு-ஆம் பக்கத்தொடர்ச்சி.

(5) பால்யவிவாகத்தின் நீடித்த வழக்கம்.*

அப்படியிருந்தால், பிராமணர்களுக்குள் ப்ரௌடையாவதற்கு முன்னமேயே கட்டாயமாக விவாகஞ்செய்யும்வழக்கம், வெகுகாலமாக நடந்துவந்துகொண்டிருக்கிறதற்கு என்ன காரணம்? அவ்வழக்கத்திற்கு ஆதாரங்கள் ஸ்மிருதிகளிலும் இருக்கின்றனவோ? அதற்கு என்ன நியாயம். ஆகிய இந்த 2 விஷயங்களுக்குச் சமாதானங்கள் சொல்லவேண்டிய தவசியமாயிருக்கிறது.

இந்தத்தேசத்தில் வரவர க்ஷத்திரியர்களுடைய வலிமைகள் குறைந்து அதில் முக்கியமானவம்சங்களே அற்றுப்போய்விட்டதாகத் தெரியவருகிறது. அதனால், பிராமணர்கள் தங்களுடையமதத்தையும் ஸ்திரீகளையும் காப்பாற்றிக்கொள்ளச் சக்தியற்றவர்களாயிருந்திருக்கிறார்கள். இந்த ஸ்திதியில் மகமதியர்கள் மேன்மேலும் படையெடுத்தும் அனேகர்கள் இத்தேசத்திற் குடியேறி அரசாக்ஷிசெய்தும் வந்திருக்கிறார்கள். கணக்கிட்டுப்பார்த்தால், சுமார் 1000-வருஷத்திற்குக் குறையாமல் மகமதியர்கள் அரசாக்ஷிசெய்தும் இத்தேசத்தில் குடியேறியுமிருக்கிறார்களென்று தெரியவருகிறது. அவர்கள் முரட்டுஜாதியார்களானபடியால், தாங்கள் ஜெயித்த நாடுநகரங்களைக் கொள்ளையடிப்பதும், அகப்பட்ட ஸ்திரீகளைச் சிறைபிடித்துப்போவதுமவர்களுக்குச் சகஜதர்மமாயிருந்திருக்கிறது. அக்பரைப்போன்ற சில மகமதிய அரசர்கள் தர்மமாக அரசாக்ஷிசெய்து

* இந்த ருதுமதீவிவாஹம் என்னும் விஷயத்திலுள்ள ஆக்ஷேபாம்சங்களிவையென்பதை யெல்லோருமறியவேண்டிய தவசியமாகையால் அவற்றை ஆங்காங்குணரும்படி முற்றொடரில் **ருதுமதீவிவாஹபராமர்சம்** கீழ்க்குறிப்பாகச் சேர்க்கப்பெற்றிருந்தது. அதனை அவ்வாறு சேராது பிரத்தியேகமாய் வைக்கும்படி திருபநேயர் விரும்பியதற்கிணங்கியே இதனை யடுத்து **ருதுமதீவிவாஹபராமர்சம்** சேர்க்கப்பெற்றிருக்கிறது.—ப-ர்.

வந்தபோதிலும் ஒருகண்டம்போல் விஸ்தாரமாயுள்ள இந்தத்தேசத்திற் சின்னப்பட்டினங்களிலும் கிராமங்களிலும் மகமதியர்களுடையகொடுமைகள் மிகுதியாயிருந்திருக்கவேண்டுமென்று சரித்திரங்களினால் தெரியவரும். விவாகமானபெண்ணைப் பலாத்காரம்செய்தால் மிகுந்த பாபமும், ஜாதியார்களுக்குள் நிந்தையும் ஏற்பட்டிருப்பதை உத்தேசித்து மகமதியர்களுள், துஷ்டராயுள்ளவர்கள், கல்யாணமாகாமல், ப்ரௌடையாய்த் தகப்பன்வீட்டிலிருக்கிறபெண்களை விசேஷமாய் அபகரித்துக்கொண்டுவந்தார்கள். அதனால் எப்படியாவது தங்களுடைய மதத்தையும் ஸ்திரீஜாதிகளின் மானத்தையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்று, பயந்த ஸ்வபாவமுடையவர்களும், வலிமையற்றவர்களுமான பிராமணர்களில், சற்றறிந்து முதன்மையாயுள்ளவர்கள், பெண் ருதுவாவதற்குமுன் ஒருபுருஷனுக்கு அவளை மணஞ்செய்துகொடுத்துவிட்டால், துஷ்டர்களுடைய நிர்ப்பந்தம் தங்களுக்கு ஏற்படாதென்று யோஜித்து, அவர்களை ப்ரௌடையாவதற்குமுன் கட்டாயம் கல்யாணம் செய்துகொடுக்கவேண்டுமென்று கண்டிப்பான நிபந்தனைகள் ஏற்படுத்திக் கொண்டார்களென்று நினைக்க மிகுந்த நியாயங்களிருக்கின்றன. அதை யனுசரித்துச் சிலர் எப்பேர்ப்பட்ட விஷயத்தைச்செய்தாலும் அதற்கு ஆதாரமாகச் சாஸ்திரசம்மதமில்லாவிட்டால் இதரஜனங்கள் அதை அனுஷ்டிக்கமாட்டார்களென்றகாரணத்தைக்கொண்டு அதற்கு ஆதாரமாகச் சில ஸ்மிருதிகளில் ப்ரௌடாவிவாகத்தைக்கண்டித்துச் சுலோகங்கள் சேர்த்திருக்கிறார்கள். இந்த நிர்ப்பந்தம் மேன்மேலுமிருந்துகொண்டிருந்தபடியால் ருதுவாவதற்கு முன்னமேயே பெண்ணைக் கல்யாணம் செய்துகொடுப்பது தொடர்ந்தவழக்கமாக ஏற்பட்டுவந்துவிட்டது.

ஸ்மிருதிகளில் அவைகளின் கர்த்தாக்களான ரிஷிகள்சொன்னவையேயன்றி இதரவிஷயங்களும் சேர்த்திருப்பதாகச்சொல்வதற்கு என்ன ஆதாரமென்று கேட்கலாம்; இத்தேசத்தில் வடக்கே இருக்கிற பாரதத்துக்கும் இத்தென்னிந்தியாவில் உபயோகப்படுத்தப்பட்டுவருகிற பாரதத்துக்கும் அனேகவிஷயங்களில் வித்தியாசமிருக்கின்றது. நம்முடையநாட்டில்வழங்கிவருகிற பாரதத்திற்கண்ட அனேகவிஷயங்கள்

வடக்கேயுள்ளபாரதத்திற் காணப்படவில்லை. ஏற்கனவே இருந்ததை எடுத்தாலும் இல்லாததைச்சேர்த்தாலும் ஷை 2 பிரதிகளில் ஒன்று தானே வியாசரிஷியின்வாக்கியம். மற்றொன்று இப்பால் உண்டான இதரர்களாலேதானே கூட்டப்பட்டோ அல்லது கழிக்கப்பட்டோ இருக்கவேண்டும். அப்படிப்பட்ட மிகவும் தவறுதலானசெய்கையை 5-ம் வேதமாக எண்ணப்படுகிற இந்தப் பாரதம்விஷயமாகச் செய்தது யார். இன்னும், ராமாயணம்முதலிய புஸ்தகங்களிலும் வேற்றுமையிருப்பதாக ஷை 2 தேசத்துக்கிரந்தங்களையும் பார்த்தவர்கள் சொல்லுகிறார்கள். மிகவும் மேன்மையாக மதிக்கப்பட்டுவருகிற வான்மீகராமாயணத்துக்கு விரோதமாய், அதிலில்லாத ஆக்ஷேபணைக்கு இடமான விஷயங்களைக்கண்டும் பல ராமாயணங்களிருக்கின்றன. இப்பொழுதும் புத்திசாலிகள் அவர்களுடைய தற்பரைசக்தியின் அளவுக்குத்தக்கபடி ராமாயணம் கவனம்செய்துகொண்டேயிருக்கிறார்கள். அச்சுப்பிரதிகளுள்ள இந்தக்காலத்திலேயே ஷேக்ஸ்பியர்நாடகபுஸ்தகம் முதலியவற்றில் வேற்றுமைகளிருக்க அச்சில்லாமல் ஓலைகளில் எழுதப்பட்டபிரதிகளில் அந்தக்காலத்திற் சில கலப்புக்களில்லை என்று நாம் எப்படிச் சொல்லமுடியும்.

ஸ்மிருதிகளெல்லாம் ஒருமுகமாய் அபிப்பிராயம் சொல்லாமல் ருதுமதீவிவாஹவிஷயத்திற் பலவிதமாகச்சொல்லுதல்—1,

மேலே விவரித்திருக்கிறபடி கல்யாணமந்திரங்களில் ஆதிமுதல் அந்தம்வரையுள்ள மந்திரதாத்பரியங்கள்—2,

பூர்வம்தொடங்கி ருதுவானபெண்ணுக்குக் கல்யாணம்செய்துவந்திருக்கிறதாகவெளியாகிற அநுபவங்கள்—3.

ஆகிய இந்தச் சுருதி, யுக்தி, அநுபவங்களினால் ருதுமதீவிவாஹம் நின்றுபோனதற்கு மேலேசொன்னகாரணம் மிகவும்பொருத்தமாயும் சம்பாவிதமாயுமிருக்கிறது.

மேற்படி அபிப்பிராயம் அங்கீகரிக்கத்தக்கதில்லை என்று நாம் வைத்துக்கொண்டாலும், திரிகாலஞானிகளாகிய மகரிஷிகள், பின்னால் இத்தேசத்துக்கு நேரிடக்கூடிய மேற்சொன்ன நிர்ப்பந்தங்களை உத்தேசித்து ருதுவாவதற்குமுன் கட்டாயம் கல்யாணம்செய்யவேண்டுமென்கிற விதியையும், மற்றவிதிகளுடனும் வேறுவிதமாக அபிப்பிராயப்பட்ட ரிஷிகளினுடைய அபிப்பிராயங்களுடனும் கலந்து எழுதியிருந்தால், ஜனங்கள் காலதேசவர்த்தமானத்துக்குத்தக்கபடி அநுஷ்டித்துவரட்டுமென்று கிருபையான நோக்கத்துடன் எழுதியிருப்பதாகவும், நினைக்க நியாயமிருக்கிறது.

அப்படியில்லாவிட்டால், ப்ரௌடாவிவாஹத்தை அநுஷ்டித்துவந்தபிராமணர்கள் அதைமாற்றிப் பால்யவிவாஹம்செய்வதாயிருந்தால் அப்படிச்செய்வதற்கு ஒரு ஸ்மிருதியிற்கூட ஆதாரமில்லையென்று யோஜித்து மிகவும்கஷ்டப்படுவார்களென்று உத்தேசித்து ஸ்மிருதிகளிற் சில ரிஷிகள் எழுதியிருக்கவேண்டும்.

அகாலமரணமில்லாதிருந்த ஸ்ரீராமருடைய ராஜ்யகாலத்திலும், முந்தினயுகங்களிலும் பெண்ணுக்கு ப்ரௌடையாவதற்குச் சற்று முன்னமேயே கல்யாணம்செய்ததாக ஏற்பட்டாலும், அந்தக்காலத்தில் அதனால் எவ்விதபாதகமும் ஏற்பட நியாயமிருந்ததாகத்தெரியவில்லை.

(இன்னும்வரும்.)

M. R. ஸ்ரீநிவாஸையர்,

பெரியகுளம்.

ஸ்ரீ:

ருதுமதீவிவாஹ பராமர்சம்.

"செந்தமிழ்" (தொகுதி-௧௩ பகுதி ௧௦-ல்) ௩௮௫-ம் பக்கத்தொடர்ச்சி.

———— :()o(): ————

ருதுமதீவிவாஹமென்னும்வியாசத்தின் (5-வதுவைக்கப்பட்ட) "பால்ய விவாஹத்தின் நீடித்தவழக்கம்" என்றதலைப்பின்கீழ், "பிராமணவகுப்பில், பெண்கள் ருதுமதியாவதற்குமுன்னமே கட்டாயமாக விவாஹம் செய்யும் வழக்கம் வெகுகாலமாக நடந்துவந்துகொண்டிருக்கிறதற்கு என்னகாரணம்? அவ்வழக்கத்துக்கு ஆதாரங்கள் ஸ்மிருதிகளிலுமிருக்கின்றனவே? அதற்கென்னநியாயம்?" என்ற கேள்விகளைக்கேட்டுக் கொண்டு சொல்லியிருக்கும் சமாதானங்கள் உண்மையானவையென்று நிரூபிக்கப்படுமானால் ருதுமதீவிவாஹகூடி நியாயமுள்ளதென்றுகொள்ளத் தடையில்லை. ஆகையால் அவற்றையாராயவேண்டியது அவசியமாயிருக்கிறது.

மஹமதியஅரசாட்சியில் அநீதியாக அவர்கள் இந்தியப்பெண்களைச் சிறைபிடியாதிருக்கும்பொருட்டுக் கன்னியாவிவாஹம் கட்டாயமாயேற்பட்டதென்றால் அது பிராமணவருணத்தில்மட்டும் நியதமாயும், மற்றவருணங்களில் நியதமில்லாமலுமிருக்கக் காரணமில்லை. பிராமணரல்லாதஹிந்துக்கள் பலாட்டியர்களாயிருந்தபடியால் அவர்களிடம் மஹமதியர் செல்லவில்லையென்றால்! அவர்களுக்குக் குருமாராய் அவர்களாற் போற்றப்பெற்ற பிராமணர்களுக்கும் அவர்களாதரவிருந்தபடியால், மஹமதியரால் இடைஞ்சலுண்டாயிருக்கமாட்டாதென்றே சொல்லவேண்டியதாயிருக்கிறது. அன்றியும், பிராமணவகுப்பிற் பலாட்டியராயுள்ள மஹாராஷ்ட்ரர்களாவது மற்றவர்களைப்போலப் பிரௌடாவிவாஹத்தைக்கைவிடாதவராயிருக்கவேண்டுமே! அதுவுமில்லையென்று தெரிகிறது. அல்லாமலும், மஹமதியராட்சிக்கு ஒருகாலத்திலுமுள்ளாகாத பரோடாமுதலான ஹிந்துராஜ்யங்களிலுள்ளபிராமணர்களும் கட்டாயமாகக் கன்னியாவிவாஹத்தையே கைக்கொண்டிருப்பதற்கும் இது காரணமாகமாட்டாதென்பதையும் நாம் யோசிக்கவேண்டும்.

ஆகையால் மஹமதியஆட்சியிலிருந்து பிராமணவகுப்பில், பிரௌடாவிவாஹம் விலக்கப்பட்டிருக்கவேண்டும் என்னும் ஊகமானது யுக்தியுக்தமாகுமென்றுதோன்றவில்லை.

சிலஸ்மிருதிகளிற் பிரௌடாவிவாஹத்தைக்கண்டித்திருப்பதானது ஸ்மிருதிசெய்த ருஷிகளாலெழுதப்பட்டதில்லையென்றும், பின்புள்ள பண்டிதர்களெழுதிக்கொண்ட மித்தியாசாசனமென்றும் சொல்லி, அதை நிரூபிப்பதற்குப் பாரதாதிகளின்பாடபேதங்களைத் திருஷ்டாந்தங்காட்டியிருப்பது சாக்குப்போக்கானபேச்சாயிருப்பதல்லது நிரூபிக்கத்தக்கசான்றாகுமென்று தோன்றவில்லை.

ஏனென்றால் ஒன்றை மித்தியாசாசனமென்றுநிரூபிக்கவேண்டுமானால் எதிரிகளால் ஆக்ஷேபிக்கத்தகாததாயும், மத்தியஸ்தர்களால் அங்கீகரிக்கத்தக்கதாயுமுள்ள சாக்ஷ்யமானது, நிரூபிப்பவர்க்கநுகூலமாயிருக்கவேண்டும். இங்குப் பாரதாதிகளின் பாடபேதமானது ஸ்மிருதிகளின் மித்தியாசாசனத்தைச்சாதிப்பதற்குத் திருஷ்டாந்தமாகமாட்டாதென்று எதிரிகளாலாக்ஷேபிக்கத்தக்கதாயிருக்கிறது. எப்படியென்றால், திருஷ்டாந்தமாகக்காட்டப்பட்ட (பாரதாதிகளிலுள்ள) பாடபேதங்கள் மித்தியாசாசனமென்று உபயவாதிகளாலுமொப்புக்கொள்ளப்பட்டிருந்தாலல்லது அவை திருஷ்டாந்தமாகமாட்டாவென்பது நியாயசித்தாந்தமாயிருக்கிறது.

பாரதாதிகளிற் சிலகோசங்களிலில்லாதபாடங்கள் சிலகோசங்களிலிருப்பது வாஸ்தவமே. அவை யில்லாதகோசங்களில் எழுதாமல் விடப்பட்டனவாக ஏன்கொள்ளக்கூடாது. அப்படியும் கொள்ள இடங்கொடுக்கும்பக்ஷத்தில் அவற்றை மித்தியாசாசனங்களென்று எப்படி நிச்சயிக்கலாம். வியாசபாரதத்துள்ளேயே சிலபாகம்விடப்பட்டிருந்தால் விடப்பட்டபாகமாவது குறைத்தெழுதியபாகமாவது வியாசவாக்கியமாகாமற்போய்விடுமா? வியாசவாக்கியமாகாமற்போனாலன்றோ அது மித்தியாசாசனமாகும். பாரதாதிபாடபேதங்கள் மித்தியாசாசனமென்று சித்தியாதிருக்கச்செய்தே அவை ஸ்மிருதிவாக்கியங்களை மித்தியாசாசனமென்றுசாதிக்கத் திருஷ்டாந்தமாகலாமா? மித்தியாசாசனமென்று சித்தித்திருந்தாலும், எந்தஸ்மிருதியில் ருதுமதீவிவாஹநிந்தாவாக்கியமிருக்கிறதோ அதேஸ்மிருதியில் பிரதிபேதத்தில் அந்தவாக்கியமில்லாதிருக்குமானால் ஒருவாறு திருஷ்டாந்தங்காட்டலாம். அப்படி எந்தஸ்மிருதியிலிருக்கிறது. பொதுவாக ஸ்மிருதிகளிற் கன்னியாவிவாஹவிதிவாக்கியங்களும் ருதுமதீவிவாஹநிஷேதவாக்கியங்களுமேயிருப்பதால் அவை ஒன்றற்கொன்று விரோதமுள்ளவையல்லவென்று

முன்னமே சொல்லப்பட்டுள்ளன. அவற்றையொழிய ருதுமதீவிவாஹ விதிவாக்கிய மொன்கேயாயினுங் கண்டதுண்டா? காணவில்லையாயின் மித்தியாவாக்கியங்களிவை? யதார்த்தவாக்கியங்களிவை? என்று காட்டுவ தெப்படி. இவற்றையெல்லாம் பரியாலோசியாது, நமதுகொள்கைக்கு விரோதமாயிருப்பதையெல்லாம் ஸ்மிருதிகளிற் பின்புள்ளா ரெழுதிச்சேர்த்துவைத்த மித்தியாசாசனமென்று மேலெழுந்தபடியாகச்சொல்வதானது சாஸ்திரவாசனையேயில்லாத சாமான்யஜனங்களையேமாற்றி நம்கட்சியிற் சேர்ப்பதற்குப் பயன்படுவதாய் முடிவதல்லது பிராமாணிகராலங்கீகரிக்கும்படி எடுத்துக்கொண்ட விஷயத்தைச் சாதிக்கத்தக்கதாயில்லையென்று தோன்றுகிறது.

அன்றியும், ருதுமதீவிவாஹநிந்தாவாக்கியங்கள் ஸ்மிருதிகளிற் பின்புள்ளோரால் நுழைத்தெழுதப்பட்டிருக்குமானால், நம்மாலும் நமக்குவேண்டியவிஷயங்களை ஸ்மிருதிகளில் நுழைத்தெழுதி அநுஷ்டானத்துக்குக் கொண்டுவர மார்க்கமில்லாதிருப்பதற்குக்காரணமென்ன? அந்தக்காரணம் முற்காலத்திலும் ஏன் இருந்து தடிக்காமற்போயிற்று. எழுதிவைத்தவர்கள் முதன்மையுடையவராயிருந்தார்கள், அவர்கள் சொற்படி யெல்லாரும் நடந்தார்கள் என்றால் அப்படிப்பட்ட பெரிய ஐகமத்தியமுடையாருக்கு விரோதமாக மகமதிய ரிடைஞ்சல்செய்தார்கள் என்றுசொல்லுவதும் அதற்கு அவர்கள் அஞ்சினார்களென்று சொல்லுவதும் பொருந்தாதிருக்கின்றன.

வால்மீகத்துக்குவிரோதமாகப் பல ராமாயணங்க ளெழுதப்பட்டிருப்பதுபோலவே ஸ்மிருதிகளு மவரவர்க்குத்தோன்றியவா றெழுதப்பட்டனவாகச்சொல்வதானது, தற்காலத்து அவரவர்க்குத்தோன்றியவாறெழுதும் பலநாவல்கள்போலச் சட்டப்புத்தகங்களு மவரவரிஷ்டம்போலத் தோன்றியபடி யெழுதப்பட்டனவென்று சொல்வதுபோன்றிருக்கிறது. கதை காவியங்களெல்லாம் படிப்பவர்க்கு மனமகிழ்ச்சியுண்டாகவும் மணந்திருந்தவும்வேண்டிப் பொய்யும் மெய்யுமாகியவிஷயங்களைப் புத்திசாதுரியத்துக்குத்தக்கபடியமைத்துச்செய்யப்படுவனவாம். ஸ்மிருதிகளெல்லாம் சட்டமாதலால் அவற்றைக்கடப்பவர்கள் சிக்ஷைக்குள்ளாகும்படி உண்மையினின்று சிறிதும்தவறாமலும் முன்னுக்குப்பின் விரோதமில்லாமலுமே யெழுதப்படுவனவாம். ஆகையால் இதிஹாஸாதி காவியங்களுக்கும், ஸ்மிருதிகளுக்கும் வெகுதூரம் வித்தியாசமுடைமையாலு மவை திருஷ்டாந்தமாகக்காட்டத்தக்கவையல்ல.

"ஸ்மிருதிகளெல்லாம் ஒருமுகமாயபிப்பிராயம்சொல்லாமல் ருதுமதீவிவாஹவிஷயத்திற் பலவிதமாகச்சொல்லுதல்" என்று முதலாதாரவாகக் காட்டியிருக்கும்விஷயம் வாஸ்தவமாயிருக்குமானால் ருதுமதீவிவாஹகக்ஷி தோல்வியடையாதென்பது திண்ணம்.

அது வாஸ்தவமில்லையென்பதும், ஸ்மிருதிகளெல்லாம் ஒரேமுகமான அபிப்பிராயமுள்ளனவென்பதும் முன்னமே நிரூபிக்கப்பட்டன. இன்னும் இதனைச் சிறிது பராமர்சிப்போம்.

விதிவாக்கியங்கள் சாமான்யவிதியென்றும், விசேஷவிதியென்றும், நித்தியவிதியென்றும், விகற்பவிதியென்றும், நியமவிதியென்றும், விலக்குவிதியென்றும், பலதிறப்படும். அவற்றின் இலக்கணங்களும் வெவ்வேறாம். இவற்றையுணராதார்க்குப் பலவித அபிப்பிராயமுடையனவாகத்தோன்றுமாயினு முணர்ந்தார்க்கு அவ்வாறு தோன்றுவதில்லை. எப்படியென்றால் ஒருயிரையும் கொல்லலாகாது என்பது பொதுவிதி. யாகபசு-கொல்லத்தக்கது, என்பது சிறப்புவிதி. இவ்விரண்டும் கொலைவிஷயத்தில் வெவ்வேறபிப்பிராயமுடையனவாகக்கொள்ளப்படுவதில்லை. ஏனென்றால் யாகநிமித்தமல்லாமலோருயிரையுங்கொல்லலாகாது என்பதே இரண்டுவாக்கியங்களுக்குஞ் சேர்ந்ததாற்பரியமாயிருக்கிறது. இவ்வாறே ஸ்மிருதிவாக்கியங்கள் ஒரேவிஷயத்தில் வெவ்வேறபிப்பிராயமுடையனவாகத்தோன்றியபோதிலும் அவற்றையெல்லாம் ஒன்றுசேர்த்து ஒரேஅபிப்பிராயமுடையனவாகவே கொள்ளவேண்டும். அப்படிக்கொள்ளாவிட்டால் இது பிரமாணம், இது அப்பிரமாணம் என்று வியவஸ்தைசெய்யமுடியாமையாலொன்றையொன்று விரோதித்து எல்லாம் அப்பிரமாணமாய்முடியும்.

ஆகையால், விவாஹவிஷயத்தில் ஸ்மிருதிகள் சொல்லியேதெரியவேண்டிய அதிருஷ்டபுண்யபலப்பிரதமான கன்னியாவிவாஹத்தைச் செய்யும்படிவிதித்தும், ராகப்பிராப்தமாய்த் தாமேதெரிந்துசெய்யத்தக்கதாயும், அதிருஷ்டபலமில்லாததாயுமுள்ள ருதுமதீவிவாஹத்தை

விதியாமலும் விலக்காமலும் உபேக்ஷையாய்விட்டும், காலாதிக்கிரமண ருதுமதீவிவாஹமானது சொல்லியேதெரியவேண்டிய அதிருஷ்டபாப பலப்பிரதமாகையால் அதனை நிஷேதித்துமுள்ளனவாகிய வாக்கியங்களுக்குப் பின்னபிப்பிராயம் சிறிதுமில்லை.

இவற்றுள், கன்னியாவிவாஹம் சாஸ்திரசித்தமில்லையென்றுவது, காலாதிக்கிரமண ருதுமதீவிவாஹம் சாஸ்திரஸம்மதமுள்ளதென்றுவது, ஆசாரத்திருத்தக்கக்ஷியார் சொல்லுவதற் கிடமில்லை. ஆனால், காலாதிக்கிரமணமில்லாத ருதுமதீவிவாஹம் சாஸ்திரசம்மதமில்லாமற்போய் விடவில்லை என்பதைமட்டும் பலமாய்ப்பிடித்து வழக்காடப் பின்வாங்காதவர்களாயிருக்கிறார்கள். அது (யதாயோக்கியமாக-ஏற்புழிக்கோடலால்) வர்ணக்கிரமமாக விவாஹத்துக்குவிதிக்கப்பட்ட வயக்கிரமத்தால் பிராமணரல்லாதவருணத்தார்க்குரியதாகக் கொள்ளத்தக்கதாயிருக்கிறதென்று கன்னியாவிவாஹகக்ஷியாருக்கும், சார்வத்திரிகமென்று ருதுமதீவிவாஹகக்ஷியாருக்கும் பின்னபிப்பிராயமுண்டாயிருப்பதல்லது, ஸ்மிருதிகளில் பின்னபிப்பிராயமிருப்பதாகச் சொல்லற்கிடமில்லை.

ஸ்மிருதிகளிற் பின்னபிப்பிராயமிருப்பதாகவைத்துக்கொண்டாலும் அது சிஷ்டானுஷ்டானத்தாற் பாதிக்கப்படுவதல்லது சிஷ்டானுஷ்டானத்தை யது பாதிக்கமாட்டாது. எப்படியென்றால் "த்ரிஹி ஷ்ரவிராய-ஞூபஸ்ராசு" ஒருவன் தனக்கு அத்தைமகளையாவது அம்மான்மகளையாவது கல்யாணம்செய்யலாகாதென்று ஸ்மிருதிசொல்லியிருக்க, அதன் வியாக்கியானத்தில் "இப்படியுள்ளகல்யாணம் தெக்ஷிணதேசசிஷ்டாசாரமாயிருப்பதால் தோஷமில்லை." என்று உத்தரதேசத்தாரொருவர்எழுதியிருப்பதாலும் 'ஷஉஷ்ஆஸசய் ப்ராணம்வெடாஞூ' என்று ஆசாரதர்மங்களுக்கு சிஷ்டானுஷ்டானமே முதலாவது பிரமாணமென்றும், வேதாதிசாஸ்திரங்களதனையடுத்து இரண்டாம் பிரமாணமென்றும் ஆபஸ்தம்பசூத்திரம்சொல்லுதலாலு மறியலாம். ஆகையால் ஆசேதுஹிமாசலமாக அநாதிகாலமாயநுஷ்டித்துவரப்பட்ட சிஷ்டாசாரமாகிய கன்னியாவிவாஹத்தை அதர்மமென்று ஸ்மிருதிகள்

சொன்னாலும், சிஷ்டாநுஷ்டானமில்லாத ருதுமதீவிவாஹமே தர்மாசாரமென்று ஸ்மிருதிகள்சொன்னாலும் அவ்விரண்டுமே செல்லத்தக்கவையென்று சொல்லத்தக்கவையன்று.

இனி, ருதுமதீவிவாஹத்துக்கு இரண்டாவது ஆதாரமாகக்காட்டப்பட்ட விவாஹமந்திரங்களாலுண்டாகும் ஊஹங்கள், வாக்கியரூபமாயுள்ள கன்னியாவிவாஹவிதிகளையாவது ருதுமதீவிவாஹ நிஷேதவாக்கியங்களையாவது பாதிக்கமாட்டாவென்று முன்னமேசொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும், சம்ஸ்காரரூபமான கிரியைகளிற் (சடங்குகளிற்) சொல்லும்விஷயங்கள் அப்பொழுதே அனுபவயோக்கியமாயிருந்துதீரவேண்டுமென்னும் நியமமில்லையென்பதும், முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் அந்தமந்திரங்களை யாதரவாகக்காட்டுவது பிரயோஜனமற்றதாயிருக்கிறது.

3-வது ஆதாரவாக "பூர்வம்தொடங்கி ருதுவானபெண்களுக்குக் கல்யாணம்செய்துவந்திருக்கிறதாக வெளியாகிற அனுபவங்கள்" என்று சொல்லுமவைகளில் ஒன்றுவது பிராமணகன்னியாவிஷயமில்லாமையாலும், எல்லாம் க்ஷத்திரியகன்னியாவிஷயங்களாயிருப்பதாலும், அவை விவாதவிஷயத்துக்கு ஆதாரவாகமாட்டாவென்று முன்னமே சொல்லப்பட்டது.

உண்மை இப்படியிருக்கப் பிராமணவருணத்துக்கும் ருதுமதீவிவாஹம் உரியதென்பதற்குச் சுருதி யுக்தி அநுபவங்களுண்டென்றெண்ணுவது முழுதும் தவறாயிருக்கிறது. சாஸ்திரங்கள் ருதுமதீவிவாஹத்தைப் பிராமணர்விஷயத்திலும் அங்கீகரித்திருப்பதாகவே வைத்துக்கொண்டாலும், அது ஏதோ தக்சகாரணத்தால் முன்னோராசாரத்திருத்தத்தில் விலக்கப்பட்டுவிட்டபடியால் அதில் நாம் திரும்பவும் பிரவிர்த்திப்பது ஆசாரத்திருத்தமாகுமென்றுதோன்றவில்லை. ஏனென்றால், ஆசாரத்திருத்தமென்பது அவரவர் நெஞ்சுக்குத்தோன்றியவாறு

காமசாரமாயொழுகுமொழுக்கத்தாலுண்டாகுந் தீமைகளைப்போக்கு தற்குரிய சிலநியமங்களையேற்படுத்தி யொழுகச்செய்வதல்லது, அவ்வாறேற்பட்டிருக்கும் நியமங்களையழித்து இயற்கைவழியிற்செல்லச்செய்வதன்று. அங்ஙனஞ்செய்யின் அது விருத்தமென்றபெயர்பெறுவதல்லது திருத்தமென்றபெயர் பெறமாட்டாது. ஆகையாற் கன்னியாவிவாஹம் இயற்கையான காமசாரமாயிருக்கும்பக்ஷத்தில் அதையொழித்து ருதுமதீவிவாஹத்தைக் கைப்பற்றச்செய்வது திருத்தமென்று சொல்லலாம். அப்படியில்லாமல் நியமத்தைத்தவிர்ப்பதே திருத்தமாகுமென்றுசொல்லஇடமில்லை. இன்னும், சாஸ்திராதாரமிருக்கிறதென்று அநுபவத்தில் விட்டிருக்கும் ருதுமதீவிவாஹத்திற் பிரவிர்த்திக்கும் நாம் இதைப்போலவே சாஸ்திராதாரமுள்ளதாய் அநுபவத்தில் விடப்பட்டிருக்கிற அந்யஜாதிவிவாஹத்திலும், மாம்ஸபோஜனத்திலும், பலவைதிருகாதிகளிலும் பிரவிர்த்திக்கப்போகும் ஆசாரத்திருத்தத்தையும், அங்கீகரிக்கவேண்டியவர்களாய்விடுவோம். அன்றியும், சாஸ்திராதாரமுள்ளதும், அநுகூலமாகத் தோன்றுவதுமான அன்னியஜாதிவிவாஹமுதலியவற்றை யங்கீகரியாத நாம், அவற்றோடொத்த ருதுமதீவிவாஹத்தைமட்டும் அங்கீகரிப்பதானது பக்ஷபாதமாயுமிருக்கிறது. ஆகையால் நம்முடைய பிரவிர்த்திக்குச் சாதகமாகாதசாஸ்திரங்களை நாம் லக்ஷ்யம்பண்ணாமலே வேறுவழியாக நம்முடைய இஷ்டத்தை நிறைவேற்ற இடமுண்டாவென்று பரியாலோசிப்பதே நலமென்றுதோன்றுகிறது.

(தொடரும்.)

திரு. நாராயணையங்கார்,
செந்தமிழ்ப்பத்திராதிபர்.

தமிழெழுத்துத் தமிழெழுத்தே.

இலக்கியத்தினது அமைதியே இலக்கணமாம். இலக்கியமாவது கருதப்பட்டபொருள். அப்பொருளினது இயல்பே இலக்கணமாம். இங்கே இலக்கணமெனக்கொள்ளப்பட்டது தமிழிலக்கணம். இலக்கியமெனக்கொள்ளப்பட்டது தமிழ்.

தமிழெழுத்துக்கள் வடமொழியெழுத்துக்களைநோக்கி அமைக்கப்பட்டனவென்பது சிலர்கொள்கை. உலகத்திலேயுள்ள பாஷைகளெல்லாவற்றுக்கும் ஒலியொற்றுமைநயம் இயல்பிலேயுண்டு. அரபிப்பாஷையைத் தமிழெழுத்தாலும், தமிழ்ப்பாஷையை அரபியெழுத்தாலும், ஆங்கிலவெழுத்தால் தமிழையும் தமிழெழுத்தால் ஆங்கிலமொழியையும் ஒருவாறெழுதலாம். அதுபோலத் தமிழையும் வடமொழியெழுத்தால் எழுதலாம். அதுபற்றித் தமிழெழுத்தெல்லாம் வடமொழியினின்றும்பிறந்தனவெனக் கொள்ளப்போகாது. அவ்வப்பாஷைக்குமுதற்காரணமாகவுள்ள ஒலிப்பகுதிகளையெல்லாமாராய்ந்து வேறுவேறாக்கி அமைத்துக்கொண்டதொகுதியே அஃததற்கு நெடுங்கணக்காம். ஒவ்வொருபாஷைக்கும் பொதுவும் சிறப்புமாகியவொலிகளுண்டு. அவ்வொலிகளே பொதுவெழுத்தென்றும் சிறப்பெழுத்தென்றுங் கூறப்படுவன. பொதுவெழுத்துப் பலபாஷைக்கண்ணுமுளவாம். சிறப்பெழுத்துக்கள் ஒருபாஷைக்கேயுரியனவாம். பொதுவெழுத்துப் பல. சிறப்பெழுத்துச் சிலவாம்.

வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் பொதுவெழுத்துக்கள் பல. தமிழ்மொழிக்குச் சிறப்பெழுத்தாகவுள்ளன சில. அவை,

> "றனழஎஒவ்வுமுயிர்மெய்யுமுயிரள
> பல்லாச்சார்புந்தமிழ்பிறபொதுவே"

என்பதனாற் பெறப்படும்.

வடமொழிக்குமுதலெழுத்து ஐம்பத்தைந்து. தமிழுக்குமுதலெழுத்து முப்பது. வடமொழிக்குந் தமிழுக்கும் பொதுவாகவுள்ளன இருபத்தைந்தெழுத்துக்களாம். அவற்றைக்கொண்டு தமிழ் வடமொழியிலிருந்துவந்ததெனச் சாதிக்கப்புகுதல் அறியாமையாம். சீனபாஷையிலும் அகரசத்தமுண்டு. ககாரசத்தமுண்டு. சீனபாஷைக்கும் தமிழுக்கும் பொதுவாகியசத்தங்கள் இன்னும் பலவுள. அதனால், சீனபாஷையே தமிழுக்கு மாதுருபாஷையெனப்போகுமா. ஆங்கிலத்துக்குந் தமிழுக்கும்பொதுவாகிய அக்ஷரசப்தங்கள் பலவுள. அதனால் ஆங்கிலபாஷையைத் தமிழுக்கு மாதுருபாஷையெனல் சாலுமா?

உலகத்துப்பாஷைகளினதுஇயல்பு இதுவேயாகவும் அதனையுணராது மூன்றெழுத்தாலுமொருபாஷையோவெனத் தமிழை அவமதிப்பாருஞ் சிலர்.

இலக்கியங்கண்டு அதற்கு இலக்கணங்கூறுவ தியல்பாதலின் தமிழ்ப்பாஷையை ஊன்றியாராய்ந்தே அதற்கு இலக்கணங்கூறினாரவர். ஒன்றற்குரியஇலக்கணத்தை யொன்றற்குக் கூறப்புகார். தமிழிலுள்ள ற ன ழ ள ஒ என்னுமெழுத்துக்கள் தமிழுக்கே சிறப்பாகவுள்ளன. அவ்வெழுத்துக்கள் வடமொழிக்கண் இல்லாதன. தமிழுக்கு எழுத்துக்கள் வடமொழியிலிருந்துவாங்கப்பட்டனவெனில் இந்த ஐந்தெழுத்தும் வந்தவகை என்ன? எகரம் வடமொழிஏகாரத்தினது குறுக்கம்; ஒகரம் வடமொழிஓகாரத்தினதுகுறுக்கமென்றாலென்னை யெனின், அற்றாயின், ற ன ழ எவ்வாறுவந்தனவாகுமோ? அவற்றுக்கு அங்கே மாதுருஸ்தானங் காண்கின்றிலம். ஆதலால் ற ன ழ ள ஒ என்னுமெழுத்துக்கள் தமிழுக்கேயுரிய சிறப்பெழுத்துக்களாம். றகர னகரங்கள் வடமொழி ரகர நகரங்களின் பேதங்களாகாவோவெனின் அவை நிற்றற்குரியவிடங்களிலே ற னக்கள் நிற்கமாட்டாமையின், பேதமென்னல் சிறிதும் சாலாது. வடமொழியிலேயுள்ள நகரம் தகரத்துக் கினமாயதன்றோ. அந்த நகரம் தமிழிலுமுள்ளது. அந்த நகரத்தின்வேறாய் றகரத்துக்கினமாய்த் தமிழிலுள்ள னகரமும் அதற்கினமாகிய றகரமும் தமிழுக்கேசிறந்தனவாம். கந்தன் என்பதைக் "கன்தன்" என வெழுதவொண்ணாது. னகரத்துக்குமுன்னே தகரம்மயங்குதல் இயல்பன்று. னகரமும் றகரமுமே மயங்குமியல்பின.

ற ன ழ ள ஒ என்னு மைந்தெழுத்திலுள்ளே நடுநின்ற ழகரம் தமிழுக்கு மிக்கசிறப்புரிமையுடையதாம். அவ்வெழுத்தைச் சிறப்புரிமையாகவுடையதென்பதுபோதாத் தமிழும் தமிழ் எனப்பெயர் கொண்டதுபோலும். தம்—தமது, ழ்—ழகரத்தைக்குறியாகவுடைய மொழி யெனப் பொருள்விரிக்கலாகும். தமிழுக்கியல்பாகிய ஒழுகிய இன்னிசைபற்றித் தமிழ் எனப்பட்டதென்பதே வழக்கமாகியகொள்கையாயினும் இவ்வாறுகொள்வதும் பொருந்தும்.

தமிழினது ஒலியமைதியைத் தெற்றெனக்கண்டே தமிழெழுத்துக்களை வகுத்தாரன்றித் தமிழுக்கில்லாத ஒலிகளுக்கு வடமொழியெழுத்துக்களை வாங்கிப் பொருந்தவைத்தாரல்லரென்பது மேற்கூறியவாற்றால் நன்குதுணியப்படும்.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

சிறுபஞ்சமூலம்

"செந்தமிழ்" (தொகுதி ௧௨, பகுதி ௯ல்) ௯௫௦-ஆம்பக்கத்தொடர்ச்சி.

தொழீஇயடவுண்ணார்தொழீநிற்றுஞ்சார்
வழீஇயபிறர்பொருளைவௌவார்—கெழீஇக்
கலந்தபிறீழ்காணார்காணும்மடவாய்
புலந்தபிற்போற்றார்புலை. (௯.அ)

என்பது, புறத்திரட்டில் அறத்துப்பாலில் ௧௪-வது ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தின்கீழ்ப் பின்வருமாறு காணப்படுகிறது.

தொழீஇயட வுண்ணார்தொழனிற்றுஞ்சார்
வழீஇப்பிறர்பொருள்வௌவார்—கெழீஇக்
கலந்தபிற்கீழ்காணார்காணும்மடவாய்
புலந்தபிற்போற்றார்புலை.

பேணடக்கம்பேணுப்பெருந்தகைமைபீடுடைமை
காணுகிக்கமென்றைந்துநன்றகப்—பூணுகிக்கம்
பொன்வரைக்கோங்கேர்முலைப்பூந்திருவேயாயினும்
தன்வரைத்தாழ்த்தவரிது. (௭௫)

என்றவெண்பா, புறத்திரட்டில் ௮-வது அதிகாரம் கற்பின்மகளிர் என்றதலைப்பின்கீழ் இரண்டாவதடி மூன்றாவதுசீர் நன்னின்றாய் என்றும், மூன்றாவதடியில், கோங்கமுலை என்றுங் காணப்படுகிறது.

பொச்சாப்புக்கேடுபொருள்செருக்குத்தான்கேடு
முற்றுமைகேடுமூரண்கேடு—தெற்றத்
தொழின்மகன்றன்னேடுமொற்றுமென்று
முழுமகற்குக்கேடிரை. (௯௦)

என்றசெய்யுள், II-வது பொருட்பால் 56-வது அதிகாரம் குடிமரபின் கீழ்ப் பின்வருமாறு காணப்படுகிறது.

பொச்சாப்புக்கேடுபொருள்செருக்குத்தான்கேடு
முற்றுமைகேடுமூரண்கேடு—பெற்ற
தொழின்மகன்றன்னேடுமொறுமென்று
முழுமகற்குக்கேடென்றுரை.

எனக் காணப்படுகிறது. இவைகளின் வன்மை மென்மை பெரியார் ஆராய்ந்துகொள்வார்களாக.

மக்கட்பெறுதன்மடனுடைமைமாதுடைமை
யொக்கவுடனுறைதலூணமைவு—தொக்க
வலவலேயல்லாமைபெண்மகளிர்க்கைந்து
தலைமகனைத்தாழ்க்குமருந்து. (௫௩)

என்பது,

மக்கட்பெறுதன்மடனுடைமைமாதுடைமை
யொக்கவுடனுறைதலூணமைவு—தொக்க
விலைமகளல்லாதாட்கைந்திவைகண்டீர்
தலைமகனைத்தாழ்க்குமருந்து.

என அறத்துப்பால் ௭-வது கற்புடைமகளிர் என்ற அதிகாரத்திற் கண்டது. உரைகாரர் 'அலவலையல்லாமை' என்பதற்கு அற்பகாரியங்களல்லாமையால் எனப் பொருள்கண்டார். இதனுட்கூறப்படுவன தலைமகனைத் தன்வயப்படுத்துங்குணங்களாதலின், இவை யார்க்குரியவென் புழி விலைமகளல்லாதாட்கு என்றார். இப்பொருளின் உயர்வைநோக்க, இப்பாடமே சிறப்புடையதொன்றாம்.

பொருள்போகமஞ்சாமைபொன்றுங்காற்போந்த
வருள்போகாவாரறமென்றைந்து—மிருடீரக்
கூறப்படுங்குணத்தான் கூர்வேல்வல்வேந்தனாற்
றேறப்படுங்குணத்தினன். (௫௯)

என்றசெய்யுளில் முதலடி ஈற்றுச்சீர் போர்த்த எனக் காணப்படுகிறது.

நன்புலத்துவையடக்கிநாளுமாடோர்போற்றிப்
புன்புலத்தைச்செய்தெருப்போற்றியபி—னின்புலத்தின்
பண்கலப்பையென்றிவைபாற்படுப்பானுழவோன்
நண்கலப்பைநூலோதுவார் (௬௦)

என்பதன் பின்னிரண்டடி, இன்புலத்தைப் பண்கலப்பைப் பாற்படுத்து வானுழவ னென்பவே நண்கலப்பைநூலோதுவார் எனக் காணப்படுகிறது. (புறத்திரட்டு பொருட்பால் 56 குடிமரபு அ.)

அரம்போற்கிளையடங்காப்பெண்வியக்கத்தொண்டு
மரம்போன்மகன்மாறாய்நின்று—சரம்போலக்
கள்ளநோய்காணுமயலேர்துமாகுமே
யுள்ளநோய்வேண்டாவுயிர்க்கு (௬௨)

என்னுஞ்செய்யுளில் முதலடியில் வியக்கத்தொண்டு என்பது அவியாத் தொண்டு எனக் காணப்படுகிறது. வியக்கமென்பதற்குப் பொருளில்லை.

புண்பட்டார்போற்றுவாரில்லாதார்பேசநயிரார்
கண்கெட்டார்காலிரண்டுமில்லாதார்—கன்சகண்பட்
டாழ்ந்துநெகிழ்ந்தவர்க்கீந்தார்கடைபோக
வாழ்ந்துதகழிவார்மகிழ்ந்து (௭௮

என்பதில், 'கண்கண்பட்டு' என்பது தங்கட்பட்டு என்று காணப்படுகிறது.

அறத்துப்பால் 23-வது 'தானம்' என்ற அதிகாரத்தில்,

அச்சமேயாயுங்கானன்மையறத்தோடு
கச்சமில்கைம்மாறருளோந்தான்—மெச்சிய
தோகைமயிலன்னசாயலாய்தூற்றுங்கா
லீகைவகையினியல்பு.

கைம்மாறுமச்சமுங்காணிற்பயமின்மை
பொய்ம்மாறுநன்மைசிறுபய—மெய்ம்மா
றருள்கூடியாற்றத்தொடர்ந்திவையந்தீயிற்
பொருள்கோடியெய்தல்புகன்று.

என்றசெய்யுள்களும், 33-வது பொய்யாமை என்ற அதிகாரத்தில்,

இம்மைகலனழிக்குமெச்சங்குறைபடுக்கு
மம்மையருநரகத்தாழ்விக்கும்—மெய்ம்மை
யறந்தேயும்பின்னுமலர்மகளைநீக்கு
மறந்தேயும்பொய்யுரைக்கும்வாய்.

என்றசெய்யுளும் காணப்படுகின்றன. இப்பாடல்கள் சிறுபஞ்சமூலப் பதிப்பில் இல்லாதன.

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்.

ரஸாயன நூல்.

CHEMISTRY.

(செந்தமிழ் (தொகுதி-௧௮ பகுதி-௧௨ல்) ௪௯௦-ஆம்பக்கத்தொடர்ச்சி.

அத்யாயம்—15.

சிலம்.

Silicon.

[Si.]

மறுபெயர்:—மணல்ஸத்து.

சிலம் என்பது மூலப்பொருள்களில் ஒன்று அதன் பலவகைக்கல்பங்கள் சாதாரணமாயகப்பட்டபோதிலும் சிலம் என்னும் மூலம் தனிப்பொருளாய் ப்ரக்ருதியிற் காணப்படுவதில்லை.

சிலம் என்பது விசேஷமாய்ச் சிலாக்ஸிஜங்(Silica or Silicon oxides)களிலும், பளிங்குக்கற்களினும், மணல்களிலும் கலந்து கல்ப நிலைமையில் அகப்படுகின்றது.

சிலாக்ஸிஜம்.

Silica.

$[SiO_2.]$

சிலாக்ஸிஜம் என்பது சிலமும் ஆக்ஸிஜனும் ஒருபங்கு இருபங்காய்க்கலந்த ஒருகல்பம். இக்கல்பம் எரிகாரத்து(Caustic alkali)டன் கலந்து எரிக்கையில், சிலாஜ(Silicate)மாகும். ஸோடா எரிகாரத்துடன் கலந்தால், ஸோடியம் சிலாஜமாகும். ஸோடியகரிஜத்துடன் கலப்பதாலும், ஸோடியசிலாஜம் உண்டாகும்.

சிலாக்ஸிஜம் (SiO_2) + ஸோடியகரிஜம் (Na_2CO_3) = (கரிவாயு CO_2) + ஸோடியசிலாஜம் (Na_2SiO_3)

சிலாமிலம்.

Silicic Acid.

$[H_2SiO_3]$

ஸோடியசிலாஜத்துடன் ஏதாவது ஒரு அமிலத்தைக்கலந்தால், சிலாமிலம் உண்டாகும். ஆனால், சிலாமிலம் சீக்கிரத்தில் சிலாக்ஸிஜமாகவும் ஜலமாகவும் பிரிந்துவிடும்.

ஸோடியசிலாஜம் + 2 க்ளோராமிலம் = 2 கறியுப்பு + சிலாமிலம் {ஜலம், சிலாக்ஸிஜம்.

$$Na_2SiO_3+2Hcl=2NaCl+\underline{H_2O+SiO_2}$$
$$H_2SiO_3.$$

சிலாஜங்கள்.

Silicates.

கண்ணாடி. சீமைச்சுண்ணாம்பு, ஸோடியம்கரிஜம், சுத்தமான மணல், இம்மூன்றையும்கலந்து உருக்கினால் சாதாரணக்கண்ணாடியுண்டாகும். இது ஸ்வச்சமாயும், உறுதியாயும், வடிவமற்றதாயும் இருக்கும். கண்ணாடியில் விசேஷமாய் ஸோடியசிலாஜமும், சுண்ணசிலாஜமு (Calcium Silicate)ம் கலந்திருக்கின்றன. கொஞ்சம் காயவைத்தால், அதன் ஸ்வச்சமானதன்மை மாறி மங்கலா(Opaque)ய்விடும். இவ்வகைக்கண்ணாடிக்குச் சோடாக்கண்ணாடியென்று பெயர். காயவைத்தால் மெதுவாய்விடும். அந்நிலைமையில் எந்த உருவமாகவேண்டுமானாலும் செய்யலாம்.

அசுத்தச்சரக்குகள்கலந்தால் கண்ணாடிக்கு நிறமுண்டாகும். அயசிலாஜம் (Iron silicate) கலந்தாற் பசுமை நிறமுண்டாகும்.

ஸோடியத்துக்குப்பிரதியாய்ப் பொட்டாஷியம்சேருமானால்,கண்ணாடி வெகு உறுதியாய்விடும். இதுதான் போஹீமியன்கண்ணாடி எனப்படும்.

பளிங்குக்கண்ணாடி. பளிங்குக்கண்ணாடிசெய்வதில் ஈயசிந்தூரம் (Pl_3O_4) பொட்டாஷியகரிஜம் (H_2CO_3) சுத்தமானமணல் (SiO_2) இவைகள் சேருகின்றன.

இயற்கைச்சிலாஜங்கள். முற்கூறியவைகள் செய்பொருள்கள். இவைதவிர, இயற்கையிலே சிலவகைச் சிலாஜங்கள் அகப்படுகின்றன.

களிமண். இதில் அசுத்தமான அலூமினியசிலாஜம் இருக்கின்றது.

சீனமண். இதுவும் ஒரு களிமண்ணானபோதிலும் அதன் கலப்புகள் சுத்தமானதாக இருக்கின்றன.

மெழுகுமண் (Marl). இதுவும் ஒருவகைக்களிமண். இதிற் சீமைச்சுண்ணாம்பும் கலந்துள்ளது.

பசளைமண் (Loam). இது களிமண்ணும் மணலும் கலந்தது.

அப்ரம் (Mica) என்பது பொட்டாஷியசிலாஜம்.

மண்பாண்டங்கள்:—களிமண்ணை வேண்டிய உருவமாக்கிக் கொண்டு சூளையில்வைத்தெரித்தால், மண்பண்டங்களாகும். உலையிற் கொஞ்சம் கறியுப்பைப்போட்டால் அது சிலாஜத்துடன்கலந்து அப் பண்டங்களுக்கு ஒருவித மினுமினுப்பையுண்டாக்கும்.

பீங்கான் (Porcelain). சுத்தமான சீமைச்சுண்ணும்புடன் சில சிலாஜங்களைக்கலந்து, பீங்கான் செய்யப்படுகின்றது. சிலாஜங்கள் உருகிக் களிமண்ணுடன்கலக்கின்றன. பீங்கான், மண்பாண்டமாகவும், கண்ணுடியாகவும் சொல்லப்படும். பீங்கான் ஸ்வச்சமான (transparent)தல்லவாகினும் பளபளப்புள்ளதாயிருக்கும்.

அத்யாயம்—16.

பாஸம்.

Phosphorous.

[P.]

பாஸம் (ஸம்ஸ்கிருதம் பாஸ்=ப்ரகாசி) என்பது கட்டிரூபமான ஒரு மூலப்பொருள். அது தனிப்பொருளாகக் காணப்படமாட்டாது. அது விசேஷமாய் எலும்புச்சாம்பலிலிருந்து எடுக்கப்படுகின்றது. இது மஞ்சள்நிறமானது. ஆல்கஹால் என்னும் தீநீரிலும், ஜலத்திலும் கரையமாட்டாது. கரிகந்தகத்திற் கரையும். 44 சதாம்சத்தில் உருக ஆரம்பிக்கும். 287 சதாம்சத்திற் கொதிக்கத்தொடங்கும். சாதாரணச்சூட்டிலுங்கூட அது ஆவியாய்விடும். கொஞ்சம் சூடானதும் பாஸம் ப்ரகாசமாய் எரியும். சாதாரணமாய் அதைத் தண்ணீரில்தான் காப்பாற்றிவைக்கவேண்டும். கையால் தொடக்கூடாது. தொட்டால், கைச்சூட்டாலேயே எரியஆரம்பித்துவிடும். இதுதான் மஞ்சள்பாஸம்.

இருவகைப்பாஸங்கள்.

(1) மஞ்சள்பாஸம்.

(2) சிவப்புப்பாஸம்.

மஞ்சள்பாஸம் (Yellow phosphorous) ஒரு கொடியவிஷம். அதன் ஆவிகூடத் தேகத்துக்குக் கெடுதியைவிளைவிக்கும். அதில் வேலை செய்வோர்க்கு எலும்புநோய்கள் உண்டாவதுண்டு. இதன் முக்கிய

லக்ஷணம், அதிகப்ரகாசமாய் எரியும்தன்மையே. அது இருட்டில் எரியும்போதுபார்த்தால், அதன் ஜ்வாலையைச்சுற்றி யொரு ப்ரகாசமான ஆவிமண்டலமிருப்பதைக் காணலாம். ஆக்ஸிஜனுடன் கலந்தெரிவதால் அதற்கு அவ்வளவு ப்ரகாசம் உண்டாகிறது. ஒரு சிறு கரண்டியிற் கொஞ்சம் பாஸத்தை எடுத்து, க்ளோரம்நிறைந்த ஜாடிக்குள் நுழைத்தால், அது உடனே எரியும். அங்கேயிருந்து ஒரு வெண்ணிறமான புகை கிளம்பும். இதுதான் பாஸத்ரிக்ளோரம் (Phosphorous trichloride=PCl_3). இது சீக்கிரத்தில் த்ரவமாய்மாறிப் பக்கத்திலுள்ள மற்றக்ளோரத்துடன்கலந்து பாஸபஞ்சக்ளோரம் (Pcl_5)என்னும் கட்டியாய்விடும்.

சிவப்புப்பாஸம் (Red phosphorous). மஞ்சள்பாஸத்தைக் காற்றுப்படாமல் 250சதாம்சம்வரைகாய்ச்சினுல் பிங்கள(red-brown) வர்ணமான ஒரு கட்டிப்பொருள் உண்டாகும். அதைப்பொடித்தால் ஒருசிவப்புப்பொடியாகும். இதுதான் சிவப்புப்பாஸம் எனப்படும். இதற்கும் மஞ்சள்பாஸத்துக்கும் சில வித்யாஸங்களுண்டு. இது கரிகந்தக(carbon-di-sulphide)த்திற்கூடக் கரையாது. இக்கட்டிப்பொருள் திரவநிலைமைக்குமாறுமலே ஆவியாய்விடும். 260-வது சதாம்சத்தில்தான் எரியக்கூடியது. உஷ்ணமில்லாமல் க்ளோரத்துடன் கலக்கமாட்டாது. இது விஷப்பொருள் அல்ல. மஞ்சள்பாஸத்தைப்போலத் தண்ணீரில்வைத்துக் காப்பாற்றவேண்டியதல்ல.

பாஸம் மேற்கூறியவாறு இரண்டுவிதமாக இருப்பதால், அதற்கு விரூபி அல்லது விரூபப்பொருள் என்று பெயர். (ஸம்,—வி+ரூபம்=பலரூபமுடையவை) அதாவது ஒரே ரஸாயனப்பொருள், பல உருவமுள்ளதானுல் அது விரூபி என்று சொல்லப்படும். கரி, ஆக்ஸிஜன், கந்தகம்—இவைகளும் விரூபிகளே. ஆனுல் பாஸவிரூபிகளில் ரஸாயனத்தன்மைகளும் (Chemical properties) வித்யாஸப்படுகின்றன.

தீக்குச்சிகள்

Matches.

சாதாரணக்குச்சிகள்.

செய்முறை:—சுலபமாய் எரியக்கூடியதால் மஞ்சள்பாஸந்தான் சாதாரணமாய்த் தீக்குச்சிசெய்ய உபயோகப்படுகின்றது. லூஸிபர் தீக்குச்சிநுனியில், மஞ்சள்பாஸம், வெடியுப்பு (Nitre) அல்லது வேறு

ஆக்ஸிஜகாரி(Oxidising agent)ப்பொருள் என்பவை சேர்க்கப்படுவதுண்டு. உரைப்பதாலுண்டாகும் உஷ்ணத்தாற் குச்சியிலுள்ள பாஸம் எரியும்.

உரசுகுச்சிகள் (Safety Matches). இக்குச்சிகளின் நுனியிற் பாஸம் இல்லாமல் ஆக்ஸிஜகாரிப்பொருள்மாத்திரம் தடவப்பட்டிருக்கும். அது சிவப்புப்பாஸம் ஸம்பந்தப்பட்டவிடத்தில் உரைத்தால் எரியும். தீப்பெட்டியின்பக்கத்திற் சிவப்புப்பாஸம் தடவப்பட்டிருக்கும். ஆகையால், இக்குச்சிகள் சாதாரணக்குச்சிகளைப்போலத் திடீரென்று தீப்பற்றமாட்டா. தவிரவும், இக்குச்சிகள் விஷஸம்பந்தமானவையல்ல.

பாஸாக்ஸிஜங்கள்.

(1) பாஸ பஞ்சாக்ஸிஜம் [P_2O_5.]
(2) பாஸ த்ரயாக்ஸிஜம் [P_2O_3.]

பாஸபஞ்சாக்ஸிஜம். ஒருகண்ணாடிஜாடியிற் பாஸத்தையெரித்தால் அதனால் உண்டாகும்புகை சிறிதுநேரத்தில் வெண்ணிறமானபொடியாகமாறிவிடும். இது காற்றிலுள்ளஜலத்தைக் கவர்ந்துகொள்ளக்கூடியது. உலர்ந்தநிலைமையில், பச்சை லிட்மஸைமாற்றமாட்டாது. அது தண்ணீரிற் சுலபமாயும், சத்தத்துடனும் கரைந்து உஷ்ணமுண்டாக்கும். இது தண்ணீரிற் கரையுந்தன்மையானது நைத்ரபஞ்சாக்ஸிஜம்செய்ய முக்கிய சாதகமாயிருக்கின்றது.

அமைப்பு—இருமடங்கு பாஸம், 5 மடங்கு ஆக்ஸிஜமுள்ளகல்பம்.

பாஸத்ரயாக்ஸிஜம். ஆக்ஸிஜம் குறைவானஇடத்திற் பாஸத்தை எரித்தால், 5 மடங்குக்குப்பதிலாக 3 மடங்கு ஆக்ஸிஜம்மாத்திரம் 2 பங்கு பாஸத்துடன்கலந்து, பாஸத்ரயாக்ஸிஜ முண்டாகும்.

இது ஒருவெண்ணிறமான கட்டிப்பொருள். உள்ளிவாசனையடிக்கும். சீக்கிரம் ஆவியாய்விடும். இதை ஆக்ஸிஜனுடன்கலந்தால், பாஸபஞ்சாக்ஸிஜமுண்டாகும்.

பாஸாமிலங்கள்.

முதல்வகை [$H\ P\ O_3$].
இரண்டாம்வகை [$H_3\ P\ O_4$].
மூன்றாம்வகை [$H_4P_2O_7$].

பாஸபஞ்சாக்ஸிஜம் தண்ணீரிற்கரைந்து பாஸாமிலங்கள் ஆகின்றது. பாஸாமிலங்கள், பகுதிப்பொருள்களுக்குத்தக்கபடி மேற்கூறிய வாறு மூன்றுவகைப்படும்.

முதல்வகை. இவ்வமிலத்தில் ஹைத்ரம் 1 பங்கும், பாஸம் 1 பங்கும், ஆக்ஸிஜம் 3 பங்கும் கலந்திருக்கும். பாஸபஞ்சாக்ஸிஜத்தைத் தண்ணீரிற்கரைத்தால் ஒருவித அமிலமாக மாறுகின்றது. அதைச் சற்று உலரவைத்தால், கண்ணாடிபோன்ற ஒருகட்டிப்பொருள் உண்டாகும். இதுதான், முதல்வகைப்பாஸாமிலம்.

$$P_2O_5+H_2O=2\ HPO_3.$$

பாஸபஞ்சாக்ஸிஜம்+ஜலம்=2 பாஸாமிலம்.

இரண்டாம் பாஸாமிலம்.

[H_3PO_4].

மேற்கூறிய பாஸாமிலத்தை மறுபடி தண்ணீரிற் கரைத்தால் இரண்டாம் பாஸாமிலம் உண்டாகும்.

பாஸாமிலம்+ஜலம்=இரண்டாம்பாஸாமிலம்.

$$[HPO_3+H_2O=H_3PO_4].$$

மூன்றாம் பாஸாமிலம்.

[$H_4P_2O_7$].

முற்கூறிய இரண்டாம் பாஸாமிலத்தைக்காய்ச்சினால், அடியில் வருமாறு மூன்றாம் பாஸாமிலம் உண்டாகும்.

$$2\ H_3PO_4=H_2O+H_4P_2O_7.$$

2 இரண்டாம்பாஸாமிலம்=ஜலம்+மூன்றாம்பாஸாமிலம்.

இம்மூன்றுவகை யமிலங்களும், பாஸபஞ்சாக்ஸிஜத்தின் மாறுபாடுகளே. அதனுடன்சேர்ந்திருக்கும் ஜலத்துக்குத்தக்கவாறு வித்யாஸமடைகின்றது.

பாஸோஹைத்ரம்.

பாஸம்+3 ஹைத்ரம்.

[PH_3]

மஞ்சள்பாஸத்தை ஸோடியஎரிகாரம் அல்லது பொட்டாஸிய எரிகாரத்தண்ணீருடன்கலந்து காய்ச்சினால் பாஸோஹைத்ர முண்டாகும். இது தண்ணீரில் லகுவாய்க்கரையாது. பச்சைலிட்மஸைமாற்றாது. ஆனால் பாஸ உப்புக்கள்செய்ய இது உபயோகமாகின்றது.

பாஸஜங்கள்
Phosphates.

மறுபெயர்—பாஸஉப்புக்கள்.

2-ம் பாஸாமிலத்துடன், காரங்களைக்கலப்பதால் மூன்றுவகை உப்புக்கள் உண்டாகின்றன.

உதாரணம்:—

$H_2Na\ PO_4$
$H\ Na_2\ PO_4$ =ஸோடியபாஸஉப்பு.
Na_3PO_4

குறிப்பு:—

Na=ஸோடியம்.

இதேமாதிரி சுண்ணபாஸஜமு(Calcuim phosphate)முண்டாகும்.

அத்யாயம்—17.
க்ளோரம்
Chlorine.
[Cl]

க்ளோரம் என்பது ஒரு வாயுமூலம். இது மஞ்சள்நிறமானது துர்நாற்றமுடையது. கொடியவிஷமானதால் ப்ராணிகள் இதை உட்கொள்ளலாகாது. ப்ரக்ருதியில் தனிப்பொருளாய் அகப்படமாட்டாது ஆனால், தினந்தோறும் சர்வசாதாரணமாய் உபயோகித்துவரும் கற்யுப்பிலிருந்து பிரித்து எடுக்கலாம்.

செய்முறை. கறியுப்பு, ஸோடியமும் க்ளோரமும் கலந்த (Na Cl) ஒரு கல்பப்பொருள். கறியுப்பைக் கொஞ்சம் மாங்கனீஸ்கருப்பாக்வைஜத்துடன்கலந்து அதனுடன் கொஞ்சம் கந்தகாமிலத்தையும் தண்ணீரையும்சேர்த்துச் சுடவைத்தால் மேற்கூறியவிதமான ஒரு காற்று உண்டாகும். அதை வக்ரநாளத்தின்வழியாய் இன்னொருஜாடியிற் சேகரித்துக்கொள்ளவேண்டும். இதுதான் க்ளோரவாயு. அதிகஉஷ்ணமானால் க்ளோரோஜைத்ரமும் உண்டாகும். இவ்விரண்டுவாயுக்களையும் தண்ணீர்வழியாய்ச்செலுத்தினால் க்ளோரோஜைத்ரம் கரைந்து, க்ளோரவாயுமாத்திரம் பிரிந்துவிடும்.

இதை உட்கொள்ளலாகாது. உட்கொண்டால் இருமலும் தொண்டைஎரிச்சலும் உண்டாகும். இவ்வாயு மற்ற உலோஹங்களுடன்கலத்தலால், க்ளோரக்கலப்(Chlorides)புக்கள் உண்டாகும். க்ளோரவாயுநிறைந்த சீசாவில் நிமிளை(Antimony)ப் பொடியைப் போட்டால், நெருப்புப்பொறியும் வெள்ளைப்புகையும் கிளம்பி நிமிளை க்ளோரம்(Chloride of antimony) உண்டாகும். பொருள்கள் ஆக்ஸிஜவாயுவிற்போலவே க்ளோரவாயுவிலும் எரியுமென்றும், அதினின்றும் மிகுந்த உஷ்ணமுண்டாகும் என்றும் இதனால் நாம் அறிந்துகொள்ளலாம்.

சலவைவாயு. க்ளோரம் சலவைசெய்வதற்கு உபயோகமானது; ஆதலால் இதற்குச் சலவைவாயு என்றும் பெயர். துணிகளிலுள்ள கறைகளைஎடுப்பதற்கு மிக்கஉபயோகமானது. சாயத்துணிக்கந்தையை க்ளோரவாயுவுள்ள சீசாவிற்போட்டுக்குலுக்கினால் சிறிதுநேரத்திற் சாயம்போய்விடும்.

சலவைப்பொடி (Bleaching powder). சுண்ணாம்புநிறைந்த சீசாவில் க்ளோரவாயுவைச்செலுத்திக் குலுக்கினால், அவ்விரண்டும் கலந்து புதியபொருள்ஆகும். அது பார்வைக்குச் சுண்ணாம்பையொத்திருந்தபோதிலும் ஒருவிதநாற்றம்மாத்திரம் உண்டாகும். அப்பொடியுடன், ஏதாவது அமிலநீரைக்கலந்தால் க்ளோரவாயுஉண்டாகும். இப்பொடி சலவைக்கும், சுத்தி(disinfection)க்கும் உதவும். சலவைப்பொடியைச் சாயத்துணியில்தடவிக் கந்தகாமிலநீரில் நனைத்தால் சீக்கிரத்திற் சாயம்போய்விடும்.

குறிப்பு:—சுண்ணக்ளோரம்= $Ca\ Cl_2$ =சலவைச்சுண்ணாம்பு.

$$Ca\ O+2\ Cl=Ca\ Cl_2+O$$
$$Ca\ O+2\ H\ Cl=Ca\ Cl_2+H_2O$$
$$Ca\ Co_3+2\ H\ Cl=Ca\ Cl_2+H_2O+Co_2$$

க்ளோரக்கலப்புக்கள்
Compounds of Chlorine.

ப்ரக்ருதியில் பலவிதக்ளோரக்கலப்புகளிருக்கின்றன. க்ளோரம் அநேக உலோஹங்களுடன்கலந்து கலப்புகளாகும்.

க்ளோரக்கலப்புகளுண்டாகும் வழிகள்.

(1) இன்னொருமூலத்துடன் தானேகலந்துண்டாவது.

உதாரணம்.

ஹைத்ரம்+க்ளோரம்=க்ளோரோஹைத்ரம்.

ஸோடியம்+க்ளோரம்=க்ளோரோஸோடியம்.

[**குறிப்பு.** க்ளோரோஹைத்ரம்=க்ளோராமிலம்=H Cl.]

க்ளோரோஸோடியம்=கறியுப்பு.

(2) க்ளோரோஹைத்ரம் மற்றக்கலப்புகளுடன்கலந்து உண்டாவது.

உதாரணம்.

ஸோடியம் ஹைத்ராக்ஷிஜம் + க்ளோரோஹைத்ரம் = ஸோடியக்ளோரம் + ஜலம்.

(3) க்ளோரோஹைத்ரமும் ஆக்ஷிஜமும்கலந்துண்டாவது.

நாகாக்ஷிஜம் + க்ளோரோஹைத்ரம் = நாகக்ளோரம் + ஜலம்.

$$Zn\ O+2\ H\ Cl=Zn\ Cl_2+H_2O$$

$$Mg\ O+2\ H\ Cl=Mg\ Cl_2+H_2O$$

வேறுஉதாரணம்.

(4) க்ளோரோஹைத்ரத்தில் உலோகத்தைக்கரைத் துண்டாக்குவது.

நாகம் + க்ளோரோஹைத்ரம் = நாகக்ளோரம் + ஹைத்ரம்

$$Zn+2\ H_{\prime}Cl=Zn\ Cl_2+H_2$$

வேறுஉதாரணங்கள்.

$$Fe+2\ H\ Cl=Fe\ Cl_2+H_2$$
$$Mg+2\ H\ Cl=Mg\ Cl_2+H_2$$
$$Al+3\ H\ Cl=Al\ Cl_3+H_3$$
$$Na+H\ Cl=Na\ Cl+H$$

(5) கரிஜத்(Carbonate)தை க்ளோராமிலத்திற் கரைத்துண்டாக்குவது.

ஸோடியகரிஜம் + க்ளோராமிலம் = ஸோடியக்ளோரம் + கரிவாயு + ஜலம்

(6) கரையமாட்டாத க்ளோரக்கலப்புச் செய்யவேண்டுமானால், அந்த லோஹ உப்புடன் வேறு க்ளோரக்கலப்பைச்சேர்த்துத் தண்ணீரிற் கரைத்தால், வேண்டிய க்ளோரக்கலப்புப் படிந்துவிடும்.

உதாரணம்.

ஸோடியம் க்ளோரம் + வெள்ளி + நைத்ரஜம் = வெள்ளிக்ளோரம் + ஸோடியநைத்ரஜம்

குறிப்பு. வெள்ளி நைத்ரஜம்=Silver Nitrate.

வெள்ளிக்ளோரம் கரையமாட்டாது. வெள்ளைப்பொடியாய்ப் படிந்துவிடும்.

பரீக்ஷை. ஏதாவது ஒருவஸ்துவில் க்ளோரக்கலப்பு இருக்கின்றதா என்று அறியவேண்டுமானால், அதைக்கரைத்ததண்ணீரில் வெள்ளிநைத்ரஜத்தைக் கொஞ்சம்கலந்தால் வெண்ணிறமானபடிவுகள் (white precipitates) உண்டாகும். இதுதான் க்ளோரக்கலப்பு இருப்பதன் லக்ஷணம்.

கறியுப்பு
Common Salt.
[Na Cl.]

சாதாரணமாய்த் தினந்தோறும் சமையல்களில் உபயோகப்படும் உப்புக் கறியுப்பு எனப்படும். இது சமுத்திரஜலத்தில் மிகுதியாய்க் கரைந்திருக்கும். இது க்ளோரமும் சோடியமும் சமபாகமாய்க்கலந்த ஒரு கல்பப்பொருள். சமுத்ரஜலத்தைக்காய்ச்சுவதாலும் பாத்திகளிற் கட்டிச் சூரியவெப்பம்படும்படிசெய்வதாலும் தண்ணீர் ஆவியாக, உப்புமாத்திரம் மிகுந்துவிடும்.

செய்முறை. க்ளோரம் ஸோடியத்துடன் நேரேகலந்து கறியுப்பாகும்.

க்ளோரம்+ஸோடியம்=க்ளோரோஸோடியம்.

$$cl+Na=Na\ cl.$$

ஸோடியம் க்ளோரோஹைத்ரத்துடன்சலப்பதாலும் கறியுப்பு உண்டாகும்.

க்ளோரோஹைத்ரம் + ஸோடியம். = க்ளோரோஸோடியம் + ஹைத்ரம்.

குறிப்பு.—க்ளோரோஸோடியம்
=க்ளோரம்+ஸோடியம்
=கறியுப்பு.

க்ளோராமிலம்.

Hydrochloric acid.

[Hcl].

க்ளோரோஹைத்ரம் (Hydrogen Chloride). இது ஹைத்ரமும் க்ளோரமும்கலந்த ஒரு கல்பவாயு. ஹைத்ரமும் க்ளோரமும் நேரே கலந்துண்டாவதுமுண்டு.

செய்முறை. கறியுப்பையும் வீரமுள்ள (Strong) கந்தகாமிலத்தையும் கலந்தால் க்ளோரோஹைத்ரம் என்ற ஒருவாயு குமிழிகளாய் வெளிக்கிளம்புகின்றது. இது ஈரமில்லாநிலைமையில் ஸ்வச்சமானதும் நிறமற்றதுமான ஒருவாயு. ஈரம்பட்டால், உறிஞ்சும்பொழுது வெள்ளைப்புகைபோலிருக்கும். உட்கொண்டால் தொண்டையில் புகைச்சல் உண்டாகும். இது உலர்ந்த லிட்மஸை மாற்றாது. ஆனால் ஈரமான பச்சைலிட்மஸைச் சிவப்பாக்கிவிடும். பலபொருள் எரிந்துகொண்டிருக்கும்நிலைமையில் இவ்வாயுவிற்கொண்டுபோனால் அணைந்துபோம்.

க்ளோராமிலம். மேற்கூறிய க்ளோரோஹைத்ரத்தைத் தண்ணீரிற்கரைத்தால், அது க்ளோராமிலம் ஆகும். க்ளோராமிலத்திற் பல லோஹங்கள் கரைந்து அந்தந்த லோஹக்ளோரங்களும், ஹைத்ரமும் உண்டாகின்றன. பளிங்குமுதலான கரிஜங்கள் இதிற்கரைந்து, கரித்வயாக்ஸிஜம் உண்டாகின்றது. சோடாஎரிகாரம் இவ்வமிலத்தை நிஷ்கரி(Neutralise த்துக் கறியுப்பு உண்டாக்குகின்றது.

சோடியம் எரிகாரம் [NaOH] + க்ளோராமிலம் [Hcl] = கறியுப்பு [Nacl]. + ஜலம் [H_2O].

க்ளோராமிலம் என்பது முற்கூறிய காற்றின் கரைநீர்தான்.

க்ளோரோஹைத்ரநீர் (Liquified Hydrochloric acid). க்ளோரோஹைத்ரத்தைப் பாரத்தாற் பலவந்தப்படுத்தித் த்ரவமாக்கலாம். அதைக் குளிர்ச்சியாக்குவதாலும் த்ரவமாவதுண்டு. ஆனால் க்ளோரோஹைத்ரநீரும் க்ளோராமிலமும் ரஸாயனரீதியில் ஒத்திருந்தாலும் அவைகளின் தன்மைகள் வித்தியாசப்படுகின்றன. க்ளோரோஹைத்ரநீர் அமிலமல்ல. மற்றலோஹங்கள் அதிற் கரையவும் மாட்டா.

குறிப்பு.—(1) க்ளோரோஹைத்ரவாயு, (2) க்ளோரோஹைத்ராமிலம் அல்லது க்ளோராமிலம் (3) க்ளோரோஹைத்ரநீர் இம்மூன்றும் ரஸாயனரீதியில் ஒத்திருப்பினும் தன்மை வித்யாஸப்படுகின்றன.

க்ளோராமிலமும் ஸோடியமும்.

க்ளோராமிலமும் ஸோடியமும்கலத்தலாற் கறியுப்பும் ஹைத்ரமும் உண்டாகின்றன. இப்புதியபொருள்கள் கரைந்திருக்கும் நீரைக் காய்ச்சினால், உப்பு அடியில் தங்கிவிடும்.

க்ளோராமிலம் [Hcl] + ஸோடியம் [Na]. = கறியுப்பு [NaCl] + ஹைத்ரம் [H].

க்ளோராமிலமும் நாகாக்ஸிஜமும்.

நாகாக்ஸிஜத்தைச் சுடவைத்து அதிற் க்ளோராமிலத்தைச்செலுத்தினால், நாகக்ளோரமும் ஜலமும் உண்டாகும்.

2க்ளோராமிலம் [2Hcl] + நாகாக்ஸிஜம் [ZnO]. = நாகக்ளோரம் [$Zncl_2$] + ஜலம் [H_2O].

க்ளோராமிலமும் லோகாக்ஸிஜங்களும்.

லோகாக்ஸிஜங்களைச் சுடவைத்து அதில் க்ளோராமிலத்தைச் செலுத்தினால், அந்தந்தலோஹக்ளோரமும் ஜலமும் உண்டாகும்.

லோஹாக்ஸிஜம் + க்ளோராமிலம் = லோஹக்ளோரம் + ஜலம்.

க்ளோராமிலமும் ஈயஆக்ஸிஜங்களும்.

ஈயவிந்தூரம்(Red lead)என்னும் ஈயஆக்ஸிஜத்தைச்சுடவைத்து க்ளோராமிலத்தைக்கலந்தால், ஈயக்ளோரம் என்னும் வெண்ணிறமான பொருள் உண்டாய்த் தண்ணீர் அடியிற் (litharge) படியும். அதே மாதிரி ஈயமஞ்சள் என்னும் இன்னொரு ஆக்ஸிஜத்தையும் கலந்து செய்வதுமுண்டு.

உதாரணம்.

ஈயமஞ்சள் [PlO] + 2க்ளோராமிலம் [2Hcl]. = ஈயக்ளோரம் [$PlCl_2$] + ஜலம்.

ஈயவிந்தூரம் + க்ளோராமிலம் = ஈயக்ளோரம் + ஜலம் + க்ளோரம்.

குறிப்பு.—

ஈயஆக்ஸிஜங்கள் { ஈயமஞ்சள் [Litharge = PlO] ; ஈயவிந்தூரம் [Red lead = PlO_2].

ஈயமஞ்சளிற்பார்க்கிலும் ஈயவிந்தூரத்தில் அதிகஆக்ஸிஜன் அடங்கியிருக்கின்றது.

(இன்னும் வரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர் B.A. B.L.

புத்தகமதிப்புரை.

1. **முதுமொழிக்காஞ்சி, மூதுரை, நல்வழி இவற்றின்மூலபாடம்:-** இது, புதுக்கோட்டைராச்சியத்தைச்சார்ந்த கோனாப்பட்டுநகரத்தார் நடத்தும் ஞானசம்பந்தநற்சபையின் இரண்டாவதுபிரசுரமாகப் பிழையறப் பதிப்பிக்கப்பெற்றுக் கல்விகற்கும் தமிழ்மாணவர்களுக்கெல்லாம் விலையின்றிக் கொடுக்கப்பெற்றுவருகிறது. இப்புத்தகம்பதிப்பிக்கப் பொருளுதவிசெய்து புகழும்புண்ணியமும் ஒருங்கெய்திய பலவான்குடி ஸ்ரீமான்-ராம. குமர. சு. சுப்பிரமணியன்செட்டியாரவர்களது தமிழபிமானம் மிகப் பாராட்டற்பாலது.

இவ்வாறே மற்றுமுள்ளசெல்வவான்களும் தத்தம் தகுதிக்கேற்ற ஓரொரு தமிழ்ப்புத்தகத்தைஅச்சிட்டுத் தமிழ்கற்பவர்க்கு விலையின்றிக் கொடுக்கும்படி சாசுவதமான ஏற்பாடுசெய்வார்களாயின், அவர்களெல்லோரும் உலகப்பிரவித்தியும் புண்ணியமுமுள்ளவராவதுமன்றி, அவ்வப்புத்தகத்தின்பெயரால் அவர்கள்குடிப்பெயர்வழங்கத்தகும் பெரும்பாக்கியம்பெறுதற்கும், அவர்கள் சந்ததியாரும், அதனைமேற்பார்க்கும் கல்விவாசனையுடையராவதற்கும் காரணமாகுமென்று தோன்றுகிறது.

இவ்வாறு தமிழ்ப்புத்தகங்களையச்சிட்டுதவு முறையானது புத்தகம் அச்சிடுப் பொருள்சேர்ப்பவரால், தோன்றியவாறச்சிட்டுப் பிழைபடச்செய்வதற் கிடமில்லாமற்செய்வதற்கும் சாதகமாயிருக்கிறது.

முதற்பிரசுரம் வெளியிட்ட சிலமாதங்களுக்குள்ளே இரண்டாம் பிரசுரமாக இப்புத்தகத்தைவெளிவரச்செய்த ஞானசம்பந்தநற்சபையின் காரியதரிசி ஸ்ரீமான்-சுப்பிரமணியன்செட்டியாரவர்களது பொதுநன்மைக்குழைக்கும் ஊக்கமு முழைப்பும் தமிழ்மக்களாற் பாராட்டற்பாலன.

இப்புத்தகத்தை அடியிற்கண்டவர்களிடம் விலையின்றிப்பெற்றுக் கொள்ளலாம். அயலூரிலுள்ளவர்கள் தபாற்செலவுக்கு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும். தபாற்செலவு, 1-பிரதிக்கு அரை அணாவும், அதற்குமேல், பிரதி 1-க்குக் கால் அணாவீதமும் அனுப்பவேண்டும்

புத்தகங்கிடைக்குமிடங்கள்:—

1. காரியதரிசி ஞானசம்பந்தநற்சபை, கோனாப்பட்டு, புதுக்கோட்டையிலாகா.
2. ராம. குமர. சு. சுப்பிரமணியன்செட்டியாரவர்கள், பலவான்குடி, இராமநாதபுரம்ஜில்லா.

---

2. **செய்யுட்கோவை:—** இது திருவநந்தபுரம் ஸ்ரீமத்-டி. லக்ஷ்மணப்பிள்ளை பி. ஏ. அவர்களாற் பாடப்பெற்றது. இதிலுள்ள ஞானானந்தனடிமாலை, விண்ணப்பமாலை, நினைவாட்சி என்னும் பிரபந்தங்களிலுள்ள செய்யுள்களெல்லாம் மிகத்திருந்திய பழையவாக்குகள்போலவே இனிமையும் தெளிவுமுடைய செவ்வியசொற்றொடர்களாற் செய்யப்பட்டுள்ளன. சொல்லப்படும்விடயங்களெல்லாம் கடவுளை யொருசமயச் சார்பின்றிப் பொதுமையில் வழிபடும்படி அருமையானகருத்துக்களமைந்த தோத்திரரூபமாயுள்ளன. இவையும், மற்றும் வெவ்வேறு விடயம்பற்றிப் பாடிச்சேர்க்கப்பட்டிருக்கும் பலதிறப்பாடல்களும் படிப்பவர்களுக்கு இன்பமும் மனத்திருத்தமு மளித்தற் கேதுவாயிருப்பதுமன்றிப் பிள்ளையவர்களின் கல்வியறிவொழுக்கங்களின் திருத்தங்களைக்காட்டுங் கண்ணாடிகள்போலவும் விளங்குகின்றன. ஆங்கில பாஷையி னுயர்தரக்கல்விப்பயிற்சிக்கிடையே தமிழ்ப்பயிற்சிக்கு அவகாசம்செய்துகொண்டு தமிழையும் நன்குகற்றுத் தமிழ்நூலியற்றி யுலகுக்குபகரிக்கும் பிள்ளையவர்களின் தமிழபிமானமும் சமரசபாவமும் பாராட்டத்தக்கன.

---

3. **வியாசத்திரட்டு:-** (இரண்டாம்பாகம்) இது, மதுரை வித்தியாபானுப்பத்திராதிபர் ஸ்ரீமத்-மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்களா லெழுதப்பெற்றது. இதில் யாவருமறிந்தொழுகுவதற்குரிய அருமைவாய்ந்த இருபத்தாறுவியாசங்கள் எல்லாமதத்தினர்க்கும்பொதுவா யெழுதப்பட்டுள்ளன. அவற்றுள் ஒவ்வொருவியாசமும் செவ்வியதமிழ்நடையில் எழுதப்பட்டிருப்பதுடன் வேண்டுமிடங்களுக்கேற்ற மேற்கோளாகப் பலநூல்களிலிருந்து மருமையானசெய்யுள்களும் எடுத்துச் சேர்க்கப்பட்டிருப்பதால் இப்புத்தகத்தைப்படிப்பவர்கள் நல்ல தமிழ்க்கல்விப் பயிற்சியும், அறிவொழுக்கங்களுமுடையராய்ச் சபையோர்விரும்பப் பேசும் சாமர்த்தியமுமுடையராவரென்பதற் கையமில்லை. இதன்விலை அணா—12.

---

4. **வியாசத்திரட்டு:—** (முதற்பாகம்) இதுவும், மதுரை வித்தியாபானுப்பத்திராதிபர் ஸ்ரீமத்-மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்களாலெழுதப்பெற்றது. இதில், சைவசமயசம்பந்தமுள்ள முக்கியமான பன்னிரண்டுவியாசங்கள் ஆங்காங்கு வேண்டும் மேற்கோட்செய்யுட்களுடன் செவ்விய தமிழ்நடையிலெழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன. அவை சைவசமயசம்பந்தமா யுபந்யாசஞ்செய்பவர்களுக்கும் சைவசமயிகளுக்கும் மிகவும் பயன்படத்தக்கன. இப்புத்தகத்தின்விலை அணா—8. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப்பெறலாம்.

---

5. சிலையெழுபது:—இது, வன்னியபூபதிகள்பேரிற் கம்பர் பாடியதாகவழங்கப்படும் பிரபந்தமும், அதற்குப் பேழைக்குடி ம. துரைசாமிநாயகரவர்களியற்றிய தெளிவுரையும்சேர்த் தச்சிடப்பெற்றது. இதில் வன்னியகுலமித்திரன்பத்திராதிபர் ஆ. சுப்பிரமணியநாயகரவர்களாலெழுதப்பெற்ற கம்பர்வரலாறும் மற்றும் பலபண்டிதர்களாலெழுதப்பெற்ற சிறப்புப்பாயிரமும் சேர்க்கப்பெற்றுள்ளன. இதற்குரையெழுதிய பேழைக்குடி ம. துரைசாமிநாயகரவர்களுக்கும், இதைப் பதிப்பித்த வன்னியகுலமித்திரன்பத்திராதிபர் ஆ. சுப்பிரமணியநாயகரவர்களுக்குமுள்ள குலாபிமானம் பாராட்டத்தக்கதே. இதன்விலை அணா—6. தபாற்கூலி அணா—2. வேண்டுவோர் பதிப்பித்தோர்க்கெழுதிப்பெறலாம்.

---

6. விஷ்ணுஸ்தலமஞ்சரி:—இது, மயிலை ஸ்ரீமான்-கோ. பட்டாபிராமமுதலியாரவர்களால் எழுதப்பெற்றது. இதில், திவ்யதேசயாத்திரை செய்புமவர்களுக்குபகாரமாக ஒவ்வொரு விஷ்ணுஸ்தலங்களுக்குமுள்ள பிரபாவம், மார்க்கம், வசதி என்னும் விஷயங்களைத் தெளிவாயெழுதி, இறுதியில் மங்களாசாசனப்பாசுரத்திரட்டும், மற்றும் தெரியவேண்டிய சிலவிஷயங்களுக்கு அட்டவணையும் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. இதன்விலை அணா—8. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

---

7. இந்தியமாதர்சரித்திரம்:—(முதற்பாகம்) இது, தமிழ்ப்பண்டிதர் V. B. வேங்கடராமசாஸ்திரிகளால் எழுதப்பட்டது. இதிலுள்ள இந்திய மாதர்சரித்திரங்கள்பலவும் கல்வி யறிவு சாமர்த்தியங்களிற் பெண்மக்களுக்கு மனம்பற்றும்படி பொதுவாயும் அளவாயும், தெளிவாயுமெழுதப் பட்டுள்ளன. இப்புத்தகத்தின்விலை அணா—5. தபாற்கூலிவேறு. வேண்டுவோர் ஆர். திருமலை அண்டு கம்பெனி, 114 பவழக்காரத்தெரு, சென்னை, என்றவிலாசத்துக் கெழுதிப் பெறலாம்.

---

8. சித்தர்களஞ்சியம்:—இது, கும்பகோணம் பாஞ்சோதிவைத்தியசாலைத்தலைவர் கே. எஸ். பொன்னம்பலபண்டிதரால், பலசித்தர் நூல்களிலிருந்து தத்துவம் யோகம் வைத்தியம்முதலியவற்றுக்குரிய பலவிஷயங்களைத்திரட்டி யெழுதப்பட்டுள்ளது; சித்தர்சாஸ்திரங்கற்போர்க்குப் பயன்படத்தக்கது. இப்புத்தகம்வேண்டுவோர் விலைவிவர முதலியன ஆக்கியோர்க்கெழுதித்தெரிக.

பத்திராதிபர்.

உ

கடவுள்துணை.

OFFICE OF THE REGISTRAR OF ... 4 MAR 1915 MADRAS

செந்தமிழ்

தொகுதி-கச.] ராக்ஷஸஹு மார்கழிமீ [பகுதி-உ.
Vol. XIV. December—January, 1916. No. 2.

தக்ஷிணதேசமும் தக்கநாடும் ஒன்றோ வேறோ?*

சீவகசிந்தாமணிப்பதிகத்து 15-வதுசெய்யுளும், உரையும், அந்நூலை உரையுடன்பரிசோதித்துப்பதிப்பித்தவர்களதுகுறிப்பும், அக்குறிப்பிற்கண்டுள்ளசெய்யுளும் தாழவருவன:—

"தள்ளாதசும்மைமிகு†தக்கநனாடணைந்து
விள்ளாவிழுச்சீர்வணிகன்மகள்வேற்கணோக்க
முள்ளாவிவாட்டவுயிரொன்றொத்துறைந்தவாறுங்
கள்ளாவிநாறுங்கமழ்கோதையிற்போயவாறும்."

விள்ளா-நீங்கா. உளம்-மனம். ஆவி-மணம். இன்-நீக்கம்.

இ-ள், இன்ன ஒலியென நீக்கலாகா ஒலிமிகுகின்ற தக்கநாட்டைப் பொருந்தி, அவ்விடத்துநகரில் வணிகன்மகள்நோக்கம் மனத்துணின்று உயிரைவருத்துதலால் இருவருயிரும் ஒருயிரையொத்து உறைந்தபடியும், அவளினின்றும் போனபடியு மென்க.

†இந்த நாட்டிற்குத் தக்கநாடென்பது பெயர். இதனைக் கேமசரியாரிலம்பகத்து 28-வதுகவியிற்காண்க.

"படம்புனைந்தெழுதியவடிவிற்பங்கயத்
தடம்பலதழீஇயதுதக்கநாடது
வடங்கெழுவருமுலைமகளிர்மாமைபோன்
றிடம்பெரிதினியதனெல்லையெய்தினான்."

(கேமசரியாரிலம்பகம் 28-வதுகவி.)

---

*இதற்குப் பத்திராதிபரபிப்பிராயம் அடுத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

அச்சுப்பிரதிகளி லிங்ஙனமிருப்ப, தஞ்சைமாநகரத்துப் பூர்வ ராஜாங்கத்தைச்சார்ந்த ஸரஸ்வதீமஹாலயத்துள்ள சிந்தாமணிப்பழைய வேட்டுச்சுவடிகள் (144; 146; 147; 156 இலக்கமிட்ட) நான்கினுள்ளும் "தள்ளாதசும்மைமிகுதக்கணநாடுநண்ணி" என்றபாடமே எழுதப்பட்டுள்ளது. அன்றியும், உரையுடன்கூடிய மேலேகண்ட (144; 147; 156 இலக்கமுள்ள) மூன்றுபிரதிகளுள்ளும் உரையில், '.....இன்னவொலி யென நீக்கலாகா வொலிமிகுகின்ற தக்கணநாட்டைப் பொருந்தி யவ்விடத்துநகரில்.........' எனவே எழுதப்பட்டுள்ளது.

கி. பி. 1868-வதுவருஷத்தில் எச். பவர்துரை என்னும் பாதிரியாரால், செலவுக்கு முட்டின்றித் துரைத்தனத்தார் அளித்தபொருளுதவியும், பொருள்விளங்காவிடத்து விளங்கப் பொருள்தந்து திருநெல்வேலி வித்வான் முத்தையாபிள்ளை செய்தபேருதவியும்சேரப்பெற்று, சென்னையில் கிறிஸ்தவஞானோதயசங்கத்தாரது அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்ட உரையுடன்கூடிய நாமகளிலம்பகத்து, பதினோராவது பக்கத்தில் 'தள்ளாதசும்மைமிகுதக்கணநாடுநண்ணி' எனப் பாடங்கொண்டு உரையின்கண்ணும் 'தக்கணநாட்டைப்பொருந்தி' எனக் காணப்படுகின்றது.

ஆகவின் மேலேகண்டுள்ள கேமசரியாரிலம்பகத்து 28-வதுகவியில், தக்கணநாடு என்பது கடைக்குறையால் தக்கநாடு எனக் கூறப்பட்டதேயாம்போலும்.

நிற்க; க்ஷத்திரசூடாமணி, கத்தியசிந்தாமணி, ஜீவந்தரசம்பு என்ற வடமொழிக்காவியங்களுள்ளும், சீவகன் தக்கணநாட்டுக் கேமமாபுரத்தையடைந்து கேமசரியாரைமணம்புரிந்ததாகத் தெளிவுறக்கூறப்பட்டுள்ளதும் அடியிற்காணலாகும்.

"[illegible] ।
[illegible] ॥

... ...

[illegible] ।
[illegible] ॥

*[illegible] ।
[illegible] ॥

... ...

[illegible] ।
[illegible]" ॥

இ-ள், பிறகு அவன் ஆங்குநின்றுவெளிப்பட்டுத் தக்கணம் என்னும்பெயரியநாட்டின்கண் ஸஹஸ்ரகூடமென்னும் ஜிநாலயத்தை யடைந்து, எண்குணனைத் துதிசெய்தனன்.

... ...

இந்தத் தக்கணநாட்டிற்குக் கேமபுரியென்பது ராஜதானி. அப்பட்டினத்தரசன் நரபதிதேவன் எனப்படுவான். அவ்வரசனுக் கினையன் பத்திரன் என்னும் வணிகன். அவனது மனைவி நிர்விருதி. அவர்களது புதல்வி க்ஷேமசிரியென்பாள்.

... ...

பின்னர், நல்லதொருமுகூர்த்தத்தில், சுபத்திரனால் தரப்பெற்ற க்ஷேமசிரீயைத் தூயவனும் சீவகன் முறைப்படி மணம்புரிந்தனன்.

க்ஷத்திரசூடாமணி 6-வது இலம்பகம்.

"[illegible]............[illegible]
[illegible] । [illegible]..........[illegible]
[illegible]..........[illegible]"

(இ-ள், சச்சந்தன்மகனாகிய சீவகன் சிற்சிலகாடுகளைக் கண்ணுற்றான். அவைகளையெல்லாம் ஒவ்வொன்றாகக்கடந்துசென்று, தக்கணநாட்டின்கண்ணுள்ள சிறந்ததோர் ஜிநாலயத்தைக்கண்டனன்.)

கத்தியசிந்தாமணி 6-வது இலம்பகம்.

---

*"[illegible]" என்னும் மூலமானது, "அவ்வரசனுக் கினையன் சுபத்திரன் என்னும் வணிகன்" என்ற உரைக்கும், "அக்கனிக்கரசனையனையாளுடைய" என்னுஞ் சிந்தாமணிக்கும் பொருந்தாமைபற்றி ஆராயத்தக்கது.

'[illegible]......"

(ஸர்வோத்தமமாகவுள்ள தக்ஷிணதேசத்தையடைந்து ... ...)

ஜீவந்தரசம்பு 6-வது இலம்பகம்.

மேலும், இவ்விடத்து '[illegible]' என்றுகூறாது, '[illegible]' என (எல்லாநாட்டிற்கும் வடக்கிலுள்ளது தக்கணநாடு; எனவும், எல்லாநாட்டினுஞ்சிறந்தது தக்கணநாடு; எனவும் பொருள்பட) முரண்டோன்றியழிவணியாற்கூறிய கவிசாதுரியத்திற்கேற்ப, **தேவரும்** கடைக்குறையால் கேமசரியாரிலம்பகத்து 28-வதுகவியில் தக்கநாடு எனக் கூறிவிட்டு அடுத்தகவியில்,* தம்புலமைவிளங்க ஏதுக்கூறி, **தக்கநாடு தக்கநாடேயாம்** என்றார் போலும்.

ஆகலின், பதிகத்துத் **தக்கணநாடு** எனத் தெளியக்கூறியிருத்தலின், பின்னர் அதனையே கடைக்குறையால், தேவர் **தக்கநாடு** எனக் கூறினார்; தக்கணநாடே தக்கநாடாம், என்பது எனதுகருத்து. இக்கருத்து, சரியோ தவறோவென்பதனைத் தக்கோர்களாகிய பெரியோர்கள் ஆராய்ந்தெழுதுவாராக.

டி. எஸ். குப்புஸ்வாமிசாஸ்திரி.

---

*தேங்கயத்தணிமலர்தெகிழ்ந்தநாற்றமும்
பூங்குழன்மடந்தையர்புனைந்தசாந்தமு
மாங்கெலாமகிற்புகையளாயவாசமுந்
தாங்கலாற்றக்கநாடாயதென்பவே.

(கேமசரியாரிலம்பகம் 29-வதுகவி.)

ஸ்ரீ

தக்ஷிணதேசமும் தக்கநாடும் ஒன்றுமன்று வேறுமன்று.

தஞ்சை பிரும்மஸ்ரீ குப்புஸ்வாமிசாஸ்திரிகள் சீவகசிந்தாமணியின் தமிழேட்டுப்பிரதிகளையும், பிற ஸம்ஸ்கிருதகாவியங்களையுங்கொண்டு ஆராய்ச்சிசெய்து செந்தமிழ்க்கெழுதிவரும் விஷயதானங்களில் இதன் முன்சேர்க்கப்பெற்றிருக்கிற "தக்ஷிணதேசமும் தக்கநாடும் ஒன்றோ? வேறோ?" என்னும் பராமர்சபத்திரத்தால் நிருபரேயரபிப்பிராயமாக வெளியாகும் முக்கியமானவிஷயங்கள் இரண்டே. அவையாவன:— வடமொழிக்காவியங்களிற்கண்ட தக்ஷிணதேசம் என்பதே சிந்தாமணியில், தக்கணநாடு என வழங்கப்பெற்று அதுவே கடைக்குறையாகத் தக்கநாடெனவும் வழங்கப்பட்டமையால், பதிகத்தின் பதினைந்தாம்பாட்டில், பிரும்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கள் அச்சிட்ட பிரதியிலும் அதன் மூலப்பிரதிகளிலுமுள்ள 'தக்கநாடு' என்றபாடம் சிறந்ததில்லையென்பதும், தாம்கண்டபிரதிகளிலுள்ள தக்கணநாடு என்ற பாடமே சிறந்ததென்பதும் ஒன்று. அந்நாட்டின் இயற்பெயரையெழுத வேண்டிய கீழ்க்குறிப்பில், தக்கணநாடு என்றெழுதாது தக்கநாடு என விகாரப்பெயரையெழுதியிருப்பது முறையன்றென்பது மற்றொன்று,

இவற்றுள் முன்னதான பிரதிபேதத்தைப்பற்றி ஆராய்வாம். உயர்ந்தகாவியங்களிற் பிரதிபேதமானபாடங்களில் இது சிறந்தது; இது சிறவாதது என்பதை அதனதன் பொருணயத்தாலுளதாகும் ஏற்றத்தாழ்வுகண்டே தெளியவேண்டுமல்லது பல பிரதிகளிலிருப்பது கொண்டுமட்டும் தெளிதல் கூடாது. ஆகையால் அப்பாடபேதங்களின் பொருணயங்களை ஆராய்வாம்.

தக்கணநாடு என்ற பாடத்தில் அந்நாட்டிற்கு இடுகுறியளவாயொரு பெயர்கூறியதாய்முடிவதல்லது "விள்ளாவிழுச்சீர்வணிகன்மகள்வேற்கணேக்க, முள்ளாவிவாட்டவுயிரொன்றொத்துறைந்தவாறு" என்ற காமபோகமாகிய பிரஸ்துதத்துடன் ஓரியைபுமில்லாதிருக்கிறது.

தக்கநாடு என்ற பாடமானது, "தேங்கயத்தணிமலர்தெகிழ்ந்தநாற்றமும், பூங்குழன்மடந்தையர்புனைந்தசாந்தமு, மாங்கெலாமகிற்புகையளாயவாசமுந், தாங்கலாற்றக்கநாடாயதென்பவே" என்ற கவிஹ்ருதயத்தோடுகூடிய அன்வர்த்தநாமமுடையதாகையால் அந்நாடு காம

இனி, தக்ஷிணதேசமும் தக்கநாடும் ஒன்றோவேறோ வென்பதனையா ராயின், அந்நாட்டினை வடமொழிவாணர் தக்ஷிணதேசம் அல்லது தக்ஷிண தேசம் என வழங்கியிருப்பாராயின், தக்கநாடும் அதுவும் சொல்லாலும் பொருளாலும் ஒன்றென்றுசொல்லலாம். அப்படியின்றி, தக்ஷிணம் என்றேவழங்கினமையால், சொல்லால் ஒன்றன்றென்றும், இரண்டும் ஒருநாட்டையேகுறிப்பதாற் பொருளால் வேறன்றென்றுமேகொள்ள வேண்டும்.

ஆனால் வடமொழிவாணர் தக்ஷிணதேசமென்றுவழங்கியதற்குக் காரணமென்னவென்றால், அக்காலத்தில், தாங்களிருந்ததேசத்துக்குத் தெற்காயிருக்குந்தேசங்களைத் தெக்ஷிணதேசமெனவழங்கிய பயிற்சி வலியால் மயங்கி இத்தேசமும் தெற்காயிருப்பதுபற்றி அங்ஙனம் வழங் கினர் எனக் கொள்ளுதல் பொருந்துமென்க.

அது விந்த்யோத்தரமென்ற வாக்கியத்துக்கு விரோதமாகாதோ வென்னி லாகாது. விந்த்யோத்தரதேசம் என்பதில் விந்த்யஶப்தமானது ஆத்மாச்ரயதோஷம் வாராமைப்பொருட்டு உத்தரதேசமொழித்த தன் பிரதிசம்பந்தியான தெக்ஷிணதேசங்களையே பொருளாகக்கொள்ளு மாகையால், விந்த்யோத்தரமென்றதற்குச் சேர சோழ பாண்டியமண் டலங்களாகிய தென்னாட்டுக்கெல்லாம் வடக்காயுள்ளது என்பது பொரு ளாகக்கொள்க. அதாவது தமிழ்நாட்டின்வடக்காய் நருமதையாறு வரையுள்ளநாடென அறிக. இதனை, வீரன் என்ற பெயர் ஆதாரக்குறிப் பால் வீரணனாய் அப்பெயருடையான்கண்டது வீரணமாய்ப் பின்பு வீராணமாய் வீராணப்பேரி என்று வழங்குவதுபோல, ஆங்கிலவிற் பன்னர்களால் தக்கா, தக்கான், தக்காணம், தக்காணத்துப்பூருவசரித் திரம் என வழங்குதலும், தக்கின், தக்கீனம், என வழங்காமையுங்கண்டு கண்டுகொள்க.

ஆனால், தக்ஷிணதேசத்திற்சேராத தக்கணநாட்டை தக்ஷிணம் என்று எப்படிவழங்கலாமெனில், கடலுக்கு மேலைக்கரையாயிருப்பதோ ரூரை நாட்டார் கீழைக்கரையென்றுவழங்குவதுபோலுமென்க.

இதுகாறுங்கூறியவாற்றால், தக்ஷிணதேசமென்பது தமிழ்நாடென்று கொள்ளும்பக்ஷத்தில், தக்கநாடு தக்ஷிணதேசத்தின்வேறுமெனவும், விந் தியமளவுமுள்ள தென்பாகமென்றுகொள்ளும்பக்ஷத்தில் அதன் ஏகதேச மாயிருப்பதால் ஒன்றாகாமலும் வேறாகாமலும் உள்ளதெனவும் நன்கு தெளியத்தக்கது.

திரு. நாராயணையங்கார்,
செந்தமிழ்ப்பத்திராதிபர்.

உ

பதார்த்ததீபிகை.

[முருகேசபண்டிதர்பாட்டுக்கள் இன்னும் பல வுளவாயினு பதார்த்ததீபிகைப்பாட்டுக்களுள்ளே சிலவற்றிற்கு யாம் எழுதி உரையை இந்தச் செந்தமிழில் வெளிப்படுத்துவோமாயின், அது கற் வர்க்கு நற்பயன் கொடுப்பதாகும் எனக்கருதிச் சிலபத்திரிகைகளி அதனை எழுதப் புகுந்தாம்.]

விநாயகவணக்கம்.

தந்தி மாமுகத் தெந்தை தாளிணைச்
சிந்தை யாலருந் தொந்த நீங்குமே.

பதார்த்தோத்தேசம்.

பதார்த்தவுணர்ச்சிக்குக் காரணமாய உத்தேசம், இலக்கணம் பரீக்கணம் என்னும் முறை மூன்றனுள், பதார்த்தங்களின் உத்தேசப் முதற்கவியாற் கூறப்படுகின்றது.

பதார்த்தோத்தேசமாவது பதார்த்தத்தை உத்தேசமாகக் கூற தல். பதார்த்தமாவது அறியப்படுந்தன்மை, அளவையாலே அளந்த றியப்படுந்தன்மை, பெயரிட்டு வழங்கப்படுந்தன்மை முதலிய இலக் கணங்களுடைய பொருள். பதத்தாற் பெயரிட்டுவழங்கப்படுவதாத லிற் பதார்த்தம் எனப்பட்டது. பதம்-சொல். அர்த்தம்-பொருள்.

உத்தேசமாவது சொல்லக்கருதியபொருளைப் பெயரளவிற்சொல் லல். அது பதி, பசு, பாசம் எனப் பொருள் மூன்று என்பனபோல வரும். இதனாற் பெயர்மாத்திரமே புலப்படும். பொருளின் இருக்கை அறிதலே உத்தேசத்தின் பயனாகும். உத்தேசம்-அறியப்படாததை அறிவிக்கமுயலுதல்.

இலக்கணமாவது பிறிதொன்றிலும் இல்லதாய்ப் பெயரளவிற் சொன்னபொருளின்மாத்திரம் இருப்பதாய் அப்பொருளைப் பிரித்து வேறுபடுத்தி அறிதற்குக்காரணமாயுள்ள அடையாளம். அது பதி

யாவான் முற்றறிவுடையவன். பசுவாவது சிற்றறிவுடையது. பாசமாவது அறிவில்லது என்பனபோல வரும். இங்கே முற்றறிவுடைமை, சிற்றறிவுடைமை, அறிவின்மை என்பன இலக்கணம். இவ்விலக்கணங்கள் நோக்கி முற்றறிவுடையது யாதோ அது பதி என்றும், சிற்றறிவுடையது யாதோ அது பசு என்றும், அறிவில்லது யாதோ அது பாசம் என்றும் இவ்வாறே பொருள்களை வேறுபிரித்தறிவதே இலக்கணத்தின்பயனாகும். இலக்கணம்-வேறுபாட்டை நினைப்பிக்குங்குறி.

பரீக்கணமாவது இலக்கணமுடையது என்று அறியப்பட்ட பொருட்கண் அவ்விலக்கணம் உண்டோ இல்லையோ என்று ஆராய்தல். அது பதியிடத்து முற்றறிவுடைமை என்னும் இலக்கணம் உண்டோ? இல்லையோ என்று ஆராய்வதுபோல்வது. ஆராயுங்கால் அப்பொருட்கண் அவ்விலக்கணம் சிலவிடத்தில் இல்லாதொழியுமாயின், அவ்வியாத்தி என்னுங் குற்றமும், அவ்விலக்கணம் மற்றொருபொருளினும் இருக்குமாயின், அதிவியாத்தி என்னுங் குற்றமும், அவ்விலக்கணம் அப்பொருட்கண் முற்றவில்லையாயின், அசம்பவம் என்னுங் குற்றமும் அதனைப் பற்றும். இக்குற்றங்கள் பற்றியது இலக்கணமாவதில்லை. இக்குற்றங்கள் பற்றாது நீங்குதலே பரீக்கணத்தின் பயனாகும். பரீக்கணம் எனினும் பரீக்கை எனினும் ஒக்கும். பரீக்கணம்-ஆராய்தல். பரி-சூழ. ஈக்கணம்-நோக்குதல்.

அவ்வியாத்தியாவது பொருட்குச்சொல்லப்படும் இலக்கணம் ஆராயுங்கால் அப்பொருட்கட் சிலவிடத்தில் இல்லாதொழிதல். அது பசுவாவது மானுடசரீரமுடையது என்பதுபோல வரும். இங்கே பசுவுக்குச் சொல்லப்பட்ட இலக்கணமாகிய மானுடசரீரமுடைமை சில பசுக்களிடம் இல்லாமையால் அவ்விலக்கணம் அவ்வியாத்திக்குற்றம் பற்றும். பசு-உயிர். உயிர் மானுடசரீரம், மிருகசரீரம்முதலிய பல சரீரமுடையதாதல் அறிக. அவ்வியாத்தி-பூரணமில்லாதது. அ-இன்மை. வியாத்தி-பூரணமுடையது.

அதிவியாத்தியாவது அவ்விலக்கணம் ஆராயுங்காற் சொல்லப்பட்டபொருட்கண்மாத்திரம் உள்ளதாகாது மற்றொருபொருட்கண்ணும் இருப்பது. அது பதியாவான் வியாபகமுடையவன் என்பதுபோலவரும். இங்கே பதிக்குச்சொல்லப்பட்ட இலக்கணமாகிய வியாபகமுடைமை அப்பாற்சென்று பசுவின்கண்ணும் இருத்தலால் அதிவியாத்தி என்னுங்குற்றம் பற்றும். அதிவியாத்தி-அப்பாலும் பூரணமுடையது. அதி-அப்பாற்போதல். வியாத்தி-பூரணமுடையது.

அசம்பவமாவது சொல்லப்பட்டபொருட்கண் அவ்விலக்கணம் ஆராயுங்கால் இல்லாதொழிதல். அது பாசமாவது அறிவுடையது என்பதுபோல வரும். இங்கே பாசத்துக்குச் சொல்லப்பட்ட இலக்கணமாகிய அறிவுடைமை பாசம் என்னும் அப்பொருட்கண் முற்றச் சம்பவியாமையால் அசம்பவம் என்னுங் குற்றம் பற்றும். அசம்பவம்-சம்பவமில்லது. அ-இன்மை. சம்பவம்-தோன்றுவது.

இந்த உத்தேசம், இலக்கணம், பரீக்கணம் என்னுங் கிரமம்பெறச் சொல்லப்படாத பொருட்கூட்டம் மெய்யறிவுகளாலே துணியப்பட்ட பொருளாகமாட்டாதென்று ஞானப்பிரகாசமுனிவர் பிரமாணதீபிகையிலே கூறுவர். இவைமூன்றும் அவசியமான நூன்முறை என்பதைப் பரஞ்சோதிமுனிவருந் திருவிளையாடற்புராணத்திற் கூறுவர்.

பிரமாணதீபிகை.

உத்தேஶலக்ஷணபரீக்ஷணமார்க்கதோ ஹி
நோக்தா ந தத்வமதிகந்துமலம் பதார்த்தா: ।
தீக்ஷாவதோபதேஶவிதிரப்யநவாப்யதே
உத்தேஶபூர்வகபரீக்ஷணமேவ நாத: ॥

(இ-ள்) உத்தேசம், இலக்கணம், பரீக்கணம் என்பவைகளைப் பெறுதல் சொல்லப்படாததாயின், இந்தப் பொருட்கூட்டம் மெய்யறிவுகள் என்பனவற்றால், புலனாம்பொருளாதல் இல்லை. தீக்கையாகிய உபதேசவிதியும் அடைவதில்லை. ஆதலால் உத்தேசாதி முறையினாற் சொல்லப்பட்டது. உத்தேசமாவது சொல்லப்பட்டதைப் பெயரினாற் படித்தல் (எ-று).

திருவிளையாடற்புராணம்.

ஆதியுத் தேசத் தானு மிலக்கண வமைதி யானுஞ்
சோதனை வகைமை யானுஞ் சொன்னநூ லறுவா தித்து
நீதியி னவற்றாற் கண்டித் தவ்வழி நிறுத்தித் தம்மில்
வாதிகள் வாதஞ் செய்யுங் கோட்டிமேன் மகிழ்ச்சி கூர்தும்.

சோதனை-பரீக்கை. அநுவாதித்தல்-வழிமொழிதல். அவற்றால்-உத்தேசாதிகளால். வாதிகள்-ஏதுமுதலியனகாட்டிப் பிறர்மதம் மறுப்போர். கோட்டி-சவை. இனி உத்தேசங்கூறுங்கவியிற் செல்வாம்.

நூல்.

பொருள் பண்பு கன்மம் பொதுமை விசேடம் பொருந்துகின்ற
ஒருசம வாய மபாவ மெனப் பதத் துப்பொருள்கள்
உரைதரி னேழவை யெல்லா முறை முறை யோதுவென்
வரை வள ருந்தமி ழைப்பயி லுந்திரு மாமயிலே.

(இ-ள்) திரவியம், குணம், கருமம், பொதுமை, விசேடம், சமவாயம், அபாவம் எனப் பதார்த்தங்கள் ஏழு. அவையேழையும் முறையாகத் தனித்தனி சொல்லுவேன் எ-று. வரைவளருந்தமிழைப் பயிலுந்திருமாமயிலே என்பது மகடூஉமுன்னிலை.

இங்கே உத்தேசமாகச் சொல்லப்பட்டது பொருள்முதலிய ஏழும் என்க. ஏழென்றது இங்கே சொல்லப்பட்டவைதவிர வேறில்லை என்பதை விளக்குதற்கு. உரைதரின் என்பது மீமாஞ்சகர் முதலியோர் கொள்ளும் ஆற்றல்முதலியன பதார்த்தம் என்று சொல்லத்தக்கனவல்ல என்பதை உணர்த்துகின்றது.

இங்ஙனம் ஏழுபதார்த்தங்கூறல் வைசேடிகசம்மதம். வைசேடிகம் கணாதர்செய்த தர்க்கசாத்திரம். விசேடம் என்னும் பதார்த்த முங்கூட்டியுரைத்தலால் வைசேடிகம் எனப்பட்டது. விசேடசம் பந்தம் வைசேடிகம் என்பது தத்திதம்.

(வரும்.)

அ. குமாரசுவாமிப்பிள்ளை,

சுன்னாகம்.

'எத்துணையோபரிபாடல்' என்பதைப்பற்றிய ஒருகுறிப்பு.

:()o():

சென்ற ஐப்பசிமாதத்துச் "செந்தமிழில்" அச்சிட்ட இறையனாரகப்பொருளுரையிற்காணப்படும் "வேத்துணையோர்பரிபாடல்" என்பது பொருள்படாப்பாடமெனவும், 'எத்துணையோபரிபாடல்' என்பது சில காரணங்களாற் பொருத்தமாகவும் உண்மையாகவும் இருத்தல்கூடுமெனவும், யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் தமிழ்ப்புலவர் ஸ்ரீமான் அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் எழுதியிருப்பதையும், பத்திராதிபர், அதனையொட்டி ப்ரஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்யாயஐயரவர்கள் பதிப்பித்துள்ள சிலப்பதிகாரப்புஸ்தகத்திலுள்ள "புரிந்தன செய்யுட் பெரும்பரிபாடலும்" என்னுந்தொடரில் 'பெரும்' என்னுஞ் சொற்பிரயோகத்தையும் ஆதாரமாகக்காட்டிப் பத்திராதிபரின் அபிப்பிராயத்தின்முற்பகுதியிற் காட்டியிருப்பதையும், பிற்பகுதியில், மதுரைத் தமிழ்ச்சங்கத்திலுள்ள களவியலுரைப்பிரதியிற் கண்டபடி பரிபாடை எனவும் ஒருநூ லிருந்திருக்கவொண்ணாதாவென்று கேட்டிருப்பதையும், அறிஞர் படித்துப்பார்த்து அகமகிழ்ந்திருப்பார்கள். இத்தகைய ஐயநிகழ்ச்சிகளும், ஆராய்ச்சிமுடிபுகளும் அளவிறந்த பயன்விளைக்குமென்பது திண்ணம்.

ஈண்டுக்குறித்த இத்தொடர்மொழியைப்பற்றிய ஐயம், ஆங்கிலத்தில் தாம் எழுதிய தமிழ்நூற்சரிதையைப்பற்றியவியாஸத்து முதற்பகுதியில் (Essay in Tamil Literature Number I) 1897-ஆம் ஆண்டில், சென்னைப் ப்ரஸிடென்ஸிகாலேஜில் வடமொழிப்புலமையும் மொழிநூற்புலமையும் ஒருங்கேநடாத்திய ப்ரஹ்மஸ்ரீ எம். சேஷகிரி சாஸ்திரியார் எம். ஏ. அவர்களால், சுட்டப்பட்டுள்ளது. அதனை மேற்குறித்த நூலில்* 2-ஆம்பக்கத்தின் இறுதிப்பகுதியிற்காட்டியுள்ள உடுக்குறியடையாளத் தொடர்வாக்கியங்களால் உணரலாகும். ப்ரஹ்மஸ்ரீ சாஸ்திரியாரவர்கள், ஸ்ரீமான் குமாரசுவாமிப்புலவரவர்களும், பத்திராதிபரவர்களும் காட்டியுள்ள இரண்டு ஆதாரங்களையும்நாட்டி, 'எத்துணையோபரிபாடல்' எனப் பாடம்துணிந்து அதனையே தமது ஆங்கிலமொழி

---

*இந்நூல், சென்னை, திருவல்லிக்கேணி ஸ்ரீநிவாஸவரதாசாரி கம்பெனியில் விலை அணா எட்டுக்குக் கிடைக்கிறது. இதன் தமிழ்மொழிபெயர்ப்பு, சென்னை யூனிவெர்ஸிடியார் ஏற்படுத்தும் பாடப்புஸ்தகங்களில் ஒன்றாக அவ்வப்பொழுது கலாசாலைமாணாக்கர்களுக்குத் திட்டம்செய்யப்படுவதும் உண்டு.

பெயர்ப்பில் வரைந்துள்ளார்கள். பத்திராதிபரபிப்பிராயத்தில், பிற் பகுதியிற் கேட்கப்பட்ட பரிபாடை என்னும் நூல் ஒன்று முன்னமிருந் திருக்கலாமென்பதற்கு, யாப்பருங்கலவிருத்தியின் முதற்சூத்திரவுரை யிறுதியில், சூத்திரம் அறுவகைப்படுமென்றவிடத்து "பரிபாடைச் சூத்திரமென்பனவும் உள; அவை ஈண்டுத் தந்திரவுத்தியுட்பட்டடங்கு மெனக்கொள்க" என்றவாக்கியங்களும் சான்றாகின்றன. இவற்றை இப்போது எடுத்துக்காட்டல் பொருத்தமுடைத்தென எண்ணி இக் குறிப்பினைப் பொறித்தனுப்பலானேன்.

வே. முத்துஸாமிஐயன், எம். ஏ. எல். டி.,
பள்ளிக்கூட உதவிப்பரிசோதகர்,
அறப்புக்கோட்டைவட்டம்.

திரிகடுகம்.

சங்கமருவிய நூல்களுள் ஒன்றாகக்கருதப்படும், நல்லாதனார் அரு ளிய திரிகடுகம் என்னும் நூலானது, இரண்டுமூன்றுபதிப்புக்கள் பதிக் கப்பட்டுச் செலவாகிவிட்டதாக அறியப்படுகின்றது. அவ்வாறாயினும், சிலபாக்கள் விளங்காமையாற் பிரசங்காபரணமென்னும் புறத்திரட்டுப் பிரதியொன்றோடு ஒப்பிடுகையிற் சிலபாக்களிற் பாடபேதங்கள் புலப் பட்டன. அவைகளைச் செந்தமிழ்வாயிலாக வெளியிடத் துணிந்தேன். அவற்றின் வன்மைமென்மைநோக்கிக் கொள்ளக்கூடியபாடத்தை அறி ஞர் தெரிவிக்கவேண்டுகிறேன்.

> மண்ணின்மேல்வான்புகழ்நட்டானுமாசில்சீர்ப்
> பெண்ணினுட்கற்புடையாட்பெற்றானும்—உண்ணீர்க்
> கூவல்குறைவின்றித்தொட்டானுமிம்மூவர்
> சாவாவுடம்பெய்தினார். அச்சுப்பிரதி 16.

என்பது, புறத்திரட்டு அறத்துப்பால் 26-வது புகழ் என்னுமதிகாரத்தில் நட்டானுமென்பது, கண்டானும் என்றும், மாசில்சீர் என்பது மாசிலா என்றும் பாடபேதத்துடன் காணப்படுகிறது.

> மூப்பின்கணன்மைக்கமைந்தாங்கற்புடையாட்
> பூப்பின்கட்சாராத்தலைமகனும்—வாய்ப்பகையுட்
> சொல்வென்றிவேண்டுமிலிங்கியுமிம்மூவர்
> கல்விப்புணைகைவிட்டார். 17.

இதிற் பூப்பின்கண் என்பது அசம்பாவிதம். பூப்பின்பின் என்றபாட பேதம் காணப்படுகிறது.

> பற்றென்னும்பாசத்தளையும்பலவழியும்
> பற்றறாதோடுமவாத்தேரும்—தெற்றெனப்
> பொய்த்துரையென்னும்பகையிருளுமிம்மூன்றும்
> வித்தறவீடும்பிறப்பு 22.

மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில் 'பகையிருள்' என்பது புகை யிருள் என்று காணப்படுகிறது.

> பெண்விழைந்துபின்செலினுந்தன்செலவிற்குன்றாமை
> கண்விழைந்துகையுறினுங்காதல்பொருட்கின்மை
> மண்விழைந்துவாழ்நாண்மதியாமையிம்மூன்றும்
> நுண்விழைந்தநூலோர்வழக்கு. 29.

என்பதில் ஈற்றடி நூலவர்நோக்கு என்று காணப்படுகிறது.

> புலைமயக்கம்வேண்டிப்பொருட்பெண்டிர்த்தோய்தல்
> கலமயக்கங்கள்ளுண்டுவாழ்தல்—சொலைமுனிந்து
> பொய்ம்மயக்கஞ்சூதின்கட்டங்கலிம்மூன்றும்
> நன்மையிலாளர்தொழில். 39.

என்பது, பொருட்பால் 48-வது சூது என்ற அதிகாரத்தில்,

> புலைமயக்கம்வேண்டிற்பொருட்பெண்டிர்த்தோய்தல்
> கலைமயக்கங்கள்ளுண்டுவாழ்தல்—கொலைமுனிந்து

என்று காணப்படுகிறது.

> இளைஞர்க்குதவாதான்செல்வமும்பைங்கூழ்
> விளைவின்கட்போற்றாதுழவும்—இளையனாய்க்
> கள்ளுண்டுவாழ்வான்குடிமையுமிம்மூன்றும்
> உள்ளனபோலக்கெடும். 59.

என்பதன் ஈற்றடி, கள்ளுண்ணாமை என்னுமதிகாரத்தில் உள்ளன போன்றில்லாக்கெடும் என்று காணப்படுகிறது.

> நோவஞ்சாதாரோடெட்பும்விருந்தஞ்சும்
> ஈர்வளையையில்லத்திருத்தலும்—சீர்பயவாத்
> தன்மையிலாளரயலிருப்புமிம்மூன்றும்
> நன்மைபயத்தலில. 68.

என்பதில் முதலடிமுதற்சீர் கோலஞ்சாதார் எனக் காணப்படுகிறது.

இரந்துகொண்டொண்பொருள்செய்வலென்பானும்
பார்தொழுகும்பெண்பாலைப்பாசமென்பானும்
விரிகடலூடுசெல்வானுமிம்மூவர்
அரியதுணிந்துவாழ்வார். 73.

என்பது,

இரந்துகொண்டொண்பொருள்செய்வலென்பானும்
பரந்தொழுகும்பெண்பாலிற்பாசம்வைப்பானும்
விரிகடலூடுபோவானுமிம்மூவர்
அரியதுணிந்தொழுகுவார்.

எனக் காணப்படுகிறது.

அற்புப்பெருந்தளையாப்புநெகிழ்த்தொழுதல்
கற்புப்பெரும்புணை,காதலிற்கைவிடுதல்
கட்பினயநீர்மைநீங்கலிவைமூன்றும்
குற்றந்தருஉம்பகை. 86.

என்பது,

அற்புப்பெருந்தளையாப்புநெகிழ்த்தொழுகல்
கற்புப்பெரும்புணைகாதலியைக்கைவிடுதல்

என்று காணப்படுகிறது.

இன்னும் இவைபோற் காணப்படும் திருத்தங்கள் பல.

அஃகீசெய்யலெனவறிந்தாராய்ந்த
வெஃகலவேகுடலேதீக்காட்சி—வெஃகிய
கள்ளத்தவல்லகருதினவைமூன்று
முள்ளத்தவாக்வுணர்.

நில்லயளவுநின்றநெடியவர்தாகோரார்
கொலைகளவுகாமத்தீவாழ்க்கை—யலையளவி
மையெனநீண்டமலர்க்கண்ணாயிம்மூன்று
மெய்யனவாகமிகும்.

என்னுமிரண்டுவெண்பாக்களும் அறத்துப்பால் 22-வது தீவினையச்சம் என்னு மதிகாரத்தில் 2, 3-வது செய்யுட்களாகக் காணப்படுகின்றன. அச்சுப்பிரதியில் இவை காணப்படவில்லை.

இலக்கணவிளக்கபரம்பரை,
திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்.

ரஸாயன நூல்.

CHEMISTRY.

செந்தமிழ் (தொகுதி-௧௪ பகுதி-௧௦) ௪௫-ஆம்பக்கத் தொடர்ச்சி.

அத்யாயம்—18.

காரங்கள்.

Alkalies.

காரங்கள், (ஸம்ஸ்—க்ஷாரம்) ரஸாயனகல்பங்களில் ஒருவகை. இவை பெரும்பான்மை ஹைத்ராக்ஸிஜங்களாக இருக்கும். அதாவது ஏதாவது ஒரு லோஹப்பொருளுடன் ஹைத்ரமும் ஆக்ஸிஜனும் கலந்துண்டாகும் கல்பங்களேயாம்.

உதாரணம்:—

ஸோடா-எரிகாரம் { ஸோடியம், ஹைத்ரம், ஆக்ஸிஜன் } Na OH.

பொடாஸியம் எரிகாரம் { பொடாஸியம், ஹைத்ரம், ஆக்ஸிஜன் } K O H.

குறிப்பு. Na O H=Caustic soda அல்லது Sodium hydrate.

K O H=Caustic potash அல்லது Potassium hydrate.

பரீக்ஷை. காரங்கள் சிவப்புலிட்மஸைப் பச்சையாக்கும்.

எரிகாரம் (Caustic alkalies). காரங்களில் எரிகாரம் என்ற ஒரு விசேஷவகுப்புண்டு. மற்றக்காரங்கள் இளங்காரங்கள் (Mild alkalies) எனப்படும். மேற்கூறிய ஸோடாஎரிகாரமும் பொடாஸியம்எரிகாரமும் எரிகாரவகுப்பைச்சேர்ந்தவை. ஸோடாஎரிகாரம் ஸோப்முதலான சலவைக்கட்டிகள்செய்யவும், துணிகளில் எண்ணெய் முதலான கறைகளை எடுக்கவும் உபயோகப்படுகின்றது. உடலிற்பட்டால், எரிச்சலுண்டாவதுடன் பட்ட இடம் புண்ணாவதுமுண்டு.

ஸோடா எரிகாரம்.

[Na OH]

ஸோடாஎரிகாரம் (Caustic soda) என்பது ஸோடியமும் ஹைத்ரமும் ஆக்ஷிஜனும் கலந்த ஒருகாரம்.

செய்முறை:—ஸோடியம் தண்ணீரிற்கலப்பதாலுண்டாகும்.

ஸோடியம்+ஜலம்=ஸோடாஎரிகாரம்+ஹைத்ரம்

$$Na+H_2O=Na\ O\ H+H.$$

ஆனால், குறைந்தசெலவிற்கிடைக்கக்கூடிய வேறுவகைகளுமுண்டு. ஸோடாச்சாம்பல் அல்லது ஸோடியம், கரியாக்ஷிஜம், கறியுப்பு—இவைகளிலிருந்து செய்யப்படுகின்றது.

பொடாஸியம் எரிகாரம்.

Caustic potash.

[K O H.]

பொடாஷியம்எரிகாரமும் ஸோடாஎரிகாரம்போன்றதுதான்.

சுண்ணும்புநீறு.

மக்னீஷியஹைத்ராக்ஸிஜம்.

சுண்ணும்புநீறும், மக்னீஷிய ஹைத்ராக்ஷிஜ(Magnesium hydrate)மும், காரவர்க்கத்திற் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால், ஸோடியஎரிகாரம், பொடாஷியஎரிகாரங்களைப்போல லகுவாய்த் தண்ணீரிற் கரைவதில்லை. கொஞ்ச உஷ்ணத்திலேயே இவைகள் பிரிந்துவிடும்.

சுண்ணும்புநீறு=Calcuim hydrate=[$Ca(OH)_2$].

குறிப்பு. சுண்ணும்புநீறு=நீறினசுண்ணும்பு=Slaked lime.

மற்ற லோஹஹைத்ராக்ஸிஜங்கள்.

முற்கூறியவைதவிர இன்னும் பல லோஹஹைத்ராக்ஷிஜங்(Metallic hydrates)கள் இருக்கின்றன. ஆனால் அவைகள் தண்ணீரிற் கரையவுமாட்டா. லிட்மலின்நிறத்தை மாற்றவுமாட்டா. ஸோடா

எரிகாரம், பொடாஷ் எரிகாரம், சுண்ணும்பு—இவைகளைப்போலச் சரீரத்தைப் புண்படுத்தவுமாட்டா. ஆனால், காரங்களைப்போல அமிலங்களுடன்கலந்து உப்புக்கள் உண்டாக்குகின்றன.

செய்முறை:—மைல்துத்த(தாம்ரகந்தாக்ஷிஜம்)த்துடன் 2 பங்கு பொடாஷிய ஹைத்ராக்ஷிஜத்தைக்கலந்தால் தாம்ர ஹைத்ராக்ஷிஜமும் பொடாஷிய கந்தாக்ஷிஜமும் உண்டாகும். இம்முறையில், தாம்ரமும் பொடாஷியமும் மாறியிருப்பது கவனிக்கத்தக்கது.

தாம்ர கந்தாக்ஷிஜம்
+2பொடாஷிய ஹைத்ராக்ஷிஜம் } = { பொடாஷியகந்தாக்ஷிஜம்
தாம்ரஹைத்ராக்ஷிஜம்

$$Cu\ SO_4+2\ KOH=K_2\ SO_4+Cu(OH)_2.$$

இதேமாதிரி அநேக லோஹஹைத்ராக்ஷிஜங்கள், அந்தந்த லோஹ உப்புக்களிலிருந்து செய்துகொள்ளலாம். இதற்கு **இரட்டைப்பிரிவு** (Double decomposition) என்று பெயர்.

நவச்சாரவாயு.

Ammonia.

[NH_3.]

ஆவிக்காரம் (Volatile Alkali). முன்கூறிய காரவகைகளைத் தவிர ஆவிக்காரம் என்று ஒன்றுண்டு. இதுதான் நவச்சாரவாயு எனப்படும். நைத்ரம் ஒருபங்கும் ஹைத்ரம் 3 பங்கும் கலந்துண்டானது. மற்றக்காரங்களெல்லாவற்றிலும், ஆக்ஷிஜனும்கலந்திருக்க இக்காரத்தில்மாத்திரம் ஆக்ஷிஜன் இல்லாதிருப்பது கவனிக்கத்தக்கது. இக்காரம் திறந்தமாத்திரத்தில் ஆவியாகப்போகக்கூடியதாதலால் **ஆவிக்கார**மென்று சொல்லப்படுகின்றது.

செய்முறை:—மக்னீஷியநைத்ரமும் ஜலமும் கலந்தால் நவச்சாரவாயுவும் மக்னீஷிய ஆக்ஷிஜமும் உண்டாகும்.

$$Mg_3\ N_2+3\ H_2\ O=3\ Mg\ O+2\ NH_3.$$

விவரம். முற்கூறியவைகளினின்றும், நவச்சாரவாயு என்ற காரத்தைத்தவிர, மற்றக்காரங்களெல்லாம் ஏதாவது ஒரு லோகத்தின் ஹைத்ராக்ஷிஜம் (லோஹம்+ஹைத்ரம்+ஆக்ஷிஜம்) என்றும், நவச்சாரவாயுவில்மாத்திரம் ஆக்ஷிஜன் இல்லையென்றும் அறிந்துகொண்டோம். இதுபோலவே, அமிலங்களும், பலபொருள்களின் ஹைத்ராக்ஷிஜங்கள் என்றும், ஆனால், அமிலங்களிற்சேரும் முக்கியப்பொருள் அலோஹம் (Nonmetals) என்றும் நாம் இனி அறிவோம். ஆனால், க்ளோராமில[Hcl]த்திலும் ஹைத்ரோகந்தாமில[H_2S]த்திலும், ஆக்ஷிஜன் இல்லை. ஆனால் எல்லாவற்றிலும் ஹைத்ரம் உண்டு.

அத்யாயம்—19.

அமிலங்கள்.

Acids.

இதுவரை காரங்களைப்பற்றி விவரிக்கப்பட்டது. லோஹங்களின் ஹைத்ராக்ஷிஜங்களாகக் காரங்களிருப்பதுபோல, அமிலங்கள் பொதுவாய் அலோஹ(Nonmetals)ங்களின் ஹைத்ராக்ஷிஜங்களாயிருக்கின்றன.

[குறிப்பு. ஸம்ஸ்-அம்ல=புளிப்பான]

அமிலங்கள் புளிப்பாய் இருக்கும். பச்சைலிட்மலைச் சிவப்பாக்கும். பளிங்குகளையும், இரும்பு, நாகம் முதலான லோஹங்களையும் கரைக்கக்கூடியனவாகவும் இருக்கும். இவ்வித ரஸாயனத்தன்மைகளில் அமிலங்கள் ஒரேமாதிரி இருந்தபோதிலும் பௌதிகத்தன்மைகளில் அநேகவித்யாஸங்களுண்டு.

க்ளோராமிலம், ஹைத்ரோகந்தாமிலம் இவ்விரண்டைத்தவிர மற்ற அமிலங்களிலெல்லாம் ஹைத்ரமும் ஆக்ஷிஜனும் கலந்திருக்கின்றன. இவ்விரண்டில்மாத்திரம் ஆக்ஷிஜனில்லை.

க்ளோராமிலம்=க்ளோரம்+ஹைத்ரம்=HCl.

ஹைத்ரோகந்தாமிலம்=கந்தகம்+2 ஹைத்ரம்=H_2S.

கந்தாமிலம்.

Sulphuric acid.

[H_2SO_4]

கந்தாமிலம் என்பது கந்தகம், 2 பங்கு ஹைத்ரம், 4 பங்கு ஆக்ஷிஜன் இவைகலந்த ஓர் அமிலம். இது, சீக்கிரம் தண்ணீரிற்கரைந்து உஷ்ணமுண்டாக்கும். குளிரச்செய்தால் இக்கொடிய அமிலமானது படிகங்(Crystals)களாக மாறும். அவைகள் 10-வது சதாம்சத்தில் உருகும். கட்டியையாவது திரவத்தையாவது காய்ச்சும்பொழுது வெள்ளைப்புகை கிளம்பும். 338-வது சதாம்சத்திற் கொதித்து எல்லாம் ஆவியாய்விடும். மரத்தையும், கடிதத்தையும் கரியாக்கும். உடலிற்பட்ட இடத்தைப் புண்ணாக்கிவிடும்.

க்ளோராமிலம்.

Hydrochloric acid.

[Hcl]

இது க்ளோரமும் ஹைத்ரமும் சமபாகமாய்க்கலந்த ஓர் அமிலம். திரவரூபமானது. தண்ணீரிற் கரையக்கூடியது. காயவைத்தால், புகைச்சலுண்டாக்கக்கூடிய ஒருவிதப்புகை கிளம்பும். 110-வது சதாம்சத்திற் கொதிக்கும். இதை க்ளோரோஹைத்ராமிலம் என்றும் சொல்லலாம்.

நைத்ராமிலம்.

Nitric Acid.

[H NO_3]

நைத்ராமிலம். இது, 1பங்கு ஹைத்ரம், 1பங்கு நைத்ரம், 3 பங்கு ஆக்ஷிஜம் கலந்த ஓர் அமிலம். இதைச் சங்கத்ராவகம் என்றும், அக்னித்ராவகம் என்றும் சொல்லுவதுண்டு. தண்ணீரிற் கரையும். 120வது சதாம்சத்திற்கொதிக்கும். கபில(brown)வர்ணமானபுகையுண்டாகும். கந்தாமிலத்தைப்போல இதுவும் கடிதத்தையும் கட்டையையும் கரியாக்கும். உடலிற்பட்டால் மஞ்சள்நிறமான புண்ணாகும். இவ்வமில நீர் தாம்ரம்முதலான அநேகலோஹங்களைக் கரைக்கும். ஆதலால் இதற்கு வீரநீர் (Aqua Fortis) என்று பெயர்.

அத்யாயம்—20.

உப்புக்கள்.

Salts.

இதுவரை காரங்களைப்பற்றியும் அமிலங்களைப்பற்றியும்கூறினோம். காரங்கள் லோஹஹைத்ராக்ஸிஜங்கள் (Hydrates of metals) என்றும், அமிலங்கள் (Hydrates of nonmetals) அலோஹஹைத்ராக்ஸிஜங்கள் என்றும், காரம், சிவப்புலிட்மஸைப் பச்சையாக்கும் என்றும், அமிலம் பச்சைலிட்மஸைச் சிவப்பாக்குமென்றும், இவ்விருபொருள்களிலும் ஹைத்ரம் கட்டாய மிருக்குமென்றும், இவை எரிபொருள்கள் என்றும் அறிந்துகொண்டோம்.

உப்பு. இவ்விருபொருள்களைத்தவிர உப்பு என்ற மூன்றாவது பொருளும் உண்டு.

ஏதாவது ஒரு அமிலத்தையும் காரத்தையும் கலந்தால், புதிதாய் ஒரு பொருள் உண்டாகின்றது. இதுதான் உப்பு. அமிலம் காரங்களுக்குள்ள தன்மைகள் இதற்குக் கிடையாது. நாகம்முதலான உலோஹத்தைக் கரைக்கமாட்டாது. உடலைப் புண்படுத்தாது. அமிலம் காரங்களின்குணங்களைமாற்றிப் பொதுவான ஒரு பொருள் உண்டாக்கும். இச்செய்கைக்கு நிஷ்கரணம் (Neutralization) என்றும், அவ்வாறு உண்டாகும் உப்புப்பொருளுக்கு நிஷ்காரம்(Neutral)என்றும் பெயர்.

உதாரணம்:—

ஸோடியம் ஹைத்ராக்ஸிஜம்
+க்ளோரோஹைத்ரம்
(க்ளோராமிலம்)
= ஸோடியக்ளோரம் (உப்பு)
+ஜலம்.

இதேமாதிரி பொடாஷியக்ளோரம், சுண்ணக்ளோரம் (Calcium chloride) என்ற உப்புக்களும் செய்யலாம்.

நிஷ்காரமுறை:—அமிலம்+காரம்=உப்பு+ஜலம்.

தாரகம் (Base). மேற்கூறிய உதாரணத்தில், அமிலத்துடன் சேரும்பொருளுக்குத் **தாரகம்** என்று பெயர். தாரகம் காரமாகவுமிருக்கலாம். வேறுபொருளாகவு மிருக்கலாம். அமிலத்துடன்கலந்து உப்பாவதற்கு முக்ய ஆதாரமான லோஹத்தையுடையபொருளுக்கே தாரகம் என்று பெயர்.

தாரகம், காரம் அல்லது லோஹஹைத்ராக்ஸிஜமாகத்தான் இருக்க வேண்டுமென்பதல்ல. லோஹாக்ஸிஜமாகவாவது, லோஹமாகவாவது இருந்தாலும் போதும். ஆதலால், தாரகம் (Base)என்பது, அமிலத்தைப்பிரித்து, அதன் ஹைத்ரஜனைவெளியேற்றி, அதன்ஸ்தானத்தில், தான் நின்று, வேறு புதியபொருள் அல்லது அந்தந்தலோஹ உப்புண்டாவதற்குச்சாதகமானது என்பதேயாம்.

தாரகாக்ஸிஜம்+அமிலம்=உப்பு+ஜலம்.

ஈயஆக்ஸிஜம்+க்ளோராமிலம்=ஈயக்ளோரம்+ஜலம்.

குறிப்பு:—தாரகாக்ஸிஜம்=Basic oxide.

இருவகை ஆக்ஸிஜங்கள். தாரகாக்ஸிஜங்கள், அமிலாக்ஸிஜங்கள் என ஆக்ஸிஜங்கள் இருவகைப்படும். கரைத்தால் நிஷ்காரமா(Neutral)கும் பல ஆக்ஸிஜங்கள் தாரகாக்ஸிஜங்கள். அவைகள் பெரும்பான்மை லோஹாக்ஸிஜங்களே. கரி, கந்தகம், பாஸம் முதலான அலோஹ ஆக்ஸிஜங்கள், தண்ணீரிற்கரைந்தவுடன் அமிலங்களாகக் கூடியவையாதலால் அமிலாக்ஸிஜங்கள் (Acidic oxides) எனப்படும்.

உதாரணம்:—

கரித்வயாக்ஸிஜம் தண்ணீரிற்கரைந்து கரியமிலம் உண்டாகின்றது. இதனுடன் சுண்ணஹைத்ராக்ஸிஜம்(சுண்ணாம்புநீறு)கலந்தால், சுண்ணகரிஜம் (Calcium carbonate) என்ற உப்பு உண்டாகும்.

எல்லா அமிலங்களிலும், அவ்வவ்வமிலத்திலிருந்துண்டாகும் உப்புக்களிலும் ஆக்ஸிஜன் அடங்கியிருக்கும். ஆனால், க்ளோரோஹைத்ராமிலத்திலும், அதன் உப்புக்களாகிய க்ளோரக்கலப்புக்களிலும் ஆக்ஸிஜன் கிடையாது.

ஏதாவது ஒரு அமிலத்தில் ஏதாவது ஒரு லோஹம் கரைந்தால், அந்தலோஹ உப்பும், ஹைத்ரமும் உண்டாகின்றன. ஆனால் நைத்ராமிலம்மாத்திரம் இவ்விதிக் குட்படவில்லை.

விசேஷக்குறிப்புக்கள்.

(1) எல்லா அமிலங்களிலும் ஹைத்ரம் இருக்கின்றது.

(2) லோஹத்தைக்கரைத்து, ஹைத்ரத்துக்குப்பதிலாக லோஹம்கலந்தால் அந்தந்த லோஹஉப்பு உண்டாகும்.

(3) தாரகம், அல்லது தாரகாக்ஸிஜம் அமிலத்துடன்கலக்கும் பொழுது, தாரகத்திலுள்ளலோஹமானது ஹைத்ரத்தைப்பிரிக்கின்றது. பிரிந்த ஹைத்ரம் ஆக்ஸிஜனுடன் கலந்து ஜலமாவதுமுண்டு.

உப்புக்களின்பெயர்கள். மேற்கூறிய விவரத்தால், பெரும்பான்மை உப்புக்களில் ஆக்ஸிஜன் இருக்கின்றதென்றும், க்ளோரஉப்புக்களில் ஆக்ஸிஜன் இல்லையென்றும் அறிகிறோம். **ஜம்** என்னும் விகுதி ஆக்ஸிஜன் அடங்கிய உப்பைக் குறிக்கும். ஆக்ஸிஜனில்லாத க்ளோரஉப்பை, சாதாரணமாய் க்ளோரம் அல்லது க்ளோரக்கலப்பு என்று குறிக்கப்படும். மேலும் ஜம் விகுதியுள்ள உப்புக்களில், ஏதாவது ஒரு லோஹமும், கரிகந்தகம்முதலான ஒரு அலோஹமும், ஆக்ஸிஜனும் அடங்கியிருக்கும்.

விவரம்.

அமிலம்.	உப்பு.	உதாரணம்.
க்ளோராமிலம்	—க்ளோரம், அல்லது க்ளோரக்கலப்பு.	ஸோடியக்ளோரம் (கறியுப்பு)
கந்தாமிலம்	—கந்தஜம்	தாம்ரகந்தஜம்
நைத்ராமிலம்	—நைத்ரஜம்	
அஸிதாமிலம்	—அஸிதஜம்	
கரியமிலம்	—கரிஜம்	பொடாஸியகரிஜம்
அ[illegible]ாமிலம் (Oxalic acid)	—அ[illegible]ஜம் (Oxalate)	

உப்புக்கள்செய்முறைகள்.

(1) லோஹத்தை அமிலத்திற்கரைப்பதால், அந்தந்தலோஹ உப்பு உண்டாகும்.

தாம்ரம்+கந்தாமிலம்=தாம்ரகந்தஜம்+ஹைத்ரம்

$$Cu+H_2SO_4=CuSO_4+H_2$$

(2) அமிலத்தில் ஏதாவது ஒரு லோஹஆக்ஸிஜத்தைக்கலப்பதால் அந்தந்த லோஹஉப்பு உண்டாகும்.

மக்னீஷியஆக்ஸிஜம்
+கந்தாமிலம் } = { மக்னீஷியகந்தஜம்
ஜலம்

$$MgO+H_2SO_4=MgSO_4+H_2O.$$

(3) அமிலத்தில் லோஹஹைத்ராக்ஸிஜத்தைக்கலப்பதால் அந்தந்த லோஹஉப்பு உண்டாகும்.

க்ளோராமிலம்
பொடாஸியம் ஹைத்ராக்ஸிஜம் } = { க்ளோரோபொடாஸியம்
+ஜலம்

$$HCl+KOH=KKCl+H_2O.$$

(4) கரிஜம், கந்தக்கலப்பு முதலான லோஹ உப்புக்களுடன் அமிலம் கலந்து உப்பு உண்டாவது.

மக்னீஷியகரிஜம்
+கந்தாமிலம் } = { மக்னீஷியகந்தஜம்
ஜலம்
கரிவாயு

$$MgCO_3+H_2SO_4=MgSO_4+H_2O+CO_2.$$

மக்னீஷியகந்தம்
கந்தாமிலம் } = { மக்னீஷியகந்தஜம்
+ஹைத்ரோகந்தம்

$$MgS+H_2SO_4=MgSO_4+H_2S.$$

(5) அமிலாக்ஸிஜமும் தாரகாக்ஸிஜமும் கலந்து உப்புண்டாவது.

மக்னீஷியஆக்ஸிஜம்
கந்தத்ரயாக்ஸிஜம் } =மக்னீஷியகந்தஜம்

$$MgO+SO_3=MgSO_4.$$

(6) லோஹமும் அலோஹமும் நேரேகலந்து உண்டாகும் உப்பு.

மக்னீஷியம்+2க்ளோரம்=மக்னீஷியக்ளோரம்

$$Mg+2cl=MgCl_2.$$

மேற்கண்டவிதிகளுக் குட்பட்டுண்டான சில உப்புக்கள்:—

	க்ளோரக் கலப்பு Chloride.	கரிஜம் Carbonate.	நைத்ரஜம் Nitrate.	கந்தகலப்பு Sulphide.	கந்தஜம். Sulphates.
பொடாஸியம்	Kcl	K_2CO_3	KNO_3		K_2SO_4
ஸோடியம்	Nacl	Na_2CO_3			Na_2SO_4
வெள்ளி	Agcl		$AgNO_3$	Ag_2S	Ag_2SO_4
நவச்சாரம்	$(NH_4)cl$		$(NH_4)NO_3$		$(NH_4)_2SO_4$
நாகம்	$Zncl_2$		$Zn(NO_3)_2$		$ZnSO_4$
மக்னீஷியம்	$Mgcl_2$	$MgCO_3$	$Mg(NO_3)_2$		$MgSO_4$
சுண்ணம்	$Cacl_2$	$CaCO_3$			$CaSO_4$
தாம்ரம்	$Cucl_2$		$Cu(NO_3)_2$	CuS	$CuSO_4$

இவ்விவரத்தால், அந்தந்தஉப்பு அந்தந்த அமிலத்திலுள்ள ஹைத்ரத்துக்குப்பிரதியாக லோஹம்சேருவதால் உண்டாகின்றதென்று அறிகிறோம். சில உப்புக்கள் லிட்மஸின்நிறத்தை மாற்றமாட்டா. சில காரத்தன்மை உடையவை. சில அமிலத்தன்மையுடையவை. பொதுவாய், பொடாஸியம், ஸோடியம், சுண்ணம், மக்னீஷியம் என்னும் லோஹங்கள், கந்தாமிலம், நைத்ராமிலம், க்ளோராமிலங்களுடன் கலந்துண்டாகும் உப்புக்கள் நிஷ்கார உப்புக்கள். ஸோடிய பொடாஸிய கரிஜங்கள் காரத்தன்மையுள்ளவை. நாகம், தாம்ரம், ஈயம் முதலான கனத்தலோஹஉப்புக்கள் அமிலத்தன்மையுள்ளவை.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர். B.A. B.L

உ

பசுவின்பெருமை.

“[illegible]
[illegible]
[illegible]
[illegible]” ॥

சிவபெருமான் தானுகவே எதன்மடியிலுண்டாகிய பாலால் ஸ்நானஞ்செய்யவிரும்புகின்றாரோ; எதன்சரீரத்தினின்றுமுண்டாகியநீரானது நிர்மலமாயும் மூவுலகத்தையும் பரிசுத்திசெய்கிறதாயுமிருக்கின்றதோ, பொறுமையைப்பூஷணமாகவுடையமுனிவர்கள் முற்காலத்திய வேதத்தை எதன் உருவமாக உபாஸிக்கின்றார்களோ, தேவாம்சம் பொருந்திய அப்பசு, புலவர்களின்சொல்லையும் மனோகரமாக்கட்டும்.

இவ்வளவு பெருமைபொருந்திய பசுவைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். சாதாரணமாய்க்கவனித்தாலும் பசு மிகவும் உபயோகமுள்ள பிராணியென்பது யாவருமறிந்தவிஷயம். ஆராய்ந்துபார்த்தால், பசுவைப்போற் சாதுவானதும், பிரயோஜனமுள்ளதும், பரிசுத்தமானதும் வேறொன்றுமில்லை; ஏனெனில், நமதுசாஸ்திரங்களிற் பசு ஸகலத்தையும் கொடுக்குமென்றும், அது நிற்குமிடமே பரிசுத்தமானதென்றும் கூறப்பட்டிருக்கிறது. அன்றியும், பசுவை அவமானஞ்செய்தால் அது நமது மங்களத்தைக் கெடுத்துவிடும். இதுபற்றி ஈண்டொரு சிறுசரிதம் வரையப்படுகின்றது.

முன்னொருகாலத்தில் வைவஸ்வதவம்சத்தில், ஸமுத்திரத்திற் சந்திரன்போலத் திலீபனென்னு மரசன் உண்டானான். அவன் விசாலமானமார்பையும் விருஷபத்தின்திமில்போன்றதோளையு முடையவன்; மநுநீதிவழுவாது அரசாண்டுவந்தவன்; பிரஜைகளின்ஹிதநிமித்தமே சூரியன் நீரைக்கிரஹிப்பதுபோற் கப்பணம்வாங்கிவந்தவன்; சாஸ்திரங்களிற் பின்வாங்காதபுத்தியும் போர்க்களத்திற் பின்வாங்காததிண்மையுமுடையவன்; மந்திராலோசனையை மறைவாய்ச்செய்யு மியல்புடையன்; அறிவிருந்தும் மௌனமாயிருக்குகை, கொடுத்தாலும் புகழ்ந்துகொள்ளாமை முதலியகுணங்கள் ஒருங்குசேரப்பெற்றவன், குற்றஞ்செய்தவர்களைத் தண்டிப்பவன்; குணமுள்ளவர்களைக் கொண்டாடுபவன்;

அவனதுராஜ்யத்தில் திருட்டு, திருட்டுப்போய்விட்டது; விரோதியாயிருப்பினும் சிஷ்டனாயிருப்பவன் நோயாளிக்குமருந்துபோல அவனுக்கு இஷ்டனாயிருந்தான். பிரியனாயிருந்தாலும் துஷ்டனாயிருப்பவன் பாம்பினாற்கடிக்கப்பட்டவிரல்போல், தள்ளத்தக்கவனானான். அவனுக்கு ஸுதக்ஷிணையென்றுபெயருள்ள ஒரு மனைவி யிருந்தாள். அவ்விருவரும் நெடுநாள் இல்லறம்நடத்திவந்தும் புத்திரப்பேறுகிடைக்காமையால் அதற்காகக் குலகுருவாகிய வஸிஷ்டமுனிவர்ஆச்ரமத்திற்குத் திலீபன் மனைவியுடன்சென்றான். அங்கு முனிவர்கள் மன்னவனுக்குத் தக்கமரியாதை செய்தனர். பின்பு திலீபன் மனைவியுடன் வஸிஷ்டர்ஆச்ரமத்திற்குச்சென்று, அருந்ததிதேவியையும் வஸிஷ்டரையும் ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தான். பின்னர் வஸிஷ்டர் மனைவியுடன் ஆசீர்வதித்து இராஜ்யத்தில், குசலத்தைவினவினார். திலீபன் "இராஜ்யம்முழுவதும் தங்கள்தவத்தால் க்ஷேமமாயிருக்கிறது; ஆனால், தமதுநாட்டுப்பெண்ணான ஸுதக்ஷிணையிடம் எனக்கு மக்கள் உண்டாகாமையால், பூமி என்னைத் திருப்திசெய்யவில்லை; எனதுபிதிர்க்கள் எனக்குப்பின் கொடுப்பவர் எவருமில்லையென்று நான்கொடுப்பதை மிகுத்துவைப்பதில் முயற்சியுள்ளவர்களாய் நன்றாய்ச்சாப்பிடவில்லை; புத்திரப்பேற்றைப்பெறாத ஒருவன் உயர்சிறப்பையடைவது முடியாத விஷயம்; ஆனதால், பிதிர்க்களின்கடனாகிய ஸந்ததியையுண்டுபண்ணுதலைநிறைவேற்றவழிசொல்லவேண்டும்" என வேண்டிக்கொண்டான்.

இவ்வாறுதெரிவித்தபின் முனிவர் சற்றுநேரம் தியானம்செய்து ராஜாவைப்பார்த்து 'நீ முன்னொருசமயம் இந்திரனை ஸேவித்துவிட்டு வரும்போது வழியில் கற்பகமரத்தடியிலிருந்த காமதேனுவைப் பிரதக்ஷிண நமஸ்காரங்களால் மரியாதைசெய்யாமல்வந்தமையால் அப்பசு என்னை அவமானஞ்செய்தமையால் நீ எனதுஸந்ததியைப் பூஜிக்காமல் மக்கட்பேற்றைப்பெறமாட்டாய் எனச் சபித்தது. அது தேவகங்கையின்சத்தத்தால் உன்செவியிற்படவில்லை. அதனால் உனதுமனோரதம் தடைபட்டிருக்கிறது. இப்பொழுது அது வருணன்வேள்விநிமித்தம் பாதாளலோகத்திற்குச் சென்றிருக்கிறது. அதன்வழியோ பாம்புகளால் மூடப்பட்டிருக்கிறது. ஆனதால் அதற்குப்பிரதியாக அதன் பெண்ணான நந்தினியை மனைவியுடன் பரிசுத்தனாகஆராதிக்கவேண்டும்' என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே நந்தினி வந்துவிட்டது.

அதனைப்பார்த்து முனிவர் "உனதுமனோரதம் சீக்கிரம் கைகூடிவிடும், இப்பசுவை, கல்வியை அப்பியசித்தாற்போல எப்பொழுதும் அநுஸரித்துத் திருப்திசெய்விக்கவேண்டும்; அதுபோனால் போகவேண்டும்; நின்றால் நிற்கவேண்டும்; படுத்தாற் படுக்கவேண்டும்; ஜலங்குடித்தால் ஜலங்குடிக்கவேண்டும்; உனதுமனைவியும் பக்தியுடன் தபோவனம்வரையில், காலையிற் பின்தொடர்ந்து, மாலையில் எதிர்கொண்டழைக்கவேண்டும். இவ்வாறு அது பிரஸாதஞ்செய்யும்வரை அநுஷ்டிக்கவேண்டும்" என்றார். அரசனும் ஸரியென்று அங்கீகரித்தான். பின்பு இரவில் அவர் நியமத்துக்குத்தக்கபடுக்கையை யேற்படுத்திக்கொண்டு தூங்கிவிட்டுக் காலையில், திலீபராஜன் கன்றுக்குட்டியை ஊட்டிக்கட்டிவிட்டுப் பசுவை அவிழ்த்துவிட்டான்.

மனைவியும் தபோவனம்வரை பின்தொடர்ந்தாள். பின்பு திலீபன் இளம்புற்களைப் பிடுங்கிக்கொடுப்பதனாலும், தினவுதீரச் சொறிந்து கொடுப்பதனாலும், ஈக்களை ஓட்டுவதனாலும், அதைக்காப்பதில் முயற்சியுடையவனானான். திலீபன் அப்பசு நின்றால் நின்றும், போனால் போயும் படுத்துக்கொண்டால் உட்கார்ந்துகொண்டும், நீர்பருகினால் நீர்பருகியும் அதனை அதன்நிழல்போல அநுஸரித்தான். அவன் செல்லும்பொழுது இருபக்கத்திலுமுள்ள மரங்கள், ஸேவகஜனங்களைவிட்டவனும், வருணனோடுஸமமானவனுமான திலீபனைத் தம்மீதுள்ள பறவைகளின்சத்தத்தால் பாரென்று கூவியழைத்தன. லதாகிருஹங்களில் உட்கார்ந்துகொண்டு, பொற்றன்மூங்கில்களிற்புகுந்தகாற்றாற் புல்லாங்குழல்போல் வனதேவதைகளாற் கானஞ்செய்யப்பட்ட தனதுகீர்த்தியைக் கேட்டான். அந்நந்தினியானது எங்கும் தனதுஸஞ்சாரத்தாற் சுத்தமாகச் செய்துவிட்டு,சாயங்காலத்தில் தன்னிருப்பிடம்செல்லத்தொடங்கிற்று. திலீபன் வனத்தின்வனப்பைப்பார்த்துக்கொண் டதைப் பின்தொடர்ந்தான். திலீபனால் பின்தொடரப்பட்டதும் ஸுதக்ஷிணையால் எதிர்கொண்டழைக்கப்பட்டதுமான அப்பசு, பகலால் பின்தொடரப்பட்டு, இரவால் எதிர்கொண்டழைக்கப்பட்ட ஸந்தியாகாலம்போல விளங்கிற்று. அப்பொழுது ஸுதக்ஷிணை அப்பசுவைப் பிரதக்ஷிணஞ்செய்து, நமஸ்கரித்து உபசரித்தாள். தாம்செய்த பூஜையை ஏற்றுக்கொண்டதென்றிருவரும் மகிழ்ந்தனர். திலீபன் வஸிஷ்டருடையவும் அருந்ததியுடையவும் பாதங்களைவணங்கி, ஸந்தியாகாலவிதியை முடித்துவிட்டு,

படுத்திருக்கும்பசுவை மீண்டும் அடைந்தான். அருகில் வைக்கப்பட்டஉணவுகள், தீபங்கள் இவைகளையுடைய அப்பசுவைத் திலீபன் மனைவியுடன் அநுஸரித்து அது தூங்கியபின் தூங்கிக் காலையில் எழுந்தவுடன் எழுந்திருந்தான். இவ்வாறு மக்கட்பேற்றுக்காக விரதமநுஷ்டிக்கும் திலீபனைப் பரீக்ஷிக்கவெண்ணி, அப்பசு, மறுநாள் கங்கைக்கரையில் இளம்புற்களையுடைய ஹிமவத்பர்வதத்தின்குகைக்குள் நுழைந்தது. அப்பசு, மனதாலும் புலிமுதலிய துஷ்டப்பிராணிகளாற் பிடிக்கமுடியாததென்று திலீபன் மலையின் அழகைப் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது வேகமாய்ப்பாய்வதில்முயற்சியுள்ள சிங்கமொன்று அதைப்பிடித் திழுப்பதைப் பார்த்தான். பின்பு அப்பசு தீனமாய்க்கத்துவதைக் கேட்டு, அம்மிருகேந்திரனைக் கொல்வதற்காகப் பாணத்தை அம்பறாத்தூணியினின்று மெடுக்கவிரும்பினான். அவனுடைய வலதுகையானது வில்லின் அடியில் பிரவேசித்தபொழுதே சித்திரத்தில் எழுதப்பட்டதுபோல் ஸ்தம்பித்துப்போய்விட்டது. தனதுகை இவ்வாறானமைக்காகக்கோபமிகுந்து தனது தேஜஸ்ஸால் தஹிக்கப்பட்டான். அப்பொழுது அச்சிங்கம் மநுஷ்யன்பேசுவதுபோல்,திலீபனைப்பார்த்து "ஹேமன்னவ! நீ சிரமப்படவேண்டாம். நீ உனது அஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்தாலும் வீணேயாகும்; மரத்தைப்பிடுங்கக்கூடிய மாருதன்வேகமானது பர்வதத்திற் பிரவர்த்திப்பதில்லை. கைலாஸபர்வதம்போல் வெளுப்பானவிருஷபத்தின்மீது ஏறவிரும்பும் சிவபெருமானது அடிவைப்பாற் பரிசுத்தனான என்னைக் கும்போதரனென்று பெயருள்ள சிவபெருமானுடைய வேலைக்காரனென்றறி. இதோ முன்னேயிருக்கும் தேவதாருவிருக்ஷமானது சிவபெருமானுக்குப் புத்திரன்போன்றது. இதில் ஒருஸமயம் காட்டுயானை உறைந்து தோலைப் போக்கிவிட்டது. அதனால் இம்மலைமகள் மிகவும்துக்கித்தாள். அதுமுதற் காட்டுயானைகளைப் பயமுறுத்துவதற்காக இவ்விடம் பரமசிவன் என்னையிருக்கும்படி ஏவியிருக்கிறார். பசிமிகுந்த எனக்குப் பாரணைசெய்வதற்கு இப்பசு, போதுமானது; ஆதலின் நீ குருவிடஞ்சென்று விவாத்தைத்தெரிவி. முடியாதகாரியத்தில் நீ என்னசெய்வாய்" எனக் கூறிற்று. இவ்வாறு கம்பீரமாய்க்கூறியதைக்கேட்டு மன்னவன் கடவுள்செயலெனத் தன்னைத் தேற்றிக்கொண்டான். பின்பு வேந்தன் "ஹே? மிருகேந்திரா? சாமர்த்தியமற்றநான் கூறும்வார்த்தை பரிஹஸிக்கத்தக்கது;

ஆயினும், நீ பிராணிகளின்மனதையறிந்திருக்கிறாய்; ஆதலின், சொல்லுகிறேன். யாவற்றிற்கும் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரமாகிய மூன்றுக்கும் காரணபூதனாகிய சிவபெருமானின்கட்டளையும் தள்ளத்தக்கதன்று; ஆஹிதாக்கினியாகிய வஸிஷ்டமுனிவரின்பசுவும் உபேக்ஷிக்கத்தக்கதன்று. நீ எனது சரீரத்தால் பாரணையைமுடித்துக்கொண்டு ஸாயங்காலத்தில் தாய்வருமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் கன்றையுடைய மஹர்ஷியின் இப்பசுவை விட்டுவிடு" எனக் கூறினான். பிறகு சிங்கம் மறுபடியும் "ஒன்றான வெண்குடையையும், உலகத்துக்குப் பிரபுவாயிருக்குகையையும், புதிதானயௌவனத்தையும், அழகானசரீரத்தையும், அல்பமான இப்பசுநிமித்தம் விடவிரும்புகிறாய்; ஆதலின், விசாரித்துப்பார்த்தால் நீ முழுமூடனாயிருக்கிறாய். நீ பிராணியிடம் தயவினால் இப்பசுவைக்காத்தால், பிரஜைகள்முழுவதையும் காப்பது போய்விடும். ஒரேபசுவையுடைய வஸிஷ்டமுனிவர் அபராதத்தினாற் கோபமடைந்தால், கோடிக்கணக்கானபசுக்களைக்கொடுத்துக் கோபத்தை மாற்றிவிடலாம். ஆதலின், கல்யாணபரம்பரைகளைப் புஜிக்கத்தக்க சரீரத்தைக்காப்பாற்று" என்றது. அதனைக்கேட்டுத் திலீபன் "நாசத்தினின்றும் காப்பதாலன்றோ க்ஷத்திரியனென்று பெயர்; அவ்வாறு காக்காமல் இராஜ்யத்தை ஆளுவதால் யாதுபயன்? வஸிஷ்டமுனிவருக்கு வேறு பசுக்களைக்கொடுத்துக் கோபத்தைத்தீர்ப்பது முடியாத விஷயம்; ஏனெனில் இப்பசுவுக்குச் சமானமானபசு வேறில்லை. இப்பசுவை எனதுசரீரத்தைவாங்கிக்கொண்டு விட்டுவிடுவதே தகுதியானது. இதனால் உனதுபாரணையும் பூர்த்தியாகின்றது. முனிவரின் ஹோமகாரியமும் நிறைவேறுகின்றது. ஆதலின் எனதுவார்த்தையைத் தட்டுவது தகுதியன்று" எனக் கூறவே, ஸரியென்று சிங்கம் பசுவைவிட்டுவிட்டது. திலீபன் சிங்கத்தின்முன் தனதுடலைப் பிண்டம்போல் ஒடுக்கிவைத்துக்கொண்டு நின்றான். சிங்கம் மேலேபாயப்போகிறதென்று குனிந்துநிற்கும் திலீபன்மீது அப்பொழுது வித்யாதரர்கள் மலர்மாரிபொழிந்தனர். "அப்பா! குழந்தாய்! எழுந்திரு" என்ற அமிருதம்போன்றசொல்லைக்கேட்டு எழுந்ததும் முன்பு தாயைப்போன்ற பசுவைப் பார்த்தான். ஆச்சரியமடைந்த திலீபனைநோக்கிப் பசு "நான் தான் மாயையால் உன்னைப்பரீக்ஷிக்க இவ்வாறுசெய்தேன். வஸிஷ்டமுனிவரின்பெருமையால் யமனும் என்னிடம் அணுகமாட்டான். குருவினிடம் பக்தியினாலும் என்னிடம் கருணையாலும் சந்தோஷமடைந்

திருக்கிறேன். ஆதலின் உனக்குவேண்டியவரத்தைக் கேள்" என்றது. பின் திலீபன் ஸுதக்ஷிணையிடம் புத்திரனை வேண்டினான். அப்பசு 'உனக்கு அவ்வாறேயுண்டாகும்;எனதுபாலை ஒருதொன்னையிற்கறந்து சாப்பிடு'' எனக் கூறியது. "திலீபன், கன்றூட்டியபிறகு ஹோமவிதி முடிந்தபின் முனிவரின்உத்தரவுபெற்றுப் பாலைப்பருகவிரும்புகிறேன்" எனக் கூறினான். இவ்வாறுகூறியதற்காகப் பசு மிகவும் சந்தோஷமடைந்து ஆச்ரமத்திற்குச்சென்றது. பிறகு திலீபன் நடந்தவிர்த்தாந்தத்தை வஸிஷ்டருக்கும் ஸுதக்ஷிணைக்கும் கூறிக் கன்றூட்டி ஹோமவிதிமுடிந்தபின் மீதியானபாலை முனிவரின்கட்டளையின்பேரில் மனைவியுடன்குடித்தான். காலையில் வஸிஷ்டரையும், அருந்ததியையும், அக்னியையும், பசுவையும் வலம்வந்து நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு தனதுநகரத்திற்குச்சென்றனன். பின்பு ஸுதக்ஷிணை கர்ப்பந்தரித்துப் பத்துமாதமானபின் உலகனைத்தும் ஒருகுடைக்கீழ் ஆளவல்லமையுள்ள புத்திரனைப்பெற்றுநெடுங்காலம் இன்பமாய்வாழ்ந்துவந்தனர். இவ்வளவு பெருமையும் பசுவின் அநுக்கிரஹத்தினாலன்றோ? வந்தது.

அன்றியும், பசு நன்னடக்கையிற் சிறந்தது. மெய்புரைப்பதில் மேன்மைபெற்றது. முன்னொருகாலத்திற் காமாட்சியென்னும் கபிலைப் பசு, தான்மேயுமிடத்தினின்றும் தப்பிப்போய் ஒருகாட்டில் ஒருமிருகேந்திரனிடம் அகப்பட்டுக்கொண்டது. அது பசுவைக் கொல்லவருந்தருணத்தில் வணக்கத்துடன் "ஐயா! என்கன்று சாயங்காலம் நான் வருவேனென்று எதிர்பார்த்திருக்கும். ஆனதால் நான்போய் ஊட்டக்கொடுத்துவிட்டுத் திரும்பிவந்துவிடுகிறேன். வராவிட்டால் பொய்சொல்லுபவன்முதலியவர்களின் பாதகத்திற்போவேன்'' எனப் பிரதிக்ஞை செய்து விடைபெற்றுக்கொண்டு தன்னிருப்பிடம்வந்து கன்றுக்கு ஊட்டக்கொடுத்து ஸர்வாங்கத்திலும் நக்கிக்கொடுத்து, விவரத்தைத்தெரிவித்துத் தன்பந்துக்களிடம்விட்டுவிட்டுத் தான் திரும்பவும் மிருகேந்திரனிடம்சென்று 'இனி என்னைப் பக்ஷிக்கலாம்' என்றது. மிருகேந்திரன் அதன் வாய்மைக்கு மெச்சி, அதனைப்புசித்தால் பாவம்வருமென்று நினைத்து "உன்னைப்புசிக்கமாட்டேனென மறுத்துவிட்டது. பின் பசு திரும்பிப்போகமனமில்லாமல் தயங்கிநிற்கும்பொழுது பார்வதீபரமேசுவரர் மிருகேந்திரனுக்கும் பசுவிற்கும் காட்சிகொடுத்து அழைத்துச்சென்றனர் என்று கபிலைவாசகம்கூறுவதே பசுக்கள் ஸத்தியத்திலும் அறிவிலும் சிறந்தவையென்பதற்கு அத்தாக்ஷியாகும். ஆதலின் பசுவைப்பூஜிப்பதால் இம்மையிலும் மறுமையிலும் பயனுண்டாமென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. சுபம்.

Pandit M. M. Narayanasamy Aiyer,
Mudikandan.

ஸ்ரீ:

இந்தியாவின் அரசியல்.

சுமார் இரண்டுநூற்றாண்டுகளுக்குமுன் ஆங்கிலேயர்கள், இவ்விந்தியாதேசத்துக்கு வியாபாரமுறையில் வர்த்தகர்களாகவந்து, அதுமுதல் வியாபாரமிகுதியாலும் சில அவசியங்களாலும், முயற்சியுடைமையாலும் சில பாகங்களைக் கைப்பற்றிக்கொண்டு, அப்பால் தங்கள் கைவசப்பட்டபூமியை ஆண்டுவந்து, கொஞ்சங்கொஞ்சமாகப் பலநாடுகளையுங்கைப்பற்றி, இந்தியாவின் அநேகபாகத்தைச் சுவாதீனமாக அடைந்து, ஜனங்களைப் பரிபாலித்துக் குடிகளுக்குவேண்டும் நன்மையையும் சமாதானத்தையு முண்டுபண்ணி, 1858-௵ இந்தியா அரசாட்சியை மாட்சிமைதங்கிய காலஞ்சென்ற பூமிதேவிக்குச் சமானமான விக்டோரியாராஜாத்தியம்மையின் செங்கோலின்கீழ் அடையச்செய்தார்கள் என்று சரித்திரங்கள்மூலம் நம்மவர்களெல்லோரும் அறிந்திருக்கிறார்கள். புராதனமாய் விசேஷநாகரிகத்தையும் உயர்ந்த கல்வியையும் செழிப்புற்றோங்கிய வியாபாரத்தையும் கைத்தொழிலையும் மேம்பாடுள்ள மதத்தையும் சிறந்தோங்கிய தத்துவஞானத்தையும் பெற்றிருந்த இந்த ஆரியதேசத்தவரும், பிரகிருதத்தில் உயர்ந்த நாகரிகமும் செழிப்பும் ஐசுவரியமும் பராக்கிரமமும் வல்லமையும் கல்வியும் ராஜதந்திரமும் சுவாதீனமும் சுவாதீனஸ்தாபனத்துக்குரிய முறைகளுமான இவைகளையே முதன்மையாகக் கொண்டு, ஜனங்களின்ஹிதத்தையேகருதி, ஜனங்கள்கோரிக்கைக்கிணங்கின ராஜாங்கத்தில் அதிக விசுவாசமுடையவர்களான ஆங்கிலதேசத்தவரும் ஒருவரோடொருவர்சேர்ந்து ஐக்கியப்பட்டு, இப்போது தளர்ச்சியடைந்திருக்கும் இவ்விந்தியாவை, ஆங்கிலதேசத்தவர்கள் கைக்கொண்டு அரசாட்சிசெய்யும்படியாய்நேர்ந்தது தெய்வீகமென்றே நம்புவதற்கு அநேககாரணங்களுள்ளன. அவைகளை விசேஷமாகப் பலதடவைகளிற் பலரும் எடுத்துரைக்க நாம் கேட்டிருக்கிறோம். நம்முடைய பெரிய இந்தியாதேசத்தை இவ்வளவுசௌகரியமாகவும் சுலபமாகவும் எப்படி அரசாட்சிசெய்கிறார்கள்? அந்தயந்திரம் எத்தகைத்து? அதன்பெருமை யெப்படிப்பட்டது? சிறியகிராமமுதல் அரசாட்சியின்கீழ் அமைந்திருக்கும்விதமெப்படி? நம்தேசத்து நன்மையையும் சமாதானத்தையும் எப்படி விர்த்திசெய்கிறார்கள்? என்னும் விஷயங்களைக் கவனிப்போமாக. அப்படிச்செய்வதால் நம்முடைய ராஜவிஸ்வாசம் விர்த்தியடையுமென்பதற் கையமில்லை.

இந்தியா.

இந்தியா, பிரிட்டிஷ்இந்தியா என்றும், சுதேசதுரைத்தனங்கள் என்றும் இரண்டுபிரிவாயுள்ளது. சுவதேசதுரைத்தனங்களில் 175-தேசங்கள் சக்கரவர்த்தியின்பிரதிநிதியான இந்தியாகவர்ன்மெண்டாரின் ஆளுகையிலும் 500-தேசங்கள்வரை மாகாணகவர்ன்மெண்டுகளின் ஆதீனத்திலும் வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தியாதேசம், 18,02912-சதுரமைல் விஸ்தாரமும், 1911-ஆம் ஜனத்தொகைக்கணக்கின்படி 31,51,56,596-ஜனங்களுமுடையது. அதில் பிரிட்டிஷ் இந்தியா, 10,93,074-சதுரமைல் விஸ்தாரமும், 24,42,67,542-ஜனங்களுமுள்ளது. இந்தியாமுழுவதும் இந்தியாகவர்ன்மெண்டாரவர்களால் ஆளப்பட்டுவருகிறது.

சக்கரவர்த்தியும் மகாமந்திரிசபைகளும்.

இந்தியர்களனைவரும், மாட்சிமைதங்கிய ஐந்தாவது ஜியார்ஜ் சக்கரவர்த்தியவர்களின் பிரஜைகள். அவர்கள் நம்மீது மிகுந்த அன்பும் அநுதாபமுமுடையவர்கள். அவர்களுக்கு ராஜாங்கவிஷயத்தில் உதவிபுரிவதற்காக இரண்டு மந்திரசபைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளாவன:—பிரபுக்களடங்கிய மந்திரசபை 1 பிரிட்டிஷ் ஜனசமூகத்தால் தெரிந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளடங்கிய மஹாமந்திரசபை 2 என்பனவாம். தவிரவும், சக்கரவர்த்தி, மேற்குறித்த மந்திரசபையார்கள் இவர்களதிகாரத்திற்குட்பட்டு, ராஜ்ய பாரத்தைவகிப்பதற்காக அப்போதைக்கப்போது ஏற்படும் பிரதான மந்திரியோடு, சில மந்திரிகளடங்கிய மந்திரிகள்சங்கமுமொன்றுண்டு. அதில் இந்தியாமந்திரி (Secretary of state for India) ஒருவர்.

இந்தியாமந்திரியும் அவர்சபையும்.

1. இந்தியா கவர்ன்மெண்டாரவர்களுக்குப் பிரதானமான விஷயங்களில் உபாயஞ்சொல்லுவதற்காகவும், மற்றும் இந்தியா ராஜ்யபரிபாலனத்தைச் சரிவரநடத்தும்பொருட்டும் இங்கிலாந்தில் (Secretary of state for India என்று) ஒரு மந்திரியும், அவருக்கு

உதவிசெய்ய ஒரு ஆலோசனைச்சங்கமும் உண்டு. சக்கரவர்த்திசெய்யும் இந்தியாராஜ்யபாரம் இந்த இந்தியாமந்திரிமூலமாக நடந்துவருகிறது. இவர் பிரிட்டிஷ்மந்திரிகளடங்கிய சங்கத்தின் ஓர் அங்கத்தினர். இவர்; இந்தியாவிஷயத்தில்நடத்தும் சகலகாரியங்களுக்கும் பிரிட்டிஷ்மஹாமந்திரசபைக்கு உத்தரவாதம்செய்யக் கடமைப்பட்டவர்; அந்தச்சபையின் மேலான அதிகாரத்தை நிறைவேற்றவும் கடமைப்பட்டவர். இந்த இந்தியாமந்திரி உள்ளடங்கிய இந்திய அரசாட்சிமுழுவதும் பிரிட்டிஷ்ஜனசமூகத்தின் அபிப்பிராயத்துள் அடங்கியது. அதாவது பிரிட்டிஷ்ஜனசமூகத்தால் தெரிந்தெடுக்கப்பெறும் அங்கத்தினர்களடங்கிய பிரிட்டிஷ் மஹாமந்திரசபைமூலம் அந்தச் சிறந்த பாத்தியதையைச் செலுத்திவருகிறார்கள். ஒவ்வொரு வருஷத்திலும் மார்ச்சுமாதம் முதல்தேதிக்குப்பின் மஹாமந்திரசபைகூடும் பதினைன்குதினங்களுக்குள்ளாக இந்தியாவின் அரசிறைக் கணக்குகளைப் பார்லிமெண்டு மஹாமந்திரசபையாருக்கு இந்தியா மந்திரி தெரிவிக்கவேண்டும். அது அந்தச்சபையாரால் ஒப்பப்படவேண்டும். அந்தச்சமயங்களில் இந்தியாவின் தற்காலஸ்திதியையும் அதன் ராஜ்யதந்திரத்தையும் உபாயங்களையும்பற்றியும் அவைகளிலிருக்கும் குணதோஷங்களைப்பற்றியும் ஆராய்ச்சிசெய்தலுமுண்டு. இவருக்கு உதவிபுரிவதற்காக 2-உபகாரியதரிசிகளும், ஒரு உதவி உப-காரியதரிசியும், ஒரு ஆலோசனைச்சங்கமும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இப்போதையவிதிப்படி அந்த இந்தியாமந்திரிசபைக்கு இந்தியா மந்திரி அவர்களின் இஷ்டப்படி 10-பேர்களுக்குக்குறையாமலும் 14-பேர்களுக்குமேற்படாமலும் இந்தியாமந்திரியவர்களால் மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். சாதாரணமாக அப்படி நியமனம் செய்வது 7-வருஷத்துக்கொருதரம் நடக்கவேண்டியது. விசேஷமானகாரணங்களிருந்தால், மேலும் 5-வருஷத்துக்கு நீடித்து மெம்பர்களை நியமிக்கவும் அவருக்கு அதிகாரமுண்டு. இந்தச் சபையின்மெம்பர்களிற் பெரும்பாலோர், இந்தியாவில் 10-வருஷகாலமாவது இருந்து அநுபவம்பெற்றவர்களாகவும், தங்களைநியமிக்கு முன் 5-வருஷத்துக்குள்ளாக அவர்கள் இந்தியாவாசிகளாகவும் இருந்திருக்கவேண்டுமென்று நிபந்தனைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தியா

மந்திரி, இந்தியாதேசத்திலும் அதன் ஆட்சிவிஷயத்திலும் நேரில் அனுபோகமில்லாதவராயிருப்பதையுத்தேசித்து இந்தியா அனுபோகமுள்ளவர்கள் அவருக்கு ஆலோசனைசொல்லுவதற் கனுகூலமாக இந்த ஏற்பாடுசெய்திருப்பதேயொழிய வேறில்லை. லார்ட் மார்லி அவர்கள் இந்தியாமந்திரியாக இருந்தகாலத்தில் இந்த ஆலோசனைச் சங்கத்துக்கு இரண்டு இந்தியமெம்பர்கள் முதல்முதலாக நியமிக்கப் பெற்றார்கள். இப்படி நியமிக்கவேண்டுமென்றவிதி யாதொன்றுமில்லாவிடினும், இனிமேல், சாஸ்வதமாக அப்படி நியமனம்செய்வதாக ஒரு உடன்பாடு அல்லது கொள்கையிருப்பதாக எண்ணவேண்டியதாயிருக்கிறது. இது மிகவும் நல்ல ஏற்பாடுதான். ஆனால் நியமிக்கப்பெறும் இந்தியர்கள் நம் நாட்டின் பொதுநன்மையையே கருதும் பெருந்தன்மையுள்ள ராஜ்யதந்திரிகளாயிருந்தால் அதுவே இந்தியாவின் பெரும்பாக்கியமாகும். இந்தச்சபையாலாகவேண்டிய காரியமுழுதும் சிலபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு காரியதரிசி நியமிக்கப்பட்டிருப்பதோடுகூட ஒவ்வொருபகுதியிலுமடங்கிய காரியத்தைக் கவனிக்கும்பொருட்டுச் சபையின்மெம்பர்களில் 4 அல்லது 5-பேர்களடங்கிய ஒரு கமிட்டியும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மெம்பரும் சாதாரணமாக 2-கமிட்டிகளிலாவது வேலைசெய்யக்கடமைப்பட்டவர்களாயிருப்பார்கள். இந்தியாகவர்ன்மெண்டாருக்கு ஏதாவது உத்தரவு அளிப்பதாயிருந்தால் அந்தவிஷயத்துக்குரியபகுதியின் காரியதரிசிக்கு மந்திரி எழுதுவர்; அவர் அதைக் கமிட்டியின் ஆலோசனைக்குக் கொண்டு வருவார். பின்னர் அதை மந்திரி ஒப்புக்கொண்டபின் சங்கத்துக்குத் தெரிவித்து, அவர்களங்கீகாரத்தால் பூர்த்தியான உத்தரவை இந்தியாகவர்ன்மெண்டுக்கு அனுப்புவது வழக்கம்.

ராஜப்பிரதிநிதியும் அவர் சபையும்.

இனி, இந்தியா ராஜ்யபரிபாலனத்தின் யந்திரவுறுப்புக்களை எடுத்துரைப்போம். இந்தியாமண்டலமுழுதும் ராஜப்பிரதிநிதியாகிய வைசிராய் அவர்களால் அரசாட்சிசெய்யப்பட்டுவருகிறது. அவர்களுக்கு உதவிசெய்ய ஒரு நிர்வாகசபையும், ஒரு சட்டநிரூபண சபையும் ஏற்பட்டிருக்கின்றன. நிர்வாகசபையார்கள் 6-பேர்கள்.

அந்தச்சபையில் இந்தியசேனைக்கு முக்கியதளகர்த்தர் ஒரு விசேஷ மெம்பராயிருக்கிறார். சௌகரியத்தை உத்தேசித்துச் சுய அரசாட்சி செய்யும் இந்திய துரைத்தனங்களின் மேற்பார்வையையும், இதரதேசங்களுடனும் ராஜாங்கங்களுடனும் செய்துகொள்ளவேண்டியதாயேற்படும் லேகனப் பிரதிலேகனவிஷயங்களையும் வைசிராய் வகிக்கிறார். இந்தவிஷயத்தில் அவருக்கு உதவிபுரிவதற்காக இரண்டு காரியதரிசிகளை நியமித்திருக்கிறார்கள். வைசிராயவர்களுக்கு எல்லா அதிகாரமுமுண்டு. இந்தியாவின் சாவதானத்தையும் சமாதானத்தையும் நன்மையையும் உத்தேசித்து நிர்வாகசபையாரிற் பெரும்பான்மையார் ஒப்புக்கொண்ட தீர்மானத்தைக்கூடத் தட்டிவிட அவருக்கு அதிகாரமுண்டு.

இந்தியாவின் சேனைசம்மந்தமானவிஷயம் எல்லாவற்றிற்கும் முக்கியதளகர்த்தர்தான் முதன்மையானவர். அதன் ஆளுகையை யவரே வகிப்பார். மற்றுமுள்ள ஆறுநிர்வாகசபைமெம்பர்களுள் ஒருவர் ராஜாங்கத்தின் வரவுசெலவுக்காதாரமான வரிகளாலாய பொதுநிதிபரிபாலனவிஷயத்தையும், மற்றொருவர் இங்கிலாந்திலிருக்கும் நம் மிந்தியாமந்திரி அவர்களுக்கும், அவர்களுக்குதவியாகவேற்பட்டிருக்கும் சங்கத்துக்கும் இந்தியா ராஜ்யநிர்வாக விஷயமாய்த் தகவல்கொடுப்பது; அவர்களிடமிருந்து உத்தரவோ புத்திமதியோ ஆலோசனையோ பெறுவது முதலானகடமைகளையும், வேறொருவர் ரிவினியூ வியவசாயம் முதலான விஷயங்களையும், இன்னொருவர் வாணிகம், கைத்தொழில், இந்தியாவிலுள்ள ரெயில் வேலைகள் இவைகளையும், பின்னொருவர் இந்தியாகவர்ன்மெண்டாரவர்களால் உத்தேசிக்கும் சட்டங்களை நிர்ணயிப்பது நிரூபிப்பது முதலானவற்றையும், பிறிதொருவர் கல்வி, ஆரோக்கியமுறை, நகர பரிபாலனம் முதலியவிஷயங்களையும் தனித்தனியே பிரித்து வகித்து வருகிறார்கள். நம் மிந்தியர்களிற் படிப்பில்மிக்கோரும் ராஜ்யபாரம் வகிக்க வல்லோரும் உளரென்றும், இந்தியா அரசாட்சியில் இந்தியர்களும் முக்கியமானஸ்தானங்களில் அமருதலே ராஜாங்கத்துக்குப் பலமும் ஆதரவுமாகுமென்றும் கருதி மாட்சிமைதங்கிய பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் சென்றசிலகாலமாக இந்தியர்களை முக்கியமான ராஜாங்கநிர்வாகசபைகளிலும் தெரிந்து எடுத்து நியமித்திருக்கிறார்கள். இந்த இந்தியாநிர்வாகசபையிற் சட்டமெம்பராக முதலில் கனம்

ஸர். எஸ். பி. சின்ஹா அவர்களை நம் நாடெங்கும்புகழ நியமித்தார்கள். அவர்களுக்குப்பின் கனம் சையது ஆலி இமாம் என்பவரை அந்த ஸ்தானத்தில் நியமித்தார்கள். அவர்களுக்குப்பின் இப்போது அந்த நிர்வாகசபைமெம்பராகக் கனம். ஸர். சி. சங்கரன்நாயர் அவர்கள் நியமிக்கப்பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்குச் சட்டசம்பந்தமான வேலையில்லாமற் கல்விசம்பந்தமானவேலையைவகிக்கும்படி நியமித்திருக்கிறார்கள். ஆனால், மேற்குறித்தபடி இந்தியரில் ஒருவரை நிர்வாகசபையில் நியமிக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் அல்லது விதி ஏற்படவில்லை. இப்போது வழக்கத்தையனுசரித்து அப்படி ஏற்பட்டுவருகிறது. அந்த வழக்கத்துக்குக்காரணம் லார்ட் மார்லியவர்களால் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களி லொன்றாயமைந்தது.

மாகாணப்பிரிவுகள்.

3. இந்தப் பிரிட்டிஷ் இந்தியா இப்போது 15-மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவைகளாவன :—

1. சென்னை.
2. பம்பாய்.
3. வங்காளம்.
4. பேஹாரும் ஒரிஸ்ஸாவும்.
5. ஐக்கியமாகாணங்கள்.
6. பஞ்சாப்பு.
7. பர்மா.
8. மத்தியமாகாணங்கள்.
9. அஸ்ஸாம்.
10. வடமேற்கு மாகாணங்கள்.
11. பலுசிஸ்தானம்.
12. குடகு.
13. ஆஜ்மீர்.
14. அண்டமான் தீவுகள்.
15. டெல்ஹி.

அவைகளில் 1, 2, 3-லக்கமிட்ட மாகாணங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே ஒரு கவர்னரின் ஆளுகைக் குட்பட்டிருக்கின்றன. அக்கவர்னருக்கு உதவிபுரியும்பொருட்டு ஒரு நிர்வாகசபையும் அச்சபையாருள்ளடங்கின ஒரு சட்டநிரூபணசபையும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே ஒரு ஹைக்கோர்ட்டுமுண்டு.

4-வது லக்கமிட்ட புதுமாகாணத்(பேஹாரும் ஒரிஸ்ஸாவும்)துக்கு ஒரு லெப்டினெண்டு கவர்னரும் அவருக்கு உதவிக்கு ஒரு நிர்வாகசபையும் ஒரு சட்டநிரூபணசபையும் ஏற்பட்டுள்ளன. இந்த மாகாணத்துக்கும் ஒரு ஹைக்கோர்ட்டு ஏற்பட்டிருக்கிறது.

5, 6, 7-லக்கமிட்ட மாகாணங்களுக்குத் தனியே ஒரு லெப்டினெண்டுகவர்னரும் உதவிக்கு ஒரு சட்டநிரூபணசபையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். 5-வது லக்கமிட்ட மாகாணத்தில்மாத்திரம் ஒரு ஹைக்கோர்ட்டு உண்டு. மற்றையிரண்டிலும் தனித்தனி ஒரு சீப்-கோர்ட்டுமட்டுமுண்டு.

8, 9-லக்கமிட்ட மாகாணங்களுக்குத் தனியே சீப்கம்மிஷனரும் அவருதவிக்கு ஒரு சட்டநிரூபணசபையும் உண்டு.

10-முதல் 15-வரை லக்கமிட்டவைகளுக்குத் தனியே ஒவ்வொன்றிற்கும் ஒரு சீப்-கம்மிஷனர்மாத்திரம் நியமிக்கப்பட்டு அவரால் தனித்து அரசாட்சி செய்யப்பட்டுவருகிறது.

(இன்னும் வரும்.)

எம். எஸ். சேஷையங்கார்.

ஸ்ரீ:

புத்தகமதிப்புரை.

வரசுல்கம்:—இது, ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒரு சிறியநாடகம். **கல்யாணி, மாண்டவன்மீண்டமாயம், மாலினீமாதவம்** முதலான அரிய தமிழ்நாவல்கள் இயற்றியவரும், நமது செந்தமிழ்ப்பத்திரிகைக்கு **சேல்வநூல், ரஸாயனநூல்** முதலான பலவிஷயங்களைப்பற்றி விஷயதானம்செய்துவருபவருமான மகா-ா-ா-ஸ்ரீ ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர் அவர்கள் B.A., B.L., இயற்றியது. இது தெளிவான ஆங்கில நடையில், சொல்லணி பொருளணியுடன், காலதேசவர்த்தமானங்களுக்குத்தக்கவாறு, வரசுல்கத்தின்கொடுமையைப்பற்றி விரித்து எழுதப்பட்டுள்ளதாய்த்தெரியவருகிறது. இவ்வரிய நூலுக்குச் சொற்ப விலை யேற்பட்டிருப்பது, யாவரும் எளிதில் வாங்கிப்படிக்கவேண்டுமென்ற ஆசிரியரின்கருத்தை விளக்கிக் காட்டும். இத்தகையபுத்தகத்தைத் தமிழிலும்வெளியிடுவாராகில், ஆசிரியர் தமிழறிஞர் பலருக்கும் பேருதவிசெய்தவராவர்.

இதன்விலை அணா இரண்டு. புஸ்தகம் வேண்டுவோர், **மதுரைத் தமிழ்ச்சங்கம் மானேஜர் அவர்களிடமும்,** மதுரை, **தானப்பமுதலிவீதி ஆர். சங்கரையரிடமும்** பெற்றுக்கொள்ளலாம்.

நாலடியார் குறிப்புரையுடன் 1, பிரகலாதாழ்வான்சரிதை இரண்டாம்பதிப்பு 2, ஏகாதசிமஹிமை 3. இப்புத்தகங்கள், வேலூர் ஊர்ஹீஸ்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்-P.K. ஸ்ரீநிவாஸாசாரியரவர்களால் அச்சிடப்பட்டுள்ளன. இவற்றுள், நாலடியார் ஆங்கிலகலாசாலைமாணவர்கள்கற்பதற்கேற்றவாறும், ஏனையரும்படிக்குமாறும் இருவேறுதிறமுடையதாகப் பதிக்கப்பட்டிருக்கிறது. மாணவர்பதிப்பு விலை அணா 8. ஏனையர்பதிப்பு விலை அணா எட்டு. பிரகலாதாழ்வான்சரிதை விலை அணா ஆறு. ஏகாதசிமஹிமை விலை அணா ஒன்று.

கிருஷ்ணன்றூதுச்சருக்கம்:—இது புதுக்கோட்டை மஹாராஜா காலேஜ் தமிழ்ப்பண்டிதர் V. T. ஸ்ரீநிவாஸையங்காரவர்களாலும், வேலூர் ஊர்ஹீஸ்காலேஜ்தமிழ்ப்பண்டிதர் P.K.ஸ்ரீநிவாஸாசாரியரவர்களாலும் விளக்கமானபொழிப்புரையுடன் பதிப்பிக்கப்பட்டது. இன்டெர்மிடியேட் பரீக்ஷைக்குப்படிக்கும் மாணவர்கள் தமிழ்வியாசமெழுதுவதற் குதவியாயுள்ளது. இதன்விலை அணா பத்து.

சம்பகமாலினி:—இது, ப. ம. வேணுகோபாலநாயுடு அவர்கள் எழுதியநாவல். வேலூர் ஊர்ஹீஸ்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் P. K. ஸ்ரீநிவாஸாசாரியரவர்களால் இரண்டாம்பதிப்பாகப் பதிக்கப்பட்டிருக்கிறது. இதன்விலை அணா நான்கு.

மேற்கண்ட புத்தகங்கள்வேண்டுவோர் P. K. ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள், தமிழ்ப்பண்டிதர், ஊர்ஹீஸ்காலேஜ், வேலூர் என்றவிலாசதார்க்கு எழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

கடவுள்துணை.

செந்தமிழ்

தொகுதி-கச.] ராக்ஷஸ௵ தைமீ [பகுதி-ந

Vol. XIV. January—February, 1916.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 7-MAR 1916 MADRAS

ருதுமதீவிவாஹம்.*

“செந்தமிழ்” (தொகுதி கச பகுதி க-ல்) உக-ஆம்பக்கத் தொடர்ச்சி.

6. பால்யவிவாகத்தை இப்பொழுது மாற்றவேண்டிய அவசியங்கள்.

காரணமெப்படியிருந்தாலும் வெகுகாலமாக அநுஷ்டிக்கப்பட்டு வந்தவழக்கத்தை நாம் விடும்படியாக இந்தச் சமயத்தில் என்ன அவசியம் நேரிட்டது; நம்முடைய முன்னோர்களைப்போல் நாமும் நடந்துவருவோமே என்று அடுத்தகேள்வியானது உண்டாகிறது.

முன்னிருந்தநிலைமையைவிடச் சிலவருஷங்களாக ஒழுக்கவழக்கங்கள் மாறிக்கொண்டேவருகின்றன. முற்காலத்திற் பிராமணர்கள் உத்தியோகம் வியாபாரம்முதலிய விருத்திகளில் விசேஷமாயில்லாமற் பெரும்பான்மையோர் வியவசாயத்தொழிலை அநுசரித்து, அதில்வந்ததைக்கொண்டு டம்பமானசெலவுகளில்லாமல் மிகுந்த திருப்தியான மனதை உடையவர்களாய்ச் சொற்பச்செலவிற் காலக்ஷேபஞ்செய்துவந்தார்கள். பிராமணன் எவ்வளவு தனிகனாயிருந்தாலும் உடை உணவு முதலியசெலவுகளில் இப்போதுபோல் அவ்வளவு செலவுக்குக் காரணம் கிடையாது. பந்துவிசுவாசமும் தாக்ஷிண்யமும் மிகுதியாயிருந்தன. அவை இப்பொழுது அநேகமாய் இல்லையென்றே சொல்லலாம்.

இக்காலத்தில் ஒருவன் தன்சகோதரியை உன்குமாரனுக்கு என் குமாரத்தியை மணஞ்செய்துகொடுப்பதாக உத்தேசிக்கிறேன், உன்னுடைய சம்மதமென்ன என்றுகேட்டால், அவள் மறுயோசனையில்லாமல் வரதக்ஷிணை என்னதருகிறாயென்று சகஜமாய்த் தன்சகோதரனைக் கேட்கிறாள். முற்காலத்திற் பரீக்ஷையைஉத்தேசித்துப் பெண்ணுக்கு மாப்பிள்ளைதேடுகிறவழக்கமில்லை. பரீக்ஷைநிர்ப்பந்தம் கிடையாது. பாந்தவ்யமும் குற்றமில்லாதகுடும்பமா என்பதுந்தான் கவனிக்கப்படும்.

---

* இதைப்பற்றிய பராமர்சம் அடுத்துச் சேர்க்கப்பெற்றிருக்கிறது.

பிக்ஷைவாங்குகிற ஏழையாயிருந்தாலும் மேலேகண்ட இரண்டம்சங்களும் ஜாதகமும் ஒத்திருந்தால் உடனே கல்யாணம் நடந்துவிடும். இப்பொழுதுபோல் வலைபோட்டு ஊர்ஊராய்த்திரிந்து மருமகன்தேடுவதும், பிள்ளையின் தகப்பன்மார்கள்வகையார் வரதக்ஷிணைக்கு ஏலம்கூறுவதும் ஆகிய நாகரிகங்கள் அக்காலத்தில் இல்லை. பரீக்ஷைக்குப்படிக்கிறதென்கிற முயற்சியால், தேகத்தின்வலிமையை வெகுவாய்க் குலைத்து, தேகம்இளைத்து கண்இடுங்கி வியாதிமேலிட்டு அல்பஆயுசாகப்போகிற அநுபவங்கள் முற்காலத்திலில்லை.

பிராமணர்கள், அந்தக்காலத்தில், தேகத்துக்குவலிமையும் நீடித்த ஆயுசும் உண்டாக அதிகாலையிற் குளிர்ந்தஜலத்தில் ஸ்நானம்செய்தல், ஜபதபமுதலிய அநுஷ்டித்தல், ஜீரணக்கருவிக்கு அதிகவேலை கொடுக்காமல் இரண்டுவேளை போஜனம்செய்தல், வயல் தோட்டம்முதலியவைகளுக்குப்போய் வியவசாயத்தைக்கவனித்தல் முதலிய தேகப்பயிற்சியாகிய அநேக நற்பழக்கங்களை அநுஷ்டித்துவந்தார்கள். இப்பொழுது உத்தியோகமில்லாமல் வியவசாயம்மட்டும் அநுஷ்டிக்கிற குடும்பங்களிற்கூட நிலங்களைக் குத்தகை வாரங்களுக்குவிட்டு வியவசாயத்தை நேரிற்பார்க்காமல், பகற்பொழுதை வீண்பொழுதாய்ப் போக்குகிறார்கள். இவற்றால் இப்பொழுது சிலகாலமாக வரதக்ஷிணை மிகுதியாகக்கேட்கும் நிர்ப்பந்தமும், பலகாரணங்களைக்கொண்டு வரவரப் பால்யமரணம் மிகுதியாயிருப்பதால், பால்யத்திலேயே விதவையாகக்கூடிய அபாயமும், அதிகப்பட்டுக்கொண்டுவருகின்றன.

ஒருபெண் ருதுவாவதற்குமுன் கட்டாயம் மணம்செய்துகொடுக்கப்படவேண்டும்; அப்படிச்செய்யாவிட்டால் விசேஷபாபங்களும் அவமானமும் சம்பவிக்கும்; என்பதனால் எப்படியாவது சரியானபரீக்ஷை கொடுத்திருக்கிறவனுக்கு மணம்புரிவிக்கவேண்டுமென்று ஆத்திரப்பட்டு நெருங்கியகாலத்துக்குள், பெண்ணின்தகப்பன் வரன்தேடும்சமயத்திற் பிள்ளையின்தகப்பன் இதைவிட்டால் நமக்குச் சமயம்வாய்க்காதென்ற உத்தேசத்துடன் மிதமிஞ்சி வரதக்ஷிணைகேட்கிறான். ருதுவான பிறகும் கல்யாணம்செய்யலாமென்றும் பிள்ளையின்படிப்பு நடுவிற் கெடாமலிருக்கவேண்டுமென்ற உத்தேசத்தைக்கொண்டு பிள்ளையின் கல்யாணத்தைத் தாமசிக்கவேண்டுமென்ற அபிப்பிராயமுடைய அநேகர்கள் படித்துத்தேர்ச்சியடைந்தபின் ருதுவில்லாதபெண்ணை மணம்

செய்துகொண்டு காத்திருப்பதைவிட ருதுவானபெண்ணைமணந்து கல்யாணத்தின் உண்மையானதாத்பரியத்தை அநுஷ்டிக்க மிகவும் விரும்புவார்கள்.

இப்பொழுதிருக்கிறஸ்திதியில், பிள்ளைவீட்டுக்காரர்க்குப் பணம் லாபத்தைத்தவிர, ருதுவாகாதபெண்ணை மணந்துகொள்வதில் வேறு லாபம் கிடையாது. பெண் சாந்திமுகூர்த்தகாலம்வரை பிறந்தவீட்டிலேயே இருந்துவருகிறாள். அதேபிரகாரம் பெண்ணின்பெற்றோர்கள் வகையாருக்கும், ருதுவாவதற்குமுன் கல்யாணம்செய்துகொடுக்கவேண்டுமே என்ற பயம்தவிர வேறு யாதொருபிரயோஜனமுமில்லை. அப்படிக்கில்லாமல் ருதுவானபிறகு கல்யாணம்செய்வதாயிருந்தால், படிப்பானபிறகு கல்யாணத்தை அபேக்ஷிக்கிற பிள்ளைவீட்டுக்காரர்களும், ருதுவின்பயம்நீங்கின பெண்வீட்டுக்காரர்களும், புளிப்பேப்பக்காரனும் பசியுடையவனும் சம்பாஷணைசெய்வதுபோல் ஏற்றத்தாழ்ச்சியில்லாமல், சமரசநிலையையடைந்து கல்யாணங்கள், கிரமப்படி உபயதரப்பாராலும் விரும்பப்பட்டுச் சௌகர்யமாக நடக்கலாம்.

ருதுவாவதற்குமுன் ஒருபெண்ணைக் கல்யாணம்செய்துகொடுப்பதில், பெண்ணும் மாப்பிள்ளையும் மனைவி புருஷன் என்கிற ஸ்தானத்தை ஒரு அம்சத்திற்கூட அடையப்பெறாமல் விசேஷ பணச்செலவுசெய்து பந்துக்கள் ஊரார்முதலியவர்களுக்கு அன்னம்போட்டுப் பிள்ளைவீட்டுக்காரர்களுக்கு மிகுதியான வரதக்ஷிணை பாத்திரங்கள் கல்யாணப் பரிசுகள்முதலிய உபசாரங்கள்செய்யப்பட்டு, அந்த வேடிக்கைத்திருவிழாநடந்தபின் பெண் முன்போலப் பிறந்தவீட்டிலேயே இருக்கிறாள். பிள்ளை இரட்டைப்பூணூல்தரித்துக்கொண்டு பிர்ம்மசாரி அநுஷ்டிக்கவேண்டிய வித்தியாப்பியாசத்தையே அநுஷ்டித்துவருகிறான். வேறு ஒருவித்தியாசமும் இல்லை. இருவரும் க்ஷேமமாயிருந்தால் மேற்கண்டபடியிருந்தாலும் பாதகமில்லை. அப்படிக்கில்லாமல் மானிடவாழ்வுக்கு ஏதாவது பங்கம்நேரிட்டால், மேற்கண்ட செலவுகளெல்லாம் ஒரு பிரயோஜனமுமில்லாத செலவுகளாய்ப்போவதுடன் அந்தப்பெண்ணானவள் எவ்விதத்திலும் மனைவியாக இருந்திராவிட்டாலும் விதவை எனப்பட்டு, ஆயுஃபரியந்தம் உள்ள துன்பங்களுக்குமட்டும் பாத்தியப்பட்டவளாக ஏற்படுகிறாள்.

இது, மனிதஇயற்கைக்கும் ஜீவகாருண்யத்துக்கும் முழுதும்விரோ மானவிஷயமென்பது, ஷை நிர்ப்பந்தத்தில் அகப்படாத இதரதேச தார்களுக்கும் ஜாதியார்களுக்கும் நன்றாய்த்தெரிகிறது. ஆனால் நீடித் வழக்கமென்று அநுஷ்டித்துவருகிற நமக்கோ கிரமமாகத் தோன்று கிறது.

பெண் ருதுவானபின் கல்யாணம்செய்யும்பக்ஷத்தில், அது வாஸ் தவமானகல்யாணமாகி, பெண்ணானவள் தான் மனைவி என்றும், தனக் மாலையிடுபவன் புருஷனென்றும் ஒருதினத்திலாவது அறிகிறாள் என்கி திருப்தியோடு, சிலநாள் சேர்ந்துவாழ்ந்து பிறகு புருஷன் இறந்தாலும் ஆயுசுவரை ஏற்படக்கூடிய துக்கத்துக்கு ஆறுதலாக ஒரு புத்திரனை யாவது ஒருபுத்திரியையாவது அடையலாம் என்கிற ஒரு திருப்தி யிருக்கிறது. ருதுவாவதற்குமுன்செய்யப்படுகிற பால்யவிவாகமும் அதன்காரணமாக ஏற்படக்கூடிய பால்யவைதவ்யமும், வரதக்ஷிணையின் கொடுமையும் குறைய, பத்னி என்கிறபெயரையும் கொஞ்சகால மாவது வாஸ்தவமாகவகித்து, மாதாவாக ஏற்படக்கூடிய நிலைமையை யும் சிலகாலமாவதடைந்து, அநுபவித்து, அப்பால் அவர்கள் விதவை யானால் அது தெய்வச்செயல். ஏனென்றால் விதவைக்கு மறுவிவாகப் செய்யக்கூடாதென்று நம்முடையசாஸ்திரங்களும் வழக்கமும் ஒருமுக மாயிருக்கின்றன.

ஆதலால் மனுஷனுக்கு ஏற்படக்கூடிய துன்பத்தில் மனுஷனுடைய முயற்சியினால் எவ்வளவுதூரம் கூடுமோ அவ்வளவுதூரம் தர்மத்துக் விரோதமின்றி ஏன் துன்பங்களை விலக்கிக்கொள்ளக்கூடாது. தவிரவும், பெண் ருதுவாவதற்குமுன் கல்யாணம்செய்யவேண்டிய அவசியத்தினால் தாக்ஷிண்யத்தின்பேரிலும் பாந்தவ்யத்தினாலும் சிறுபிள்ளைகளுக்கும் கல்யாணம்செய்யும்படிநேரிடுகிறது. சிலபிள்ளைகளின்பெற்றோர்கள் வரதக்ஷிணைக்குஆசைப்பட்டுத் தங்கள்பிள்ளைகளுக்குச் சிறுவயதிலேயே கல்யாணம்செய்விக்கிறார்கள். ஷை காரணங்களினால் ஷை பிள்ளைகளி னுடைய படிப்புக் கெட்டு, அவர்களுடையதேகத்துக்கு வியாதியும் பலக்குறைவும் உண்டாகின்றன.

---

7. ப்ரௌடாவிவாகத்துக்குச் சொல்லப்பட்ட சில இதர ஆக்ஷேபனைகள்.

ப்ரௌடாவிவாகம் செய்வதற்குச் சில அவசியங்களும் நியாயங்க ளும் ஏற்பட்டிருப்பது வாஸ்தவமென்று வைத்துக்கொண்டாலும் அத னால் ஏற்படும் கெடுதல்கள் அதனாலுண்டாகக்கூடிய நன்மைகளுக்கும் மேற்பட்டதென்றும், ஆதலால் அது கூடாதென்றும் புராதனவழக்கக் காரர் அநேகர் ஆக்ஷேபிக்கிறார்கள். அதாவது:—

(1) பெண் ருதுவானபிறகு கல்யாணம்செய்வதாயிருந்தால், அவள், இந்திரியங்கள்சம்பந்தமான வெளித்தோற்றங்களையே முக்கியமாக மதித்து, அந்நோக்கத்துடன் மற்றமுக்கியமான அம்சங்களிற் குறைந்த புருஷனையும் மணம்புரியவிரும்புவாளென்பதும், அதைத்தடுக்கப் பெற் றோர்களுக்குச் சாத்தியப்படாதென்பதும், அதனால் துன்பங்கள்விளையு மென்பதும் ஒரு ஆக்ஷேபனை.

(2) பெண் ருதுவானபிறகு கல்யாணஞ்செய்யாமல் தகப்பன் வீட்டில் 2, 3 வருஷங்கள் இருக்கும்பக்ஷத்தில் அதனால் ஒருக்கால் அபக்யாதி ஏற்படக்கூடுமென்பதும், அதனால் அவளுக்கு விவாகமே யாகாமற்போய்விடக்கூடும் என்பதும் 2-வது ஆக்ஷேபனை.

ஷை 2 ஆக்ஷேபனைகளுக்கும் சரியான ஆதரவு இல்லை. ஏனென் றால், நம்முடைய தேசத்துப்பெண்களெல்லாரும் கோஷாவாக இல்லா விட்டாலும், பரபுருஷர்களுடன் தனித்திருக்கக்கூடாது; சரியானபந் துக்களாயிருந்தாலொழியப் பரபுருஷர்களுடன் சம்பாஷிக்கக்கூடாது; பரபுருஷர்களுடன் கைலாகுகொடுத்தல்முதலிய எவ்வித சம்பந்தமும் கூடாது; தன்வீட்டைவிட்டு அயல்வீடுகளுக்கு அவசியமின்றி அடிக் கடிபோகக்கூடாது என்பவைமுதலிய சாவதானங்கள் ஏற்பட்டிருக்கின் றன. இவைகள் நீங்கலாகப் பெற்றோர்கள் முதலியோருடைய பொது வானகாப்பும் ஒரு பெண்ணினுடைய இளம்வயதில் எப்பொழுதும் அவ சியமாகத்தானிருக்கிறது. "காவலானே பாவையர்க்கழகு" என்று ஔவையாரும் கூறியிருக்கிறார்.

இப்படிப்பட்ட சாவதானங்களுக்குமீறி ஒரு ருதுவான பெண் நடப்பதாயிருந்தால், அவள் கல்யாணம் ஆனவளாயிருந்தாலும் அல்லது ஆகாதவளாயிருந்தாலுமபவாதம் எப்படியும் ஏற்படக்கூடியதுதானே.

அந்த அபவாதத்துக்கு அவளுக்குக் கல்யாணமாகாதது காரணமல்ல. அவளுடைய தவறுதலான தீய ஒழுக்கமே காரணம். பொதுவாக, மேற்கண்ட பாதுகாப்புக்களுக்குள்ளடங்கிய ஒரு ருதுவானபெண்ணானவள், நல்லபுத்தியுடையவளாகவும், பெற்றோர்களுடைய புத்திமதிகளில் நம்பிக்கையும் கீழ்ப்படிதலுமுள்ளவளாகவும், கிரமமானவழிகள் தப்பிநடக்க வேண்டிய தூண்டுதல்கள் இல்லாதநிலைமையிலிருப்பவளாகவும் இருக்கிறாளே ஒழிய வேறில்லை.

ருதுவாவதற்குமுன் கல்யாணமாகி ருதுவானபிறகு ஒருவருஷம் முதல் மூன்றுவருஷங்கள்வரை ருதுசாந்திசெய்யப்படாமல், பெண்கள் தகப்பன்வீட்டிலிருந்துவருகிறார்கள். அவர்களுக்குக் குற்றம் யாதொன்றும் ஏற்பட்டதாய் இல்லை. கல்யாணம் ஆகாமலிருந்தால்மட்டும் ருதுவானபெண்களுக்கு ஏன் குற்றங்கள் கற்பனைசெய்யப்படவேண்டுமோ தெரியவில்லை.

இதனடியில் 3-வது ஆக்ஷேபணையிற் கண்டிருக்கிறபடி இந்திரிய சுகமே அறியாத பெண்ணானவள், மனசிற் களங்கமில்லாதவளாகவே இருக்கவேண்டுமல்லவா. ருதுவானபிறகு மனசும் தேகமும் பக்குவமடைந்து வெகுநாளாகியும், விவாகம்செய்யப்படாமலும் இருந்தும், ப புருஷர்களுடன் தனித்திருப்பதும், அவர்களுடன்பேசுவதும், கைலா கொடுப்பதும், சிரிப்பதும், பெற்றோர்களுடைய நிர்ப்பந்தமின்றிச் சி வயதிலேயே இஷ்டப்படி காற்றுலாவப்போவதும், நாடகம்பார்க்க போவதும், பரபுருஷர்களுடன் ஒரேபள்ளிக்கூடத்திற் படிப்பதும் நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்ற பெண்களுக்குள்ள நான்கு குணங்களையும் ஒழித்து, சுயேச்சையாய்ச் சஞ்சாரஞ்செய்வதும் ஆகி இந்தவழக்கங்களுள்ள பிறஜாதிப்பெண்களுக்குள்ளும் எவ்வளவோ உத்தமிகளிருக்க அப்படிக்கில்லாமல் அநேகவிதமான கட்டுப்பாடுகளு குள் அடங்கியிருக்கிற நம்முடையதேசத்தில் ருதுவான ஒரு பெண் ணுக்குக் கல்யாணமாகாமலிருந்தால்மட்டும் அபவாதமும் துர்நடத்தை யும் ஏற்படுமென்கிறபயத்துக்கு யாதொருகாரணமுமில்லை. இவ்வள பாதுகாப்பையும் மீறி அவள் அபவாதத்துக்குப் பாத்திரமாகும்பக்ஷ தில் அவளை முன் ஒருவன் மணம்செய்திருந்தாலும், மணம்செய்யாமலே இருந்தாலும் வித்தியாசமிருப்பதாக எனக்குத் தோற்றவில்லை.

தங்கள்பெண்களை ருதுவானபிறகு கல்யாணம்செய்துவருகிற பிராமணரல்லாத இதரவகுப்பார்களிற்சிலர், ப்ரௌடாவிவாகம்செய்வதிற் சில அசௌகர்யங்களுள்ளனவென்றும், பிராமணர்கள் பழையவழக்கத்தை மாற்றுவது சரியல்லவென்றும் பத்திரிகைகள் மூலமாக எச்சரிக்கைசெய்துகொண்டுவருகிறார்கள். ஆனால் அந்தவகுப்பார்களுக்குள், பொதுவாக ஸ்திரீகள் பிராமணஸ்திரீகளைப்போலக் கௌரவமாகவும் ஸ்திரீகளுக்குரிய நாணம் முதலிய சன்மார்க்கங்களையுடையவர்களாகவும் இருக்கிறார்களே யொழிய, ப்ரௌடாவிவாகத்தினால் குறைவுள்ளவர்களாயிருக்கிறார்கள் என்று சொல்லமுடியாது.

ஒரு ருதுவானபெண், தாய்தகப்பன் புத்திமதியைக்கேளாமல் இந்திரியவெளித்தோற்ற மயக்கங்களுக்குட்பட்டு யோக்யனானபுருஷனை மணஞ்செய்துகொள்ள ஆக்ஷேபித்தால், அதற்கு ப்ரௌடாவிவாகம் காரணமல்ல. அவளுடைய தீயசுபாவமும், நற்பழக்கமில்லாமையும், வழிதப்பிப்போகும்படி தூண்டக்கூடியவிஷயங்களிலிருந்து அவளைப் பாதுகாக்கும்படியான மேலேசொன்ன சாதனங்களில்லாதிருத்தலுமே காரணமாம்.

ஆதியில், பெண்களின் கல்விவிஷயத்துக்கு இதேமாதிரியான பல பல ஆக்ஷேபணைகளைச் சொல்லிவந்தார்கள். கல்வி என்னும் வெளிச்சமானது புருஷர்களுக்கு எப்படி அவசியமோ அப்படியே ஸ்திரீகளுக்கும் அவசியமென்று இப்பொழுது அநேகமாய் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. வெளிச்சத்தின் ஆதரவைக்கொண்டு, ஒரு மனுஷனாவது ஸ்திரீயாவது தப்புவழியில் நடக்க எத்தனப்பட்டால் அதற்கு வெளிச்சம் காரணமல்ல. அவர்களுடைய துர்ப்புத்தியே காரணம். பரஸ்திரீயை ஒருவன் கெட்ட எண்ணத்துடன்நோக்கினால் அதற்கு அவனுடைய கெட்டசுபாவம் காரணமேயல்லது கண்பேரில் குற்றம் சொல்லலாமா.

அந்த இதரஜாதியார்களுடைய எச்சரிக்கையை ஒரு பெரிய ஆதரவுபோல் நம்மவர்கள் எடுத்துப் பேசுகிறார்கள். எந்தவிஷயத்துக்கும் விலக்கைவைத்துக்கொண்டு வற்புறுத்திப்பேசி ஆக்ஷேபணைசெய்யலாம். அதனால் நாம் பீதி அடையக்கூடாது.

(3) ருதுவாவதற்குமுன் கல்யாணம்செய்யப்பட்ட ஒருபெண் சாந்திமுகூர்த்தம் ஆகாமலே விதவையாய்ப்போய்விட்டால் அவள் இந்

திரியசுகத்தின் நிலைமையை யறியாதவளாகையால், மனசினாலும் தேகத்தினாலும் பாவத்தைச் செய்யாமலிருந்துவிடுவாளென்பதும், ருதுவான பிறகு அவளுக்குக் கல்யாணம்செய்து அதன்பேரில் விதவையாவதாயிருந்தால், இந்திரியசுகத்தை ஒருவாறுதெரிந்து பிற்பாடு அடையப் பெறாததால் அதைச் சிந்தித்துக்கொண்டு மனசினாலும் தேகத்தினாலும் பாவம்செய்வதற்கு ஏதுவாகுமென்பதும் 3-வது ஆக்ஷேபணை.

இது மிகவும் விநோதமான ஆக்ஷேபணையாயிருக்கிறது. ருதுவாவதற்குமுன் கல்யாணமாய்ச் சாந்திமுகூர்த்தம் ஆவதற்குள் விதவையாகப்போகும்பெண்கள், சாந்திமுகூர்த்தத்திற்குப்பின் பலவயதுகளில் ஏற்படும் விதவைகளைவிட மிகவும் சொற்பம். காமவிகாரத்தின்சங்கதியை அறிந்திருந்தாலும், அல்லது அறியாவிட்டாலும், அப்பியாசத்தினாலும் நற்பழக்கத்தினாலும் தெய்வபக்தியினாலும் அபவாத பீதியாலும் விதவைகள் நல்லவழியில்நடக்கிறார்களென்ற வாஸ்தவமும் பெருந்தன்மையுமான வியவகாரத்தைவிட்டுவிட்டு, ருதுசாந்திக்குமுன்விதவையாய்ப்போனவளுக்குக் கிரமமாயிருக்க ஏதோ விசேஷ சௌகர்யமிருக்கிறதென்றும், இந்திரியசுகம் அறிந்தவள் வழிதப்பிப்போவாளென்றும் பேசுகிறவியவகாரம் கொஞ்சமேனும் நியாயமில்லை. பிரத்தியக்ஷ அநுஷ்டானத்துக்கும் விரோதமாயிருக்கிறது.

14,15 வயதுமுதல் 50 வயதுவரை ருதுசாந்தியானபிறகு விதவைகளாய்ப்போனவர்கள் ஆயிரக்கணக்காயிருக்கிறார்களே. அவர்களுடைய மன ஒழிவுக்கும் வைராக்கியத்திற்கும் அடக்கத்துக்கும் ஆக்ஷேபணைக்காரர் என்னகாரணம் சொல்லுவாரோ தெரியவில்லை.

ஒருசாமான் இன்னதென்றே தெரியாதிருந்தாலும் அதை அநுபவிக்கும்படியான சக்தியும் எண்ணமும் உள்ள ஒருவன் இருந்தால் அவனுக்கு அநுபவம் செய்தவனைவிட அதில், பிரமை அளவுக்குமேல் இருக்கும் என்றுகூட வியவகரிக்கலாம்.

ஒவ்வொருவருடையநன்மைகளுக்கும் ஒருதரமாவது ஒரு வஸ்துவினிடத்தில் உள்ள ருசியை அறிவது அல்லது அறியாதிருப்பது காரணமல்ல என்றும், அவர்களுடைய மனத்தூய்மையும் நற்பழக்கமும், நல்ல சகவாசமும் தெய்வபக்தியும் காரணமாயிருக்கின்றனவென்றும், நான் நினைக்கிறேன். (இன்னும் வரும்.)

M. R. ஸ்ரீநிவாஸையர்,

பெரியகுளம்.

ஸ்ரீ:

ருதுமதீவிவாஹ பராமர்சம்.

இதற்குமுன்பாகவைக்கப்பட்டிருக்கும் ருதுமதீவிவாஹம் என்னும் வியாசத்துள், கந்யாவிவாஹத்தைமாற்றவேண்டியதற்காகக் காட்டியிருக்கும் காரணங்களாவன:—

(1) வரதக்ஷிணை அதிகப்பட்டுவருவதைப் போக்கலாமென்பது.

(2) பிள்ளைகளின்படிப்புக்கிருக்குமிடைஞ்சலைத் தீர்க்கலாமென்பது.

(3) ருதுகாலம்வந்துவிடுமென்ற பயத்தினால், தக்கவரனைத்தேடி விவாஹம்செய்விக்க மார்க்கமில்லாதிருப்பதை நீக்கலாமென்பது.

(4) புருஷர்களின் பால்யவிவாகத்தை நிவிர்த்திக்கலாமென்பது.

(5) பிள்ளைகளுக்குக் கல்யாணமாகும்பொழுதே அநுபவயோக்கியமில்லாதிருப்பதைமாற்றி, அநுபவயோக்கியமாயிருக்கச்செய்வது.

(6) எல்லாருக்கும் பரமதுக்ககரமாயிருக்கும்கந்யாவைதவ்யத்தை இல்லாமற்பண்ணலாமென்பது. என்னு மிவைகளே!

இவற்றுள் (1) வரதக்ஷிணையை ஒழிப்பதற்கு ருதுமதீவிவாஹம் சாதகமென்றுசொல்வது பொருத்தமில்லையென்று தோன்றுகிறது. ஏனென்றால் வரதக்ஷிணைகொடுப்பவர்களின்தொகை மிகக்குறைவாயும், அது கொடாதவர்களின்தொகையே மிகுதியாயுமிருப்பதால், குறைந்த எண்ணிக்கையுடையவர்களின்விருப்பப்படி ஜனஸமூகத்தைத்திருத்துவது யுக்தியுக்தமன்று. அன்றியும், வரதக்ஷிணைகொடுப்பவர்களுக்குக் கந்யாவிவாஹம் நஷ்டமுண்டாக்குகிறதென்றுசொல்லவும் இடமில்லை. எப்படியென்றால், ஒருவர் தம் பெண்கல்யாணத்தில் மாப்பிள்ளைக்கு வரதக்ஷிணைகொடுத்தால், அவருக்கே தம் பிள்ளைகல்யாணத்தில் வரதக்ஷிணை கிடைப்பதாயிருப்பதால், அதை அவர்கள் அதற்கு ஈடுசெய்துகொள்ளக்கூடுமாகையால், கந்யாவிவாஹத்தால் அந்தநஷ்ட முண்டாகிறதில்லையென்றே சொல்லலாம். வரதக்ஷிணைக்குத்தக்க கெண்யமுள்ளவரனை விரும்புவோர்கள் கந்யாவிவாஹம்செய்தாலும்சரி, ருதுமதீவிவாஹம்

செய்தாலும்சரி; திருப்தியுடன் வரதக்ஷிணைகொடுக்கக் கடமைப்பட்டவர்களாகவேயிருக்கிறார்கள். ஏனென்றால், தாகந்தீர்க்கும் ஒரே சுபாவமுள்ளதண்ணீரில் முதல்வகுப்பான பனிக்கட்டியுண்ணவிரும்புவோர் அதிகவிலைகொடுப்பதுபோலவே, முதல்வகுப்பு மாப்பிள்ளைகளைத்தேடுமவரும் வரதக்ஷிணைகொடுக்கச் சித்தமாயிருப்பார்களென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் ருதுமதீவிவாஹம் வரதக்ஷிணையை மாற்றுவதற்குச் சாதகமாகுமென்று தோன்றவில்லை.

(2) கந்யாவிவாஹம் பிள்ளைகளின்படிப்புக்கு இடைஞ்சலாயிருக்கிறதென்பதை யோசிப்போமானால், படிக்கும்பொழுதேசெய்துகொள்ளும்கல்யாணம் எதுவும் படிப்புக்கு இடைஞ்சலாகுமென்பதில் ஆக்ஷேபமில்லை. படிப்பைமுடித்துக்கொண்டுதான் கல்யாணம்செய்யவேண்டும் என்னும் நம் முன்னோர்வழக்கத்துக்கு எந்தக்கல்யாணமும் விரோதமாகிறதில்லை. அவ்வழக்கத்தை நாம் விலகிச்செல்லுதலால் இக்காலத்து இருவகைக்கல்யாணங்களும் படிப்புக்கு இடைஞ்சலாயிருக்கின்றன. அவற்றுள், படிப்பின்மத்தியிற்செய்யும் கந்யாவிவாஹத்தைக்காட்டிலும், படிப்பின்மத்தியிற்செய்யும் ருதுமதீவிவாஹமே படிப்புக்கு உடனே பிரதிபெந்தகமாயிருக்குமென்பது யாவராலும் அறியத்தக்கது. இவ்விஷயத்தில், பிள்ளைகளுக்குப் படிப்புமுடிவதற்குள், கல்யாணஞ்செய்யும் தூர்வழக்கத்தையொழித்துச் சாஸ்திரசம்மதமான பழையவழக்கத்தைக் கைக்கொள்ளுவதே சிலாக்கியமாகுமென்று தோன்றுகிறது. ஆகையால் ருதுமதீவிவாகத்திற் பிரவர்த்திப்பதைக் காட்டிலும், மைனராயிருக்கும்பிள்ளைகளுக்குக் கல்யாணஞ்செய்யக்கூடாதென்று சட்டம்செய்துகொள்ள முயல்வோமானால் அதுவே சிறந்த ஆசாரத்திருத்தமாகுமென்று எல்லாராலுங் கொள்ளத்தக்கதாயும் நியாயமாயுமிருக்கும்.

(3) கந்யாவிவாஹத்தில் ருதுகாலம்வந்துவிடுமென்ற பயத்தினால் தக்கவரனைத்தேடிக் கல்யாணஞ்செய்விக்கப் போதுமானசாவகாசமில்லையென்பது சிறிது யோசிக்கத்தக்கதுதான். ஆனால், கந்யாவிவாஹத்தில் எட்டுவயதிலிருந்து பன்னிரண்டுவயதுவரை (அதாவது ருதுகாலத்தளவு) சற்றேறத்தாழ ஐந்துவருடங்களில் தக்கவரன்கிடையாதவர்களுக்கு ருதுவானபிறகு மூன்றுவருடத்துக்குள், தக்கவரன் கிடைக்கக்கூடுமென்று தோன்றவில்லை, ஆகையால் ருதுவாய் மூன்றுவருடத்துக்குள், கட்டாயம் கல்யாணமாகவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லாமலே

ருதுவாய் ஐந்துவருடம்வரை கல்யாணஞ்செய்துகொள்ளலாமென்று, சாவகாசம் கொடுக்கவேண்டியதாயிருக்கிறது. ஐந்துவருஷமென்று ஒரு நிபந்தனையேற்படுத்திக்கொண்டாலும் அந்த நிபந்தனைப்படி ருதுவான ஸ்திரீகளை மேற்பார்த்துப் பரிசோதிக்கும் அதிகாரம் ஒருவருக்குமில்லாமையால், கூடவே இரண்டுமூன்றுவருஷங்கள் தள்ளவும் கூடும். புதியநாகரிகவிருத்தியாலும் கல்வியறிவாலும் மேஜராய்விடுவதாலும் சிலபெண்கள் மேலானவரனில்லையென்று மேல்நாட்டார்போலக் கல்யாணஞ்செய்துகொள்ள இஷ்டமில்லாமலேயிருந்தாலும் இருக்கவும் இடம்கொடுப்பதாயுமிருக்கும். அன்றியும், பெண்கள் எல்லோருமே தக்கவரனைவிரும்புமாசையுடையவர்களாயிருப்பாராகையால் பெண்களுக்குக்கல்யாணஞ்செய்து தீரவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லாதபக்ஷத்தில், தக்கவரன்கிடையாமல் அநேகம் பெண்களும், பெண்களிணங்காமையால் அநேகம்புருஷர்களும் கல்யாணமில்லாதவர்களாகவே காலந்தள்ளவேண்டியவராவார்கள். ஆகையால், பெண்களுக்குக் கல்யாணஞ்செய்தேதீரவேண்டுமென்னும் நிர்ப்பந்தமுள்ளவரை மேலானவரனைத் தேடிக் கல்யாணம்செய்வதற்கு ருதுமதீவிவாகமும் சாதகமாகமாட்டாதென்று தோன்றுகிறது.

(4) புருஷர்களின் பால்யவிவாஹத்தை நிவர்த்திக்கலாம் என்பதை யோசிப்போமானால், புருஷர்களுக்குக் கல்யாணவயதைக் கொஞ்சம் தள்ளிவைத்துக்கொள்ளக்கூடுமென்றுதோன்றியபோதிலும், பதினெட்டுவயதுள்ள ருதுவானபெண்ணை அதேவயதுள்ள புருஷன் கல்யாணஞ்செய்யக்கூடாதென்றுவிலக்க மார்க்கமில்லாமையால் அது பலபர்யவஸானத்தாற் பால்யவிவாஹ பர்யாயமாகவேயிருக்கிறது. அன்றியும், ருதுமதீவிவாஹத்தைக்கைக்கொண்டிருக்கும் சிலஜாதியார்களில் மைனராயிருக்கும் பிள்ளைகளுக்கு மைனராகச் சிலபுத்திரர்களிருப்பதாகக் கோர்ட்டுவியவகாரங்களி லங்கீகரிக்கப்பட்டிருப்பதால், கேவலம் ருதுமதீவிவாஹமே பால்யவிவாஹத்தை மாற்றுமென்றுகொள்வதற் கிடமில்லாதிருக்கிறது. பிள்ளைகளின்படிப்பை முடித்துக்கொண்டு செய்யும் கந்யாவிவாஹமானது, புருஷர்களின் பால்யவிவாஹத்தாலுண்டாகுந் தீமைகளைச் சிறிது போக்கவல்லதாயிருக்கிறது. புருஷர்களின் பால்யவிவாஹமாவது சரிவயதுள்ளபெண்ணைக் கல்யாணம்செய்வதாம். அதனால் என்னதீமையென்றால், பெண்கள் 40-வயதுக்குள் விஷய

நிவிர்த்தியையும், புருஷர்கள் 60-வயதுவரை விஷயசாபல்யத்தையும் உடையவர்களா யிருப்பதாலும், பெண்களுக்குப்போலப் புருஷர்களுக்குப் பரத்தமை பிரபலதோஷமாகக் கொள்ளப்படாதிருப்பதாலும் 40 வயதுப்புருஷர்கள் பெரும்பாலார் சரீரபாதையால் துர்வ்யாபாரத்திற் பிரவிர்த்திக்கிறார்கள். வயதுசென்ற அவரது துர்நடத்தைகண்ட வயதுள்ள அவர்பிள்ளைகளும் அவருக்கடங்கிநடவாது மனஞ்சென்றவாறு செல்லுதலே குலதர்மமாகமதித்துத் துர்நடத்தையுடையவராகிறார்கள். அப்பொழுது பிள்ளைகளைக் கண்டித்து நல்வழியிற்செல்லச் செய்யத் தகப்பன்மார் வாயில்லாதவராகிறார்கள். அதனால் அவர் குடிவாழ்க்கைக்கே கேடுண்டாகத்தக்கதாயிருக்கிறது. படிப்பை முடித்துக்கொண்டுசெய்யும் கந்யாவிவாஹத்தில், பெண்ணின்வயதிலிருந்து பிள்ளை வயது 10-னுக்குமேல் வித்தியாசமேற்படுமாகையால், சந்ததியை நல்வழிப்படுத்தப் பிதா யோக்கியதையுள்ளவனாயிருக்க மார்க்கமிருக்கிறது.

(5) பிள்ளைகளுக்குக் கந்யாவிவாஹத்தில், கல்யாணகாலத்திலேயே அதன்பயனையநுபவிக்க மார்க்கமில்லாத குறைதீர்ப்பதைப்பற்றி யோசித்தால் ஒருவிதத்தில் ருதுமதீவிவாஹகக்ஷியானது பிள்ளைகளுக் கநுகூலமாயும், கந்யாவிவாஹகக்ஷியானது பெண்களுக்கு அநுகூலமாயுமிருக்கின்றன. எப்படியென்றால், ருதுமதீவிவாஹத்தில், பெண்கள் அநுபவயோக்கியமான காலங்களைக் கல்யாணமாகும்வரை சற்றேறத்தாழ மூன்றுவருஷம் இழக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். கந்யாவிவாஹத்தில் அவர்கள் அந்தக்காலத்தை வியர்த்தமாக்கிக்கொள்ள வேண்டியது அவசியமில்லை. ஆகையால் இவ்விஷயத்தில், பரத்தமைக்குரியரல்லாதபெண்களுக் கநுகூலஞ்செய்வதைவிட்டு அதற்கு விபரீதமாகப் புருஷர்களுக்கு அநுகூலம்செய்யும் ருதுமதீவிவாஹம் நியாயமற்றதாயிருக்கிறது. மற்றொருவிதத்தில் இருவருக்குமே யநுகூலமில்லாதிருக்கிறது. எப்படியென்றால், பிள்ளைகள் படித்து முடித்துவரச் சற்றேறத்தாழ இருபத்திரண்டுவயது சென்றுவிடுகிறது. அதன்பிறகு உடனே ருதுமதியைக் கல்யாணம்செய்துகொள்பவன், தனக்கு ஜீவனோபாயமான ஒருவேலையை ஓடியாடித்திரிந்து திறப்படுத்திக்கொண்டு குடிவாழ்க்கைக்குவேண்டிய சௌகரியம்செய்துகொள்ளப் பின்பும் ஒரு மூன்றுவருடம்வேண்டியிருப்பதால் அதுவரை இருவருக்கும் திருப்திகரமான சமாகமமில்லாமற்போகிறது. கந்யாவிவாஹத்தில் இப்படிக் கஷ்டமுண்டாக இடமில்லையென்றுதோன்றுகிறது.

162399

(6) இனிப் பால்யவைதவ்யத்தை ருதுமதீவிவாஹத்தால் மாற்றலாமென்பதைப்பற்றி யோசிப்போம். பால்யவைதவ்யமென்பது இரண்டுகக்ஷியிலுமுள்ள எல்லாராலும் பரிதபிக்கத்தக்கது. ருதுவானபின்பும் முன்பும் இப்போதுள்ளவழக்கத்திற் சம்பவிக்கக்கூடியதாயிருக்கிறது. ருதுவானபின்புண்டாகக்கூடியதைத் தெய்வச்செயல் என்று இரண்டுகக்ஷியாரும் சகித்துக்கொள்ள இசைவுடையவர்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை. கந்யாவிவாஹகக்ஷிமட்டும் கந்யாவைதவ்ய துக்கத்தையும் அதிகமாகச் சஹிக்கவேண்டியதாயிருக்கிறது. ருதுமதீவிவாஹகக்ஷியானது, இந்தக் கந்யாவைதவ்யத்தையும் அதனாலுண்டாகும் துக்கத்தையும் தோன்றவொட்டாமலடிக்குஞ் சாமர்த்தியமுடையதென்பது ஒவ்வொருவரும் சொல்லாமலே தெரிந்துகொள்ளத்தக்கது. ஆதலால் இந்த ஒருவிஷயத்தில்மட்டும் ருதுமதீவிவாஹகக்ஷி ஜெயமுடையதாயிருக்கிறதென்பது யாராலும் மறுக்கத்தக்கதன்று. ஆகையால், கந்யாவைதவ்யத்தைப்போக்குவதாகிய பிரயோஜனத்தைமட்டும் நோக்கும்போது ருதுமதீவிவாஹகக்ஷி எல்லாராலும் ஆதரிக்கத்தக்கதென்றே தோன்றுகிறது. ஆனால் இது அறிவால் மிக்கோர்களால் வெகுகாலமாய்க்கைக்கொள்ளப்பட்ட ஜனசமூகத்தின் ஆசாரத்தை மாற்றுவதாயிருப்பதால், இவ்விஷயத்தில் யோசிக்கவேண்டியவிஷயங்களையெல்லாம் நன்றாய் யோசித்துத்தீரவேண்டும். அப்படி யோசித்து முடித்துக்கொண்டு மாற்றவேண்டியதாயேற்பட்டுவிட்டால் முன்னோர் எவ்விதமாகப் பூர்வாசாரங்களைக் காலாநுகுணமாக மாற்றியிருக்கிறார்களோ அந்தமுறையில்நின்றே நாமும் மாற்றிக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம்.

யோசிக்கவேண்டியவிஷயங்கள்:—

(1) நம் முன்னோர்கள் கந்யாவிவாஹம் இவ்விதமான துக்கசம்பவத்துக்கு இடமுள்ளதென்பதை அறியாதவர்களா?

(2) அறிந்திருந்தால் அவர்கள்சந்ததியாராகிய நமக்கு என்ன அநுகூலத்தைக்கருதி இந்தக்கஷ்டத்தைவஹிக்கும்படிசெய்திருக்கிறார்கள்? கந்யாவைதவ்யமென்பதென்ன? ருதுமதீவைதவ்யமென்பதென்ன? இவ்விரண்டுக்குமுள்ளவித்தியாசங்களென்ன? அவை உண்மையாகவே ஸஹிக்கத்தகாதனவா?

(3) விவாஹநிபந்தனமேற்பட்ட முற்காலத்தில் முதலிலிருந்தது கந்யாவிவாஹமா? ருதுமதீவிவாஹமா?

(4) ஆதியிலுள்ளது ருதுமதீவிவாஹமாயிருந்தால் அது எல்லார்க்கும் அநிஷ்டமான கந்யாவிவாஹமாய் மாறுவதற்கான தக்ககாரணங்களென்ன?

(5) இப்போது கந்யாவிவாகத்தைமாற்றுவதற்கு பிராமண சமுதாயத்தில் இதுவரையில்லாத புதியகாரணங்களென்ன?

(6) தக்ககாரணங்களைக்கொண்டு முன்னோர்கள் பூர்வாசாரங்களை எந்தவிதமாய் மாற்றிவந்திருக்கிறார்கள்? அவர்கள் ஆசாரங்களை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவந்தவழிகளெவை?

(7) நாம் இப்போது எந்தவழியாக அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரவேண்டும்?

என்பன முதலியனவாக இன்னும் மேதாவிகளால் விசாரிக்கத்தக்கனவாகத்தீர்மானிக்கப்படும் இஷ்டங்களையேற்படுத்திக்கொண்டு, அவற்றையெல்லாம் ஸவிஸ்தாரமாய்விசாரித்து உண்மைதெரிந்துகொள்ளாது மேலெழுந்தபடி சிலருக்குத்தோன்றும் அநிஷ்டங்களைமட்டுங் கண்டு ஸஹிக்கமாட்டாமல் பூர்வாசாரத்தைக் கைவிடுவதானது காமசாரமாகுமேயல்லது நெறிமுறையாகுமென்று தோன்றவில்லை.

---

7. "ப்ரௌடாவிவாஹத்துக்குச் சொல்லப்பட்ட சில இதர ஆக்ஷேபணைகள்" என்ற தலைப்பின்கீழ்ச்சொல்லும் ஆக்ஷேபங்கள் துர்ப்பலமாயும் சமாதானங்கள் பெரும்பாலும் அங்கீகரிக்கத்தக்கனவாயுமிருக்கின்றன. ஆயினும் "தங்கள்பெண்களை ருதுவானபிறகு கல்யாணம் செய்துவருகிற பிராமணரல்லாத இதரவகுப்பார்கள்சிலர், ப்ரௌடாவிவாஹம்செய்வதிற் சில அசௌகர்யங்களுள்ளனவென்றும், பிராமணர்கள் பழையவழக்கத்தைமாற்றுவது சரியல்லவென்றும் பத்திரிகைகள் மூலம் எச்சரிக்கைசெய்துவருகிறார்கள்" என்று சொல்லிக்கொண்டு அதை ஆக்ஷேபிக்கும் யுக்திகள்மட்டும் திருப்திகரமாயில்லை. ஏனென்றால் நமக்குத்தோன்றும் அந்த யுக்திகளொன்றும் அவர்களுக்குத் தோன்றமாட்டாதென்றுசொல்ல இடமில்லையாகையாலும், அவர்கள் ருதுமதீவிவாஹத்தை விரோதிக்கவேண்டியவர்களில்லாமையாலும், ப்ரகிருதவியவஹாரத்தில் நடுவுநிலைமையுடையவர்களாயிருப்பதாலும்

ருதுமதீவிவாஹத்தில் அநுபவமில்லாத நமக்கு, அநுபவமுள்ள அவர்கள்சொல்லும் ஹிதவசனமானது வேதவாக்கியம்போலப் போற்றத்தக்கதென்றுதோன்றுகிறது. அன்றியும், உண்மையில் ருதுமதீவிவாஹம் தீமையில்லாததாயும், கந்யாவிவாஹம் தீமையுள்ளதாயுமிருக்குமானால், சாஸ்திரசம்மதமாயும் அநுபவசித்தமாயும் அநுகூலமாயுமுள்ள ருதுமதீவிவாஹத்தையே அவர்கள் நியதமாய்வைத்துக்கொண்டு, கந்யாவிவாஹத்தைச் சிறிதும் கைக்கொள்ளாதிருக்கவேண்டுமல்லவா? அப்படியில்லாமல் அவர்கள், ஸ்வாநுபவத்திற் கந்யாவிவாஹத்தையும் வைத்துக்கொண்டிருப்பதால், கந்யாவிவாஹம் ருதுமதீவிவாஹத்தைக்காட்டிலும் நல்லதென்று வீணாகப்பேசுவதாய்நினைக்கவும் இடமில்லையென்று தோன்றுகிறது. ஆகையால் அவர்கள் அப்படிச்சொல்லுவதற்குத் தக்ககாரணமின்னதென்பதை நாம் அறிந்துகொள்ளாமலே தள்ளிவிடுவது யுக்தமாகுமென்றுதோன்றவில்லை.

இனி, அதன்காரணத்தையும் சிறிதாராய்வோம். ருதுமதீவிவாஹமென்னும் இவ்வாசாரத்திருத்தத்தைக் கைக்கொள்ள இசைபவர்கள் பெரும்பாலும் செல்வவான்களாயும், இசையாதவர்கள் பெரும்பாலும் வறியவர்களாயுமே யிருக்கிறார்கள். இதைக்கொண்டு பார்ப்போமானால், செல்வவான்களான பிராமணர் ருதுமதீவிவாஹத்திலுள்ள பாதகங்களை அறியமுடியாதவர்களாயும், வறியவர்களாகிய பிராமணர்களே அவற்றையறிபவர்களாயுமிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. அதாவது செல்வமிருந்தால் அதன்பாதகம் தோன்றமாட்டாதென்றும், வறுமையிருந்தால் அதன்பாதகங்கள் தோன்றுமென்றும் அறியத்தக்கதென்பதாம். எப்படியென்றால், வறுமையென்பது பொதுவாகவே எல்லாவகுப்பாருக்குமே பொல்லாததென்று தெரிந்தபோதிலும் பொருள்தேடும் தொழில்களிற் பலவகையாகத் தடுக்கப்பட்டும், சுபாசுபங்களில்திகச்செலவுசெய்யவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட்டுமிருக்கும் பிராமணவகுப்பாருக்கு மிகவும் கொடுமையுடையதாயிருக்கிறது. இதரஜாதியார்களுக்கு வறுமைவந்தகாலத்தில் சிறுகுழந்தைமுதலவர்களாணும்பெண்ணும் எல்லாரும் எந்தவேலைகளையும் சொந்தவேலையாகவாவது கூலிவேலையாகவாவதுசெய்து பொருள்சம்பாதித்துக் கொள்ளவும், சுபாசுபங்களிலதிகச்செலவுசெய்துதீரவேண்டிய நிர்ப்பந்தமில்லாமையால், கிடைத்தபொருளைக்கொண்டு மரியாதையாய்க் காலம்

கழிக்கவும் மார்க்கமிருக்கிறது. பிராமணர்களுக்கு அப்படியானவழக்க ஏற்படாதிருப்பதால் அது ஏற்படும்வரை ருதுமதீவிவாஹம் செய்ய சாத்தியமில்லாததாயிருக்கிறது. ஏனென்றால் ஒவ்வொரு வறியவன் வீட்டிலும் பெரும்பாலு மாண்பிள்ளையின்சம்பாத்தியத்தாலே குழந்தை களும், கிழவர்களும், பெண்பிள்ளைகளும் ஜீவிக்கவேண்டியவர்களாயிரு கிறார்கள். அந்தநிலையில் ருதுமதீவிவாஹத்துக்கு இணங்குவானுை ஒவ்வொருபெண்மக்களையும் பதினெட்டுவயதுவரை வைத்துக்காப்பா றுவது மிகவும் கஷ்டசாத்தியமாயிருப்பதோடு தாய்தகப்பனிழந்தபெண் களுக்குத் தக்கஆதரவில்லாமற்போவதாலும், அச்சிறுபெண்கள் தாமே யொருமுயற்சிசெய்துஜீவிக்க மார்க்கமில்லாதிருப்பதாலும் அப்படிப் பட்ட பெண்பாலோர்கெதி நிர்க்கெதியாய் அவர்கள் மனம்போன போக்கே நடக்கவேண்டியவர்களாய்விடுவார்கள். செல்வவான்களுக்கு இப்படியானகஷ்டத்துக் கிடமில்லாமையால், ருதுமதீவிவாஹம் அநு கூலமாகவே தோன்றலாம். ஆனால், அவர்கள்செல்வம் சாஸ்வதமாய் நிலைநிற்கமாட்டாதாகையால் அவர்கள் சந்ததியாரும் வறுமையுற்ற போது இதேகெதி அடைவார்களென்பதிற் றடையில்லை. கந்யா விவாஹவிஷயத்திலோ இப்படிப்பட்ட தீங்குண்டாவதற்கு இடமில்லை யென்று சொல்லலாம். எப்படியென்றால், கந்நிகைக்குச் சுமார் பத்துவயதுக்குள், கல்யாணம்நடப்பதால் அதுவரை எப்படிப்பட்ட வறியகுடும்பத்தாரும் சோபனத்திரவியம்வாங்கும் பிரதிப்ரயோஜனத் தைப்பொறுத்தாவது அவளைச் சம்ரக்ஷணைசெய்ய இடமிருக்கிறது. விவாஹமாகவும் பிறந்தவீட்டார் சம்ரக்ஷணைசெய்யும் சக்தியுள்ளவர்க ளாயிருந்தால், பின்னுஞ் சிலகாலம் பிறந்தவீட்டிலிருக்கலாம். சக்தி யற்றவர்களாயிருப்பார்களாயின், பணச்செலவுசெய்து கல்யாணஞ் செய்தபுருஷன் பாதுகாத்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாகச் சன்னத் தனாயிருக்கிறான். ஆதலால் அவள் நிர்க்கெதியாக இடமில்லாம லிருக்கிறது. இதனால் என்ன ஏற்படுகிறதென்றால், பிராமணவகுப்பில் வறுமைவந்தகாலத்தில் 10 வயதுமுதல் ஆணும்பெண்ணும் எந்தவேலை யுஞ்செய்து ஜீவித்துக்கொள்ளலாம் என்ற வழக்கம் ஏற்படும்வரை பிரா மணவகுப்புக்கு ருதுமதீவிவாஹம் சாதகமாகமாட்டாதென்பதாம்.

திரு. நாராயணையங்கார்,
பத்திராதிபர்

ரஸாயன நூல்.

CHEMISTRY.

செந்தமிழ் (தொகுதி-௧௪ பகுதி௨-ல்) ௭௪-ஆம்பக்கத் தொடர்ச்சி.

அத்யாயம்—21.

லோஹங்கள்.

Metals.

ரஸாயனமூலங்கள், லோஹங்கள் எனவும் அலோஹங்(Non Metals)கள் எனவும் இருவகையாய்ப் பிரிக்கப்படும். அலோஹங்களை பற்றி முன் ப்ரகரணங்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றது.

லோஹ-அலோகங்களுக்குள்ள வித்யாஸங்கள்.

பௌதிக(physical) வித்யாஸங்கள்:—

(1) அலோஹங்களைப்பார்க்கிலும் லோஹங்களில் ஒருவித ப்ர காசமும்,

(2) உறுதியும்,

(3) வளையுந்தன்மையும் இருக்கின்றன.

லோஹங்களின்தன்மைகள்:—எல்லாலோஹங்களுக்கும், ப்ரகா சம், வளைவு, தகடாகுந்தன்மை, உறுதிமுதலான குணங்கள் இருப்ப தில்லை. லோஹங்களைப்பொடியாக்கிவிட்டால் அவைகளின் பளபளப்பு குறைந்துவிடும். தாம்ராக்ஸிஜத்திலிருந்து பிரிக்கப்படும் தாம்ரம் கபில வர்ணமாயிருக்கும். சில லோஹங்கள் சிலசிலநிலைமைகளில் நொறுங்கு தன்மையடைகின்றன. சிலலோஹங்கள் உஷ்ணவாஹினிகளாகவும் மின்சாரவாஹினிகளாகவும் இருக்கின்றன. சிலலோஹங்கள்கலந்து கலப்புக்(alloys)கள் ஆகின்றன. நாகமும் தாம்ரமும் கலந்து பித்தளை யுண்டாகின்றது. பாதரஸத்துடன்கலந்துண்டாகும் கலப்புக்களுக்கு ரஸக்கலப்புக்(amalgam)கள் என்றுபெயர்.

ரஸாயனவித்யாஸங்கள்.

அலோஹங்கள் அமிலாக்ஸிஜங்களாக ஆதாரங்களாகவும், லோ ஹங்கள் தாரகாக்ஸிஜங்களாக ஆதாரங்களாகவும் இருக்கின்றன. ஆனால் தகரம் முதலான சிலலோஹங்கள் இருவகைஆக்ஸிஜங்களும் ஆகின்றன

லோஹங்களைப்பற்றிய சிலவிவரங்கள்.

(1) லோஹங்கள் அமிலங்களுடன்கலக்கையில், அவைகளிலுள்ள ஹைத்ரத்தைப்பிரித்துவிட்டு, அதன் ஸ்தானத்தில் தாம் சேர்ந்து அந்தந்த லோஹஉப்புக்கள் ஆகின்றன.

உதாரணம்.

தகரம் + 2க்ளோரோஹைத்ரம் } = { 2 ஹைத்ரம் தகரக்ளோரம்

$$Sn+2\,HCl=H_2+Sn\,Cl_2.$$

(2) உப்புக்களைத் தண்ணீரிற்கரைத்து மின்சாரப்ரயோகஞ்செய்தால், அவ்வுப்புப் பிரிந்து அதிலுள்ள அலோஹசத்து நேர்முனைப்பக்கத்திலும், லோஹசத்து எதிர்முனைப்பக்கத்திலும் வந்தடையும்.

குறிப்பு:—நேர்முனை = Positive pole.

எதிர்முனை = Negative pole.

பரிவர்த்தனம் (Displacement).

உப்பிலுள்ள லோஹத்தை இன்னொருலோஹம்பிரித்து, அந்த ஸ்தானத்தில் தான்கலந்து புதியலோஹ உப்பாவதுமுண்டு. இத்தன்மைக்குத்தக்கவாறு லோஹங்களை வகுப்பதுமுண்டு. உதாரணம்:— இரும்புஉப்பு தாம்ரஉப்புக்களிலுள்ள, இரும்புதாம்ரங்களை மக்னீஷியம் பிரித்து, மக்னீஷியஉப்புக்கள் உண்டாகும். அதேமாதிரி இரும்பு தாம்ரத்தைப் பிரித்துவிடும். இக்குணத்திற் சிறந்தவை ஸோடியமும், பொடாஸியமும்.

அத்யாயம்—22.

ஸோடியம்.
Sodium.
[Na]

ஸோடியம் என்பது உறுதிக்குறைவும் மிருதுவுமுள்ள ஒரு லோஹமூலம். அது தண்ணீரில் மிதக்கும். அதைக் கத்தியால் வெட்டலாம். அது பாதரஸத்திற்கரைந்து ஸோடியரஸக்கலப்பு ஆகின்றது.

எச்சரிக்கை. ஸோடியம் பொடாஸியம் என்னும் லோஹங்களைக் கையாடல் ஆகாது. அவை தண்ணீரிற்பட்டால் ரஸாயனப்பிரிவுண்டாகுமாகையால் மண்ணெண்ணெயில்தான் காப்பாற்றிவைக்கவேண்டும். ஸோடியம் தனிப்பொருளாய் அகப்படுவதில்லை.

ஸோடியகல்பங்கள் பலவாறாக ப்ரக்ருதியில் அகப்படுகின்றன. அவைகள் மிக உபயோகமானவை. நாம் உண்ணும் கறியுப்பு ஸோடியமும் க்ளோரமும் கலந்த ஒரு கல்பம்.

ஸோடா.
Soda.

ஸோடா அல்லது ஸோடியாக்ஷிஜம், ஒரு பிறவிச்சரக்கு. இதிலுள்ள ஆக்ஷிஜனை உஷ்ணத்தாற்பிரித்தால், சோடியம் என்னும் லோஹமூலம் மிஞ்சிவிடும். ஸோடியத்தை ஒருகரண்டியில்வைத்துக் காய்ச்சினால், முதலில் அது உருகிப் பிறகு தீப்பற்றிக்கொண்டு மஞ்சள்நிறமாய் எரியும். அப்பொழுது பக்கத்திலுள்ள ஆக்ஷிஜனுடன்கலந்து ஸோடியாக்ஷிஜம் வெள்ளைப்புகையாய் வெளிப்படும்.

ஸோடியம் ஹைத்ராக்ஸிஜம்.

ஸோடியம் தண்ணீரிற்பட்டவுடன் தண்ணீரிலுள்ள ஹைத்ரமும் ஆக்ஷிஜனும்பிரிந்து, ஸோடியம் ஹைத்ராக்ஷிஜமும், ஹைத்ரமும் உண்டாகும். உதாரணம்:—

2 ஸோடியம் + 2 ஜலம் } = { 2 ஸோடியம் ஹைத்ராக்ஷிஜம் + 2 ஹைத்ரம்.

$$2\,Na+2\,H_2O=2\,Na\,OH+H_2$$

இது தண்ணீரிற்பட்டவுடன் சிலசமயங்களில் வெடிப்பதுமுண்டு. ஆகையாற் சிதறிப்போகாமல் ஜாக்ரதையாய்க் கையாடல்வேண்டும். இது ஒரு எரிகாரம். சலவைச்சோடாவிலிருந்தும் இதை எடுப்பதுண்டு.

உதாரணம்:—

சலவைச்சோடா + சுண்ணாம்புநீறு } = { 2 ஸோடியம் ஹைத்ராக்ஷிஜம் + சுண்ணாம்பு.

குறிப்பு:— சுண்ணாம்பு = Quicklime.
சுண்ணாம்புநீறு = Slaked lime.
ஸோடியம் ஹைத்ராக்ஸிஜம் = ஸோடியம் எரிகாரம்.

சலவைச்சோடா.

Sodium Carbonate.

[Na_2 CO_3]

மறுபெயர்-பூநீறு என்று சொல்லப்படும். இது ஒரு இளங்காரம். இது ஸ்படிகரூபமாயிருக்கும். திறந்துவைத்தாற் காற்றுக்குடித்துவிடும். ஸோடியம் எரிகாரத்திற் கரித்வயாக்ஸிஜத்தைச்செலுத்தினாற் சலவைச்சோடாவும் ஜலமும் உண்டாகும். இது பச்சைலிட்மஸைச் சிவப்பாக்கும். இது சுண்ணாம்புநீறுடன்கலந்து சீமைச்சுண்ணாம்பு உண்டாக்கும்.

முறை:—ஸோடியம் எரிகாரம் + கரித்வயாக்ஸிஜம் } = { சலவைச்சோடா + ஜலம்

$$2\ Na\ OH + CO_2 = Na_2\ CO_3 + H_2O.$$

சலவைச்சோடாவும் க்ளோராமிலமுங் கலந்தாற் கறியுப்பும், கரித்வயாக்ஸிஜமும், ஜலமும் உண்டாகும்.

முறை:—சலவைச்சோடா + 2 க்ளோராமிலம் } = { 2 கறியுப்பு + கரித்வயாக்ஸிஜம் + ஜலம்

$$Na_2\ CO_3 + 2\ Hcl = 2\ Na\ cl + CO_2 + H_2O.$$

ரொட்டிச்சோடா.

Baking Soda.

[$Na\ H\ CO_3$]

சலவைச்சோடாவைத் தண்ணீரிற்கரைத்து அதிற் கரித்வயாக்ஸிஜத்தைச் செலுத்தினால், ரொட்டிச்சோடா உண்டாகும்.

முறை:— சலவைச்சோடா + ஜலம் + கரித்வயாக்ஸிஜம் } = 2 ரொட்டிச்சோடா.

$$Na_2\ CO_3 + H_2O + CO_2 = 2\ Na\ H\ CO_3.$$

அல்லது $2\ Na\ O\ H + 2\ CO_2 = 2\ Na\ H\ CO_3.$

கறியுப்பு.

Common Salt.

[Na cl]

பரிபாஷை—க்ளோரோஸோடியம்.

கறியுப்பு, சாதாரணமாய்க் கடல்நீரிலும், சில மண்களிலும் பாறைகளிலும் கலந்து அகப்படும். இது ஸோடியமும் க்ளோரமும் கலந்த ஒரு கல்பப்பொருள்.

செய்முறை:—க்ளோரோஹைத்ரவாயுவுடன் ஸோடியத்தைக்கலப்பதால், ஹைத்ரம் பிரிந்து க்ளோரோஸோடியம் என்னும் கறியுப்பு உண்டாகும்.

ஸோடியம் + க்ளோரோஹைத்ரம் } = { ஹைத்ரம் + கறியுப்பு.

$$Na + Hcl = Na\ cl + H.$$

குறிப்பு. க்ளோரோஹைத்ரம் = க்ளோராமிலம் = Hydrochloric Acid.

ஸோடியம் க்ளோரஜம்.

Sodium Chlorate.

[$Na\ cl\ O_3$]

ஸோடியம்ஹைத்ராக்ஸிஜத்துடன் க்ளோரத்தைக்கலப்பதால், க்ளோரோஸோடியமும், ஸோடியம்க்ளோரஜமும் உண்டாகும்.

முறை:— 6 க்ளோரம் + 6 ஸோடியம்ஹைத்ராக்ஸிஜம் } = { ஸோடியம்க்ளோரஜம் + 5 க்ளோரோஸோடியம் + 3 ஜலம்.

$$3\ cl_2 + 6\ Na\ OH = Na\ cl\ O_3 + 5\ Na\ cl + 3\ H_2\ O.$$

சில்லியுப்பு.

Chili Saltpetre.

பரிபாஷை— { ஸோடியம்நைத்ரஜம். Sodium Nitrate.

இது அநேகமாய் வெடியுப்பை ஒத்திருக்கும். சில்லியென்னும் தேசத்தில் விசேஷமாய் அகப்படுவதால் இதற்கு இப்பெயர் அமைந்தது. ஸோடியம்ஹைத்ராக்ஸிஜத்தை நைத்ராமிலத்துடன்கலந்தால் இவ்வுப்பு உண்டாகும்.

முறை:—ஸோடியம்ஹைத்ராக்ஸிஜம் + நைத்ராமிலம் } = { சில்லியுப்பு + ஜலம்.

$$Na\,OH + H\,NO_3 = Na\,NO_3 + H_2O.$$

அமிலஉப்பு, சுத்தஉப்பு.
Acid, Salts and Normal Salts.

இப்ரகரணத்தில் இவ்விருவகை உப்புக்களுக்குமுள்ள வித்யாஸத்தை யறிந்துகொள்ளவேண்டும். சுத்தஉப்பில் ஹைத்ரமேகிடையாது. அது நிஷ்காரமாயிருக்கும். அமிலஉப்பில் கொஞ்சம் ஹைத்ரமிருக்கும். உதாரணம்:—

ஸோடியம்கந்தஜம் ($Na_2\,SO_4$) சுத்தஉப்பு.

ஸோடியம்ஹைத்ரோகந்தஜம் ($Na\,H\,SO_4$) அமிலஉப்பு.

முறை:—கறியுப்பு + கந்தாமிலம் } = { ஸோடியம்ஹைத்ரோகந்தஜம் + க்ளோராமிலம்.

$$Na\,cl + H_2SO_4 = Na\,H\,SO_4 + H\,cl.$$

கறியுப்பு + ஸோடியம்ஹைத்ரோகந்தஜம் } = { ஸோடியம்கந்தஜம் + க்ளோராமிலம்.

$$Na\,cl + Na\,H\,SO_4 = Na_2\,SO_4 + H\,cl.$$

குறிப்பு: $Na_2\,SO_4$ = க்ளாவர் உப்பு. (Glanbor's salt)

அத்யாயம்—23.
பொடாஸியம்.
Potassium.
[K]

பொடாஷியமும் ஸோடியமும் ஓரினத்தைச்சேர்ந்தவை. அநேகமாய் ஸோடியத்தின் தன்மைகள் பொடாஷியத்துக்குமுண்டு.

பொடாஸியம்எரிகாரம்.
Potassium Hydrogen.
[K O H]

பொடாஷியம் தண்ணீரிற்பட்டவுடன் ரஸாயனமாறுபாடுகள் ஏற்படுகையில், ஸோடியத்தைக்காட்டிலும் அதிக உஷ்ணமுண்டாகும். அதனால் தண்ணீரிலிருந்துபிரிந்த ஹைத்ரம் பற்றி எரியும். தண்ணீரிலுள்ள ஆக்ஸிஜனும் ஒருபங்கு ஹைத்ரமும் பொடாஷியத்துடன்கலந்து பொடாஷியம் ஹைத்ராக்ஸிஜம் என்னும் எரிகாரமுண்டாகும்.

பொடாஷியம் + ஜலம் } = { பொடாஷியம்ஹைத்ராக்ஸிஜம் + ஹைத்ரம்.

$$K + H_2O = KHO + H.$$

பொடாஸியம்க்ளோரஜம்.
Potassium Cholorate.
[K cl O_3]

முற்கூறிய பொடாஷியம்எரிகாரத்திற் க்ளோரத்தைக்கலந்தால், பொடாஸியம்க்ளோரஜமும் பொடாஸியக்ளோரமும் ஜலமும் உண்டாகும்.

முறை:—

6 பொடாஷியம்ஹைத்ராக்ஸிஜம் + 6 க்ளோரம் } = { பொடாஷியம்க்ளோரஜம் + 5 பொடாஷியம்க்ளோரம் + 3 ஜலம்.

$$3\,Cl_2 + 6\,KOH = K\,cl\,O_3 + 5\,Kcl + 3\,H_2O.$$

பொடாஸியம்உப்புக்கள்.

வழக்குப்பெயர்.	பரிபாஷை.	குறி.
வெடியுப்பு.	பொடாஷியம்நைத்ரஜம்	$K\,NO_3$.
	பொடாஷியம்க்ளோரஜம்	$K\,clO_3$.
மரஉப்பு	பொடாஷியம்கரிஜம்.	$K_2\,CO_3$.

வெடியுப்பு.
Nitre அல்லது Saltpetre.

இது விசேஷமாய், ஸோடியம்நைத்ரஜமும் க்ளோரோபொடாஷியமும் கலந்துண்டாகும்.

முறை:—ஸோடியம்நைத்ரஜம் + க்ளோரோபொடாஷியம் } = { வெடியுப்பு + கறியுப்பு.

$$NaNO_3 + Kcl = KNO_3 + Nacl.$$

உபயோகம். இது முக்யமாய் வெடிமருந்துசெய்வதற்கு உபயோகமாகின்றது.

மர உப்பு.
Potashes.
Potassium Carbonate.

பொடாஷியம் ஹைத்ராக்ஷிஜமும் கரித்வயாக்ஷிஜமும் கலந்து மர உப்பும் ஜலமும் உண்டாகின்றன.

முறை:—2 பொடாஷியம்ஹைத்ராக்ஷிஜம் + கரித்வயாக்ஷிஜம் } = { மரஉப்பு + ஜலம்.

$$2KOH + CO_2 = K_2CO_3 + H_2O.$$

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர். B.A. B.L.

—— ——

௨

அன்பைப்பற்றிய பாடல்கள்.

[இப்பாடல்கள் கனம்பொருந்திய திவான் இராமையங்கார் அவர்கள் C. S. I. விரும்பியபடி, மனோன்மணீயம், திருஞானசம்பந்தர்காலம் முதலிய நூல்களின் ஆசிரியரான காலஞ்சென்ற திருவனந்தபுரம் ப்ரொபஸர் சுந்தரம்பிள்ளை M. A. அவர்களால், ஸெயின்ட்பால் என்பவர் அன்பைப்பற்றி ஆங்கிலத்தில் எழுதியிருந்தபாடல்களின்கருத்தைத் தழுவி இயற்றப்பெற்றனவாம்; 1891-ஆம் வருஷத்து மார்ச்சுமாதத்திய ஜநாநந்திநிப்பத்திரிகையில் வெளிவந்துள்ள இப்பாடல்களை நம் செந்தமிழ்நேயர்களும் படித்து மகிழுமாறு ஈண்டு வெளியிடுகின்றேன்.]

கட்டளைக்கலித்துறை.

பிறங்கும் பிறர்குறை பேணாது நற்குணம் பேணலுறும்
அறந்திகழ் நெஞ்சின ரன்றே லவர்விண் ணமிர்தினையும்
மறந்திடும் வண்ணம் வடித்துப் படிக்கின்ற வார்த்தையெல்லாம்
வெறுங்கல கல்லென்னும் வெங்கல வோசையின் வேறலவே. (1)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வருபொரு ளுரைக்கும் வல்லபம் பெறிலென்
மண்ணிடை விண்ணிடை மறைந்த
பெருரக சியங்கள் யாவையு முணரும்
பெருமையும் ஞானமும் பெறிலென்
பருவத மெடுத்துப் பந்தென வாடும்
பத்தியுஞ் சித்தியும் பெறிலென்
பரவனு கூல திருட்டியென் றுரைக்கும்
பண்புறு மன்பிலை யெனிலே. (2)

இல்லவர் யாரும் புசித்துநற் சுகமே
யெய்திடப் பொருளெலா மீந்தென்
நல்லமெய் தனையுஞ் சிபியெனத் தன்கோள்
நாட்டிட நல்கியு மென்னை
அல்லவர் தமையும் நல்லவ ரெனவே
யனுதின மதித்துகந் திடுமோர்
சொல்லிடும் பிரிய வன்புமற் றிலையேற்
சுகமிலை யென்பது துணிபே. (3)

பிறர்க்கெலா மின்பம் பெருக்குவ தன்பே
பிறர்செயுந் தீங்கனைத் தினையும்
பொறுத்துமேன் மேலும் மகிழ்வது மன்பே
போற்றிய பிறர்வயி னுற்ற
சிறப்பது கண்டங் கழுக்கறு விடுத்துச்
சித்தமுட் களிப்பது மன்பே
அறச்சிறி தேனு மன்புதன் பெருமை
யறிந்திறு மாப்படை யாதே. (4)

அன்னியர் குணமா மன்பெனு மணங்கி
னழகினை யின்னமுங் கேண்மோ
தன்னியல் நடக்கை தக்கவா றன்றித்
தவறுறாத் தன்மைய டனது.

மன்னிய வுரிமைப் பொருடனக் காக
மறந்துமே வழங்கிட வறியாள்
என்னன செயினு மெளிவரு கோப
மில்லடீங் கொண்றமே யெண்ணாள். (5)

கலிவிருத்தம்.

கொடுமை யென்றெவர் கூறினுங் கேட்டுளம்
நடுந டுங்குவள் நாணமுற் றஞ்சுவள்
கெடல ரும்புகழ் மெய்ம்மை கிளத்தல்கேட்
டுடல மெங்கும் புளகித் துவப்பளே. (6)

வந்த வெல்லாம் பொறுத்து மகிழ்வளே
நந்தல் செய்யினும் நம்புதல் விட் டிடாள்
எந்த வேளையு மேல்வரு மின்பமே
சிந்தை செய்குவள் தீங்கு கவனியாள். (7)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இப்படி யாவ ராலு மெய்துதற் கரிதாய் நின்ற
செப்பிய பரானு கூல தெரிசன சித்த மொன்றே
மெய்ப்பட நிற்கும் மேலால் விளைவதோ ருணர்வு மோர்கால்
பொய்ப்படும் புலமை போகும் போய்விடு மறிவுந் தானே. (8)

பாலியத் தன்மை யாலே பற்றிய கழற்சி பந்து
போலவு மாடி யூடே பொருந்திய பார்வை போலும்
ஏலவு மென்னை யானே நேர்பட வறிதற் கேற்ற
காலையில் துச்ச மாகிக் கழியுமே கண்ட வெல்லாம். (9–12)

உற்றவில் வினைத்து மேகி லொழிவிலா தேதென் றேதில்
முற்றிலும் நம்பு பத்தி கைவிடான் முதலோ னென்று
பற்றிய வுறுதி முன்னம் பகர்ந்திடு மன்பு மாமே
மற்றவை தம்மின் மேலாய் மன்னுவ தன்பே யம்ம! (13)

T. V. சதாசிவப்பண்டாரத்தார்,
திருப்புறம்பயம்.

உ

மேற்கோள் விளக்கம்.

ஸ்ரீமத். S. இராதாகிருஷ்ணையர் B.A., F.M.U., அவர்கள் "செந்தமிழ்"த் தொகுதி 14 பகுதி 1-ல் செவ்வனம் ஆராய்ந்தெழுதிய மேற்கோள்விளக்கத்தைக் கண்ணுற்றேன். பொருளதிகாரப்பயிற்சிபெறுவோர்க்கு முற்கூறியவிளக்கம் பெரிதும் உபயோகமாகுமென்பது இனிதுபுலனும். இன்னும், அச்சில்வராத அகநானூறு, பரிபாடல், கொங்குவேண்மாக்கதை என் றின்னோரன்ன அரியநூல்களின்பிரயோகங்கள்பல அவ்வுரையில் மலிந்துகிடக்கின்றன.

அவையும் ஒவ்வொன்றாய் ஆராய்ந்து வெளியிடப்படின், தமிழாராய்ச்சியுடையார்பலர்க்கும் பயனளிக்குமென்பது திண்ணம்.

இனி, ஸ்ரீ ஐயரவர்கள்மேற்கோள்விளக்கத்திற்பெறாத "கலித்தொகை"ப்பாட்டுக்களின்மேற்கோள்கள் 34 வரையில் எனது சிற்றாராய்ச்சியிற் கிடைத்தவற்றைப் "பொருளதிகாரவுரை"யினின்றும் எண்டுக் கீழே தருகின்றேன்.

தொல்காப்பியப் பொருளதிகாரவுரையில் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட

கலித்தொகைப்பாட்டுக்களின் முதற்குறிப்பு.

வரிசைநிர.	பொருளதிகாரப் புத்தகத்தின் பக்கம்.	மேற்கோள்.	கலித்தொகைப் பாட்டின் எண்.	அடிகள்.
1	41	தோழிநாங்......மகன்	115	1—4
2	200	பொய்தீருல......செய்தாள்	141	11—14
3	266	தேரோமுற்றன்று......பெரிதே	74	15
4	302	கடுமாகட......கனிமே	50	19—24

5	305	தன்னெவ்வம்......ஞணி	44	8—10
6	317	செவ்வியதீவிய......மன்றவினி	19	1—6
7	357	அனவகையால்......கொண்டு	92	59—68
8	358	அதிர்வில்......செல	81	29—32
9	393	மானோக்கி......வினி	87	11—13
10	396	எனநீ, தெருமரல்......தூதே	26	21—25
11	399	தந்தையிறைத்......எல்லாவிது	84	30—32
12	411	கடைஇய......யார்க்கு	77	21—24
13	421	வேட்டோர்......நிறுத்து	66	23—25
14	433	பொன்செய்வாம்	60	23
15	442	பூணாகமுறத்......போதந்தான்	39	4
16	450	மெய்யறியா......கிடந்தேன்	37	19
17	456	ஒன்று, இரப்பான்......பன்மாணும்	47	1—8
18	465	ஆங்காக......விடற்கு	64	25—29
19	,,	மொழிவது... யாம்	,,	8—10
20	,,	எல்லா, நற்றோ..... பினி	,,	19—22
21	,,	நல்லாய், இருளை......பல	,,	22—24
22	,,	உழுதாய்......மற்றினி	,,	11—19
23	468	வையினர்......நினைத்தல்	134	19
24	478	நடுங்குதல்......தனரே	13	27
25	479	ஒளியிடைமின்......துஞ்சேன்	139	5—7
26	484	அச்சாறாக......னுவல்	75	20—21
27	485	செய்தவறில்......வாய்	87	3
28	506	காமருநோக்கினை......றின்னாதே	80	14—15
29	,,	பால்கொள......றெவ்வாதி	86	17—18
30	510	பட்டுழியறியாது......னின்றாய்	69	12—13
31	531, 768	எரியுருவுறழ......மலா	33	10
32	537	வேனிற்புன......யார்	84	38
33	758	கதிர்பகா......தீ	142	37—41
34	766	ஆண்மில்......யாடி		கடவுள் வாழ்த்து 16

ணைக்கால் அய்யம்பேட்டை "S. T. Vilas" 13—2—16. } S. முத்துரத்தமுதலியார்.

ஸ்ரீ:

ராமாயணகுசேலன்—த்ரிஜடர்.

குசேலன்:—இவர் குற்சிதமான் அல்லது சிதைந்தவஸ்திரத்தைத் தரித்துக்கொண்டிருந்தமையாலேயே, குசேலன் என்னும் பெயர் பெற்றார். ஸ்ரீ மஹாபாகவதத்தில் இக் குசேலன் க்ருஷ்ணபக்தனாகவிருந்து முக்திபெற்றமையும், அவருடைய மற்றைய வரலாறுகளும் கூறப்பெற்றுள்ளன. ஸ்ரீராமபிரான்காலத்திலும் பரமபாகவதனான த்ரிஜடர் என்ற ராமாயணகுசேலர் ஒருவர் இருந்ததாக, ஸ்ரீமத் வான்மீகராமாயணத்திலிருந்து அறிகிறோம். குசேலரது வஸ்த்ரம் இருந்தாற்போன்றே த்ரிஜடர்தரித்திருந்தவஸ்த்ரமும் ஸஹஸ்ரம்த்வாரங்களையுடையதாயிருந்தது. குசேலர்மனைவிபோன்றே, நமது த்ரிஜடர்மனைவியும் பரிசுத்தமான ஒழுக்கமும், பாதிவ்ருத்யமும், பதிபக்தியும், சுசிருசியுமுள்ள தெய்வப்பெண்போன்றிருந்தாள். இருபத்தேழு நக்ஷத்திரங்களுக்கும் இருபத்தேழுபுத்ரர்களையுடையராயிருந்த குசேலருக்குமாறாக, ராமாயணகுசேலராகிய த்ரிஜடர் எண்ணிறந்தபுத்ரபாக்யத்தையுடையவராயிருந்ததனால், ஸ்ரீ பாகவதகுசேலரைக்காட்டிலும் இவர் மிக்கதரித்ரரென்பது நன்குவிளங்கக்கூடியதாயிருக்கிறது.

பாகவதகுசேலர் நாட்டிலிருந்து பகவந்நாமசங்கீர்த்தனத்துடன் வீதிகள்தோறுஞ்சென்று உஞ்சவ்ருத்திசெய்து, அதனைக்கொண்டு ஜீவனஞ்செய்துவந்தவர். ராமாயணகுசேலராகிய த்ரிஜடரோ, கோசலதேசத்துக்கருகிலிருந்த வனப்பிராந்தியங்களில்வசித்து, அங்குக் காய் கிழங்குகளையும் பழம், சருகுகளையும், வயல்களில் உதிர்ந்தநெற்களையும் கொண்டுவந்து தம் எண்ணிறந்தசிசுக்கள்நிறைந்தகுடும்பத்தை ஸம்ரக்ஷணஞ்செய்துவந்தவர். இவர்கையிலிருந்த மரங்களிலிருக்கும் பழங்களை க்ரஹிக்கஏற்பட்ட துறட்டுக்கோல், கிழங்குகளைத்தோண்டுவதற்கேற்பட்ட மண்வெட்டி, அவைகளை நிறைப்பதற்கேற்ற கூடை இவைகளே இவருடைய ஆஸ்தியாம். இவர், காட்டில் தமக்கு யதேச்சையாய் அகப்பட்டவற்றைக்கொண்டு காலந்தள்ளிவந்தவர். ஆகாராதிகள் சிலகாலம் அகப்படாமல், குழந்தைகள்கூட இரண்டுமூன்றுநாட்களுக்கொருதரம் ஸமயத்திற்கேற்றவாறு ஆகாரம்பண்ணுவதுண்டு. இதிலிருந்து ஸ்ரீ க்ருஷ்ணன்காலத்துக் குசேலருக்கும் ஸ்ரீராமன்காலத்துக் குசேலருக்குமுள்ள தாரதம்யம் விளங்குவதாகும்.

கைகேயியின்சொற்கேட்டுப் பிதுர்வாக்யபரிபாலனம்பண்ணும் பொருட்டு ஸ்ரீராமன் நாடுதுறந்து, வனவாஸம்செய்யப்புறப்படுகையில் தனக்கு ஸொந்தமான ஆஸ்திகளையெல்லாம் எடுத்து ப்ராம்மணருக்கு ஏராளமாகத் தானம்செய்தார். இராமபிரான் வஸிஷ்டபுத்ரரும், தனது ஆப்தநண்பருமாகிய ஸுயக்ஞர் என்ற மஹாத்மாவுக்குத் தனது யானையான ஸத்ருஞ்சயத்தையும், தனது தந்தக்கட்டில்முதலியவற்றையும், இன்னும் பிறவற்றையும் அவற்றிற்குரிய உபகரணங்களுடன் கொடுத்ததுமன்றி, ஸ்ரீ ஸீதாதேவியும் தனது ஆபரணமுதலிய யாவற்றையும் அவரது பத்னிக்குக்கொடுக்கும்படி அவரிடத்திலேயே கொடுத்தாள். ஸ்ரீராமன் தனது பொக்கிஷமுதலிய யாவற்றையும் ஸத்ப்ராஹ்மணர் முதலியோர்க்கு ஏராளமாய் வாரிவாரி எடுத்துத் தானம்செய்தார்.

அச்சமயத்தில், காட்டிலிருந்து இங்குப்போகிறோம் என்று குறிக்கொள்ளாமல், ஸஞ்சாரஞ்செய்துகொண்டுவரும் அபாரஸம்ஸாரியான ப்ரம்மதேஜஸ்பொருந்திய த்ரிஜடர், தம் குழந்தைகளுடனும், பத்நியுடனும் அயோத்யாநகரம் புகுந்தார். வளர்ந்து உயர்ந்த யாக்கையையும், விசாலமான வக்ஷஸ்தலத்தையும், விசாலமானநேத்ரத்தையுமுடைய த்ரிஜடரைப்பார்த்து, அவரதுபத்நி, "ஏ! பிராணநாதா! அயோத்யாநகரத்து ஸ்ரீராமன் மகாகுணவான் என்றும் கீர்த்திமானென்றும் ப்ராஹ்மணவத்ஸலன் என்றும் கேள்விப்படுகிறேன்! அவரைத் தரிசனம்செய்தல் நேரிது" என்று என்மனதிற்படுகின்றது என்றாள். இதுகேட்ட ஸாத்வியும், பக்திமானுமான ராமாயணகுசேலராகிய த்ரிஜடர், தனது கந்தைவஸ்திரத்தை ஸரிப்படுத்தி இறுக்கி இடுப்பிற்கட்டிக் கொண்டார். ராஜஸபையிற்போகவேண்டிய உடையில்லாமற்போனாலும், அதற்குவேண்டிய அழகு தனக்கு இல்லாமற்போயினும், ஒருவாறு ஸரிப்படுத்திக்கொண்டு, ஸ்ரீராமனிருக்குமிடம்நோக்கி விரைந்து செல்வதானார். பாகவதகுசேலர் துவாரகையைநோக்கி, முன் ஸ்ே கத்தையொட்டிப்போனதுபோ லில்லாது, ஸ்ரீராமர்காலத்துக்குசேலரா கிய த்ரிஜடர், தனித்துப்போகாமல், தான் முன்னும், தன்பாரியை பின்னும், குழந்தைகள் ஒவ்வொன்றாய்ப் பின்னும் தமது ஆஸ்தியாகிய துறட்டுக்கோல்முதலியவற்றுடன், ஸ்ரீராமஸந்நிதிகுறுகினார். போகிறவழிய் லுள்ள ஜனங்களின்தொகையோ அபரிமிதமாயினும், ஏன் ஆசாரவா லில்நுழைகின்றனை? நீயாவன்? உனக்கென்னவேலை? என்றுசொல்லுட

சேவகர் துவாரபாலகர்களின் கடுமொழிகளின்றியே, இம்மஹான் உட்ட
கக் கூட்டம்முழுவதும் அப்படியப்படியே கலைந்து இடங்கொடுக்க, இவ
வெகுதாராளமாய் உள்ளேசென்றார். ஸ்ரீ ஸீதாராமனைக் கண்ணிறை
கண்டார். தன் இருகைகளையும் தன்கைத்தண்டத்துடனும் தூக்கிய
வண்ணமாய் அஞ்சலிசெய்துகொண்டு தான் அதிகதரித்ரன் அதிகஸ
ஸாரி என்று சொன்னார். குறிப்பினால் யாசகர்களின்மனதையறிந்
கொடுக்கும் கொடைவள்ளலாகிய ஸ்ரீ பகவான், கள்ளங்கவடில்லா
பிரம்மதேஜஸ்பொருந்திய பிராம்மணனின் எண்ணம், தன்னிடமுள்
பணம் செலவழிந்துவிடப்போகிறதே என்ற நோக்கத்துடனிருக்
மென்பதாக நினைத்தார். எனினும் அந்த ப்ரம்மதேஜஸ்வியின்
தேஜஸ்ஸை அங்குள்ளவருக்குக்காட்டவிரும்பி ஏ! பிராம்மணோ
தமரே! திரவியமெல்லாம் செலவழிந்துவிட்டன! அநேகம்கோ
களைத் தானம்செய்துவிட்டேன்! இன்னும் அநேகாயிரம்கோக்க ளிரு
கின்றன! உமது கையிலிருக்குந்தண்டத்தை இங்கிருந்து சுற்றி எ
யும் என்று தமது கோக்களிருக்குமிடத்தைக் காட்டினர். உடனே
பிராம்மணன் தனக்கு அதிகங்கிடைக்கவேண்டுமென்ற எண்ணத்துட
தனது கந்தல்வஸ்த்ரத்தை இறுக்கிக்கட்டி உடம்பை ஸரிப்படுத்தி
கொண்டு தண்டத்தைச் சுழற்றி எறிந்தார். அவர் சுழற்றி எறிந்
வேகம் 12 யோசனைநீளமும் 3 யோசனை யகலமுமுள்ள அயோத்ய
நகரம்தாண்டி ஸரயூநதியையும்தாண்டி, ஸ்ரீராமனது கன்றுகளுக்கும்
வ்ருஷபமுமிருக்குமிடத்தின்பக்கத்தில் வீழ்ந்தது. அத்தனை தூரம்வ
யில் கோக்கள்மேய்ந்தனவானால் எவ்வளவுகோக்க ளிருந்திருக்கவேண்
மென்று ஊகித்தால் அறியலாம்.

இதைப்பார்த்ததும் ஸ்ரீராமனையுள்ளிட்ட அங்கிருந்த ஸகலரு
ப்ரம்மதேஜஸின்பலத்தை மிகுதியும் வியந்து கொண்டாடினார்கள்.
ராமனது ஆக்ஞையினால் அத்தனைகோக்களும், அவற்றின் கறவை
பாத்திரங்கள், இடையர்கள் அவர்களுக்கு ஸர்வமான்யங்கள் கட்

தறிகள், அவைகளுக்கு ஆகாரத்திற்குவேண்டிய ஆகாரச்செலவுத் தொகைமுதலியவற்றுடன் அவருடைய ஆசிரமங்கொண்டுசேர்க்கப் பெற்றன. ஸ்ரீ பகவானும் அவ்வளவுதூரம் கழிவிசெயெறிந்ததைக்கண்டு ஆச்சரியப்பட்டு, அவரைக் கட்டிக்கொண்டு தனது அங்கலங்கத்லைதக் கொடுத்து ஆநந்தப்படுத்தினர். பகவான் பின்னும் த்ரிஜடரைநோக்கி, ஏதாவதுவேண்டுமா என்னலும் தபஸியாகிய தனக்குக் கோக்கலைத் தவிர யாதொன்றும்வேண்டுவதில்லையென்றும், தனத்தினால் தனக்கு ஆகவேண்டியது யாதொன்றுமில்லையென்றும் கூறி, பகவானைவாழ்த்தித் தமது பத்நி குழந்தைகள்ஸஹிதமாய்த் தம்மிருப்பிடமாகிய வனத்தி லுள்ள ஆசிரமத்திற்கு விரைந்துசென்றார். த்ரிஜடரை இவ்வாறு கழி யெறிந்துவிடுக்கக் கேட்டமைக்காகப் பெரிதும் மன்னிக்கும்படி ஸ்ரீ பக வான் தமது பக்தனாகிய த்ரிஜடரைக்கேட்டுக்கொள்ளுகையில், தான் ப்ரம்மதேஜோபலத்தைக்காட்டுமாறு அவ்வாறு செய்யச்சொன்னதே தவிர மற்றெவ்விதமான எண்ணமுங்கொண்டதாகவில்லையென்று த்ரி ஜடருக்குச் சொன்னதிலிருந்து, தசரதராமன்போன்றவர்களும் கீழாயி னோராயிருந்தாலும் அவர்களிடம் தம்முடைய மர்யாதையானஸ்வ பாவத்தையும் பணிவையும் காட்டுகிறார்களென்றறிகிறோம். பாகவதத்தி லுள்ள குசேலருக்கும் த்ரிஜடராகிய ராமாயணகுசேலருக்கும் ஒற் றுமைவித்யாஸங்களிருப்பினும் த்ரிஜடரைப் பலவிதங்களில் ராமாயண குசேலர் என்று சொல்வது தவறாகாது.

வீ. சுப்பிரமணியஐயர்,
தமிழ்ப்பண்டிதர்,
மாயூரம்.

உ

பூர்வீக இந்தியர்களின் வியாபார ஊக்கம்.

அன்னியதேசங்களுடன் வியாபாரம்.

ஹிந்துயூனிவர்ஸிடிக்கு அஸ்திவாரக்கல்நட்ட சம்பந்தமாக நடந் பல பிரஸங்கங்களில், கனம் மிஸ்டர் லலுவாய் ஸமல்தாஸ் செய்தபிர சங்கம் ஒன்று. பண்டைக்காலத்தில் இந்தியாவில் வியாபாரவிஷய மாகச் செய்யப்பட்டுவந்தமுயற்சிகள் இவையென்று அந்தப்பிரசங்கத் தில் அவர் விவரமாக எடுத்துப்பேசினர். பழையகாலத்தில் இந்தியர்கள் செய்துவந்தவியாபாரத்தைப்பற்றி இப்பொழுதுள்ளவர்களுக்கிருக்கும் அறியாமையைப்போக்க அவருடையபிரசங்கம் வெகு உபயோகமாக இருக்கும். அதன் ஸாராம்சத்தை இங்கு வெளியிடுகிறோம்.

வெகுபூர்வகாலத்திலும், அதாவது வேதங்களேற்பட்டகாலமென்று சொல்லப்படுகிறகாலத்திலும் வியாபாரத்தையே குலதர்மமாக ஒரு ஜாதி கொண்டிருந்தது. இத்தேசவியாபாரிகள் பணத்தாசையினால் அன்னியதேசங்களுக்குக் கப்பல்களை அனுப்பிவந்ததாகவும், இன்ன வியாபாரத்தைச்செய்கிறது, இன்னவியாபாரத்தைச் செய்கிறதில்லை யென்று கட்டுப்பட்டிராத வியாபாரிகள் இரவும் பகலும் ஓய்வின்றிப் பிரயாஸப்பட்டுவந்ததாகவும், லாபத்தை உத்தேசித்து அவர்கள் எங் கும்போய்வந்ததாகவும், அவர்கள் சஞ்சரிக்காதகடல்கள் இல்லையென்ப தாகவும், விற்பனைக்காலத்தில் சம்மதப்பட்டவிலை போதுமானதாயிருந் தாலுமில்லாவிட்டாலும் அதற்குக் கட்டுப்படவேண்டிய அவசியத்தை யறிந்து அப்படியே கட்டுப்பட்டுவந்தார்களென்றும், செல்வாக்குநாணய மாக நிஷ்கா என்ற பொன்காசுகளை உபயோகித்துவந்தார்களென்றும், ரிக்வேதத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதிலிருந்து, கப்பலோட்டும் தொழிலை அவர்கள் அறிந்திருந்தனரென்றும், தொழில் ஊக்கம்கொண் டவர்களென்றும், ஒப்பந்தத்துக்குக் கட்டுப்படவேண்டிய நியாயங்களை அவர்கள் அறிந்தவர்களென்றும், பொன்நாணயத்தின்விசேஷத்தை அறிந்திருந்தார்களென்றும் தெரிகிறது. ஆகையினால் வியாபாரத்தினால் தங்களுடையநிலைமையை விருத்திசெய்துகொள்ள இக்காலத்தில் மே னாட்டார்கருதுவதுபோலவே பழையகாலத்து ஹிந்துக்களும் கவலைப் பட்டுவந்ததாகத்தெரிகிறது. இக்காலத்தில் மேனாட்டுத் தனிகர்கள் ஆசைப்படுவதுபோலவே பழையகாலத்து வைசியர்கள் பிறர்வியாபா ரத்தைக் கைக்கொள்ளப்பார்த்தார்கள். உலகம்தெரிக எக்காலத்திலும்

மனுஷ்யசுபாவம் ஒரேமாதிரியாகத்தான் இருந்திருக்கிறது. பிறதேசங்களுடன் வியாபாரஞ்செய்வதற்குவேண்டிய கப்பல்கள்முதலிய சாதனங்கள் அக்காலத்திலிருந்ததல்லாமல், அவைகளைக்கொண்டு சாவதானமாக வியாபாரஞ்செய்யலாமென்றதைரியமும் வியாபாரிகளுக்கு இருந்திருக்கிறது. அம்மாதிரி தைரியமில்லாமல் வியாபாரம் பெருகியிருக்கமுடியாது. புராணங்களைக் கவனிப்போம். சுக்ரீவன் கடலிலுள்ள தீவுகளைச் சொல்லும்பொழுது, கோசகாக் என்ற தீவுகளைக் குறிப்பிடுகிறான். அது சீனாவாக இருக்கலாம். யவனத்வீபமென்றும், சுவர்ணத்வீபமென்றும் அடிக்கடி பிரஸ்தாபங்களைக் காணலாம்; அவை முறையே ஜாவாவாகவும், ஸுமட்ராவாகவும் இருந்திருக்கலாம். லோகித்ர ஸாகரம் என்று சொல்லப்பட்டிருக்கிற கடலானது இக்காலத்தில் 'செங்கடல்' என்று வழங்கும் கடலாகஇருக்கலாம். அக்காலத்திய ஹிந்துக்கள், இந்தியாவுக்குக் கிழக்குத்திக்கிலிருந்தநாடுகளை நன்கு அறிந்திருந்தார்களென்றும், அவைகளுடன் வியாபாரஞ்செய்துவந்தார்களென்றும், அங்கிருந்து அவர்கள்கொண்டுவந்த அதிசயமானசாமான்களைத் தங்கள்நாட்டு அரசருக்குக்காணிக்கையாகக்கொடுத்துவந்தார்களென்றும்தெரிகிறது. கடலின் அட்டகாசத்தால் வியாபாரிகள் கஷ்டப்பட்டதாக மகாபாரதத்திலும் சொல்லப்பட்டிருப்பதிலிருந்து அன்னியதேசவியாபாரம் பாரதமெழுதப்பட்டகாலத்திற்குமுன்னும் நடந்துவந்ததாகத்தெரிகிறது. ஆனால் வருஷந்தோறும்நடந்த அன்னியதேசவியாபாரத்தின் பெறுமானம் என்னவென்றாவது, எந்தெந்தத்தேசத்துடன் வியாபாரம் நடந்ததென்றாவது மேற்சொன்ன பிரஸ்தாபங்களிலிருந்து விளங்கவில்லை. இக்காலத்திற்போல் அக்காலத்திற் கணக்குகள் வெளியிடப்படவில்லையாயினும், அக்காலத்தில்நடந்த அன்னியவியாபாரத்தைப்பற்றிக் கிடைக்கும் எல்லாச்சமாசாரங்களையும், ராதாகுமுதமுகர்ஜி, இந்தியாவில்கப்பல்கட்டுந்தொழில் என்றதம்முடையபுஸ்தகத்தில் திரட்டிவெளியிட்டிருக்கிறார். பண்டைக்காலநூல்களை ஆராய்ச்சிசெய்து அவரைப்போல் உழைக்கக் கல்விகற்றமாணவர்கள் முற்படுவது மிகவும் விரும்பத்தக்க விஷயம்.

வியாபாரி[illegible] பிறதேசபாஷைகளை அறிந்திருக்கவேண்டிய அவசியத்தை இக்காலத்தில் மிக வற்புறுத்துகிறார்கள். வியாபாரப்படிப்பிற் பட்டம்பெற ஒரு அன்னியபாஷாஞானம் அவசியமாகவிருக்கிறது.

இந்தஅவசியத்தை மனுவும் உணர்ந்து, வைசியனானவன் மனுஷ்யஜாதி பேசும் எல்லாப்பாஷைகளையும் அறிந்திருத்தல் நல்லதென்று சொல்லியிருக்கிறார். ஒரு கப்பலின்சரக்கு, பழுதாய்விட்டால் அக்கப்பலிலுள்ள சிப்பந்திகள் எல்லோரும்சேர்ந்து ஜவாப்தாரி என்றும், தெய்வாதீனத்தாற் பழுதாய்விட்டால் ஒருவரும் ஜவாப்தாரியல்லவென்றும் மனு, சொல்லியிருப்பதிலிருந்து, வியாபாரிகளுக்குங் கப்பற்காரர்களுக்குமிக்காலத்தில் இருந்துவரும் சம்பந்தத்தை அக்காலத்திலும் அறிந்திருந்தார்களென்பது விளங்கும். சேதத்துக்கு மாலுமிகள் எல்லோரும் சேர்ந்து ஜவாப்தாரி என்று மனு, சொல்வதிலிருந்து அவர்கள் சொந்தக்காரர்களாகவுமிருந்திருக்கலாமென்று ஊகிக்க இடமுண்டாகிறது. கூட்டாய்த் தொழில்செய்யும்வரையில் ஜனங்கள் எவ்வளவு நாகரிகத்தில் முதிர்ந்திருந்தார்களென்றும் அதிலிருந்து நாம் அறியலாம்.

வேதத்திலும் புராணங்களிலும் வியாபாரத்தைப்பற்றிக் காணப்படும் பிரஸ்தாபங்களிலிருந்து நாம் என்ன ஊகிக்கலாமென்றவிஷயமாக அபிப்பிராயபேதமேற்படலாமாயினும், சந்திரகுப்தனுக்குமுந்தினகாலத்தில் இந்தியாவில் வியாபாரத்தின்நிலைமை எப்படி இருந்ததென்றவிஷயமாக மேனாட்டுவித்பன்னர்கள் ஒருமனதாய் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

இந்தியாவுக்கும் பாபிலோன் என்ற நாட்டுக்கும் பூர்வத்தில் நடந்துவந்த வியாபாரத்தைப்பற்றி எழுதும்பொழுது மிஸ்டர் கென்னடி என்ற ஆசிரியர் இன்றைக்கு 2500 வருஷங்களுக்குமுன் இரண்டுதேசங்களுக்கும் வியாபாரம் நடந்துவந்ததாகவும், 2300 வருஷங்களுக்குமுன் மும்முரமாக நடந்துவந்ததாகவும் ருஜு உளதென்று சொல்லுகிறார்.

இந்தியாவில், புத்தர்களிருந்தகாலத்தைப்பற்றி மிகவும் ஆராய்ச்சிசெய்தவராகிய மிஸ்டர் ரிஸ் டேவிட்ஸ் என்ற வித்வானும் அப்படியே கருதுகிறார். இந்தியாவின் தென்மேற்குக்கரையிலிருந்து இன்ன சாமான்கள் ஏற்றுமதிசெய்யப்பட்டனவென்றும், இக்காலத்தில் ஸுபாராவென்றும் ப்ரோச் என்றும் வழங்கப்படும் துறைமுகங்களிலிருந்து

ஏற்றுமதி அதிகமாக நடந்ததென்றும், ஏற்றுமதி செய்யப்பட்ட பண்டங்களின்பெயர்கள் ஸம்ஸ்கிருதபாஷைச்சொற்கள் அல்லவென்றும் *தமிழ்ச்சொற்கள் என்றும் அவர் விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

"பம்பாய் கெஜட்டீர்" என்ற பத்திரிகையின் ஆசிரியராயிருந்த மிஸ்டர் ஜாக்ஸன், சுமார் 2900 வருஷங்களுக்கு முன் ப்ரோச், ஸுபார என்ற துறைமுகங்களின்வழியாக இந்தியாவுக்கும் பாபிலோன் நாட்டுக்கும் 300 வருஷகாலம் வியாபாரம் மும்முரமாக நடந்துவந்ததாகச் சொல்லியிருக்கிறார்.

சந்திரகுப்தன்காலம்.

சந்திரகுப்தனுடையமந்திரியாயிருந்த வெகுகீர்த்திபெற்றவராகிய சாணக்யர் என்பவர் எழுதின அர்த்தசாஸ்திரத்தில் வியாபாரஅபிவிருத்தி நன்கு சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சந்திரகுப்தன் இன்றைக்கு 2236 வருஷங்களுக்குமுன் பட்டத்துக்குவந்து 30 வருஷம் அரசாண்டவர். கப்பல் இலாக்காசபையொன்று தனியாக இருந்ததாகவும், அதற்கு அதிபதி ஒருவர் இருந்ததாகவும் சாணக்யர் சொல்லியிருப்பதிலிருந்து பலகப்பல்கள் இருந்ததாகத் தெரிகிறது. அன்னிய வியாபாரத்தைக் காக்கவேண்டியது கப்பல்சபையின் வேலையாக இருந்திருக்கவேண்டும்.

இந்தியாவுக்கும் அன்னியதேசங்களுக்கும் நடந்துவந்த வியாபாரத்தின்பலனாக, பல அன்னியர் தேசத்துக்குவந்ததால், அவர்களுக்கு ஜாகை ஏற்படுத்திக்கொடுக்கவும், பந்தோபஸ்துக்காகப் பாரா அனுப்பவும், வைத்தியஞ்செய்யவும் ஏற்பாடுசெய்வதற்காகத் தனியாக ஒரு சபை ஏற்படுத்தவேண்டியிருந்தது. அன்னியர் உயிருடன் இருந்தவரையில் அவர்களுக்கு ராஜாங்கத்தார் உதவிசெய்துவந்ததுடன், அவர்கள் இறந்துபோனபிறகு அவர்களுடைய ஐவேஜிகளை வசூல் செய்து ரொக்கமாக அவர்களுடைய உறவினர்களுக்கு அனுப்பியும் வந்தார்கள். நாவத்யக்ஷர் என்று ஒரு உத்யோகஸ்தர் புதிதாகநியமிக்கப்பட்டார். கப்பல்களின்சொந்தக்காரர்களிடமிருந்து தவறாமல் துறைமுகத்தீர்வையை வசூல்செய்யவேண்டியது அவருடைய வேலை. கடல்கள், ஆறுகள், சுபாவமாக ஏற்பட்ட ஏரிகள், வெட்டப்பட்ட ஏரிகள் இவைகளிற் கப்பல்கள் சஞ்சரிப்பதைக் கண்காணிக்கவேண்டியது அவருடையகடமை. காற்றுக்குப் பயந்துகொண்டு துறைமுகத்துக்கு வரும் கப்பல்களுக்கு உதவிசெய்யவும், நீரினால்நனைந்து பழுதாய்விட்ட சாமான்களுக்குத் தீர்வையைத் தள்ளிக்கொடுக்கவும் அவருக்கு அதிகாரமுண்டு.

* சுக்கானது அக்காலத்தில் இஞ்சிவேர் என்று வழங்கப்பட்டதாகவும், ஹீப்ருபாஷையில் அப்பெயர் இஞ்சிபேர் என்றாய், பிறகு லத்தீன்பாஷைமூலமாக ஜிஞ்செர் என்ற ஆங்கிலப்பெயர்வந்ததாகவும் காலஞ்சென்ற மிஸ்டர் கனகசபை சொல்லியிருக்கிறார். ப—ர்.

வியாபாரத்தைக் கண்காணிக்க இன்னொருசபை ஏற்பட்டிருந்தது. இப்பொழுது இங்கிலாந்திலுள்ள வியாபாரசபைக்குள்ள அதிகாரத்தைவிட அதற்கு அதிக அதிகாரம் ஏற்பட்டிருந்ததாகத் தெரிகிறது; எப்படியென்றால், முத்திரைபோட்ட தராசு படிகளை வியாபாரிகள் உபயோகிக்கும்படி அந்தச்சபையார் பார்த்துக்கொண்டதல்லாமல், வியாபாரத்தையும் கண்காணித்தார்கள். தொழில்களைக் கண்காணிக்கவும் ஒரு சபை இருந்தது. வெளித்தேசங்களுடன் இந்தியர் அக்காலத்தில் வியாபாரம்செய்துவந்ததல்லாமல், மதுரை, காசி முதலிய பெரிய உள்நாட்டுப்பட்டணங்களுடனும் வியாபாரம் செய்துவந்தார்கள். வியாபாரம் அதிக வியாபகமாகஇருந்ததால், வியாபாரசபைவேறு, தொழிற்சபைவேறு நியமிக்க அவசியமேற்பட்டது. 100 வருஷம் கும்பெனியாரும் 50 வருஷம் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாருமாக 150 வருஷம் ஆங்கிலேயர் இந்தியாவை யாண்டபிறகு, வியாபாரத்துக்கும் தொழிலுக்குமாகச் சேர்ந்து ஒரு தனி அதிகாரியை நியமித்தார்கள் என்பதை நாம் நினைப்பில் வைத்துக்கொண்டால்தான், ஆதிகாலத்தில்இருந்த ஏற்பாட்டின்விசேஷம் விளங்கும். 2200 வருஷங்களுக்குமுன் 'மோரிய வம்சசக்ரவர்த்திகள்காலத்தில் அன்னியதேசங்களுக்கும் இந்தியாவுக்கும் போக்குவரத்து, பலமாயிருந்ததென்றும், அன்னியர் பலர் வியாபாரத்தின்பொருட்டு அந்தராஜ்யத்தின் தலைநகருக்கு வந்துகொண்டிருந்தார்களென்றும் பலசபைகள் ஏற்பட்டிருந்தனவென்றும் விளங்குகிறது என்று மிஸ்டர் வின்சேன்ட் ஸ்மித் என்பவர் சொல்லியிருக்கிறார்.

பணக்காரர்களுடையபணத்தைக் கழித்துவிடவேண்டுமென்று சாணக்யர் சொல்லியிருப்பதிலிருந்து, வியாபாரத்தினாற் பெரும்பணம்

குவிந்ததென்று விளங்குகிறது. இப்பொழுது மிஸ்டர் லாயிட்ஜார்ஜ் ஏற்படுத்தியிருப்பதுபோல், படிப்படியாக அவனவன் அந்தஸ்துக்குத் தக்கபடி வருமானவரிவிகிதத்தை உயர்த்திவசூலிக்கவேண்டுமென்று சாணக்யர்சொல்லியிருப்பதல்லாமல், பணம்கொடுக்கிறவர்களுக்குப் பட்டங்களைக்கொடுக்கலாமென்றும் வாய்கூசாமற் சொல்லியிருக்கிறார். நன்மையை உத்தேசித்து யார் தங்களுடையபொருளை அரசனுக்குக் கொடுத்துவிடுகிறார்களோ அவர்களுக்குக் குடை தலைப்பாகைமுதலிய ஏதேனும் ஒரு பிருதைக்கொடுக்கலாமென்று சாணக்யர் சொல்லியிருக்கிறார். இக்காலத்திற் சிலர் பட்டம்பெறுவதானது முற்காலத்தில் நடந்த மாதிரியாகவே இருக்கிறது.

ரோமாபுரியுடன் வியாபாரம்.

சந்திரகுப்தனுடையபேரனாகிய அசோகமகாசக்கரவர்த்திகாலத்தில் முன்போல் அன்னியவியாபாரம் நடந்துவந்ததுடன், க்ரீஸ், ரோம், ஈஜிப்டு, சீனாமுதலிய பலதேசங்களுடன் வியாபாரம் பலத்துவிட்டதாகவும் தெரிகிறது. ரோமாபுரியிலிருந்து வருஷாவருஷம் ரொக்கம் ஏராளமாக இந்தியாவுக்குப்போய்ச் சேர்ந்ததாக ப்ளினிமுதலிய பூர்வகாலத்து ஆசிரியர்கள் சொல்லியிருக்கிறார்கள். மிளகு, முத்து, மரகதம் ஆகிய மூன்று பண்டங்கள் தமிழ்நாட்டில்மாத்திரம் கிடைத்துவந்ததால், தமிழ்நாடுகள் அப்பண்டங்களைப் பெருவாரியாக ஏற்றுமதிசெய்தனவென்றும், தமிழ் அரசர்களிடத்தில் வெகு வல்லமையுள்ளகப்பல்கள் கூட்டங்கூட்டமாக இருந்தனவென்றும், மேனாட்டுவியாபாரிகள் தமிழ்நாட்டுப் பண்டங்களுக்குப் பதிலாகப் பொன்னையும் வெள்ளியையும் விசித்திரப் பண்டங்களையும் கொடுத்தார்களென்றும் வின்ஸெண்ட் ஸ்மித் சொல்லியிருக்கிறார். இக்காலத்திற் கிராங்கனூர் என்று வழங்கும் முசிரியில் யவனர்களுடைய பெரியகப்பல்கள் மிளகு முத்து முதலியபண்டங்களை வாங்கி ஏற்றிக்கொண்டதாகச் சொல்லப்பட்டிருப்பதிலிருந்து மேனாட்டார் இந்தியாவிற் சரக்குகளைத் தாங்களேவாங்கித் தங்களுடையகப்பல்களிலேயே கொண்டுபோனார்களென்று தெரிகிறது. சிலசமயங்களில்

மேற்சொன்னபடிநடந்தாலும், இந்தியர்கள் தங்களுடைய சொந்தக் கப்பல்களில், பிறதேசங்களுக்குப்போய் வியாபாரம்செய்துவந்தார்களென்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. கிறிஸ்துபிறந்ததற்கு 77 வருஷம்முந்தி வியாபாரம் வெகுவாகப் பலமாய்விட்டதால் ரோமராஜ்யத்தின் செல்வவான்களுடைய டாம்பீகத்தால்வருஷமொன்றுக்கு அத்தேசத்திலிருந்து 10 கோடிபவுன் வெளிப்பட்டுவிட்டதாக ப்ளினி கோபித்துக்கொண்டு எழுதியிருக்கிறார். வடக்கிலும் தெற்கிலும் இப்படியே இருந்ததாகத் தெரிகிறது. இரண்டாவது சந்திரகுப்தன் சௌராஷ்டிர தேசத்தையும் மாளவதேசத்தையும் பிடித்துக்கொண்டதன்பலனாக விசேஷச் செல்வமும் செழிப்பும்பொருந்தியநாடுகளைப் பிடித்துக்கொண்டதல்லாமல், கிழக்குக்கரையோரத்திலுள்ள துறைமுகங்களுக்குப்போக வழியுமுண்டாயிற்று. ஈஜிப்டுவழியாக ஐரோப்பாவுடன் நேராக வியாபாரம்செய்யவும் சந்திரகுப்தனுடைய ராஜ்யத்துக்குச் சௌகர்யமேற்பட்டது. ப்ரோச் என்று இக்காலத்திற் சொல்லப்படும் துறைமுகத்திலிருந்து இன்ன பண்டங்கள் ஏற்றுமதிசெய்யப்பட்டனவென்றும், அவை உள்நாட்டில் இந்தப்பட்டினங்களிலிருந்து துறைமுகப் பட்டினத்துக்குப் போயினவென்றும் பெரிப்ளஸ் என்ற மேனாட்டுப் பூர்வீககிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்குக் கரைத் துறைமுகங்கள் ஐரோப்பாவுடனும் கிழக்குக்கரைத் துறைமுகங்கள் ஸுமட்ரா, ஜாவா, சீனாவுடனும் வியாபாரம்செய்துவந்தன. குஜராத்திலிருந்துகூட ஈழத்தேசத்துடன் வியாபாரம்செய்ததாகத் தெரிகிறது. "ஜாவாவுக்குப்போனவன் திரும்பிவரமாட்டான்; வந்துவிட்டால் பல தலைமுறைகளுக்குக் காணும்படி சொத்துக்கொண்டுவருவான்" என்று குஜராத்திபாஷையில் ஒரு பழமொழி இருப்பதால், குஜராத்திலிருந்துபுறப்பட்டு இந்தியாவைச் சுற்றிக்கொண்டு கீழ்த்தேசங்களுக்குப்போவது கஷ்டமாயிருந்தாற்போலத் தெரிகிறது. பிரஸ்தாபகாலத்திற்குப்பிறகும் அநேகநூற்றாண்டுகள் ஆகும்வரையில் அன்னியதேசங்களுடன் இந்தியா வியாபாரம்செய்துவந்ததாகப் பிரமாணங்கள் இருக்கின்றன. பண்டைக்கால ஹிந்து ராஜ்யங்களின்சரித்திரங்களைப் படித்துப்பார்த்தால்தான் முற்காலப்பெருமை விளங்கும் என்று சொல்லி ஜனம் ஸமல்தான் தம்முடைய பிரசங்கத்தை முடித்தார்.

(சுதேசமித்திரன்)

புத்தகமதிப்புரை.

குமரவேள்மும்மணிக்கோவை:—இது, சிதம்பரம் ஸ்ரீசபாநாயகர் திருவனந்தல், காலைச்சந்திக்கட்டளை ஸ்ரீமத்-வே. தில்லைநாயகமுதலியாரவர்களால் ஆசிரியப்பா, வெண்பா, கலித்துறை என்னும் பாப் பாவினங்களால் அந்தாதியாய் மண்டலித்துமுடியும் அழகிய முப்பது செய்யுள்களையுடையதொரு பிரபந்தமாகப் பண்டையோர் மரபுபற்றியே பாடப்பெற்றுள்ளது. இதைப் படிப்பவர்களுக்கு இப்பிரபந்தத்தின் ஆக்கியோராகிய முதலியாரவர்கள், அருமையான தமிழிலக்கிய இலக்கணப்பயிற்சியும், செய்யுளியற்றுந்திறமையும், செவ்வியினமைந்தவர்களென்பதும் நன்கு புலனாகும். இதற்கு, சீர்காழி L. M. C. ஹைஸ்கூல் பண்டிதர் இராஜாப்பிள்ளையவர்களியற்றிய அருங்குறிப்பும் சேர்க்கப்பெற்றிருக்கிறது. இதன்விலை அணா 4. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப்பெறலாம்.

பத்திராதிபர்.

மாறனலங்காரம்.

இந்த அரியபெரிய அலங்காரநூல், மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால் பதிப்பிக்கப்பெற்றது. தமிழறிஞர்கள் யாவருக்கும் பயன்படக்கூடியது. பிரிண்டிங்டிம்மி 8 பக்கம் கொண்டபாரம் 80 உள்ளது. நேர்த்தியான கலிகோபைண்டுசெய்யப்பெற்றிருக்கிறது. நல்லகாகிதத்திற் றெளிவான எழுத்திற் பதிக்கப்பெற்றது. தமிழ்மக்கள் யாவரும் வாங்கி உபயோகிக்குமாறு இதற்கு விலையும் சொற்பமாக (ரூ. 2—8—0) ஏற்படுத்தப்பெற்றிருக்கிறது. வேண்டுவோர் மதுரைத்தமிழ்ச்சங்கம் மானேஜருக்கு எழுதிப்பெறலாம்.

மானேஜர்

கடவுள் துணை.

செந்தமிழ்

OFFICE OF THE REGISTRAR OF SOCIETIES
REGISTERED
19 APR 1916
MADRAS

தொகுதி-கச.] ராக்ஷஸ வருஷ மாசிமீ [பகுதி-ச.
Vol. XIV. February—March, 1916. No. 4.

ஐயவினாத்தொடர்.

முத்தமிழ்த்துறையின்முறைபோகிய உத்தமப்புலவர்களுடைய திவ்யசமுகங்களுக்கு,

அடியேன் தண்டமிழ்த்தொண்டன் எனது ஐயத்தைப்போக்கிக் கொள்வான் எழுதிக்கொள்வது.

அருளமை ஐயன்மீர்!

இன்பந்தரும்நூல்கள்சேர் எட்டுத்தொகையினுள் இரண்டாவதாயதும், 'நல்ல' என்னும் அடைமொழிபுணர்த்தி நம் முன்னோராலே பாராட்டப்பெற்றதுமான குறுந்தொகை இதுகாறும் அச்சில்வெளிவராதிருந்தது.

அக்குறையை, வாணியம்பாடி 'மதரஸே இஸலாமியா' பண்டிதராய ஸ்ரீமான்-தி. சௌ. அரங்கசாமிஐயங்கார் அவர்கள் அரிய உரையுமெழுதி எவர்க்கும் எளிதிற்கிடைக்குமாறு அதனை அச்சிட்டு வெளியிட்டதனால் நீக்கிவிட்டார்கள். அது நம்மவர்செய்த நல்வினைப்பயனேயாம் என்ப தொருதலை. நிற்க,

(1) நான், அக்குறுந்தொகையின் ககக-ம் பாட்டைப்படிக்கையில் அப்பாட்டிலுள்ள,

"மென்றோ ணெகிழ்த்த செல்லல் வேலன்
வென்றி நெடுவே ளென்னு மன்னையு

என்ற அடிகளுக்கு—"தோழி, வெறியெடுப்பக்கருதிய தாயதுநிலைமையைக் கூறுகின்றாளாதலின்",—முதலில் என்மனத்தே '(தலைமகளின்) மெல்லியதோளை நெகிழச்செய்த துயரத்தை, (உண்மையை அறியாத) வேலன், வெற்றிபொருந்தியமுருகன் (தந்தது) என்று சொல்லுவான்; அன்னையும் அதனையே (உண்மையென) உணருவாளாயின்' என்ற பொருள்தோன்றியது.

தவிர, 'காற்றமுந் தோற்றமும்' (தொ—பொ—௧௧௪) என்னுஞ் சூத்திரத்திலுள்ள களம்பெறக்காட்டும் என்ற பாகத்தின் உரையிலே ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'தாயறியாமைகூறி வெறிவிலக்கியதற்கு' உதாரணமாகக்காட்டியுள்ள,

"கறிவளர் சிலம்பிற் கடவுட் பேணி
யறியா வேலன் வெறியெனக் கூறு
மதுமனங் கொள்குவை யன்னையிவள்
புதுமலர் மழைக்கண் புலம்பிய நோய்க்கே"

என்ற ஐங்குறுநூற்றின் ௨௪௫-வது செய்யுளும் என் எண்ணத்தை வலியுறுத்தியது.

ஆனால் அவ்வடிகளுக்குக் குறுந்தொகைஅச்சுப்பிரதியில், "மெல்லியதோளை நெகிழச்செய்த துயரத்தை, வேலினானை வெற்றியைக் கொண்ட முருகன்தந்தது என்றுகருதும் அன்னையும், அதனையே உண்மையென உணர்வாளாயின்" என்று உரை எழுதப்பெற்றுள்ளது.

ஆயினும், நூலின்பெருமையும் எனதுசிறுமையும் என்மனத்தே நன்கு பதிந்திருக்கின்றமையின், எனக்குத்தோன்றியபொருளையே நான் சரியெனக்கொண்டேனல்லன். என்றாலும் உண்மையைத் தெரிந்துகொள்வான் நுங்கட்கறிவித்துக்கொண்டேன்.

(2) இந்நூலுட், 'பயன்' கூறுகையில் 'அயர்வுயிர்த்தல்'என்றே எழுதப்பெற்றுள்ளது. அஃது அயாவுயிர்த்தல் என்றிருக்கவேண்டுமெனப் பெரியோர்சொல்லக் கேட்டுளேன். பொருந்துவதெதுவோ?

(3) ௧௩௧-ம் பாட்டின்,

"ஆடமை புரையும் வனப்பிற் பணைத்தோட்
பேரமை கண்ணி யிருந்த வூர்"

என்ற அடிகளிலுள்ள, 'பேரமை கண்ணி' என்ற பதங்களுக்குப் "பெருமை யமைந்த கண்ணி" எனப்பொருள் எழுதப்பெற்றுளதோடு, அமைக்கண்ணி என்று பாடபேதங்கொண்டு, இதற்குப்'பொருந்துதலையுடைய கண்ணினள்' என்றும் பொருள் எழுதப்பெற்றுளது.

ஈண்டு, என் சிற்றறிவிற்கு அப்பதங்களுக்குப் பேர்+அ+மை+கண்ணி='பெரிய அழகிய மைதீட்டிய கண்ணினள்' என்று பொருள் கொள்ளலாமோவென்று தோன்றுகிறது. உண்மை யெதுவோ?

(4) ௧௨௪-ம் பாட்டிலுள்ள,

"கவைமக நஞ்சுண்டா அங்கு," என்ற அடிக்குக் 'கவர்த்த அறிவையுடைய மகவு நஞ்சினையுண்டாற்போல' என்று பொருள் வரையப்பெற்றிருப்பதுடன், விசேடவுரையிலே 'கவைமக—எவற்றைக்கேட்பினும் ஆமென்னும் அறிவையுடைய மகவு' என்றும் வரையப்பெற்றுள்ளது.

ஆனால், எனதாசிரியரவர்கள் இக்குறுந்தொகையைப் பரிசோதிக்கையில் இச்செய்யுள்வந்துழி அவ்வடியைக் 'கவைமக னஞ்சுண்டா அங்கு' எனக்கொண்டு, கவைமகன் என்பதற்கு 'இரண்டுதலையும் ஒரு உடலும் உள்ள மகன்' என்று பொருள்சொன்னதோடு, இவ்விதம் இரண்டுதலையும் ஒரு உடலும் உள்ள மானிடப்பிறவி உண்டென்றும், அம்மாதிரியான ஒருகுழந்தையைச் சுமார் பத்துவருடங்களுக்கு முன் அதன்பெற்றோர் பிரபலபட்டினங்களுக்குக்கொண்டுபோய், அதனைப் பார்க்கவிரும்புவோரிடம் ஏதோ ஒரு சிறிது தொகையைப் பெற்றுக்கொண்டு காண்பித்துவந்தனர் என்றும், தாமும் அக்குழந்தையைப் பார்த்ததாகவும், அஃது இரண்டு வாய்களின்வழியாகவும் உணவை உட்கொண்டதென்றுஞ் சொல்லியருளினார்கள். அக்காட்சியைத் தாமும் அச்சமயம்பார்த்ததாக எனது நண்பரொருவரும் என்னிடங்கூறினர்.

இனி, இவ்வடிவந்துள்ள அப்பாட்டு, தோழிகூற்றாகையினால், அதற்குத் தோழி தலைவனைப்பார்த்து 'தன்னை உடலாகவும், தலைவன் தலைவி ஆகிய இருவரையும் (அவ்வுடலினுள்ள) இரண்டுதலைகளாகவும் வைத்து, நீ இரவிலே ஏதந்தரும்வழியே வருகின்றதனால் நினக்கு ஏதேனும் ஊறுண்டாகுமோ என்ற பயத்தினால் ஒருபுறமும், நீ வாராதிருப்பின் நின்பிரிவைநினைந்து அறியாமையினாலே தலைவி வருந்துகின்றாளாதலின் அதனால் அவட்கு ஏதேனும் இன்னல் உண்டாகுமோ என்ற பயத்தினால் ஒருபுறமுமாக நான், இரண்டிடத்தும் இடர்ப்படுகின்றேனாதலின் "கவைமக னஞ்சுண் டாஅங், கஞ்சுவல்" என்று கூறிச் சிறைப்புறத்துள்ளதலைவன் உணருமாறு வரைவுகடாவுவாளாயினள், என்று பொருள்கொள்ளலாமோவெனஊகிக்கவும் இடந்தருகிறது.

நிற்க, இம்மாதிரி 'கவைமகன்' என்றது உண்டு என்று கருதுவதற்கு வடமொழிப்பஞ்சதந்திரத்துள் ஐந்தாந்தந்திரமாகிய அசம்பிரேட்சகாரித்துவம் பன்னிரண்டாவதுகதையின் கூ௪-வது சுலோகமும் இடந்தருகிறது.

எனக்குச் சந்தேகமாகத்தோன்றியவற்றை நுங்கட்குத் தெரிவித்துக்கொண்டேன். **கும்பிட்டகையைவெட்டலாகாது** என்ற வழக்குரையைக் கற்றவர்களாகையால் நீங்கள் என் ஐயத்தை நீக்குவீர்களென்பது நிச்சயம்.

உ. சா. வேங்கடராமன்,

தண்டமிழ்த்தொண்டன்.

மக்கட்பேறு.

மக்கள்+பேறு=மக்கட்பேறென்றாயது; வேற்றுமைத்தொகை; ளகாரம் டகாரமாயிற்று; பேறு, முதனிலைதிரிந்ததொழிற்பெயர்; மக்களைப்பெறுதலென்பதிதன்பொருள்.

இம்மக்கட்பேற்றில், நன்மக்களைப்பெறுதல், பெற்றோரடையும் இன்பம், பெறாதாரடையும் துன்பம், தந்தைமகற்கியற்றும் நன்றி, மகன் ஆற்றும் கடமை என ஐவகைப்பகுதிகள் உள. இவற்றுள்,

நன்மக்களைப்பெறுதல்.

இந்நிலவுலகின்கண்ணே, இயல்பாகஇறுக்கப்படும்கடன் மூன்று; அவை, முனிவர்கடன், தேவர்கடன், தென்புலத்தார்கடன் என்ப. முனிவர்கடன் கேள்வியானும், தேவர்கடன் வேள்வியானும், தென்புலத்தார்கடன் புதல்வரைப்பெறுதலானும் இறுக்கப்படல்வேண்டும். என்னை?

"...........பூந்தண் மார்ப
தொலையாக் கொள்கைச் சுற்றஞ் சுற்ற
வேள்வியிற் கடவு ளருத்தினை கேள்வி
யுயர்நிலை யுலகத் தையரின் புறுத்தினை
வணங்கிய சாயல் வணங்கா வண்மை
யிளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல்கட னிறுத்த வெல்போ ரண்ணல்"

என்று பதிற்றுப்பத்து, ஏழாம்பத்திற் கபிலரும்,

"(1)கேள்வி கேட்டுப் (2) படிவ மொடியாது
வேள்வி வேட்டனை யுயர்ந்தோ ருவப்ப
... ...
சுலம்பெறு திருமணி கூட்டு நற்றோ
ளொடுங்கீ ரோதி யொண்ணுதல் கருவில்
(3) எண்ணியன் முற்றி (4) யீரறிவு புரிந்து

---

(1) கேள்விகேட்டல்-யாகம்பண்ணுதற்கு உடலான விதிகேட்டல்.
(2) படிவம்-யாகம்பண்ணுதற்கு உடலாக முன்புசெலுத்தும் விரதங்கள்.
(3) எண் இயல் முற்றி-திங்கள் பத்தும் நிரம்பி.
(4) ஈரறிவு-இம்மையறிவு, மறுமையறிவு; பெரியவறிவுமாம்.

சால்புஞ் செம்மையு முளப்படப் பிறவுங்
காவற் கமைந்த வரசுதுறை போகிய
வீறுசால் புதல்வற் பெற்றனை யிவணர்க்
கருங்கட னிறுத்த செருப்புகன் முன்ப"

என்று ௸ எட்டாம்பத்தில் அரிசில்கிழாரும் கூறினாராகலின். இனி,

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல னன்மக்கட் பேறு"

இதில், ஒருவற்கு மனையாளது நற்குண நற்செய்கை இரண்டனையும் நன்மையென்று அறிந்தோர் சொல்லுவர்; அந்நற்குண நற்செய்கை யிரண்டிற்கும் நல்லபுதல்வரைப்பெறுதலை நல்ல அணிகலமென்று சொல்லுவர். ஆகலின், முற்கூறியகடனிறுத்தற் கின்றியமையாத அவ்வணிகலமாய நன்மக்கட்பேறு அத்தியாவசியமன்றோ! அம்மக்களுடையாதற்குத் தந்தை தாயர் செய்யும் மேலைத்தவம் எத்துணை! அத்துணையும் கரதலாமலகம்போற் கைகூட்டவல்லார்க்கே அந்நன்மக்கட்பேறு உரிமையாமென்பதொருதலை. இதுபற்றியன்றோ?

"வண்மையு மாண்பும் வளனு மெச்சமுந்
தெய்வமும் யாவதுந் தவமுடை யோர்க்கு"

என்றெழுந்ததும்.

அன்றி, மூந்நீர் மன்னிய இந்நிலத்துப் பிறவி எண்ணிறந்தன. அவற்றுள் மானிடப்பிறவி அதிகமெனப் பேசிய நூல்களும் அலகில்லன. ஆகவே, எய்துதற்கரிய யாக்கையெடுத்த மக்கட்கெல்லாம் நன்மக்கட்பேறடைதலைவிட வேறடைதற்குரிய பெரும்பேறென்பதொன்றின்மையாகும். இக்கருத்துப்பற்றியே மதுரைக் கூடலூர்கிழார்,

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
மக்கட் பேற்றிற் பெறும்பே றில்லை"

என்றார்.

இனி, பேறு பதினாறனுள்ளும் இம்மக்கட்பேறு, ஐந்தாவதாகத் தொட்டெண்ணப்படினும், இஃதொன்றுண்மையாக மற்றேனையபேறும் பெறல்காரணமாக ஆன்றோர்கூறியவாறு இது, தலையாயதெனக்கோடல் சாலும். வேதாகமங்களில் "இலைமறைகாய்போல்" மறைந்தனவிரிக்கும் நம் உத்தரவேதமும்,

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

என்று முழங்கியதூஉ மதற்குக் கரியாகும்.

அன்றியும், வீரனொருவன் தன் பகைவருடைக் கெடுக்கக் கருதிய ஞான்று,

"ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
மெம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மின்"

என்ற புறப்பாட்டில், "பேணித்...பெறாஅதீரும்......நும்மரண்சேர்மின்" என்றதனால், படைப்புக்காலந்தொட்டு அயனாற் படைக்கப்பட்டோர் கடவுட்சாதியும், தென்றிசைக்கண்வாழ்வோருமாகிய பிதிரர்களுக்குச் செய்தற்கரிய பிண்டோதகக்கிரியைகளைச் செய்துமுடிக்கும் நல்லாண்மகப்பெறாதாரையும், பசுப் பார்ப்பார் பெண்டிர் பிணியரொடு சேர்த்தெண்ணி விலக்கியது அவ்வீரர்க்குரிய மரபெனக; அன்றி அறனெனக; எவ்வாறாயினுமாக. இதனால் அவர், தென்புலத்தார்கடனிறுத்தற்கேதுவாம் நற்புத்திரப்பேற்றைப்பெற்றுய்தலும் நோக்கமென்பதொருபடியாகும்.

பின், "கறைபன்னீராண்டுவிடுமின்" என்ற தொடக்கத்தினையுடைய சீவகசிந்தாமணிப்பாட்டுரையில் நச்சினார்க்கினியர், "புதல்வற் பயந்தாற் சிறைவிடுசெய்தல் பிதிரருடைய* தனிசுநீங்குதலாம்" என்று கூறியிருத்தலும் மேலதற்கெய்தியதன்மேற்சிறப்பென்பது கருதப்படும்.

பின்னரும், அப்பா! "அம்மா! வென்றகுக்கழைக்குமார்வச்சொற்" புகன்றழைக்கும் மக்களின்றி மனையறந்துன்றி இம்மையின்பந்துய்த்தலாகிய மிக்கவாழ்வானது, "தியானமில்லாதநெஞ்சும், ஞானமில்லாத வினையும்" போலாமென்பர். ஆகலின், இந்நிலத்தின்பம் துய்த்தல் காரணமாகவும்,

* தனிசு-கடன்.

"மண்மிசைநால் விரனிற்கு மணி மகுடத் தணியரங்கின் மன்னு ளோரும்
விண்மிசைவா னருநெருங்க விராயவரு மறைச்சடங்கி னிராய சூயங்
கண்மிசைமா மணிநிகரென் கான்முளையைப் புரிவியெனக் கால னூரிற்
பண்மிலைசவீ ணையின்கிழவன் பாண்டு மொழிந் தனனெனவும் பகர்வுற் றனே"

என்னும் ஐந்தாம்வேதத்தில், யமபுரத்துத் துன்பந்துணையா வீற்றிருந்த பாண்டுபூபதி, மறுமையின்பந்துய்ப்பான்கருதி யதற்கேதுவாம்மகத்தை எனதுபுத்திரன் தர்மபூபதியாற்செய்வியென நாரதமகரிஷியிடம் கூறி விடுத்தசெய்தி வெளியாம். ஆகலின், பொன்னிலத்தின்பந்துய்த்தல் காரணமாகவும்,

"........................அத்துவிதா
னந்த முதவு மகவிருப்போன் ஞானி யாகும்..."

என்றதில், சுத்தசுகநித்தியாத்துவிதானந்த முத்தியின்பந் தர உரிய நன்மகப்பேற்றைவிரும்புவது நிரம்பவும் உத்தமமென்பது பெற்றாம். ஆகலின், முத்தியின்பந் துய்த்தல் காரணமாகவும், நல்லபுதல்வரைப் பெறல் வேண்டுமெனல் தக்கார்துணிபென்பது கருதப்படும். ஆகவே, இக பர மோக்கமென்னும் இம் மூன்றிடத்தின்பமும் ஒருசேரத்துய்த்தற்கிடனான நன்மக்களைப்பெறல் தந்தை தாயரின்கடமையாகும். அங்ஙனமின்றி, காமம் கழிதலொன்றே பயனாகக்கருதி நலமில்லாத பலபுத்திரரைப்பெற்று வருந்துவதினும் அப்புத்திரப்பேறே இல்லாது ஏமாந்திருப்பது மிகவும் நன்றாகும். இதுபற்றி யெழுந்ததன்றோ!

"அச்சமுள் ளடக்கி யறிவகத் தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி
எச்சமற் றேமாந் திருக்கை நன்றே"

என்றதும்.

இனி, முற்கூறியாங்குப் பற்பல துற்புத்திரரைப் பெறுவதினும், பூவுலகில் மலடென்னும் பெயரும், அப்பாற் புத்தென்னும் நரகமும் தம்மைச் சாராவண்ணம் முத்திக்குரிய ஓரோவொரு சற்புத்திரனையாவது பெறல் நன்மணமுற்ற பொன்மலரன்றே? இதற்குச் சைவசமயாசாரியருள் ஒருவராகிய ஞானசம்பந்தப்பிள்ளைப்பேற்றையடைந்த சிவபாதவிருதயரும், "மறலியுயிர்குடித்த, கான்முளை" யொருவற்றந்த மிருகண்டேயரும் சான்றுவரென்க.

இதுகாறும் கூறிப்போந்தவற்றுள், முற்போதியற்றிய தவப்பயனாலும், தற்போதியற்றும் தெய்வபக்தியுண்மையானும் நன்மக்கட்பேறுண்டாமென்பது கண்டாம்.

பெற்றோர் அடையும் இன்பம்.

மேற்கூறியாங்குப் புண்ணியவயத்தராய்ப்பெற்ற நற்புத்திரப்பேறொன்றினானே, ஏனைய புகழ் வலி வெற்றி அறிவு அழகு முதற்கூறுவனவாகிய பேற்றின்பங்களும்,

"அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்"

என்றதனாற் றம்மக்களால், "இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்" எஞ்சிய கூழை இனிதுறப்புசித்தலினாலுண்டான நுகர்ச்சியின்பமும்,

"மக்கண்மெய் தீண்ட லுடற்கின்பம்"

என்றதனாற் றம் அருமந்தபுதல்வர்தம் மெய்தொட்டுப்பயிறலினாலுண்டான ஸ்பரிசவின்பமும்,

"மற்றவர், சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு"

என்றதனாற் பொன்போலுந் தம் மின்புதல்வரின் குதலைச்சொல், "யாழொடுங்கொள்ளாபொழுதொடும்புணரா, பொருளறிவாராவாயினும்" அதனைக் கேட்டலினாலுண்டான ஸ்ரோத்திரானந்தமும், பிறவுந் துய்த்தற்கிடனான இம்மையின்பம்பலவும் பெறுவர்.

மறுமையிலோவெனின், புத் அல்லது பும் என்னுங் கொடிய நரகவாலதக்கும், "எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப், பண்புடை மக்கட் பெறின்" என்றதனாற் பிறராற் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய புதல்வரைப் பெறுவாராயின், அடியேழ்பிறப்பும், இடையேழ்பிறப்பும், கடையேழ்பிறப்பும் ஆகிய இருபத்தொருமுறையினும்,

"அல்லித்தா ளற்றபோது மறுதநூ லதனைப்போலத்
தொல்லைத் தர்முடம்புநீங்கத் தீவினை தொடர்ந்து நீங்காப்
புல்லிக்கொண் டுயிரைச்சூழ்ந்து புக்குழிப் புக்குப் பின்னின்
றெல்லையி றுன்பவெந்தீச் சுட்டெரித் திடுங்க ளன்றே"

என்றாங்கு நேரும் தீவினையாலுய துன்பவாதனத்திற்கும் இலக்காகாமல் ஆண்டநுபவிக்கும் புண்ணிய உலகவின்பமும் பெறுவர்.

மேற்கூறிப்போந்த இம்மைமறுமையிரண்டிடத்துமுற்ற பன்னலமும், நற்புத்திரபாக்கியவசத்தான், தந்தை தாயாராம் இருபெருங்குரவர்களும் பிதிரர்களும் அடையப்பெறுவரென்பது மனுஸ்மிருதியினும் பரக்கக் காணலாம்.

பின்னும்,

"உரிமை மைந்தரைப் பெறுகின்ற துறுதுயர் நீங்கி
யிருமையும் பெறற் கென்பது பெரியவ ரியற்கை"

எனவும்,

"புத்தான கொடுவினையோ டருந்துயரம் போயொளிப்பப் புவனந் தாங்குஞ்
சத்தான குணமுடையோன் றயையினொடு தண்ணளியின் சாலை போல்வான்
எத்தாலும் கௌசிகரியான் மனுகுலத்தே வந்துதித்தோ னிலங்கு மௌலி
உத்தான பாதனரு ளுரோமபத னென்றுளனிவ் வுலகை யாள்வான்"

எனவும், "சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப் பரமாசாரியன்" ஆகிய அகத்தியமுனிவர், மரமடர்ந்த ஓராரணியத்தில் ஓராலவிருக்கத்தில், பல வாவலுருவோடு அதோமுகராய்ப் பன்னெடுநாட் டுன்பத்தே வீற்றிருந்த தம் பிதிரர்கள் நற்கதியார, உலோபாமுத்திரையென்னும் மாதரசியை மணவாட்டிகைப்படுத்தி, திரிதசியென்னும் புத்திரனைப் பெற்று, தாமும் இன்புற்றனரெனவும் வரும் இதிகாசங்களானும் அறிய வரும்.

இனி, சுத்தாத்துவிதானந்த முத்திநிலையில் இவர்கள், கண்ணொளியும் கதிரொளியும்போல் இரண்டறக் கலந்து, என்றும் உலவாப் பேரின்பப் பெருவாழ்வை அடைவரென்பது சரதமாகும். இதனால், நற்புத்திரப்பேற்றைப் பெற்றார் அடையும் இன்பம் இத்துணையென்பன வெளியாம்.

பெறுதாரடையும் துன்பம்.

இனி, பெறுதார் அடையும் துன்பம் என்றது: பட்டாங்கின்படி, முன்னாட்செய்த பாவமேலீட்டால், தந்தைதாயரிருவருக்கும் நற்புத்திரப்பேறென்னும் பெரும்பாக்கியம் இன்மையாகும்; அற்றாக, இருமையின்பமும் இன்றாம்; பொதுவகையானே அவ்விரண்டிடத்தும் அறவும் துன்பமென்பனவுமையும். சிறப்புவகையான் ஆராயுங்கால், இம்மையில் நல்லாண்மகவின்மையாக அடையும் செல்வம் புகழ்முதலியனவும் பதரெனப் பயன்படலின்றெனக்கொள்வதற் கையம் யாதோ, என்னை?

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்"

எனப் புகழேந்தியாரும், "மக்களின், ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை" என விளம்பிநாகனாரும் கூறினாராகலின்.

அன்றிக்கே, அவர்கள் எத்துணைக் கல்விகேள்வியறிவொழுக்கங்களில் அதிமேதாவிகளென உயர்ந்தோராற் புகழப்பெறினும், சீராட்டிப் பாராட்டும் மக்களின் கிஞ்சுகச் செவ்வாய்க்குதலைச்சொற் கேட்டிலரேயேல், அத்துணையும் கமரிற்கவிழ்த்தபால்போற் பாழ்படுமென்பது தெளிவாகும். இதற்கு,

"சொன்ன கலையின் றுறையனைத்துந் தோய்ந்தாலு
மென்ன பயனுடைத்தா மின்முகத்து—முன்னங்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி"

என்ற பெரியார்வாக்கு நிதரிசனமாம்.

பின்னும், தம்மக்களை அப்பாவா! ஐயாவா! என ஒருமுறை கரம் பொத்தியழைக்குமுன் ஓடித் தவழ்ந்து பற்றிப் புயங்களிலேறி விளையாடும் அவ்வாறுமைக்குமாரின்றி, "காகத்திருகண்ணிற்கொன்றேமணி கலந்தாங்கு"க் கற்புடை யற்புமனைவியுந் தாமும் ஆகத்துள் உயிரொன்றாய்க்கலந்து, மாறின்றிச் செய்யும் மனையறத்தினாற் சிறிதும் இன்பந் தேக்கார்; தென்புலத்தார்களின் தீப்பசியாலுய துன்பமும் போக்கார். இவற்றிற்கு,

"கல்லா மழலைக் கனியூறல் கலந்து கொஞ்சுஞ்
சொல்லா லுருக்கி யழுதோடித் தொடர்ந்து பற்றி
மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சி மைந்த
ரில்லா தவர்க்கு மனைவாழ்வி னினிமை யென்னாம்"

எனவும்,

"மென்பா லகரைப் பயவாதவர் மெய்ம்மையாகத்
தென்பா லவர்தம் பசித்தீயினை தீர்க்கமாட்டார்"

எனவும் வருவன சான்றாம்.

இனி, இவ்வுலகின்மாட்டே நெடியகாலம் உயிரோடிருந்து வாழும் வாணாட்களில், நற்சுதற்றோற்றுவாயின்றித் தந்தை தாயர் இயற்றி முடிக்கப்படும் பொருளின்பபனாகிய நற்சுகவின்பத்தை யவர்கள், எவ்வாற்றானும் இயைவதிலர். இதற்குக் கலைச்செல்வி ஔவையார் அருளிச்செய்த இன்சுவைப்பாவொன்று ஞாபகம் வரலாயிற்று. அது,

> "படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணு
> முடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
> குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
> யிட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்து
> நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து
> மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
> பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே"- (புறம்)

என்பது.

இனி, சண்டிச்சிலர், புத்திரப்பேறின்மைக்கருதி வாழ் ஒருபாலிருக்கத் தெய்வபக்தி சிரத்தையென்பன சிறிதுமின்றி, டாம்பீகத்தனத்தைத் தமக் கங்கியாகக்கொண்டு, தானம் தர்மம் தவம்முதலியனசெய்து, யாத்திரைபலவும் முற்றி, பன்னாட் பட்டினியுற்றுப் பல விரதம்காத்து, இஷ்டதேவை இருந்து தொழுது, "மூவராந்தாருவேந்தை" முறையிற் சுற்றலும்,

சிற்சிலர், நிரீச்சுரபூஜை புரிந்து, பலியூட்டிப் படைத்து, மந்திரக் கயிறுடன் யந்திரத்தகடுதரித்து, பாவைபதித்தலும்,

சிலவர், மலட்டுப்பூச்சிகெடப் புற்றுப்பூச்சியுண்டு, மலைவேப்பிலைச் சாறுகொண்டு, வேப்பச் சுந்நியெண்ணெய்பருகி, தீய மருந்துகோடலும்,

ஒருசிலர், அயல்வீட்டிற்சனித்த ஆண்சிசுநஞ்சை வஞ்சித்துண்டன்முதலிய பல இடக்கரடக்கல் வினைபுரிதலும் ஆகிய இன்னோரன்ன முயற்சிமேற்கோடல் இறப்பவும் துன்பம் உண்டாதற்கிடமேயன்றிக் கிஞ்சித்தும் இன்பந்துய்த்தற்கிடனான சற்குமாரனைப்பெறக் காரணமாகா.

மறுமையிலோவெனின்? புத்தென்னும் நரகம் இவர்க்குக் காணியன்றோ? தீவினையென்னும் தொடர்சங்கிலியுட் கட்டுண்டு, சென்மங்கடோறும் துன்புறுவர்; மேற்கூறிய இவ்விரண்டின்பாலும் இவர்கட்குத் துக்கமேயொழியத் தக்கசுகமென்ப தில்லை. உதாரணமாக,

> "மெய்தானம் வண்மை விரதந்தழல் வேள்வி நாளுஞ்
> செய்தாலு ஞாலந் தவர்நற்கதி சென்று சேரார்
> மைதாழ் தடங்கண் மகவின்முக மன்னு பார்வை
> யெய்தா தொழியிற் பெறுமின்ப மிவணு மில்லை"

என்றெழுந்ததும் கவனிக்கத்தக்கது.

மேலே வீட்டுலகத்தின்பமும் இவர்கட்குச் சொற்பனத்துமில்லையன்றோ? இதனால், நற்புத்திரப்பேறின்மையானே பெறுதார் அடையும் துன்பம் இவையென்பன அறிந்தாம்.

தந்தை மகற்கியற்றும் நன்றி.

நன்மகப்பேறுபெற்ற தந்தை, மகனுக்குப் புனிதமான ஊணும் போதியஅளவு உடை முதலியனவும் அளித்தல்வேண்டும்.

> "அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னு மாடையு மாதரவாக்
> கொள்ளிக்கும் பட்ட கடனுக்கு மென்னைக் குறித்ததல்லாற்
> றுள்ளித் திரிகின்ற காலத்தி லேயென் றுடுக்கடக்கிப்
> பள்ளிக்கு வைத்தில னேதந்தை யாகிய பாதகனே"

என்ற தக்கார்வாக்கின்படி மைந்தன் பின்னர்க் குறைகூறுவண்ணம் எண்ணி, "மக்களைக், கல்லா வளர விடறீது" என்ற விம் மெய்ந்நீதியைக் கைக்கொண்டு, "தந்தை மகற்காற்று நன்றி யவையத்து முந்தி யிருப்பச் செயல்" என்ற பொய்யில்புலவர்வாக்கைத் தம்ஞாபகத்தெழுப்பிப் பன்னலமும் ஒருசேரக்கோடற்கு நல்லாசிரியர்பாற் கல்விபயிறவிடல், தந்தை மைந்தனுக்குச்செய்யும் எந்நன்றியினும் முக்கியமான செய்ந்நன்றியாகும்.

இம்மட்டிலமையாது, "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்பதுகருதி, தாமும் ஒரு போதகாசிரியராயிருந்து, விதியின்ன விலக்கின்னவென்பன பசுமரத்தாணிபோற் பதியப்பதித்து, "பொய்க்கின்ற ஞானமும் பொல்லா வொழுக்கமும்", 'கள்ளும் பொய்யுங் காமமுங்

சொல்லையு, முள்ளக் களவும்'', "கூறலை வன்சொற் பயனில்சொல்" லும், இவ்வைபோல்வன ஏனைய தீமைகளும் ஒருவச்செய்தலாகிய காரியங் களிற் கண்ணுங்கருத்துமாய்நின் றுழைத்தல் கடப்பாடாகும்.

பின், "தந்தையொடு கல்விபோம்" என்ற இவ்வுறுதிமொழியை மறதிபண்ணுமல், "முயற்சி, மெய்வருத்தக் கூலிதரும்" ஆகலின் ஒரு ஞாநாசிரியரைநாடி, அவரிடம் ஞானசாத்திரங்களை முறையாய் ஓதி யுணர்விக்கவேண்டும்.

அப்பால்,

"ஞானி யென்பது நாரியென் றுரைத்திடு கலையால்
வேறு வானது விளைந்துபோய்ப் புகுந்தது வென்றாற்
கான லாவதோ ருருவமெய்ந் நாரியைக் கண்டாற்
பூணு வார்மயல் காளைய ரென்பதும் புதிதோ"

என்ற கவியின்படி, மைந்தன் இல்லறவின்பந்துய்ப்பான்கருதி மணம் விரும்புமாயின், குலனும் குணனும் குடிமையும் ஆய்ந்து, பங்கமில்லாத ஒரு நங்கையைப்புணர்த்தி, கணவனும் மனைவியும் மாறின்றிச்செய்யும் மனையறமாட்சியின் மற் றேனையவறமும் காட்சியாமென்பதுகாட்டி, அங்ஙனம் நடத்துவிக்கவேண்டும். பின், "கொள்ளிக்கும் பட்ட கடனுக்கு"மென்னுது, அறநெறியிற்றேடியபொருளும் பூமியும் போதிய வளவு நிறைத்துவைத்தலும் தந்தையின் கடமையாகும்.

இதனுனே, தந்தைமகற்காற்றும் நன்றி இவ்வளவின எனல் போதரும்.

மகன் ஆற்றும் கடமை.

மகன், அதிகாலையிற் றுயில்நீத்தெழுந்து, பிராதகாலக்கடன்முற்றி, "உண்மாசு கழுவுவது நீறென்றே" அல்லது, "திருவுறைமார்பன் றிரு மண் ணென்றே" கருதித் தத்தஞ் சமயக்கொள்கைக்குத் தக்கதோர் குறியை நெறிப்படி நெற்றியிற்றீட்டி, புருஷார்த்தங்களும் தந்தைதாய ரிருவரையுந் தொழுதுவரலென்பதுகருதி, அநவரதமும் அவர்களைத் தொழுதுவரல் [illegible] பல்லாற்றானும் முதன்மையென்பது துணிபு. என்னை?

"வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யு
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற்
றந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை"

என்றாராகலின்.

இனி, "மகனுரைக்குந் தந்தைநலத்தை"

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்"

என்றவற்றுட்டோன்றும் பயன்கள், பேரறிவும் பெருங்கல்வியுமுடைய னாகச்செய்த தன்னருமைத்தந்தையாருக்குச் சாரவொழுகலும், தந்தை யார், தனக்குபகரித்த ஏனைய எந்நன்றியையும் "உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' என்ற இந்நீதியைமறவாது படித்து, "தந்தைதாய்ப் பேண்" என்பதைக் கடைப்பிடித்து, தாலமுழுதலை அதன் வீழ் தாங்குவதுபோற் காலத்துக்கேற்ற கைம்மாறுதவிடலும் அடுத்த நிலைமையாகும்.

பின், தந்தைதாயர், இது செய்யென்னுமுன்னம் குறிப்பறிந்து அவரேவும் ஏவல்களைச்செய்துமுடிப்பது தவறுதலிலெனினும், எளிய பின்னராவது "தந்தைசொன்மிக்கமந்திரமில்லை'' "தாய்சொற்றுறந் தால்வாசகமில்லை'' என்பனகொண்டு, அவர்கள் இட்ட கட்டளைகள் நன்மைபயப்பனவோ? அன்றித் தீமைபயப்பனவோ? எதுவெயன்று னும் அவை நிறைவுறவெண்ணிக் கடைப்பிடித்தல் கடப்பாடாகும். இதற்குச் சான்றாக,

"மன்னவன் பணியன்றாகி னும்பணி மறுப்ப னோவென்
பின்னவன் பெற்றசெல்வ மடியனேன் பெற்ற தன்றோ
என்னினி யுறுதியப்பா லிப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கானமின்றே போகின்றேன் விடையுங் கொண்டேன்"

இதில், தந்தையின் ஆக்ஞையுடன் சிற்றன்னை கைகேசி கூறியசொல்லைத் தலைமேற்கொண்ட ஸ்ரீராமபிரானும், மேல், தந்தையுடம்பாடாக்ச் சிறிய தாய் கருதிகூறிய உறுதிமொழி கடவாதுகொண்டு தவமேல்நடந்த பரதராஜனும் அமைவரென்பது அறியத்தக்கது.

இனி, தந்தை தாய் குரு அரசர் ஆசாரியர் துறவோர் மூத்தோர் ஆகிய இன்னோரும் இன்னோரன்னோரும் வரக் கண்டெழுந்து உபசரித்தன்முதலிய கருமங்களையும் கடைப்பிடித்தொழுகல் தக்கபயனுடைமை யாகும். இதுபற்றி வந்ததன்றோ?

"அரச னுவாத்தியான் தாய்தந்தை தம்மு
னிகரில் குரவ ரிவரிவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே
யாவருங் கண்ட நெறி" என்றது.

மேற்கூறியாங்கியலாது, கல்வியாலேனும் செல்வத்தாலேனும் மம்மர்நோயுற்று, தங்குரவர்முதலியோர்வர மதியாது, இருமாந்திருப்பரேல் அக்கணமே அத்துணையும் இழப்பரென்பது சுருதியாகும்; நரகமும் இவர்கட்குறுதியாகும். உதாரணமாக,

"ஒல்லெனக் குரவ னேக வும்பர்கோன் றிருவி னுக்கம்
புல்லெனச் சிறிது குன்றப் புரந்தர னறிந்திக் கேடு
கல்லதொல் குரவற் பேணு நவையினால் விளைந்த தென்னு
வல்லலுற் *றறிவன் றன்னைத் தேடவா னுயி னனே" எனவும்,

"சொற்பொரு ளுணர்த்தி னானைத் தொழவுள நாணுவானும்,"

எனவும்,

"குரவர்தம் முரைகடக்குங் கொடியனுந் துறந்துளார்தம்
வரவெதிர் கண்டெழாத மறவனும்"

எனவும் வருவனவற்றானறியப்படும்.

இனி, தந்தை தாயர் சரமங்காறும், பரசுராமர் பட்டினத்தடிகள் போல அவர்களைப் பாதுகாத்து, பின்னிகழும் ஈமக்கடன்முன்னாக அமைவன கடன்களிறுத்து, "தனுவுளவளவுமோர்தகுநற்செய்கையும்" என்றாங்கு, தம்வாணாளை வீணாளாக்காமல் மனமாதிய கரணசுதந்தரத்துடன் மனையறத்துற்று,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லொன்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை"

என்ற நந்தமிழ்வேதத்தைக் கடைப்பிடித்தொழுகல் கடப்பாடாகும்.

இதனால், மகன் ஆற்றுங்கடமை இவையென்பன கண்டாம். சுபம்.

I. M. முருகையவாத்தியார்,
B. E. ஸ்கூல், செங்கிபட்டி,
Tanjore.

* அறிவன்— பிரகஸ்பதி.

உ

ரஸாயனநூல்.

CHEMISTRY.

OFFICE OF THE REGISTRAR OF JOINT... 11 APR 1915 MADRAS

செந்தமிழ் (தொகுதி-கச பகுதி ங-ல்) ககஉ-ஆம்பக்கத் தொடர்ச்சி.

அத்யாயம்—24.

சுண்ணம்.

Calcuim.

[Ca.]

சுண்ணம் அல்லது சுண்ணசத்து என்னும் லோஹம் தனிப்பொருளாய்க்கிடைப்ப தரிது. அதன்கல்பங்கள் பலவாறாக அகப்படுகின்றன.

சுண்ணகல்பங்களிற் சில:—சுண்ணாம்புக்கல் (Quicklime=சுண்ணாக்ஸிஜம்) சிமைச்சுண்ணாம்பு, பளிங்கு, சுண்ணப்பாறை, பவளப்பாறை முதலானவைகள், சுண்ணகரிஜங்கள். ஜிப்ஸம் என்பது சுண்ணகந்தஜம். எலும்புமண் (Bone earth) என்பது சுண்ணபாஸஜம். சுண்ணம் வெண்ணிறமானலோஹம்.

சுண்ணாக்ஸிஜம்.

Calcuim oxide.

[Ca O.]

சுண்ணாக்ஸிஜம் என்பது, சுண்ணமும் ஆக்ஸிஜனும்கலந்த ஒருகல்பம். சுண்ணகரிஜங்களை உலையில் வேகவைத்தால் சுண்ணாக்ஸிஜம் உண்டாகும்.

முறை. சுண்ணகரிஜம்=சுண்ணாக்ஸிஜம்+கரித்வயாக்ஸிஜம்.

$$Ca\,CO_3 = Ca\,O + CO_2.$$

உபயோகம். சுண்ணாக்ஸிஜத்தை அதிகமாய்க்காய்ச்சினால், வெண்ணிறமான ஒளி உண்டாகும். இதற்குச் சுண்ண ஒளி என்று பெயர். இது ஜாலக்கண்ணாடி (Magic lanterns)களுக்கு உபயோகப்படும்.

சுண்ணஹைத்ராக்ஸிஜம் அல்லது சுண்ணநீறு.

Slaked lime.

[Ca H_2O_2.]

முற்கூறிய சுண்ணக்ஷிஜத்தில் தண்ணீரைக்கலந்தால், அது நீறிவிடும். சாதாரணமாய்ச் சுண்ணும்பு நீற்றப்படுவதைப் பார்த்திருக்கிறோம். அவ்வாறு உண்டாவது சுண்ணும்பு அல்லது சுண்ணநீறு என்று பெயர்பெறும்.

முறை. சுண்ணக்ஷிஜம் + ஜலம் = சுண்ணநீறு.

$$Ca\,O + H_2O = Ca\,H_2\,O_2.$$

சுண்ணகரிஜம்.

Calcuim Carbonate.

[Ca CO_3.]

முற்கூறிய சுண்ணநீற்றைத் தண்ணீரிற்கரைத்து அதில், கரித்வயாக்ஷிஜத்தைக்கலந்தால், சுண்ணகரிஜம் உண்டாகும். ஓர் அகன்ற தொட்டியில் சுண்ணும்புநீரைத் திறந்துவைத்திருந்தால், கொஞ்சநேரத்துக்குப்பிறகு தண்ணீரின்மேல் இலேசாய் ஒரு வெண்மைநிறமான ஆடைபோன்ற ஒருவஸ்து பாவியிருக்குமல்லவா. இதுதான் சீமைச் சுண்ணும்பு அல்லது சுண்ணகரிஜம்.

முறை. சுண்ணநீறு
+ கரித்வயாக்ஷிஜம் } = { சுண்ணகரிஜம்
+ ஜலம்

$$Ca\,H_2\,O_2 + CO_2 = Ca\,CO_3 + H_2\,O.$$

சுண்ணத்விகரிஜம்.

Calcuim Bicarbonate.

Ca $H_2\,(CO_3)_2$.

முற்கூறிய சுண்ணகரிஜத்துடன் இன்னொருபங்கு கரித்வயாக்ஷிஜமும் ஜலமும் கலந்தால், சுண்ணத்விகரிஜம் உண்டாகும்.

முறை. சுண்ணகரிஜம்
+ கரித்வயாக்ஷிஜம்
+ ஜலம் } = சுண்ணத்விகரிஜம்.

$$Ca\,CO_3 + CO_2 + H_2\,O = Ca\,H_2\,(CO_3)_2.$$

குணங்கள். இது தண்ணீரிற் கரையும். காய்ச்சினால் மறுபடி பிரிந்துவிடும். இதனால் தண்ணீர் உறுதியாகும். சுண்ணநீற்றுடன் கலந்து சீமைச்சுண்ணும்பாகும்.

சுண்ணக்ளோரம்.

Calcuim chloride.

[Ca Cl_2.]

இது ஒரு நீர்க்காரிப்பொருள். அதாவது வெளியே திறந்துவைத்தால், காற்றிலுள்ள ஈரத்தைக் கவர்ந்து அதிற்கரைந்துவிடும். 1 பங்கு சுண்ணமும் 2 பங்கு க்ளோரமும்கலந்த ஒருகல்பம். க்ளோராமிலத்தில், சுண்ணகரிஜத்தைக்கரைத்தால் இப்பொருள் உண்டாகும்.

முறை. சுண்ணகரிஜம்
+2 க்ளோராமிலம் } = { சுண்ணக்ளோரம்
+ ஜலம்
+ கரித்வயாக்ஷிஜம்.

$$Ca\,CO_3 + 2\,H\,Cl = Ca\,Cl_2 + H_2\,O + CO_2.$$

ஜிப்ஸம் உப்பு.

பரிபாஷை { சுண்ணகந்தஜம்
Calcuim sulphate.

[Ca SO_4.]

இது ஒரு பிறவிச்சரக்கு. சுண்ணஉப்புக்களுடன் கந்தஜநீரைக் கலந்தால் இவ்வுப்பு உண்டாய் நீரின் அடியிற்படியும்.

முறை. சுண்ணக்ளோரம்
+ ஸோடியகந்தஜம் } = { 2 கறியுப்பு
+ சுண்ணகந்தஜம்.

$$Ca\,Cl_2 + Na_2\,SO_4 = 2\,Na\,Cl + Ca\,SO_4.$$

இயற்கையில், இதில் ஈரமிருக்கும். காயவைத்தால் அதிலுள்ள நீர்வற்றி, மீதமுள்ளது பொடியாய்விடும். இதுதான் பாரிஸ்சுண்ணும்பு (Plaster of Paris) எனப்படும். சுண்ணும்பு வார்ப்புகள்செய்ய இது விசேஷமாய் உபயோகப்படும்.

தாம்ரம்.

Copper.

[Ca.]

மறுபெயர்—செம்பு.

இது ஒரு சிவந்தலோஹப்பொருள். பொடிக்கம்பியாகவும் இலேசானதகடாகவும் அடிக்கக்கூடியது. தாம்ரம் நல்ல தாபவாஹினி. நல்ல

மின்சாரவாஹினி. தாம்ர உப்புக்களிலிருந்தும், கலப்புக்களிலிருந்து மின்சாரப்ரயோகத்தால் இப்பொழுது தாம்ரத்தைப்பிரிக்கிறார்கள்.

தாம்ரக்கலப்புக்கள்.

Alloys.

தாம்ரம் அநேகலோஹங்களுடன்கலந்து லோஹக்கலப்புகள் ஆகின்றது. அவைகளிற் சில—

தாம்ரம்+தகரம்=குண்டுத்தாம்ரம். (Gun Metal)

தாம்ரம்+நாகம்=பித்தளை. (Brass)

தாம்ரம்+நாகம்+தகரம்=வெண்கலம். (Bronze)

தாம்ரம்+நாகம்+நிக்கல்=ஜர்மன்வெள்ளி.

தாம்ரம்+ஆக்ஸிஜன்.

(1) தாம்ராக்ஸிஜம் (Ca O).

(2) தாம்ரஜாக்ஸிஜம் (Ca_2 O).

தாம்ரத்தைக்காய்ச்சினால் அது, ஆக்ஸிஜனுடன்கலந்து கறுப்பு நிறமான **தாம்ராக்ஸிஜம்** ஆகின்றது. தாம்ராக்ஸிஜத்தை மறுபடி காய்ச்சினால், ஆக்ஸிஜனில் ஒருபாகம் குறைந்து **தாம்ரஜாக்ஸிஜம்** என்னும் சிவப்புநிறமான இன்னொரு ஆக்ஸிஜம் உண்டாகின்றது.

தாம்ராக்ஸிஜம்=Ca O=Cupric oxide (கருப்பு)

தாம்ரஜாக்ஸிஜம்=Ca_2 O=Cuprous oxide (சிவப்பு)

தாம்ரம்+க்ளோரம்.

(1) தாம்ரக்ளோரம் ($Cu\ Cl_2$)=Cupric Chloride.

(2) தாம்ரஜக்ளோரம் (C uCl)=Cuprous Chloride.

தாம்ராக்ஸிஜத்தை க்ளோராமிலத்திற் கரைத்தால், பச்சைநிறமான **தாம்ரக்ளோரம்** உண்டாகும். தாம்ரக்ளோரநீருடன் இன்னும் கொஞ்சம் தாம்ரத்தையும், க்ளோராமிலத்தையும் கலந்து காய்ச்சிக் குளிர்ந்தஜலத்திற் கொட்டினால் தாம்ரஜக்ளோரமுண்டாகும்.

மைல்துத்தம்.
(தாம்ரகந்தஜம்)
Copper Sulphate.
[Cu SO_4]

தாம்ரகந்தஜம் என்பது 1-பங்குதாம்ரம், 1-பங்குகந்தகம் 4-பங்கு ஆக்ஸிஜன்கலந்த ஓர் உப்பு. தண்ணீரிற் கரையும். தாம்ரத்தையாவது தாம்ராக்ஸிஜத்தையாவது கந்தாமிலத்திற் கரைத்தால் இவ்வுப்பு உண்டாகும். இது நீலவர்ணமானது.

முறை:—தாம்ரம்+கந்தாமிலம்=தாம்ரகந்தஜம்+ஹைத்ரம்.

தாம்ராக்ஸிஜம்+கந்தாமிலம்=தாம்ரகந்தஜம்+ஜலம்.

$$Cu+H_2SO_4=CuSO_4+H_2.$$
$$CuO+H_2SO_4=CuSO_4+H_2O.$$

அத்யாயம்—25.

மக்னீஷியம்.
Magnesium.
[Mg]

மக்னீஷியம் என்பது வெள்ளிபோன்ற ஒரு லோகம். உறுதிக் குறைவாயுள்ளது. ஆக்ஸிஜனுடன்கலந்து, ப்ரகாசமாய் எரியும். மூடிய சீசாவில் மக்னீஷியத்தை எரித்தால் அதில் யாதொருமாறுதலும் ஏற்படுவதில்லை. காற்றில்லாதவிடத்தில் இது எரியமாட்டாது. இந்த லோகம் தனிப்பொருளாய் அகப்படுவது அரிது.

இதைக் கல்பங்களிலிருந்து பிரிக்கும்முறை அதிகச்செலவுள்ளதாயிருக்கின்றது. இது அதிகப்ரகாசமாய் எரியக்கூடியதாகையால், தீபக் காட்சிகளுக்கும், தீப அடையாளங்கள்காட்டுவதற்கும் உபயோகப்படுகின்றது. ஸரஸமாய்க்கிடைக்கத்தக்கதானால், பலகாரியங்களுக் குபயோகப்படும்.

மக்னீஷியாக்ஸிஜம்.
Magnesia.
[MgO]

இது, மக்னீஷியமும் ஆக்ஸிஜனும் கலந்த ஒரு கல்புப்பொருள். மிருதுவும் வெண்ணிறமுமான பொடியாயிருக்கும். சீமைச்சுண்ணாம்பி

லிருந்து சுண்ணநீறு உண்டாவதுபோல, **மக்னீஷியகரிஜத்தை** வேக வைப்பதாலும் இது உண்டாகும். மக்னீஷியத்தைக் காயவைத்து நீராவியைச்செலுத்தினுலது ப்ரகாசமாய் எரியும். அதனுலும் மக்னீஷியாக்விஜம் உண்டாகும்.

முறை:—மக்னீஷியம்+ஜலம்=மக்னீஷியாக்விஜம்+2ஹைத்ரம்.

$$Mg+H_2O=MgO+H_2.$$

மக்னீஷியத்தைக் கரித்வயாக்விஜத்தில் எரித்தால், அது பிரிந்து மக்னீஷியாக்விஜம் என்ற ஒரு வெள்ளைப்பொடியும் கரிப்பொடியும் உண்டாகின்றன.

2 மக்னீஷியம் கரித்வயாக்விஜம் } = { 2 மக்னீஷியாக்விஜம் +கரி

$$2\ Mg+CO_2=2\ MgO+C.$$

மக்னீஷிய உப்புக்கள்.

மக்னீஷியம், மக்னீஷியஆக்விஜம், மக்னீஷியகரிஜத்தை அமிலங்களிற் கரைத்தால், மக்னீஷிய உப்புக்கள் உண்டாகும்.

மக்னீஷியம் +கந்தாமிலம் } = { மக்னீஷியகந்தஜம் +2 ஹைத்ரம்.

மக்னீஷியாக்விஜம் +2 க்ளோராமிலம் } = { க்ளோரோமக்னீஷியம் +ஜலம்.

$$Mg+H_2SO_4=Mg\ SO_4+H_2.$$

$$MgO+2\ Hcl=Mg\ Cl_2+H_2O.$$

குறிப்பு:— $MgSO_4$ = மக்னீஷியகந்தஜம்.

வழக்குப்பெயர்—இப்ஸம் உப்பு.

அத்யாயம்—26.

நாகம்.

Zinc.

[Zn]

நாகம் என்பது சற்றுப் பசுமையுள்ள வெண்ணிறமான லோஹம். குளிர்ந்தநிலைமையில், உறுதியாயும் நொறுங்கக்கூடியதாயும் இருக்கும்.

காயவைத்தால் தகடாயடிக்கலாம். நாகத்துண்டை முறித்துப்பார்த்தால் முறிந்தஇடம் பளபளப்பாயிருக்கும்.

உபயோகம். நாகம் சில லோகங்களுடன்கலந்து திரா (alloy)க்கள் ஆகின்றது. அது தாம்ரத்துடன்கலந்து பித்தளையாகின்றது. நாகம் சாதாரணமாய் ஆக்விஜனுடன்கலந்து துருப்பிடிப்பதில்லை. ஆதலால் இருப்புத்தகடு துரு ஏறுவண்ணம் அதன்மேல் நாகத்தைப்பூசிவைப்பதுண்டு. இத்தகடுதான் துத்தநாகத்தகடு என்றுபெயர்.

நாகாக்ஸிஜம்.

Zinc oxide.

[Zn O]

வழக்குப்பெயர். **நாகபஸ்பம்** என்றும் சொல்லுவதுண்டு.

நல்ல உஷ்ணத்தில் நாகம் எரியும். அப்பொழுது நாகாக்விஜம் உண்டாகும். காய்ச்சினநிலைமையில், நாகாக்விஜம் மஞ்சள்நிறமாயும் குளிர்ந்தவுடன் வெண்ணிறமாயும் இருக்கும்.

நாக உப்புக்கள்.

Zinc Salts.

நாகம், நாகஉப்பு, அல்லது நாககரிஜத்தை அமிலங்களிற்கரைத்தால் நாக உப்புக்கள் உண்டாகும்.

பால்துத்தம்.

உதாரணம். நாகம்+கந்தாமிலம்=நாககந்தஜம்+ஹைத்ரம்.

நாகாக்விஜம்+கந்தாமிலம்=நாககந்தஜம்+ஜலம்.

$$Zn+H_2SO_4=ZnSO_4+H_2.$$

$$ZnO+H_2SO_4=ZnSO_4+H_2O.$$

குறிப்பு:—நாககந்தஜம்=பால்துத்தம்.

நாககந்தம்.

Zinc Sulphide.

[Zn S]

(வழக்குப்பெயர்—Zinc blende)

நாககந்தஜநீரில் ஹைத்ரோகந்தத்தைக்கலந்தால், நாககந்தம் உண்டாகும்.

$$\text{நாககந்தஜம்} + \text{ஹைத்ரோகந்தம்} = \text{நாககந்தம்} + \text{கந்தாமிலம்}.$$

$$ZnSO_4 + H_2S = ZnS + H_2SO_4.$$

நாககரிஜம்.

Zinc Carbonate.

$Zn\,CO_3$.

(மறுபெயர்—Calamine.)

நாககரிஜம் என்பது, நாகம், கரி, 3 பங்கு ஆக்ஸிஜன்கலந்த ஒரு கல்பம். இது ஒரு பிறவிச்சரக்கு. பால்துத்தநீரில் ஸோடியம்ஹைத்ரோகரிஜத்தைக் கலந்தால், இக்கரிஜம் அடியிற்படியும்.

முறை:—பால்துத்தம் + 2 ஸோடியம்ஹைத்ரோகரிஜம் = ஸோடியகந்தஜம், நாககரிஜம், கரித்வயாக்ஸிஜம், ஜலம்.

$$\text{பால்துத்தம} + 2\ \text{ஸோடியம்ஹைத்ரோகரிஜம்} = \text{ஸோடியகந்தஜம்} + \text{நாககரிஜம்} + \text{கரித்வயாக்ஸிஜம்} + \text{ஜலம்}.$$

$$ZnSO_4 + 2\,NaHCO_3 = Na_2SO_4 + ZnCO_3 + CO_2 + H_2O.$$

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர் B.A. B.L.

உ

"ஓர் வேண்டுகோள்."

———:(ऽ)o(ऽ):———

தேவாரதிநூல்களாற் கொண்டாடப்பெற்றதும், சைவபரமாசாரியராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகளாலும் அதிபக்தசிரோமணியாகிய ஸ்ரீ சேரமான்பெருமாள்முதலிய புருஷோத்தமர்களாலும் பூஜிக்கப்பெற்றதும், பழமைவாய்ந்ததும், கொச்சிஸம்ஸ்தானத்திலுள்ளதுமான கொடுங்களூரென்று வழங்குகின்ற (Crancanore) திருவஞ்சைக்களம் என்னும் திவ்யசிவக்ஷேத்திரத்தை நம் நேயர்கள் அறிந்திருக்கக்கூடும்.

அத்தலத்தைப்பற்றி ஒருபுராணமும் ஒருசரித்திரமும் எழுதவேண்டுமென்பது என் அபிப்பிராயம். அவ்விதம் எழுதுவதற்கு, அந்த க்ஷேத்திரத்தைப்பற்றியும், அங்கு முன் அரசாட்சிசெய்து முத்தியிலே யடைந்த பக்ததசிகாமணியாகிய ஸ்ரீ சேரமான்பெருமாளைப்பற்றியும் சரித்திரவாலாறு தெரிந்துகொள்ளவேண்டியது முதற்கடமையாக இருக்கின்றது. தேவாரம் பெரியபுராணம் முதலியவற்றில் அவைகளைப்பற்றிக் கூறியிருக்கும்விஷயங்களை நான் ஏற்கனவே அறிந்திருக்கின்றேன்.

(1) உபமந்யு பக்தவிலாசம். (2) அகத்திய பக்தவிலாசம். (3) ஸ்காந்தமஹாபுராணத்தில் க்ஷேத்திரகண்டம் இவைகளில் அவ்விஷயங்களைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறதென்பதை அந்நூல்கள் ஸம்ஸ்கிருதத்திலிருப்பதால் நான் அறிந்துகொள்ளக்கூடவில்லை. இன்னும் இவைகளைப்பற்றி எந்தப்பாஷையில் எந்தநூலில் யாரால் சொல்லப்பட்டிருக்கிறதென்பதையும் யான் அறிந்திலேன்.

நான் முக்கியமாகத் தெரிந்துகொள்ள விரும்புவதாவது:—

(1) திருவஞ்சைக்கள க்ஷேத்திரவரலாறு, அதன் தமிழ் ஸம்ஸ்கிருதநாமம் முதலியன.

(2) அங்கு முன் செங்கோல்நடாத்திய ஸ்ரீ சேரமான்பெருமாளின் காலம், சரித்திரம், அவருடைய தமிழ், ஸம்ஸ்கிருதநாமம், முதலியன.

(3) அங்குக் கோயில்கொண்டெழுந்தருளியிராநின்ற ஈசன், ஈசுவரிகளின் தமிழ், ஸம்ஸ்கிருதத்திருநாமம், முதலியன.

இவைகளைப்பற்றி, சாஸ்திரங்கள், புராணங்கள், சரித்திரங்கள், சிலாசாஸனங்கள், மான்யூல்கள், கெஜட்டீர்கள், இவைகளில் தமிழ், ஸம்ஸ்கிருதம், இங்கிலீஷ், பிரஞ்சு, ருஷ்யன், ஜெர்மன் முதலிய எந்தப் பாஷையில் யாராற் சொல்லப்பட்டிருப்பினும் சிறந்ததே.

இவ்விஷயங்களில் ஆராய்ச்சியுடையகனவான்கள் இப்புண்ணிய கைங்கரியம் கைகூடுமாறு தெரிந்தவற்றை இப்பத்திரிகைமூலமாயாவது கடிதம் மூலமாவது தயைசெய்து தெரியப்படுத்தினால் அவர்கள்பால் என் அன்பார்ந்த வந்தனத்தைச்செலுத்துவதோடு, என்றும் மறவாத நன்றியறிதலுள்ளவனாயிருப்பேனென்பதையும் இதன்மூலம் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

"LAKSHIMI VILAS"
Kothamangalam,
RAMNAD DIST.

C. A. C. காசிநாதன் செட்டி,
கோத்தமங்கலம்.

௨

ஞானதரிசினி. (மஹாபாரதக்கதைகள்.)

பண்டைக்காலத்தில் மாந்தாதாவென்னுஞ் சக்ரவர்த்தி, சசிபிந்து ராஜாவின்பெண்ணான இந்துமதியை மணஞ்செய்துகொண்டான். அவன் அவளிடம் புருகுத்ஸனென்றும், அம்பரீஷனென்றும், முசுகுந்தனென்றும் மூன்றுபுதல்வர்களைப் பெற்றான். பின்பு அவ்வரசனுக்கு ஐம்பதுபெண்களுண்டாயினர். இது நிற்க; மறைகளைநன்குணர்ந்த ஸௌபரியென்னும் முனிவர் நீருக்குள் பன்னிரண்டுவருஷங்கள் வசித்தார். அந்நீருக்குள் மிகுந்தமக்களையுடையதும், மிகவும் பெரியதும், ஸம்மதனென்றபெயருள்ளதுமான மீன்களுக்கதிபதிவசித்து வந்தது. அம்மீனின் பெண்டு, பிள்ளை, பேரன் முதலிய மீன்கள், இறகு, வால், தலை இவைகளுக்குமுன்னும், பின்னும், மேலும், கீழும், பக்கத்திலும் அலைந்துகொண்டு, அம்மீனுடன் இராப்பகலாய் விளையாடி

இன்பமுற்றன. பெண்டு பிள்ளைமுதலியவர்களின்ஸ்பரிசத்தால் மிகுந்த ஆநந்தத்தையுடைய அம்மீனும் அம்முனிவர்பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே தினந்தோறும் தனது பெண்டு, பிள்ளை பேரன்முதலியவர்களுடன் நன்றாய் க்ரீடித்தது. பின்பு நீருக்குள்ளிருக்கும் ஸௌபரிமுனிவர் மனதைவேறிடஞ்செலுத்தாதிருக்குமதையை நீக்கிவிட்டு, பிரதினமும் அம்மீன், பெண்டு, பிள்ளை, பேரன்முதலிய மீன்களுடன் நன்றாய்விளையாடுவதைப்பார்த்துச் சிந்தித்துக்கொண்டிருந்தார். அந்தோ! சிறப்பற்றயோனியிலுண்டாகியும் தனது பெண்டு, பிள்ளை, பெண், பேரன்முதலிய மீன்களுடன் க்ரீடிக்கும் இம்மீன் எனக்கு மிகவும் ஆசையையுண்டாக்குகிறது; நானும் இவ்வாறு புத்திரன்முதலியவர்களைப் பெற்று அவர்களுடன்கூடிக் குலாவி இன்பமடைவேன் என்று யோசித்து, அம்முனிவர் நீரினின்றும்வெளிக்கிளம்பி, மக்களைப்பெற விருப்பமுடையவராய்க் கன்னிகைகளை அடைவதற்காக மாந்தாதாவென்னும் மன்னவனையடைந்தார். பின்பு ஸௌபரிமுனிவரின்வருகையைக்கேட்டு அம்மன்னவன் ஆஸனத்தினின்றுமெழுந்து, நன்கு விதிப்படிபூஜித்து ஆஸனத்திலமர்த்தினான்.

பின்பு ஸௌபரிமுனிவர் மன்னவனைப்பார்த்து, "ஹே! இராஜாதிராஜ! உனது கன்னிகைகளை மணம்புரியவிரும்புகிறேன்; தடைகூறாது கொடுக்கக்கடவாய்; எனது அன்பைக் குலைத்துவிடாதே; ககுத்ஸ்தவம்சத்தாரிடம் காரியநிமித்தம்வந்தயாசகர்கள், தங்கள்காரியம்நிறைவேறாமற் செல்வதில்லை; பூமியில் பலமன்னவர்களிருக்கின்றனர்; ஆனால், யாசகர்களுக்கு அவர்கள் விருப்பத்தைப் பூர்த்திசெய்வதையே விரதமாகக்கொண்ட உனதுகுலம் சிறந்ததன்றோ?" என்றார். அதனைக்கேட்டு அவ்வரசன், மூப்பினால் தளர்ந்ததேகத்தையுடைய முனிவரைப்பார்த்து அவர்சொல்லைமறுத்தாற் சாபங்கொடுத்துவிடுவரென்று பயந்து கீழே குனிந்துகொண்டு நெடுநேரம்யோசித்தான். பின்பு ஸௌபரிமுனிவர், "மன்னவ! ஏன் யோசிக்கின்றாய்? நான் செய்யக்கூடாதகாரியத்தைச் செய்யச்சொல்லவில்லை; அவசியம் மணஞ்செய்துகொடுக்கவேண்டிய கன்னிகையையே கேட்டேன்" என்றார். பின்னர் அவருடையசாபத்திற்குப்பயந்தவேந்தன், வணக்கத்துடன் "பெருமைபொருந்தியமுனிவரே! கன்னிகைகளால்தேர்ந்தெடுக்கப்பட்டவரன்களுக்கே பெண்களைக்கொடுப்பதென்பது எங்கள் குலாசாரம்; தங்கள்வேண்டுகோள் எங்கள்

மனோரதத்திற்கு மாருயிருக்கிறது; இவ்வாறிருக்க, இனி என்னசெய்வதென்றுதெரியவில்லை; இதைத்தான்யோசிக்கிறேன்" என்றான். அதனைக்கேட்டு முனிவர் "நமதுவேண்டுகோளைமறுப்பதற்கு இது உபாயம்; இக்கிழவன் ஸ்திரீகளுக்கே அருவருக்கத்தக்கவன்; கன்னிகைகளுக்கு மிகவும் தள்ளத்தக்கவன்; என்று இவன்யோசித்து இவ்வாறுகூறினான்; ஆயினும் இவ்வாறுசெய்கிறேனெனத் தீர்மானித்து, மாந்தாதாவை நோக்கி "உங்கள்குலாசாரம் இவ்வாறானால், கன்னிகைகளின் அந்தப்புரத்திற்குச்செல்ல எனக்குக் கட்டளையிடலாம்: யாராவது ஒரு கன்னிகை என்னைவிரும்பினால் அப்பொழுது நான் விவாஹஞ்செய்து கொள்ளுகிறேன்; அவ்வாறுவிரும்பாவிடில் எனக்குக் காலங்கடந்துவிட்டமையால் விவாஹம்வேண்டாம்" என்றுசொல்லி நிறுத்தினார். பின்பு முனிவரின்சாபத்தினின்றும்பயந்த மாந்தாதா, அந்தப்புரக் காவற்காரனுக்குக் கட்டளையிட்டான். அப்புருஷனுடன் முனிவர் கன்னிகைகளின் அந்தப்புரத்திற்குச்செல்லும்பொழுதே ஸகல ஸித்தர்கள் கந்தர்வர்கள், மனிதர்கள் இவர்களின் ரூபத்தைக்காட்டிலும் மனோகரமானரூபத்தை எடுத்துக்கொண்டார். கன்னிகைகள் அந்தப்புரத்திற்குள் நுழைந்தவுடன் அக்காவற்காரன், அக்கன்னிகைகளைப்பார்த்து உங்கள்தந்தையாகிய மஹாராஜன், "இந்தப்ருஹ்மரிஷியானவர் கன்னிகையைவிரும்பிவந்திருக்கிறார்; எனதுகன்னிகைகளில் யாராவது அவரைவரித்தால்,தடையின்றிக்கொடுக்கிறேனென்று நான் பிரதிக்ஞை செய்திருக்கிறேன்" என்பதைத் தெரிவிக்கச்சொன்னாரென்று கூறினான். அதனைக்கேட்டுக் கன்னிகைகள்யாவரும் ஆசையுடன் பிடிகள் வேழத்தையடைவதுபோல, அம்முனிவரை ஒவ்வொருவரும் நான் தான்முதலில்வரிப்பேன் நான்தான்முதலில்வரிப்பேனென்று வரித்தார்கள். அன்றியும், "ஓ! சகோதரிகளே! நான் இப்புருஷனைமணப்பேன்; இப்புருஷன் உனக்குத்தகுதியன்று; இப்புருஷனைப்பிரும்மா எனக்காக வேண்டித்திருக்கிறான்; ஆதலின் நீங்கள் ஒழிவடையுங்கள்; இப்புருஷனை முதலில் நான்தான்கோரினேன்; என்றுளொருத்தி; முதன்முதலில் நான்தான்கோரினேனென்றாள் மற்றொருத்தி; இப்புருஷன் அந்தப்புரத்தில்நுழையாவிட்டால் என்னசெய்வீர்களென்றாள் வேறொருத்தி; நான்தான்மணப்பேன்; நான்தான்மணப்பேன் என்றிவ்வாறு இராஜகன்னிகைகளுக்கு அப்புருஷனுக்காகச் சண்டையுண்டாயிற்று. சிறந்த

புகழையுடைய அம்முனிவர் ஸகலகன்னிகைகளாலும் அன்புடன் வரிக்கப்பட்டபொழுது, அவ்வந்தப்புராதிகாரி மன்னவனிடஞ்சென்று வணக்கத்துடன் நடந்தவிவரத்தை மறையாதுகூறினான்.

அதனைக்கேட்டு வேந்தன் "இஃதென்ன? என்னசெய்வேன்! நானென்னசொன்னேன்!" என்றுகலவரப்பட்டு மதிமயங்கி, விருப்பமில்லாதிருந்தும் சிரமப்பட்டு ஒப்புக்கொண்டான். முனிவர் விவாஹஞ்செய்து கொண்டு, அக்கன்னிகைகள்யாவரையும் தனதுஆஸ்ரமத்திற்குஅழைத்துச்சென்றார். அங்குச் சித்திரவேலைசெய்வதிற் பெயர்போனவனும், ஸ்ருஷ்டிசெய்வதிற் பிரம்மனைப்போன்றவனுமான விச்வகர்மாவையழைத்து, ஒவ்வொருகன்னிகைக்கும், தனித்தனியாக மலர்ந்த தாமரைமலர்களிற்கூவுகின்ற ஹம்ஸபக்ஷிகள் நாகணவாய்ப்புள் கிளிகள் முதலியபறவைகளால் மனோகரமான ஓடைகளையுடையனவும், உய்யானவனங்களுடன்கூடினவைகளும், ஸம்போகஸாதனங்கள் நிறைந்த பள்ளியறைகளையுடையனவும், விசாலமானவைகளுமான மாடமாளிகைகளைக்கட்டும்படி ஏவினார். ஸகல சிற்பவேலைகளிலும் கைதேர்ந்த தேவசிற்பியும் முனிவர்கூறியவாறே நிர்மாணஞ்செய்தான். பின்பு அம்முனிவரின்கட்டளையால் ஒவ்வொருமாளிகையிலும், நந்தனமென்னும் மஹாநிதி இருந்தது. பின்பு வேலையாட்கள் எப்பொழுதும் பக்ஷணங்கள், பழங்கள், போஜனம் முதலிய போகஸாதனங்களால் எல்லாமாளிகைகளிலும் இராஜகன்னிகைகளைத் திருப்திசெய்வித்தனர். ஒருஸமயம் பெண்களிடம் பற்றுள்ளமுடைய அப்பார்த்திபன், "நமது பெண்கள் மிகவும் துன்பப்படுகிறார்களோ இன்பப்படுகிறார்களோ" என்றுநினைத்து அம்முனிவரின் ஆச்ரமத்தின் அண்மையிற்சென்று, காந்தியால் ஒளிவீசுகின்றதும், மனோகரமான ஓடைகளையுடையதும், ஸ்படிகக்கல்லாலாகியதுமான மாளிகைகளையக்கண்டான். ஒருமாளிகையில்நுழைந்து தன்பெண்ணைப்பார்த்து மகிழ்ந்து, ஆஸனத்திலமர்ந்து, ஆனந்தக்கண்ணீருடன், "அம்மா! பெண்ணே! நீ சுகமாயிருக்கிறாயா? துன்பப்படுகிறாயா? முனிவர் உன்னிடம் அன்புடன் இருக்கின்றாரா? நமதுமாளிகைவாஸத்தைநினைக்கிறாயா?" என்றான். பிறகு அவனுடையபெண், "அப்பா? இம்மாளிகை மிகவும்அழகானது; உய்யானவனம் மனோகரமாயிருக்கிறது; மலர்ந்ததாமரைமலர்களையுடையஓடைகள் மதுரமாகக் கூவும்பறவைகளால் நிறைந்திருக்கின்றன; மனதுக்கிசைந்த பக்ஷியங்கள்,

உணவுகள், வாஸனைவகைகள், வஸ்திரங்கள், பூஷணங்கள்முதலிய போகங்களை அநுபவிக்கிறேன்; மலரினும் மிருதுவானபடுக்கையில் படுக்கிறேன்; இவ்வில்லறம் ஸகலஸம்பத்தாலும் நிறைந்திருக்கிறது; ஆனால் எனக்கு வருத்தமொன்றிருக்கிறது; அது என்னவென்றால், எனதுகணவன் என்வீட்டைவிட்டு வெளிச்செல்வதேயில்லை; என்னுடன் எப்பொழுதும் அன்புடன் ஸமீபத்திலிருக்கிறார்; எனதுசகோதரிகளிடம் செல்வதில்லை, இதனால் எனதுசகோதரிகள் வருத்தப்படுவார்கள் என்பதுதான் வருத்தத்திற்குக்காரணம்" எனக் கூறினாள். பின்பு மன்னவன் இரண்டாவதுமாளிகைக்குச்சென்று பெண்ணைக்கண்டு மகிழ்ந்து ஆஸனத்திலமர்ந்தபின் முன்போலவினவினான். அவளும் மாளிகைமுதலியவைகளின்போகத்தினாலுண்டாகிய சுகத்தைத்தெரிவித்து எனக்குமட்டும் கணவன் ஸமீபத்தில் எப்பொழுதுமிருக்கிறான். எனதுசகோதரிகளுக்கு இவ்வாறில்லை எனக்கேட்டு, வேந்தன் ஸகலமாளிகைகளிலும்நுழைந்து, பெண்களை முன்போல் வினவினான். பெண்கள்யாவரும் முன்போலவே கூறினார்கள். ஸந்தோஷம், ஆச்சரியம் இவைகளால் பரவசமானமனதையுடைய அவ்வரசன், தனியேயிருக்கும் பெருமைபொருந்திய ஸௌபரியையடைந்து, அம்முனிவரால் பூஜிக்கப்பட்டபின் "பகவானே! தங்கள் ஸித்திப்பிரபாவம் இப்பொழுதுதான் தெரிந்தது; இவ்வாறானசெல்வத்தை வேறிடத்திற் கண்டதேயில்லை; பெருமைபொருந்திய தங்கள் தவத்திற்கு இச்செல்வமெவ்வளவு?" என்று அம்முனிவரைப்பூஜித்து அங்கேயே அம்முனிவருடன் சிலகாலம்வஸித்து இன்பத்தையநுபவித்துப் பின்பு தனதுபட்டினத்துக்குச்சென்றான். கொஞ்சகாலத்திற்குப்பின் அம்முனிவருக்கு இராஜகன்னிகைகளிடம் நூற்றைம்பதுபுதல்வர்கள் உண்டாயினர். தினந்தோறும் விர்த்தியடைந்தஅன்பையுடைய அம்முனிவர், அப்பொழுது நான் எனது என்னும் அபிமானத்தால் நிறைந்தவரானார். எனது புதல்வர்களும் மழலைச்சொற்களைப்பேசுவார்களா? தவழ்ந்துநடப்பார்களா? இவர்களுக்கும் யௌவனமுண்டாகுமா? இவர்கள் மனைவிகளுடன் இருப்பதையும் பார்க்கும்பாக்யம் கிடைக்குமா? இவர்களுக்கும் புதல்வர்கள் உண்டாவார்களா? இவர்கள்பிள்ளைகளுக்குப் பிள்ளைகள் உண்டாவதையும் பார்ப்பேனா? என்று பலவிதமாய் மனோராஜ்யஞ் செய்து, முடிவில் 'அந்தோ! எனக்கு மோகம் மிகுந்துவிட்டதே!

मनोरथानां न समाप्तिरस्ति
वर्षायुतेनापि तथाब्दलक्षैः ।
पूर्णेषु पूर्णेषु पुनर्नवानाम्
उत्पत्तयस्सन्ति मनोरथानाम् ॥ 1 ॥

பதினாயிரவருஷங்கள் இன்பத்தையநுபவித்தாலும், லக்ஷவருஷங்கள் இன்பத்தையநுபவித்தாலும் மனோரதங்கள் முடிவடைவதில்லை. மனோரதங்கள் நிறைவேறிவிட்டால் மறுபடியும் மனோரதங்களுண்டாகின்றன.

पद्भ्यां गता यौवनिनश्च जाता
दारैश्च संयोगमिताः प्रसूताः ।
दृष्टाः सुतास्तत्तनयप्रसूतिं
द्रष्टुं पुनर्वाञ्छति मेऽन्तरात्मा ॥ 2 ॥

ள்ளைகள்நடந்தார்கள்; யௌவனமடைந்தார்கள்; மனைவிகளுடன் ர்ந்தார்கள்; பிள்ளைகளைப்பெற்றார்கள்; அவர்களைப்பார்த்து அப் ள்ளைகளின்மக்களைப் பார்க்கவிரும்புகிறது எனது ஆத்மா.

द्रक्ष्यामि तेषामिति चेत्प्रसूतिं
मनोरथो मे भविता ततोऽन्यः ।
पूर्णेऽपि तत्राप्यपरस्य जन्म
निवार्यते केन मनोरथस्य ॥ 3 ॥

அவர்களுடையமக்களையும் பார்த்துவிட்டால் வேறு மனோரத ன்று உண்டாகிவிடும்; அதுவும் நிறைவேறிவிட்டால் மற்றொன்று ண்டாகிவிடுகிறது; மனோரதங்களை அடக்கவல்லவர்யார்?

आमृत्युतो नैव मनोरथानाम्
अन्तोऽस्ति विज्ञातमिदं मयाद्य ।
मनोरथासक्तिपरस्य चित्तं
न जायते वै परमार्थसङ्गि ॥ 4 ॥

சாகும்வரையில் மனோரதங்களொழிவதில்லை என்பது இப்பொழுது க்குத்தெரிந்தது. மனோரதங்களிற் பற்றுள்ளவனுடையமனது, மார்த்தமான்காரியங்களிற் பற்றுள்ளதாவதில்லை.

न जातु कामः कामानाम् उपभोगेन शाम्यति ।
हविषा कृष्णवर्त्मेव भूय एवाभिवर्धते ॥ 5 ॥

சிற்றின்பத்தை அநுபவிப்பதனால் மனோரதம் முடிவடைவதில்லை. யால் நெருப்புப்போல மீண்டும்விர்த்தியடைகிறது. நீரில் நண்பனு

யிருந்த மீனின்சேர்க்கையால் ஏனதுஸமாதி, சீக்கிரம் நாசமடைந்து விட்டது. சேர்க்கையினுல் விவாஹஞ்செய்தேன். விவாஹஞ்செய்தத னுல் எனக்கு மேன்மேலும் ஆசையுண்டாகிறது. சரீரியான ஒரு பிராணி, உண்டாவதே திர்ககரமானது. எனக்கு நூற்றைம்பது மக்க ளிருக்கின்றனர். இராஜகன்னிகைகளை மணஞ்செய்துகொண்டமை யாற் பலபுத்திரர்களால் அத்துக்கம் மிகுந்துவிட்டது. பேரன்களும், பேரன்களின்பிள்ளைகளும் மணஞ்செய்துகொள்வதால் மிகுந்த துக்க முண் டாகப்போகிறது. மனைவி நானென்னு மபிமானத்திற்குக் காரணம். நீரில்வஸிக்கும் மீனுல் என்தவங் கலைக்கப்பட்டது. மீனின்சேர்க்கை யால் எனக்குப் பெண்டுபிள்ளைகளிடம் ஆசையுண்டாயிற்று. அவ் வாசையால், கெடுக்கப்பட்டேன். சேர்க்கையின்றியிருத்தல் முனிவர்க ளின்மோக்ஷத்திற்குக்காரணம். சேர்க்கையினுற் பலதோஷங்களுண்டா கின்றன. யோகஸித்தியேற்பட்டிருந்தவனுயினும், சேர்க்கையினுல், கீழேதள்ளப்படுகிறுன். சிற்றறிவாளி தள்ளப்படுவதற்குத் தடை யென்ன? மனைவியென்னும் முதலையினுல் நிருடப்பட்டமதியையுடைய நான் துக்கமற்றவனுயும் தோஷமற்றவனுயு மாகுமளவும் ஆத்மாவிற்கு ஹிதமானகாரியத்தில் முயல்வேன். உலகனைத்தையும் சிருஷ்டித்தவரும் மனதுக்கெட்டாத ரூபத்தையுடையவரும் நுண்ணியவற்றிற்கெல்லாம் நுண்ணியவரும், பெரிதானவற்றிற்கெல்லாம் பெரிதானவரும், வெளுப் பானவரும், கறுப்பானவரும், பிரபுக்களுக்குப் பிரபுவானவருமான விஷ்ணுவைத் தவத்தாற் பூஜிக்கிறேன். அதிகபலமுள்ளவரும், ஸர்வ ஸ்வரூபியும்; வ்யக்தமாயும், அவ்யக்தமாயுமுள்ள சரீரத்தையுடைய வரும், தோஷமற்றவரும், அநந்தருமாகிய விஷ்ணுவிடம் என்மனது மோக்ஷநிமித்தம் எப்பொழுதுமிருக்கட்டும். ஆதலின், சிறந்தகுருவான விஷ்ணுவையே சரணமடைகிறேன் என்று தனக்குத்தானே சொல் லிக்கொண்டு, ஸௌபரியானவர் தனதுபுத்திரர்கள், வீடுகள், ஆஸனங் கள் முதலிய போகஸாதனத்தைவிட்டுவிட்டு, ஸகலமனைவிகளுடனும் வனத்திற்குச்சென்றுர். அவ்விடம் தினந்தோறும் வைகானஸர்களின் க்ரியைகளைமேற்கொண்டு, ஸகலபாபங்களையு மறவே யொழித்து, மனச் சாந்தியடைந்து, பஞ்சாக்னிமத்தியில் தவஞ்செய்துவந்தார். பின்பு ஸகலகர்மங்களையும் ஈசுவரார்ப்பணஞ்செய்து, சித்தசுத்தியடைந்து, ஞானவாயிலாக மோக்ஷமடைந்தார். இந்த ஸௌபரிசரித்திரத்தை நினைப்பவனும், படிப்பவனும், படிக்கச்செய்பவனும், எழுதுகின்றவனும், எழுதச்செய்பவனும், அப்பியஸிப்பவனும், அத்தியயனஞ்செய்பவனும், உபதேசஞ்செய்பவனும் அநித்யமானவஸ்துக்களில் நித்யபுத்தியை யடையாமல் உயர்சிறப்படைவார்கள். சுபம்.

Pandit M. M. Narayanasamy Aiyer,

Mudikondan.

ஸ்ரீ

உவமானசங்கிரகம்.

முகவுரை.

இதன் ஏட்டுப்பிரதியொன்று, திருமேனி கவிராஜகேஸரி திருக் குருகூ ரிரத்நகவிராயர்வழியினர்வீட்டிற் கிடைத்தது. இதனை ஆக்கி யோர்பெயர், வரலாறுமுதலியவற்றில் யாதொன்றும் புலப்படவில்லை. இதிற் சிலவிடங்களிற் பதங்கள்சிதைந்தும் பொருள்விளங்காமலு மிருக் கின்றன. ஒரேபிரதிதான்கிடைத்தமையாற் செம்மைசெய்யமுடிய வில்லை. விவேகிகள் திருத்திக்கொள்ளவேண்டும். இதுநிற்க.

இப்பிரதியையடுத்து, இரத்தினச்சுருக்கத்துடன்சேர்த்துப் பதிப் பித்திருக்கும் உவமானசங்கிரக (வெண்பாவந்தாதி)ப்பிரதியொன்று காணப்பட்டது. அதன் ஈற்றில்'ய்ள' என்று இலக்கமிட்டுப் பின்வரும் விருத்தச்செய்யுளும் காணப்பட்டது.

"பார்புகழ் குருகை யூரன் பைங்குவ ளைத்தார் மார்பன்
காரியர் வேளாம் ரத்ந நாற்கவிச் சிங்க மெங்கோன்
வார்முலை மடவார் தேக வண்ணனை யனைத்துந் தேர்ந்து
சீர்புனை தமிழான் மாறன் றிருவடி தொழுது செய்தான்"

இச்செய்யுளிலிருந்து ஷை உவமானசங்கிரகஞ்செய்தவர், 'திரு மேனி குருகையிரத்நகவிராயர்' என்பது, ஏற்படுகிறது. இதில் 'மாறன் றிருவடிதொழுதுசெய்தான்' என்பது முதற்பாட்டாகிய "வேதத்தமிழ் மாறன்.........குருகூரனைத்தொழுதுகொண்டு" என்பதைக்குறிப்பது கவனிக்கத்தக்கது. இச்செய்யுளுக்கு 'ய்ள' என்று இலக்கம்போட்டிருப் பதும் வேறொருசான்று.

ஷை உவமானசங்கிரகம் 'ஸ்ரீவில்லிபுத்தூர்த் திருவேங்கடையரா லியற்றப்பெற்றதென்று அச்சுப்பிரதியாற்றெரிகிறது. ஸ்ரீவில்லிபுத் தூர்க்காரர்செய்ததாயிருந்தால் ஆண்டாள்விஷயமாய் வணக்கஞ்சொல் லாமலிரார். இதிலோ ஆழ்வார்விஷயமாய்மாத்திரம் வணக்கம் காணப் படுகிறபடியால், இதைச்செய்தவர் திருக்குருகூரவராயிருக்கலாமென்று நம்பலாம்.

'திருவேங்கடையர்' என்றபெயரே சந்தேகத்துக்கிடமாயிருக்கிறது. இப்படி ஒருவித்வான் அவ்வூரில் இருந்ததாக யாரொருவராலாறும் தெரியவில்லை. அச்சிட்டவர், ஏடெழுதினவர்பெயரை நூலாசிரியரது என்று கிரகித்தார்போலும்!

இவற்றால் 'வெண்பா உவமானசங்கிரக'மியற்றினுர் 'திருமேனி குருகையிரத்நகவிராயர்' என்பது தெளிவாய்விளங்குகிறது. புகழேந்திப் புலவர்செய்ததாக அச்சிடப்பட்ட 'இரத்தினச்சுருக்க'மும் இவராலே யேசெய்யப்பட்டு, இவர்பெயரால் வழங்கிவருவதாக எண்ணவும் இடங் கொடுக்கிறது.

ஸ்ரீ:

திருஞானமுத்திரைதுணை.

உவமானசங்கிரகம்.*

(பாதாதிகேசம்)

நூற்பா.

௧. அம்புயஞ் சுணங்களுக் கனிச்சமாந் தளிரிணை
செம்பஞ்சு முயல்வயின் செயலையுள் ளடிக்கே.

௨. பவளக் கொம்பும் பசுமஞ்சண் முளையு
முவமையாங் கால்விர லொருபத் தினுக்கே.

௩. படிகந்† தாரகை பத்தாய் மதியிணை
கடைதலொப் பாமெனக் கண்டன ருகிர்க்கே.

௪. பைத்திடு கமுகமும் பாளையுங் கமடமும்
பொத்தகச் சுவடும் புறவடிக் கிணையே.

௫. பாளையுட் குரும்பையும் பந்துந் தாசங்
காளை மிலிப்பியுங் கரட்டினுக் கணைத்தே.

௬. தூரியப் பெட்டி பந்தொடு மாங்கனி
........கி லொப்பெனும் பெருங்குதிங் காற்கே.

௭. வேணுவுந் தேன்பூ விரிகா களமுந்
தூணியும் வராலுஞ் சொலுங்கணைக் காற்கே.

௮. அலவன் பசுமுக் காள(?)யா மெனும்பணி
குலவுங் கேடகக் குமிழ்முழந் தாட்கே.

௯. துதிக்கையுந் தெற்பமுந் தாளொடு கம்பமுஞ்
சதுரப்பெ ருவாழையுட் டண்டுமாந் துடைக்கே.

௧0. அரசிலை பாற்கட லரவுதெ‡ன் கூபந்
தருணவெற் றிலைதேர்த் தட்டு வேள்மனைப்
பொக்கிஷம் வாழையின் பூமடல் பொற்றட்

* இதைப் புத்தகரூபமாய் என்னுடைய அநுமதியில்லாமல் ஒருவரும் பிரசுரிக்கக்கூடாது. ஆ. மா. ச.

† 'ங்காரகை' என்றுபடிக்கவு மிடங்கொடுக்கிறது.

‡ 'தேன்' என்றும் படிக்கலாம்.

டெக்கு(?)மான் குளம்(பே) யிந்திர பதநிலந்
தாமரை மணித்தலஞ் சங்கநி தியுமேவா
டாமதுக் குழாய்மத னலவட் டந்தேன்
கூடுகாக் கணம்பூக் குளமடை விளக்கு
ணுடற் பரிச்செவி யமுத சருக்கரை
தோரண பதக்கந் துதிசத்தி பீடஞ்
சோரணி(?) முப்பதுஞ் சொல்வரல் குலுக்கே.

௧௧. துடியொடு பிடிமின் சுருதிவேள் சிங்கங்
கொடிதுரும் பிளவஞ்சி குலிசமா மிடைக்கே.

௧௨. ஆலந் தளிர்குருத் தரம்பைசேம் பிலைமதி
*கோங்குநீர் பாதி(?) கொண்டிடும் வயினே(ற).

௧௩. வட்டச் சோதியு மல்லிகை வலம்புரி
மொட்டுநீர்ச் சுழியு மொழிவ ருந்திக்கே.

௧௪. மால்கிடை சங்கிலி மதனு ளெறும்பொழுக்
காவிலை நடுநரம் பாளையின் றுதிக்கை
கரும்பா மினநீர்க் காம்பிரு ளொதுக்கு
மருங்குநா ராச மததாரை தேர்வட
மண்டபச் சார மதத்தார் களபத்
தண்டுளித் தாரைவான் றுரைவார்க் கயிறுக்
கண்ணொளி பாய்தல் கருமணிக் கோவையென
வொண்பயின் மடிபடிப் புரோமத் தொழுங்கே.

௧௫. சந்திரன் சூரியன் றாமரை முகமணி
பந்திள நீர்வெற் பாணமத் தகமருப்
பிளநீ ரெலுமிச் சிளநீ ரிலந்தை
செப்பிணை புன்னை யிலிங்க மும்வரு
சக்ரவா கம்வில் வக்கனி மாதுளங்
கனிவிளாங் கனிசிமிழ்க் கரகங் கிரீடமாங்
கனிசெண்டு சூதுடன் களஞ்சுகைத் தாளங்
கோங்குமா விலங்கு குமிழி கரண்டகந்
தேங்கா துருவஞ் செழுங்கத லிப்பூக்

* 'கொங்கு' என்றும் மூலத்தைப் படிக்கலாம்.

கொட்டைப் பாக்கொடு கூடாரம்வள்ளம்
பட்டை(?)ப் பம்பர் மருந்துண்டை பொற்றேர்
*கோபுரத் தூவிசெங் கோழியண் டங்குடஞ்
சோபனக் கிம்புரி துணைப்பிடி செப்புடன்
செய்யுங் கொத்தளஞ் சேவின் புறச்சிமி
ழையொன் பானென் றுமுலை யினுக்கே.

கசு. அலரிமுத் திரைக்கோ லணிப வளக்கொம்
புலவிய திறவுகோ லுற்றமாந் தளிரொடு
கெளிறும் பயறுங்(?) கிட்டிய கைவிரல்
பழகிய வுகிர்க்குப் பைங்கிளி மூக்கே.

கஎ. காந்தளுங் கமலமுங் கருதுசித் திலதமும்(?)
கூர்ந்த வங்கைக்குயாழ் கோடுமுன் கைக்கே.

கஅ. பூரண கும்பமேற் போட்ட மாளிகை
வெயாருறும் படஞ்சனை(?) யணையவாந் தோட்கே.

ககூ. மணிப்பா லிலகச்சுருள் மடற்சூர்க் கமுகுபூ
சணிப்பூச் செப்பொடு சங்குமாங் கழுத்தே.

உ0. படிமக் கமலமும் படிமமுந் திங்களுந்
தட்டமுஞ் சேண்டிப்பூத் தட்டுமா முகமே
தூதுளை செந்தமிழ்த் தொண்டைசெவ் வாம்பல்
மாதுளை வீழிசெம் மரத்தில் விரந்தை(?)
முருக்குப் பவள முதிரிந்திர கோபந்
த—செங் கமலந் தளிர்நெல் லுறைமால்
கண் ணுட னமுதக் கடிகைசொற் கதவமென்
றெண்ணிரண் டாகு மிதழ்க்குவ மைகளே.

உஉ. முத்துமா துளம்விரை முருந்துபூங் கருநாவித்
தளவொடு பற்ப ராகமென் னகையே.

உங. குழல்கரும் பமுதங் குயில்சினி தேம்பால்
கிளியளி பூவைபாழ் கிளருமுப் பழமுடன்
கண்டுசர்க் கரைதீங் கனியொ டிவ்வளவும்
பெண்டிரு வாயுறு பேச்சென் மொழியே.

உச. சந்தனச் சாணையுஞ் சயிந்தவக் கல்லணியு
நந்துமுக் கிற்கண் ணுடியுங் கவுளே.

உரு. எள்ளுங் குமிழு மில்வலர் காம்பு
மள்ளுஞ் சண்பகத் தரும்பு நாசிக்கே.

உசு. வாள்கயல் சேல்வேல் வண்டுநஞ் சமுதமான்
வேள்கணை யமன்கரு விளைவலை குவளை
கஞ்சனம் பங்கயங் கடன்மழை மாதுளி
ரஞ்சன மூவலி(?) னணையவாம் விழிக்கே.

உஎ. தேன்கவர் குண்டுகத் திரிகைபொன் னூசல்
மான்புகும் வாயில்பாய் வளையஞ் சுருத்தலை
நாரங்கி வள்ளைமின னவ்வு தீச்சால்(?)மயிர்
கூர்வினைக் கருவயுங் கொள்வர்கா தினுக்கே.

உஅ. கடற்கரை வாளுறை கிரிக்குரி மரைத்தா
ளடற்சிங் காடிநீ லாஞ்சனம் புருவே.

உகூ. தினகரோ தயமுஞ் சிவனுதற் கண்ணும்
பனகரற் றினமும் படிகத் திலதமும்
பெரும்பிறை முறிவாள் சிலைபெரிய வாசிகை
கொக்கிற *காத்தியி னரும்பென்பர் வாணுதலே.

ங0. கருமணற் சைவலங் கல்லார் மண்டுவண்
டிருளார் பொதுமக ளிலைதயமஞ் சணிபூச்
சோலைகொன் றைக்காய் சூல்முகி லிந்திர
நீலமைச் சுழுகுபொன் னெய்த்தகூந் தலுக்கே.

ஙக. மயிலனங் கரும்புபொன் மான்மதித் தேனுயிர்
குயின்மின் கமலங் கொழுந்துபைந் தேறல்
மதன்குரு பீட மதன்கலைக் கியானங்
கதம்பகந் தெய்வங் கழுநீர் மோகினி
பூங்கொம் பமுதம் புருடார்முத் தார
மோங்குமுத் தார மூலவிய சந்தன
மாலைசக் களஞ்சிய மணங்கா பிஷேகம்
வீசுதென் றற்கொடி விருதுமா ரகுளிகை
வாடா விளக்க மாமலர் மாலை
யோடாக் கிளிநிதி யுடன்றிருப் பாற்கடி
மேனகை யுருவசி மேவுதி லோத்தமை
யாணவிந் திரைமற் றரம்பைநா கப்பெண்
கொல்லியம் பாவைநீர்க் கோதைசூர் மகளிரீ
தல்லவும் மகளிருக் கனத்தென மொழியே.

A. M. சடகோபராமா நுஜாசாரியன்.

---

* 'கத்தியி' என்று மூலபாடம்.

உ

அருண்மாட்சி.

அஃதாவது அருளினது மகிமையைக்கூறுதல். பூமண்டலத்தின் கண்ணே பகுத்தறிவுடைய மானுடர்களாய்ப்பிறந்த மன்னுயிர்கட்கு ஒழுக்கம்போலச் சிறந்தது பிறிதொன்றின்மையானும், அவ்வொழுக்கத்துட்சிறந்து விழுப்பந்தருவது அருளேயாகலானும், அவ்வருண்மாட்சியைத் தெளிந்து கடைப்பிடித்துப் பண்டைக்காலத்துக் காவலரும், நாவலரும் ஒழுகி மேம்பட்டநிலையை யடைந்தார்களென்று சாஸ்திரங்களினாலே இனிது உணரக்கிடத்தலானும், இவ்வியாஸத்தை "அருண்மாட்சி" என்னும் மகுடநாமமிட்டு யான் எழுதத்தொடங்கினேன். குற்றங்களைப் பாராட்டாது குணமளைந்துகொள்ளும்படி அறிஞர்கள் அனைவரையும் யான் முதலிலே வேண்டிக்கொள்ளுகின்றேன்.

தேவாதிதேவன் றிவ்வியானுக்ரஹத்தினாலே முன்னாணிறுவி முதன்மைத்தமிழைவளர்த்த முச்சங்கங்களினு மமிழ்தினும் மிக்கபேருமையதாகப் போற்றப்பெற்ற பொற்பினையுடையது அருளேயாம். ஆகலின், இத்தமிழ்ச்சங்கத்தினும் அருளினதுவிசிஷ்டத்தைப் படித்தல் சால்புடைத்தாகும் என்று நான் கருதுகின்றேன். இருபாஷாசாதுர்யர்களாய அக்கிராசனாதிபதியவர்களும், வித்தையின்மிக்க உத்தமப்புலவர்களும், மற்றைப்பாஷாபிமானிகளாகிய கனதனவான்களும்,வெற்றுரையென்றுன்னாது சற்றுச் செவிகொடுத்து என்னையுங் கௌரவிப்பார்களென்று பூரணமாக யான் சிந்திக்கின்றேன்.

அருட்சிறப்பு.

அஃதாவது எவ்விதசம்பந்தமும் நோக்காது எல்லாவுயிர்கண்மீதுஞ் செல்வதாயகருணையின்சிறப்பை விளக்குதல். இரக்கம், அளிமுதலிய நாமங்களும் அருளுக்கேயமைந்தன. இக்கருணையானது அன்பின் முதிர்ச்சியாகவுள்ளது. அன்பாவது தொடர்புடையார்மாட்டுச் செல்வதான உள்ளநெகிழ்ச்சியேயாம். அருளாவது தொடர்புவேண்டாது எல்லாச்சீவர்களிடத்தினும் பொதுவாகவைக்குமிரக்கமாம். ஈசுவரன் அன்புருவாகி யடியருளக்கமலத்தில் வீற்றிருப்பாரென்று, அநுபூதிமாத்திரையானும் ஒப்பும்படி சாஸ்திரங்கள் சாற்றுகின்றன. மனோ

சக்தியையுண்டாக்கி ஜீவனை நல்வழி தீவழிகளிற்செலுத்துவது இச்சையேயாம். இச்சையை நிஷ்காமியமாகச்செலுத்துவதே அறிவுடையமாந்தர்க் கழகாகும். அறிவுடையவரிடத்துச் சாந்தமும் அன்பும் நிலையாகவுள்ளனவாகும். அன்பு அருட்குமுதலாகிநிகழும் நேயம். அருள் அன்புகாரணத்தால்தோன்றும் அளி. இங்ஙனமே மணிமேகலையுட் கூறப்பெற்றன. நிற்க, அருளே இம்மைமறுமையின்பங்களுக்குத் துணையாகவுள்ளது. அன்பு இவ்வுலகவின்பத்திற்குத் துணையாயுள்ளது. அதுபோலவே அருளானது மறுமையின்பத்திற்குத் தலையாயுள்ளது.

இவ்வுலகத்திலேகாணப்படுஞ் சராசரப்பொருள்கள்யாவும் அழியுந்தன்மையன என்பது பிரத்தியக்ஷம். தேஹமும் அழிவுடையது. ஞானமுடையவர்களுக்கு இவற்றினுண்மை நன்குவிளக்கமானதே! ஆகலின், இங்கே அதிகமாக நிலையாமை என்ற விஷயத்தைக் குறிப்பிடவேண்டியதில்லை. அறிஞர்களுட் சிரேஷ்டமுடையோர் அழிவுடையவைகளை விரும்புவதில்லை; அறமுறைநாடி ஆன்மாக்களைக்காப்பாற்றுவதே அவர்கள் குணம், "அஹிம்ஸாபரமோதர்ம: ।" என்ற வாக்கியார்த்த அநுஷ்டானமே ஆன்றோர்களிடத்துள்ளது. உயிர்களைக்காப்பாற்றி அத்தர்மத்தினாலே மேன்மையடைவிக்கும் பெருஞ்சிறப்பு அருளினிடத்துண்டு. இன்னும் திருவள்ளுவநாயனார், நல்வழிகளிலே நின்று அளவைகளாலும் யுக்திகளாலும் ஆராய்ந்தால் நமக்குத்துணையான தருமம் அருளுடையாரதலே என்று சூசிப்பித்திருக்கின்றார். இம்மைமறுமையிரண்டினும் இன்றுணையாய்க்காப்பதும் அருளே!

அருள் ஆவஸியகம்வேண்டியதே.

தர்மார்த்தகாமமோக்ஷம் என்னும் புருஷார்த்தம் நான்கினையுங் கொடுக்கும் மஹிமை யருளினிடத்து அமைந்ததேயன்றி, வேறு எவ்விதத்தினும் அவை கைகூடாவாம். அருள் என்னும் பெருந்தீபம் அமைந்த சாத்துவிகத்தைப் பிரகாசப்படுத்தும்.

அருளில்லாவிட்டால் அருநரகடைவது திண்ணமாகும். நமது ஆன்மாவின்சுகத்தை எங்ஙனம் கவனித்துப் பாதுகாக்கின்றோமோ அப்படியே நிலையுள்ள மற்றைய ஆன்மாக்களையும் ஓம்புதல் நன்மையின்பாலதாகும். அருளைப்பற்றிய நிறைந்த மனோசக்தி பூரணத்துவமடையின் இன்பமேயான இறைவன் ஸ்வரூபமாக விகஸித்தல்கூடும்.

சிந்தாமணி.

தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோன்
மன்னுயிர் வைகலு மோம்பி வாழுமே
விண்ணுயிர்க் கிறைவனா யின்ப மூர்த்தியாய்ப்
பொன்னுயி ராய்ப்பிறந் துய்ந்து போகுமே.

இச் செய்யுட்கருத்தும் அருளை ஆளுதலால்வருவதை இனிது புலப்படுத்துகின்றது.

திருவள்ளுவர்.

அருள் சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்னா வுலகம் புகல்

என்று அருளிச்செய்ததுங் காண்க.

இவைமட்டுமா? தாயுமானசுவாமிகளும்,

தம்முயிர்போலெவ்வுயிருந் தானென்று தண்ணருள்கூர்
செம்மையருக்கேவலென்றுசெய்வேன்பராபரமே

என்று அருளிச்செய்தார்கள். இவைகள் அருளின்மேன்மையை ஆற்றவும் அறிவுறுத்துகின்றன.

வாய்மையாகியதகழியிலே பொறுமையாகிய திரியையிட்டுத் தவமாகிய நெய்யைநிறைத்து அருளாகிய விளக்கையேற்றினால் அஞ்ஞானமாகிய ஆணவவிருளகல மெய்ஞ்ஞானமாகிய பதிப்பொருள் வெளிப்படும். இவ்வுண்மையைச் சிவானுபூதிமான்களினிதுணர்ந்தே அநுபவித்து வடைகின்றார்கள்.

அருளெப்படியுண்டாகும்?

அருட்சீலத்தாலடைவது யாது?

சம்பந்தம்பற்றிய அன்புவளர்ச்சியினாலே அருளுண்டாகும். பாவங்களையுணர்ந்து தர்மங்களை யநுஷ்டித்துவந்தால், அன்பும், அவ்வினிய அன்பினால் அருளும், அருளினாலே தவமும், தபோவிசிஷ்டத்தினாலே ஞானமும், அம்மெய்ஞ்ஞானத்தினால் மோக்ஷமும் சோபானமுறையாக மாநுடர்கள் அடைதல்கூடும். தர்மம் = பாதுகாத்தற்குரியது; கடமையாகவுள்ளது.

பிரமாணம்.

கருமடி போற்றிடி னன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழவியு மனையு மாங்கவை
வருவழித் தவமெனு மாட்சி யெய்துமேற்
றெருளுறு மவ்வுயிர்ச் சிவனைச் சேருமால்.

அருள்வழிநின்றவர்.

பூர்வகாலத்திலே பற்பலசமயிகளும் பற்பல ஒழுக்கங்களையுடையவர்களாயே இருந்தனர். தீமையைநீக்கி நன்மையைச்செய்யவேண்டும் என்பது யாவருக்கும் உடன்பாடாகும். சில சமயிகளுக்கு ஊனுண்டற்காகக் காருண்யமின்றிவதைப்பது சம்மதம். ஆனால், பௌத்தர் கொல்லாமையாகிய அறத்தை அருளினாற் பரிபாலித்துவந்தாரென்று தெரியவருகின்றது. அஃது,

"வாடாப் போதி மரகதப் பாசடை
மாநிழ லமர்ந்தோ னெஞ்சம் யார்க்கும்
அருளின் றீந் தேனிறைத்து நனி நெகிழ்ந்த"

என்று பௌத்தமதக்கவிகள் கூற்றாகவருஞ் சொற்கள் வலியுறுத்துதல் காண்க. இன்னும், மணிமேகலையில் (௩, ௫௦, ௬௬)

அருளுமன்புமாருயிரோம்பு
மொருபெரும்பூட்கையுமொழியாநோன்பிற் பகவன்

என்னும் பாவின்பாகமும், காருண்யபாதநவதே என்னும் ஸ்ரீஜயதேவர்வாக்கும் பௌத்தருளாற்றலையும், அவர்சமயிகளுக்குவேண்டிய ஒழுக்கமுறையையும் செவ்விதுதெரிக்கின்றன. நமது சமயத்திற்குரிய முதற்றருமம் அருளேயென்பதும், சமயாசாரியர்களும், ஆழ்வாராதியர்களும் ஜீவகாருண்யமாகிய பரமதர்மசாதனர்கள் என்பதும் பிறவும் சுருக்கிக்கூறிய சிலவாக்கியங்களினாலே தெளிவாகும்.

முடிவுரை.

இதுவரையுங்கூறிப்போந்தவற்றானே அருளே எவற்றினுஞ்சிறந்தது என்பதூஉம், அவ்வித வுயர்ச்சிவாய்ந்த அருளை அவனியிலவதரித்த மாநுடர்கள் எப்போதும் ஓரியஆபரணமென்றும், மனமாசுநீக்கி மங்களகரவாழ்வுகொடுக்கும் அற்புதசஞ்சீவியென்றும், உணர்ந்து கடைப்பிடித்து ஒழுகி நல்வாழ்வடைய முன்னிற்றல்வேண்டும் என்பதூஉம், பிறவுமாம். இதற்குத் திருவருளருஞ் செழித்துப்பாய்ந்து பூர்த்தி செய்வதாக; இத்தமிழ்ச்சங்கத்தாரும் ஜீவகாருண்யப்பயிரைச் செங்கதிருடன் விரவப் பரிபாலித்துவாழ்வாராக. அக்கிராசனாதிபதியவர்களும் சர்வாபீஷ்டசித்திகளுடன் பல்லாண்டு பல்லாண்டுகளாக வாழ்வார்களாக. சுபமஸ்து.

வ. மூ. இரத்நேசுவரையர்,
தமிழ்ப்பண்டிதர்.

உ

மறைசைக்கலம்பகம்.

மறைசைக்கலம்பகம் என்பது மறைசையின்கண் ணெழுந்தருளியிருக்கும் கடவுளைக்குறித்துப் பலவகைப்பாக்களினாலே செய்யப்பட்ட ஒருநூலாம்.

மறைகளினாலே பூசிக்கப்பட்டகாடு என்னுங் கருத்தினையுடைய மறைக்காடென்னுஞ்சொல்லானது, மறைசை என மருவிநிற்கின்றது. கலம்பகம் என்பது கலவை எனப் பொருள்படும். அஃது, வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பாக்களும் அவற்றினங்களுமாகிய பலசெய்யுட்களின் கலவையினையாகும். மறைக்காடென்பதின் மறுநாமங்களாகிய வேதவனம் வேதாரணியம் என்பனவும் மறைகளாற் பூசிக்கப்பட்டகாடென்னும்பொருள் பயக்கின்றன. இப்பிரபந்தத்தினையியற்றினார் யாழ்ப்பாணத்து நீர்வையம்பதியின்கண் ணவதரித்த வேளாளகுலதிலகராகிய ஸ்ரீ பீதாம்பரப்புலவர். இந்நூல் நூறுசெய்யுட்களினையுடையது. இதன்காப்புச்செய்யுட்கு விருத்திசெய்தார் நீர்வை ஸ்ரீ சங்கரபண்டிதர். சிறப்புப்பாயிரமியற்றினோராவார், கீரிமலை நகுலேஸ்வரசுவாமிகோயில் ஆதினகர்த்தா ஸ்ரீ சபாபதிக்குருக்கள், நீர்வேலி வாய்க்காற்றரவை விநாயகர்கோயி லாதீனம் ஸ்ரீ சோ. சந்திரசேகரக்குருக்கள், சித்தாந்தபண்டிதர் தெல்லிப்பழை ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளை, சுன்னாகம் ஸ்ரீ அ. குமாரசுவாமிப்புலவர், தமிழ்ச் சங்கவித்துவான் ஸ்ரீ சுந்தரம்பிள்ளைஉபாத்தியாயர் நல்லூர் வித்துவசிரோமணி ஸ்ரீ ச. பொன்னம்பலபிள்ளை, நீர்வை ஸ்ரீ ச. வீரசிங்கவுடையார், அஷ்டாவதானி ஸ்ரீ இ. வைத்தியலிங்கம்பிள்ளை, பிரசித்த நொத்தாரிஸ் ஸ்ரீ ஆ. விநாயகமூர்த்திப்புலவர், ஸ்ரீ ப. சுப்பிரமணியபிள்ளை சைவவைஷ்ணவபுராணப்பிரசங்கி, பசுவரபாதபுரம் ஸ்ரீ குமாரவேற்செட்டியார் உபாத்தியாயர் ஆகியோரே.

இனி, இந்நூலாசிரியராற்செய்யப்பட்ட பிறநூல்களியாவையெனின், மறைசைத்திருப்புகழ், நீர்வைவெண்பா, வல்லிபுரேஸ்வரர் பதிகம், நீர்வை அரசகேசரிப்பிள்ளையாரூஞ்சல் எச்சரிகை பராக்கு கீர்த்தனம் முதலியன, வேதாரண்யேஸ்வர ஊஞ்சலாதி கீர்த்தனைகள், இன்னும் இவைபோல்வன பிறவுமாம். இனி இந்நூலினை யச்சிடுவித்தார் நூலாசிரியரின் பிரதமபுத்திரராகும் ஸ்ரீ முத்துக்குமாரபிள்ளை: இனி இந்நூலாசிரியர் யாவரிடங் கல்விகற்றாரெனின் சேனாதிராசபிள்ளை உபாத்தியாயரிடமாகும். இனி இந்நூலினாலாகும் பயன் சிவபெருமானதுபெருமையையறிந்து துதித்து அவரருள்பெறுதல்.

இங்ஙனம்,
சிங். சிவ. பண்டிற், நடராசபிள்ளை,
நீர்வையம்பதி, யாழ்ப்பாணம்.

உ

திருவள்ளுவரும் ஞானவெட்டியும்.

நமது தமிழகஞ்செய்த தவப்பயனாகத்தோன்றித் திருக்குறளென்னும் தெய்வப்பனுவலையருளிய ஆசிரியர் திருவள்ளுவனாரின் அருமை பெருமைகளையறியாதார் மிகவுஞ்சிலரேயாவர். இப்பெரியார் அருளிய திருக்குறளை, அதுதோன்றியநாண்முதல் எம்மதத்தினரும் தம்மதத்திற்குரிய நூலென்றுகூறிவருவதுடன், தமிழ்மொழிவழங்காப் பிறதேயத்தினரும் அதனை நன்குபடித்துத் தத்தம்பாஷைகளில் மொழிபெயர்த்து மிகப்பாராட்டியும்வருவாராயினர்.

இம்மகானது தெய்வப்புலமையையும் இவரருளிய நூலினருமையையும் நன்குணரப்பெறாதமாந்தர்சிலர், இற்றைக்கு இரண்டுமூன்று நூற்றாண்டுகளுக்குள் இயற்றப்பட்டு வெளிவந்துள்ள "ஞானவெட்டி"யென்னும்நூலைக்கண்டு மயக்கமுற்று இந்நூலியற்றினோரும் திருக்குறளருளிய திருவள்ளுவனாரென்றே உண்மையறியாமற் கூறிவருகின்றனர். அன்னோர்கூற்று வலியுடைத்தாவென்பதை யீண்டாராய்வாம்.

ஞானவெட்டியின் ஆசிரியர், ஆரியத்திலும் தமிழிலும் ஒப்பற்ற புலமையும் தெய்வத்தன்மையும்வாய்ந்த சிலபெரியோர்களையும், அன்னோர் நம்மவர்கட்குப் பெரிதும் பயன்படும்வண்ணம் இயற்றியருளிய நூல்களையும், பொறாமை செருக்காதி குறும்புகள்விளைப்பதாய முக்குணக்கடைநிற்குந் தாமதக்குணச்சேட்டையாலோ அன்றிப் பிறிதென்கொண்டோ, தம்நூலில் வாய்கூசாது நிந்தித்திருக்கின்றனர், அச்செய்யுட்களைக் கீழே தருகின்றாம்.

வியாசர்சொல்லும்பாரதத்தில்வெகுபொய்யீனும்
    மேதினியோர்மாய்கையினில்விருப்பஞ்சொன்னார்
ஆய்ந்துகவிபாடிவிட்டான்கம்பன்வம்பன்
    அதீதராமாயணத்திலநேகம்பொய்தான்
ாயாமலதிவீரபாண்டியன்சொல்லும்
    தமயந்திசரித்திரநைடதமுஞ்சொன்னார்
யமாகாதுதிகவிகள்சுத்தப்பொய்தான்
    தொடுகவிமாணிக்கவாசகர்சொன்னாரே. (ஞானவெட்டி 579)

தேவாரமானதிருவாசகத்தைச்
செகத்தோர்கள்படித்துமெத்தத்தியங்கினார்கள்
பேயானவாண்டிகட்குப்பிழைப்புக்காகப்
பேசிவைத்தார்மற்றொன்றும்பிசகேயில்லை. (செய் 600)

மேலேவரைந்துள்ளசெய்யுட்களில் வியாசர்பாரதமும், கம்பர் இராமாவதாரமும், அதிவீரராமபாண்டியர் நைடதமும், சைவசமயாசாரியர் நால்வரும் திருவாய்மலர்ந்தருளிய தேவாரதிருவாசகங்களும், மக்கட்குப் பயன்படாப் பொய்ந்நூல்களென்று சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றுள், இராமாவதாரம்பாடியருளிய கம்பர், (1120 கி. பி.—1200 கி. பி.) கி. பி. 12-ஆம் நூற்றாண்டினிடையில் விளங்கியவராதல்வேண்டுமென்று சேதுஸம்ஸ்தானவித்வான் ப்ரும்மஸ்ரீ உ. வே. ரா. இராகவையங்காரவர்கள் செந்தமிழ் 3-ஆம்தொகுதி 6-ஆம்பகுதியில் நிரூபணஞ்செய்துள்ளார்கள். தமிழில் நைடதமியற்றியருளிய அதிவீரராமபாண்டியரே, கூர்மபுராணம், இலிங்கபுராணம், வாயுசங்கிதை, காசிகாண்டம் முதலிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துப்பாடியருளிய அரசரேறென்ப. இம்மன்னர்பெருமான், சகம் 1486-ல் தென்காசியில் முடிசூட்டப்பெற்று சகம் 1514 வரை ஆட்சிபுரிந்தனரென்று தென்காசிக்கோயிற்கோபுரத்திற்காணப்படுஞ் சிலாசாசனங்கள் அறிவிக்கின்றன.* ஆகவே, இவ்வரசர் கி. பி. 16-ஆம் நூற்றாண்டினிறுதியில் (கி. பி. 1564—கி. பி. 1592) வாழ்ந்தவராதல்வேண்டும். இனி, திருக்குறளருளிய திருவள்ளுவனார் தம்நூலை, அக்காலத்தே தென்மதுரையகத்துத் தமிழுக்கரசராய்வீற்றிருந்தருளிய மூன்றாஞ்சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மரதுமுன்னிலையி லரங்கேற்றியுள்ளாரென்பது, அச்சங்கத்துச்சான்றோர் அதனைத் தங்கள்செவியாரக் கேட்டு மனமார வுவந்து வாயாரப் புகழ்ந்துபாடியுள்ள திருவள்ளுவமாலைப்பாடல்களால் நன்கு விளங்கும். மூன்றாஞ்சங்கம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டிலும் அதற்கு முந்தியகாலங்களிலும் நின்றுநிலவியதாகலின் அச்சங்கத்திறுதிக்காலத்தில் தம்நூலையரங்கேற்றிய திருவள்ளுவனாரும் கி. பி. இரண்டாம்நூற்றாண்டில் விளங்கியவராகற்பாலர். இதுகாறுஞ்செய்தவாராய்ச்சியால், திருக்குறளருளிய திருவள்ளுவனார் கி. பி. 2-ஆம் நூற்றாண்டிலும், இராமாவதாரமருளிய கம்பர் கி. பி. 12-ஆம்நூற்றாண்டினிடையிலும்,

* Travancore Archæological series No. VI p. p. 26.

நைடதமியற்றிய அதிவீரராமபாண்டியர் கி. பி. 16-ஆம்நூற்றாண்டினிறுதியிலும் வாழ்ந்தவர்களென்பது நன்குவெளியாதல் காண்க.

இதனால், கம்பரும் அதிவீரராமபாண்டியரும் திருவள்ளுவனார்க்குப் பலநூற்றாண்டுகட்குப் பிற்பட்டவர்களென்பது இனிதுவிளங்கும். ஆகவே, மேற்கூறிய கம்பரையும் அதிவீரராமபாண்டியரையும் தம் ஞானவெட்டியில் நிந்தித்துப்போந்த ஆசிரியர் திருக்குறளருளிய திருவள்ளுவனாரொன்றுகூறல் சிறிதும் பொருந்தாதென்க.

அன்றியும், திருக்குறளுக்குச் சிறந்தவுரைவரைந்தவரும் இருபெருமொழியினும் நுண்மாணுழைபுலன்படைத்த பேரறிவாளருமாகிய ஆசிரியர் பரிமேலழகர் நம் தெய்வப்புலவரியற்றிய வேறுநூல்களிருப்பின், திருக்குறளுக்குத் தாம் எழுதியவுரையில், அந்நூல்களிலிருந்து ஆங்காங்கு மேற்கோள்கள் எடுத்துக்காட்டி ஆசிரியர்கருத்தை விளக்கிச்செல்வார். அவர் அங்ஙனம் எடுத்துக்காட்டாமையால் நமது பெருநாவலர் திருக்குறளைத்தவிர வேறுநூலொன்றும் இயற்றினாரில்லையென்பது நன்குபுலனாம்.

இனி, ஞானவெட்டியின்ஆசிரியர் தம்நூலிற் சிலபெரியோர்களை நிந்தித்திருப்பதுபோல் வேதத்தையும் அந்தணரையும் பல்காலும் நிந்தித்திருக்கின்றனர். நமது திருவள்ளுவனார் அங்ஙனம் செய்யாரென்பது,

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்" (3-வது அதிகாரம் 10.)

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" (14-வது 4.)

"அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்" (55-வது 3.)

"ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்" (56-வது 10.)

என்னுங் குறள்வெண்பாக்களா னினிதுவிளங்கும்.

இனி, ஞானவெட்டியுடையார் தம்நூலில் தம்பெயர் திருவள்ளுவரென்றும், தாமே 1300 குறள்வெண்பாக்களையுடைய திருக்குறளியற்றி வைத்தவரென்றும் கூறியிருத்தல் ஈண்டுக் கவனிக்கத்தக்கது.* இவ்வாசிரியர் திருவள்ளுவரென்னும் பெயருடையவராயிருக்கலாம். ஆனால், திருக்குறளைத் தாமியற்றியதாகக்கூறல் சிறிதும்பொருந்தாது. தம்மைத் தத்துவங்களுணர்ந்த சிறந்த ஞானியென்றும் தம்நூலே உலகிற்குப் பயன்படக்கூடிய அரியநூலென்றும் வாய்ப்பறைசாற்றிச்செல்கின்ற இவ்வாசிரியர் இங்ஙனம் பொய்கூறற்கு எங்ஙனம் துணிவுற்றனரோ அறியேம். அன்றியும், உலகிற்குபகாரமாய்த் திருக்குறளைத் தாமியற்றி வைத்ததாகச் சிறிதும் அஞ்சாது பொய்கூறுகின்ற இந்நூலுடையார்,

“பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று”
“எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு”
“உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்”
“மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை”
“யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற”

என்னும் குறள்வெண்பாக்களைச் சிறிதும் படித்தறிந்தவராகக்கூடத் தோன்றவில்லையே யென்று மிக வருந்தவேண்டியதாயிருக்கிறது.

இந்நூலுடையார் மருத்துவமுறைகளிற் சிலவற்றையறிந்துள்ளாரென்ப துண்மையே. ஆனால் அருமையும் பெருமையும்வாய்ந்த பழைய

---

* “பெருநூல்களாயிரத்தைந்நூறிற்றால்
முன்னூழியான்பாடிவிட்டேனுயிரத்துமுந்நூறு
முடித்துவைத்தேன்குறளதுவாயுலகோர்க்கரண்டே” (ஞானவெட்டி 1737.)

நூலாகிய திருக்குறளைத் தாமியற்றியதாகக்கூறினால் அக்கூற்றைத் தமிழுலகத்தினர் அங்கீகரிப்பாராவென்று ஆராயாது இங்ஙனங்கூறியது இவரது அறியாமையின்பாற்படுமேயன்றிப் பிறிதின்றெனக. அன்றியும் இவரியற்றிய ஞானவெட்டியென்றநூலில் எத்தனையோசெய்யுட்கள் பிழையுடையனவாகக்காணப்படுகின்றன.

இனி, ‘ஞானவெட்டி’ என்னும் சொற்றொடரில் ‘வெட்டி’ யென்பதின்பொருள் வழியாம்; தஞ்சைஜில்லாவிற் கடலைச்சார்ந்தபிரதேசங்களில் வழியை வெட்டியென்று இன்னும் வழங்கிவருகின்றனர். ஆகவே, இந்நூலும் அப்பிரதேசங்களில், இற்றைக்கு இருநூறு(200)வருடங்கட்குமுன்னிருந்த ஒருவராலியற்றப்பெற்றதாதல்வேண்டும்.

இதுகாறுங்கூறியவாற்றால், ஞானவெட்டியையியற்றினோர் திருக்குறளருளிய திருவள்ளுவனாரல்லரென்பதும் அந்நூல், இற்றைக்கு இருநூறுவருடங்கட்குமுன்னர், தஞ்சைஜில்லாவிற் கடலைச்சார்ந்தபிரதேசத்திருந்த ஒருவராலியற்றப்பெற்றதென்பதும், தெய்வப்புலமைத்திருவள்ளுவனார் திருக்குறளைத்தவிர வேறொருநூலும் இயற்றவில்லையென்பதும் நன்குவிளங்கிநிற்றல் காண்க.

T. V. சதாசிவப்பண்டாரத்தார்,
திருப்புறம்பயம்.

1916-ஹு பிப்பிரவரிமீ 3உ காலை 9-மணிக்கு நடந்த மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாஹ ஸபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

———:()o():———

1. மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் ராஜா ஹிஸ் ஹைனெஸ் பா. ராஜராஜேஸ்வர சேதுபதியாகிய முத்துராமலிங்கசேதுபதியவர்கள் —அக்கிராசநாதிபதி.
2. மகா-ா-ா-ஸ்ரீ கான்பகதூர் அப்தல்சுபான் சாஹிப் அவர்கள்.
3. ,, V. S. இராமஸ்வாமி சாஸ்திரியவர்கள்.
4. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள், B. A., B. L.
5. ,, T. N. சுந்தரராஜையங்கார் அவர்கள், B. A., B. L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்:—

I. 1915-ஹு அக்டோபர், நவம்பர், டிசம்பர்மீ க்களின் வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கப்பட்டன. அதிகநாழிகை வேலைசெய்வதற்குவாங் கும் அதிகவரவைத் தண்டாக வரவுகாட்டத்தீர்மானம்.

II. 1. மகா-ா-ா-ஸ்ரீ செல்வர்தம்பியா அவர்கள், மெடிகல் ஸ்கூல், சிங்கப்பூர்.
2. ,, அ. சரவணமுத்தன் அவர்கள், பிரசாரகர், கோட்டைமுனை, மட்டக்களப்பு, Ceylon.

இவர்களைச் சங்கத்தின் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளலாமென்று தீர் மானிக்கலாயிற்று.

III. பெரியகுளம் Young Men's Hindu Association காரியதரிசி யவர்கள், ஷை சபைக்குச் செந்தமிழ் இனாமாக அனுப்பவேணுமென்று கேட் டுக்கொண்டிருப்பதற்கு, செந்தமிழ்ப்பத்திரிகையைப் பாதிவிலைக்கு அனுப்ப லாமென்று தீர்மானம்.

IV. சங்கத்திலிருக்கும் தொல்காப்பிய ஏட்டைத் தமக்கு அனுப்பி வாங் கிக்கொள்ளவேணுமென்று மகா-ா-ா-ஸ்ரீ ராவ்பகதூர் S. பவானந்தம்பிள்ளை யவர்கள் 5—1—16ல் எழுதிக் கேட்டுக்கொண்டிருப்பதற்கு, சங்கத்திலிருக் கும் ஏட்டுப்பிரதிகள் அனுப்புவது பொதுவிதிக்கு விரோதமாயிருப்பதாலும், சங்கம் பதிப்புகள் சம்பந்தமாய் ஆராய்ச்சிக்கு அடிக்கடி அவைகள் வேண்டி யிருப்பதாலும் ஏட்டுப்பிரதிகளுக்கு நகல் கொடுக்கலாமென்றும், ம-ா-ா-ஸ்ரீ பவானந்தம்பிள்ளையவர்கள் அனுப்பும் பண்டிதர் சங்க ஏடுகளைப்பார்த்துப் பரிசீலனைசெய்வதற்குச் சௌகரியம்செய்துகொடுக்கும்படிக்கும், அதன் பிறகு எந்த ஏட்டுப்பிரதியாவது அத்தியாவசியமாய்ச் சென்னையிற் பார்க்க வேணுமென்று ஏற்பட்டால் அதுவிஷயத்தைப்பற்றி ஆலோசிக்கப்படு மென்றும் தீர்மானம்.

(Signed) B. Raja Rajeswaran,
President,
Madura Tamil Sangam.

3—2—16.

(*True Copy.*)

23 ... MAD

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கச.] ராக்ஷஸஹு பங்குனிமீ [பகுதி-ரு.
Vol. XIV. March-April, 1916. No. 5.

பதார்த்ததீபிகை.

செந்தமிழ் (தொகுதி-கச பகுதி உ-ல்) சுஉ-ஆம்பக்கத் தொடர்ச்சி.

இனி அக்ஷபாதர் என்னும்பெயருடைய கௌதமர் நியாயசூத்தி ரத்திலே பதினாறுபதார்த்தங் கூறுவர். பதினாறுபதார்த்தங்களையுங் குவலயானந்தகாரர் வாதக்கருப்பொருள் எனப் பெயர்வைத்துக் கொண்டு சூத்திரம் ஒன்றினாற் சொல்லுவர்.

பதினாறுபதார்த்தங்களாவன: பிரமாணம், பிரமேயம், சமுசயம், பிரயோசனம், திருட்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தருக்கம், நிர் ணயம், வாதம், செற்பம், விதண்டை, எத்துவாபாசம், சலம், சாதி, நிக்கிரகம் என்பனவாம்.

நியாயசூத்திரம்.

[illegible]

குவலயானந்தம்.

பிரமாணம் பிரமேய மையங் காரியம்
திருட்சாந்தத் தாந்தமவ யவந்தர்க்க நிர்ணயம்

ஆபாசம் விதண்டஞ் சலங்க் கிரகம்
வாதஞ் செற்பஞ் சாதி யெனும்பதி
ஞறும் வாதக் கருப்பொரு ளாகும்.

காரியம் - பிரயோசனம். திதர்சம் - திருட்டாந்தம். ஆபாசம் - எத்துவாபாசம். விதண்டம் - விதண்டை.

௧. பிரமாணமாவது அறிவினாற்பொருள்களை அளந்தறிதற்குக்கொள்ளப்படும் அளவைக்கருவி. அது காண்டல், கருதல், உரை, உவமை என நான்குவகை. நான்கின்மேலுஞ் சிலகொள்வர். அவையெல்லாம் நான்கனுள் அடங்கும்.

௨. பிரமேயமாவது காண்டல் கருதல்முதலிய அளவைக்கருவிகளால் அளந்தறியப்படும் பொருள். அஃது ஆன்மா, உடல், பொறி, அர்த்தம், புத்தி, மனம், பிரவிருத்தி, தோடம், பிரேத்தியபாவம், பலம், பீடை, வீடு எனப் பன்னிருவகைப்படும்.

ஆன்மாவாவது அறிவிற்கிடமாயுள்ளது. அது சீவாத்துமா, பரமாத்துமா என இருவகை. உடம்பாவது உயிரின்போகத்திற்கு இடமாயுள்ளது. அஃது அண்டசம்முதலியனவாக நான்குவகையுடையது. பொறியாவது மெய், வாய்முதலியன. அர்த்தமாவது மண், புனல் முதலியன. புத்தி - அறிவு. மனமாவது சுகம்முதலியன அநுபவிக்குங்கருவி. பிரவிருத்தி - தொழிற்பாடு. தோடமாவது விருப்பு, வெறுப்பு, மையல் என்னும் குற்றம். பிரேத்தியபாவம் - மறுபிறப்பு. பலமாவது சுகதுக்ககாரியம். பீடை - துயர். வீடு - துக்கநிவிர்த்தி.

௩. சமுசயமாவது பலதலையாய உணர்வு. அது பொதுவியல்பு முதலியவற்றால் மூன்றுவகையாகும்.

௪. பிரயோசனமாவது சுகமுண்மையும், துக்கமின்மையும் அவற்றின் சாதனமுமாகிய காரியம்.

௫. திருட்டாந்தமாவது வாதியும், பிரதிவாதியும் பொருட்டுணிவுக்கு அநுகூலமாகக்கொள்ளும்பதார்த்தம். வாதி - வாதசபையிலே முதலிலேபேசுவோன். பிரதிவாதி - வாதிகூற்றுக்கு மறுப்புச்சொல்வோன். திருட்டாந்தம் - காணப்பட்டமுடிபுடையது.

௬. சித்தாந்தமாவது பிரமாணமுடைமையால் அறிஞரால் அங்கீகரிக்கப்பட்ட பக்ஷத்தாபனமானவாக்கியம். சித்தாந்தம் - நிச்சயிக்கப்பட்டமுடிபு.

௭. அவயவமாவது வழியளவைக்குரிய மேற்கோள், ஏதுவினை, காட்டுமுதலிய உறுப்பு. அவயவம் - உறுப்பு.

௮. தர்க்கமாவது நெருப்பில்லையாயின், புகையுமில்லை என்பது போன்ற பிறழ்ச்சியுணர்வு. அது தன்னைப்பற்றுதல், ஒன்றனையொன்று பற்றுதல்முதலியனவாகப் பலவகைப்படும். தர்க்கம் - அறிவிற்குக் காரணமான ஆராய்வு.

௯. நிர்ணயமாவது பிரமாணத்தின்பயனாகிய துணிவுணர்ச்சி. நிர்ணயம் - துணிவு.

௧௦. வாதமாவது மெய்ப்பொருளை அறியவேண்டும் விருப்புடைய வாதி, பிரதிவாதி என்னும் இருவருந் தம்முள்ளேநிகழ்த்தும் வினாவிடைகள் அமைந்த வாக்கியம். வாதம் - மெய்பெறல்காரணமாகச்சொல்லும் வார்த்தை.

௧௧. செற்பமாவது தங்கள்தங்கள்பக்ஷங்களை உத்தரஞ்சொல்லித் தாபித்தல்வாயிலாக ஒருவரையொருவர் வெல்லவிரும்பும் வாதி, பிரதிவாதி என்னும் இருவரும் தம்முள்ளே நிகழ்த்தும் வினாவிடைகளமைந்த வாக்கியம். செற்பம் - சொல்லல்.

௧௨. விதண்டையாவது சுபக்ஷத்திலே வினாவும் வினாக்களுக்கு விடைகள்கூறி அதனை நிறுத்தாமற் பரபக்ஷத்தைமாத்திரங் கண்டிக்கும் வாக்கியம். விதண்டை - மிகமறுத்துரைத்தல்.

௧௩. எத்துவாபாசமாவது மெய்போலத்தோன்றும் பொய்வடிவாகிய ஏது. ஏது + ஆபாசம் = எத்துவாபாசம். ஏது - காரணம். ஆபாசம் - பொய்வடிவம், போலி.

௧௪. சலமாவது கூறுவோன்கருத்துக்குமாறாக அவன்சொல்லிய சொற்கு வேறுபொருள்கற்பித்துக்கொண்டு அசதியாடல். சலம் - பொய், தன்வழி வலிமைமறுத்தல்.

கரு. சாதியாவது வாதியின்வாக்கியங்களிலே நிந்தைதோன்ற மாறுசொல்லும் பொய்வடிவமான உத்தரம். அது பொதுவியல்பு, வேற்றியல்பு, உயர்வு, தாழ்வு முதலியவற்றாற் பலவகைப்படும். சாதி - விரோதவார்த்தை.

கசு. நிக்கிரகமாவது வாதத்திலே எய்துந் தோல்வி. அது மேற்கோளழிவு, வேறுமேற்கோள் முதலாகப் பலவகைப்படும். நிக்கிரகம் - தொழிற்பாடு தடைப்படல்.

இந்தப்பதார்த்தங்கள்பதினாறும் முன்சொல்லப்பட்டபதார்த்தங்கள் ஏழனுள்ளும் அடங்கும்நெறியுடையனவாம். அடங்குநெறியை நியாய சூத்திரவுரை முதலியனகொண்டு உய்த்துணர்க.

இனி, உத்தேசமாகச் சொல்லப்பட்ட பதார்த்தங்கள் ஏழையுந் தனித்தனிசொல்லக்கருதி முதற்கணின்ற திரவியம், குணம் என்னும் இரண்டன்வகைகளையும் வருங்கவிக ளிரண்டானுஞ் சொல்லுகின்றார்.

திரவியமாவது காரியத்தின் சமவாயிகாரணமாயாக, குணங்களுக்கு ஆச்சிரயமாயாக, திரவியத்தன்மைச் சாதியுடையதாயாக உள்ள பொருள். சமவாயிகாரணம் காரியத்திலே ஒற்றுமைபெற்றிருக்குங் காரணம். சமவாயி - ஒற்றுமையுடையது. சமவாயம் - ஒற்றுமை. ஆச்சிரயம் - ஆதாரம், பற்றுக்கோடு. திரவியத்தன்மை - பொருளின் தன்மை. சாதி - பொதுவியல்பு. அன்னம்பட்டரும் "பொருண்மைச் சாதியுடைமையாதல், குணமுடைமையாதல் பொருட்கு இலக்கணம்" என்பர்.

குணமாவது திரவியத்திலே சமவேதமாயிருப்பதும், நித்தியாநித்தியவஸ்துக்களிலே இருப்பதும், பொருளைப்பிரிப்பதுமாகிய உபாதியுடையபொருள். சமவேதம் - ஒற்றுமை. உபாதி - காரியம்.

திரவியமுங் குணமும்.

க. மண்புன றீவளி வான்போது திக்காத்து மாமனமென்
றொன்பது முற்பொருண் மூவெண் குணங்க ளுருவஞ்சுவை
பின்பகர் நாற்ற முறலெண் ணளவு பிறிதியைபு
கண்பெறு நீக்கம் பரத்துவம் பின்மை கடுந்திண்மையே.

OFFICE OF ... 23 MAY 1916 MADRAS

உ. காணு நெகிழ்ச்சி சிநேக மொலிபுத்தி கண்டசுகங்
கோணும் பருவர லிச்சை வெறுப்புக் கொளுமுயற்சி
பேணுந் தரும மதன்மம் பழக்கம் பிறங்குமிவை
மாணும் பொருள்வயி னுள்ளன வென்று மதித்தனரே.

திரவியம்.

(இ - ள்) முற்பொருள் மண், புனல், தீ, வளி, வான், போது, திக்கு, ஆத்துமா, மனம் என்ற ஒன்பது-முதற்கட்சொல்லப்பட்ட திரவியம் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, காலம், திக்கு, ஆன்மா, மனம் எனப்பட்ட ஒன்பதுமாம் எ - று.

குணம்.

மூவெண்குணங்கள்-திண்மையீறாகிய எ-து, இருபத்துநான்குகுணங்களாவன: உருவம், சுவை, கந்தம், பரிசம், எண், பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், முன்மை, பின்மை, திண்மை,

காணும்நெகிழ்ச்சி—பழக்கம் எ - து. நெகிழ்ச்சி, சிநேகம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், விருப்பு, வெறுப்பு, முயற்சி, தர்மம், அதர்மம், பழக்கம் என்றவாறு.

உறல் - பரிசம். பிறிது - வேற்றுமை. இயைபு - சையோகம். நீக்கம் - பிரிவு. பருவரல் - துக்கம். பழக்கம் - வாசனை.

மாணும் பொருள்வயி னுள்ளன வென்று மதித்தனரே என்பது "த்ரவ்யஸமவேதகாரீத்ரவ்யத்தி" எனவும், "குணாஶ்ரயம் த்ரவ்யம்" எனவும் வடநூலார்கூறும் இலக்கணங்களை அநுசரிக்கின்றன.

(இன்னும்வரும்.)

அ. குமாரசுவாமிப்பிள்ளை,
சுன்னாகம்

உ

போர்க்கருவிகள்.

பூர்வகாலத்தில் வைசியர்கள் தங்கள் தனதானியாதிகளைப் பிறர் வந்து கொள்ளையிட்டுச் செல்வதைக்கண்டு வீரரைக் காவலராகுமாறு வேண்டினர். அவர்கள் காவற்றொழிலைமேற்கொண்டு க்ஷத்திரியரென்னும்வகுப்பினராயினர். அவர் தங்காவலை உலகவொழுக்க வழக்கங்களைத் தழுவி நன்னெறியிற் காத்தற்பாலராயினமையின் அவர்க்கு முறைகளை வகுக்குங் கட்டுப்பாட்டினையுடைய அறிவினையுடைய அந்தணர் இன்றியமையாதவராயினர். ஆதலின் அந்தணர் தலைமையும் அரசர் அடுத்தபடியும் வணிகர் அவர்க்குப் பின்னிலையுமுடையராயினர். அரசர் தங்காவலுக்கு இன்றியமையாத போர்க்கருவிகளையும் அவற்றைப் பிரயோகிக்கும் முறைகளையுந் தேருவாராயினர். தேர்ந்து தம்மைப் பகைவர்வந்து எளிதிலே தாக்காவகை மலையரண் காட்டரண் நீரரண் மதிலரண் என நால்வகையரண்களையும் அமைத்துக்கொள்வாராயினர்.

பண்டைக்காலத்துப் போர்க்கருவிகள், வில் அம்பு வாள் சூலம் வேல் சக்கரம் பரசு கதை வச்சிரம் எழு ஈட்டி விட்டேறு பலித்தண்டு குந்தம் தோமரம் கவண் முதலியன. இவையெல்லாம் அஸ்திரம் சஸ்திரம் என்னும் இருவகையிலடங்கும். அஸ்திரம் கைவிடுபடை. சஸ்திரம் கைவிடாப்படை. அம்பும் வில்லுமே ஆதியில் ஐரோப்பியருக்கும் யுத்தாயுதமாம். தூரத்தேயுள்ள பட்சிமிருகாதிகளைக் கொல்வதற்காகச் சூழ்ச்சிசெய்யப்பட்ட ஆயுதம் அம்பும் வில்லுமாம்.

வில்லானது பாணத்தைத் தூரத்தேயுள்ள இலக்கிற் பாய்ந்துருவுமாறு துரப்பது. பாணத்திற்கு வேகத்தைக்கொடுப்பது வில்லே. வில்லு எத்துணைவிசையுடையதோ அத்துணைத் தூரத்துக்குப் பாணஞ் செல்லும். இக்காலத்தில் துப்பாக்கிகள் பீரங்கிகள் "கிறப் ஷராப்னெல் ஹவிற்சர்" என்பனவாதியபெயர்கொண்டனபோலப் பண்டைக்காலத்திலும் விற்களுக்குக் கோதண்டம், காண்டீவம் எனப்பெயரிடப்பட்டன. அக்காலத்து விற்களுள் உலோகங்களாற் செய்யப்படுவனவே சிறந்தன.

வில்வித்தையில் வல்ல புருஷோத்தமன் ஒருவனாலே கையாடப்பட்ட வில்லுச் சாமானியர் பல்லாயிரவர் தூக்குதற் கரியதாயிற்றென்பது ராமாயணம். இக்காலத்தில் நெடுந்தாரைப் பீரங்கிகள் முப்பது நாற்பது குதிரைகளாலும் இருநூறு முந்நூறு காலாட்களாலும் இழுத்துக் கொண்டுபோய் நாட்டப்படுகின்றன என்பது இப்போது நடக்கும் ஐரோப்பிய யுத்தசரித்திரங்கண்டார் யாவரு மறிவர்.

அதுநிற்க; வில்லினது வலிமையினும் மிக்கவலியினையுடைய கருவியொன்று காண்டல்வேண்டுமென ஐரோப்பியர் ஆங்காங்குமுயன்றனர். முயன்றபோது துப்பாக்கி புலப்பட்டது. அம்புக்குப்பிரதியாகக் குண்டு புலப்பட்டது. துப்பாக்கிவலியும் போதாதெனக்கண்டு பீரங்கி சூழ்ச்சிசெய்யப்பட்டது. அதுவும் வலிபோதாதெனக்கண்டு அதிலும் ஆயிரமடங்குவலியுடைய பீரங்கிகளைக் காலந்தோறுஞ் சூழ்ச்சிபண்ணி இயற்றிவருகின்றார்கள். குண்டுக்குப்பிரதியாகவும் மிக்கவலிமையுடைய பெருந்தாக்குவெடிக்குண்டுகளும், முசலக்குண்டுகளும், நச்சுப்புகைக் குண்டுகளும், நிர்மூலக்குண்டுகளும் சூழ்ச்சிசெய்யப்பட்டன.

ராமாயண பாரதகாலங்களிலே வழங்கப்பட்ட அஸ்திரங்கள் தற்காலத்துக் குண்டுகளினுஞ் சிறந்தனவாகத் தோன்றுகின்றன. நச்சுப்புகைக்குண்டுகளிலும் மோகனாஸ்திரம் அற்புதமுடையது. வருணாஸ்திரம் அக்கினியஸ்திரங்களுங் கேட்கப்படுகின்றன. ஸ்ரீராமபிரான் அக்கினியஸ்திரத்தைக்கொண்டு கடலைவற்றுவித்து இலங்கையிற் படையேற்றமுயன்றனர். அர்ச்சுனன் பெருங்காண்டாவனத்தை அக்கினியஸ்திரத்தாலழித்தான். இற்றைக்குச் சிலகாலத்துக்குமுன் ஜர்மனிதேசத்தார் ஆகாயரதத்திற் கடல்தாண்டிச்சென்று ஆங்கிலநாட்டிற் குண்டுபொழிந்தார்கள் என்று சொன்னால் சொன்னவன் பித்தனென்றிகழ்ந்து தள்ளப்படுவான். இப்போது ஜர்மனிதேசத்தார்மாத்திரமன்று, ஆங்கிலேயர் பிரான்சியர் ருஷியர் ஜப்பானியர்முதலானவர்களும் ஆகாயரதத்தை உபயோகித்துவருகிறார்கள்.

இப்போது ஐரோப்பியதேசத்தில் நடக்கும் மகாயுத்தத்தில் ஆயிரக்கணக்கான ஆகாயரதங்கள் யுத்தஞ்செய்கின்றனவென்பது யாரறியாதார். புராணங்களிற் கூறப்பட்ட ஆகாயரதங்கள் மிக்கதிட்பநுட்பங்கள் அமைந்தனவாகத் தோன்றுகின்றன. இராவணன் ஆகாயரதத்தில்

இமயத்தின்மீதுஞ் சென்றான். அவனுடையரதம் கடன்மேலுஞ் செல்லும், நிலத்தின்மேலுஞ் செல்லும், மலைமேலுஞ் செல்லும். நினைத்தவிடமெங்கும் இறங்கும். பழையசித்திரங்களைநோக்கினால் ஆகாயவிமானம் செயற்கைச்சிறகுகளையுடையதேயாம். அவற்றை இயக்கவும் நிறுத்தவுந் தக்ககருவிக ளிருந்தனவாகத் தோன்றுகின்றன. தற்காலத்துச் செப்பர்லின்களும் சிறகுடையனவே. ஐரோப்பியருக்கு ஆகாயரதக் கருத்தையுண்டாக்கிவிட்ட நூல்கள் எங்கள் புராணேதிகாசங்களேயாம்.

புராணேதிகாசங்களிலே மலைகளை ஊடறுத்துத் தகர்த்த படைக்கலங்களுங் கூறப்பட்டுள்ளன. இந்நாளில் மலைகளைத்தகர்த்துத் தூளாக்கும் பீரங்கிகளில்லையாயினும் கோட்டைகளைத் தகர்த்துவிடக்கூடிய வலியபீரங்கிகள் உண்டென்பது நாமூர்க்கோட்டை அன்வேர்ஸ் கோட்டைகள் பட்டபாட்டால் அறியத்தக்கது.

இந்நாள்காறும் ஐரோப்பியமக்களால் அமைக்கப்படாத அற்புதக் கருவிகள் நம்முன்னோர்களால் அமைத்துப் பிரயோகிக்கப்பட்டனவாகப் புராணேதிகாசங்கள் கூறுகின்றன. மதில்களின்மீது யந்திரங்கள் உருக்கிய உலோகநீரைவீசிப் பகைவரையோட்டும். சிலபொறிகள் கவணெறிந்து அதிதூரத்திலேயே நம்பகைவரையோட்டும். சில குரக்குப்பொறிகள் மதில்மேலேறும்பகைவரைக் கடித்தும் குத்தியும் எற்றியும் வீழ்க்கும். சில மதிலேறும்பகைவரைக் கழுத்திற் சுருக்கிட்டிழுக்கும். சில கவைக்கோலாற் குத்தி அகழியில் ஆழ்த்தும்.

இன்னும் சதக்கினி, தள்ளிவெட்டி, களிற்றுப்பொறி, விழுங்கும்பாம்பு, கழுகுப்பொறி, புலிப்பொறி, சகடப்பொறி, தகர்ப்பொறி, அரிநூற்பொறி எனப் பலபொறிகள் மதிலினிடத்து அமைக்கப்பட்டிருந்தனவாகவும் விளங்குகின்றன. சதக்கினி என்பது நூற்றுவரைக்கொல்லி. இஃது இரும்பினாற்செய்து கண்டோர்மயங்கித் தழுவுமாறு வர்ணமிட்டுக் குறவமைத்து மதிற்புறத்தேநிறுத்தும் பாவையாம். தன்னைத்தழுவுவாரை ஒருவரொருவராகவணைத்து நூற்றுவரானவுடன் நெரித்துக்கொல்லும்வன்மையுடையது என்பர். இவைபோன்ற மற்றவைகளும் ஒவ்வோராற்றலுடைய மாயப்பொறிகளாம்.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

உ

குறுந்தொகையுரையாராய்ச்சியும் பாடாந்தரமும்.

அமிழ்தினுமினிய நந் தமிழ்மொழியை முதலிடைகடையென்னும் முச்சங்கம்நிறுவிப் பாண்டியமன்னர்கள் பாதுகாத்துவந்தனர். அம்மன்னர்கள்நிறீஇய கடைச்சங்ககாலத்துப்பாடப்பெற்ற தொகைநூல்களுட்சிறந்ததொன்று குறுந்தொகையென்னும் நூலாகும். இவ்வரும் பெருநூல், ஒன்பான்சுவையும் ஒழுகப் பத்துவகைவனப்புமெய்திப் பண்டைக்காலத்துத் தண்டமிழ்மக்களின் ஒழுக்கவழக்கங்களையுந் தன்னகத்தடக்கிப் பொருணுட்பங்களுஞ்செறிந்து, கற்போர்நெஞ்சங் கழிபேருவகையெய்துமாறமைந்திருந்ததலையோர்ந்து, பண்டைக்காலத் தலையாசிரியர்குழுவிலொருவராகியபேராசிரியரென்னும்பெரியார், முந்நூற்றிரண்டுபாக்களுக்குப் பேருரையொன்றுகண்டு, கல்வியினருமையும் பெருமையும் காசினியோர் அறியும்வண்ணம் இருபதுபாக்களுக் குரைகாணாதுவிடுத்தனரென்றும், அவ்விருபதுபாக்களுக்கும் ஆசிரியர்நச்சினார்க்கினியர் அரும்பெறலுரையொன்று கண்டனரென்றுங் கூறுப. அங்ஙனங் கூறுதல்,

"நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற்
கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
இதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்தும்"

எனவும்,

"பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியு
மாரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்குஞ்—சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே"

எனவும் வரும் இவைகளிற்றால் நன்குவெளியாமென்க. இப்பேராசிரியர்கள் இயற்றிய அரும்பெறலுரை இக்காலத்துக் கிடைப்பது முயற்கொம்பாயிற்று. அந்தோ! தமிழ்மக்களாகிய யாங்களிழைத்தபாவத்தை யென்னென்பேம்.

அச்சிட்டுவந்தனவும், எட்டுப்பிரதியிலுள்ளனவுமாகிய சங்கநூல்களொழிய, ஏனைய சங்கநூல்கள்போல இக்குறுந்தொகை என்னும் அரும் பெறற்றமிழ் நூலும் சிதல்வாய்ப்பட்டு அழிந்தொழியாது, 'திருக்கண்ணபுரத்தலத்தாராகிய கனம் சௌரிப்பெருமாளரங்கன்' என்பவர்கள் தந்தேகசிரமமும் பொருட்செலவுங் கருதாது பலவிடங்கட்குச்சென்று அரிதின்முயன்று இக்குறுந்தொகை ஏட்டுச்சுவடிகளைத் தேடிப் பெற்று அதற்கொரு புத்துரையுமெழுதி வெளியிட்டுள்ளார்கள். இவர்கள்செய்த பேருதவிக்கு நந் தமிழுலகம் நன்றிபாராட்டுங் கடப்பாடுடையதாமென்க.

கனம் அரங்கனவர்கள், குறுந்தொகை அச்சுப்பிரதி உதவியுரைத்தல் பதினான்காம்பக்கத்திறுதியில் "இந்நூலின்பெருமையும், எனது அறிவின்சிறுமையுங் கருதின் பலப்பலவிடங்களிலும் மிகப் பலவழுக்கள் செறிந்திருத்தல் இன்றி அமையாததனவாமாதலின் கல்வியறிவுள்ளாராகிய நற்றமிழறிஞர்கள் இந்நூல், உரைமுதலியவற்றிற்காணப்படும் தவறுகளையும், விளங்காதனவாகக் குறித்துள்ளவைகளையும் மற்றும் உரியவாய்க்காணப்படுங் கருத்துக்களையும் அடியேனைப்பொருட்படுத்தி எடுத்துரைத்துதவுமாறு அவர்களைப் பன்முறையும் பணிவுடன்வேண்டிக்கொள்கிறேன். அங்ஙனந் தெரிவிக்கப்படும் அறிஞர்களின்றிருத்தங்களை வந்தனத்தோடு ஏற்றுக்கொண்டு மறுபதிப்பில் அவற்றைத்தழுவி இன்ன இன்ன திருத்தங்கள் இவ்விவ் அறிஞர்களால் அறிவிக்கப்பட்டனவென்றும்........ கூறுவேன்" என்று ஆணைதந்தமையின் இவர்கள் உரையெழுதி வெளியிட்டுள்ள இவ்வரும்பெருநூலைக் கண்ணுற்ற யானும் என்சிற்றறிவிற்கு முரணாகத்தோன்றியவற்றை இச்செந்தமிழ்ப் பத்திரிகைமூலம் வெளியிடலாயினேன்.

கனம் அரங்கனவர்கள், தமக்கறிவிக்க ஆணைதந்திருக்க, நீ செந்தமிழ்ப்பத்திரிகையில்வெளியிடற்குக் காரணமென்னையெனின், யான் முன்னர் இங்ஙனம்வரைந்த இரண்டொருவர்க்குச் சிலவிடயங்கள் பொறித்துவிடுத்தேன்; அவர்கள் அப்புத்தகங்களை இரண்டாமுறை பதிப்பியாமையால் அவ்விடயங்கள் இதுகாறும் வெளிவந்தில. அங்ஙனமே இதுவும்நேருமோவென் றையுற்று இங்கு வெளியிடலாயினேன்.

கனம் அரங்கனவர்கள்வரைந்தவுரையைப் பேரறிஞர்கள் நோக்கி அதிலுள்ள குணதோடங்களை வெளியிடுவார்களாயின் அஃது உலகிற்குப் பேருபகாரமாயிருக்குமென்பதென்றுணிவு. சிறியேனாகிய யான் இதனை யாராயச்செல்லுதல் ஆன்றோர்பலர்க்கும் நகைப்பைத்தருவதாயினும் உண்மை வெளிப்படவேண்டுமென்னும் ஆசை என்னைப் பிடர்பிடித்துந்துதலான் அதனையுங்கருதாது ஸ்தாலீபுலாகநியாயம்பற்றி இரண்டொருபாட்டினுரையையும், இரண்டொருபாட்டிற்கு இவர்கள் கொண்டபாடம் பொருத்தமுடைத்தா? இன்றா வென்பதையும் ஈண்டாராயத்துணிந்தேன். இதனைச் "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல்" நடுநின்றாராய்தல் அறிவுடையோர்கடனாமென்க.

குறுந்தொகை கசO.

அள்ளூர்நன்முல்லை பாடியது.

இது, பொருள்வயிற்பிரிந்தவிடத்து 'நீ ஆற்றுகின்றிலை' என்ற தோழிக்குத் தலைமகள்சொல்லியது.

"வேதின வெரிநி னோதி முதுபோத்
தாறுசென் மாக்கள் புட்கொளப் பொருந்துஞ்
சுரனே சென்றனர் காதல ருரனழிந்
தீங்கியான் றாங்கிய வெவ்வம்
யாங்கறிந் தன்றிவ் வழுங்க லூரே"

இப்பாட்டிற் கிவர்கள் எழுதியவுரை வருமாறு.

வெப்பமுள்ள முதுகினையுடைய ஓந்தி, முதிய(மரப்)பொந்திடத்து வழிச்செல்லும்மாக்கள் புள்ளைக்கொள்ளப் பொருந்துவதாகும் சுரத்திடத்துச்சென்றார் காதலர்; வலியழிந்து இவ்விடத்து யான்றாங்கிய துயரத்தை எவ்விதம் அறிந்தது இவ்விரக்கத்தையுடையவூர். எ-று.

இவர்கள் வேதின என்பதற்கு வெப்பமுள்ளவென்றும், போத்தென்பதற்குப் பொந்தென்றும், புள் என்பதற்குப் பறவையென்றும் உரையுரைத்தார்கள். எம்பண்டைத்தமிழ்மக்கள் இயற்கைப்பொருளை அவ்வியற்கை சிறிதுஞ்சிதையாதப்பெற்றியேகூறும் அழகுஞ் சுவையும் உலகியலையமைத்துச் செய்யுள்செய்யு மருமையும், என்னாற்சொல்லும் பான்மையுடையனவாமோ? இப்பாட்டிற்கு இவ்வுரை பொருத்தமாகக் காணப்படாமையால் யான் வேறுரை வரைகின்றேன். அதுவருமாறு.—

ஆற்றின்கண்ணே செல்கின்றமாக்கள் (இடைப்புலத்துப்புறம் போந்தார்கூறியவற்றை) வாய்ப்புள்ளாகக்கொள்ளாநிற்ப, ஈர்வாளினுடையவாய்போன்றமுதுகினையுடைய முதிய ஓந்திப்போத்தானது (இடமிருந்து வலமாகச்சென்று) பொருந்துகின்ற சுரத்தினிடத்து (பொருள்கருதி)ச் சென்றனர் காதலர். (அதனாலாற்றும்) வலியழிந்து இவ்விடத்து யானுழந்தயதுயரத்தை யெவ்வண்ணம் அறிந்ததோ இவ்விரக்கத்தையுடைய ஊரென்க எ-று.

வேதினம் = ஈர்வாள், இதன்வாய்போல ஓந்தியின்முதுகிருக்குமென்றுகூறியிருக்கும் அழகு பாராட்டற்பாலதேயாம். ஓதிமுதுபோத்து = ஆணோந்தி.

தொல்-பொருள். மரபியல்,

"பெற்ற மெருமை புலிமரை புல்வாய்
மற்றிவை யெல்லாம் போத்தெனப் படுமே"

என்னும் ௬௨-ஆவது சூத்திரவுரையில் "மற்றிவையெல்லாம் என்றதனால் பன்றியும்,ஓந்தி முதலாயினவுங் கொள்ளப்படு"மென்று அவ்வுரையாசிரியர் கூறியிருத்தலால் இவ்வோந்தி, போத்தெனப்பெயர்பெற்றதன்றிப் பொருந்தென்பது போத்தென விகாரப்பட்ட தன்றென்க. இவ்வோந்தி இடமிருந்து வலமாகச்செலின் ஒருவர்கருதிச்செல்லுங்கருமம் இனிதுமுடியுமென்பது, "கரிமயில் பசுங்கிளி கோழிகொக் கொடு காக்கை நாவிச் சிலிபோந்திதான்..............இவையனைத்தும் வலமாயின் வழிப்பயணமாகை நன்றாம்" எனவரும் அறப்பளீசுரசதகம், ௬௫-ஆவது செய்யுளால் நன்குவிளங்குமென்க. ஈண்டுப் புள்ளென்றது பறவையையன்று. அது வாய்ச்சொல்லென்க. இஃது இடைச்சுரத்துப் போந்தார்கூறியது.

தொல்-பொருள். புறத்திணையியல்,

"படையியங் கரவம் பாக்கத்து விரிச்சி"

என்னும் முதலடியையுடைய ௫௮-ஆவது சூத்திரவுரையில், பாக்கத்து விரிச்சியென்னும்பகுதிக்கு அவ்வுரையாசிரியர், "பாக்கத்துவிரிச்சியாவது = நிரைகோடற்கு எழுந்தோர்போந்துவிட்டபாக்கத்துக்கங்குலின் அல்வாய்ப்புட்கேட்டலும், நிரைமீட்டற்கெழுந்தோர் இடைப்புலத்துப் புறம்போந்தார்கூறியவற்றை வாய்ப்புள்ளாகக்கோடலும். உதார

"திரைகவுள் வெள்வாய்த் திரிந்துவீழ் தாடி
நரைமுதியோ னின்றுரைத்த நற்சொ--னிரையின்றி
யெல்லைநீர் வைய மிறையோர்க் களிக்குமால்
வல்லைநீர் சென்மின் வழி'

"வந்தநீர் காண்மினென் றுபெயர்ப்போர் மாட்டிசைத்த
பைந்தொடியார் கூறும் பறவாப்புள்--ளுய்ந்த
நிரையளவைத் தன்றியும் நீர்சூழ் கிடக்கை
வரையளவைத் தாவதா மண்"

இவை "விரிச்சியைவியந்தன" என அல்வாய்ப்புள்ளென்பதற்கு "நரைமுதியோனின்றுரைத்தநற்சொல்" என்றும், வாய்ப்புள் என்பதற்கு "பைந்தொடியார்கூறும்பறவாப்புள்" என்றும், கூறியிருத்தலால், பறவையன்று நற்சொல்லென்பது தெற்றெனவெளியாமென்க.

நற்றிணை ௧௩௭ செ-ள்.

இது பிரிவிடைமெலிந்ததோழிக்குத் தலைவிசொல்லியது,

"கல்லூற் றீண்டல கயனற வாங்கி
யிரும்பிணர்த் தடக்கை நீட்டிநீர் கொண்டு
பெருங்கை யானை பிடியெதி ரோடுங்
கானம் வெம்பிய வறங்கூர் கடத்திடை
வேனி லோதி நிறம்பெயர் முதுபோத்துப்
பண்யாழ் கடைய வாங்கிப் பாங்கர்
நெடுநிலை யாஅ மேறுந் தொழில
பிறர்க்கென முயலும் பேரு ணெஞ்சமொடு
காமர் பொருட்பிணி போகிய
நாம்வெங் காதலர் சென்ற வாறே"

எனவரும் இப்பாட்டில் வேனிலின்கண் மாறிமாறித் தன்னிறம்வேறுபடுகின்ற முதியவோந்திப்போத்தென அதன் இயற்கைத்தன்மையை "வேனிலோதிநிறம்பெயர்முதுபோத்"தெனக் கூறியிருத்தலையும் நோக்கின் யான்கூறியது பொருத்தமானவுரையென்பது விளங்குமென்க.

குறுந்தொகை ௫௭-வது செய்யுள்.

சிறைக்குடியாந்தையார்பாடியது.

இது, காப்புமிகுதிக்கண் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

> பூவிடைப் படினும் யாண்டுகழிந் தன்ன
> நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
> பிரிவரி தாகிய தண்டாக் காமமோ
> டுடனுயிர் போகுக தில்ல கடனறிந்
> திருவே மாகிய வுலகத்
> தொருவே மாகிய புன்மைநா முயற்கே.

இப்பாட்டிற் கிவர்கள் இயற்றியவுரை வருமாறு:—

பூப்பிடையே உண்டாயினும் யாண்டளவு தலைவன்கூட்டம் கழிந்தாற்போன்ற, நீரிடத்துறையும் மகன்றிலினதுசேர்க்கைபோலப் பிரிதலருமையாகிய, துய்த்து விருப்பநீங்குதலில்லாதகாமத்தோடு ஒருங்கே (எம்இருவர்) உயிரும்போவதாக; கடமையையறிந்து இருவேமாய்க்கூடி ஒழுகிவந்தவுலகத்துத் தனித்தோமாகநேர்ந்த புன்மை, நாம் பிழைத்திருத்தற்காகவோ நேர்ந்தது? (இன்று) எ-று.

கனம் அரங்கனவர்கள் பூவிடைப்படினும் என்பதற்குப் பூப்பிடையே உண்டாயினும் எனத் தலைமகள்கூறியதாக வுரைவரைந்தார்கள். எவ்வாற்றானும் தனக் கொப்பாரும் மிக்காருமில்லாத தலைமகள், இழிந்த வாய்பாட்டால் தோழியே எனக்குப் பூப்பிடையே உண்டாயின் அது காரணமாகநேரும் மூன்னாட்பிரிவை ஓராண்டளவாகக்கருதுவே னென்றுகூற விவட்கேலாமைக்குத் தகவாமோ? அங்ஙனங்கூறின் அவள் பொருவிறப்பெண்ணேயோவெனக.

இனி,

> "கற்பினுட் பிரிந்தோன் பரத்தையின் மறுத்தந்
> தப்பொருட் பெயர்ப்பினும் வரைநிலை யின்றே"

என்னும் இறையனாரகப்பொருள் ௪௩-வதுசூத்திரவுரையில், "கற்பென்பது பூப்பு; அப்பூப்புக் கற்புக்காலத்தன்றிக் களவுகாலத்து நிகழாமைநோக்கிப் பூப்பினையுங் கற்பென்றுசொல்லினாரென்பது" என ஆசிரியர் நக்கீரனார் களவுகாலத்துப் பூப்புநிகழ்தல்கூடாதென்றும், ஆசிரியர் தொல்காப்பியனார்,

> "மூன்னா ளல்லது துணையின்று கழியா
> தந்நா ளகத்து மதுவரை வின்றே"

எனக் களவுகாலத்துப் பூப்புநிகழுதல்கூடுமென்றும் கூறியிருக்கின்றார்கள். இதுவிடயத்துத் தலையிட்டொன்றை நிலைநிறுத்துதல் ஆன்றோர் கடனாகையால் இதுகிடக்க; ஆசிரியர் தொல்காப்பியனார்கொள்கைப்படி களவுகாலத்துப் பூப்பிடைப் பிரிவுவந்துழி,

குறுந்தொகை ௧௫௭-வது செ-ள்.

அள்ளூர் நன்முல்லைபாடியது.

இது பூப்பெய்தியதலைமகளுரைத்தது.

> "குக்கூ வென்றது கோழி யதனெதிர்
> துட்கென் றற்றென் றூஉய் நெஞ்சம
> தோடோய் காதலர்ப் பிரிக்கும்
> வாள்போல் வைகறை வந்தன்று லெனவே"

எனத் தலைவி தான் பூப்பெய்தியதன்மையைப் பாங்காயினார்கேட்பக் குறிப்பாக அறிவித்திருக்கும் அருமையும் பெருமையும் உள்ளுந்தோறு முள்ளுந்தோறுங் கழிபேருவகையை யூட்டாநிற்கின்றன. இங்ஙனங் குறிப்பாற்கூறலன்றி வெளிப்படையாக எனக்குப் பூப்பிடையேவரினு மெனத் தலைமகள் இழிந்தவாய்பாட்டாற்கூறுதல் புலனெறிவழக்கன்று மெனக. பூவிடைப்படினும் என்பதற்கு இவ்வுரைபொருந்தாமையான் வேறுரையுரைக்கின்றேன். அதுவருமாறு:—

(தோழி பான்மையினானுளதாகிய) முறையால், அறிந்து (பலப்பல பிறவிகளினும்) இருவேமுமாய் (பிறந்துபிறந்து இன்பமனுபவித்து) வந்த உலகத்தினிடத்து (காப்புச்சிறைமிகுதலில்) தனித்தேமாகிய இழிவு (யாங்கள்) பிழைத்தற்கோ (நேர்ந்தது) இன்று ஆதலால், (புணர்ச்சிக்காலத்துப்) பூவிடையே தடுப்பினும் பலயாண்டுகள் கழிந்தனவாக (கருதுதலை) ஒத்த நீரினாண்மேவகிக்கின்ற மகன்றிலினது சேர்க்கைபோல (யாங்களனுபவிக்கும் புணர்ச்சிக்காலத்து இடையூறுறுமாயின் பலயாண்டுகள் கழிந்தனவாகக்கருதும்) பிரிதலருமையாகிய துய்த்து விருப்பம்நீங்குதலில்லாதகாமத்தோடு ஒருங்கே எம்முயிர் போவதாக எ-று.

இப்பாட்டிற்கு யான் கூறியதே உரையென்பது இக்குறுந்தொகைச் செய்யுளின் சொல்லையும் பொருளையும் ஆசிரியவசனமாகக்கொண்டு ஆசிரியர் மாதவச்சிவஞானயோகிகள்மாணாக்கரும், ஆன்றோர்களாற் கவிச்சக்கரவர்த்தியென்று கொண்டாடப்பெற்றவருமாகிய ஆசிரியர் கச்சியப்பமுனிவர்,

(தணிகைப்புராணம், களவுப்படலம் ௭௨-வது செய்யுள் பிரிவசசம்.)

"மணிநீர்க் கயத்து மலரிடை தட்பினும் வார்கழுத் தப்
பிணிநீர் மையிற்சற்று நீங்கினு மூழி பெயர்ந்தனைய
தணிநீர் மகன்றிலிற் றண்டாது காமத் துறைபடியு
மணிநீர் மையினுயி ரோராங் ககல்கதி லம்புவிக்கே"

எனக் கூறியிருத்தலின், தெற்றெனப்புலனாமென்க. கனம் அரங்கனவர்கள் பூவென்றுணர்த்தற்குரிய அடையின்மையினாலன்றோ இங்ஙன முறைகூறினார்கள். ஆசிரியர் கச்சியப்பமுனிவர் இக்குறுந்தொகைப் பாட்டின்சொல்லையும், பொருளையும் பொன்போற்போற்றியெடுத்து அடைகொடுத்தாண்டிருக்கு மழகு பாராட்டத்தக்கதேயாம்.

குறு-கை. ௭-வது செ-ள்.

பெரும்பதுமனார்பாடியது.

செலவின்கண் இடைச்சுரத்துக் கண்டோர்கூறியது.

"வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே."

இப்பாட்டிற்கு இவர்கள் எழுதிய உரை வருமாறு:—

வில்லினனான இவன்காலிடத்தன கழல்கள்; வளையினளான இவள் மெல்லிய அடிகளின்மேலிடத்தனவுஞ் சிலம்புகள்; நல்லோராகிய (இவர்கள்) எவர்கொல்? கயிற்றின்கண்ணே பொருந்தி அசைகின்றபறையின் (ஒலியேபோன்று)காற்றுப்பொருதலாற் கலக்கமடைந்து வாகையினது வெள்ளியநெற்று ஒலித்தலைச்செய்யும் மூங்கில்கள்மிக்க காட்டுநிலப் பரப்பை (செல்லும்வழியாகக்) கருதினார்கள். இரங்கத்தக்காரே (இவ்விருவர்களின்) இருமுதுகுரவர்.

இப்பாட்டிற்கு எனக்குக்கிடைத்தவேட்டுச்சுவடியின்கண்ணுள்ள பாடபேதமும், யானுரைக்கு முரையும் வருமாறு:—

ஆரியர், கயிறுடைபறையிற்கால்பொரக்கலங்கி எனவும், வேய்பயில்பழவமுன்னியோரே எனவும் பாடங் காணப்படுகின்றன. இவை பொருத்தமானபாடமாகவிருக்குமென்பதெனதுகொள்கை. பழுவமென்றபாடம் இவர்களுங் காட்டியுள்ளார்கள்.

மிலேச்சர்கள்கழுத்தினிடத்துப்பொருந்தியுள்ள பறை(ஒலி)போலக் காற்றுவந்து மோதுதலானே கலங்குதலைச்செய்து வாகைமரங்களினுள்ள வெள்ளியநெற்றுக்கள் ஒலித்தலைச்செய்யும் மூங்கில்மரங்கள் பொருந்திய (பாலைநிலமாகிய) இக்காட்டிலடைந்தோராகிய நல்லவர்கள் யாரோ வறியோம். ஆனால் வில்லினையுடையனான இத்தலைவன் காலின்கண்ணே கழல்களுள்ளன; அதுவேயுமன்றி வளையினையுடையவளான இத்தலைவியின் அடியின்மேலுஞ் சிலம்புகளுள்ளன; (ஆதலால் இவர்கள் நம்மால்) அளிசெய்யத்தக்காரேயென்க.

ஆரியர்=மிலேச்சர். கயில்=பிடர்; கழுத்தினையுணர்த்திற்று. பழுவம்=காடு. கழல்=ஒருவகைக் காலணி. சிலம்பு மங்ஙனமே.

இனிக் கனம் அரங்கனவர்கள் 'வில்லோன்........ .. சிலம்பே'— இருவரும் பெருஞ்செல்வத்தினரென்பதுணர்த்திற்று. "வில்லோன் காலன கழலே என்றது தலைமகன்வல்லமையையு முணர்த்துகின்றது" என நயங்கூறினார்கள்.

இத்தலைமகனுந் தலைமகளும் எவ்வாற்றானுந் தங்கட்கு ஒப்பாரு மிக்காரு மில்லாதாராயிற்றே; இவர்களை மிக்கசெல்வத்தினரென்று பிறரறியும்வண்ணம் "வில்லோன்...கழலென்றும்" "மெல்லடிமேலனசிலம்" பென்றுங் கூறினாரென்பது சிறிது மேலாதாம். அற்றேல் இம்மொழிகள் நின்றுவற்றுமாலோவெனின்; நன்றுகூறினீர்! பண்டைக்காலத்துத் தண்டமிழ்மக்கள் மணமுடிக்கும்வரையும் இன்னின்ன அணிகள் அணியவேண்டும், மணமுற்றியபின்னர் இன்னின்ன அணிகளை நீக்கிவிட்டு இன்னின்ன அணிகளை யணியவேண்டுமென்னும் ஒழுக்கத்தைக் கையாண்டு வந்தனராகலின் இவ்விருவர்காலின்கண்ணே சிலம்புங் கழலுங்கிடத்தலையறிந்து, இவர் வதுவைமுற்றாது களவின்கண்வந்தாரென்று கண்டோர்

கருதுதற்குக் கூறிய மொழிகளாகலின், நின்றுவற்றுதல் யாண்டைய தென் றொழிக. மணமுடிக்குங்காலத்து முன்னணிந்திருந்த சிலம்பு முதலியவணிகளை நீக்குதல் பண்டைக்காலத்து வழக்கென்பது,

நற்றிணை உஎகூ-வது செ-ள்.

கயமனார்பாடியது.

இது, மகட்போக்கிய தாய் சொல்லியது.

"வேம்பி னொண்பழ முணீஇ யிருப்பைத்
தேம்பால் செற்ற தீம்பழ னசைஇ
வைகுபனி யுழந்த வாவல் சினைதொறு
நெய்தோய் திரியிற் றண்சித றுறைப்ப
நாட்சுர முழந்த வாட்கே ழேற்றையொடு
பொருத யானைப் புட்டா ளேய்ப்பப்
பசிப்பிடி யுதைத்த வோமைச் செவ்வரை
வெயில்கா யமையத் திமைக்கு மத்தத்
ததருழந் தசையின கொல்லோ ததரல்வாய்ச்
சிலம்பு கழீஇய செல்வம்
பிறருணக் கழிந்தவென் னாயிழை யடியே"

என்னும் இப்பாட்டினுள், மகட்போக்கிய நற்றாய் தலைவனைச்சார்ந்து மணமுடிக்கும்பொழுது காலில் அணிந்திருந்த சிலம்பைக் கழற்றுதற் குச்செய்யும் விழாச்சிறப்பை யான் கண்டுமகிழாது பிறர்கண்டுமகிழும் படிசென்றொழிந்த வென்புதல்வியின் அடிகள் என்பாள் "சிலம்புகழீஇய செல்வம், பிறருணக்கழிந்தவென்னாயிழையடியே" எனவும்,

தொல்- பொருள். அகத்திணையியல் கூசு-வது சூ-ம். உரை கூக-வதுபக்கம்,

"நும்மனைச் சிலம்பு கழீஇ யயரினு
மெம்மனை வதுவை நன்மணங் கழிகெனச்
சொல்லி னெவனோ மற்றே வென்வேன்
மையற விளங்கிய கழலடிப்
பொய்வல் காளையை யீன்ற தாய்க்கே"

"இவ்வைங்குறுநூறு தலைவன்மீண்டு தலைவியைத் தன்மனைக்கட் கொண்டுவந்துழி அவன்தாய் சிலம்புகழிநோன்புசெய்கின்றாளெனக் கேட்ட நற்றாய் ஆண்டுநின்றுவந்தார்க்குக்கூறியது எனவும் வரும் இவையிற்றால் நன்குவிளங்குமென்பதி லையமின்றாம்.

இனி, இவர்கள் களவின்கட்செல்லும்போழ்து கழலோடும் சிலம்போடும் செல்வரென்பது,

இறையனாரகப்பொருள் உகூ-ஆவது சூத்திரவுரையில்,

"வில்லான் விறலடி மேலன பொற்கழல் வெண்முத்தன்ன
பல்லா ளிணையடி மேலன பாடகம் பஞ்சவற்கு
நெல்லார் கழனி நெடுங்களத் தன்று நிகர்மலைந்த
புல்லா தவரென வார்கொல் லருஞ்சுரம் போந்தவரே" எனவும்,

தொல்-பொருள். அகத்திணையியல் சO-வது சூம். உரை கூஎ-வது ப-ம்.

"பெயர்ந்து போகுதி பெருமூ தாட்டி
சிலம்புசெழு சீறடி சிவப்ப
விலங்குவேற் காளையோ டிறந்தனள் சுரனே"

எனவும்,'மையறவிளங்கியகழலடிப்,பொய்வல்காளையையீன்றதாய்க்கே' எனவும் வரும் இவையிற்றால் விளங்குமென்க.

தொல்-பொருள். அகத்திணையியல். சO-ஆவது சூ-ம்,

"பொழுது மாறு முட்குவரத் தோன்றி
....
....
சேய்நிலைக் ககன்றோர் செலவினும் வரவினும்
கண்டோர் மொழிதல் கண்ட தென்ப"

என்னுஞ் சூத்திரவுரையில், அவ்வுரையாசிரியர் "இஃது இடைச்சுரத் துக் குறும்பினுள்ளார் இவர்களைக்கண்டு கோள் இழைப்புற்றார்க்கு அவர்பெண்டிர்கூறியது. இவை செலவின்கட் கூறியன". "வில்லோன் காலன........முன்னியோர் என்பது மது" எனக் கூறியுள்ளாராகலின் கோளிழைப்பச்சென்ற தங் காதலரைத் தடுத்து இவர்கள் காலின்கண் ணே கழலுள்ளன, சிலம்புள்ளன, ஆதலால், களவின்கண்வந்தவராவர். இவர்கள் கோளிழைக்கத்தக்காரல்லர்; நம்மால் அளிசெய்யத்தக்கா ரெனக்கூறி யிவர்களைச் செலவுமுங்குவித்தனரென்ப தவ்வாசிரியர்கருத் தொடுபட்டபொருளாமென்க. இன்றேல் இவ்"வில்லோன்" என்னுஞ் செய்யுளை ஈண்டெடுத்துக்காட்டற் கியாது மியைபின்றாமென்பது தெளிவாமென்க.

குறுந்தொகை அ-ஆவது செ-ள்.

ஆலங்குடிவங்கனார்பாடியது.

இது, கிழத்தி தன்னைப் புறனுரைத்தாளெனக்கேட்ட காதற்பரத்தை அவட்குப்பாங்காயினார்கேட்பச் சொல்லியது.

"கழனி மரத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்
....
..........................."

என்னும் அடிகட்கு இவர்கள்செய்தவுரை வருமாறு.—

வயலையடுத்துள்ளமரத்தில் முதிர்ந்து உதிரும் இனியபழத்தை வயலிடத்துள்ள வாளைகள் கௌவிக்கொள்ளு மூரன் எ-று.

எனக்குக்கிடைத்த வேட்டுச்சுவடியி லுள்ளபாடமும் அதற்கேற்ப யானுரைக்கும் உரையும் வருமாறு.—

கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்

கழனிக்கண் ணுள்ள மாமரத்திடத்தில் முதிர்ந்து உதிரும் பழங்களை அவ்வயலிடத்துள்ள வாளைமீன்கள் கௌவிக்கொள்ளுமூரன் என்பதாம்.

வட்டுச்சுவடிகளில் ரகரமெய்யும், மகர ஆகாரத்திற்கிட்டெழுதுங் காலும் பேதமின்றியிருத்தலின், மரத்து எனப் பாடங்கொண்டார்கள் போலும். அல்லது இறையனாரகப்பொருள், தொல்-பொருளதிகாரம் இவ்விரண்டையும் அச்சிட்டவர் மரத்தெனப் பாடங்கொண்டிருத்தலை யறிந்து இவர்களும் மரத்தெனப் பாடங்கொண்டார்களோ வறியேன். யான்காட்டிய பாடம் உண்மையென்பதற்கு அடுத்தவடியிற்காணப்படும் அளபெடையே தக்கசான்றாமென்பதி லொருசிறிது மையமின்றாம்.

இக்குறுந்தொகை கக-ஆவது பாட்டில்,

"நீடிய மாஅத்த கோடுதோய் மலிர்நிறை" எனவும்,

தணிகைப்புராணம்

"அருவி தொட்ட வறைக்குழி மாத்தன" எனவும்,

சிந்தாமணி

"கிளைமாத் தனதே முறுதீங் கனியும்" எனவும்

இச்சொல் இப்பொருளில் வந்திருத்தலு மாராயத்தக்கது.

இங்ஙன மிரண்டொன்றைக் காட்டினேன். இனி யெனக் கவகாசப் படுமமயங்களில் முதலிலிருந்து முறையே பாடபேதங்களையும், உரை மாறுபாட்டையும் பரிசோதித்து வெளியிடுவேன்.

(இன்னும்வரும்.)

கந்தசாமியார்,
தமிழ்ச்சங்கக்கலாசாலை உபாத்தியாயர்.

ஸ்ரீ

இந்தியாவின் அரசியல்.

"செந்தமிழ்" (தொகுதி-கச பகுதி உல்) அள-ம்பக்கத் தொடர்ச்சி.

மேற்கண்டவிதமாக 15 மாகாணங்களையும் 5 வகுப்புக்களாகப் பிரித்திருப்பதில், இனி ஒவ்வொருவகுப்பிலும் ஒருமாகாணத்தையும் அதன் அரசாட்சிமுறைமையையும் விஸ்தாரமாக விசாரிப்போம். அப்போது அந்தவகுப்பைச்சேர்ந்த மற்றமாகாணங்களிலே ஏற்பட்டிருக்கும் வேறுபாடுகளைமட்டும் கவனிப்போம். முதல்வகுப்பில் அடங்கிய மூன்றுமாகாணங்களில் நமக்கு முக்கியமானதான சென்னையை எடுத்துக்கொள்வோம்.

சென்னைமாகாணம்.

சென்னைராஜதானிமுழுவதும் ஒரு ராஜ்யாதிகாரி (Governor) யின் ஆளுகைக் குட்பட்டிருக்கிறதென்றும், அவருக்கு உதவிபுரியும் பொருட்டு ஒரு நிர்வாகசபையும் அச்சபையாருள்ளடங்கின ஒரு சட்டநிரூபணசபையும் ஏற்படுத்தப்பட்டுள்ளனவென்றும் முன்னமே சொன்னோம். ஒவ்வொருமாகாணத்தின் கவர்னரும் நமது சக்கரவர்த்தியவர்களால் நியமுகம்பெறவேண்டும். அந்த நிர்வாகசபையின் அங்கத்தவர்களாக இப்போது மூவர் உளர். ஆனால் 1909-ஆம்வருஷத்து இந்தியன்கவுன்சில் ஆக்டுப்படி இந்தியாமந்திரியவர்கள் அப்போதைக்கப்போது உத்தரவளிப்பதற்கிணங்கச் சென்னைக்கும் பம்பாய்க்கும் 4 மெம்பர்களுக்குமேற்போகாமல் நியமித்துக்கொள்ளலாமென்று விதியிருக்கிறது. இம்மூவர்களில் இருவர் அவர்கள்நியமிக்கப்படும்காலத்திற் குறைந்த பக்ஷம் 12 வருஷங்களாவது ராஜாங்கஉத்தியோகத்தில் அமர்ந்தவராய் இருத்தல்வேண்டும். ஆனால் இம்மூவரும் இந்தியாமந்திரியால் சிபார்சு செய்யப்பட்டுச் சக்கரவர்த்தியால் நியமிக்கப்படவேண்டும். இவர்களுக்கு ஏற்பட்டகடமைகளைப்பற்றியும் உரிமைகளைப்பற்றியும் பிரிட்டிஷ்மகாமந்திரசபையாரால் ஏற்படுத்திய சட்டங்கள் உள்ளன. முன் சொன்னபடி இந்தியாராஜப்பிரதிநிதியைப்போல்,சென்னைக்கவர்னரும், தன் ராஜதானியெல்லைக்குள்ளடங்கினதும், அதை ஒட்டினதுமான சுதேசராஜ்யங்களைப்பற்றினகவனிப்பையும், இந்தராஜதானியின் கல்வி சம்பந்தமானவிஷயத்தையும், ராணுவசம்பந்தமான அதிகாரத்தையும் வகித்துப் பார்த்துவருகிறார். இவருக்கும் விசேஷசமயங்களில் நிர்வாக சபையாரின் அபிப்பிராயத்தைமாற்ற அதிகாரமுண்டு.

இத்தகையராஜாங்கத்துக்கு நேராக இந்தியாமந்திரியுடன் லேகனப்பிரதிலேகனம்செய்யும் பாத்தியம் உண்டு. ஆனால், தனபரிபாலனத்துக்குரிய விஷயங்களைமட்டும் அப்படிச்செய்ய அதிகாரமில்லை. சென்னைக்கவர்ன்மெண்டார்நோக்கத்துக்குவிரோதமாக இந்தியாகவர்ன்மெண்டார் உத்தரவுஅளித்தால் அதைக்குறித்து இந்தியாமந்திரிக்கு அப்பீல்செய்துகொள்வதற்கும் அதிகாரமுண்டு. ஆயினும், அப்படிச் செய்யும் அப்பீல் இந்தியாகவர்ன்மெண்டாரவர்கள்மூலம்தான் அனுப்பப்படவேண்டும். தவிரவும், இந்த ராஜாங்கத்துக்குத் தங்கள் ஆளுகைக்குவேண்டிய சட்டநிரூபணசபை ரிவினியூபோர்டுமுதலிய சபைகளையும், இஞ்சினீர்கள், பாரஸ்டுகொன்ஸர்வேட்டர் போன்ற எல்லா உத்தியோகஸ்தர்களையும் தாங்களே தெரிந்தெடுத்துநியமிக்கவும், நிலவரி முதலியவிஷயங்களை விஸ்தாரமாகக் கவனிக்கவும் அதிகாரமுண்டு. பொதுவாக ராஜதானியின் ராஜாங்கமுறைகளிலும், அதற்குள்ளடங்கிய போலீஸ், நியாயவிசாரணை, வரி, கல்வி, வைத்தியம், சுகாதாரம், நீர்ப்பாய்ச்சுதல், கட்டடங்கள், நகரபரிபாலனம், காடுகள் இவைகளிலும் பூர்ணமான அதிகாரமுண்டு. ஆனால் இவைகளிற்கூட இந்தியாகவர்ன்மெண்டாரவர்கள் அடக்கியாளும்அதிகாரத்தைச்செலுத்திவருவதோடு, அவர்களின்கோரிக்கைக்கிணங்கிச் சரிவரநடந்தேறுகிறதாவென்றும் அந்தந்தமாகாணத்தின் ராஜாங்கநடவடிக்கையைக் காட்டும் வரலாறுகளைக் கவனித்துவருகிறார்கள். தவிரவும், ஒவ்வொரு முக்கியமானவிஷயத்திலும் எப்படிநடந்துகொள்ளவேண்டியதென்று இந்தியாகவர்ன்மெண்டாரவர்களுக்கு எடுத்தெழுதி அவர்களின் அபிப்பிராயத்தைத்தெரிந்தபின்னரே அதற்கு அநுசரணையாக நடத்துவார்கள். பணம்செலவிடுவதில் சென்னைக்கவர்ன்மெண்டாருக்கு விசேஷமான அதிகாரமில்லை; ஆகையால், புதிதாக எந்தநியமுகம்செய்யவேண்டியதிருந்தாலும், பணச்செலவுள்ள எந்த அல்பவிஷயம் நூதனமாக உண்டுபண்ணவேண்டியதிருந்தாலும், அது எவ்வளவு அவசியமும் அவசரமுமானதாய் இருந்தபோதிலும் இந்தியாகவர்ன்மெண்டாரின் அநுமதியின்றித் தாமாக அதைச்செய்ய அதிகாரம்பெற்றிலர். பொதுவாக இந்தியாகவர்ன்மெண்டாரின் அபிப்பிராயப்படி நடக்கவேண்டிய ஒரு உபகர்த்தர்போல் விளங்குகிறார். தவிரவும், இந்தியாகவர்ன்மெண்டாரே பிரிட்டிஷ்இந்தியாவின் ராஜ்யபரிபாலனத்துக்குரியவராதலால் அவர்களுக்குத் தங்களுக்குள்ளடங்கிய மாகாணகவர்ன்

மெண்டார்களை அடக்கியாள விசேஷ அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதுபற்றியே இந்தியாமுழுவதுக்கும் பொதுவாய் வரிவிதித்தல் நாணயம் ராஜ்யகடன் தபால் தந்தி வரிவிதானம் புகைவண்டிப்பாதை கணக்குகள் இவைகளையெல்லாம் இந்தியாகவர்ன்மெண்டாரே நேராக வகித்துப்பார்த்துவருகிறார்கள்.

சட்டநிரூபணசபை.

இப்போதையவிதிகளின்படி இந்தச்சபை, 49 அங்கத்தினர்களையுடையது.

சென்னைக் கவர்னரவர்கள்	1.
நிர்வாகசபையார்	3.
அட்வகேட்ஜெனரல்	1.
கவர்ன்மெண்டாரால் நியமுகம்பெற்ற மெம்பர்கள்	21.
ஷை நிபுணர்கள்	2.
சென்னை சமாஜத்தால் தெரிந்தெடுத்தவர்	1.
நகரபரிபாலனசபையார்களாலும் லோக்கல்போர்டுமெம்பர்களாலும் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்	9.
சர்வகலாசங்கத்தாரால் தெரிந்தெடுக்கப்பட்டவர்	1.
லாண்டுஹோல்டர்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்	5.
தோட்டச்சங்கத்தினர்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்	1.
மகம்மதியர்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்	2.
வர்த்தகசங்கத்தாரால் தெரிந்தெடுக்கப்பட்டவர்	1.
வியாபாரசங்கத்தாரால் தெரிந்தெடுக்கப்பட்டவர்	1.
ஆக	49.

பம்பாயிலும் 49 தான். வங்காளத்தில்மட்டும் 54 பேர்கள் உண்டு.

சிக்ரட்டேரிகள்சமாஜம்.

இந்தச் சென்னைக்கவர்ன்மெண்டாரவர்களுக்கு உதவிபுரிவதற்காக 4 காரியதரிசிகள் நியமிக்கப்பட்டு அதன்மூலம் இந்தச் சமாஜம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் முக்கியகாரியதரிசியென்றும், மற்றொருவர் ரிவினியூகாரியதரிசியென்றும், இன்னொருவர் லோக்கல் முன்சிபல் காரியதரிசியென்றும், இன்னொருவர் ஜூடீஷியல் காரியதரிசியென்றும் சொல்லப்படுவார்கள். இந்நால்வர்களில் ஒவ்வொருவருக்கும் உதவிக்கு உபகாரியதரிசிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ரிவினியூபோர்டு.

சென்னைமாகாணந்தவிர மற்றைய பெரியமாகாணங்களிலெல்லாம் கவர்ன்மெண்டாருக்கும் ஜில்லாக்கலெக்டருக்கும் மத்தியில் நாலைந்து ஜில்லாக்களை ஒருங்கேசேர்த்து அவைகளுக்குத் தலைவராகக் கமிஷனர் என்ற ஒரு அதிகாரி நியமிக்கப்படுகிறார். சென்னையில்மாத்திரம் அத்தகைய அதிகாரி எக்காலத்திலும் நியமிக்கப்படவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக ரிவினியூபோர்டு என்று ஒருசங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தச்சங்கத்தார்கள் மாகாணத்தின் சுங்கம், அரசிறை இவைகளைப்பற்றிக் கவனித்துக் கவர்ன்மெண்டாருக்குத் தெரியப்படுத்தவேண்டும். இந்தச்சங்கத்தின் அங்கத்தினர்கள் நால்வராவர். அவர்களில் இருவர் நிலவரியைமட்டும் கவனிப்பார்கள். மற்ற இருவரில் ஒருவர் நிலவரி நிச்சயித்தல், விவசாயம், நிலக்கணக்குகள் இவைகளையும், மற்றொருவர் உப்புவரி ஸ்டாம்புவரும்படி வருமானவரி முதலியவிஷயங்களையும் கவனிப்பார்கள். இந்நால்வரும் சேர்ந்திருந்து தீர்மானங்கள்செய்வது வழக்கமில்லை. ஒவ்வொருவருக்கும்மேற்குறித்தபடி தனித்தனியே பகுதிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் நிலவரி முதலான ரிவினியூவிஷயங்களில் ஜில்லாக்கலெக்டர்கள்செய்யும் உத்தரவுக்குமேல் அப்பீல்கள்வாங்கிப் பைசல்செய்யக்கூடிய அதிகாரம் அவர்களுக்கு உண்டு. ஆதியில் வேறுவிதமாயிருந்தபோதிலும் இப்போது ராஜாங்கத்தின் ஒவ்வொருபகுதியையும் கவர்ன்மெண்டா ரதிகாரத்துக்குட்பட்டு நடத்தும்பொருட்டு ஒருஅதிகாரியை அந்தந்தப்பகுதிக்குத் தலைவராகநியமித்திருக்கிறார்கள். அப்பகுதிகளின் முதன்மையானவைகளாவன:-கல்வி, பொதுஜனஉபகாரவேலைகள், போலீஸ், காடுகள், வைத்தியம், ஆரோக்கியமுறை, ஜெயில், சுங்கம், விவசாயம், நிலக்கணக்கு நிலவரிவிதித்தல், இவைகளேயாம். இவைகளுக்கு முறையே தலைவராகப் பப்ளிக் இன்ஸ்டிரூஷன்டைரெக்டர், (Director of Public Instruction) சீப் எஞ்சினீயர், (Chief Engineer) போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்,(Inspector-geueral of Police) கன்ஸர்வேட்டர், (Conservator) சர்ஜன்ஜெனரல், சானிடெரிகமிஷனர், ஜெயில் இன்ஸ்பெக்டர் ஜெனரல், எக்ஸைஸ்கமிஷனர், அக்ரிகல்சர் டைரக்டர், (Director of Agriculture) லாண்டு ரிகார்ட்ஸ் டைரக்டர், (Director of Land Records) லாண்டு ரிவினியூ கமிஷனர் (Commissioner of Land Revenue) என்று உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள். இவர்களுக்குள்ளடங்கிநடக்கும்பொருட்டு அவரவர்கள் பகுதிகளுக்குச் சகாயசனங்களும் கீழ்உத்தியோகஸ்தர்களும் ஜில்லாக்கள் தாலூகாக்கள் கிராமங்கள்தோறும் அமர்ந்திருக்கிறார்கள்.

(தொடரும்.)

எம். எஸ். சேஷையங்கார்.

உ

ருதுமதீவிவாஹம்.

“செந்தமிழ்” (தொகுதி ௧௪ பகுதி ௯-ல்) ௯௬-ஆம்பக்கத்தொடர்ச்சி.

---

௭. பத்திராதிபரவர்கள்பராமர்சத்துக்கு மறுமொழி.

என்னால் எழுதப்பட்டுவந்த ருதுமதிவிவாஹம் என்னும் இவ்விஷயமானது, முன்னமே ஒருவாறு முடிவுபெற்றிருக்கிறது. ஆயினும், பத்திராதிபரவர்கள் ௭. விஷயமாகப் பராமர்சம்எழுதிவந்திருப்பதில் அது கல்வித்திறமையுடன் நன்றாய் எழுதப்பட்டிருப்பது என்பது அதை வாசிப்போர்களுக்குத் தானாய் விளங்கும். எல்லாவிஷயங்களையும்பற்றி மறுமொழிசொல்லிக்கொண்டிருப்பதாயிருந்தால் உலகவியவகாரங்களுக்கு அளவில்லையாதலால், சில முக்கியமான விஷயங்களுக்குமட்டும் நான் மறுமொழி எழுதவேண்டியது அவசியமாகத்தோன்றினபடியால் ௭ விஷயத்தை இந்தப்பகுதியிலும் தொடர்ந்து எழுதலானேன்.

8. (a) ஸ்மிருதிகளின் வித்தியாச அபிப்பிராயங்கள்.

ருதுமதிவிவாஹவிஷயத்தில் ஸ்மிருதிகள் வித்தியாசமான அபிப்பிராயங்கள் உடையன என்பதைப்பற்றி ஆக்ஷேபிப்பது வீணான பிரயத்தனம். அவ்வாறு ஏன் வித்தியாசம் ஏற்பட்டன என்பதற்குக் காலதேசவர்த்தமானத்தை அநுசரித்து அவ்வாறு உள்ளன என்று புத்திமான்கள் சமாதானம் சொல்லலாமென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் வித்தியாசங்கள் வித்தியாசங்கள்தான். ஹிந்து தர்மசாஸ்திரத்தில் வித்தியாசமான அபிப்பிராயங்கள் ஏற்பட்டுவந்தநிமித்தம், ஹிந்து சட்டவிஷயங்களிலுள்ள தாத்பரியங்களை ஒரேவிதமாகக்கொள்ளமுடியாமல் “தயபாகா” சட்டமென்று பங்காளத்திலும், “மித்தாக்ஷரா” என்று தெற்குமத்தியப்பிரதேசங்களிலும் “மயூகா” என்று பம்பாயிலும், மிதிலை முதலிய இடங்களில் இன்னும் வேறுவிதமாயும், சட்டங்கள் பலவிதமாக ஒரே ஹிந்துமதஸ்தர்களால் அநுஷ்டிக்கப்பட்டுவருகின்றன. இந்த ருதுமதீவிவாஹம் என்கிறவிஷயம், வேதத்திற் கண்டோக்தியாய்ச் சொல்லப்படாததாயும், நான் இந்த விஷயத்தைப்பற்றி ஆரம்பத்திற்சொல்லி

யிருக்கிறபிரகாரம் ஹிந்துமதத்தின் முக்கியமான அம்சத்துக்குச் சம்பந்தமல்லாத (Non-essential) தாயும் இருக்கிறபடியால் ருதுமதி விவாஹத்தைப்பற்றி ஸ்மிருதிகர்த்தாக்களான மகரிஷிகள் ஸ்மிருதிகளில் அவரவர்களுடைய அபிப்பிராயத்துக்குத்தக்கவாறு எழுதியிருப்பது நியாயம்தானே. அவர்கள் திரிகாலஞானிகளாதலாலும், ஒரேகாலத்தில் ஒருவரையொருவர் யோஜித்து எழுதாமற் பலபல காலங்களில் எழுதியிருப்பதாலும், ஜனங்கள் நிர்ப்பந்தமில்லாமற் காலதேசத்துக்குத்தக்கவாறு அநுஷ்டித்துவரவேண்டுமென்கிற பெருங்கிருபையான நோக்கத்துடன் எழுதியிருப்பதாலும் வித்தியாசமான அபிப்பிராயங்கள் இருப்பது மிகவும் சகஜந்தான். அதனால் அவர்களுக்கு மேன்மையேயொழிய, வேதப்பிரமாணத்துக்கு விரோதமென்றாவது ஒன்றுசரி, மற்றொன்றுதவறு என்றாவது ஒருவருக்கும் விவகரிக்க அதிகாரமில்லை. அதேபிரகாரம் சாங்கியம், யோகம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதமென்று உலகவியவகாரத்துக்கு ஏற்பப் பலவிதமான அபிப்பிராயங்களையும் மார்க்கங்களையும் ஹிந்துவேதங்களில் விஸ்வாசகர்களாய் இத்தேசத்தில் அவதரித்து விளங்கிய மகரிஷிகளும்ஆசாரியர்களும் ஏற்படுத்த அவ்வாறு நாளிதுவரை அநுஷ்டிக்கப்பட்டுவருகின்றனவே. ஆகிலும் அதே உபநிஷத்துக்களும் பகவத்கீதையும் தான் ௸ வித்தியாச அபிப்பிராயங்களுக்கு ஆதரவாக இருக்கின்றன. விசாலமான புத்திமான்களான மகரிஷிகளும் ஆசார்யர்களும் அவதரித்துவிளங்கிய இந்தத்தேசத்தில் அவ்வாறு இருந்திருப்பது நியாயம்தானே. அநுஷ்டானங்களெல்லாம் நம்முடையதேசத்திற் காலத்துக்குத்தக்கவாறு மாறிக்கொண்டே வந்திருக்கின்றன என்பதற்கு ஆதரவுகளிருக்கின்றன. மகாபாரதம் ஆதிபர்வம் 122-வது அத்தியாயத்தில், பாண்டுமகாராஜனுக்கும் குந்திக்கும் நடந்த சம்பாஷணையில் இச்சந்தர்ப்பத்திற்குவேண்டியவற்றைமட்டும் எடுத்து அடியில்வருமாறு மொழிபெயர்த்திருக்கிறேன். "ஆதிகாலத்தில் ஸ்திரீகள் வீட்டுக்குள் அடைக்கப்பட்டு புருஷர்கள்முதலிய பந்துக்களின் நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டிருக்கவில்லை. அவர்கள் மனம்போனபிரகாரம் அநுபவித்துக்கொண்டு சுகமாய் இருப்பது வழக்கம். அதனால் அவர்கள் பாபிகளாகமதிக்கப்படவில்லை. ஏனெனில் அதுவே அக்காலங்களில் ரிஷிகளால் அங்

கரிக்கப்பட்ட வழக்கமாயிருந்தது. ஒரு ஸ்திரீயானவள் ஒரேபுருஷனுக்கு ஜீவதெசைவரை கட்டுப்பட்டிருப்பது என்பது சமீபகாலத்தில்தான் ஸ்தாபிக்கப்பட்டது" என்று பாண்டுமகாராஜா குந்திக்குச் சொல்லுகிறார். உத்தாலகரிஷியின்குமாரர் ஸ்வேதகேது என்ற மகரிஷியானவர் ௸ மாறுதலை ஏற்படுத்தினதாக ௸ சங்கதிகளுக்குப் பின் அதே அத்தியாயத்தில் விரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதியில் எல்லோரும் பிராமணர்களாயிருந்ததாகவும், பிறகுதான் அவரவர்களுடைய குணத்துக்குத்தக்கவாறு வருணாச்சிரமதர்மம் ஏற்பட்டதாகவும் சாந்திபர்வம் 188-வது அத்தியாயத்தில், பிருகுமகாரிஷியால், பாரத்வாஜமுனிவருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதலால், சாஸ்திரசம்மதமென்று மகரிஷிகளாற்சொல்லப்பட்ட ஸ்ருதிவாக்கியங்கள் சிலகாரணங்களைக்கொண்டு மத்தியில் அநுஷ்டிக்கப்படாமல் நின்றுபோய்விட்டாலும், அவசியம் ஏற்பட்டகாலங்களில் அவற்றையும் அநுஷ்டிப்பது சாஸ்திரசம்மதமேயொழிய, அவரவர்கள் இஷ்டம்போல் பிரஸ்தாபிக்கிற ஆசாரசீர்திருத்தங்களைச் சேர்ந்ததன்று என்று நான் நினைக்கிறேன்.

விவாககாலத்தில் ஆதிமுதல் அந்த்யம்வரைசொல்லப்படும் மந்திரங்களுக்கு யாதொருதாத்பரியமும் பிரயோஜனமும் ஏற்படாமல் வீணாக மந்திரங்கள் என்கிற நியாயத்துக்காகமட்டும் உச்சரிக்கப்பட்டுவருவதாகச் சொல்லுவது மிகவும் விநோதமாயிருக்கிறது. அக்காலத்தில் ஸம்ஸ்கிருதமே பேசும்பாஷையாயிருந்தது. ஸம்ஸ்கிருதம் தெரியாத வதூவரர்களும், மந்திரங்களைச்சரியாய் உச்சரிக்காமலும், அதன் தாத்பரியங்கள் இன்னதென்றுதெரியாமலும், தக்ஷிணை வரும்படியைப் பெரிதாகக்கருதி மிகுந்தவேகமாய் மந்திரங்களை ஓட்டுகிற புரோகிதர்களும், மந்திரங்கள் என்பதுதவிர இன்னதுநடக்கிறதென்று அறியமுடியாத பெரும்பான்மையோர்களும் சபையில் நிறைந்துள்ள தற்காலக் கல்யாணவைபவங்களை ஆதாரவாகவைத்துக்கொண்டால் மந்திரங்களுக்கு மேலேசொன்னதைத்தவிர வேறு கௌரவம் என்னஏற்படப்போகிறது. வீழ்வார்க்கு வீழ்வார்துணை என்பதுபோல் ௸ கல்யாணசங்கதிக்கு ஆதரவாக உபநயனமந்திரங்கள் எடுத்துச்சொல்லப்படுகின்றன. உபநயனத்தில் உபதேசிக்கப்பட்ட மந்திரங்கள் அன்றுதொட்டே திரிகாலமும் அநுஷ்டிக்கப்பட்டு

வருகின்றன. 7 வயதுமுதல் ஷை மந்திரங்களை உச்சரித்துவருகிறவன் அர்த்ததாத்பரியம்தெரிந்து அநுஷ்டித்து அதன் பலனை அடைந்துவரவேண்டியவனாயிருக்கிறான். இது சாஸ்திரதாத்பரியம். காயத்திரிமுதலிய தெய்வதோத்திரமந்திரங்களுக்கு அர்த்தம் அறிய முடியாவிட்டாலும், மந்திரஉச்சரிப்புக்கே பலன் இருக்கிறது என்பது வாஸ்தவம். அவைகளொழிந்த இதரமந்திரங்கள், அர்த்தமில்லாமற் சொல்லப்பட்டுவருகின்றன என்பதில் அவைகளை ஏற்படுத்தினவர்களுக்கு ஒரு அறியாமையைக்கற்பிப்பதுபோல ஆகிறது. இக்காலத்தில் ஸம்ஸ்கிருதம் பேசும்பாஷை இல்லை. 7 வயதுள்ள ஒருசிறுவனுக்கு மந்திரங்களின் அர்த்தம் தெரியவில்லை. கிரஹணசாமர்த்தியமுள்ளவர்களுக்குத்தான் ஷை மந்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதற்குச்சந்தேகமில்லை. பேசும்பாஷையில் 5 வயதுமுதல் 7வயதுவரை வித்தியாப்பியாசம் பெற்றிருப்பவனாயுள்ள ஒருவன், உபநயனமந்திரங்களை நன்றாய் அறிந்து பின்னும் தொடர்ந்து அநுஷ்டித்துவரத்தக்கவனாயிருக்கிறான். அப்படியிருக்க, உபநயன கல்யாண மந்திரங்கள், உடன் அநுஷ்டானத்துக்கு யோக்யமில்லாமல் வீணான பிரயோஜனத்தைப்பற்றிச் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ளன என்பது நன்றாக இல்லை. ஷை மந்திரங்கள் அடங்கிய வேதசாஸ்திரங்களுக்கும் கௌரவம் இல்லை. ஷை விஷயங்களைத் தெரிந்துகொள்ளவாவது அநுஷ்டிக்கவாவது இக்காலத்தவர் தவறிவிட்டால் அதற்கு மந்திரங்கள் என்ன செய்யும்.

8. (b) நான் பிரதமத்தில் ப்ரௌடாவிவாஹ விஷயமாக அநுசாசனபர்வத்திலிருந்து குறித்திருப்பதை ஷைபர்வம் 44-வது அத்தியாயத்திற் காணலாம்.

8. (c) சிலஸ்மிருதிகளில் ரஜஸ்வலையானபிறகு கல்யாணம்செய்தால், குற்றங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தக்குற்றம் பிராமணர்களுக்குமட்டும்தான் க்ஷத்திரியர்களுக்கு இல்லை என்று பிரித்துச் சொல்லப்படவில்லை. ஸ்மிருதிகளைப் பிராமணர்களைப்போல் க்ஷத்திரியர்களும் விஸ்வாசித்து அநுஷ்டிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். அப்படியிருக்க ஒரே அபிப்பிராயமுள்ள ஸ்மிருதியும் 2. வித்தியாசமான அநுஷ்டானங்களும் எப்படிநேர்ந்திருக்கக்கூடும் என்பது என்னுடையகேள்வி. அதற்குச் சமாதானம் சொல்லப்படவில்லை. ஸ்மிருதிகளில் பிராமணர்களுக்குமட்டும் ரஜஸ்வலையான குற்றம் உண்டு. க்ஷத்திரியர்களுக்கு ரஜஸ்வலையான குற்றம்கிடையாது என்று சொல்லியிருந்தால் அப்படி ஏன் எழுதியிருக்கிறது என்று காரணம்கேட்க அதிகாரமில்லை. அப்படியிருக்க, நான் காரணம்கேட்டிருந்தால் "சாஸ்திரவிதிகளுக்குக் காரணம்கேட்கவும்சொல்லவும் நாம் அதிகாரிகளில்லை" என்று பத்திராதிபரவர்கள் சொல்வது ஒருவாறு பொருந்தும்.

முடிவுரை.

இந்த ப்ரௌடாவிவாஹம் என்னும் விஷயத்தைப்பற்றி இப்பத்திரிகையில் என் அபிப்பிராயங்களை வெளியிட்டதின் தாத்பரியம் என்னவென்றால், ஹிந்துமத சாஸ்திரவிரோதமாயுள்ள ஆசாரசீர்திருத்தங்களை ஹிந்துமதஸ்தர்கள் அவரவர்கள் இஷ்டப்படி செய்துகொள்ளுதல் கூடாது என்பதும், ஆனால், சாஸ்திரங்களில் ஏதேனும் ஆதாரவு இருந்தால் மிகவும் முக்கியமானகாலங்களில் ஒற்றுமையில்லாதவழக்கத்தைமாற்றிச் சாஸ்திரசம்மதமான சீர்திருத்தத்தைக் கட்டாயம் நாம் அநுஷ்டித்து க்ஷேமமடையவேண்டுமென்பதும் தான்.

ருதுமதிவிவாஹமென்ற விஷயம் மிகவும் பெரியது. இலகுவில் நிறைவேறக்கூடிய காரியமல்ல. அதைப்பற்றி நான் கொஞ்சம் ஆரம்பித்து எடுத்துப்பேசியது, இதுவிஷயத்தில் அதிகாரமாய்ப்பேசவல்ல நமது தென்னிந்தியாவிலுள்ள ஏராளமான சாஸ்திரவிற்பன்னர்களும், புத்திமான்களும், ஜாஸ்தியாய்க் கவனிக்கக்கூடுமானால், காலக்கிரமத்தில் அது ஊர்ஜிதத்துக்கு வரலாம் என்றநோக்கமே தவிர வேறில்லை.

ருதுமதியாய் மூன்றுவருஷங்களுக்குப்பின்பு தனியாகச் செய்யப்படுகிற சாந்திமுகூர்த்தமே எல்லாவிஷயத்திலும் பூர்ணமாக ஒரே கல்யாணமாக ஏன் இருக்கக்கூடாது. 8 வயதுமுதல் 15, 16 வயதுவரை ஒருபெண்ணைக் கல்யாணமானவளென்று பேருக்குமட்டும் சொல்லி, ஒருகால் விதவையானாலுமாய்விடக்கூடிய ஒரு அபாயகரமான ஸ்திதியில் நாம் வைத்துக்கொள்வது, சுபாவவிரோதமாயும்அநீதமாயும் தெய்வகதியால்லாமல் மனுஷர்கள் தாமேதேடிக்கொள்ளுகிற துர்ப்பாக்கியஹேதுவாயு மிருக்கிற தென்கிறவிஷயத்தை நாம்

வெகுவாய்ச் சிந்திக்கக் கடமைப்பட்டவர்கள். தெருவில் விளையாடிக் கொண்டிருக்கிற 8, 9 வயதுள்ள பிராமணப்பெண்ணை, ஒருவன் உன் வீட்டில் ஏன் அழுகிறார்கள் என்று கேட்டதற்கு, 'என்புருஷன் இறந்துபோனதாகக் காகிதம்வந்ததாம், அதற்காக அழுகிறார்கள்' என்றுசொல்லித் தன்ஜீவதெசைவரை தன்னை அலங்கோலப்படுத்தி இம்சைசெய்யப்போகிற துக்கத்தின்கொடுமையை அறியாமல் இருக்கிற குழந்தையை, அப்பொழுதே விதவை என்று கூப்பிடத்துணிகிற நமக்கு ஜீவகாருண்யமில்லாமல் மனது கடினமாயிருப்பதற்குக் காரணம் இவ்வழக்கம் நெடுநாளாகவந்திருப்பதுதான். தெய்வமாகிய சாஸ்திரம் வரங்கொடுத்தாலும் பூசாரியாகியவழக்கம் அவ்வரத்தை வீணாகச்செய்கிறது. இதேபிரகாரம் பிராமணர்களுக்குள் அநேகபிரிவுகள் ஏற்பட்டு ஒருவருக்கொருவர் கல்யாணசம்பந்தங்கள் பந்திபோஜனங்கள் இல்லாமல் இருந்துவருகிறார்கள். இந்த வழக்கமும் சுதேசஅரசர்களின் ஆளுகைபோய் இதரதேசத்தார்களான மகம்மதியர்கள் முதலியோர் இத்தேசத்தைக் கைப்பற்றினகாலத்தில் ஏற்பட்டதாம். அக்காலமுதலாகப் பிராமணர்கள் பலவாறாகப்பிரிந்து, வடக்கேஇருந்து தக்ஷணத்திற் பலதேசங்களில் பலபலகாலங்களிற் குடியேறினதில் ஒருவரையொருவர் சுயஜாதியார்களென்று அறிந்துகொள்ளச் சக்தியற்றவர்களாய்த் தூரஊர்களுக்குப் போக்குவரத்து இல்லாததினிமித்தம், பலபலபிரிவுகளாகப் பிரிந்து, பிரத்தியேகமான பேர்கள் வைத்துக்கொண்டு, அந்தந்தப்பிரிவுகளுக்குள்மட்டும் கல்யாணங்கள் செய்துவருகிறார்கள். இப்படிப்பட்ட அநுஷ்டானத்துக்குச் சாஸ்திரங்களில் ஆதரவுஇல்லையென்று பெரியவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். போனவழக்கம் போகட்டும். இப்பொழுது மாட்சிமைதங்கிய ஒரே பிரிட்டிஷ் அரசாட்சியின்கீழ் நாம்இருக்கிறோம்; குலம் கோத்திரங்களைச் சரியாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம்; உண்மையை நன்றாய்த் தெரிந்துகொள்ளும்படியான போக்குவரத்துக்குச்சாதகமான புகைவண்டிமுதலியவைகள் இருக்கின்றன; என்று சொன்னாலும் வழக்கத்தை எப்படிக் கைவிடுவது என்று

மனம் துணியவில்லை. பிராமணர்களுக்குள் ஒருவருக்கொருவர் மேல் கீழ் என்ற தப்பான சுஜாதி அபிமானமும் விலகவில்லை. நிர்ப்பந்தமான மனஒழுக்கமும் விசாலிக்கத் தடைப்படுகிறது. இந்தப் பரிதாபத்துக்கு என்போன்ற சாமான்யர்களால் என்னசெய்யக்கூடும். தவிரவும், ருதுமதீவிவாகம் சரியானதென்று ஒருவர் அபிப்பிராயப்பட்டால் அவர்மட்டும் தனித்து அநுஷ்டிக்கக்கூடியசங்கதியல்ல. அப்படியிருக்க வாயால்மட்டும்பேசுவது என்னபிரயோஜனம் என்று சிலர் குறைகூறுகிறார்கள். அது நியாயமன்று; ஏனென்றால் இது பொதுஜன ஆசாரசீர்திருத்தவிஷயம். வரவரப் புத்திமான்கள் எல்லோரும் இது அவசியமென்று தீர்மானித்து, ஹிந்துமதத்தினர் எல்லோரும் ஏகோபித்தாவது அல்லது சர்க்கார்ச்சட்டம் மூலமாயாவது மாற்றிக்கொள்ளவேண்டிய விஷயம். இல்லாவிடில் நான் முன்சொல்லியிருக்கிறபிரகாரம் இன்னும் ஜாதிஉட்பிரிவுகளும் குழப்பங்களும் ஏற்படக் காரணமாயிருக்குமேயொழிய வேறு பயனில்லை. புகைவண்டியிலிருப்பவன் அதினுள்ளேயிருந்து இஞ்சினை நடத்தினால் வெகுதூரம் க்ஷேமமாகப் பிரயாணம்செய்யலாம். அதற்குப் புறம்பாயிருந்து அதை எவ்வாறு நடத்தமுடியும். அதுபோல் ஒருவன் மட்டும் தனித்துப் பொதுஜனவிஷயத்திற் சீர்திருத்தம்செய்து க்ஷேமமடைவது எப்படி.

ருதுமதிவிவாஹமென்கிற இவ்விஷயமானது, மேலேசொன்னபடி சிரமமான சங்கதியாயிருக்கிறது; இதை அநேகநோக்கங்களைக் கொண்டு ஆராய்ச்சிசெய்கிறவிஷயத்தில் விசேஷமாகக்கேட்டறிந்த அநேகபுத்திமான்கள் பலபலவிதமாக அபிப்பிராயப்படுவார்களாகையால், அதற்குப் பேதமாக என்னுடைய அபிப்பிராயம் இருந்தால், பொறுத்தருளவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

M. R. ஸ்ரீநிவாஸையர்,
பெரியகுளம்.

உ

பேராவூர்-பிடவூர்.

ஆரூர்மூலட்டானமானைக்காவுமாக்கூரிற்றான்றோன்றிமாடமாவூர்
பேரூர்பிரமபுரம்பேராவூரும்பெருந்துறைகாம்பீலிபிடவூர்பேணும்
கூரார்குறுக்கைவீரட்டானமுங்கோட்டூர்குடமூக்குக்கோழம்பமுங்
காரார்கழுக்குன்றுங்கானப்பேருங்கயிலாயநாதனையேகாணலாமே.

என்பது திருநாவுக்கரசுசுவாமிகளது க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம்.

இதனில், பேராவூர் என்னும் க்ஷேத்திரமானது, திருவாவடுதுறைக்குத்தெற்கில் இரண்டுமைலுக்குள்ளாகவிருக்கிறது. வீரசோழனுக்குத் தெற்கிலுள்ளது. முன்னொருகால் இவ்வூரானது நன்னிலைமையிலிருந்ததாகத் தெரிகிறது. இவ்வூர் ஆலயம் வெகு ஜீர்ணமாகிவிட்டபோதிலும் இன்னும் அநேக சிலாசாசனங்கள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு:—

I-வது சாசனம்.

(தென்புறம் குமுதப்படையில்)

(1) ஸ்வஸ்திஸ்ரீ இந்நாயனார் ஸ்ரீ பண்டாரங்கள் உ௰௫ வரை கண்ட முதல் திருவாபரணங்களால் கருமாற்றும்போக ௰ஞ(பத்தரை) மாற்று ௰௩ படற்கடயா. உளகூர்: மாற்று சூஞம் ஞ காசிடைபெற்ற கூஉ-ம்...................

(2) பரிகலபரிச்சிந்நங்களால் உருக்களால் எடை கூயல் பித்தளை தரா எடை ௱௩ஞல் மணி உளகரு உள்பட எ௰-ல்

(3) ௩ சேர்க்கால் ௩ உள்க்கரு உள்பட எடை உளஙூ௨றுஞ நாலுநிலை உள்ள திருக்குத்துவிளக்கு இரண்டினல் உள்க்கரு உள்பட எடை ௫ாகூ௰-ல்

II-வது சாசனம்

(1) ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க (சோழதேவற்கு யாண்டு) உ௫-வது மீனஞாயிற்று அமரபக்ஷத்துசதுர்ஸியும் சனிக்கிழமையும் பெற்ற உத்திராடத்து நாள் ஜெயங்கொண்ட சோழவளநாட்டுப் பேராவூர் நா

(2) ட்டு அகரம் ஸ்ரீ சுத்தமலி சதுர்வேதிமங்கலத்து திருப்பேர் ஸ்ரீ கிஷ்ணபட்ட ஸொமஸொயாஜியேன் இந்நாட்டு-பேறூவூர் வீரசோழ சதுர்வேதிமங்கலத்து உடையார் ஸ்ரீ அதித்தேசுரமுடைய நாயனார்க்கு நான் ஸூஜா

(3) தானமாக நான் நீர்வார்த்துக்கொடுத்ததாவது: இச் சுத்தமலி சதுர்வேதிமங்கலத்துடையேம் பேறூவூரில் தென்கரைய நிலத்தில் ரூஜரூஜவதிக்கு மேற்கு குந்தவவாய்க்காலுக்கு வடக்கு........ சம...........நதில் கிழக்கு

(4) நான் திருவேறூரை வாய்க்காலுக்கு தெற்கு............... ஙட்டன்ஙாரியை ஆளவந்தநாச்சி பக்கலும் இவள் மகன் ஙாலவதுஜோஷிஙட்டன் பக்கலும் இவன்தம்பி குநிக்கும்பிரான் ஙட்டன் பக்கலும் விலைக்குக்கொண்டுடையேனாய்

(5) நந்தாயத்தான் உறுஹொவி........இல் வடகீழ்மூலையில் ஆற்றங்கரைப் படுகையிலே இந்நாயனார்க்கு நீர்வார்த்துக்கொடுத்தோம். சின்னதினல் குழியேழும் நீர்வார்த்துக்கொடுத்தோம்—

III-வது சாசனம்

ஸ்வஸ்திஸ்ரீ புயல்வாய்த்து என்றமெய்க்கீர்த்தியில் கவிபரந்தோடதேசமாநிலம் விளங்க வீரஸிம்ஹாஸனா

(6) ஸநத்துப் புவனிமுழுதுடையாளொடும்வீற்றிருந்தருளிய கோபரகேசரிவர்மரான திருபுவனசக்கரவர்த்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளின ஸ்ரீ குலோத்துங்கசோழதேவற்குயா

(7) ண்டு ௰௩வது மகஞாயிற்று பூர்வபக்ஷத்து ஸ்ரீதமியும் செவ்வாய்க்கிழமையும் பெற்ற மிருகசீர்ஷத்துநாள் ஜெயங்கொண்ட சோழவளநாட்டு பேராவூர்நாட்டு பேராவூரான வீரசோழசதுர்வேதிமங்கலத்து உடை

(8) யார் திருவாதித் தீஸ்வரமுடையார்கோயில் ஆதிஸைவஸ்வாகன்மிகளுக்கு செயமாணிக்கவளநாட்டுத்திருவ-கற்றத்து புத்தமங்கலமுடையான் இடங்கநம்பியமல்லனான் வைதும்பராயனேன் திரு

(9) நந்தாவிளக்குப்புறமாக நான் வேர்க்கிழ் இறையிலியாக விட்டநிலமாவது-ஜெயங்கொண்ட சோழவளநாட்டுப்பேராவூர் நாட்டு பேராவூரிற் பிரிந்த வீரசோழ புரமான குலோத்துங்கசோழன் புத்த மங்கத்தில் நான்குலோ

(10) த்துங்க சோழப்பேர்விலைகொண்டு உடையேனுய் அனு பவித்து வருகிற நிலம் பத்தே இருமாவரையிலே இறை இறுத்து இறையிலியாக இவ்வாட்டை சித்திரைமுதல் திருநுந்தாவிளக்குப்புற மாக விடுகிற நிலமாவது (இதற்குமேல் சிதைவு)—

சுவாமிபெயர் ஆதித்தீசுரமுடையார்.

பிடவூர், இது தரங்கன்பாடிக்கு மேற்கில் 3-மைல்தூரத்திலுள்ள திருவிடைக்கழி என்னுமூருக்குச் சமீபத்திலிருந்து அழிந்துவிட்டது. இவ்வூர்ப்பெருமானை இப்பொழுது திருவிடைக்கழிக்கோயிலில் ஸ்தாபித்து இரண்டுகாலம் பூசைசெய்து வருகின்றனர். இதுவே வேள்களிலொருவனான "இருங்கோவேள்" இருந்ததாகும். இப்புராதனத்தலம் அழிந்துபோனது காலத்தின் கொடுமையே.

இலக்கணவிளக்கபரம்பரை,
திருவாரூர் சோமசுந்தரதேசிகர்.

௨

வேள்பாரியின் கொடைவிறல்.

அஃதாவது வேள்பாரி என்னும்பெயருடைய க்ஷத்திரியனின் கொடையின் ஆற்றலைக்கூறுதல். பண்டைக்காலப்பாவலர்பலர்க்குப் பரிசிலீந்தகாவலன் வேள்பாரியே. வேள்பாரியென்றது பாரியென்றும் இவன்பெயர் வழங்கப்பெற்றிருக்கின்றது. இப்பாரியே எழுவகைக் கொடைவள்ளல்களுள்ளே ஒருவனாகக்கொள்ளப்பட்டவன். பாரி பறம்புநாட்டிற்கும் மலைக்குந் தலைவன்; மிக்கபராக்கிரமமுடையோன். பாரியின்வள்ளற்றன்மையை இனிதுபுலப்படுத்தும்படியே, மண்டலபுருடரும், "பாரியாயெழினிநள்ளிபசுந்தொடைமலையன்பேகன்" என்னுந்தொடருள் முதலிலேவைத்துக்கூறினர்.

இப்பாரியைத் தமிழ்நாட்டின்கண்ணே யரசுசெய்திருந்த மூவேந்தரும் முரணிச் சமர்தொடுத்து வெல்லமுடியாது, இறுதியில் வஞ்சித்துக் கொன்றனர். முல்லைக்கொடிக்குத் தேர்வழங்கிய மல்லலஞ்சீருடையவனும் இந்தப்பாரியே. இதனை,

"சிறுவீ முல்லைக்குப்பெருந்தேர்நல்கிய
பிறங்குவெள்ளருவிவீழுஞ்சாரற்
பறம்பிற்கோமான்பாரியும்"

என்னும் சிறுபாணாற்றுப்படைச்செய்யுளா னறிக.

இப்பாரியைக் கடைச்சங்கப்புலவரும், "பொய்யாநாவிற்கபிலன்" "புலனழுக்கற்றவந்தணாளன்" என்று இன்னனவாகப் பலபடப்புகழப்பெற்றவரும் ஆகிய கபிலர் பாடிப் பலவரிசையும்பெற்றனர். கபிலர் பாடியசெய்யுட்கள் படிப்போர்கருத்தை யுருக்குந்தன்மையுடையன. பாரிக்குங் கபிலருக்கும் மிக்க நட்புரிமையுண்டு. நன்றிபாராட்டும் பரமதயாளுவாகிய கபிலர் பாரியின்புத்திரிகளை க்ஷத்திரியமரபில் மணமுடிக்க உடன்படுவாரின்மையால் பிராஹ்மணவருணத்தில் விவாஹஞ்செய்து வைத்தார்.

கபிலர்பாடியவிரலியாற்றுப்படை.

சேயிழைபெறுகுவைவாணுதல்விறலி
தடவுவாய்க்கலித்தமாயிதழ்க்குவளை
வண்டுபடுபுதுமலர்த்தண்சிதர்கலாவப்
பெய்யினும்பெய்யாதாயினுமருவி
கொள்ளுழுவியன்புலத்துழைகாலாக
மால்புடைநெடுவரைக்கோடுதோறிழிதரு
நீரினுமினியசாயற்
பாரிவேள்பாற்பாடினைசெலினே.

இயன்மொழித்துறையில்,

பாரிபாரியென்றுபலவேத்தி
யொருவற்புகழ்வர்செந்நாப்புலவர்
பாரியொருவனுமல்லன்
மாரியுமுண்டீண்டுலகுபுரப்பதுவே.

பாரியென்று பரிவுடன்பாடிச்செல்லும் பாவலர்க்குக் காவென்பதன்முன் குறிப்பறிந்து கொடுத்துக்காக்குங் குணமுடையோன் இவ்வேள்பாரியேயாம். இப்பாரியின் கொடைவிசேஷத்தைச் சைவசமயாசாரியராகிய சுந்தரமூர்த்திநாயனார், திருப்புகலூர்த்திருப்பதிகத்திலே,

மிடுக்கிலாதானைவீமனேவிறல்விசயனேவில்லுக்கிவனென்று
கொடுக்கிலாதானைப்பாரியேயென்றுகூறினுங்கொடுப்பாரிலை
பொடிக்கொண்மேனியெம்புண்ணியன்புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அடுக்குமேலமருலகமாள்வதற்கியாதுமையுறவில்லையே.

என்று அருளிச்செய்தார். பாரிக்கு எதிராக மாரியுண்டு என்றது இகழ்வதுபோற் புகழ்ந்தமையேயாம். மாரியானது எங்ஙனம் கைம்மாறுவேண்டாது காசினியோரைமகிழ்விக்குமோ அங்ஙனமே பாரி என்று பாடிச்செல்லுஞ் செந்நாப்புலவர்களைச் சிறந்தமகிழ்வுடன்மதித்துபசரிக்கும் அறத்தகுதியுடையவன் பாரிவேள் என்பது தேற்றமாகின்றது. மேலேகாட்டிய இரண்டாவதுசெய்யுளையே நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்திற் புறத்திணையியல், உவமவியல்களில் உதாரணமாகக் காட்டினார்.

இன்னும் பாரியின்மகளிர் தந்தைபிரிவாற்றாது வருந்திக்கூறியது:

அற்றைத்திங்களவ்வெண்ணிலவில்
எந்தையுமுடையேமெங்குன்றும்பிறர்கொளார்
இற்றைத்திங்களிவ்வெண்ணிலவில்
வென்றெறிமுரசின்வேந்தரெங்
குன்றுங்கொண்டார்யாமெந்தையுமிலமே.

என்பதாம். இப்பாரிவேள்கொடையையும் ஆற்றலையும் கபிலர் போற்றியமையினாலும், கபிலர் கடைச்சங்கப்புலவராதலினாலும், கடைச்சங்கம் இற்றைக்கு 2500 வருஷங்களுக்குமுன்னுள்ளதென்று ஆராய்ந்த அறிஞர்பலர் கூறுதலினாலும், பாரி ஏறக்குறைய 2000-ஆண்டுமுன்பு இருந் தரசுபுரிந்தான் என்பது இனிது துணியப்படும்.

கொடையினாற் பெயர்விளக்கிய குணசிரேஷ்டனாகிய பாரியைத் திருநெறித்தமிழ்வேதத்தினும் விதந்துபேசப்படுமாயின் அன்னோன் கொடைவிறல் விசிட்டமுடைத்தென்றல்சாலுமாற்றால் இங்கே சில வாக்கியங்களை யான் வரைந்தேன். சரிதவாராய்ச்சி மிக்குடையார் தத்தங்கருத்துக்களைவெளியிடின், பலரும் பயனடைவரென்று யான் கருதுகின்றேன். சுபம்.

இங்ஙனம்,
வ. மு. இரத்திநேசுவரையர்,
தமிழ்ப்பண்டிதர்,
காரைக்குடி.

புத்தகமதிப்புரை.

---

1. தமிழ்நாவலர்சரிதை:- இது, சேலம் குகைவாசியும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தவருமான ஸ்ரீமான் சாமி தில்லை நடேச செட்டியாரவர்களாற் பரிசோதிக்கப்பட்டு, கோயமுத்தூர் ஸ்ரீமான் சி. கு. நாராயணசாமிமுதலியாரவர்களாற் பதிப்பிக்கப்பட்டது. இதில், பண்டைக்காலத்தவரும் பிற்காலத்தவருமாகிய புலவர்களிற் சிற்சிலர் ஓரொருசந்தர்ப்பங்களிற்பாடியவாகச் சிலநூல்களாலும், கன்னபரம்பரையாலும் காணப்படும்பாடல்களுள், 261 பாடல்களும், அவைபாடிய அமயங்களும், பாடியபுலவர்களின்பெயருமே கால வரிசைகருதாது வரையப்பட்டிருத்தலால், இது, தமிழ்நாவலர்சரிதை யெழுதுங்கருத்துடையாரொருவர், அதனை விரித்தெழுதற்கேற்ற செய்யுள் பலவற்றை முதலிற் றொகுத்தெழுதிவைத்த கைக்குறிப்புப் போற் றோன்றுகின்றது. ஆயினும், இது, தமிழ்நாவலர்சரிதங்களை யாராய்ந்து விரித்தெழுதுங்கருத்துடையார்க்கு மிகவும் உபயோகமுள்ளது. இதிலுள்ள பாடல்களுக்கு விசேடக்குறிப்பும், முதற்குறிப்பகராதியும் தனியே எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் விலை அணா 8. வேண்டுவோர் பதிப்பித்தோர்க்கெழுதிப் பெறலாம்.

---

2. சோழமண்டல சதகம்:— இது, வேளூர் ஆத்மநாததேசிகராற் பாடப்பெற்றது. இதில், சோழமண்டலத்தின்சிறப்புத்தோன்றக் கல்வியிற்சிறந்த புலவர்களும், புலவர்களையாதரித்த கொடையாளர்களும் வாழ்ந்த சரித்திரங்களும், பலதமிழ்நூல்கள்பிறந்த சரித்திரங்களுங் குறிப்பாயறிவிக்கப்பட்டுள்ளன. இச்சதகம் சரித்திர ஆராய்ச்சி செய்பவர்க்கு மிகப் பயன்படத்தக்கதான அருமைவாய்ந்தது. இதனைத் திருவாரூர் இலக்கணவிளக்கபரம்பரையினரான சோமசுந்தரதேசிகரவர்கள் நன்முயற்சியுடன் பாடப்பட்டோர்வரலாறுமுதலியவெழுதியும், பாட்டிற் சொல்லும்விஷயங்களுக்கேற்ற பிறநூன்மேற்கோள்காட்டியும் அச்சிட்டிருப்பது தமிழன்பராற் பாராட்டத்தக்கது. இதில் இடையிடையே சில திருத்தஞ்செய்யவேண்டியவாய்க்காணப்படுமாயினும் முதற்பதிப்பாயிருத்தலால் இம்மட்டில் வெளியிட்டிருப்பதே

தமிழறிஞர்களுக்குப் பெரிது முபகாரமாயிருக்குமென்பதிற் சிறிதுமையமில்லை. தேசிகரவர்களை இப்புத்தகம் வெளியிடும்படியூக்கிய தேசாபிமானமும், பாஷாபிமானமும், குலாபிமானமும் பாராட்டத்தக்கன. இப்புத்தகத்தின் விலை அணா 8. வேண்டுவோர் பதிப்பித்தோர்க்கெழுதிப் பெறலாம்.

---

3. விவேகோதயம்:—இது, மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தின் அக்கிராசனாதிபதியும், மதுரைக்காலேஜ் தமிழ்ப்பண்டிதருமான ஸ்ரீமான் ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் பத்திராதிபத்தியத்தில் ஷை சங்கத்தினின்றும் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையாக வெளியிடப்பெற்றுவருகிறது. இதன் முதலிரண்டுபகுதிகள் வெளிவந்துள்ளன. அவை, பலபண்டிதர்களாலும் எழுதப்படும் பல சில விஷயங்களும், நாடகநடைகளும், சோழவந்தான் வித்வான் அ. சண்முகம்பிள்ளையவர்களாலியற்றப்பட்ட வள்ளுவர்நேரிசை யென்னும் வெண்பாக்களுக்குப் பத்திராதிபராலெழுதப்படும் உரையும் வரையப்பெற்றுள்ளன. இதனைநடத்தும் பத்திராதிபரவர்கள் விடாமுயற்சியும் ஊக்கமும் உடையவர்களாதலால் இது செவ்விதினடைபெறுமென்று நம்புகிறேன். இதன் வருஷச்சந்தா ரூ 1—8—0 தனிப்பிரதி அணா 3. வெளிநாடுகளுக்கு ரூ 2—4—0. வேண்டுவோர், ம. கோபாலகிருஷ்ணையரவர்கள், பத்திராதிபர் "விவேகோதயம்" மதுரை என்ற விலாசத்திற்கெழுதிப் பெறலாம்.

---

4. இந்து புண்யகதைகள்:—இது, ஆர்க்கியலாஜிகல் இலாகா மானேஜர் ஸ்ரீமத் P. V. ஜெகதீச ஐயர் அவர்களால் எழுதப்பட்டது. இதில் வைதிகமார்க்கத்தாரா லநுஷ்டிக்கப்பட்டுவரும் 24 விரதாநுஷ்டானங்களின் முறையும், காலமும், பலனும், அவற்றின் ஐதிகக்கதைகளும் யாவரும் நன்குணருமாறு எழுதப்பட்ட இருபத்து நான்கு அத்தியாயங்க ளடங்கியுள்ளன. விரதாநுஷ்டானக்கிரமங்களையறியவிரும்பும் ஒவ்வொருவரும் வாங்கிப்படிக்கத்தக்க இப்புத்தகம் இந்துக்களிற் பெண்மக்களுக்கு முபயோகப்படுமாறெழுதியிருப்பது பாராட்டத்தக்கது. இதன்விலை அணா 8. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

---

5. வேதாந்தம்:—இது, ஸ்ரீமத்-விவேகாநந்தஸ்வாமிகள் லாகூர்நகரத்திற்செய்த ஓருபந்யாசத்தின்மொழிபெயர்ப்பாக, சிவகெங்கை, ஸ்ரீராமகிருஷ்ண விவேகானந்த வேதாந்த சங்கத்தாரால் ஷை சங்கத்தின் 4-வது ப்ரசுரமாக வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் அத்தியாத்துமவிஷயங்களை யாவருமறியுமாறு தெளிவான தமிழ் நடையிலெழுதி வெளியிட்ட சங்கத்தாரது நன்முயற்சி பயனடையத்தக்கதே. இதன் விலை அணா 4. வேண்டுவோர் ஷை சங்கத்தின் காரியதரிசியவர்களுக் கெழுதிப்பெறலாம்.

---

6. பாண்டியதேச நாயக்கமன்னர்வரலாறு :—இது, பசுமலை அமெரிக்கன்மிஷன்ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் என். ஆர். சுப்பிரமண்யசர்மா அவர்களாற் பலவாற்றானுந் தெரிந்தவிஷயங்களைக் கொண்டெழுதப்பட்டது. இதில், பூர்வீகவரலாறுசொல்லி விசுவநாதநாயக்கர்முதலாக மீநாக்ஷியம்மாள்வரையாக மதுரையையாண்ட நாயக்கமார்கள்சரித்திரங்களை அவரவர்க்கேற்றவாறு சுருக்கியும் விரித்தும் 15 அதிகாரங்களாகப் பகுத்தெழுதப்பட்டிருக்கிறது. சில சரித்திரமன்னர்களின் உருவப்படங்களும், கொடிவழியட்டவணையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இடையிடையே காணப்படும் எழுத்துப்பிழைகளைத் திருத்திப்படித்துக்கொள்ளும்படி பிழைதிருத்தம் சேர்க்கப்பெற்றால் நலமாயிருக்கும். இதன் விலை அணா 6. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

---

7. ஜன்மரகிதபோதினி:—இது, ஓமலூர் சப் போஸ்டுமாஸ்டர் ஸ்ரீமான் புஷ்பாலவரதராஜரவர்களால் பல ஆந்திரகிரந்தங்களிலுள்ள சாராம்சங்களைத் தேர்ந்து ஆந்திரத்திற் செய்யப்பெற்றதை, ஓமலூர் சப்ரிஜிஸ்டிரார் மகா-௱-௱-ஸ்ரீ ஸி. கே. நரஸிம்ஹலராஜா அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதாகத் தெரிகறது. இதில் வீடுபேறுபற்றி யெழுதிய நம் முன்னோர்கொள்கையிற் சில கூட்டியும் குறைத்தும், அநுபவமுள்ளதாய்த் தமக்குத்தோன்றியவற்றை உபந்யாசஞ்செய்வதுபோல இடையிடையே பலபாடல்களையும் மேற்கோள்காட்டிப் புதியமுறையில் எழுதியிருக்கும்விஷயங்கள் படிப்பவர்களுக்கு நன்குபுலப்படும். இதன் விலை அணா 8. தபாற்கூலி வேறு. வேண்டுவோர் மகா-௱-௱-ஸ்ரீ பழனிசாமிபண்டிதர், சன்மார்க்க சங்கம், ஓமலூர் என்ற விலாசத்திற்கெழுதிப் பெறலாம்.

---

8. சத்தியபோதினி:—இது, சத்தியத்தைப்பற்றி ஸ்ரீமான் புஷ்பாலவரதராஜுலுநாயுடுகோரு அவர்கள் ஆந்திரபாஷையிற்செய்த உபந்யாஸத்தின் மொழிபெயர்ப்பாக ஸி. பழனிசாமிபண்டிதரால் தமிழில் எழுதப்பட்டது. இதன் விலை அணா 2. வேண்டுவோர் ஸி. பழனிசாமிபண்டிதர், சன்மார்க்கசங்கம், ஓமலூர் என்ற விலாசத்துக் கெழுதிப் பெறலாம்.

---

9. துன்பத்தின்மேற்றுன்பம் அல்லது தமன்யகுமி:—இது, தூத்துக்குடி M. A. பீரீஸ் அவர்களால் இயற்றப்பெற்ற தொரு தமிழ்நாவல்; கிரவுன் 16 பக்கங்கொண்ட 26 பாரம் நல்லகாகிதத்தில் செவ்விதா யச்சிடப்பட்டிருக்கிறது. பொழுதுபோக்குமவர்கள் விரும்பிப்படிக்குமாறு கதைகளை விரிவாகக்கற்பித்தெழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூ. 1—4—0. வி. பி. சார்ஜ் வேறு. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

---

10. பகிரங்கரகஸ்யம் :— இது, ஸ்ரீமத் - விவேகாநந்தஸ்வாமிகள்செய்த உபந்யாஸத்தின்மொழிபெயர்ப்பாகச் சிவகெங்கை ஸ்ரீ ராமகிருஷ்ண விவேகாநந்த வேதாந்த சங்கத்தாரால் தமிழில் வெளியிடப்பட்டது. இதன் விலை அணா 1.

---

11. தேரையர்கரிசலை 300, கல்நண்டு சூத்திரம் 16, யூகிமுனி கரிசலை 36:— இவைமூன்றும் சேர்ந் தொருபுத்தகமாக ஆயுள்வேத பண்டிதர் V. R. சுந்தரம் என்பவரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதன் விலை அணா 12. வேண்டுவோர் சச்சிதானந்த அச்சியந்திரசாலை, கோமளேசுவரன்பேட்டை, சென்னை என்ற விலாசத்துக் கெழுதிப் பெறலாம்.

---

12. பெற்றோரும் பிள்ளைகளும்:—இது முடிகொண்டான் M. M. நாராயணசாமி ஐயரால் உபந்யாஸரூபமாயெழுதப்பட்டது. இதன் விலை அணா 1.

பத்திராதிபர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கச.] நளஹூ சித்திரைமீ [பகுதி-கூ.

Vol. XIV. April—May, 1916. No. 6.

மதுரைத்தமிழ்ச்சங்கப்பரீக்ஷைகளின் தேர்ச்சிவிவரம்.

I. தனித்தமிழ்ப்பரீக்ஷை.

இச்சங்கத்தாரால் பன்னிரண்டுவருடகாலமாக நடத்தப்பெற்று வரும் தனித்தமிழ்ப்பரீக்ஷைகள் மூன்றும் ராக்ஷஸ-ஹூ பங்குனி-மீ 22, 23, 24உ களில் நடந்தேறின. இவ்வருடம் மதுரை, தஞ்சை, கும்பகோணம், திருநெல்வேலி, கொழும்பு, நாகர்கோவில், என்ற ஆறு நகரங்களில்மட்டும் பரீக்ஷைகள் நடந்தன. பிரவேச பண்டித பரீக்ஷைக்கு விண்ணப்பஞ்செய்துகொண்டவர் பதின்மர். இவருள் மூவர் பரீக்ஷைக்குவாராது நின்றுவிட்டனர். ஐவர் தேறியிருக்கின்றனர். இருவர் தேறவில்லை. பாலபண்டிதபரீக்ஷைக்கு விண்ணப்பஞ்செய்துகொண்டவர் மூவர். இவருள் இருவர் தேறியிருக்கின்றனர். பண்டிதபரீக்ஷைக்கு விண்ணப்பஞ்செய்துகொண்டவர் மூவர். இவருள் ஒருவர் தேறியிருக்கின்றனர். இவர்களின் பெயர் முதலிய விவரங்கள் கீழே காட்டப்பட்டிருக்கின்றன.

பண்டிதபரீக்ஷை.

இரண்டாவதுவகுப்பு.

1. 3. S. மயில்வாகனம் C/o The Vivekananda Society, 95. Dam Street, கொழும்பு.

---

*

பாலபண்டிதபரீக்ஷை.

இரண்டாவதுவகுப்பு.

1. 5. இளங்காட்டு- மு. வடிவேற்பிள்ளை, செங்கிபட்டி, தஞ்சாவூர் வழி.

2. 6. வே. வேங்கடராயலுரெட்டிகாரு, உபாத்தியாயர், சமுகரெங்கபுரம், வள்ளியூர்ப் பிரிவு.

பிரவேசபண்டிதபரீக்ஷை.

இரண்டாவதுவகுப்பு.

1.	11.	S. ஆழ்வார், மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை,		மதுரை
2.	14.	K. சுப்பராயன்,	ஷை	ஷை.
3.	13.	பெ. இராமாநுஜரெட்டி,	ஷை	ஷை.
4.	12.	P. மாசிலாமணி,	ஷை	ஷை.
5.	10.	தே. இராமாநுஜரெட்டி,	ஷை	ஷை.

II. ஆங்கிலத்தமிழ்ப் பரீக்ஷை.

——:o:——

ஆங்கிலகலாசாலைமாணவர்களுக்குத் தமிழ்கற்பதில் ஊக்கமுண்டாக வேண்டிப் பதின்மூன்றுவருஷகாலமாக மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் நடத்திவரும் தமிழ்ப்பரீக்ஷைகள் இம்முறையும், 1916௵ மார்ச்சுமீ 4-௨ மெற்றிக்குலேஷன், (ஸ்கூல்பைனல்) யப்.ஏ. (இன்டர்மீடியேட்) பீ. ஏ. வகுப்புகளுக்கு மதுரை, திருச்சி, கும்பகோணம், எட்டையபுரம், திருநெல்வேலி, நாகர்கோவில், திருவனந்தபுரம், சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, கூடலூர், புதுக்கோட்டை, தஞ்சை, ஸ்ரீவில்லிபுத்தூர், வேலூர், சென்னை, மாயவரம், மன்னார்குடி, காஞ்சிபுரம், பாபநாசம், மதனப்பள்ளி, ஆகிய இருபத்தொருநகரங்களிலும், நடந்தேறின. சங்கத்தாருடைய வேண்டுகோட்கிணங்கி இத்தமிழ்நாட்டு ஆங்கிலகலாசாலைத் தலைமையதிகாரிகள் தத்தங் கலாசாலையினின்றும் மாணக்கரை அனுப்பியதற்கும், பரீக்ஷைநடத்த இடமுதலிய சௌகரியம் செய்துகொடுத்ததற்கும் இச்சங்கத்தார் மிக்க நன்றிசெலுத்துகின்றார்கள். இவ்வாண்டிற் சங்கப்பரீக்ஷைக்கு விண்ணப்பஞ்செய்துகொண்ட ஆங்கிலகலாசாலை மாணவர்களின் தொகை 362. அவருள் பீ. ஏ. பரீக்ஷைக்கு விண்ணப்பம்செய்துகொண்டவர் ஐவர். இவர்களிற் றேறியவர் மூவர். யப். ஏ. (Intermediate) பரீக்ஷைக்கு விண்ணப்பஞ்செய்துகொண்டவர் நாற்பத்தெண்மர். இவர்களிற் றேறியவர் இருபத்துநால்வர். மெற்றிக்குலேஷன்(School Final)பரீக்ஷைக்கு விண்ணப்பஞ்செய்துகொண்டவர் முந்நூற்றொன்பதின்மர். இவர்களிற் றேறியவர் நூற்றுத்தொண்ணூற்றொருவர். பரீக்ஷைகள்நடைபெற்ற இருபத்தொருநகரங்களிலும் பரீக்ஷைமேற்பார்க்குந்தொழிலைக் குறைவறப்புரிந்த கனவான்களதுபெருந்தகைமையும், சங்காபிமானமும், மிகவும் பாராட்டத்தக்கன. இந்த முறையில் பீ. ஏ. எப். ஏ., (Intermediate) மெற்றிக்குலேஷன் (School Final) இம்மூன்றுவகுப்புகளிலும் மாணவர்கள் முன்வருஷங்களைக் காட்டிலும், அதிகமாய்த்தேறி, வெகுமதிகளையடைந்திருப்பது மிகவும் சந்தோஷிக்கத்தக்கது. இவர்களின் பெயர்முதலிய விவரங்கள் கீழேகாட்டப்பட்டிருக்கின்றன.

இவ்வாண்டில் இச்சங்கத்தாரால் நடத்தப்பெற்ற பரீக்ஷைகளை நிறைவேற்றியதில், சங்கவித்வான்களும் பிறரும் பரீக்ஷாதிகாரிகளாயிருந்துதவிபுரிந்தது மிகவும் பாராட்டப்படுகிறது. தங்களுக்குள்ளவேலைமிகுதிக்கிடையே சங்ககாரியங்களை உரிமையுடன் செய்து முடித்தது அவர்களது தமிழபிமானத்தைக் காட்டுகின்றது. அதற்காக அவர்களுக்கு இச்சங்கத்தார் நன்றிகூறும் கடப்பாடுடையர்.

பீ. ஏ. பரீக்ஷை.

இரண்டாவதுவகுப்பு.

1.	4.	T. G. சுந்தரவேலு,	ஸெண்ட்ஜோசப்காலேஜ்,	திருச்சிராப்பள்ளி.
2.	5.	S. வள்ளிநாயகம்,	ஷை	ஷை
3.	1.	A. S. நடராஜன்,	S. P. G. காலேஜ்,	ஷை

யப். ஏ. (Intermediate) பரீக்ஷை.

முதல்வகுப்பு.

1. 53. T. K. கோபாலன், பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.
(முதற் பரிசு ரூ 40 பெறத்தக்க தங்கப்பதக்கம்.)
2. 38. A. S. முத்தையாமுதலியார், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
(இரண்டாவது பரிசு ரூ 35.)

இரண்டாவதுவகுப்பு.

1. 12. V. N. சுந்தரேசன், S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
2. 42. C பன்னிருகைப்பெருமாள் முதலியார், ஸ்காட் கிறிஸ்தவ காலேஜ், நாகர்கோவில்.
3. 28. N. சங்கரநாராயணன், கவர்ன்மெண்ட் காலேஜ், கும்பகோணம்.
4. 21. M. S. ரெங்காச்சாரி, ஸெண்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.
5. 41. P. அருணசலம், ஸ்காட்கிறிஸ்தவகாலேஜ், நாகர்கோவில்
6. 13. E. V. வெங்கடாசலம், S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
7. 24. N. தியாகராமன், கவர்ன்மெண்ட்காலேஜ், கும்பகோணம்.
8. 40. A. குணமணி, ஸ்காட்கிறிஸ்தவகாலேஜ், நாகர்கோவில்.
9. 31. S. ராஜகோபாலன், கவர்ன்மெண்ட்காலேஜ், கும்பகோணம்.
10. 36. N. S. ஷண்முகம், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
11. 14. K. நடேசன், S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
12. 37. D. குஞ்சிதபாதன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
13. 19. K. R. சந்திரசேகரன், S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
14. 20. T. V. கணேசன், ஷை ஷை
15. 45. Janet Jacob (பெண்), மஹாராஜா பெண்பாடசாலை, திருவனந்தபுரம்.

16. 39. P. M. அம்புரோஸ், ஸ்காட் கிறிஸ்தவ காலேஜ், நாகர்கோவில்.
17. 46. Siromani Isaac (பெண்), மஹாராஜா பெண்பாடசாலை, திருவனந்தபுரம்.
18. 44. ரெத்னம்மாள் சாமுவேல் (பெண்), ஷை ஷை
19. 16. S. சுப்பிரமணியன், S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.
20. 29. M. சபாபதி, கவர்ன்மெண்ட் காலேஜ், கும்பகோணம்.
21. 33. M. பாலசுப்பிரமணியன், ஷை ஷை
22. 35. V. கிருஷ்ணமூர்த்தி, ஷை ஷை

மெற்றிக்குலேஷன் (School Final) பரீக்ஷை.

முதல்வகுப்பு.

1. 300. T. P. மீனாக்ஷிசுந்தரன், Pachaiyappa's College, சென்னை.
(முதற்பரிசு ரூ 30 பெறத்தக்க வெள்ளிப்பதக்கமும் மீத ரூபாவும்.)
2. 184. N. இராமசாமி, செண்ட் ஜோசப் காலேஜ், கூடலூர்.
(இரண்டாவது பரிசு ரூ 25.)
3. 190. V.V. நடேசன், மஹாராஜாஸ்காலேஜ், புதுக்கோட்டை.
(மூன்றாவது பரிசு ரூ 20.)
4. 221. R. ஜெகன்னாதராகவன், ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.
மூன்றாவது பரிசு. (Special Prize) ரூ. 20.
5. 194. Y. ஸ்ரீநிவாஸன், மஹாராஜாஸ் காலேஜ், புதுக்கோட்டை.
(நான்காவது பரிசு ரூ 15.)
6. 267. V. M. ஷண்முகசுந்தரம், முத்தியால்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.
(ஐந்தாவது பரிசு ரூ 12.)
7. 182. S. அய்யாசாமி, L. M. High School, ஈரோடு.
8. 111. N. R. சுப்பையா, ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.
9. 268. K. T. ஸ்ரீநிவாஸன், முத்தியால் பேட்டை ஹைஸ்கூல் சென்னை.
10. 287. V. ஸ்ரீநிவாஸன், Pachaiyappa's College, சென்னை.

11. 215. S. வெங்கிடாசலலையர், ஹிந்துஹைஸ்கூல், ஸ்ரீவில்லி புத்தூர்.
12. 110. V. குருநாதன், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
13. 160. R. அம்புரோஸ், St Michael's High School, கோயம் புத்தூர்.
14. 339. M. தணிகாசலம், Pachaiyappa's High School, காஞ் சிபுரம்.
15. 81. K. S. சுந்தரராஜன், போர்டு ஹைஸ்கூல், லால்குடி.
16. 129. M. குமாரசுவாமிப்பிள்ளை, H. G. S. School, கோட் டாறு.
17. 154. T. ரெங்கசுவாமி, கோயம்புத்தூர்க் காலேஜ், கோயம் புத்தூர்.
18. 166. V. வெங்கடவரதன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
19. 178. E. S. ராஜு, L M. High School, ஈரோடு.
20. 187. K. அருணாசலம்பிள்ளை, ஆர்க்காட் அமெரிக்கன்மிஷன் ஹைஸ்கூல், திண்டிவனம்.
21. 265. S. பெருமாள்சுவாமி, முத்தியால்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.
22. 340. S. இராகவையர், Pachaiyappa's High School, காஞ்சிபுரம்.
23. 342. M. அருணாசலம், ஷை ஷை
24. 56. R. K. தேவதாசன், A. M. High School, பசுமலை.
25. 216. A. S. சுந்தரராஜன், ஹிந்துஹைஸ்கூல், ஸ்ரீவில்லி புத்தூர்.
26. 128. K. S. மாடசுவாமி, ஸ்காட் கிறிஸ்தவ காலேஜ், நாகர் கோவில்.
27. 175. K. சென்னிமலை, L. M. High School, ஈரோடு.
28. 158. A. S. நஞ்சையன், கோயம்புத்தூர்க் காலேஜ், கோயம் புத்தூர்.
29. 280. G. ராஜமனோன்மணி டேவிட், S. P. G. ஹைஸ்கூல் Vepery, சென்னை.
30. 285. T. தர்மராயன், Pachaiyappa's College, சென்னை.
31. 123. C. D. David, ஸ்காட் கிறிஸ்தவ காலேஜ், நாகர் கோவில்.

இரண்டாவதுவகுப்பு.

1. 107. D. P. Israel Pillai, C. M. S. காலேஜ், திருநெல்வேலி.
2. 171. A. பொன்னுச்சாமி, போர்டு ஹைஸ்கூல், உடுமலைப் பேட்டை.
3. 233. V. P. கண்ணப்பன், வூரீஸ் காலேஜ், வேலூர்.
4. 140. A. சங்கரநாராயணையர், H. H. Maharaja's H. G. S. School, திருவனந்தபுரம்.
5. 199. S. குப்புசாமி, மஹாராஜாஸ்காலேஜ், புதுக்கோட்டை.
6. 66. C. V. சாரங்கன், நாஷனல் ஹைஸ்கூல், திருச்சிராப் பள்ளி.
7. 162. S. செல்லப்பன், ஸெண்ட்மிக்கெல்ஸ் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.
8. 196. T. S. ஸ்ரீநிவாஸன், மஹாராஜாஸ் காலேஜ், புதுக் கோட்டை.
9. 346. R. சாம்பசிவன், விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
10. 102. M. மாணிக்கம், ஹைஸ்கூல், பத்தமடை.
11. 112. V. V. சுந்தரம், St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.
12. 163. D. J. தேவநேசன், ஸெண்ட்மிக்கெல்ஸ் ஹைஸ்கூல் கோயம்புத்தூர்.
13. 197. N. தங்கராஜன், மஹாராஜாஸ் காலேஜ், புதுக்கோ ட்டை.
14. 100. R. N. ஆதிநாராயணன், ஹைஸ்கூல், பத்தமடை.
15. 198. T. P. நாராயணதாஸ், மஹாராஜாஸ் காலேஜ், புதுக் கோட்டை.
16. 284. சி. திருநாவுக்கரசு, Pachaiyappa's College, சென்னை.
17. 54. P. பெலவேந்திரன், A. M. High School, பசுமலை.
18. 345. M. N. இராமச்சந்திரன், விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
19. 142. A. இராமசுவாமி ஐயர், போர்டு ஹைஸ்கூல், திருவன ந்தபுரம்.
20. 208. G. வெங்கடசுப்பிரமணியன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சை.

21. 230. L. S. சாமுவேல், வூரீஸ் காலேஜ், வேலூர்.
22. 276. M. S. கோடீஸ்வரன், S. P. G. High School, Vepery, சென்னை
23. 283. M. V. சுப்பிரமணியன், Pachaiyappa's College, சென்னை.
24. 348. N. இராமாநுஜாச்சாரி, விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
25. 64. K. வெங்கடராமன், நாஷனல் ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி.
26. 76. H. ரெங்கநாதராவ், போர்டு ஹைஸ்கூல், குளித்தலை.
27. 147. N. நாராயண சாரி, முனிசிபல் காலேஜ், சேலம்.
28. 165. T. V. சுப்புநாராயணன், மகாஜனஹைஸ்கூல், ஈரோடு.
29. 217. S. செல்லையங்கார், ஹிந்துஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.
30. 261. (a) C. பாலசுந்தரம்பிள்ளை Assistant Master, Sri, Mahant's Lower School, வேலூர்.
31. 271. R. துளசிங்கம், முத்தியால்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.
32. 327. K. கணேசன், நாஷனல்ஹைஸ்கூல், மன்னார்குடி.
33. 130. P. சங்கரடானு, H. G. S. School, கோட்டாறு.
34. 222. A. N. சுந்தரமூர்த்தி, வூரீஸ் காலேஜ், வேலூர்.
35. 68. E. V. வெங்கட அஸ்வத்த நாராயணன், நாஷனல் ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி.
36. 344. C. வேணுகோபால் செட்டி, Pachaiyappa's High School, காஞ்சீபுரம்.
37. 270. K. T. வரதன், முத்தியால்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.
38. 318. S. ஸ்ரீநிவாஸன், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.
39. 351. P. K. சுப்பிரமணியன், விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
40. 266. S. நடராஜன், முத்தியால்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.

41. 91. K. தங்கவேலு, டவுன்ஹைஸ்கூல், கும்பகோணம்.
42. 122. M. W. சாமுவேல், ஸ்காட் கிறிஸ்தவ காலேஜ், நாகர்கோவில்.
43. 124. D. மாசிலாமணி, ஷை ஷை
44. 146. T. V. ஸ்ரீநிவாஸன், முனிசிபல் காலேஜ், சேலம்.
45. 169. K. R. நீலகண்டன், மஹாஜனஹைஸ்கூல், ஈரோடு.
46. 177. A. அங்கமுத்து, L. M. High School, ஈரோடு.
47. 193. S. K. நரசிம்மன், மஹாராஜாஸ் காலேஜ், புதுக்கோட்டை.
48. 272. T. M. கிருஷ்ணசாமி, முத்தியால்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.
49. 80. L. N. சுப்பிரமணியன், போர்டுஹைஸ்கூல், லால்குடி.
50. 113. P. சின்னப்பன், St. FrancisXavier's High School, பாளையங்கோட்டை.
51. 120. S. சுபானந்தராஜ், ஸ்காட் கிறிஸ்தவ காலேஜ், நாகர்கோவில்.
52. 209. T. V. ஸ்ரீநிவாஸதாதாசாரி, கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சை.
53. 262. C. விவேகானந்தம், முத்தியால்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.
54. 69. P. S. மாணிக்கம், The High School, ஸ்ரீரங்கம்.
55. 131. K. ஷெய்குமுகைதீன் சாஹிப், H. G. S. School, கோட்டாறு.
56. 185. R. வரதஸ்வாமி ஐயங்கார், ஸெண்ட் ஜோஸப் காலேஜ், கடலூர்.
57. 317. T. K. சந்தானம், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.
58. 320. K. ராமமூர்த்தி ஷை ஷை
59. 74. S. நடராஜ செட்டி, போர்டுஹைஸ்கூல், குளித்தலை.
60. 133. Kamalabai Fletcher (பெண்), மஹாராஜா பெண் பாடசாலை, திருவனந்தபுரம்.
61. 148. M. சாம்பமூர்த்தி, முனிசிபல் காலேஜ், சேலம்.

62. 296. P. பார்த்தஸாரதிபிள்ளை, ஹிந்துதியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை.

63. 263. ரா. கோவிந்தன், முத்தியால்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.

64. 105. H. R. ஸ்ரீநிவாஸன், ஹைஸ்கூல், பத்தமடை.

65. 223. K. M. அனந்தநாராயணையர், வூரீஸ் காலேஜ், வேலூர்.

66. 87. S. எதிராஜன், டவுன்ஹைஸ்கூல், கும்பகோணம்.

67. 94. K. ரெங்கசாமி, ராஜாஸ் ஹைஸ்கூல், எட்டையபுரம்.

68. 93. T. வெங்கடராமன் ஷை ஷை

69. 261. W. ஸ்ரீநிவாஸராகவன், முனிசிபல் ஹைஸ்கூல், வாலாஜாநகர்.

70. 291. T. P. இராமச்சந்திரன், Pachaiyappa's College, சென்னை.

71. 189. பாஷீர் அகமத்ஸயீத, ஆர்காட் அமெரிக்கன் மிஷன் ஹைஸ்கூல், திண்டிவனம்.

72. 293. A. V. வெங்கடாச்சாரி, ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை.

73. 72. S. சீதாராமன், The High School, ஸ்ரீரங்கம்.

74. 104. M. A. சேஷபதி, ஹைஸ்கூல், பத்தமடை.

75. 108. P. S. சுந்தரம், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.

76. 176. M. சிவசுப்பிரமணியன், L. M. ஹைஸ்கூல், ஈரோடு

77. 219. S. கோமதிநாயகம், ஹிந்துஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.

78. 310. M. S. கிருஷ்ணமூர்த்தி, முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.

79. 90. S. ஸ்ரீநிவாஸன், டவுன்ஹைஸ்கூல், கும்பகோணம்.

80. 207. K. ரெங்கஸ்வாமிராவ், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சை.

81. 210. T. B. ராமுடு ஷை ஷை

82. 189a. S. குழந்தைவேலன், டவுன்ஹைஸ்கூல், கும்பகோணம்.

83. 99. V. G. இராமஸ்வாமி, ஹைஸ்கூல், பத்தமடை.

84. 115. T. மன்னார், St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.

85. 125. T. ஆலிவர், ஸ்காட்கிறிஸ்தவகாலேஜ், நாகர்கோவில்.

86. 191. S. வைத்தியநாதன், மகாராஜாஸ் காலேஜ், புதுக்கோட்டை.

87. 211. A. முத்துசாமி, கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சை.

88. 286. S. முத்துக்குமாரசாமி, Pachaiyappa's College, சென்னை.

89. 59. ச. அய்யமுத்து, A. M. High School, பசுமலை.

90. 60. K. P. குமாரசாமி, சௌராஷ்டிரா ஹைஸ்கூல், மதுரை.

91. 181. K. மலைக்கொழுந்து, L. M. High School, ஈரோடு.

92. 201. M. நாராயணசாமி, மஹாராஜாஸ் காலேஜ், புதுக்கோட்டை.

93. 206. K. மல்ஹரிராவ், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சை.

94. 324. R. விஸ்வநாதன், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.

95. 84. N. சுப்பிரமணியன், டவுன் ஹைஸ்கூல், கும்பகோணம்.

96. 161. A. K. குமாரசுவாமி, ஸெண்ட் மிக்கேல்ஸ் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.

97. 204. D. S. இராமஸ்வாமி, மஹாராஜாஸ் காலேஜ், புதுக்கோட்டை.

98. 135. க்றிஸ்டினல் டேவிட் (பெண்), மஹாராஜா பெண் பாடசாலை, திருவனந்தபுரம்.

99. 274. N. S. ஆரோக்கியசாமி, S. P. G. ஹைஸ்கூல், Vepery, சென்னை.

100. 311. S. இராமநாதன், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.

101. 65. J. M. சுப்பிரமணியன், நாஷனல் ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி.

102. 139. ஜெஸ்ஸிலெட் ஆசீர்வாதம் (பெண்), மஹாராஜா பெண் பாடசாலை, திருவனந்தபுரம்.

103. 155. S. A. சுப்பிரமணியன், கோயம்புத்தூர்க் காலேஜ், கோயம்புத்தூர்.
104. 214. N. ஞானமணி, ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.
105. 349. A. மஹாலிங்கம், விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
106. 127. C S. யோசேப்பு, ஸ்காட் கிறிஸ்தவ காலேஜ், நாகர்கோவில்.
107. 137. M. வள்ளியம்மாள் (பெண்), மஹாராஜா பெண்பாடசாலை, திருவனந்தபுரம்.
108. 195. K. ராஜுபகதூர்வர்மா, மஹாராஜாஸ் காலேஜ், புதுக்கோட்டை.
109. 246. N. K. விஜயராகவன், ஸ்ரீமகன்தல்ஸ் ஹைஸ்கூல், வேலூர்.
110. 303. M. முத்துகிருஷ்ணன், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.
111. 352. D. உலகநாதன், விக்டோரியாஹைஸ்கூல், பாபநாசம்.
112. 95. C. வெங்கடசப்பு, ராஜாஸ் ஹைஸ்கூல், எட்டையபுரம்.
113. 132. D. Harriet Fletcher (பெண்), மஹாராஜா பெண்பாடசாலை, திருவனந்தபுரம்.
114. 254. C. அரங்கசாமி நாட்டார், போர்டு ஹைஸ்கூல், சித்தூர்
115. 119. M. Antony, St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.
116. 192. K. நடேசன், மஹாராஜாஸ்காலேஜ், புதுக்கோட்டை.
117. 229. V. இரத்னசபாபதி, வூரீஸ் காலேஜ், வேலூர்.
118. 343. M. சாமிநாதன், Pachaiyappa's High School, காஞ்சீபுரம்.
119. 101. K. பூமிலிங்கம், ஹைஸ்கூல், பத்தமடை.
120. 145. S. ஷண்முகம், முனிசிபல் காலேஜ், சேலம்.
121. 220. S. அகஸ்தியப்பன், ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.

122. 249. A. வீரராகவையர், ஸ்ரீமகன்தல்ஸ்ஹைஸ்கூல், வேலூர்.
123. 290. P. இராமசாமி, Pachaiyappa's College, சென்னை.
124. 315. A. ராஜப்பா, பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.
125. 97. N. முத்துக்கிருஷ்ணன், ராஜாஸ்ஹைஸ்கூல், எட்டையபுரம்.
126. 282. S. வெங்கடேசன், S.P.G. High School, Vepery, சென்னை.
127. 153. G. சிவசங்கரன், கோயம்புத்தூர்க் காலேஜ், கோயம்புத்தூர்.
128. 180. P. சிதம்பரம், L. M. High School, ஈரோடு.
129. 218. R. சேஷன், ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.
130. 321. K. சக்ரவர்த்தி, பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.
131. 143. S. அய்யண்ண படையாச்சி, முனிசிபல் காலேஜ், சேலம்.
132. 200. P. சுப்பிரமணியன், மஹாராஜாஸ் காலேஜ், புதுக்கோட்டை.
133. 306. அ. இ. பட்டாபிராமன், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.
134. 168. K. V. நாராயணசாமி, மஹாஜனஹைஸ்கூல், ஈரோடு
135. 279. S. A. சுந்தரராஜா, S. P. G. ஹைஸ்கூல், Vepery, சென்னை.
136. 319. M. சுல்தான் முகையத்தீன், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.
137. 71. K. இராமநாதன், The High School, ஸ்ரீரங்கம்.
138. 82. S. சோமசுந்தரம், டவுன் ஹைஸ்கூல், கும்பகோணம்.
139. 152. A. K. கோதண்டராமன், கோயம்புத்தூர்க்காலேஜ், கோயம்புத்தூர்.
140. 226. A. கிறிஸ்டியன், வூரீஸ் காலேஜ், வேலூர்.
141. 144. P.R. இராமச்சந்திரராவ், முனிசிபல் காலேஜ், சேலம்.
142. 242. V. S. கண்ணப்பன், ஸ்ரீமகன்தல்ஸ் ஹைஸ்கூல், வேலூர்.
143. 136. Marial Joseph (பெண்), மஹாராஜா பெண் பாடசாலை, திருவனந்தபுரம்.

144. 150. C. M. சென்னிமலையப்பன், கோயம்புத்தூர்க்காலேஜ், கோயம்புத்தூர்.
145. 173. K. R. வெங்கடரமணன், போர்டு ஹைஸ்கூல், உடுமலைப்பேட்டை.
146. 174. S. A. கிருஷ்ணன்பிள்ளை, போர்டு ஹைஸ்கூல், உடுமலைப்பேட்டை.
147. 205. V. கிருஷ்ணசுவாமி, மகாராஜாஸ் காலேஜ், புதுக்கோட்டை.
148. 212. L. வெங்கிடசுப்பிரமணியன், ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்.
149. 350. S. சீதாராமன், விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
150. 106. S.S. சங்கரசுப்பிரமணியன், ஹைஸ்கூல், பந்தமடை.
151. 252. H. மல்ஹரிராவ், போர்டு ஹைஸ்கூல், சித்தூர்.
152. 347. S. லட்சுமிநாராயணன், விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
153. 179. T. C. ஸ்ரீநிவாசன், L. M. High School, ஈரோடு.
154. 258. C. M. தணிகாசலம், முனிசிபல்ஹைஸ்கூல், வாலாஜாநகர்.
155. 61. A. கிருஷ்ணசாமி, சௌராஷ்டரா ஹைஸ்கூல், மதுரை.
156. 67. V. S. பஞ்சநதம், நாஷனல் ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி.
157. 92. M. நரசிம்மன், ராஜாஸ் ஹைஸ்கூல், எட்டையபுரம்.
158. 235. A. சஞ்சீவிராவ், வூரிஸ் காலேஜ், வேலூர்.
159. 256. K. சுவாமிநாதன், போர்டு ஹைஸ்கூல், சித்தூர்.
160. 294. K. பெருமாளையங்கார், ஹிந்து தியாலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை.

B. இராஜராஜேஸ்வரஸேதுபதி,

14—5—16.

அக்கிராசனாதிபதி.

மதுரைத்தமிழ்ச்சங்கம்

மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்களித்த விசேஷநன்கொடை.

இச்சங்கத்திற்குப் பொருள்வருவாய் குறைவாகவும், செலவுக்குப் போதாமலும் இருப்பதில், சங்ககாரியங்கள் முட்டுப்பாடின்றி நடைபெறும்பொருட்டு மீ 1-க்கு ரூ 100 சங்கத்திற்கு இராமநாதபுரம் ஸமஸ்தானத்திலிருந்து நன்கொடை அளித்துவரும்படி மாட்சிமைதங்கிய சேதுபதியவர்கள் உத்தரவுசெய்து நாளிது௵ ஜனவரிமீ முதல் அக்கட்டளையை நிறைவேற்றிவருகிறார்கள். அதனால் உதவிக்காரியதரிசி ஒருவரை நியமிக்கும்படி சென்ற ஆண்டிற் சங்கத்தார் தீர்மானித்தவிஷயம் நிறைவேறலாயிற்று. இங்ஙனம் புதுக்கோட்டை அரசரவர்களும், ஆண்டிப்பட்டி ஜமீந்தார் மகா-ா-ா-ஸ்ரீ பெத்தாச்சி செட்டியாரவர்களும், சேதுபதியவர்களும் இச்சங்கத்திற்கு மாதந்தோறும் பொருளுதவிபுரிந்துவருவதானது ஏனைய ராஜாக்களும், மடாதிபதிகளும், தனவான்களும் சங்கக்காரியங்கள் யாவும் என்றும் தட்டின்றி நடைபெறுவதற்கு வேண்டும்பொருளுதவிபுரிய வழிகாட்டியதாகுமென நினைக்கிறோம். இவ்வாண்டுமுதற் சேதுபதியவர்கள் செய்துவரும் பேருதவிக்குக் கைம்மாறு தமிழகம் நன்றி பாராட்டுவதன்றி வேறில்லை.

தமிழ்ச்சங்கத்தின் நோக்கங்கள் செவ்விதாய்நிறைவேறுவதற்கு அதற்குச்சொந்தமாக ஒருமாளிகையும் நிதியும்வேண்டியது இன்றியமையாததென்பது எல்லாரும் நன்கறிந்ததே. அதற்கு, சங்கத்தின் உப-அக்கிராசனாதிபதியான கானாடுகாத்தான் ஸ்ரீமான்-சா. ராம. மு. சித. பெத்தாச்சிசெட்டியாரவர்களின் நன்முயற்சியால், சென்ற வருஷத்து அறிக்கைப்பத்திரத்திற்காட்டிய கனதனவான்களிடமிருந்தும் சேதுபதி மஹாராஜா அவர்களிடமிருந்தும் வாக்களிக்கப்பெற்றதும் வசூலாகியதுமாகிய தொகை மொத்தம் ரூ 28275.

இவ்வருடத்தில் இதுவரையிலும், அன்புடன் பொருளுதவிசெய்தும் வாக்களித்துமுள்ள கனவான்களின் பெயர்முதலியன அடியில் விவரித்திருக்கிறது. அவர்களின் சங்காபிமானமும், தமிழபிவிர்த்தியிலுள்ள ஊக்கமும், சிரத்தையும், அன்பும் பெரிதும் பாராட்டற்பாலன. அவர்களுக்கு இச்சங்கத்தார் மிக்கநன்றிபாராட்டுகிறார்கள். இதுபோலவே தமிழபிமானச்செல்வர்கள் அநேகர் முன்வந்து உதவிபுரிவார்களென்றே உறுதியாக நம்புகிறோம்.

கட்டடத்திற்காக இவ்வருடத்தில் பொருளுதவிசெய்தும் வாக்களித்துமுள்ள கனவான்களின் பெயர்முதலியன.

1. மகா-ள-ள-ஸ்ரீ N. R. சுப்பிரமணிய சர்மா அவர்கள், தமிழ்ப் பண்டிதர், அமெரிக்கன்மிஷன் ஹைஸ்கூல், பசுமலை, (இவர் சென்ற 13-வது வருஷக்கூட்டத்தில் வாக்களித்த தொகை ரூ. 20.
2. ,, சித. முரு. முருகப்ப செட்டியாரவர்கள், தேவகோட்டை ரூ. 250.
3. ,, அள. சித. லெ. இராமசாமி செட்டியாரவர்கள், தேவகோட்டை ரூ. 350.
4. ,, அப்பு. லெ. ராம. லட்சுமணன் செட்டியாரவர்கள், தேவகோட்டை, ரூ. 150.
5. ,, சேவு. ராம. அரு. இராமநாதன் செட்டியாரவர்கள், தேவகோட்டை, ரூ. 200.
6. ,, லெ. அரு. லெ. இராமநாதன் செட்டியாரவர்கள், தேவகோட்டை, ரூ. 100 (இவர் இதற்குமுன் வாக்களித்துள்ள தொகை ரூ. 100.)
7. ,, அள. வீர. பெ. வீரப்பசெட்டியாரவர்கள், தேவகோட்டை, ரூ. 350.
8. ,, அள. வீர. சித. லட்சுமணன் செட்டியாரவர்கள், தேவகோட்டை, ரூ. 200.
9. ,, பள. செ. லட்சுமணன் செட்டியாரவர்கள், தேவகோட்டை, ரூ. 200.
10. ,, R. M. P. V. பழநியப்ப செட்டியாரவர்கள், பூலாங்குறிச்சி, ரூ. 1000.
11. ,, T. N. சுந்தரராஜையங்காரவர்கள், B. A., B. L. ஹைக்கோர்ட் வக்கீல் & Honorary Secretary, Madura Tamil Sangam, மதுரை, ரூ. 250.
12. ,, உ. ராம. உ. மு. குடும்பத்தார், தேவகோட்டை, ரூ. 500.

13. ,, அண்ணாமலைஞான தேசிகரவர்கள், கோவிலூர் மடாலயம், காரைக்குடிப் போஸ்டு, ரூ. 200.
14. ,, மெ.செ.மெ.மெ. அவர்கள், காரைக்குடி ரூ. 1050.
15. ,, லெ. அரு. அருணாசலஞ்செட்டியாரவர்கள், மாநகரி O'Siruvayal Post. ரூ. 350.
16. ,, வ. யி. ராம. அவர்கள், அரியக்குடி, ரூ. 150.
17. ,, அள. ராம. நா. ஸ்ரீநிவாஸன் செட்டியாரவர்கள், அரியக்குடி, ரூ. 175.
18. ,, வெ. ராம. மு. அவர்கள், அரியக்குடி, ரூ. 175.
19. ,, வெ. ராம. நா. அவர்கள், அரியக்குடி, ரூ. 175.
20. ,, நா. முரு. அவர்கள், அரியக்குடி, ரூ. 175.
21. ,, நா. சா. ராம. அவர்கள், அரியக்குடி, ரூ. 175.
22. ,, ராம. வள. பெ. அவர்கள், அமராவதிபுதூர், ரூ.150
23. ,, வயிநாகரம் வெ. ராம. சோமசுந்தரம் செட்டியாரவர்கள், அமராவதிபுதூர், ரூ. 50.
24. ,, வயிநாகரம், சு. லட்சுமணன்செட்டியாரவர்கள், அமராவதிபுதூர், ரூ. 25.
25. ,, வயி. ராம. வயி. வைரவன்செட்டியாரவர்கள், அமராவதிபுதூர், ரூ. 50.
26. ,, க. சுப. லட்சுமணன் செட்டியாரவர்கள், அமராவதிபுதூர், ரூ. 50.

ஆக மொத்தம் ரூ. 6,520.

இச்சங்கம் ஏற்பட்டகாலத்தில் சங்கத்தின் அபிவிருத்தியின் பொருட்டுப் பொருளுதவிசெய்வதாய் வாக்களித்தபடி நிறைவேற்று முன் காலம்சென்ற சாப்டூர் ஜமீந்தாரவர்கள் நன்கொடைக்காக ஷை எஸ்டேட்டு மைனர் ஜமீந்தாரின் Court of Wards கார்டியன் மதுரை ஜில்லா கலெக்டர் G. F. Paddison துரையவர்கள் ரூ. 500 மனமுவந்துதவிய பேருதவி மறக்கற்பாலதன்று. இவ்வுதவிபுரிந்த துரையவர்கட்கும், மைனர் ஜமீந்தாரவர்கட்கும் சங்கத்தார் நன்றி பாராட்டுகிறார்கள்.

டி. ஸி. ஸ்ரீனிவாஸையங்கார், B. A. B. L.
டி. என். சுந்தரராஜ ஐயங்கார், B. A. B. L.
காரியதரிசிகள்.

1916ஆம் ஏப்ரல்மீ 18உ மாலை 7மணிக்கு நடந்த மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாஹஸபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விபரம்.

———:()o()———

1. மாட்சிமைதங்கிய் இராமநாதபுரம் ராஜா ஹிஸ் ஹைனெஸ் பா. ராஜராஜேஸ்வர சேதுபதியாகிய முத்துராமலிங்க சேதுபதியவர்கள். அக்கிராசனாதிபதி.
2. மகா-ள-ள-ஸ்ரீ கான்பகதூர் அப்துல் ரஹிமான்சாஹிப் அவர்கள்
3. ,, V. S. இராமஸ்வாமிசாஸ்திரியவர்கள், B.A.B.L.
4. ,, T. C. ஸ்ரீநிவாசையங்காரவர்கள், B.A., B.L. } காரிய தரிசிகள்.
5. ,, T. N. சுந்தரராஜையங்காரவர்கள், B.A., B.L. }

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்—

I. 1. மகா-ள-ள-ஸ்ரீ N. கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் B.A. Translator District and Sessions Court, சித்தூர்.

2. ,, N. R. கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள், B.A.B.L., வக்கீல், மதுரை.

3. ,, உறையூர் வே. கோவிந்தசாமி ராஜு அவர்கள், (Now at) மலையாண்டிப் பட்டணம், (Via) Pollachi.S.I.Ry.

4. ,, சாமி தில்லை நடேசசெட்டியார் அவர்கள் ஜவுளிவியாபாரம், குகை, சேலம்.

இவர்களைச் சங்கத்தின் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளலாம் என்று தீர்மானிக்கலாயிற்று.

II. 1916-ஆம் ஜனவரி, பிப்ரவரி மாதங்களின் வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கப்பட்டன. மார்ச்சு-மீ கணக்கைப் பரிசீலனை செய்து அடுத்தமீட்டிங்குக்குக் கொண்டுவரத் தீர்மானம்.

III. சங்கம் செவ்விதாய்நடைபெற்றுவரவும், அபிவிருத்தியடையவும், மிக்க உபகாரமாக அதிககாருண்யத்துடன் மீ 1-க்கு ரூ 100 நன்கொடையளித்ததற்கு இச்சங்கத்தார் மாட்சிமைதங்கிய சேதுபதியவர்களுக்கு நன்றிபாராட்டுகிறார்கள்.

IV. சங்கம் வருஷோத்ஸவம், மதுரையில், நாளது வருஷம் மேமீ 18, 19, 20-ஆந் தேதிகளில் நடக்கும்படி தீர்மானம்.

V. சாப்டூர்ஜமீந்தாரவர்கள், நன்கொடைவிஷயமாய், ரூ. 500 சங்கத்திற்குக்கொடுக்கும்படி கோர்டாப்வார்ட்ஸார் உத்தரவு செய்திருப்பதாக, மதுரைஜில்லாக் கலெக்டரவர்கள் காரியதரிசிகளுக்கு எழுதியகடிதப்படி, தமிழ்ச்சங்கத்திற்குச் செய்தபண உதவிக்கு, கோர்டாப் வார்டுஸாருக்கும், சங்க அபிவிருத்தியில் அன்புடைய மதுரைக் கலெக்டர்துரையவர்களுக்கும், இச்சங்கத்தார் நன்றிபாராட்டுகிறார்கள்.

VI. வருஷாந்தரக் கணக்குகளைப் பரிசோதனைசெய்வதற்கு, மகா-ள-ள-ஸ்ரீ வக்கீல் V. சுந்தரமையரவர்களை annual ஆடிட்டராக நியமிக்கத் தீர்மானம்.

VII. வெப்பத்தை நிவர்த்திக்கச் சன்னல்களுக்குப் படுதாக்கள் போட ரூ. 12 செலவுசெய்து சௌகரியம்செய்யத் தீர்மானம்.

(Signed) B. Raja Rajeswaran,
President.

18—4—16. Madura Tamil Sangam.

(True Copy.)

ஸ்ரீ:

இலக்கணதீபம்.

——:(o):——

இச்சிறுநூல், செய்யுளியற்றப்புகுவார் பிறவிலக்கணங்களும் தெரிந்துகொண்டு அவைபிறழாது செய்யுளியற்றுவாராயின் அவர்செய்யுங்கவிதைகள் இலக்கணக்கவிதையாமெனவும், அல்லாதார்செய்யுங்கவிதைகள் அவலக்கணக்கவிதையாமெனவும் அறிவுறுப்பதுபோன்று, எழுத்து, சொல், பொருள், அணி என்னும் நால்வகையிலக்கணங்களைப் பெயர்மாத்திரையானே தொகுத்துச்சொல்லுகின்றமையால், இலக்கணநூல்களைக்கற்பார்க்கு அவ்விலக்கணங்களையெல்லாம் விரைவிற் சிந்திக்க மிகவும் சாதகமாயுள்ளது. இதில் இலக்கணநூல்கள் வளர்வடைந்த வழியறியுமாறு முச்சங்கவரலாறும் இறுதியிற்கூறப்பட்டிருத்தலால், சங்கவரலாறுணர்வார்க்கும் இது பயன்படத்தக்கது. இதனை இயற்றியோர்பெயர்முதலிய விவரமொன்றுந் தெரியவில்லை. ஸேதுஸம்ஸ்தான வித்வான் ஸ்ரீமத்-ரா. ராகவையங்காரவர்களிடமிருந்து ஓர்பிரதி கிடைத்தமையாலும், இதனிறுதிப்பாட்டு சுத்தபாடம்தோன்றாவண்ணம் எழுதப்பட்டும் சிதைந்தும் இருந்தமையாலும் தெரிந்தமட்டுந் திருத்தி மற்றவற்றை இருந்தபடியே பதிப்பிக்கலாயிற்று. ப—ர்.

எழுத்தென்ன வொலியொரு தொகைத்தா யெழுந்துமுதல்
சார்பிரு வகைத்தாயிருந்
திருவகைப் பெயரினீ ரிருவகைத் தாய்முறை
யினத்திலெண் ணிருவகைத்தா
யொழுக்கும் பிறப்பிடத் தீரிரு வகைத்தா
யுழுப்பிலே யிருவகைத்தா
யுள்ளவடி வம்புள்ளி புள்ளியில் லாதென்னு
முருபிலோ ரிருவகைத்தாய்
வழக்கின்றி மாத்திரையி னைவகைத் தாய்மூன்று
வழியின்மொழி மூவகைத்தாய்
வந்துயி ருடற்போலி யிருவகைத் தாய்மூ
வகைச்சாரி யைத்தாய்நடந்
தழுக்கின்றி விரியொன்றி னுணூற தாமெழுத்
ததிகார லக்கணமெலா
மறிந்துசொல் வதிலக்க ணக்கவிதை யல்லாத
தவலக்க ணக்கவிதையே. (1)

எண்ணிய வெழுத்திலே யோரெழுத் துப்பதந்
தொடரெழுத் துப்பதமிரண்
டிதிலுயிரு மெய்யுமுத லீறுன பதநான்
கினிற்பகாப் பதம்பகுபதம்
பண்ணினவை யெட்டினம் பெயர்வினை யிரண்டிற்
பகுப்பவீ ரெட்டிடையுரிப்
பாலுமீ ரெட்டாக வெண்ணன்கு பதமுமப்
பதபகுதி யொடுவிகுதியுந்
திண்ணிய பதத்துடன் பதமும் பதத்துடன்
சேருநபு மெனமூவகைச்
செப்பும் புணர்ப்புமிடை நிலைசந்தி சாரியைச்
செயலும் விகாரவியல்பு
மண்ணியசொல் வேற்றுமையு மல்வழியு மாமெழுத்
ததிகார லக்கணமெலா
மறிந்துசொல் வதிலக்க ணக்கவிதை யல்லாத
தவலக்க ணக்கவிதையே. (2)

திணையின்மூன் றுய்ப்பாலி னைந்தா யிடத்திலே
திரியமூன் றய்வழக்குச்
செய்யுளி னிரண்டாய் வெளிப்படை குறிப்பினிற்
சென்றிரண் டாய்நின்றசொல்
வினையியற் சொற்றிரிசொல் திசைவடசொ லென்றிவ்
விரண்டதாய்ப் பொருளின்மூன்றா
மின்னமும் பெயர்வினைக ளிடையுரிக ளென்னா
மிவற்றினுட் பெயரொன்றுமே
துணைகொளிடு குறியாதி பொருளாதி நாலாறு
சொல்லாய்ப் பொதுச்சிறப்பாய்ச்
சொன்னவினை முற்றெச்ச மெதிர்மறை குறிப்பினாற்
றொகையாய்ப் பொதுச்சிறப்பா
மணையுமிடை யுரியும் பொதுச்சிறப் பாமச்சொ
லதிகார லக்கணமெலா
மறிந்துசொல் வதிலக்க ணக்கவிதை யல்லாத
தவலக்க ணக்கவிதையே. (3)

இவ்வகையி லிடுகுறிப் பேர்மூன்று காரணத்
    திட்டபெய ரெட்டாகுபே
ரீராறு பொருளாதி யோராறு மரபுபெய
    ரின்னமுத் திணைமுதற்பேர்
செவ்வனொன் பதுபினைத் திணைபா லிடப்பெயர்
    சிறப்பிலீ ரொன்பதுபொதுத்
திணைப்பெயர்கள் பின்னையிரு பத்தாறி னிற்பொதுத்
    திணைவினைக ளெட்டிவற்றுட்
கவ்வையறு மீரெச்ச வினைகளிரு மூன்றுமுக்
    காலத்து முற்றுவினையுங்
கருதின்மூ வொன்பது குறிப்புவினை முற்றுங்
    கணக்கிலா ஞென்பதென்றே
யவ்வகைப் பெயர்வினை யனைத்துந் தெரிக்குஞ்சொ
    லதிகார லக்கணமெலா
மறிந்துசொல் வதிலக்க ணக்கவிதை யல்லாத
    தவலக்க ணக்கவிதையே.

உடன்பாட்டு முற்றுமெதிர் மறைமுற்று மேவல்முற்
    றும்வியங் கோண்முற்றுமா
யொருகால தாகும்வினை முற்றெலா மறுபொருளு
    முறுவினை வுஞ்சுட்டுமூ
விடம்பாவும் வேறுதி களுமாக நாலதா
    மெல்லாக் குறிப்புமுற்று
மிசைத்தபே ரெச்சமுங் காலமிலி காலமுள
    வெதிர்மறை குறிப்புநான்கா
மடங்காத காலவினை யெச்சமறை வினையெச்ச
    மறிகுறிப் புவினையெச்ச
மன்றிமுத லானதனி வினையெச்ச மென்றுநா
    லாகும்வினை யெச்சமெல்லா
மடந்தாய் தொழிற்பெயரு முதனிலை விகாரமறை
    முன்னுசா ரியைவிகுதிமூ
வகைக்கால மாறுமு மாறுகு மென்பர்வினை
    வகைசொல்ல வல்லவர்களே.

எச்சவினை பத்தாந் தொகாநிலை ளொன்பதா
    மிறையோ டிசைந்தபொருள்கோ
ளேற்றவேற் றுமையிடைச் சொல்லின்வகை யும்மையோ
    டிவ்வாறு மெவ்வெட்டதாம்
வைச்சவமு வேழுந்தொகை நிலைவினு வேகார
    மந்நான்கு மவ்வாறதாம்
வந்ததிணை பால்வமு வமைந்தவிட மைந்தாகும்
    வருதொகைப் பொருள்சிறப்பான்
மெச்சவரு மிடநா லு காலமூன் றினிவ்வை நம்
    வினைப்பெயர்க ளாயிடைச்சொல்
விளைவிட மிரண்டிரிச் சொல்வினைச் சொல்லாய்
    விளங்குமிட மொன்றிவைபெலா
மச்சமற வேசொல்ல வாமெனா விரிக்குஞ்சொ
    லதிகார லக்கணமெலா
மறிந்துசொல் வதிலக்க ணக்கவிதை யல்லாத
    தவலக்க ணக்கவிதையே. (6)

வழுதிணை முதல்கரு வுரிப்பொரு ளிரண்டிட
    மிரண்டிட யிரண்டுகைகோ
ளிரண்டுகைக் கிளையி ரிரண்டுகளவிற்புணர்ப்
    பீரிரண் டெண்ணிரண்டொன்
றாழுறுங் களவுதொகை விரியிலறு நூற்றறுப
    தூடனேமு வரைவுதொகையா
முள்ளவிரி யெழுபதோ டைந்தகற் பிற்புணர்ப்
    போரிரண் டேழுதொகைமேல்
வாழவரு கற்புவிரி யெண்பது பெருந்திணையில்
    வந்தவிரி யீரேழுடன்
வைத்திடுங் ளவிரா றுற்றுமுப் பத்தாறும்
    வாயில்பதி னாலுமீரா
றூழிய வகப்பாட் டுறுப்புவமு வுந்தமு
    வகப்பொரு ளிலக்கணமெலா
மறிந்துசொல் வதிலக்க ணக்கவிதை யல்லாத
    தவலக்க ணக்கவிதையே. (7)

ஏய்ந்தவிரி வெட்சியினி யிருபது காந்தையினி
  லீரேழு வஞ்சிமூவே
ழிகற்காஞ்சி யிருபத் திரண்டிருப தோடொன்ப
  தெழிலுழிஞை நொச்சியொன்பான்
பாய்ந்துபொரு தும்பையிரு பத்துநா லாகுமுப்
  பத்துமூன் றும்வாகையிற்
பாடாணி லெண்ணாறு பொதுவின்முப் பத்தேழு
  பத்தொன்ப தாங்கைக்கிளைக்
கோய்ந்திடு பெருந்திணையி லாறுறு மிவ்வா
  றுளங்கொள்பன் னிருபடலமா
யுள்ளதிணை யுந்துறையு மொன்றுபட வேவிரித்
  தோதும்வெண் பாமாலையா
லாய்ந்திடு மிலக்கிய மிலக்கிய புறப்பொருளி
  னதிகார லக்கணமெலா
மறிந்துசொல் வதிலக்க ணக்கவிதை யல்லாத
  தவலக்க ணக்கவிதையே.

ஈரிரு வகைச்செய்யு ளுந்தொடர் நிலைக்கங்க
  மெழுநான்கு மெக்குணமுமா
மெவ்வகைச் செய்யுட்கு மிருநெறிகண் மற்றவைக
  ளெய்துங் குணங்கள்பத்தும்
பேரிடும் பொருளணிகண் முப்பத்து நாலும்விரி
  பெருகுறுற் றீரிரண்டு
பின்னையெழு வகைமடக் கடிநான்கி லும்மூன்று
  பேதத்தி னூற்றைந்துமேற்
சேரவடி முழுதுமொரு சொல்லுமொ ரெழுத்தாத்
  திரும்பிய மடக்குமிருபான்
சித்திரமு மானசொல் லணிமுழுதும் வழுமலைவு
  திரியவொன் பதுமாறுமென்
றுரிய மொழிந்தபடி தமிழான் மொழிந்திடு
  மலங்கார லக்கணமெலா
மறிந்துசொல் வதிலக்க ணக்கவிதை யல்லாத
  தவலக்க ணக்கவிதையே.

ஆயிரவ ரொருவரி லொருத்தன் ப்ரபந்தகவி
  யவரனே கர்க்குளொருவ
னந்தாதி மடலுலாப் பரணிகோ வைக்கமக
  னவரனே கர்க்குளொருவன்
போயிடம் பேரிலகு நாடகி புராணியவர்
  போலனே கர்க்குளொருவன்
பொருட்பெருங் காப்பியப் பெருவாக்கி மற்றவன்
  போலனே கர்க்குளொருவன்
பாயிரந் தருபஞ்ச லக்கணவ தானியப்
  படியனே கர்க்குளொருவன்
பரசமய தர்க்கநூல் பகர்வாதி பின்னையப்
  படியனே கர்க்குளொருவன்
றேயமெண் டிசைபரவு தேசிகோத் தமனத்
  திறத்தனே கர்க்குளொருவன்
தேவைத் துதித்துண் டுடுத்துக் கொடுத்திடுஞ்
  சித்தபர மஞ்ஞானியே. (10)

தலைச்சங்க நாலா யிரத்துநா னூற்றுநாற்
  பதியாண்டு தங்கியதனிச்
சங்கமுக் கட்பிரான் முருகவேள் கும்பமுனி
  தகுநீதி கிழவர்*முதலெண்
விலக்கின்றி நானூற்று நாற்பதோ டொன்பதா
  மிகுபுலவர் தொகைவேறிதன்
மேலுநா லாயிர மயிந்திர மகத்தியம்
  மேய்நூ லவர்வைத்தநூல்
கலக்கின்றி யாராயின் முதுநாரை முதுகுருகு
  களரியா விரைபின்னையுங்
கரையற்ற பரிபாட லுள்ளிட் டனேகமாக்
  காணலாஞ் சங்கம்வைத்தோ

* "தலைச்சங்கமிருந்தார் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும் குன்ற மெறிந்த முருகவேளும் முரிஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின்கிழவனுமென த்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்றுநாற்பதின்மர் என்பது" என்பது இறையனர் ளவியலுரை.

னிலக்கான வவ்வழுதி* முதல்கடுங் கோனுட
னெண்ணவெண் பத்தொன்பதா
மெழுவரின் கவியரங் கேறிமுத லாயினோ
ரிறந்துகடல் கொண்மதுரையே. (11)

இடைச்சங்க மூவா யிரத்தேழு நூறியாண்
டிதிற்பொதிய முனிவர்தொல்காப்
பியர்கருங் கோழிமோசி கௌ்பாண் டரங்கர்காப்
பியர்நவை மன்மதுரைவா
யிருக்குஞ்சொன் மாறர்கீ ரந்தையரான் பதோடைம்ப
தாசிரியர் வீருனபு
மாயிரத் தறுநூற்று நான்குபத் தொருவர்பு
லகத்தியந் தொல்காப்பியம்
மடித்தபூ தபுராண மாபுராணங்களொடு
வருமிசை நுணுக்கமிவர் நூல்
வெண்டுருகு வெண்டாளி கவியா முன்மாலை
மற்றுமுள சங்கம்வைத்தோர்
முடிக்கும்வெண் டேர்ச்செழியன் முதன்முடத் திருமாறன்
முடிவிலைம் பத்தொன்பதா
முதல்வரிவ ரிற்கவி யரங்கேறி னோரைவர்
மூதூர் கபாடபுரமே. (12)

கடைச்சங்க மாறுமுன் னூற்றைம்ப தாண்டினுட்
கவைஞான மேதாவினா
கன்பூத னன்மாற னந்துவன் குன்றூரர்
கருதுநக் கீரர்முதலா
வடைப்புண்ட நாற்பதிற் றொன்பதின்ம ரவர்கீழ்க
ளாம்புலவர் தொகையுமுன் னூற்
றைம்பதோ டொன்று†தொல் காப்பிய மகத்திய
மவர்க்குநா லவர்வைத்த நூல்

* 'காய்சினவழுதிமுதல்' என்பது இறையனார் களவியலுரையிற் கண்டது.

† நீங்கலாம்தொகை நானூறென்பது இறையனார்களவியலுரையிற் கண்டது. இவ்வேறுபாடு ஆராயத்தக்கது.

படைப்புண்ட பரிபாட லெழுபதும் பாட்டுக்கள்
பத்துமெட் டுத்தொகையுமேற்
பகர்கூத்து வரிகள்சிற் றிசைபேரி சைமுதற்
பலவென்ப சங்கம்வைத்தோ
நடற்கொண்ட முடிமாற னுக்கிரப் பெருவழுதி
யோடுமோ ரெழுமூவரிங்*
குரைத்தோ ருளுங்கவி யரங்கேறி னோர்மூவ
ரூருமுத் தரமதுரையே. (13)

† ஓசைதரு திருவால வாயிறைவ னார்பொருட் குப்பூரி கிழவ ராவர்பா, லூமையாய் வருமுருக னவனுருத் திரசரும னெக்கு மென நக்கீரர்தேர், கோசவுரை கொண்டுகீ ரங்கொற்றர் தேனூ ரர் கோதிலிள நாகர்படியங், கொற்றர்செயி னாராசி ரியர்பெருஞ் சுவனுகர் ....குவாமணலி யாசிரியா, மாசில்புளி யங்காய்ப் பெருஞ்சேந்தர் செல்லூரி னாசிரிய ரானமுண், டம்பெருஞ் சேந்தனார் முகறியாசிரியனார் நீலகண்டர்வாவினமாற, மதித்த திருகு குன்றத்தி லாசிரியா மற்றுமொரு வாக்கொருவா வழி யுரைப்ப, வந்தவப் படியிவிப் படியின்மனனி வாராநின்றதே. (14)

இலக்கணதீபம் முற்றும்.

* "அவர்களைச் சங்கமிரீஇயினார் கடல்கொள்ளப்பட்டுப்போந்திருந்த முடத் திருமாறன்முதலாக உக்கிரப்பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதின்மரென்ப" என்பது இறையனார் களவியலுரையிற்கண்டது.

† இப்பாட்டிற் சொல்லப்படும் உரைநடைவரலாறும் இறையனார் களவிய லுரைப்புத்தகத்திற்காணப்படும் உரைநடைவரலாறும் சிறிது வேறுபட்டுள்ளன.

உ

ரஸாயன நூல்.

CHEMISTRY.

"செந்தமிழ்" (தொகுதி கசு பகுதி ச-ல்) கருஉ-ஆம் பக்கத்தொடர்ச்சி.

அத்யாயம்—27.

ஈயம்.

Lead.

[Pb.]

தன்னிறை (Sp. gravity)=11·4.

உருகும்வரை—326-ம் அம்சம்.

ஈயம், சற்றுப் பசுமைநிறமுள்ள ஒரு கனத்தலோஹம். இதில் துருவேறாது. இது ஆக்ஸிஜமாகமாட்டாது, ஆதலால் அதை மலாம்பூச விசேஷமாய் உபயோகிப்பதுண்டு. இது சீக்கிரம் உருகக்கூடியதாதலால், குண்டுகளும் ரவைகளும்செய்ய இதை உபயோகிக்கிறார்கள். ஈயம், கந்தகத்துடன்கலந்தகல்பமாகச் சுரங்கங்களிலிருந்து அகப்படும். அதற்கு கலீனு, (Galena) அல்லது ஈயகந்தம் (Pb S) என்றுபெயர்.

சில ஈயகல்பங்கள்.

வழக்குப்பெயர்.	பரிபாஷை.	சேர்வைப்பொருள்கள்.
ஈயவெள்ளை.	ஈயகரிஜம்.	ஈயம்+கரியமிலம்.
ஈயமஞ்சள்.	மஞ்சள் ஈயூக்ஸிஜம்.	3 ஈயம்+4 ஆக்ஸிஜன்.
ஈயஸிந்தூரம்.	சிவப்பு ஈயாக்ஸிஜம்.	ஈயம்+ஆக்ஸிஜன்.
	ஈய அஸிதஜம்.	ஈயம்+அஸிதாமிலம்.
	ஈயக்ரோமஜம்.	ஈயம்+க்ரோமாமிலம்.

ஈயம்+ஆக்ஸிஜன்.

ஈயமும் ஆக்ஸிஜனும்கலந்த கல்பங்கள் 5 வகையாயிருக்கின்றன.

PbO_1, PbO_2, Pb_2O, Pb_2O_3, Pb_3O_4.

ஈயமஞ்சள் (Litharge=PbO) என்பது ஈயமும் ஆக்ஸிஜமும் சமமாய்க்கலந்துள்ளகல்பம். இது மஞ்சள்நிறமானது. இது முக்யமாய்க் கண்ணாடிசெய்யவும், மற்ற ஈயஉப்புக்கள்செய்யவும் உபயோகப்படும்.

ஈயஸிந்தூரம். (Minium or Red lead=Pb_3O_4) இது ஈயமஞ்சளுடன் கலந்திருப்பதுண்டு. கண்ணாடிசெய்யவும் எண்ணெயுடன் கலந்து சிவப்புச்சாயமடிக்கவும் உபயோகப்படும்.

ஈயஹைத்ராக்ஸிஜம்.

ஈயம்+ஹைத்ரம்+ஆக்ஸிஜம்.

Plumbic Hydroxide.

[PbH_2O_2.]

இது தண்ணீரிற் கரையும். சற்றுக் காரத்தன்மையுடையது. அமிலங்களுடன்கலந்து ஈயஉப்புக்களாகும்.

ஈயகரிஜம்.

Lead Carbonate.

[$PbCo_3$.]

வழக்குப்பெயர்—ஈயவெள்ளை (White lead).

இது இயற்கைப்பொருள். இதைச் செயற்கைப்பொருளாகவும் செய்வதுண்டு. இது விசேஷமாய் வெள்ளைச்சாயத்துக்கு உபயோகப்படும்.

ஈயஅஸிதஜம்.

Lead Acitate.

$Pb(C_2H_3O_2)_2$.

வழக்குப்பெயர்—ஈயச்சர்க்கரை (Sugar of lead).

இது அஸிதாமிலமும் ஈயமஞ்சளும் கலந்துண்டாவது. கொஞ்சம் தித்திப்பாயிருக்குமாதலால் ஈயச்சர்க்கரை எனப்படும். இது தண்ணீரிற் கரையும். இதை மருந்துக் குபயோகிப்பதுண்டு. சற்றுக் காரத்தன்மையுள்ளது.

ஈயநைத்ரஜம்.

Lead Nitrate.

[$Pb(NO_3)_2$.]

இதுவும் தண்ணீரிற் கரையும். ஈய அஸிதஜத்தைப்போல இதுவும் உபயோகமானஉப்பு.

ஈயகந்தஜம்.

Lead Sulphate.

[$Pb\ SO_4$.]

இது தண்ணீரிற் கரையாது. பதன (precipitate) முறையாற் பிரிக்கவேண்டும்.

ஈயகந்தம்.

Lead Sulphide.

[Pb S.]

கருப்புநிறமானது. உருவமற்றது. அமிலத்திற் சீக்கிரம் கரையக்கூடியது.

அத்யாயம்—28.

வங்கம்.

Tin.

[Sn.]

மறுபெயர்கள்—தகரம், பால்சயம் என்றும் சொல்லுவதுண்டு.

தன்மைகள். வெள்ளிபோல் ப்ரகாசமானது. அதன் தன்னிறை 7·3; 233-ம்அம்சத்தில் உருகக்கூடியது. இரும்புத்தகடுகளுக்கு மலாம் பூசித் தகரத்தகடுகள் செய்வதுண்டு. செம்பு, பித்தளைப்பாத்திரங்களுக்குக் கறுப்பேறாமல் வங்கமலாம் பூசுவதுண்டு. வெண்கலம்முதலான கலப்புக் (alloys)களில் வங்கம் சேர்ந்திருக்கும்.

வங்கம் முக்யமாய் வங்காக்ஸிஜம் (SnO_2) அல்லது வங்கக்கல் (Tin Stone) என்னும் சரங்கமாக அகப்படும்.

வங்கம்+ஆக்ஸிஜன்.

(Tin and Oxygen.)

வங்கமும் ஆக்ஸிஜனும்சேர்ந்து இருவகைக்கலப்புக்களாகும்.

(1) வங்காக்ஸிஜம். (Stannic Oxide=SnO_2.) இது ஒரு இயற்கைப்பொருள். காய்ச்சினால் மஞ்சள்நிறமாகும். ஆறினால் வெளுத்துவிடும்.

(2) வங்கஜாக்ஸிஜம். (Stannous Oxide=SnO) வங்க அஷிரஜ(Stannous Oxalate)த்தைக் காற்றில்லாவிடத்திற் சுடவைத்தால் இப்பொருள் உண்டாகும்.

வங்கம்+க்ளோரம்.

(Tin and Chlorine.)

வங்கமும் க்ளோரமும்சேர்ந்து இருவகைக் கல்பங்களாகும்.

(1) வங்கஜக்ளோரம் (Stannus Chloride=Sn Cl_2.)

(2) வங்கக்ளோரம் (Stannic Chloride=Sn Cl_4.)

வங்கமும் கந்தகமும்.

Tin Sulphide.

இருவகை:—

வங்கஜகந்தம் (Stannous Sulphide=SnS.) ஏதாவது ஒரு வங்க உப்புநீரில் ஹைத்ரோகந்தத்தைக்கலந்தால், கருப்புப் பிங்கள வர்ணமான இச்சரக்கு உண்டாகும்.

வங்ககந்தம். (Stannic Sulphide=SnS_2.) மேற்கூறியவாறே வங்ககந்தமும் செய்யலாம். இது மஞ்சள்நிறமானது. இதைக்காய்ச்சினால் இதிலுள்ள இருமடங்கு கந்தகத்தில் ஒருமடங்கு போய்ப் பாக்கி வங்கஜகந்தமாகும்.

அத்யாயம்—29.

ரஸம்.

Mercury.

[Hg.]

ரஸம் அல்லது பாதரஸம் என்பது த்ரவரூபமான ஒரே லோஹப் பொருள். வெள்ளிபோல் வெண்ணிறமானது. $-139\frac{1}{2}$ அம்சத்தில் உறைகின்றது. 357-ம் அம்சத்திற்கொதிக்கின்றது. தன்னிறை $=13\cdot6$ தாபமானி (Thermometers)கள், வாயுபாரமானி (Barometers)கள் செய்யவும் முகக்கண்ணாடிக்குப்பின் தடவவும் இது முக்யமாய் உபயோகப்படுகின்றது. ரஸத்தைத் கொதிக்கச்செய்யலாம். வடிகட்டலாம். சில லோஹங்களைப்போல, ரஸமும் ரஸகல்பங்களும் விஷச் சரக்குகள். சொல்ப அளவில் மருந்துகளில் உபயோகப்படுத்துவதுமுண்டு. ரஸம் காற்றில் நிறமாறுவதில்லை. மற்றலோஹங்களைப்போல அமிலங்களிலுள்ள ஹைத்ரஜனைப் பரிவர்த்தி(Displace)க்கமாட்டாது. இரும்பு, ப்ளாடினம்.—இவற்றைத்தவிர மற்றலோகங்களுடன் கலந்து ரஸக்கலப்புக் (amalgams)கள் ஆகின்றது.

உற்பத்தி:—ரஸம் பிறவிச்சரக்காகவும் சிலவிடங்களில் ரஸகந்தம் (Cinnabar=லிங்கம்=HgS) என்ற சிவப்பான கல்பப்பொருளாகவும் அகப்படுவதுண்டு. ரஸகந்தத்தைக் காய்ச்சினால், கந்தகம் ஆக்ஸிஜனுடன்கலந்து, கந்தத்வயாக்ஸிஜமாய்விடப் பாக்கி ரஸம்மாத்திரம் மிஞ்சிவிடும்.

ரஸகந்தம் + 2 ஆக்ஸிஜன் = ரஸம் + கந்தத்வயாக்ஸிஜம்.

$$HgS+O_2=Hg+SO_2.$$

ரஸஉப்புக்களைத் திறந்துவைத்தாற் காற்றாய்மாறிப்போம். ரஸ ஆவியும், மற்றுமுள்ள ரஸகல்பங்களும் விஷப்பொருள்கள்.

ரஸம் + ஆக்ஸிஜம்.

1. ரஸாக்ஸிஜம்.

Mercuric Oxide.

[Hg O.]

வழக்குப்பெயர்—ரஸஸிந்தூரம் என்றும் சொல்லுவதுண்டு.

இது ஒரு சிவப்புநிறமான பொருள். ரஸத்தைக்காய்ச்சிக் கொதிவரைக்குச் சற்றுக் குறைந்தஉஷ்ணத்தில் ஆக்ஸிஜனுடன் கலந்தால் ரஸாக்ஸிஜமாகும். ரஸாக்ஸிஜத்தை அதிகமாய்க்காய்ச்சினால், அது மறுபடியும் பிரிந்துவிடும்.

2. ரஸஜாக்ஸிஜம்.

Mercurous Oxide.

$[Hg_2O.]$

வழக்குப்பெயர்—ரஸச்சுண்ணம்.

இது ஒரு கபிலநிறமான பொருள். கொஞ்சம் உஷ்ணமாவது ஒளியாவதுபட்டால் ரஸாக்ஸிஜமாய் மாறிவிடும்.

ரஸம் + க்ளோரம்.

(1) ரஸஜக்ளோரம்.

Mercurous Chloride.

[Hg Cl.]

வழக்குப்பெயர்—பூரம், ரஸபூரம், ரஸபஸ்மம்.

இது வெண்ணிறமான பொடி. ரஸமும் க்ளோரமும் சமமாய்க் கலந்த கல்பம். ரஸஉப்புக்களிலிருந்து பதனமுறையால் எடுப்பதுண்டு. இவ்வாறன்றி ரஸக்ளோரத்துடன் $(HgCl_2)$ கொஞ்சம் ரஸத்தைக் கலந்து இச்சரக்குச் செய்வதுமுண்டு.

ரஸக்ளோரம் + ரஸம் = 2 ரஸஜக்ளோரம்.

$$Hg\ Cl_2+Hg=2Hg\ Cl.$$

(2) ரஸக்ளோரம்.

Mercuric Chloride.

$[Hg\ Cl_2.]$

வழக்குப்பெயர்—வீரம், சவ்வீரம், பரங்கிப்பாஷாணம்.

இது ரஸமும் க்ளோரமும் நேரே கலந்துண்டாகும். ரஸகந்தஜமும் (Mercuric Sulphate) சாதாரண உப்பும் தண்ணீரிற் கலந்தால் இப்பொருள் உண்டாகும். 265-ம் அம்சத்தில் உருகவும், 307-ம் அம்சத்திற் கொதிக்கவும் ஆரம்பிக்கும். இது வெண்ணிறமான கட்டிப்

பொருள். நாற்கோணவடிவமான ஸ்படிகங்களாக இருக்கும். இது ஒரு கொடியவிஷம். ரணவைத்தியத்தில் பிகுந்ததண்ணீரிற் கொஞ்சம் கலந்து சிறுபூச்சிகள் உண்டாகாவண்ணம் நோயாளிகளுக்குக் கொடுப்பதுண்டு.

ரஸம் + கந்தகம்.

(1) ரஸகந்தம் (Cinnabor = Mercuric Sulphide = HgS). வழக்குப்பெயர்—லிங்கம், சிவப்புநிறமானது. பிறவிச்சரக்கு.

(2) ரஸஜகந்தம் Hg_2S = Mercurous Sulphide). வழக்குப்பெயர்—ரஸபற்பம் கறுப்புநிறமானது. இது ரஸகந்தமாய் மாறிவிடுவதுண்டு.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B. A., B. L.

உ

சிவமயம்.

சைவசமயிகளுக்கு விஞ்ஞாபனம்.

சிவபிரான் திருவருளால் நிகழும் நளஞு சித்திரை-மீ 9-உ இந்நகரில் எம்மவர்களால், சிவாகமசித்தாந்தபரிபாலனசங்கம் ஸ்தாபிக்கப்பெற்று நடந்துவருகின்றது. இச்சங்கத்தின் முக்கியமானநோக்கம் புராதன சிவாகம சித்தாந்தசாஸ்திரங்களை அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டுமென்பதேயாம். சங்கத்தில் இப்பொழுது பௌஷ்கராகமமும், சித்தாந்தசாராவளியும், நித்தியகருமநெறியும் ஆராய்ச்சிசெய்யப்பட்டு வருகின்றன. அவைகள் விரைவில் அச்சிட்டு வெளியிடப்பெறும். சிவாகமங்கள் பெரும்பாலன இதுவரை அச்சுக்குவராமையால் எங்கும் பரவாதனவாய்ச் சிற்சிலஇடங்களில் உள்ளவைகளும் செல்வாய்ப்பட்டுச் சிதையுநிலைமையிலிருக்கின்றன. ஆகலின், சிவநேசச்செல்வர்கள் இம்மட்டிலேனும் தத்தமிடத்துள்ள சிவாகமங்களை இச்சங்கத்துக்கு உதவியும் இருக்குமிடங்களை லிகிதமூலமாய்த்தெரிவித்தும் சிவபுண்ணியங்களுக்குரியவர்களாகும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்,
தி. அ. சு. அ. ராமநாதன்செட்டியார்,
சிவாகமசித்தாந்தபரிபாலனசங்கம்,
தேவகோட்டை.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கச.] நளஞு வைகாசிமீ [பகுதி-எ.
Vol. XIV. May—June, 1916. No. 7.

மானிடர்கடமை.*

கனமார்ந்த அக்கிராஸனாதிபதிகளே!

இடம்புரிச்சங்குசூழ் வலம்புரிச்சங்கென யாண்டும்விளங்காநின்ற பண்டிதசிகாமணிகளே! சபையோர்களே! ஏதேனுமொருவிஷயத்தைக் குறித்துப்பேசுவான்வேண்டி, சங்கப்பலகையிலேறிய சங்கத்தமிழ்நூல்களை ஐயந்திரிபறக்கற்றுணர்ந்த நும்முன் பலவற்றைக் கசடறக்கற்று அங்ஙனம்கற்றபின் அதற்குத்தகநின்று தனித்தியங்கும்தன்மைவாய்ந்த பெரும்புலவனாகவிளங்குதல் அவசியமாக; இப்போது மானிடர்கடமை என்றதைக்குறித்த வியாசமொன்றுபடிக்கத் தமிழறிவு கடுகளவுமில்லாத யான் முன்வந்தது எதுபற்றியோவெனின், பிறதேயம்புகுவோர்க்குக் குழந்தையும் வழிவிடுமாறுபோலவும், சங்கீதவித்வானகத்தில், தவழும் குழந்தையும் கைக்குவந்தவாறு தாளம்போட்டுப் பயிற்சிசெய்வது போலவும், அமிழ்தினுமினியதமிழ்மொழியினை ஆர்வமிக்கு உடனடைந்துபோற்றும் நும்போன்ற வித்வக்குழாங்களில் யானடிக்கடி பயிலும் ஒரு சேர்க்கைமனத்தாலென்க.

மானிடர்கடமையென்பதியாது? அவர்க் கப்பெயர்வாய்ப்பதென்னை? எதுதொட்டு அவர் இங்ஙனம்வந்தனர்? உண்டு உடுத்துப் பூசி முடித்துத் துய்ப்பதற்கோ மற்று, "மற்று நாதவிந்துவுங்கடந்து,கானலை வரையுஞ் சுட்டுக் கடுவெளிப் பரமானந்தத், தானெனு மவையிரண்டுந் தவிர்ந்துதன் வசமுங் கெட்டு, மோனமுங் கடந்தே யப்பான் முடிந்த"

* இது, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினேழாம் வருஷோத்ஸவத்தில் பாலக்காட்டு மகா-ா-ா-ஸ்ரீ ராவ்பகதூர் பி. ஐ. சின்னச்சாமிபிள்ளையவர்கள் அக்கிராஸனத்தின்கீழ் நடைபெற்றஸபையில், திருவாவடுதுறையாதீன ஒடுக்கம் ஸ்ரீலஸ்ரீ நமசிவாயத்தம்பிரான் சுவாமிகளாற், படிக்கப்பட்டது.

*

ஞானியாகவோ? இவற்று ளம்மானிடர்க்குவேண்டுவதென்னை? என்ற இன்னோரன்னவிஷயங்களைப் பல புலவர்பெருமான்களின் வாக்குப் பிரமாணங்கட்கிணங்கச் சிறிது ஆலோசித்தல் தகுதியாம்.

புன்புலால்கொண்ட பற்பல்பிறப்புக்களில் மானிடப்பிறப்பே உயரியது என்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்த உண்மையென்க. என்னை?

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்"என்றும்

'எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினு மரிதரிதுகாண்' என்றும் கூறினர் ஆகலின். ஏனைமிருகங்கட்கும் பறவைகட்கும் நீர்வாழ்வனவற்றிற்கும் மனிதனுக்கும் பேதமென்னையெனின் முக்கியமாகக் காணக்கிடப்பது இவர்க்குப் பகுத்தறிவென்னும் அரும்பெரும் திருவருட்செல்வம்வாய்ந்ததொன்றேயென்க. அத்தகையான பகுத்தறிவுகொண்ட அன்னோர்தமக்குப் பெறும்உறுதியென உயர்ந்தோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள்கள் நான்கென்ப. அவையே அறம் பொருள் இன்பம் வீடெனமொழியப்படுவன. இவையிற்றை வடமொழிவாணர் தருமம், அருத்தம், காமம், மோக்ஷமெனக்கூறிடுவர். இந்நால்வகைப்பொருள்தம்முள், பெருமைசெறிந்த பரிமேலழகர் கூறியாங்கே வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லாநிலைமைத்தாதலின் துறவறமாகிய காரணவகையாற்கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாதது. அவற்றுள் அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தனசெய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அவ்வறம் ஆசாரம், வியவகாரம் பிராயச்சித்தம் என வடமொழிவல்லுநர் வழக்கில்வந்தமுறையே, ஒழுக்கம் வழக்கு தண்டம் என முத்திறத்தது. நால்வகைவருணத்தாரும் தத்தமக்கென ஏற்படுத்தப்பட்ட ஆச்சிரமங்களினின்றும் வழுவாதிருத்தல் ஒழுக்கமென்றும், ஒருபொருளைநோக்கித் தனதென்னும் அகப்பற்றுமுறையான்வரும் மணவேறுபாட்டிற்கு வழக்கென்றும், வழக்கொழுக்கநெறியினின்றும் வழுவினோரைத் தக்கநெறியில் நிறுத்துவான்வேண்டித் தகவொறுத்தலைத் தண்டமெனவும் யாம் தினந்தோறும் பட்டாங்காகக்கோருகின்றோம். இனிப் பொருளாவது இம்மை மறுமையிரண்டையும் தருவதற்கேற்ற அச்சாணியாகிய பொருஞ்செல்வம்.

அச்செல்வத்தினனேநிகழ்வது உலகவின்பமும், பாரமார்த்திகவின்பமும். செல்வமில்லையெனின் ஒருவன் இவ்வுலகின்கண் ஏதொன்றும் செய்யஇயலாது காரமுண்டகுரங்குபோலும் பலபலநினைக்கலுற்று

"கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா, இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான் கொடுத்துத்தான் இரட்சித்தானா, அல்லைத்தான் சொல்லித்தான் யாரைத்தா னோவத்தானையோவெங்கும், பல்லைத்தான் திறக்கத் தான் பதுமத்தான் புவியிற்றான் பண்ணினனே".

என வறுமைதோன்றப்பாடி வருந்துதற்கு இடந்தருகின்றது. திருவள்ளுவரும் இதுநோக்கியே,

"அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க்
கிவ்வுலக மில்லா கியாங்கு"

எனப் புகன்றிட்டனர். சுருங்கச்சொல்லி விளங்கவைக்குமிடத்து தேவேந்திரபதவிக்கும் தனது ஆற்றலாற் கொண்டுசேர்க்கும் செல்வம்; கடல்பரந்தஉலகிடை அநுபவித்தற்கு இன்றியமையாதது செல்வம்; தனது அறிவுமுதிர்ச்சியானே, வினையினீங்கிய வறிவன்றிருவடிகட்கும் கரைதூக்கும் செல்வம்; உண்டுற்பவித்தாரெவர்க்கும் கலனிட்டசோற்றிற்கு உற்றதுணையாய கறியும் குழம்பும்போலும், விண்ணிடைத்துலங்கும் கதிரோன்போலும் இன்றியமையாததெனப்புகல்வது பெற்றும். இனி இச்செல்வத்துடனேயே தோன்றியழிவது இன்பமுமாதலின் அது குறித்து நிரம்பக்கூற நியதியில்லை. ஆகவே அந்தத்தில்வைக்கப் பெற்ற வீட்டைக்குறித்து இனித் தொடர்புபடுத்தலே முறையென்க.

வீடென்பது,

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு".

என மூதாவைப்பிராட்டி அருமருந்தாகச் செவ்வனேவிளக்கிச் செறித்ததற்கிணங்க உலகப்பற்றை அறவேஒழித்து தன்னந்தனியாம் புலனடக்கியமுறையே ஆண்மையினலாய் ஈஸ்வரனை (பூங்கமலத்தயனொடு மாலறியானை) முறையே வழிபட்டுச்சேரும்இடமே வீடாம். இஃதே

துறவறம். இதனைப் பரிமேலழகர், புறமாகிய செல்வத்தின்கண்ணும் அகமாகிய யாக்கையின்கண்ணும் உளதாய பற்றினை அவற்றது நிலையாமைநோக்கிவிடுதல் என வரைந்துள்ளார். இதுதழுவியே,

> "அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
> வேண்டிய வெல்லா மொருங்கு"

என்ற திருவள்ளுவர்வாய்மொழி வலியுறுத்துநின்றது. வீடெய்தமுயல்கிற்பார், தம் ஐம்பொறிகளை நசுக்குதல்வேண்டும். அங்ஙனம் பயிற்சி செய்தாரே தம்பாலுற்றபொருள்களைக் கனிந்துநுகராது நீக்குதல் வேண்டும். இன்புநுகர்ச்சியின்கண் ஈடுபடுவார் அளவாதுநுகர்ச்சி யிறகு பெற்றதழல்போல் முறுகப்பெறுவரல்லது அடக்கவன்மையற்று வாய் பிளந்து கொட்டாவிவிட்டு மனம்வெதும்புவர். ஆதலின், துறவிகள் ஐம்பொறிகளை ஐம்மாயப்பரிகாசங்களென மதிக்க. தம்மைக்கொல்லவந்த மந்திரவாளெனப்பழிக்க. "முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்" எனும் பொருமொழியை வெறுமொழியாக்காது தாங்கொண்ட அருங்காரியத்தைத் திறமுடன்முடிப்பாரேயாயின் அவர்க்கன்றோ அந்தமில்வீடும் அந்தமில்பெருவாழ்வும். அத்துறவிகளே உருவுடம்பும் அருவுடம்பும் நீக்கவல்லுநராவர். அங்ஙனம் முற்றத்துறந்து முழுத்தவமெய்தாதார், சைவசித்தாந்தம் பதினான்கனுள் ஒன்றாய நெஞ்சுவிடுதூதில், சந்தானகுரவர்சாதித்தவாறு,

> "..................................தப்பாமற்
> பாவமெனும் பௌவப் பரப்பழுந்திப்—பூவையர்தங்
> கண்வலையிற் பட்டுக் கலவிக் கலையின்றங்
> குண்மை நிலையுணர்ச்சி யோராமல்—திண்மையினால்
> நாவிற் கொடுமை பலபிதற்றி நாடோறும்
> சாவிற் பிறப்பிற் றலைப்பட்டிங்—காவிநிலை
> நிற்கும் வகையாராய்"

எனத் தீவாய்நரகிடையிழுக்கப்பெற்று, மீண்டும் பிறவிகள்தோறும் இளைப்புறுவர் என்பது கரதலாமலகம்போன்று சால அறியக்கிடப்பதாம். ஆதலின், துறவிகள் பற்றுகபற்றற்றான்பற்றினை. அஃது தெற்றுக்கெனின் எல்லாப்பொருள்களையும் பற்றிநின்ற பற்றற்றமுழுமுதலறிவன் ஓதியவீட்டுநெறியை இஃதே நன்னெறியென்றுபற்ற மனத்துட்கொள்ளலாம் என்பதாம். இஃதே யாவர்பாலும் இருக்கப்பெற்ற

கடமையென்க. முன்ஜென்மங்களிலவர் எத்தனைபாபம் செய்திருப்பினும் தீபம்புக்கவிடத்து இருளழிதல்போல அவர் தவத்தின்முன் பாபம் நில்லாது. அல்லவை தேய அறம்பெருகும். ஆகவே இத்தகைய சத்தியம் அவரால் கடைப்பிடிக்கவேண்டும். சத்தியமின்றிச் சன்மார்க்கமில்லையன்றோ! சத்தியமென்பது என்றுமழியாதது; மாறாதது; எல்லையற்றது; இரண்டற்றது; எப்பொழுதும் நிலைபெற்ற இன்னோரன்ன அரிய இலக்கணங்கள்பொருந்தியதே சத்தியமென்ப. அஃதாவது உண்மையெனல் சத்தியமாம். சத்தியமாவது ஓம்தத்ஸத் எனும் வேதவாக்கியத்தில் அமைந்துள்ளது. ஓம்-அது உள்ளது எனவே அதுவாவதென்னை? இதனையுர்தலே சத்தியமென்க. இதைக்குறித்து ஏகம் சத்தியம்பிரம்ம என்று சுருதிவாக்கியம் மொழியும். கிறிஸ்தவமதகுருவினராய ஏசுநாதர் God is the spirit of Truth என நவின்றனர். மௌனதேசிகர்பால் தீக்ஷையுற்ற தாயுமானவரும்"

> "அதுவென்று மிதுவெனவொன் றுடுக்குஞ் சங்கை
> யாதலினா லதுவெனவு மறவேவிட்டு
> மதுவுண்ட வண்டெனவும் சனகனாதி
> மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தாரென்றும்
> பதியிந்த நிலையெனவு மெனையாண்ட
> படிக்குநிரு விகற்பத்தாற் பரமானந்த
> கதிகண்டு கொள்ளவுநின் னருள்கூர் இந்தக்
> கதியின்றி யுறங்கேன்மேற் கருமம்பாரேன்"

என்றுள்ளமுருக உடல்கனியப்பாடியுள்ளதைச் சற்றுநிதானிக்குமிடத்துச் சங்கையற அதனையறிவது கடினமாதலின், மனத்தின்சுத்தியும் காருண்யமும் அன்புமநிறைந்தசீவனுக்கே அதனையுணர்வது இலகுவென்க. ஓருருவம் உண்டெனினும் இல்லையெனினும்சரி விலக்கினின்றும்வழுவாது தூயநெறிபற்றுவார் அவ்வரைச்சார்வர். அத்தனருள் வேண்டில் அகம் தூய்மைவேண்டும். வாய்மையாலகம் தூய்மையாம்.

> "செல்லு மளவும் செலுத்துமின் சிந்தையை
> வல்ல பரிசா லுரைமின்கள் வாய்மையை
> யில்லை யெனினும் பெரிதுள னெம்மிறை
> நல்ல வரனெறி நாடுமி னீரே"

“ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமி னமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்ம்மினே”—திருமந்திரம்.

கிருஸ்துவும் Love is the fulfilment of all laws அன்பிலமைந்துறைய எவ்வகைத் தர்மங்களும் நிறைவுறும் அன்பேயவனெனப்படுமேல். “அன்பின்வழியேசத்தியம்”. அன்றி அன்பு பரிபூர்ணதசையடைந்தது சத்தியம். இச்சத்தியத்தைக் கடைப்பிடிக்க முயல்வான் நிலையற்றபொருள்களின்மீதுள்ளபற்றை அறவேவிலக்கி அவனிடை மனம்வாக்குக்காயங்களைச்செலுத்தி ஞானநூல்களைக்கற்றுப் பாவத்தையொரீஇப் புண்ணியத்தைநிறீஇக் கருவிகரணங்களாலமைந்தஒரு ஆயுதமாகியதேகத்தை உதறுதல் நேர் எனக்கொள்க.

“அன்பும்சிவமுமிரண்டென்ப
அன்பேசிவமென்பதறிந்திலார்
அன்பேசிவமென்பதறிந்தபின்
அன்புஞ்சிவமுமடைகுவர்”

என்ற திருமூலர்திருவாய்மொழியை உய்த்துணர்தலே துறவறம்பூண்டாரது மிகவும் இன்றியமையாத கடமையென்ப. அதனான் இல்லறவாழ்க்கையர் அந்தப்பிரமாணத்தைப்பற்றுதல் வேண்டாவோவெனின் அவர்க்கு மது ஆவ்யதமாகும்.

இனி இல்லறமென்பது இம்மை மறுமையாகிய இருமையின்பங்களையும் அனுபவித்தற்குரிய இல்வாழ்க்கைநிலைக்குச்செல்லுகின்ற நெறியில்நின்று அதற்குத்துணையாகிய கற்புடைமனைவியோடுஞ் செய்யப்படும்தருமம்.

“இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை”

இல்லறத்தில் வாழ்வதாகக் கூறப்படுபவன், நல்லாசிரியனிடத்திருந்து அறநூல்களைக்கற்றுத்தெளிதலும், அரும்விரதமாயபிரமசரியவொழுக்கத்தானும், இல்லைவிட்டுவனத்தின்கண்சென்று மனையாள்வழிபடத்தவஞ்செய்யும் ஒழுக்கத்தானும், முற்றத்துறந்தயோகவொழுக்கத்தானும், எனக் கூறப்படும் அறிவியல்புவாய்ந்தமூவர்க்கும் தான்செல்லும் நன்னெறிக்கண் நிலையாயினவற்றைச் செய்தலும்வேண்டும்.

இஃதே இல்வாழ்வான்பால் இருக்குங்கடமையாம். விருப்பும் வெறுப்பும் இலனாகித் தன்வயத்தனாதல்முதலிய நற்குணங்கள்வயத்தனாய முழுமுதற்பிழம்பாகிய கடவுளை அடைவான்வேண்டி மனிததேகம் பூண்ட எவரும் கல்லாமையால் உளதாகும் இழிவை உணர்தல்வேண்டும்.

“கல்லாதா னூருங் கலிமாப் பரிப்பின்று
வல்லாதான் சொல்லும் முறையின் பயனின்று
வில்லாதா னல்ல விழைவின்று வின்று
கல்லாதான் கோட்டி கொளல்”

என்னும் சங்கமருவியசெய்யுள்மறக்கற்பாலதேயோ.

“உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா ரவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவ னவன்கட் படுமே”

“எண்ணென்ப வேனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு”

“கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்”

“உடையார்முன் னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்”

“கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை”

என்பவற்றால், கல்வியின்பெருமை குன்றின்கண்ணிட்டதீபம்போலும் பிரகாசியாநின்றது. அத்தனைக்கல்வியை யோர்தற்குக்

கற்றுங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப்
பற்றுவதே பற்றிப் பணியறநின் றொன்றுணர்ந்து
நிற்பார் நீணெறிச் சென்றார்

"மறவுரையுங் காமத் துரையு மயங்கப்
பிறவுரையு மல்கிய ஞானத்—தறவுரை
கேட்குந் திருவுடை யாரே பிறவியை
மீட்குந் திருவுடை யார்"

என்கையாலே பல பெரும்பொருள்களைக் கேட்டல்வேண்டும். செல்வமுடைக்கும்படையாய தன்னைவியந்துதருக்கல், தாழ்வின்றிக் கொன்னேவெகுளிபெருக்கல் முன்னிய பல்பொருள்வெஃகுஞ்சிறுமை யென்ற முக்குற்றத்தினையும் புறத்தேநீக்கி, நெஞ்சத்து யாம்நல்லம் என்னும் நடுவுநிலைமையாற்கொண்ட கல்வியழகைமேற்கொண்டு, அறிவினன்மாட்சியொன்றில்லாவொருவன் பிறிதினன்மாண்டதில்லையாகலின் அறிவுடையனாதல்வேண்டும். இன்சொல்லைவிளைநிலமாக ஈதலை வித்தாக வன்சொற்களைகட்டு வாய்மையெருவட்டி அன்புநீர்பாய்ச்சி அறக்கதிரீனவோர் பைங்கூழ்சிறுகாலைச்செய்து,

மொய்சிதைக்கு மொற்றுமை யின்மை யொருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலு மேனியைப்—பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்கும்
கூடார்கட் கூடி விடின்

ஆகலான், சிற்றினஞ்சேராது பெரியாரைத்துணைக்கொண்டு,

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும்
தவமிலா ரில்வழி யில்லை தவமும்
அரசிலா ரில்வழி யில்லை யரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில்

என்றபாடலால் இவ்வுலகும் அதனிடைநிறுவியகோனும் குடியும் நால்வகைப் பெரும்பேற்றையடைவான் செய்யத்தக்க கருமங்கட்கு கண்ணுள் ஒளிபோன்ற மழையின்வளங்குன்றுவாறு ஸத்காரியங்களையியற்றி, நாற்பொருட்பயனுணர்ந்து பஞ்சேந்திரியநிக்கிரகம்செய்தார் தம் குழுவிடைப் பயபக்தியும் கற்றுத்தெளிந்தார்தம் அவையின்கண்

விசுவாசமும் நெறிவழாத அந்தணர்குழாத்தில் அமைதியும் அரசன், உபாத்தியாயன், தந்தை, தாய் இன்னோரன்னபெரியாரிடம் மரியாதையும் வாய்ந்து விளங்குதல் ஒவ்வொருவருடைய பெருங்கடமையாம் என்க. இதுவரை கூறியவற்றை அவன் தன்இளமையிலே அநுமானத்தாற் காண்கின்றானாதலின், உரம்பெற்ற காளைப்பருவம்வாய்த்தபின்னர் அவனிருக்குமுறையை யொருவாறுகூறுதும்.

எளிதென விகழா தரிதென வரையாது
நுமக்குநீர் நல்குதி ராயின் மனத்திடை
நினைப்பினும் பிறக்கு மொழியினும் வளரும்
தொழிற்படிற் சினைவிடூஉப் பயக்கும் உணர்த்தின்
இவனும் உம்பரும் துணையே யதனாற்
றுறைதொறுந் துறைதொறு நோக்கி
அறமே நிறுத்துமி னறிந்திசி னோரே.

என்பவாகலின் இகபரமிரண்டிற்கும் செல்வத்தையும் போகத்தையும் அதன்பின் வீட்டையும் ஈனுதலான் அறத்தை என்றும் திரிகரணந் தம்மாலும் திருந்திச்செய்தற்பொருட்டு வரவிற்குத்தகுந்த செலவுசெய்பவளாய்த் தன்நாயகனைப் பகைவர்முன்வெறுக்காதுபணியும் ஒழுக்கத்தினளாய்க் கற்புவாய்ந்தாளொருத்தியுடன் இல்வாழ்க்கையென்னும் அரும்பெரும் சகடத்தை யாற்றுதல்வேண்டும். என்னை?

"மருவிய கற்பின் மனையாளுந் தானும்
இருவராய்க் கொண்டுய்ப்பி னல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றித்து நின்று"

என்பவாகலின். அன்னணம் அறம்செய்யும் பல்பெருங்காரியத்துள்ளும் அன்னதானமே தலைசிறந்ததென அறிஞர் அவாவி நிறுவியஉண்மையெனக்கொள்க. யார்மாட்டும் நில்லாது சகடக்கால்போலவரும் செல்வத்தினைப் பின்னுவதென்றுபிடித்திராது கற்றோர்க்கும் ஏழை எளியர் கூன் குருடுவாய்ந்தவர்க்கும் இடனறிந்துதவிப்பல்லாரோடுண்டு தன்னைச்சேர்ந்தார்க்கின்சொல்லானும் நன்பொருளானும்நயப்பித்துத் தகைசான்ற நன்மக்களைப்பெறுதலினும் தனித்தோரின்பம் இல்வாழ்க்கையுள் வேறெவ்விதத்தால்வாய்க்கும். புத் எனும் நரகத்தினின்றும் பெற்

றோரைக்கரையேற்றுதற்குப் புத்திரரே ஏற்றவராகலின் அத்தகையோரைத் தக்கவாறு கல்வியிற்பயிற்சிசெய்யாதாரினும் பெரும் மடமை வாய்ந்தா ரிவ்வுலகிடை எவர்கொல்? அந்தோ; அவரது அஞ்ஞானம் நிறையிருளினும் கொடியதென்க. ஆங்கிலம்போன்ற இராஜபாஷைகளைக்கற்றுத் தெளிதலின்னுக்கம் இருவிகற்பத்தாயது. மேனாட்டுப் பெரும்புலவர் தத்தம் அறிவுமுதிர்ச்சியான்வெளியிடும் அருமருந்தன்ன கழிபெருநோக்கங்களை நந்தம்புலவர்பெருமான்றன் குசாக்கிரமதி நுட்பத்துடன் ஒத்துநோக்குதற்கும் நடுவுநிலையில் நம்மெல்லோரையும் தனிப்பெருங்குடைக்கீழ்க்காக்கும் ஆங்கில கவர்மெண்டாரின் பரஸ்பர வியவகாரங்களை நுனித்தற்கு இயங்குதற்பொருட்டும் யாம் ஆங்கிலங் கற்கின்றாமேயன்றி நமது நடையுடைபாவனைகளையும் மதசித்தாந்தங்களையும் கழற்றியெறிவதற்கன்று. நன்மக்களே! நீர் ஆங்கிலங்கற்பதெல்லாம் நம் அருமை இந்தியாவின்பொருட்டேயென்று மனத்துட்பதிக்க. நும்மால் எம்மட்டுதவி நந்தாய்நாட்டிற் குதவவியலுமோ அதனை விருப்புடன்செய்க. மதுவையுண்டுகளிக்கும் தேனீயைப்போன்று ஆங்கில கவர்மெண்டாரின் தலைவனாயமன்னனுக்கு என்றுமிடையறாத அரசபக்தியுடன் விளங்குதல் நமது உடன்பிறந்தகடமையாமென்க.

> "அரசபத் தியிற்றிளைத்தோ னறிஞரு மவனை ஞாலம்
> பரசிடு முவணையேற்கும் பலகளுர்கள் நடுங்காநிற்பர்
> சிரமுடன் ஏற்றமென்னத் திகழுவன் ஞாயிறேபோல்
> கரவகல் வேந்தனுள்ளங் கலந்தினி திவர்வன்மாதோ"

என்பது மறக்கற்பாலதேயோ. அரசனே மஹாபுருஷன், மஹாதீரன், தோன்றல், மஹாமேரு, மஹாதியாகி. கடவுளதுபிரதிநிதியெனநியமிக்கப்பட்டமையின், அவனைப் பகைக்கலாகாதென வெள்ளிடைவிலங்கலாக்கும்.

இனித் தேசாபிமானம் மதாபிமானத்லைதக்குறித்துச் சிறிதுசொல்லி இவ்வியாசத்தை முடிப்பாம். எந்தத்தேசத்தார்தம் கல்விமுறையில் மதப்பயிற்சியில்லையோ அத்தேசத்தாருக்குள்ளே சிரேஷ்டமென்று அறியத்தக்கநூல்கள் இல்லையெனச்சாதிக்க இடம்தரும். தரையிற் புதைந்து மண்ணொடுமண்ணாய்க்கலந்துகிடக்கும் ஒருரத்தினம்போன்ற நமதுஹிந்துமதத்தினின்றே வேதங்களும் உபநிஷத்துக்களும் பிறந்தன.

புராணங்கள் அவைகளின்வன்மையால் எழுதப்பெற்றன. இராமாயணம் மாபாரதம் என்ற பெருங்காவியங்கள் அழியாச்சிறப்புடனமைந்திருப்பது ஹிந்துமதத்தின் மணங்கொண்டென்க. இனி அறுவகைமதவேறுபாடுகளும் யோகசாஸ்திரங்களும் வைத்தியநூல்களும் இலக்கணம் வானசாஸ்திரம் முதலியனவும் உற்பவங்கொண்டன. நம்மருமை ஹிந்துமதத்தினின்றேயாம். தற்போது மேனாட்டாருள் தலைசிறந்தாரெனக்கூறும் பிரிவினரும் நம்நூல்களில் மிகவும் ஆழ்ந்த அருமருந்தன்னகருத்துக்களையும் நடைப்போக்கின் சிறப்பியல்புகளையும் கண்டுவெருண் டதிசயித்து நங்கிரந்தங்களையும் பொன்னேபோற்போற்றி நாளும் கற்றுவருகின்றனர். இத்தகையகிரந்தங்கள் இந்தியா எனுமழகிய தோட்டத்தில் முளைத்துவளர்ந்த மதவிருக்ஷத்தின்கண் அரும்பிப்பூத்த நறுமணப்பூக்களேயன்றி வேறன்று. பின்னர் மதாபிமானம் மறைந்துநிற்றலும் பாஷாதத்துவஞானிகள் தலைக்கிளம்பி வியாக்கியானங்களையும் எண்ணிய இலக்கணமுறைகளையும் வகுத்தனர். அங்ஙனம்வகுத்த பலபாஷைகளுள்ளும் மால்வரைபுரையும்மாடக்கூடல் ஆலவாயிற்பால்புரைபசுங்கதிர்க் குழவித்திங்களைக் குறுங்கண்ணியாக்கொள் அழலவிர்சோதி அருமறைக்கடவுளின் ஆணையில் தனித்தியங்கியதமிழே உயரியது. அதனுள்காணுறும் நீதிநூல்களைப்போலும் இவ்வுலகிலும் எப்பாஷையிலும் இல்லையென மொழியலாம். நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணை முப்பால் கடுகம் கோவை பழமொழி மாமூலம் ஏலாதியுடன் ஐம்பெருங்காப்பியங்களாகிய சிலப்பதிகாரம் சிந்தாமணி மணிமேகலை வளையாபதி குண்டலகேசிபோன்றநூல்களும் சங்கம்நிறுவிய நூல்களுள் பெரிதும்போற்றத்தக்க அகநானூறு புறநானூறு பத்துப்பாட்டு நற்றிணை குறுந்தொகைகளும் தொல்காப்பியம் பேரகத்தியம் சிற்றகத்தியம் நன்னூல் தொன்னூல் இலக்கணக்கொத்து முதலிய இலக்கணங்களும் அவைகளுள்ளும் வரம்பிலறிவனேதன்மைப்படவரைந்த இறையனாரகப்பொருளும் மூவர்தேவாரம் மணிவாசகர்தம் திருக்கோவையார் திருவாசகமும் அகத்தியர் வைத்தியநூல்களும் பதி

ணென்வகைப்புராணங்களும் நிகண்டுபோன்றதொகுதிகளும் எம்மதத்தில் எப்பாஷையில் உண்டு என்பதை எவரேனும் கைவிரல்விட்டு எண்ணக்கூடுமேயோ. அங்ஙனமிருக்குங்காலத்து அத்தகைய நூல்களைச் சிறிதேனும் கல்லாது தன் மாதா வயிறெறிய மகேசுவரபூஜைசெய்வான்போல பிறபாஷைகளிலேயே மனம்வெதும்பிவாழ்தல் எத்தகை இழிவுபடத்தக்கதென்பது சொல்லாமலே அறியக்கிடப்பதன்றோ. ஆதலின் நன்மக்களே மதாபிமானமுற்று இனிதுவிளங்குக. பாஷாபிமானத்தை நும் மனத்தினின்றும் நீக்காதுகற்க. தமிழ் அகத்தியன்பயந்த செஞ்சொல் ஆரணங்கைநீர் என்றும்போற்றுக. இந்நிலக்களத்தில் இசைவாய்ந்த பண்டிதர்களிடம் ஞானநூல்களைக்கற்க.

"பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் டுறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோ ரவைக்கள மகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறன்மனை யஞ்சுமின் பிழையுயி ரோம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளுங் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழுகுமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
வுளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென."

கடவுள் துணை.

வறுமையிற்செம்மை.

இது, 'தரித்திரகாலத்திலும் ஒழுக்கமும் நாணமுங்கெடாதிருத்தல்' எனப் பொருள்பெறும். இதனைவிளக்குவான் இத்தலையங்கத்தின் கருத்திற்குப்பொருந்த நடத்திக்காட்டியவரும், நமது பண்டைப்புலவர் பெருந்தகையாளர்களுள் ஒருவருமாகிய பெருஞ்சித்திரனார் என்பவருடைய செய்கைகளை ஈண்டு எனக்கு எட்டியவளவு தொகுத்துக்கூறுகிறேன்.

நிற்க, இவருடைய செய்கைகளைப்பற்றிக்கூறுமுன் இவர் இன்னார் என்பதைப்பற்றிக்கூறுதல் பொருத்தமானதே. இப்புலவர்பெருமானே நமது சங்கமருவிய செந்தமிழ்நூல்களுள் ஒன்றாகியதும் எட்டுத்தொகையினுள் எட்டாவதாயதுமான புறநானூற்றிற்கண்ட புலவர் பெருந்தகையார் பலருள் ஒருவர். இவர், பிறிதொருவருடையபுகழும் இடையே புகுதாவண்ணம் வேண்டியார்வேண்டியாங்கீத்ததால் எங்குந் தன்புகழையேபரப்பிய கொடைவள்ளலும் முதிரமலைக்குத் தலைவனுமான குமணனைப்பாடிப் பரிசில்பெற்றவர். அன்றியும், இறந்த வெளிமான் என்னும் வள்ளலைப்பற்றிப்பாடிய கையறுநிலைச்செய்யுளால் இவர் அவனாலும் ஆதரிக்கப்பெற்றுள்ளார் என்று ஊகிக்கப்படுகிறார்.

இவரதுபெயரை நோக்குமிடத்து சித்திரக்காரன் தான் எடுத்துக்கொண்டபொருளைப்பற்றிய முழுவிவரமும் அதனைக்காண்பார்க்கு எளிதிற்புலனாம்வண்ணம் எவ்விதம் ஒன்றனைச் சித்தரிக்கின்றானோ, அவ்விதமே இப்புலவர்பெருமானுந் தாங்கொண்டகருத்துமுழுமையுங் கற்போர்க்குங் கேட்போர்க்கும் எளிதிற்புலனாம்வண்ணந் தம்பாட்டுக்களைச் சீரியநடையிற் சித்திரிக்கின்றாராதலின் இவர் பெருஞ்சித்திரனார் என அக்காலத்தவராலே புனைந்தழைக்கப்பெற்றனர்போலும் எனஎண்ண இடமுண்டாகின்றது. இஃது தெம்மட்டிற்பொருந்துமோ?

இனி ஈண்டுக்கூறப்பெறவேண்டுவது இப்பெருந்தகையாளருடைய செய்கைகளேயாயினும் நமது தலையங்கத்திற்குப்பொருந்த முதற்கண் இவரது வறுமைக்கொடுமையைப்பற்றிக்கூறுதல் அவசியமானது.

இவர் மிக்கவறுமையுற்றவர். இவர் குமணனைப்பார்த்துக் கூறு கையிற் றமது மிடித்துன்பத்தை அவனுக்குத்தெரிவிக்கஎண்ணித் தம் மனைவியின் நிலைமையைக்கூறுபவர்போல் குமண! எனதுமனைவி வறுமையினாலே தனக்குள்ள இயற்கைநிறம்மாறி வேறுபட்டமேனியை யுடையள்; அவள் தனக்குற்ற வறுமைத்துன்பத்தை நினைக்குந்தோறும் அந்நினைவு தன்னைவருத்த வருந்திக்கொண்டிருப்பவள். தன்பிள்ளைகள் பாலற்ற தன்னுடையமுலைகளைச் சுவைத்தல்கண்டு வருந்துபவள். உணவிற்குத்தக்க அரிசிமுதலாய வேறொன்றும் இல்லாததனாலே குப்பையிலேமுளைத்ததும் அடிக்கடி கொய்யப்படுவதனால் முதிராததுமான இளையதளிரைப்பறித்துக்கொணர்ந்து உப்பின்றித் தண்ணீரிலிட்டுக் காய்ச்சி அதனைஉண்பவள். அழுக்கோடுகூடிய உடையினையுடையவள்' என்ற பொருளமைந்த,—

... ...
பசந்த மேனியொடு படரட வருந்தி
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின வாடிய முலையள் பெரிதழிந்து
குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த
முற்றா விளந்தளிர் கொய்துகொண் டுப்பின்று
நீருலை யாக வேற்றி மோரின்
றவிழ்ப்பத மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த வுடுக்கைய ளறம்பழியாத்
துவ்வா ளாகிய வென்வெய் யோள்;—
... ...

என்ற புறநானூற்றின் கருகூ-வது செய்யுளின் அடிகளால் இவர் தமது வறுமையைக் குறிப்பிடுகின்றார்.

அன்றியும், 'பால்பெறாத தனதுசிறுவன் கூழையுஞ்சோற்றையும் விரும்பி விரைவாகச்சென்று உள்ளே ஒன்றுமில்லாது வரிசைவரிசையாக அடுக்கிவைத்திருக்கும் வெற்றுச்சட்டிகளைத் திறந்து திறந்து பார்த்து ஆங்கு உணவிற்கான வொன்றனையுங்காணாது அழுகின்றவனைக் கண்ட எனதுமனைவி புலிவருகிறது என்றுசொல்லிப் பயமுறுத்தியும், அம்புலியைக்காட்டி மகிழ்வித்தும் அவனைச் சமாதானஞ்செய்யமுடியாதவளாய் வருந்திக்கொண்டிருக்கின்றாள்' என்றபொருளமைந்த,—

... ...
புல்லுளைக் குடுமிப் புதல்வன் பன்மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்
கூழுஞ் சோறுங் கடைஇ யூழி
னுள்ளில் வறுங்கலந் திறந்தழக் கண்டு
மறப்புலி யுரைத்து மதியங் காட்டியு
நொந்தனள்;........................
... ...

என்ற கசுo-வது செய்யுளின் அடிகளாலுந் தமது வறுமைத்துன்பத்தைக் குறிப்பிடுகின்றார்.

இவற்றால் இப்புலவர்பெருந்தகையாரது வறுமைத்துன்பம் ஒருவாற்றான் விளங்கும்.

இனி, இவருடைய செய்கைகளைக்கூறி என்கருத்தை ஒருவாறு முடிக்கிறேன்.

இவர் ஒருகாலத்தே தமதுவறுமையைப் போக்கிக்கொள்வான் அதியமான் நெடுமானஞ்சியைப்பாடிப் பரிசில்வேண்டினர். அவன் இவருக்கு எதிரேவந்து இவரோடு அளவளாவாது பரிசிலைமாத்திரங் கொடுத்தனுப்பினன். ஆனால் இப்புலவர்பெருந்தகையாரோ அப் பரிசிலைப் பெரிதாகவெண்ணாது 'இவ்வரசன் எம்மை அழைத்து நேரிற் பார்க்கவில்லை. பரிசிலைமாத்திரந்தந்தனன். நாம் இலாபம் ஒன்றனையே பெரியதாக எண்ணினேமல்லம். இவன் நம்மைஅழைத்து நமது கல்வி முதலாயவற்றையறிந்து இதனினுஞ்சிறியதொரு பரிசிலைத்தந்தானாயினும் நாம் அதனைப் பெரியதாக ஏற்றுக்கொள்வோம். ஆதலின், நம்மையறியாதுகொடுத்த பரிசிலை நாம் ஏற்றுக்கொள்ளோம்' என்ற பொருளமைந்த,—

குன்று மலையும் பலபின் னொழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென
நின்ற வென்னயந் தருளி யீதுகொண்
டீங்கனஞ் செல்க தானென வென்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்
காணா தீத்த விப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே;

என்ற உ0அ-வது செய்யுளால் அப்பரிசிலை மறுத்துவிட்டனர்.

மேலும், இவர் பிறிதொருகாலத்தே வெளிமானூர் வெளிமான் என்னும் வள்ளலைப்பாடிப் பரிசில்வேண்டிச்சென்றனர். அச்சமயம் அவன் இறக்குந்தருவாயிலிருந்தான். ஆயினும், அவன் இப்பெருந் தகையாளரது வரவை அறிந்து தனது தம்பியாகிய இளவெளிமானை விளித்துப் புலவர்பெருமானுக்குப் பரிசில்கொடுத்தனுப்பும்படி சொன்னான். ஆனால் அந்த இளவெளிமானோ நமது புலவர்பெருந்தகையாரது பெருமைக்குத்தக்கவாறு கொடாது சிறிது கொடுத்தனன். இந்நிலையில் இப்புலவர் அப்பரிசிலைப்பெறாது அவனைப்பார்த்து 'நீ, எம்மை அவமதித்துச் சிறிதுகொடுத்தமையின் யாம் இதனை ஏற்றுக்கோள்ளோம். அன்றியும் புலி, தன் உணவிற்குப்போதியதென்றுபார்த்து வீழ்த்திய யானையாகிய உணவு கைதவறின் அதற்காகத் தனக்குப்பற்றாத எலியைப்பார்த்து உண்ணுமா? நின் தமையனாகிய வெளிமானுழை வந்து தமதுவறுமையைப்போக்க எண்ணும் பரிசின்மாக்களது ஆசைக்குச் சோற்றுப்பானையிலேதோன்றிய நெருப்பைப்போன்ற உன்னாலே தரப்பெற்றபரிசிலை யாம் ஏற்றுக்கொள்ளோம்' என்று கூறியவுடன் மீட்டும் அவனைப்பார்த்து 'எமக்குத்தருந்தரும் இதனில் உயர்ந்ததுமாகிய பரிசிலைப்பெற்றுவருகிறேம்; காண்பாயாக' என்றுங்கூறி அங்கிருந்தும் புறப்பட்டுக் குமணனையடைந்து அவனைப்பாடிப் பரிசில் வேண்டினர். அவன் இவரது எண்ணப்படியே வேண்டியபரிசிலோடு யானையையுந்தந்தான். அவற்றைப்பெற்ற இப்பெருந்தகையார் முன்னர்த்தாங்கூறியவற்றைநிறைவேற்றுவிக்கவேண்டி வெளிமானூருக்குவந்தார். அவ்வூர்க்காவன்மரத்திலே தமக்குப்பரிசிலாகக்கிடைத்த யானையைக் கட்டினார். பின்னர் இளவெளிமானை அழைத்து அவனுக்குத் தாம் பரிசில்பெற்றுவந்ததைக்காட்டித் தம் மூருக்குச்சென்றார். இங்கு,

"இரவலர் புரவலை நீயு மல்லை
புரவல ரிரவலர்க் கில்லையு மல்ல
ரிரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் றோன்றல் செல்வல் யானே"

என்ற (புறம்—௧௬௨-வது) பாட்டுக் கவனிக்கத்தக்கது.

இம்மட்டோ இப்பெருந்தகையாளரதுசெய்கை: கேளுங்கள்: இன்னுங்கூறுவல்.

இவ்வாறு வருந்திப் பரிசில்பெறும் இவர் தாங் குமணனாற்பெற்ற அப்பரிசில்களைத் தம்மனையாளுக்குக்காட்டி அவளைப்பார்த்து 'மனைக்குரியவளே! நீ இவற்றை உன்னைக் காதலித்தவர்களுக்கும், உன்னாற் காதலிக்கப்பட்டவர்களுக்கும், உன் சுற்றத்தார்களுக்கும், உனக்கு முன்னேகொடுத்துதவியவர்களுக்கும் வேண்டியவளவுகொடுத்துதவுவதோடு இவர்களையல்லாத வேறு எவராயிருப்பினுஞ்சரி அவரை இன்னாரென்றும் இன்னதன்மையரென்றுங்கருதாது என்னைக் கேட்கவேண்டுமென்று மெண்ணாது உன் இஷ்டப்படி அவர்கட்கும் வேண்டியதைக் கொடுத்துதவுவாயாக' என்று,

"நின்னயந் துறைநர்க்கு நீநயந் துறைநர்க்கு
மன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்குங்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
னெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கு
மின்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயு
மெல்லார்க்குங் கொடுமதி மனைகிழ வோயே"

என்ற புறப்பாட்டால் (௧௬௩) இவர் தமது மனநிலையை நமக்கு நன்கு விளக்குகிறார்.

பாருங்கள்! இப்பெருந்தகையாரது மனோநிலையையும் உத்தம குணங்களையும் இவ்வாறிருத்தலல்லவோ வறுமையிற் செம்மையாகும்?

இத்துணையுங்கூறியவாற்றால் வறுமையிற் செம்மையென்றால் என்ன என்பதும், பெருஞ்சித்திரனாரின் வறுமைத்துன்பமும், அவர் அக்காலத்தும் ஒழுக்கம் நாண முதலாயவற்றைக் கைவிடாதிருந்ததும் ஒருவாறுபுலனாம். சுபம்.

ஊ. சா. வேங்கடராமன்,
தண்டமிழ்த்தொண்டன்.

ஸ்ரீ:

பெண் கல்வி.*

அவைத் தலைவரவர்களே!

மகாராஜா அவர்களே!

மற்றுமுள்ள பெரியோர்களே!

அறிவுததும்பும் பண்டிதர்கள்கூடியிருக்கும் இந்தச்சபையிலே சிறுமியாகிய நான் நிற்கப்பெற்றது என் பாக்கியமே. இவ்வாண்டு நிறைவுவிழாக்கருதி நேற்றும் நேற்றுமுன்தினமும்வந்து இங்குநடந்தனவெல்லாம் கண்ணுற்றுங் கேட்டும் மிக மகிழ்ச்சியடைந்தேன். நான் இங்குநிற்க அநுமதிகொடுத்த உங்கள்பெருந்தன்மைக்குணத்தை நான் நன்றாய் அறிகின்றேன். இப்பொழுது நான் பெண்களுடைய பிரதிநிதியாகநின்று எங்கள்குறைகளை மன்றாடிச் சொல்ல வந்திருக்கின்றேன். வேறு ஒன்றும் இல்லை. இத்தமிழ்ச்சங்கத்தாரால் முதனாட் கொடுக்கப்பெற்ற அறிக்கைப்பத்திரத்திலும் பிறவற்றிலும் சரஸ்வதியின் படம் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. எங்கள் வகுப்பினராய இச்சரஸ்வதியை நீங்கள் தலைமேல்வைத்திருப்ப, நீங்கள் எங்களை அவ்வாறு வைக்கவேண்டாவோ! எங்கட்குக் கல்விகொடுக்கின் நாங்கள் உங்களைப் போன்று அறிவுடையோர் ஆகோமோ! இச்சங்கப்பத்திரத்தில், பெண்பாலார்க்குத் தனியிடமுண்டு என்று குறிக்கப்படவில்லையே! 'அந்தோ ஈதென்னகொடுமை' நாங்கள் இம்மன்றத்தில் வருதல்கூடாது என்று நீங்கள் எண்ணுவீராகில் நானும் இப்பொழுதே இம்மேடையினின்று இறங்கிவிடுகின்றேன்! அறிவாளர்களாய உங்களில் எவரைக் கேட்டாலும் பெண்கல்வி அவசியம் என்றே சொல்வீர்கள்! மற்றும் அதைச் சொல்லில்மாத்திரம்வைக்காது செயலிலும் காட்டவேண்டாவோ! இங்குக் குழுமிய எல்லார்க்கும் மனைவி, தமக்கை, தங்கை, அன்னை இன்னோரன்ன பெண் சுற்றத்தார் இருக்கின்றாரல்லவா! அந்தப்பெண்மணிகளை நீங்கள் ஏன் உடன்கூட்டிக்கொண்டுவரக்கூடாதோ! இதை நன்றாய் ஆலோசியுங்கள். நீங்கள் அநுபவிக்கும் இந்தக்கல்வியின்பத்தை

* இது மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பதினைந்தாம் வருஷோத்ஸவத்தில், பாலக்காட்டு மகா-ள-ள-ஸ்ரீ பி. ஐ. சின்னச்சாமிபிள்ளையவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றசபையில் ரா. சுப்புத்தாய் அம்மாளால், படிக்கப்பட்டது.

நீங்கள் அபிமானிக்கின்ற உங்களுடைய பெண்மக்கள் அநுபவிக்கலாகாதோ! "யான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்" எனப் பெரியோர் கூறியுள்ளனரே. உங்களுடையவாழ்விலும் தாழ்விலும் பங்குவைக்கின்ற எங்கட்கு நீங்கள் இப்பொழுது அநுபவிக்கின்ற ஆநந்தத்திற் பங்குவேண்டியதில்லையோ. நீங்கள் தருமசீலர்களன்றோ உங்களுடையபெண்மக்களை நாடகம் முதலிய விளையாட்டுக்கூட்டத்திற்குச் சிலர் கூட்டிப்போவதை நாங்கள் கேட்டிருக்கின்றோமே. நாங்கள் உங்களுடைய கருணைக்குப்பாத்திரர்களல்லவோ! இத்தகைய பட்டிமண்டபம் ஏறி எங்கள்குறைகளை உங்கள்முன்னர் விண்ணப்பிக்கநேரிடுகின்றதே! நீங்கள் எங்களைக் கைவிட்டீர்களானால் எங்கட்கு உங்களைவிடவேறுகதியுண்டோ. கல்வியுடைமை பொருளுடைமை என்றிரண்டுசெல்வமும் செல்வமெனக்கண்டாமன்றே. இவ்விருசெல்வமும் பெண்மக்கட்கு உரியவைகள் அல்ல ஆகின்றனவே. சட்டவாயிலாகப் பெண்மக்கட்குப் பொருட்செல்வம் இல்லையென்று சட்டம் விதித்துக் கொண்ட ஆண்மக்களே! பெண்மக்கட்குக் கல்வியும் ஆகாதென்றுவிதிப்பது நியாயமென்றுநினைக்கிறீர்களா! இரண்டுசெல்வங்களுள் ஒன்றேனும் எங்கட்கு இல்லையானால் எங்கள்கதி யாதாகும். சற்று அமர்ந்து எங்கள்மீது தங்களுடைய கருணைக்கண்களை நோக்குங்கள்.

சங்க இலக்கியங்களிலே வெள்ளிவீதியார் காமக்கண்ணிமுதலிய பெண்மக்கள் கல்விகற்று இனியசுவைத்தாயபாக்களைப்பாடியிருக்கின்றாரென்றும், அவர்கள் அக்கல்வியின்பயனாக நல்லொழுக்கத்தினின்று நல்வாழ்வுவாழ்ந்திருக்கின்றார்களென்றும் என்னாசிரியர்வாயிலாகவும், என் கணவனார்வாயிலாகவும், மற்று, சிறப்பாக, நேற்றும் தம் வாய்மொழியான் நம் பண்டைத்தமிழ்மக்களது ஏற்றத்தைத் தெரிவித்து நமக்கு அறிவுகொளுத்திய சிறப்புறு சேதுநாட்டின் அரசரால் ஆதரிக்கப்பெற்றுத்திகழும் நல்லிசைப்புலவராய மகா-ள-ள-ஸ்ரீ ரா. ராகவையங்காரவர்கள்விடுத்த செந்தமிழ்ப்பத்திரிகையில் நல்லிசைப்புலமைமெல்லியலார் என்னும் விஷயவாயிலாகவும் நன்கு அறிந்துள்ளேன். அவர்களாற் பாடப்பெற்ற பாக்களைப்படித்து உணர்வுவரப்பெற்றும் எங்களை இப்பொழுதையநிலையில் வைத்திருப்பதேன். அறிவுடையோரே! கேண்மின்.

காதலனும்; காதலியும், 'ஓராவிற்கு இருகோடு' முளைத்தாற்போல அன்பாற்பிணைக்கப்பட்டுவாழ்ந்தார்கள் என்று இறையனாரகப்பொருளிலிருப்பதை என் கணவனார்வாசிக்கக்கேட்டுள்ளேன். மற்றும் நம் தமிழ்மக்கள் வீரத்தன்மைவாய்ந்தவர்களென்று மகா-ா-ா-ஸ்ரீ மு. ராகவையங்காரவர்கள் தமிழ்ப்புராதன கலைஞன் என்ற இதழில், வீரத்தாய்மார்கள் என்ற தலைப்பெயரிட்டு எழுதிய கட்டுரையால் நன்கு உணர்ந்திருக்கின்றேன்.

இச்சங்கத்திற்கு இம்மூன்றுநாளும்வந்ததில் நீங்கள் எத்துணை எங்கட்குத் துணைபுரிகின்றீர்களென்று நான் அறியலானேன். கல்வி ஆசைகொண்டுள்ள என்னிடத்தினின்றும் அவ்வாசையைக் களைந்துவிடுவீர்களென்று எண்ண இடமுண்டு. உலகத்தார் தூற்றும் பழிமொழிகட்கஞ்சி நம்மைப்போன்றபெண்கள் இச்சங்கத்தில்வந்திருப்பார்கள், நாமும் அவர்களுடன் உட்கார்ந்துகேட்கலாம் என்றுவர இக்கட்டடத்தின் தென்பக்கம் எங்கள்வகுப்பினராய பெண்மணிகள் இருக்கப்பெறாது நாணிழந்து கைம்மைபூண்டமகளிர்போல் வெறுமையாய்ப் பாழாய்க்கிடந்ததைப்பார்க்க என்மனம் பட்டபாடு என்னவாயிருக்குமென்று நீங்களே அறிந்துகொள்ளுங்கள். நான் அடைந்த இப்புழுக்கத்திற்குக் காரணமுண்டு. அது எது என்றால் நான் தன்னந்தனியே இருந்ததேயாம். "நம்மனைவி, தமக்கை, தங்கை, தாய்முதலியோர் சங்கஇலக்கியங்களையும் மற்றுமுள்ள நுண்பொருள்களையும் கற்றிருக்கின்றார்களே. அவர்கள் வரவேண்டிய அவசியமில்லையே" என்று நீங்கள் கருதிக்கொண்டாலும், அறிவிலிகளாகிய என்போலியரை ஊக்குவதற்காகவாவது நீங்கள் உங்கள்பெண்களை அழைத்துவருதல்கூடாதோ. ஆங்கிலக்கல்வியும்பெற்ற நீங்கள் இவ்வாறு பின்வாங்குவீர்களாகில் மற்றவர்கள் முன்மாதிரியாகவருவது எங்ஙனம்! உங்கள் மௌனத்தைப்பற்றி நீடுநினையுங்கள். நினைந்தபின் தெளியுங்கள், தெளிந்தபின் அவ்வாறு ஒழுகுங்கள்; நிற்க.

இம்மதுரையிலேயே 'இந்துமாதர்சங்கம்' என ஒரு, பெண்கள் சங்கம் உண்டென்று அறிகின்றேன். இங்குக்கூடியிருக்கும் பெரியோர்களிற் சிலரது மனைவியராவது பெண்களாவது அச்சங்கத்தின் அங்கத்தினராயிருப்பார்களென்று நினைக்கிறேன். அவர்கள் செய்வன இன்ன

என்று நீங்கள் அறிவீர்களா? நம் பண்டைத்தமிழ்நூல்களை வாசிக்கின்றார்களா, சிறுமியாகியநான், எல்லார்வற்றமும் கருதியிருப்பதால், அக்கருத்து முற்றுப்பெற, உண்மையை, உள்ளவாறுகூறவேண்டியதிருப்பதால் முன்கேள்விக்கு இல்லையென்றேகூறி அங்கு நடப்பவற்றை நீக்கவேண்டும் என்றும் சொல்லுகின்றேன். எனது அறிவுக்கும் அநுபவத்திற்கும் எட்டியமட்டும் தூத்துக்குடியிலுள்ளபெண்கள்சபை நல்லவேலை செய்கிறதென்று சொல்லுவேன். இவ்வூர், 'பெண்கள்சபை' தடுமாற்ற நிலையிலிருப்பதற்குக் காரணமுண்டு. அஃது என்னையோவெனின், அச்சபை அங்கத்தினருக்குத் தமிழ்மொழியின்மாட்டு ஆர்வமின்மையே.

தமிழ்மொழியைவளர்க்கவந்த இம்மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் சங்கக்கலாசாலையில் ஆண்மக்கள்பயின்றுவருகின்றார்களேயன்றிப் பெண்மக்கள்பயின்றுவருகின்றார்களென்றுசொல்வதற்குஇடமில்லையே! ஆண்மக்கள்செய்த புண்ணியந்தானென்னே? மற்றிப் பெண்மக்கள்செய்த பாவந்தானென்னே? சங்கத்தலைமைபூண்டபெரியோர்களே! தமிழ்மொழிவளர்க்கவந்த தந்தைமார்களே! பாஷையைச்சொல்லும்பொழுதெல்லாம் தாய்ப்பாஷை என்றுசொல்லக் கேட்டேனே. தாய்ப்பாஷைக்கு உரியவர் தாய்மார்களோ? மற்றித்தந்தைமார்களோ? சொல்லுமின். தாய்ப்பாஷையாகிய தமிழ்ப்பாஷையைத் தாய்மார்களாகிய பெண்மக்களைக்கொண்டு வளர்க்கலாகாதோ! உயர்ந்த ஆண்மக்களாகிய உங்களைப் பெற்றுவளர்த்தது தாய்மார்களாகிய நாங்களே என்பது மெய்யானால் உங்களைவளர்க்கும் எங்களிடத்து நீங்கள்பேசும் தாய்மொழியை வளர்க்கும்தகுதி, மிகுதியும் காணமாட்டீர்களோ! குடும்பங்களில் உங்கட்கு வாழ்க்கைத்துணையாகஇருக்கும் எங்களை நீங்கள் நம்பாதிருந்தால், குடும்பம் எவ்வாறு செவ்வனேநடைபெறும்! எங்கள் நிலைமையும் யாதாகுமென்று கூர்ந்து யோசிக்கவேண்டுகின்றேன்.

இந்தச்சந்தர்ப்பத்தில் இவ்வூரிலுள்ள நன்மைபரிபாலனசபையைப் பற்றிச் சிறிதுசொல்ல விழைகின்றேன். மீனாட்சியம்மன்கோவிலில்

தெற்குஆடிவீதியில் மகா-ள-ள-ஸ்ரீ பாண்டித்துரைச்சாமித்தேவரவர்களால் கட்டுவிக்கப்பட்ட பஜனைமடத்தில் இந்தச்சபை நடைபெறுகின்றது. இந்தச்சபையில் பெண்களின் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இச்சபையில், பெண்மக்கட்காக உழைப்பவர்கள், என்னுடைய அபிவிருத்தியைமேற்கொண்ட எனது கணவனாரும், எனது சகோதரர் கண்ணனாரும், மற்று என்னுடையகணவனாருக்கு நேசரும் மதுரை செட்டில்மெண்டாபீஸ் தலைமையெழுத்தாளரும் எனக்குத் தமிழறிவை அன்புடன்குழைத்தூட்டிவருபவரும்ஆன மகா-ள-ள-ஸ்ரீ நெல்லை தி. சோ. காந்திமதிநாதப்பிள்ளையவர்களுமேயாவார்கள். பெண்மக்கட்காக இவர்கள் பாடுபட்டுவருவது நாங்கள் என்றும் மறக்கற்பாற்றன்று. இவர்தம்முயற்சி நன்முயற்சியாகுக என்று எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளை இறைஞ்சுகின்றேன். பெரியோர்களே! தங்கள்சந்நிதானத்திற் சிறுமியாகிய நான் உரைத்தபுன்மொழிகளை நன்மொழிகளாகக்கொண்டு எங்கள் (பெண்பாலர்)மேல் அன்புவைத்து எங்களை முன்னுக்குக்கொண்டுவர முந்துமின். நான் வேறுசொல்லவேண்டுவது ஒருகாரியமுண்டு. அஃது என்னையெனின், உதவியற்ற இந்துப்பெண்மக்கட்குத் தனிநிலையம் ஒன்று தாபிக்கவேண்டுமென்பதேயாகும். அம்முயற்சி கைகூடுவதற்குப் பெண்மக்களாகிய எங்களால் என்னஇயலும்? அது, இங்கு எழுந்தருளியிருக்கும் செந்தமிழ்நாட்டுச் சேதுபதியெங்கோன் திருவுளம்வைத்தால், செவ்வனேமுடியும். நான் உங்களிடத்துத் தூதுசொல்லவந்த நற்செய்தி இதுவேயாகும் என்று நினைந்துகொள்ளுங்கள்.

அற்றார் அழி பசிதீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி.

ரா. சுப்புத்தாய்.

உ

திருச்சிற்றம்பலம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினைந்தாம்வருஷோத்ஸவ

ம ங் க ல வா ழ் த் து.

ஆசிரியவிருத்தம்.

1. கங்கா நதியைச் சிரம்புனைந்த கருணா கரனு முமையுமவர்
 காதற் புதல்வன் ஆறுமுகக் கடவுள் தானும் எழுந்தருளிச்
சிங்கா தனத்தி னிருந்துசெங்கோல் செலுத்தி யினிய தமிழ்மதுராக்
 தேக்கி யதனால் இந்நகரைச் சிறந்த மதுரா புரியாக்கி
மங்கா திலங்குந் தமிழ்செழிக்க வளர்க்கு மதனாற் சிறப்புறுதம்
 வழியைச் செழியர் மரபாக்கி மகிமை பெறச்செய் ததன்பின்னர்
கொங்காம் நறும்பூம் பொழின்முகவைக் கோமான் பாஸ்கரேந்திரனும்
 குரிசில் பெரிய தந்தைதிருக் குமர னாகி யினிதுதித்தே

2. பாண்டித் துரையென் றுயர்செழியர் பட்டம் படைத்த வவன்றானே
வேண்டித் தருமம் பாற்கரவேள் வியன்பே ருதவி யடைந்தினிதே
யீண்டித் திகழ்நான் காஞ்சங்கந் தாபித் தியைந்த தலைமையுந்தான்
பூண்டுஇக் குமரித் தமிழணங்கு பொலிவுற் றோங்கப் புரந்ததன்பின்

3. சீரார் கலைஞர் திருமதியோ தெளிநீர் தமிழின் பொருட்டுறையோ
நீரார் புவிமங் கலந்தானோ நினைந்து புரிந்த பெருந்தவத்தால்
நேரார் பணியப் படிகளிக்க நிறையுஞ் சைவ நெறிதழைக்க
வாரார் புகழ்ப்பாற் கரசேது பதியி னினிய கண்மணிபோல்

4. மன்னும் முகவா புரிவிளங்க மறையோர் வேள்வி வகையிலங்கக்
கன்ன னெனவே பிதாமுறையுங் கண்டு பலருங் களிப்படையப்
பொன்னின் அருளுங் கலைமகளும் புகழ்மா மகளும் பொருந்தியியத்
கன்னி நறுந்தண் டமிழ்புரக்கக் கருதி யுதித்த நிருபதியாய்

5. தங்கள் கவின்சேர் அரண்மனையுட் டங்கக் கோயில் வீற்றிருக்கும்
மங்கை குமரி யபிராமி வாமி யுமைசந் நிதியிலுயர்
திங்கள் புரட்டா சிநவரா த்திரியின் மகிழ்ந்து சிரத்தையுடன்
நங்கள் கழகம் புரப்பதுபோல் நான்காஞ் சங்க மாமிதையும்

6. பொன்னு மனவில் புத்தகமும் பொருந்து மிடமுந் தந்ததினாற்
றன்னை நிகர்ப்பா ரின்மையினாற் றானே யுவமை தனக்காகி
மன்னர் பொருந்து நிரந்தரவக் ராச னுதி பதியாகி
மன்னு தமிழ்காத் திசைபரப்பு மகிமை கருதி யுலகுசொலும்

7. துங்கத் தமிழ்நாட் டரசனெனுஞ் சுகுணன் ராஜ ராஜேசன்
சங்கத் திருக்கை புகழ்ச்சின்ன சாமிக் குரிய தெனத்தேர்ந்து
திங்கட் குழவி திகழ்சடிலச் செழியன் நகரிற் பதினைந்தாஞ்
சங்கச் சமையுற் றவைகழகந் தன்னிற் றலையா சனத்திருத்தி

8. எல்லா வுலகும் புகழ்தமிழா யின்பாற் கடலி னிலங்குகவி
வல்லார் களைக்கூய் நாற்பொருளாம் மத்து வீதீஇச்சொன் னூற்கயிற்றால்
எல்லார் மதிதோய்த் தரன்நாவால் இழுத்து மதித்திவ் வுலகிலுளோர்க்
கெல்லாஞ் சங்கத் தமுதூட்டும் இராஜ ராஜ னெனுந்திருமால்

வெண்பா.

9. விண்ணிற் புலவர்முன்பால் வேலையமு துண்டதுபோல்
எண்ணிப் புலவருமிவ் வின்றமிழின் — தண்ணமுதன்
காரணத்தால் நீடு களிப்படைந்து வாழ்வுறுவர்
எரணத்தால் எய்தியவா றீண்டு.

10. செய்யாள வைகாசி தேதியைந்திற் சங்கத்துத்
துய்யவைமூன் றும்வரு ஷோத்சவத்தை — வையகத்தே
பீரக் கொண்டாடிப் பேணுமிறை யிங்ஙனமே
நீடூழி வாழ்க நிறைந்து.

சுபம்.

பண்டிட் வி. திருஞானசம்பந்தம்,

இராமநாதபுரம்.

உ

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினைந்தாம்வருஷோத்ஸவ

மங்களவாழ்த்து.

பாலக்காட் டெம்சவைப்பைந் தமிழ்ப்'பாண்டித் துரைச்சங்க'ப் பான்மை யாவும்
லக்காட் டிடும்எமது ராஜராஜேசன்,இவண் இறைமை யேற்ற
பாலக்காட் டெச்சின்ன ஸாமி,முத லியதமிழ்மெய்ப் பரிவு வாய்ந்தோர்,
சேலைக் காட்டும் விழியார் உமையவன்தன் திருவருளால் செழித்துவாழி.

ம. கோபாலகிருஷ்ணன்

உ

இந்தியாவின் அரசியல்.

"செந்தமிழ்" (தொகுதி கச பகுதி ரு-ல்) உ௦௦-ஆம்பக்கத்தொடர்ச்சி.

ஹைக்கோர்ட்டும் சட்டஆபீசர்களும்.

தவிரவும் சிவில் கிரிமினல் நியாயஸ்தலங்கள் இரண்டும் ஒருங்கே யமைந்ததும் அந்தந்தமாகாணங்களுள் உயர்ந்த அதிகாரம்பெற்றது மான ஹைக்கோர்ட்டு ஒன்றுண்டு. இப்போது சென்னை ஹைக்கோர்ட்டில் 12 ஜட்ஜுகள் அமர்ந்து நியாயம்செலுத்திவருகிறார்கள். அவர்களில் இன்னின்னபகுதியிலுள்ளார் சிவில்செர்விஸ் உத்தியோகஸ்தர்களாகவும், பாரிஸ்டர்களாகவும், வக்கீல்களாகவும் இருந்திருக்கவேண்டுமென்று நிபந்தனைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாகாணகவர்ன்மெண்டாராலும் அட்வகேட்ஜெனரல்முதலான (Law) ஆபீசர்கள் நியமுகம்பெற்று சட்டசம்பந்தமானவிஷயங்களிற் கவர்ன்மெண்டாரவர்களுக்குப் புத்திசொல்லவும் கவர்ன்மெண்டுக்கேஸ்களை நடத்தவும் ஏற்பட்டிருக்கிறார்கள்.

சர்வகலாசாலை.

சென்னைமாகாணத்துக்கும் இதுபோன்ற பெரியமாகாணங்களொவ்வொன்றுக்கும் முறையே ஒரு சர்வகலாசாலை ஏற்பட்டிருக்கிறது. அவைகளை ஒழுங்குபடுத்தி நடத்தும்பொருட்டு 1904-௵த்து 8-வது ஆக்ட்டு (University Act) என்று ஒருசட்டம் பிறந்தது. அந்த சர்வகலாசாலைக்குத்தலைமையான வித்தியாநாயகராக அந்தந்தமாகாணத்து ராஜ்யாதிகாரியே இருப்பார். ஒரு உபவித்தியாநாயகரும் மாகாணகவர்ன்மெண்டாரவர்களால் நியமுகம்பெறுவதோடுகூட, சர்வகலாசாலையின்காரியங்களைச் சரிவரநடத்துவதற்காக ஒரு ரிஜிஸ்தராரும் (Registrar) நியமுகம்பெறுகிறார். தவிர, இந்தக்கலாசாலையின் முதன்மைவித்தியாபட்டம்பெற்றவர்களால் (Graduates) தெரிந்தெடுக்கப்பட்டவர்களும் கவர்ன்மெண்டாரவர்களால் நியமுகம்பெற்றவர்களுமடங்கிய ஒரு வித்தியாலயசபையும், அவர்களுக்குள் நியமுகம்பெற்ற சிலர்களும், Director of Public Instructionம் அடங்கிய ஒரு பிரதிநிதிசபையும் (Syndicate) ஏற்பட்டு இந்தமாகாணத்திற் கல்வி பாதுகாக்கப்பட்டுவருகிறது.

ஜில்லாக்கள்.

முக்கியமாக வருவாய்களை ஒழுங்குபடுத்திச் சரிவரப் பரிபாலனஞ் செய்யும்பொருட்டும், பொதுவாக அரசியலைநடத்தும்பொருட்டும் இந்தியாதேசமானது பலமாகாணங்களாகப்பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாகாணமும் பலஜில்லாக்களாகவும் ஒவ்வொருஜில்லாவும் சிலடிவிஷன்களாகவும் ஒவ்வொருடிவிஷனும் சிலதாலூகாக்களாகவும் ஒவ்வொரு தாலூகாவும் பல ரிவினியூடிவிஷன்களாகவும் ஒவ்வொரு ரிவினியூடிவிஷனும் அநேக கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் இந்தியா இப்போது சுமார் 267 ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருஜில்லாவும் சுமார் 4430 சதுரமைல் விஸ்தீரணமுள்ளது; 931000 ஜனங்களடங்கியது. ஆனால், சிலஜில்லாக்கள் அதிக விஸ்தீரணமுள்ளதும் பெருக்கமான ஜனத்தொகையுடையதுமாயிருக்கும். சென்னைமாகாணத்தில் விசாகபட்டணம்ஜில்லா 17221 சதுரமைல் விஸ்தீரணமுள்ளதாயிருப்பதோடு 3189821 ஜனத்தொகையுடையதாயுமிருக்கிறது. தவிரவும்கோயம்புத்தூர், தென்ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி இந்தஜில்லாக்கள் ஒவ்வொன்றிலும் 2000000த்துக்குமேற்பட்டே ஜனத்தொகையிருக்கிறது. சென்னைமாகாணத்தில் 12 ஜில்லாக்கள்வரை ஒவ்வொன்றும் 5000 சதுரமைலுக்குமேற்பட்ட விஸ்தீரணமுள்ளது. பொதுவாக ஜில்லாக்களின் விஸ்தீரணம் பர்மா, சென்னை இந்தமாகாணங்களில் மிகுந்தும், ஐக்கியமாகாணங்களிற் குறைந்துமிருக்கின்றது. சென்னைமாகாணம் இப்போது Anjengo வைவிலக்கி 25 ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

கலெக்டர்.

முன்னமேயே, சிலமாகாணங்களில் அநேகஜில்லாக்களடங்கிய ஒரு தொகுதிக்குக் கமிஷனர்என்ற உத்தியோகஸ்தர் ஏற்பட்டிருந்தும், சென்னைக்கு அப்படிப்பட்டஉத்தியோகஸ்தர் ஏற்பட்டதில்லைஎன்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொருஜில்லாவுக்கும் தலைவராக கலெக்டர் என்றஒருஅதிகாரி நியமுகம்பெறுகிறார். அவர்தான் தன்ஜில்லாவுக்குச் சர்க்காரின்பிரதிநிதி. ஜனங்கள் தங்கள்குறைகளைக்குறித்து அவரிடமே தெரியப்படுத்திப் பரிகாரம்பெறவேணும். நம்முடையராஜாங்கத்திலாவது மற்றெந்தராஜாங்கத்திலாவது எந்தத்தேசத்திலாவது

இந்த அதிகாரியைப்போற் பலவகையிலும் அதிகாரத்தையும் பொறுப்பையும் கடமைகளையும் ஒருங்கேஅடைந்தவர் பிறரிலர். அவர் முக்கியமாகத் தன்ஜில்லாவின்வருவாய்களைத் திட்டம்பண்ணியும் வசூலித்தும் வருவதைக் கவனிப்பதோடு முதன்மையான மாஜிஸ்திரேட்டுஅதிகாரத்தையும்வகிப்பார். அவரே கிராமவாசிகளின்(பயிரிடுவார்)ஸ்திதியைக்கவனிக்கவேண்டியவர். நிலத்தின்விளைவுகளையும், அப்போதைக்கப்போது அவைகளுக்குஏற்படும் விலைகளையுங் காட்டக்கூடியகணக்குகளை ஒருங்கேதிரட்டியும், ஜமீந்தார்களுக்கும் அவர்களின் குடியானவர்களுக்கும் ஏற்படும்விவாதங்களையும் விவகாரங்களையும்தீர்த்தும், விவசாயசம்பந்தமானசெலவுகளுக்கு ஏற்பட்டவிதிகளின்படி சர்க்கார்ப்பணத்திலிருந்து விவசாயிகளுக்குக் கடன்கொடுத்து உதவிசெய்தும், தன்ஜில்லாசம்பந்தமான முதல்வருமானவரி (இன்கம்டாக்ஸ்) ஸ்டாம்புவிற்றுமுதல் இவைபோன்ற மற்றவருவாய்கள் இவற்றிற் கவனஞ்செலுத்தியும், தன்ஜில்லாவில்ஏற்பட்டகஜானாவின்நிருவாகத்தைவகிக்கவும் அவர் கடமைப்பட்டவர். தவிரவும், முக்கிய மாஜிஸ்திரேட்டுஅதிகாரத்தை வகிப்பதோடு, அந்தஜில்லாவிலுள்ள மற்றெல்லா மாஜிஸ்திரேட்டதிகாரிகளின்வேலையையும்மேற்பார்த்துக்கொண்டுதேசசமாதானத்தைஉத்தேசித்துஅந்த ஜில்லா போலீசுநடக்கையை அடக்கியாளும் அதிகாரத்தையும்பெற்று ஜில்லாஜெயிலின் மேற்பார்வையையும் வகித்துவருகிறார். இன்னும் தன்ஜில்லாவில் பொதுஜனநன்மைசம்பந்தமான எல்லாவிஷயங்களிலும் அவர் தலையிடக்கடமைப்பட்டவர். இப்போதிருக்கும்நிலைமையில் ஒவ்வொருபகுதிக்கும் முறையே வெவ்வேறு தலைமைஉத்தியோகஸ்தர்கள் ஏற்பட்டிருந்தும், இந்தப் பிரதானஉத்தியோகஸ்தரின் அநுசரணையையும் புத்திமதியையும் அவர்கள் கேட்கக்கடமைப்படுவார்கள். ஒருஜில்லாவில் அநேக பெரியநகரங்கள்ஏற்பட்டு அவைகள் ஒவ்வொன்றிலும் தனித்தனியே முனிசிபாலிடிகள் ஏற்பட்டிருந்தபோதிலும், அவைகளையெல்லாம் சரிவரநடைபெறச்செய்யுங்கடமை இவருக்குரியது. கிராமியஇடங்களிலேற்பட்ட பாதைகள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் முதலியவைகளைப் பரிபாலனஞ்செய்வதற்கென்று ஏற்பட்ட தாலூகாபோர்டு யூனியன்கள் இவைகளை உள்ளடக்கிப் பரிபாலனஞ்செய்துவரும் ஜில்லாபோர்டுக்கு இவர் அக்கிராசனம்வகிப்பார். தவிரவும், இவர் தன்ஜில்லாவில்நடக்கும் விசேஷ அதிசயங்களைக்

கவனிக்கவேண்டியதோடுகூட அவற்றைக் கவர்ன்மெண்டாருக்குத்தெரியப்படுத்தவும், ஏதாவது முக்கிய சீர்திருத்தங்கள் புதிதாய்ச் செய்யவேண்டியதிருந்தால் அவைகளின் குறைகுணங்களைப்பற்றி எடுத்துரைக்கவும், பஞ்சம்நேர்ந்தகாலத்து அதன்காரணங்களையும் அறிகுறியையும் நுட்பமாய்க்கவனித்து, கவர்ன்மெண்டாருக்கு அப்போதைக்கப்போது தெரியப்படுத்தி ஜனங்களைப் பஞ்சக்கொடுமையினின்றும்விடுவித்து ரக்ஷிக்கவேண்டியஉபாயங்களைத்தேடி அவைகளைக் கைக்கொண்டுநடாத்தி, க்ஷாமம்நிவர்த்தியாய் க்ஷேமம் மறுபடிசம்பவிக்கச்செய்யவும்வேண்டியவர். இத்தகைய பலவகைக்கடமைகளையும் அதிகாரத்தையும் சரிவரநடத்தவேண்டும்பொருட்டு அவர் ஜனங்களுடன் கலந்துவாழ்வது அவசியமாயுள்ளது.

ஜில்லாவின் மற்ற அதிகாரிகள்.

இவரைத்தவிர ஒவ்வொருஜில்லாவுக்கும் முன்சொன்ன டிபார்ட்மெண்டுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஜில்லாத்தலைவர் ஏற்பட்டிருக்கிறார். முதலாவது சிவில், கிரிமினல் இரண்டுக்குஞ்சம்பந்தமான நீதிவிசாரணைத்தலைவராக ஒரு ஜில்லாஜட்ஜும், ஒரு போலீஸ்சூப்ரண்டெண்டும், ஒரு பாரஸ்டுஆபீசரும், ஒரு சிவில்சர்ஜனும், ஒரு இஞ்சினீயரும் நியமுகம்பெற்றிருக்கிறார்கள். இவர்களெல்லோரும் அந்தந்த ஜில்லாவின் பிரதானநகரத்தில் வாசஞ்செய்யவேண்டும். தவிரவும் கல்வி, பாரஸ்டு, ரிஜிஸ்திரேஷன், போஸ்டல்சூப்ரண்டெண்டுமுதலான உத்தியோகஸ்தர்களும் ஜில்லாக்கள்தோறும் நியமிக்கப்பட்டாலும், மேற்குறித்தபடி ரிவினியூவுக்காகஏற்பட்டிருக்கும் ஜில்லாக்களின் எல்லைகளை அனுசரித்தே இவர்களுக்கும் முறையே அதிகாரவரம்பு ஏற்பட்டிருக்கிறதென்று சொல்லுவதற்கில்லை. ஜில்லாஜட்ஜும் அவர் அப்பீல்அதிகாரத்துக்குள்ளடங்கி அங்கங்கே ஏற்படுத்தப்பட்டிருக்கும் சப்ஜட்ஜுகளும் முன்சீபுகளும் அந்தந்தஜில்லாவில்ஏற்பட்ட சிவில் விசாரணையையும், அப்படியே ஏற்பட்ட மூன்றுவகைப்பட்ட மாஜிஸ்திரேட்டார்களும் கிரிமினல்சம்பந்தமானவிசாரணையையும் வகித்துவருகிறார்கள். இவர்களெல்லோரும் சென்னை ஹைக்கோர்ட்டாரவர்கள் பைசலுக்குள்ளடங்கினவர்கள். போலீஸ்சூப்ரண்டெண்டு, முன்சொன்னபடி எல்லாவிஷயங்களிலும் Inspector General of Policeக்கும் சிலவிஷயங்களில் ஜில்லாகலெக்டருக்கும் உட்பட்டுநடப்பதோடு

கூடத் தனக்குள் டிப்டி(Assistant Superintendent)களையும் சிலடிவிஷன் போலீஸ்இன்ஸ்பெக்டர்களையும் பல ஸப்இன்ஸ்பெக்டர்களையும் ஹெட்கான்ஸ்டேபிள்களையும் அநேக கான்ஸ்டேபிள்களையும் அடக்கியாளுகிறார். சிவில்ஸர்ஜன், சென்னை ஸர்ஜன்ஜெனரலின் வருதிக்குட்பட்டுத் தன்கீழ்ச் சில சப்அஸிஸ்டண்டுசர்ஜன்களைவைத்து ஜில்லாவின் வைத்தியசாலைகளை நடத்திவருகிறார். அப்படியே Forest Officerம், சென்னை Forest Conservatorக்குட்பட்டுத் தன்னுள் அநேக Ranger உத்தியோகஸ்தர்களை அங்கங்கேநியமித்து ஜில்லாவிலடங்கிய காடுகளைப் பரிபாலனம்செய்துவருகிறார். இஞ்சினீயரும் அவருக்குள்ளடங்கிய Assistant Engineer, Overseer முதலானவர்கள் மூலம் ஜலாதாரங்களையும் (Public Works) பொதுஜனவேலைகள் நீர்ப்பாய்ச்சல்வசதிகளையும் குளம் மராமத்துகளையும் செப்பஞ்செய்வித்துக்கொண்டு பாதைகள்முதலியவைகளைப் பழுதுபார்த்துவருகிறார். இன்னும் ஜில்லாரிஜிஸ்தரார், Inspector General of Registrarக்குள்ளடங்கி அநேக ஸப்ரிஜிஸ்தரார்கள்மூலம் ரிஜிஸ்திரேஷனையும், School Inspector, Director of Public Instructionக்கும் சர்வகலாசாலைக்கும் உள்ளடங்கி Assistant Inspector of Schools, Sub Assistant Inspector of Schools இவர்களைக்கொண்டு ஜில்லாவில் பயின்றுவரும் கல்வியையும், Postal Superintendent, Postmaster Generalக்குள்ளடங்கி அநேக போஸ்டுமாஸ்டர்கள், போஸ்டு இன்ஸ்பெக்டர்கள்மூலம் தபால், தந்தி இவைகளையும் முறையே சரிவர நடத்திவருகிறார்கள்.

தாலூகாவும் அதன் உத்தியோகஸ்தர்களும்.

பொதுவாக ஒவ்வொருஜில்லாவும் சிலதாலூகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக ஒவ்வொருதாலூகாவும் 400 முதல் 600 சதுரமைல் விஸ்தீரணமுள்ளது. 2, 3 அல்லது 4 தாலூகாக்கள் அடங்கியது ஒருடிவிஷன். ஒவ்வொருடிவிஷனுக்கும் தலைவராக ஒரு சப்கலெக்ட்டர் அல்லது டிப்டிகலெக்ட்டர் நியமுகம்பெறுகிறார். அவருக்குள்ளடங்கி ரிவினியூவிஷயத்துக்கு ஒவ்வொருதாலூகாவுக்கும் ஒரு தாசில்தாரும் (பம்பாயில் மாமல்ட்தார்என்று இந்தஉத்தியோகஸ்தருக்குப்பெயர்) மாஜிஸ்திரேட்டு விஷயத்துக்காக ஸ்டேஷனரிமாஜிஸ்திரேட்டுகளும் ஏற்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொருதாலூகாவும்

பல கிராமங்களடங்கிய சில ரிவினியூடிவிஷன்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொருடிவிஷனுக்கும் ஒரு ரிவினியூஇன்ஸ்பெக்டரை நியமிக்கிறார்கள். இவர் தாசில்தாரின்வருதிக்குட்பட்டு அடங்கிநடக்கவேண்டியவர்.

கிராமமும் அதின் உத்தியோகஸ்தர்களும்.

பலகிராமங்களடங்கியது ஒரு ரிவினியூடிவிஷன். ஒவ்வொரு கிராமத்திற்கும் பிரதானமாய்வற்பட்ட உத்தியோகஸ்தர்கள் மூவர். இவர்கள் பரம்பரைப்பாத்தியமாய் நியமுகம்பெறுகிறார்கள். முதலாவது ஹெட்மேன் அல்லது கிராமமுனிசீபு. இவர்தான் தன்னுடைய கிராமம் அல்லது கிராமங்களில் ஏற்படும்வரிகளை வசூலிக்கக்கடமைப்பட்டவர். சென்னைராஜதானியில் இவருக்கு உபாயமான சிவில்அதிகாரமும் மாஜிஸ்திரேட்டுஅதிகாரமும் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் எந்தப்பகுதியைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் தன்கிராமத்துக்குவந்தாலும் இவரே முன்னின்று உபசரித்து அனுசரித்து உதவிபுரியக் கடவர். இரண்டாவது கிராமக்கணக்கன். இவருக்கு மற்றஇடங்களில் Karkun Patwari என்று பெயர்சொல்லுவார்கள். இவர்தான் கிராமங்களின் சகலவித சர்க்கார்க்கணக்குகளையும் தயார்செய்துவைக்கக் கடமைப்பட்டவர். அவைகள் பலவகைப்பட்டன. நிலவரிசம்பந்தமான எல்லாவிபரங்களின்கணக்குகளுக்கும் இவரே ஜவாப்தாரியாவார். மூன்றாவது கிராமத்தோட்டி இவன் மற்றிருவர்களுக்கும் சர்க்கார் வேலைகள்விஷயமாய்ச் சேவகம்செய்வோன்.

இனிமேல் இந்தியாசம்பந்தமுள்ள முக்கியமானவிஷயங்களில் வருவாய்கள், வரவுசெலவுகள், கல்வி, விவசாயம் இவைகளின்நிலைகளைப் பற்றி முக்கியமாய்க் கவனிப்போம்.

வருவாய்கள், தனபரிபாலனம்.

இந்தியாவின் ரிவினியூ(Revenue)அல்லது பொதுநிதி பலவகை. இது மொத்தம் 1915–16ல் £ 80,346,900 ஆக நிதானிக்கப்பட்டது. அதில் முக்கியமானபகுதிகள் அடியிற்கண்டவைகள். அவைகளிலிருந்து வரக்கூடியவரும்படிகளும் கீழே காட்டப்பட்டிருக்கின்றன.

	1914—15 வரும்படி (பவுண்டில்)	1915—16 உத்தேசவரும்படி (பவுண்டில்)
நிலவரி ...	21,243,000	22,049,600
அபின் ...	1,556,100	1,798,000
உப்பு ...	3,647,300	3,382,100
சுங்கம் (ராஜகரம்) Excise	8,765,800	8,790,300
சுங்கம் (Customs) ...	6,319,500	5,943,000
ஸ்டாம்பு விற்றுமுதல் ...	5,031,900	5,107,100
வேறுபலவகை ...	5,150,400	5,151,000
வட்டிவகையில் ...	1,008,300	1,057,100
தபால் தந்தி ...	3,519,300	3,579,200
நாணகசாலை ...	57,900	71,300
Civil (சிவில்)வரும்படி...	1,483,500	1,534,000
சில்லரை ...	759,600	583,200
ரெயில்வே (செலவுநீக்கி)	15,268,300	15,029,300
நீர்ப்பாய்ச்சல் ...	4,713,300	1,795,300
மற்ற பொதுஜனவேலைகள்	266,200	256,100
ராணுவவரும்படி ...	1,315,700	1,220,300
மொத்தவரும்படி ...	80,106,100	77,346,900

மேற்கண்டவிதமாய் ஏற்படக்கூடிய வரும்படிகளிலிருந்து இந்தியாவிலும் இந்தியாவின் அரசியலுக்காக இங்கிலாந்திலும் செலவிட வேண்டியதாய் நிதானிக்கப்பட்டது £ 84,179,800. இங்கிலாந்திற் செலவிடவேண்டிய அவசியம் இங்கிலாந்திலிருக்கும் இந்தியாமந்திரி அவரது ஆலோசனைசபையின்மெம்பர்கள் இன்னும்மற்றுமுள்ள சிப்பந்திகளின்சம்பளம் இன்னும் இந்தியாவில் உத்தியோகம்செய்தபின்னர் பென்ஷன்வாங்கிக்கொண்டு இங்கிலாந்திற் காலங்கழிப்போரின்பென்ஷன்கள் இந்தியாவின்வியாபாரத்தை எளிதில் நடைபெறச்செய்வதற்காக ஏற்பட்டிருக்கும்மூலதனம்முதலான சில விஷயங்களையிட்டுத்தான் அடியிற் காட்டியிருக்கிறபடி செலவுவிவரம் ஏற்படுகிறது.

1915—16

உத்தேசச்செலவு (பவுண்டில்)

வரிவசூலிக்கும் உத்தியோகஸ்தர்கள் சிப்பந்திகள் வகையரா	...	9,539,300
வட்டி	...	1,465,600
தந்தி தபால்	...	3,294,400
நாணகசாலை	...	102,000
சிவில்டிபார்டுமெண்டு செலவு	...	19,130,100
சில்லரைச்சிவில் செலவுகள்	...	5,108,400
பஞ்சநிவர்த்தி	...	1,000,000
ரெயில்வே	...	13,850,000
நீர்ப்பாய்ச்சுதல்	...	3,650,000
மற்ற பொதுஜனவேலைகள்	...	5,818,900
ராணுவவேலைகள்	...	21,220,300
மொத்தம்	...	£ 83,179,000

கல்வி.

இந்துதேசம் எப்பொழுதும் கல்வியற்றிருந்ததில்லை. ஆனால் இப்போது 50 வருஷகாலமாய்ச் சாமான்யஜனங்கள்கூட கல்விகற்கும்படியானஏற்பாடுகள் நம் காருண்ய கவர்ன்மெண்டாரவர்களாற்செய்யப்பட்டன. ஆங்கிலேயதுரைத்தனம்வந்த ஆரம்பத்தில் அப்போது ராஜாங்கத்தில் நடைபெற்றுவந்த பெர்ஷியன்பாஷையும் நம்நாட்டு ஆதிபாஷையாகிய வடமொழியும், கவர்ன்மெண்டாரவர்களால் ஆதரிக்கப்பட்டுவந்தன. பின்னர் ஒவ்வொருவருஷத்திலும் 1-லக்ஷரூபாய்க்குக்குறையாமல் இந்தியர்களின்கல்வி அபிவிர்த்திக்காகச் செலவழித்தல்வேண்டுமென்றும் ஆங்கிலபாஷையையும் அதன்வாயிலாக மேல்தேசத்துச் சாஸ்திரங்கள் தத்துவங்கள் இவைகளின்சாரத்தையும் இந்தியர்கள் கற்கவேண்டுமென்றும்விதிகளை ஏற்படுத்தினார்கள். இப்பால் ஆங்கிலத்துடன்நாட்டுச்சுயபாஷைகளையும் அபிவிர்த்திசெய்வதற்காகச்சர்வகலாசாலைகளும் அதையொட்டிப் பல காலேஜுகளும், பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தப்பட்டுஅவைகள் நன்குவேலைசெய்வதற்குஉபகாரமாகஉதவிநிதிகளும் (Grant in aid), கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டன.

இந்தியாவில் 5 சர்வகலாசாலைகளிருக்கின்றன. ஐக்கியமாகாணங்கள், வங்காளம், சென்னை, பம்பாய், பஞ்சாபு இந்தமாகாணங்களில் அவைகளிருக்கின்றன. இன்னும் சிலமாகாணங்களில், சமீபத்தில் சர்வகலாசாலைகள் ஏற்படக்கூடும். ஒவ்வொரு சர்வகலாசாலைக்குள்ளும் அடங்கிய காலேஜுகள் பலவிருக்கின்றன. ஐக்கியமாகாணங்களில் 47 காலேஜுகளும், வங்காளத்தில் 61-ம், பஞ்சாபில் 19-ம், பம்பாயில் 16-ம், மத்தியமாகாணங்களில் 6-ம் பர்மாவில் 2 காலேஜுகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சர்வகலாசாலையும் முன்னமேசொல்லியபடி வித்தியாலயசபை(Senate), பிரதிநிதிசபை(Syndicate)யென்பவற்றால் நடந்தேறிவருகிறது. இந்தியாவிலுள்ள எல்லா காலேஜுகள் பள்ளிக்கூடங்கள்விஷயமாக 1911–12 வருஷத்தில் £ 5,256,223 சர்க்காரால் பொதுக்கணக்கிலிருந்து செலவிடப்பட்டன. 1912 வருஷத்துக்கணக்குகளின்படி அடியிற்குறித்தபடி பள்ளிக்கூடங்களின் விவரங்கள் ஏற்படும்.

1912

பப்ளிக்	எண்	மாணுக்கர்களின்தொகை
பிரைமரிப் பள்ளிக்கூடங்கள்	1,23,693	49,92,440
ஸ்கூல்பைனல்வரையுள்ள ஷை	6,398	9,29,303
காலேஜுகள்	187	36,334
ஸ்பெஷல் பள்ளிக்கூடங்கள்	6,205	1,80,196
ப்ரைவேட்டு ஷை	40,120	6,57,728
மொத்தம்	1,76,603	67,96,001

பள்ளிக்கூடங்கள் இருவகைப்பட்டன. (1) சர்க்காரால், சர்க்கார்ச் செலவில் ஏற்படுத்தப்பட்டதும், முன்சொன்ன உதவிதனங்களால் உபகரிக்கப்பட்டதுமான பப்ளிக் பள்ளிக்கூடங்கள். (2) பிரபுக்களால் சொந்தச்செலவின்பேரில் பரிபாலிக்கப்பட்டுவரும் பிரைவேட்டுப் பள்ளிக்கூடங்கள்.

1911ஆம் எடுத்த ஜனசங்கைக் கணக்கின்படி இந்தியாவில் 10க்கு ஒருஆண், 100-க்கு ஒருபெண் இத்தவீதத்துக்குமேல் எழுதப்படிக்கத் தெரியாதென்றும், 100-க்கு ஒருஆண், 1000-க்கு ஒருபெண் இந்த

விதத்துக்குக்குறைவாகத்தான் ஆங்கிலபாஷை எழுதப்படிக்கத் தெரிந்தவர்களென்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தியாவில் பெண் கல்வியும் விருத்தியடையும்பொருட்டு கவர்ன்மெண்டாரவர்கள் அதிகப் பிரயாசை எடுத்துவருகிறார்கள். நமது பெண்கள் அநேகமாகப் பிரை மரிப்பள்ளிக்கூடங்களில்தான் கல்விபயின்றுவருகிறார்கள். 1912 வருஷத்துக்கணக்குப்படி இந்தியாவில் பள்ளிக்கூடத்திற் படித்துவரும் பெண்களின் தொகை 9, 53, 981 என்று விளங்கும்.

விவசாயம்.

தற்காலத்தில் கிராமாந்தரவாசிகளில் 100-க்கு 90-க்குக்குறையாமல் எல்லாரும் விவசாயசம்பந்தப்பட்டவர்களாவார்கள். விவசாயந்தான் இந்துஜனங்களுக்கு முக்கியஆதாரம். நிலசம்பந்தமானவரிகள்தான் மிகுதி. இந்தவரியின்மொத்தம் 1913—14-ல் $31\frac{1}{2}$-கோடி ரூபாய்கள். அதாவது இந்தியா ராஜாங்கத்தாருக்குவரும் மொத்தவரும்படியில் சுமார் $\frac{1}{4}$ பங்குக்குமேற்பட்டதாயும், எச்செலவும்போக மீதவரும்படியில் $\frac{2}{5}$ பங்குமாக ஏற்படும். சென்ற $\frac{1}{4}$ நூற்றாண்டுக்குள்ளாக 10 கோடி ரூபாய்க்குமேல் நிலசம்பந்தமானவரி அதிகப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

1905-ஹுமுதல் கவர்ன்மெண்டாரவர்கள் நம்நாட்டின் விவசாயத்தைச் சாஸ்திரோக்தமாகநடத்தி அபிவிர்த்திசெய்யவேணுமென்ற கருத்துடன் இப்போது நடந்தேறிவரும் ஏற்பாட்டைக் கைக்கொண்டார்கள். வடக்கே தர்பங்காவைச்சேர்ந்த (Pusa) ப்யூசா பட்டணத்தில் ஒரு விவசாயக்கல்விச்சங்கம் உண்டாக்கியிருக்கிறார்கள். அதை வருஷம் 1-க்கு 4 லக்ஷரூபாய் செலவழித்துச் சர்க்காரில்நடத்திவருகிறார்கள். உரம், பூச்சி, விதை, பலன் முதலியவிஷயங்களிற் சாஸ்திரப் பயிற்சியில் தேர்ந்தவித்வான்களைத் தெரிந்தெடுத்து ஆராய்ச்சிசெய்து வருவதோடு அவைகளிற் படிக்கப்புகும் மாணாக்கர்களுக்கும் கல்வி கற்றுக்கொடுக்கிறார்கள். இன்னும் பிறமாகாணங்களில் 6 பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 300 மாணாக்கர்கள்வரை கல்விபயின்றுவருகிறார்கள். இவைகளுக்காக வருஷாவருஷம் 5 6-லக்ஷம்ரூபாய்கள் செலவாகின்றன. மாகாணந்தோறும் விவசாயடிபார்ட்மெண்டு டைரெக்டர் அவருக்கு உதவிபுரியும் டிப்டிடைரெக்டர் இந்த உத்தியோகஸ்தர்களையும் ஜில்லாக்கள்தோறும் (Farm Manager) பார்ம்மானேஜர்களையும் ஏற்படுத்தியிருப்பதோடு, ஒவ்வொருமாகாணத்திலும் முக்கியமான சில ஸ்தலங்களில் விவசாயப்பயிர்ச்செய்கைஇடங்களைஉண்டாக்கி அவ்வவ்விடங்களிலுண்டாகும் விளைபொருள்களைச் சாஸ்திரப்படி பயிர்செய்து அதன்பயனைப் பிறர்க்கு வற்புறுத்திக்காட்டி அவ்விதமாக விளைபொருள்களின் நயத்தையும் விர்த்தியையும், எளிதிற்செய்யும் முறைகளையும் விர்த்திசெய்யமுயன்று, சாமான்யஜனங்களெல்லோரும் எளிதிற் படித்துத்தெரிந்துகொள்ளும்படி அந்தந்தவிடத்துச் சுயபாஷைகளிலும், ஆங்கிலத்திலும் அப்போதைக்கப்போது சிறு வியாசங்களையும், நூல்களையும் அச்சிட்டுவெளியிட்டுத் தேசமுழுவதும் விவசாயஞானம் அபிவிர்த்தியடையும்படி விடாமுயற்சியையும் கவர்ன்மெண்டாரவர்கள் எடுத்துவருகின்றார்கள்.

எம். எஸ். சேஷையங்கார்.

ஸ்ரீ:

புத்தகமதிப்புரை.

—:(o):—

பொதுவிஷயவிளக்கம்:—(நளவருஷம்). இது, சுதேசமித்திரன் பத்திராதிபர் மிஸ்டர் ஏ. ரெங்கஸ்வாமிஐயங்கார், பி. ஏ., பி. எல்., அவர்கள்முதலான ஆங்கிலபாஷையி லுயர்தரக்கல்வியிற் றேர்ச்சிபெற்ற சில தேசாபிமானிகளால், தமிழிலெழுதப்பட்டு 450 பக்கங்களுடையதாய்ச் சென்னைச் சுதேசமித்திரன் பவர் அச்சுக்கூடத்திற் புத்தகரூபமாய்ப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதில், இந்துதேசவாசிகளாகியஜனங்கள் எல்லோரும் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய இந்தியாராஜ்யசம்பந்தமான பலபகுதிகளிலும் நிகழும் விருத்தாந்தங்களும், மற்றுமுள்ள பொதுவிஷயங்களும் இப்போதுநடந்துவரும் ஐரோப்பியமகாயுத்த வர்த்தமானங்களும், நாநாவித மதசங்கமுயற்சிகளும் பிறவும் படிப்பவர்க்கு நன்குவிளங்குமாறுவிரித் தெழுதப்பட்டுள்ளன. இப்புத்தகம் தற்காலநிலைமைக்கு முக்கியமாய் வெளியிடத்தக்கதென்னுங்கருத்துடன் ஸ்ரீமான் ஸர், சுப்பிரமணியஐயரவர்களெழுதியிருக்கும் முன்னுரையில் இதன் பிரயோஜனங்கள் பலவும் நன்கு காட்டப்பட்டிருக்கின்றன

இந்நாட்டில் இலௌகிகவுணர்வை வளர்க்கவும், அதனை விரைவிற் பரவச்செய்யவும் இப்புத்தகம் முக்கியசாதனமாயிருக்குமென்பதொரு தலை. இந்தியாவின் கல்வியபிவிர்த்தி என்னும்பகுதியில், தேசபாஷைகளின்நிலைமை யின்னவிதமாயிற்றென்பதையும், தற்காலத்தில் மதுரைத் தமிழ்ச்சங்கமுதலிய பலசங்கங்களும் தேசபாஷாபிமானிகளும், தேசபாஷாபிவிருத்தியின்பொருட்டு ஆங்காங்கு உழைத்துவருவதையும், பழையமுறையைத்தழுவித் தேசபாஷையைக்கற்பிக்குங் கலாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டுக்கொண்டுவருவதையும்பற்றிச் சிறிதும் காட்டாதிருப்பது தேசபாஷையில் அநாதரக்குறிப்புக்காட்டுவதுபோற் றோன்றுமாயினும், இப்புத்தகம் பொதுவிஷயங்கள் பலவற்றையும் தேசபாஷையில் எல்லாருமறியும்படி வெளியிடத்தொடங்கிய புதியமுறையில் முதன்முதல் வழிகாட்டியாய் மேன்மேலுமபிவிருத்தியடையவேண்டும் நிலையில் வெளியிடப்பட்டிருப்பதால் எல்லோராலும் ஆதரிக்கத்தக்கதே. இதன்விலை ரூ. 1—8—0. வேண்டுவோர் சென்னைச் 'சுதேசமித்திரன்' ஆபீஸுக்கு எழுதிப்பெறலாம்.

குமணன்:—(ஒருதமிழ்நாடகம்) இது, பசுமலை ஹைஸ்கூல் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் கே. ரா. சுப்பிரமணியசர்மா அவர்களால் குமணசரித்திரத்தை ஐந்தங்கங்களாகப்பகுத்துப் படிப்பவர்க்கு விருப்புண்டாகும்படி நாடகரூபமாக நன்றாயெழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணு 6. வேண்டுவோர் இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனார், புதுமண்டபம், மதுரை என்ற விலாசத்துக்கெழுதிப் பெறலாம்.

ஸ்ரீராமன்:—இது வாழ்குடை பி. வேங்கடராமசாஸ்திரிகளால் ராமசரித்திரத்தைச் சங்கிரகித்து யாவரும்படிக்கும்படி தமிழ்நடையிற் செவ்விதாயெழுதப்பட்டிருக்கிறது. இதன்விலை அணு 4. இன்னும் இவர்களெழுதியுள்ள கர்ணன், நளன் என்னும் சிறியகதைப்புஸ்தகங்களும் நறுந்தொகையுரையும் கலாசாலை மாணாக்கர்கள் படிக்கத்தக்கன. இவைகளுக்குவிலை முறையே அணு 3, 2, 3 ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வேண்டுவோர் இவற்றின் ஆசிரியர்க்கெழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கச.]	நளஞு ஆனிமீ	[பகுதி-அ.
Vol. XIV.	June—July, 1916.	No. 8.

ஏதேயாவியம்.

A short account of Homer's Iliad and Odyssey and Vergil's Aeneid

Y

S. MYLVAGANAM,

a Pandit of the Madura Tamil Sangam and an Undergraduate of the University of London.

புராதனகாலத்திலே, அலங்காரம், நாடகம், மதுரபடனம், சித்திரம், சிற்பம் ஆகிய கலைஞானங்களிற் சிறந்து ஐரோப்பா என்னும் நங்கைக்கு நுதலின்கண்ணணிந்த திலகம்போல்விளங்கியது கிரேக்கதேயம். இத்தேயத்தோராகிய கிரேக்கர் ஆரியவமிசத்தவர் என்பதும், இவர் பேசியபாஷை சிறுபான்மை மற்றைய ஐரோப்பியபாஷைகளையும், பெரும்பான்மை ஸமஸ்கிருதபாஷையையும் ஒத்திருப்பது என்பதும் புராதனசரித்திர நூலாசிரியர்பலருடையதுணிபு. யவன் என்னும் அரசனுடையவமிசத்திற்பிறந்தவராதலால் இவர்க்கு யவனர் என்னும் பெயருமுண்டு. போதியசான்றின்மையாற் றமிழ்க்காப்பியங்களிற் கூறப்படும் யவனர் இவரேயென்ஸ்தாபித்த லரிதாகும். அஃது தாபிக்கப்படுமேல் யவனருடைய ஸ்ரீசீர்திருத்தத்துக்குத் தமிழருந் துணைக்காரணரென்னுமுண்மை டப்படும். ஐரோப்பியதேயங்களுட் கிரேக்கம் ஒழிந்த ஏனையதேயத்தவர்திருத்தமடைதற்குப் பன்னூறு வருடங்களுக்குமுன் றோன்றியன, ஏனையோராற் போற்றப்படுவனவும், பெருஞ்சிறப்புவாய்ந்தனவுமா இரண்டுகிரேக்ககாப்பியங்களுள்ளன. இவற்றையியற்றியவர் ஹோமர் (Homer) என்னுங் கவிகிரேட்டர். இவற்றுளொன்று கதைநடைபெற்ற இலிய (Ilium) நாட்டின்பெயரால்

ஈலீயம் (Iliad) எனவும், மற்றையது காப்பியத்தலைவனாகிய உலிசன் (Ulysses, Odysseus) போரால் உலீசம் (Odyssey) எனவும் வழங்கப் படும்.

நவரசங்களுஞ்செறிந்த காப்பியரத்தினங்களாகிய இவ்விரண்ட னுள் முற்படக்கூறப்பட்ட ஈலீயம், ஆசியதுருக்கையின்(Asia Minor) வடமேற்றிசையிலுள்ள துரோயநகரத்திலே (Troia துரோயம், Ilium ஈலியம், Pergama பேர்காமம், இந்நகரப்பெயர்கள்) கிரேக்கருக்கும் துரோயருக்கு மிடையில் நடந்த பெரும்போரை விரித்துக்கூறுவது. இந்நகரத்தரசன்பெயர் பிரியமன்னன்(Priamus). இவன் லயமேதன் (Laomedon) புதல்வன். பிரியமன்னன் தனதுபட்டத்தரசியாகிய எக் கூபை(Hecuba)யோடு அரசுபுரிகின்றகாலத்தில் துரோயம் செல்வ மிகுத்த அழகியநகராயிருந்தது. அரசனுக்குப் புதல்வர் ஐம்பதின்மர். இவருள் ஏகதன் (Hector) என்பான் சுத்தவீரனாகவும், பரிசன்(Paris) என்பான் காமதுரந்தரனாகவும் இருந்தனர். ஒருநாட் பரிசன் ஐதாமலை யின் (Mount Ida) சிங்காரத்தை சுற்றிப்பார்த்துக்கொண்டுவரும் பொழுது மூன்று தேவஸ்திரிகளைச் ந்தித்தான். அவர்களுள் ஒருத்தி தேவராசனாகிய யோபிதா (Jupite இம்மொழி ஆங்கிலத்தில் ஜ்யூப் பிற்றர் என்று உச்சரிக்கப்படும். ஆ னும் லத்தீன்பாஷையில் யூப்பிதர் என்றாவது யோபிதர் என்றாவது உச்சரிக்கப்படவேண்டும். Jove என்பதனையும் ஆராய்க. லத்தீன் t தமிழ் ய, த வை யொக்கும். Piter பிதாவெனப்பொருள்படும்) ன்மனைவி யூனோ (Juno ஏரை Here என்றும்பெயர்). மற்றவள் க சாஸ்திரநாயகியாகிய மீனேர்வை (Minerva, பாலசி Pallas என்று பெயர்) மற்றவள் காமதேவதை யாகிய ஆவிரதை (Aphrodite, நசை Venus என்றும் பெயர்). இவர்களுள் ஒவ்வொருத்தியும் தா எஞ்சியஇருவரிலும்பார்க்க அழ கிற்சிறந்தவளென வாதிட்டுக்கொண் வரும்பொழுதுபரிசனைச் சந்தித்த மையாற் றங்களுடையவழக்கைத் த்துவிடும்படி யவனைக்கேட்டனர். தனக்கு மிகுந்த அழகுடைய ஒரு பண்ணைக்கூட்டிவைப்பதாக ஆவி ரதைகூறிய இரகசியவார்த்தையி பட்ட பரிசன் அவளே அழகிற் சிறந்தவளெனத் தீர்ப்பிட்டான். தனைக்கேட்ட யூனோ "பழிக்கஞ் சாது இவ்வாறுகூறினையல்லவா என்சமர்த்தையுங்காட்டுகிறேன்"

பின்னர் ஆவிரதை தன்னுடையவாக்குத்தத்தத்தின்படி இலக்கத மோனியதேயராசனாகிய (Lacedæmon, Sparta)மேனிலாவனுடைய (Menelaus) மனையாட்டியும், இலேதை(Leda)யிடத்து யோபிதா உண்டாக்கிய இரண்டுமுட்டைகளுள் ஒன்றிலிருந்துதோற்றியவளும், அழகிற்சிறந்தவளுமாகிய எலேனை(Helena Helen)யைக் கவர்ந்து கொள்ளும்படி பரிசனுக்கு உதவிசெய்தாள். பரிசன் எலேனையைத் தன்னூர்க்குக்கொண்டுவந்து மனைவியாக்கிக்கொண்டான். இதனை யறிந்த மேனிலாவன், தானையர் (Danaii) ஆர்கொலிக்கர் (Argolici) அக்கியர் (Achivi) பேலசகர் (Pelasgi) எனப் பல்வேறுவகைப்பட்ட கிரேக்கர்களைத் தனக்குப் படைத்துணையாகவும், தனதுசகோதரனும் மீசேனதேசத்தரசனுமாகிய அகமன்னனை (Agamemnon)ச் சேனைத் தலைவனாகவுங்கொண்டு துரோயநக்கெதிராகப்படையெடுத்துவந்தான். கிரேக்கசேனை ஈலியநகரத்தை முற்றுகைபிட்டுக்கொண்டது. இரு திறப்படைகளுக்குமிடையிற் பதுவருஷகாலமாகப் பெரும்போர்நடந் தது. யவனருட் சிறந்தவீரனாய அகிலேசன் (Achilles) என்பான் அகமன்னன்மேற் பிரீதியின்மைகாரணமாகப் போர்செய்தற்கு மனமில் லாதவனாயிருந்தானாயினும் தன்னுடைய உற்றசினேகிதனாகிய பத்தி ரோகலனைத்(Patroclus) துரோபசேனாபதியாகிய ஏகதன் கொன்று விட்டான் என்றுகேள்விப்பட்டமாத்திரத்தே ஆயுதமேந்தித் தனிச்சமர் புரிந்து ஏகதனைக்கொன்றான். தன் றமையனிறந்தசெய்தியையறிந்த பரிசன் அகிலேசனையெதிர்த்து வஞ்செய்து அவனைத் தன் வாளுக் கிரையாக்கினான். அகிலேசன் படாளெனக்கேள்வியுற்ற யவனத்தலை வர் இனியுத்தத்தினாலன்றி யுக்தியினாலே துரோயரைவெல்லவேண்டு மென்றெண்ணி உலிசனுடையசாற்படி மரத்தினால் மலைபோலப் பருத்த பரியுருவமொன்றைச் சய்துமுடித்தனர். அதன் வயிற்றி னுள்ளே போர்வீரர்பலரை யுத்தபாணிகளாயிருத்திப் பகைவரை யேமாற்றிக் குதிரையை நகரத்துளேயிழுத்துப்போம்படிசெய்யுமாறு சினன் என்பானைநிறுத்தி எஞ்சியர்கள் பகற்பொழுதைத் தனதீவத் திற் (Tenedos) கழிக்குமாறு கப்பலேறிச்சென்றனர். விடிந்தபின் துரோயநகரத்தார் கிரேக்கரானவையாற் றுன்பம் இன்றோடு தொலைந்ததென்றெண்ணிக் கபாடங்களைத்திறந்து வெளியே வந்து

போர்க்களத்தைச் சுற்றிப்பார்த்துக்கொண்டுவரும்போது பரிபுருவத்தைக்கண்டனர். அதனை யாதுசெய்யலாமென் றாலோசித்துக்கொண்டிருக்கையில் வஞ்சனாகிய சினன் வேண்டுமென்று சில ஆயர்கையிற்சிக்குண்டு அரசனுடையமுன்னிலையில் இழுத்துவரப்பட அவனிடத்தில் மரப்பரியின் விருத்தாந்தத்தைச்சொல்லும்படி கேட்டனர். அவன் சொன்னமறுமொழியால் ஏமாந்த துரோயநகரத்தார் வாத்தியகோஷங்களோடு குதிரையையிழுத்துப்போய் காமத்திரில்வைத்துவிட்டு யாமப்பொழுதாம்வரையும் உண்டாடிக் களித்துப் பின்னர் அயர்ந்துநித்திரை செய்தனர். சினன் அர்த்தராத்திரிகாலத்திற் குதிரையின் வயிற்றையும் நகரியின்கபாடத்தையுந் திறந்துவிடத் தனதிவத்திலிருந்து திரும்பி வந்தவர்களும் உண்ணின்றவர்களும் ஒருங்குகூடி நகரமுழுவதையும் அதஞ்செய்தனர். ஆவிரதைக்கும் அங்கிசனுக்கும் (Anchises) புத்திரனாகிய ஏநேயனுஞ்(Aeneas)சிலபிசனங்களும் மாத்திரமே யவனர் கைக்ககப்படாது தப்பியோடினர். மேனிலாவன் றன்மனைவியைமீட்டுக்கொண்டு தனதுதேசத்துக்குத் திரும்பினான். இதனோடு ஈலியகாவியம் முடிகின்றது.

யவனசேனாபதியாகிய உலிசன்யூழியிற் பற்பலஇடர்களுக்குத்தப்பிப் பத்துவருஷகாலம் அலைந்துதிரிந்து தன்னூர்க்குவந்து தானில்லாத காலத்துக் கற்புடைய தன்மனைவியைவலிந்துகொள்வதற்குமுயற்சித்த பலரையும் தன் வில்வலிமையினால்வென்று தன்னாட்டைப் பரிபாலித்ததே உலீசகாவியப்பொருளாகும். இருபத்துநான்கு இருபத்துநான்கு படலங்களாக வகுத்தியற்றப்பட்ட இவ்விரண்டுகாவியங்களும், மூலபாஷையாகிய யவனபாஷையினின்றும் பல்வேறுபாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுப் போற்றிப்படிக்கப்பட்டுவருகின்றன.

துரோயநகரில் நின்றுதப்பிய ஏயனுடையசரிதம், உரோமாபுரிச் சக்ரவர்த்தியாகிய (Roman Emror) ஆகஸ்டஸ் (Augustus) மன்னனுடைய சமஸ்தானவித்துவானாகிய வேர்ஜிலியா (Vergilius) என்னுங் கவிசிரேஷ்டரால் லத்தீபாஷையிற் பெருங்காப்பியமாக அமைக்கப்பட்டிருக்கிறது. சமஸ்கிருதங்கற்கும்பிள்ளைகள் இரகுவம்மிசம், மாகம் முதலிய காப்பியங்களில் இரண்டொருசருக்கங்களையாவது கற்பதுபோல லத்தீன்பாஷையைக்கற்பார் இந்தநூலின் பன்னிரண்டு பரிச்சேதங்களுள் இரண்டுமூன்றைக்கற்பது வழக்கம். யானும்

MADRAS

லண்டன் சர்வகலாசாலைப்பரீக்ஷைகாரணமாகச் சிற்சில பரிச்சேதங்களைக் கற்கநேர்ந்தது. லத்தீன்பாஷையைத் தமிழ்மூலமாகக்கற்பதெளிது. இலக்கணமரபிலுஞ் சொற்றொடர்பிலும் லத்தீன்பாஷை மிகுதியுந் தமிழ்மொழியையொத்தது. இவ்விருபாஷையிலும் வேற்றுமையுருபுகள்கொள்ளும்பெருமையை யொப்பிட்டுப்பார்க்குமிடத்து இதனுண்மை புலப்படும். 'காண்,'' "நான்" என்பனவற்றிடையே வேற்றுமையில்லாத ஆங்கிலபாஷைமூலமாக லத்தீன்பாஷையைக்கற்றலரிது. ஏநேயகாவியத்தின்பாருணடையையுங் கவிரசத்தையும் பார்த்தபோது இதைத் தமிழில் மொழிபெயர்த்தியற்றவேண்டுமென்னும்ஆசை பிடர்பிடித்துந்தச்சிற்சிலபாகங்களைத் தமிழிலமைத்தேன். அவற்றுள் ஒருபாகத்தை யினியாசமுடிவிற் றருகுவன். வேர்ஜிலியருடையகவிமாட்சியைத்தெரிகவிரும்பினோனைகையால் 'வையமென்னையிகழவும் மாசெனக் கெய்தவுமெழுதியம்பினன்.'

யவனகாவியங்களும் இவுஞ் சம்பந்தமுடையபொருளனவாகலின் அவற்றைமுதற்கட்டுரைக்கவேண்டியதாயிற்று. இனி ஏநேயகாவியப்பொருளைத் தொகுத்துக்கூறுவேன்.

முதற்பரிச்சேதம். யூனோவினுடைய கட்டளைப்படி ஏயலன் (Aeolus) என்னும் மாருதராஜன் ஒருபிரசண்டமாருதத்தையுண்டாக்கக் காப்பியத்தலைவனாகிய ஏயனுடைய கப்பல் அதிலகப்பட்டு ஆபிரிக்காவின் வடபாரிசத்தைச்சேர்தல்; ஈண்டுக் கார்த்தாக்கினியநாட்டுக் காசி(Carthaginian Queenஆகிய திதை (Dido) என்னும் மாது ஆவிரதையின் சூழ்ச்சியிலகப்பட்டு ஏநேயன்மேல் மையல்கொள்ளுதல்; விருந்தளித்தல்; விருத்தாந்தத்தைச்சொல்லுமாறு கேட்டல்.

உ-ம் ப-ம். மரப்பரிச் சூழ்ச்சியின் றன்மைத்தெனல்; துரோயநகரின் அழிவுகூறல்.

ங-ம் ப-ம். காப்பியத்தவன் பற்பலஇடங்களுக்கும்பிரயாணஞ் செய்தல்; தந்தையாகிய அங்கிசனுடைய மரணத்தையுரைத்தல்.

ச-ம் ப-ம். தேவர்களுடையகட்டளைப்படி அந்நாட்டைவிட்டு இரகசியமாகவெளிப்படல். திதை காதன்மிகுதியாற் பிரிவாற்றாது தற்கொலைபுரிந்துகொள்ளுதல்.

௫-ம் ப-ம். காப்பியத்தலைவன் சிஸிலியிற் (Sicily) பலவித விளையாடல்களையுங்கண்டு அப்பாற்போய் இத்தாலி(Italy)யைச்சேர்தல்.

௬-ம் ப-ம். பாதாளஉலகிற்குப்போய் இறந்த பலரையுந் தன் றந்தையையும் உரோமாபுரிக்கரசராகப் பிறக்கப்போகின்றவர்கள் பலரையுங் காண்டல்.

௭-ம் ப-ம். இத்தாலியில் லத்தினே (Latinus)என்னும் மன்னனால் உபசரிக்கப்படல். ஆரதேயத்தரசனாகிய (Ardea) தூர்ணனூர் (Turnus) காதலிக்கப்பட்ட லவினியா(Lavinia) என்னும் ராசகுமாரியை விரும்புதல்.

௮-ம் ப-ம். அருக்கதேயத்(Ardian)தானாகிய ஏவாந்தர் (Evander) என்பானைப் படைத்துணைகோடல்; தாயாகிய ஆவிரதையிடங் கவசம்பெறல்.

௯-ம் ப-ம். பிறதுணைவரை நாடிப்போதல்; தலைவனில்லாத சேனையோடு தூர்ணன் போர்புரிதல்.

௧௦-ம் ப-ம். யுத்தம். தேவராதாகிய யோபிதா ஒருபக்கத்துக்கும் உதவிசெய்யவேண்டாமெனத் தேவர்களுக்குக் கட்டளையிடுதல்.

௧௧-ம் ப-ம். யுத்தம்.

௧௨-ம் ப-ம். காப்பியத்தலைவன் தூர்ணனோடு போர்புரிந்துவெல்லுதல்.

கவிகூறுகிறபடி பிற்காலத்திற் பலதேசங்களையுங் கைக்கொண்டு அரசுபுரிந்த உரோமாபுரிச்(Rome) சக்கரவர்த்திகளுட் பலர் ஏநேயனுடையவம்சித்தவர்களாவார்.

ஒவ்வொருபரிச்சேதமும் ஏறக்குறைய 800 அடிகளைக்கொண்டன.

இரண்டாம்பரிச்சேதத்தின் முதல் 53 அடிகளின் மொழிபெயர்ப்பு வருமாறு:—

[குறிப்பு.—காப்புச்செய்யுள் வேறு.]

காப்பு.

அலர்ந்தவெண்சலசமாகுமாசனத்தமர்ந்தபாதம்
புலந்தவிர்தவத்தர்நாளும்புலரியிற்போற்றுபாதம்
நலந்திகழ்பதுமபாதம்நாயினுங்கடையனாவிற்
கலந்திருந்தருளியிந்தக்கவிதையைக்காக்கும்பாதம்.

நூல் இரண்டாம்பரிச்சேதம்.

1. ஓசைநின்றதுயர்வுடைத்தாகிய
ஆசனத்தமர்ந்தார்மனமுங்கவர்
மாசிலாப்புகழ்மன்னுமேநேயனும்
பேசலுற்றனன்பின்வருமாறரோ.

2. இறைமுமெங்கள்செழும்பதிமாட்சியும்
மறையமாற்றலர்மாற்றும்வகையினை
யிறைவிகேட்டனையெந்துயர்மீட்டுற
அறையவென்னிலரிதெமக்காகுமால்.

3. எண்ணுமிக்கதையேதிலர்கேட்பினுங்
கண்ணினீருகுவாரகல்கங்குல்வாய்
விண்ணைவிட்டிழிதாரகைமென்றுயில்
பண்ணுமென்னப்பகர்ந்திடுமாயினும்,

4. தந்துநெஞ்சந்தளர்வுறுமாயினும்
அந்தநீள்பதிக்கெய்தியவந்தமும்
எந்தமக்குறுமின்னலுங்கேட்டிடச்
சிந்தைவைத்தனையாதலிற்செப்புவன்.

வேறு.

5. வருடம்பற்பலகழிந்தனதானையர்மகிபர்
விரவும்போரினில்விதியினான்மிகுதியுமெலிந்து
பரவும்பாலசியருள்கொடுமரத்தினாற்பருத்த
துரகமொன்றினையமைத்தனர்மலையெனத்துலங்க.

பாலசி (Pallas, Minerva) தானையர் (Danaii).

6. தீதிலாதுதம்மூர்செலவழிபடுதேவுக்
ஈதொர்காணிக்கையென்றபொய்வாசகமியம்பிக்
கோதிலாயுதம்பூண்டவொர்குழுவினைமறைவாய்
நீதியற்றவர்பரியிருள்வயிற்றிடைநிறைத்தார்.

வேறு.

7. இவ்வணஞ்செய்தபின்னரியல்பெறுபிரியமன்னன்
செவ்வியகோலுட்செல்வஞ்செறிபுகழ்த்தனததீவம்
தெவ்வராற்பாலையானதிடர்க்கரைகலங்களஞ்சும்
அவ்விடநாடியோடியடைந்தனர்மறைந்துநின்றார்.

பிரியமன்னன் (Priamus) தனததீவம் (Tenedos).

8. சென்றனர்கப்பலேறிச்செழியமீசேனநாடி
நன்றிதுவெனத்துரோயநகருளார்துயரநீங்கி
வன்றிறற்கபாடமுற்றும்வல்லிதிற்றிறந்துபோந்தார்
அன்றவர்நீத்தபாடியனையகண்டகமகிழ்ந்தார்.

மீசேனம் (Mycenæ).

9. தொலப்பியர்சூழலீதேதோன்றுமிவ்விடங்குரூர
வலத்தகிலேசன்பாடிமற்றிதுபோர்செய்தானங்
கலத்திரட்கிடமீதென்றார்கந்துகம்வியந்தார்கன்னி
நலத்தின்மீனேர்வைக்கன்னார்நல்குதக்கணையாமென்றார்.

தொலப்பியர்(Dolopes)அகிலேசன்(Achilles)மீனேர்வை(Miner

10. ஆயிடையருந்துரோயமழித்திடும்விதியினாலோ
தீயவஞ்சனையினாலோதீமதனெழுந்துநின்று
நேயரேயுள்ளிழுத்துநிறுவுவம்பரியையென்றான்
மாயமதுணராரேனும்மதியுளமாந்தர்சில்லோர்.

தீமதன் (Thymœtes).

11. இங்கிதுபகைவர்சூழ்ச்சியிருங்கடலிடுமினன்றேல்
அங்கியிலெரிமினீண்டவகட்டினைப்பிளந்துபார்மின்
றங்கியமாயமென்னச்சாற்றினரருகுநின்றோர்
பங்கிரண்டாகிவேறுபலப்பலகூறினாரே.

ஒருபெருந்திரளாற்சூழுண்டியாரிடமிசைநின்றோடி
வருமிலயக்கோன்சார்ந்தமாந்தரைவிளித்துநோக்கிப்
பெருமதியிழந்தீர்கொல்லோபிரிந்தனர்பகைவரென்று
கருதினிர்கொல்லோவன்னார்காரியமுணர்கிலீரோ.

இலயக்கோன் (Laocoon).

அம்மவவ்வுலிசன்செய்திப்பறிந்ததிம்மட்டோநேரார்
இம்மரப்பொறியினுள்ளேயிருந்திடல்வேண்டுமன்றேல்
எம்மதிணகாமில்லம்வைத்தவோர்வழியீதாகும்
நம்மனமதிக்குமாயம்நம்பிமர்பரியையென்றான்.

கருங்கொடையிதுவென்றூழுந்தானையர்க்கஞ்சினேனென்
றிருந்திறலீட்டியொன்னைறாவியுளிபின்விலாப்புறத்திற்
பொருந்திடவெறிதலோடும்புகுந்ததுநடுங்கிநிற்ப
வருந்தினர்குரலினோசைவயிற்றிடையெழுந்ததன்றே.

தெய்வீகவிதியுமெங்கள்சிந்தைகளின்றிரிவுமின்றேல்
வெய்யவாள்கொண்டொன்னாரைமெலிவிடும்வழியிற்சேர்க்குந்
துய்யவனுரைத்தவாக்குத்துரோயபுரிநிலையிற்சோரா
தய்யனும்பிரியமன்னனாணையுமழியாதன்றே.

வேறு.

3. இந்தப்பொழுதிற்பிற்புறத்திலிறுகப்பிணித்தஇருகரத்தன்
சிந்தைதிடத்தன்நகர்க்கதவந்திறக்கவிரும்பிச்சிக்குண்டான்
எந்தப்படியும்முடிப்பனெனுமிதயனிளையன்றனையீர்த்து
வந்துற்றனர்போரார்ப்புடனேமன்னன்முன்னாயர்சிலர்.

7. பகருஞ்சிறையைப்புடைசூழ்ந்துபார்க்கவிரும்புமீலிய
நகரமாக்கள்பரிகசிக்கநானேநீயோவெனநின்றார்
புகல்வணந்தப்பொழுதவன்றான்புரிந்தவஞ்சந்தானையாம்
பகைவர்வஞ்சமனைத்துமிங்கப்பான்மையென்னத்தேர்குதியே.

8. கையிற்படையொன்றில்லாதான்கலங்குநெஞ்சன்சூழ்ந்தவரைப்
பையநோக்கிப்பகர்கின்றான்பாவியேற்குப்புகலிடந்தான்
ஐயோகரையோகடலெதுவோவாடிமைக்கேதுண்டருகிருந்தார்
வெய்யோரெமருந்தாதனியர்வேண்டிநின்றாரென்னுயிரே.

தாதனியர் (Dardanidæ).

19. இன்னபகரச்சினந்தணிவுற்றிதயமிரங்கிச்சிறையுண்டான்
றன்னைப்பார்த்தெக்குலத்துதித்தாய்சாற்றத்தகுவதுளதேற்சொல்
என்னக்கூறத்துணிந்துரைப்பானிறைவளவையுமியம்புவல்யான்
மன்னுமார்கொலிக்கருலம்வந்தேன்மறுத்துப்புகலேனால்.

ஆர்கொலிக்கர் (Argolici).

20. ஐயசினனைநாணயமிலணங்கொரேழையாக்கிடினும்
பொய்மைகீழ்மைமிலைவபொருந்தப்புரிவளோநற்புகழ்படைத்த
துய்யன்பெலியகோத்திரத்துத்தோன்றுகுமரன்பலமேதன்
செய்யசீர்க்கிப்பிரதாபஞ்செவிப்பட்டிலதோவாங்கவனை.

சினன் (Sinon) நாணயமிலணங்கு (Fortuna) பெலியகோத்திரத்து (Belidæ) பலமேதன் (Palamedis).

21. மற்றிப்போருக்கெதிரென்னவஞ்சக்கரியாற்றீர்ப்பிட்டுச்
செற்றார்பின்னர்க்குறையுணர்ந்துசிந்தைதளர்ந்தார்பேலசகர்
உற்றநண்புமுறவுமவற்குரியேனரியசிறுவயதிற்
பெற்றதாதைக்குறுபிடியாற்பெரும்போர்முகத்தையடைந்தேனே

22. வலியன்மன்னேபலமேதன்மகிபாலவைக்கண்மருவுறுநாட்
பொலியும்புகழும்பெயருமுளேன்பொல்லாவஞ்சம்புல்லுமன
உலிசன்வினையானீரறியவுலகுதுறந்தானவற்காக
மலியுஞ்சினமுந்துன்புமுளேன்வாணாட்கழித்தேன்வீணாக.

23. செயங்கொண்டெம்மூர்சேர்ந்ததற்பின்றீர்ப்பனிந்தப்பழியென்ன
மயங்குமனத்தேன்மொழிந்ததனால்வஞ்சன்வெகுண்டானிதுமுத
இயம்புங்கெடுதியாங்குறைகளினைப்பகூறிப்பயமுறுத்தி [லாய்
உயங்குமொழிகள்பலபேசியுயிருங்கவரநினைத்தனனே.

24. அன்னானமர்ந்தானலன்கருவியாக்கற்கசனைக்கொளுமளவும்
என்னானின்னுதனவியம்பியெய்துமபயனேவெமரெவரும்
ஒன்றொன்னமதிப்பீரேல்உறுந்தண்டனையைவிதிப்பீரே
இன்னானிதகன்மனமிதுவேயெய்துங்களியத்திரிதருக்கே.

கற்கசன் (Calchas) இதகன் (Ithacus Ulysses) அத்திரிதர் (Atridæ).

வேறு.

இத்திறங்கூறினனிடருழந்திடும்
அத்திறம்வினவினமறியமக்கியர்
குத்திரபுத்திபுங்குலறவில்வஞ்சமுஞ்
சித்தமஞ்சினனெனச்சிதயன்செப்புவான்.

அக்கியர் (Achivi).

வேறு.

· நீண்டபோருக்கிளைத்தனராய்நின்றார்துரோயநீத்துவழி
மீண்டுசெல்லப்பன்முறையும்விழைந்தார்விறற்றூனையரெனினும்
தாண்டுந்திரையான்மாருதத்தாற்றவிர்ந்தார்மரத்தாலிப்பரியை
வேண்டிமுடிக்கவிருண்மேகம்விண்ணெத்திசையுமுழங்கினவே.

· ஈதுக்கலைவுற்றிரிபிலனையேவினோமப்பொருடெரியப்
பீதன்கோயிற்கவனுரைப்பான்பேதையுதிரப்பலிசெலுத்தி
வாதமகிழ்சவியம்வருந்தானையரேநீர்மீண்டும்
போதல்பெறுவீர்ஆர்கொலிக்கபுதியசோரிபொழிதலினால்.

இரிபிலன் (Eurypylus) பீதன் (Phœbus) சூரியதேவன்.

[க்கோ
8. என்பான்மொழிதஞ்செவிப்படலும்இதயந்திகைப்புற்றெமரெவர்
தன்பாலபல்லன்விதித்ததெனத்தளர்ந்துபதைத்தார்நடுக்கேறும்
எண்பார்நடுவட்கற்கசனும்எய்தாவுணர்வோன்றனையிதகன்
வன்பாலீர்த்தித்தெய்வமொழிமறைந்தபொருளைவினவினனே.

அபல்லன் (Apollo) பீதன் (ஒருபொருட்கிளவி).

9. வஞ்சனெனக்குக்கருதிடர்கள்வகுத்தார்பலருமவுனத்தோ
டெஞ்சிநடப்பகண்டிருந்தாரியல்சேர்குரவன்றனியுறைந்தீர்
அஞ்சுநாளுமொருமொழியுமறையான்மறுத்தான்றன்மொழியாத்
துஞ்சுமாறுயார்க்கேனுந்தொடருமென்னுந்துணிவாலே.

0. ஈற்றின்மிகுத்தகொதிப்புடனேயிதகனுறுத்தவாய்திறந்தான்
ஏற்றபடியேபலியிடுதற்கென்னைவிதித்தான்முன்னுரைத்த
ஆற்றிலெவருந்தத்தமக்கென்றஞ்சியிருந்தவிதியொருவன்
மேற்சென்றதனால்விலக்காதுவிரும்பியுவரத்தாரனைவோரும்.

31. விள்ளற்கரியதினம்வரலும்வேண்டும்பொருளும்பலியுப்புங்
கொள்ளுங்கன்னத்தணிதொடையுங்கோலம்பலவுமிடப்பட்டேன்
உள்ளதுரைப்பனென்விலங்கையுடைத்துமரணமுறுந்தோடி
யள்ளற்குளத்துக்கோரையினுள் அல்லைக்கழித்தேன் அவரகல.

32. இனியென்றொல்சீர்நாடதனையினியமழலைச்சிறுவர்தமை
நனியாடியவென்றந்தையினைநான்காணுதலைப்பெறுவேனோ
அநியாயத்தோர்என்பிழைக்காயல்லற்பட்டேயுழல்வேன்றன்
மனையோர்தம்மைவருத்துவரோமரணதண்டம்விதிப்பாரோ.

33. உம்பர்தம்மையான்கூறுமுண்மையுணருந்தேவர்தமை
யிம்பரிருப்பிற்சத்தியத்தைதளியேன்முன்னியுமைப்பணிந்தேன்
நம்புமிந்தவாசகத்தைநாடுங்கொடியதுயர்க்கிரங்கும்
வம்பில்வருந்துமனத்தன்மேல்வையுமிரக்கம்வையுமினே.

34. என்னமொழிவான்கண்ணீராலீந்தோமுயிரையிரங்கினோம்
மன்னர்தாமேயவன்றனையைமாற்றுமாறுபணித்தவனைப்
பின்னுநோக்கியன்பினொடுபேசுவார்நீயாரெனினும்
இன்னேகிரேக்கர்தமைமறப்பாய்எம்முளொருவனாயிருப்பாய்.

35. எமக்கிவ்வினைக்கட்குண்மையுரையிந்தப்பருத்தபரியுருவை
அமைத்ததெற்றுக்கெதுவேண்டியாவரிதனையாக்கினார்
சமர்க்கேந்திரமோகாணிக்கைதானோவென்னத்தனையில்கரம்
நிமிர்த்திவானைச்சுட்டிவஞ்சநெஞ்சனடிப்பொடிதுபுகல்வான்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதினைந்தாம்வருஷோத்ஸவ

மங்கலவாழ்த்து.

162399

1. வையம் புகழும் மதுரைத் தமிழ்ச்சங்கத்
தையபதினைந்தாகு மாட்டைநாட்—செய்யும்
விழவிற் சபாபதியாய் வேள்சின்னச் சாமி
யழகன் வருகையினி தாம்.

2. துன்னுபுகழ்ப் பாண்டித் துரைசெயலாற் கூடலின்கண்
மன்னுதமிழ்ச் சங்கம் வளம்பெற்று—நன்னர்
இமிழ்திரைப்பா ரிற்புலவர்க் கேய்ந்தவமு தாஞ்செந்
தமிழ்வளர்த்து வாழ்க தழைத்து.

3. சங்கநிதி சங்க நிதியாய்த் தழைக்கவுல
கெங்கும் தமிழி னிசைபரவத்—துங்கமிகு
சேதுபதி ராஜரா ஜேசன் சிறக்கவரும்
ஆதி பகவ னருள்.

4. சேதுபதி ராஜரா ஜேசனுமிச் சங்கத்தை
யாதரித்துச் செம்பொ னளிப்போரும்—ஆதிமுதற்
கண்ணுங் கருத்துமாய்க் காரியங் கண்டொழுகும்
புண்ணியரும் வாழ்க பொலிந்து.

5. சங்கமும் நல்ல தமிழும் தமிழ்நாடும்
பொங்கு புகழ்சேர் புலவர்களும்—எங்கள்
பெருமான் ஜியார்ஜரசும் பேணுங் கடவுள்
கருணையால் வாழ்க களித்து.

இராமாநுஜ ஐயங்கார்,
சேந்தமிழாபீஸ், தமிழ்ச்சங்கம், மதுரை.

கெத்திசையுங்கேட்டதில்லையென்ன—வுத்தமர்தோ
கல்விபொருண்மிக்ககனதனர்கள்யாவருநஞ்
செல்வவளநாட்டிற்செழிப்பெய்தத்—தொல்புவியிற்
றுய்மொழிமிக்கோங்கத்தகுமாறுதத்தமது
வாய்மொழியேயன்றிமனந்தனுவின்—றாய்மையொடு
செய்திடவிச்சங்கஞ்சிறந்தோங்கச்செந்தமிழ்தேர்
செய்யபாவல்லோர்திறனோங்க—மெய்தவிரா
நன்னுவான்சேதுபதிராஜராஜேஸ்வரமால்
பன்னுஞ்சங்கபரிபாலன்—இந்நாளிற்
பாவலரைக்காவலராக்கும்பரிசருள்வோன்
மேவலர்க்கெந்நாளும்விறற்சிங்கம்—தேவைவளர்
சீராமநாதன்றிருத்தாள்தினந்துதிப்போன்
மாராமநாதபுரவள்ளல்—ஏராருந்
தென்னன்முத்துராமலிங்கசேதுபதிராஜேந்த்ரன்
அன்னையெனப்பல்லுயிரையாதரிப்போன்—மன்னுசங்கம்
ஆதரித்தமுன்னோன்போன்றுதிபனுவிக்காலத்
தாதரித்துக்காக்குமருளுடையோன்—சீதரனைப்
பார்காக்குஞ்சேதுபதியாநம்பார்த்திபன்போ
லார்காத்துநந்தமிழையாள்வார்கொற்—சீர்காக்கு
மன்னன்றிருமரபுவாழ்வோங்கவண்டமிழும்
பொன்னளித்துச்சங்கம்புரப்போருந்—துன்னியவிந்
நல்லவையும்ஜார்ஜுமகாராஜமண்டலேஸ்வரனும்
தொல்லுலகுநாளுஞ்சுடர்தழைக்க—எல்லோரும்
சொல்லாதெழுமொன்றுற்றொடர்தற்கரியவெலாம்
வல்லான்சரண்வழுத்துவாம்.

சு. நல்லசிவன்பிள்ளை,
செந்தமிழாபீஸ், மதுரைத்தமிழ்ச்சங்கம்.

௨

ரஸாயன நூல்.

CHEMISTRY.

“செந்தமிழ்” (தொகுதி-௧௪ பகுதி ௯) ௨௫௨-ம்பக்கத் தொடர்ச்சி.

அத்யாயம்—30.

இரும்பு.

Iron.

[Fe.]

மறுபெயர்—அயம்.

அணுநிறை—56.

உற்பத்தி:—எல்லா உலோஹங்களிலும் இரும்பு அதிக அவசியமானவஸ்து. இரும்புச்சரக்குகளில் முக்யமானவை அயசதுராக்ஸிஜம்(Magnetite$=Fe_3O_4$) அயத்ரயாக்ஸிஜம்(Hematite$=Fe_2O_3$) அயகரிஜம் ($FeCO_3$) அயசிலாஜம் என்பவைகளே. சிலசமயங்களில், தனிஇரும்பு, ஆகாயத்தினின்றும் இரும்புப்பொறி (Meteors)களாகத் தரையில் விழுவதுண்டு.

இரும்பு எடுக்கும் முறைகள் இரண்டு. அவற்றுள் முதலாவது—இரும்புக்கனிகளை நெருப்பிற்காய்ச்சுவதால் அவைகளிலுள்ள கந்தகம் முதலானகலப்புக்கள் கந்தகாக்ஸிஜம்முதலானவைகளாய்ப்பிரியப் பாக்கியுள்ளது அயாக்ஸிஜமாகநிற்கும்.

இரண்டாவது—மேற்படி அயாக்ஸிஜத்தை உலையிலிட்டுக்காய்ச்சி அதனுடன் கரித்துண்டுகளையும் சேர்த்தால், இரும்பிலுள்ள ஆக்ஸிஜன் கரியுடன்கலந்து கரியாக்ஸிஜமாய்ப்போய்விடும். மீதியுள்ள சுத்தஇரும்பு த்ரவரூபமாய் அடியில்தங்கும். அதை வேண்டிய கருக்(Moulds)களில் வார்த்து அந்தந்தரூபமாய்ச் செய்துகொள்ளலாம். இதுதான் வார்ப்பு இரும்பு அல்லது சீமைஇரும்பெனப்படும். இதில் கரி, சிலம், கந்தகம், பாஸம்முதலான பல வேற்றுச்சரக்குகள் சேர்ந்திருக்குமாகையால் இது அவ்வளவு சுத்தமான இரும்பென்று சொல்லப்படமாட்டாது.

மூன்றுவகை இரும்புகள்.

(1) வார்ப்பு இரும்பு அல்லது சீமைஇரும்பு. (Pig or cast Iron). இதுதான் முற்கூறியவாறுசெய்யப்பட்ட அசுத்தமானவகை. சற்றுப் பளபளப்பாயிருக்கும். இதைத் தகடாய் அடிக்கவாவது கம்பியாய் நீட்டவாவது முடியாது. அடித்தால் நொறுங்கிவிடும். ஒருதுண்டுடன் இன்னொருதுண்டை ஒட்டவும் முடியாது. குழாய்கள், தீபஸ்தம்பங்கள், தண்டவாளங்கள், சக்கரங்கள்முதலான வார்ப்புச்சாமான்கள்செய்ய இவ்வகைஇரும்பு உபயோகப்படுகின்றது.

(2) உருக்கு (Steel). இதுவும் பளபளப்பாயிருக்கும். வார்ப்பிரும்பிலுள்ள கரிமுதலான அசுத்தங்களைப்பிரித்தாவது, தேனிரும்பி (Wrought Iron)ற் கொஞ்சம் கரிகலந்தாவது உருக்குச் செய்யப்படும். நல்லஉருக்கில் நூற்றுக்கு 0.7 முதல் 1·7 வாசி கரி கலந்திருக்கும். உருக்கு மிக்க உறுதியுள்ளதாகையால், வாள், ரம்பம், உளிமுதலான ஆயுதங்கள் செய்ய உபயோகப்படுகின்றது. அதிகமாய் இளக (elastic)க்கூடியது. அதில் ஸ்திரமாய்க் காந்தஸாரம் ஏற்றிவைக்கலாம். உருக்கைக்காய்ச்சித் திடீரென்று தண்ணீரிற்போட்டுவிட்டால், அது நொறுங்கும் (Brittle) தன்மையுடைந்துவிடும்.

(3) தேனிரும்பு (Wrought Iron). இது நார் (fibrous) போன்ற அமைப்புள்ளது. மிருதுவானது. கம்பியாகவும் தகடாகவும் அடிக்கக்கூடியது. ஒன்றுடனொன்றை ஒட்டலாம். இதுதான் சுத்தமானஇரும்பு. வார்ப்பிரும்பை த்ரவமாய்க்காய்ச்சி அதிற் காற்றைச்செலுத்தினால், அதிலுள்ள அசுத்தங்கள் பிரிந்துபோகும். பாக்கியிருப்பது சுத்தமான தேனிரும்பு. இது, ஆணிகள், லாடங்கள், கொதிகொப்பரைகள், கம்பிகள்முதலானவைகள்செய்ய உபயோகப்படுகின்றது.

இரும்பும் அமிலங்களும். அயம் அமிலங்களிலுள்ள ஹைத்ரஜனைப் பிரித்து அதன்ஸ்தானத்தில் தான் இருந்துகொள்கிறது. (Hcl)க்ளோராமிலமும் இரும்பும் கலந்தால், ஹைத்ரமும் அயக்ளோரமும் உண்டாகும். இது பச்சைநிறமாயிருக்கும்.

$$Fe+2Hcl=Fecl_2+H_2.$$

கந்தகாமில (H_2SO_4)மும் இரும்புங்கலந்தால், அயகந்தஜமும் ஹைத்ரமும் உண்டாகும்.

$$Fe+H_2\ SO_4=FeSO_4+H_2.$$

நைத்ராமில ($H\ NO_3$)த்திலும் இரும்பு கரைவதுண்டு. அப்பொழுது நைத்ராக்ஸிஜம் உண்டாகும்.

அயகல்பங்கள்.

Iron compounds.

(1) இரும்புத்துரு (Iron rust). இது பலமூலங்கள்சேர்ந்தது. முக்கியமாய் அலோஹைத்ராக்ஸிஜம் (Ferric hydroxide) சேர்ந்திருக்கும். இரும்பைக் காற்றுப்படப்போட்டிருந்தால் அது காற்றிலுள்ள ஜலத்தைப் பிரித்து அயாக்ஸிஜமாகிறது.

(2) அன்னபேதி (Ferrous sulphate). இது சற்றுப் பசுமை நிறமானது. இது இரும்பு, கந்தகம், ஆக்ஸிஜன்கலந்த அயஜகந்தஜம் என்ற கல்பம். இது கருப்புமைசெய்ய உபயோகப்படும்.

(3) அயோகந்தஜம் (Ferric sulphate). அன்னபேதியைக் காற்றுப்படவைத்திருந்தால் அது அநேகமாய் வெண்ணிறமாய்விடும். இதுதான் அயோகந்தஜம்.

(4) அயஜகந்தம் (Ferrous sulphide). ரஸாயனச்சாலைகளில் ஹைத்ரோகந்தம்செய்ய உபயோகமானது. இரும்பையும் கந்தகத்தையும்கலந்து காய்ச்சுவதால் இச்சரக்கு உண்டாகும்.

(5) அயோகந்தம் (Ferric sulphide). இது ஒருபிறவிச்சரக்கு. மஞ்சள் நிறமானது. தங்கம்போல் ப்ரகாசிப்பதுமுண்டு.

அத்யாயம்—31.

வெள்ளி.

Silver.

[Ag.]

அணுநிறை—10·8.

உருகும்வரை—960-வது அம்சம்.

மறுபெயர்—ரஜதம்.

உற்பத்தி. வெள்ளிகந்தம் (Silver sulphide $=Ag_2\ S$) என்னும் கல்பம் ஈயகந்த(Pb S)துடன் கொஞ்சமாய்க்கலந் தகப்படுவதுண்டு. க்ளோரத்துடன்கலந்து கொம்புவெள்ளி (Horn silver $=Ag\ cl$) என்ற ஒருவகைக்கல்பமும் அகப்படும்.

பிரிக்கும் முறைகள்.

முதல்முறை. ஈயகந்தமும் வெள்ளிகந்தமும்கலந்த சாக்கைக் காய்ச்சினால் அவைகளிலுள்ள கந்தகம் ஆக்ஸிஜனுடன்கலந்து பிரிந்து போய்விடும். பாக்கியிருப்பது வெள்ளியும் ஈயமும்கலந்த கலப்பு. இக் கலப்பை உருகக்காய்ச்சிக் கொஞ்சங்கொஞ்சமாய் ஆற்றினால் ஈயம் மாத்திரம் ஸ்படிகாகாரமாய் மேலேதங்கிவிடும். அதைச் சல்லடையிற் புடைத்து எடுத்துவிடலாம். மீதமிருப்பது சுத்தவெள்ளி. ஒருவேளை இன்னும்கொஞ்சம் ஈயக்கலப்பிருப்பினும், அதை மறுபடியும் காற்றுப் படக்காய்ச்சினால் அதிலுள்ள ஈயம் ஈயஆக்ஸிஜமாய்ப்பிரிந்து மிதக்கும். அதை வெகுசுலபமாய் எடுத்துவிடலாம்.

இரண்டாம் முறை. வெள்ளிக்கந்தக (Silver sulphide)த்தைச் சாதாரணஉப்புடன்சேர்த்துக் காய்ச்சினால் வெள்ளிக்ளோரம் (Silver chloride) உண்டாகும். அதனுடன் இரும்பும் தண்ணீரும் கலந்தால் சுத்தவெள்ளி பிரிந்துவிடும்.

2 வெள்ளிக்ளோரம் } = { அயக்ளோரம
இரும்பு } { 2 வெள்ளி

$$2\ AgCl + Fe = FeCl_2 + 2\ Ag.$$

வெள்ளியின்குணங்கள். வெள்ளி பளபளப்பான ஒரு வெள்ளை உலோஹம். சாதாரணச்சூட்டில் காற்று, ஆக்ஸிஜன், ஜலம்முதலான வைகளால் யாதொரு மாறுபாடுமில்லை. வெள்ளி கந்தகத்துடன் வெகு சீக்கிரம்கலந்து கருப்புநிறமான கந்தகவெள்ளி (Silver sulphide) ஆகின்றது. இதனால்தான் தேகத்திலணிந்துள்ள வெள்ளிநகைகளும் வெள்ளிக்காசுகளும் வேர்வையிலுள்ள கந்தகம்பட்டுக் கறுத்துவிடுகின்றன. இது தகடாயடிக்கவும் கம்பியாய் நீட்டவும் அதிசுலபமானது. நல்ல தாபவாஹினி (conductor of heat); நல்ல மின்ஸார வாஹினி. சுத்த வெள்ளி அதிமிருதுவாயிருக்குமாகையால் நாணயங்கள்செய்யும்பொழுது உறுதிக்காக 100-க்கு $7\frac{1}{2}$-முதல் 10-வாசி செம்பு சேர்ப்பதுண்டு.

வெள்ளியும் அமிலங்களும். வெள்ளி நைத்ராமில($H\ NO_3$ = Nitric acid)த்திற் கரையும். கந்தகாமில($H_2\ SO_4$)த்திலும் கொதிக்க வைத்தாற் கரையும்.

வெள்ளிக்கல்பங்கள்.
Silver compounds.

(1) **வெள்ளிநைத்ரஜம்** (Silver nitrate = $Ag\ NO_3$). இதைச் சந்திரக்காரம் (Lunar caustics) என்றும் சொல்லலாம். சதையிற் பட்டாற் புண்பட்டுவிடும். வெள்ளியை நைத்ராமிலத்திற்கரைத்துக் காய்ச்சினால் ஆவியானதுபோக மீதமிருப்பது இந்தஉப்பு. மற்ற வெள்ளிக்கல்பங்களைப்போல இதுவும் சூரியவொளிபட்டாலும், புற் பூண்டுகளிற்பட்டாலும் கறுத்துவிடும். ஆகையால் இதை அழியாமை (Indelible Ink) செய்ய உபயோகப்படுத்துவதுண்டு. வெள்ளிநைத்ர ஜத்தால் உண்டானகறையைப் 'பொட்டாஷியம் ஸைனைட்' என்பதாற் போக்கிவிடலாம்.

முறை:—

வெள்ளி } = { வெள்ளிநைத்ரஜம்
நைத்ராமிலம் } { ஹைத்ரம்

$$Ag + H\ NO_3 = Ag\ NO_3 + H.$$

(2) **வெள்ளிக்ளோரம்** (Silver chloride = AgCl). வெள்ளி நைத்ரஜத்துடன் கொஞ்சம் ஸோடியக்ளோரஜலத்தைச்சேர்த்தால் இவ்வுப்பு உண்டாய்ப் பதங்க(precipitate)மாய் இறங்கும். அதைக் காயவைத்து எடுத்துக்கொள்ளலாம்.

படம் இறக்குதல் (Photography). படம் இறக்குவது வெள்ளி உப்புக்கள்போன்ற சிலகல்பங்கள் சூரியஒளியால்அடையும் மாறுபாட் டைச்சார்ந்திருக்கின்றது. முற்கூறிய வெள்ளிநைத்ரஜம் அல்லது வெள்ளிக்ளோரம் என்னும் கல்பங்களைக் கண்ணாடியில்தடவிப் படம் பிடிப்பதற்கு உபயோகிப்பதுண்டு.

ரஜதாக்ஸிஜங்கள்.
Silver oxides.

ரஜத ஏகாக்ஸிஜம் (Silver Monoxide = $Ag_2\ O$). இது தண்ணீரிற்கரைந்திருக்கும்போது இதற்குக் காரசத்துண்டு. மங்கல் நிற முடையது.

ரஜதத்வயாக்ஸிஜம் (Silver peroxide = $Ag_2\ O_2$). கறுப்பு நிறமாயும் பளபளப்புள்ள ஸ்படிகங்களாகவும் இருக்கும்.

வெள்ளிக்கரிஜம் (Silver carbonate = $Ag_2\ CO_3$). இது சற்று மஞ்சள்நிறமானது. கரிஜங்களையும் வெள்ளியுப்பையும் தண்ணீரிற்

கரைத்தால் வெள்ளிக்கரிஜம் பதங்கமாய் அடியிற்படியும். தண்ணீரிற் கரைந்திருக்கும்போது இதற்குக் கொஞ்சம் காரசத்து உண்டு. காய்ச்சி ஞல் இதிலுள்ள கரியும் ஆக்ஸிஜனும்பிரிந்து மிகுதிவெள்ளி சுத்தமாய் நின்றுவிடும்.

வெள்ளிகந்தஜம் (Silver sulphate $= Ag_2 SO_4$). வெள்ளியைக் கந்தகாமிலத்திற் கரைத்தால் வெள்ளிகந்தஜம் உண்டாகும்.

அத்யாயம்—32.

தங்கம்.

Gold.

[Au.]

மறுபெயர்கள்—பொன், ஸ்வர்ணம்.

தங்கம் மஞ்சள்நிறமும் பளபளப்புமுள்ள ஒரு விலையுயர்ந்த உலோகம். தகடாயடிக்கவும் கம்பியாய்நீட்டவும் எல்லாவஸ்துக்களிலும் மிகச்சுலபமானது. 1064-ம் அம்சத்தில் உருகும். தங்கத்தின் சுத்தத்துக்குத்தக்கவாறு அதை இத்தனைமாற்று (carat) உள்ளதென்று கூறுவதுண்டு. இந்தியர்வழக்கப்படி சுத்தத்தங்கம் $10\frac{1}{2}$-மாற்றென்றும் ஐரோப்பியர் 24 மாற்றென்றும் கூறுவதுண்டு. உறுதியின்பொருட்டுக் கொஞ்சம் தாமிரம் கலப்பதுண்டு. இங்கிலீஷ் பவுன் 22 மாற்றுள்ளது. அமெரிக்கன், பிரான்ஸ், ஜெர்மன்நாணயங்கள் 21·6 மாற்றுள்ளவை.

தங்கத்தை ஆக்ஸிஜனாவது ஹைத்ரோகந்த($H_2 S$)மாவது பாதிக்க மாட்டாது. ராஜாமிலம் (aqua regia = நைத்ராமிலமும் க்ளோராமிலமும் கலந்தது) என்னும்கலப்பு அமிலத்தில்தவிர வேறு அமிலங்களிற் கரையாது.

தங்க ஆக்ஸிஜங்கள்.

Gold oxides.

தங்க ஏகாக்ஸிஜம் (Aurous oxide $= Au_2 O$). இது ஊதா நிறமானபொடி. கொஞ்சம் க்ஷாரகாக்ஸிஜ(basic oxide)த்தன்மையுள்ளது.

தங்கத்ர்யாக்ஸிஜம் Auric oxide $= Au_2 O_3$). கபிலவர்ணமுள்ளது. அமிலகாரி (acid forming).

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B. A., B. L.

உ

அநுதாபக்குறிப்பு.

—:(o):—

இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தவருள் ஒருவரும், கவிராஜபாரம்பரையிற்சிறந்தவரும், அறிவொழுக்கங்களமைந்த முதியருமாயிருந்த திருநெல்வேலிக் கவிராஜநேல்லையப்பபிள்ளையவர்கள் நளவரு வைகாசிமீ 24உ இவ்வுலகவாழ்க்கையைத்துறந்து பரகதியடைந்தசெய்தி அவர்களையறிந்தார்க்கெல்லாம் அநுதாபத்தைவிளைக்கத்தக்கது. இவர்கள், குலபரம்பரையாய் ஒரு புத்தகசாலைபோற் சேமித்துவைத்திருந்த பழையதமிழேடுகளில் வேண்டுவனவற்றை அச்சிடுதற்குபகாரமாகப் பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய சாமிநாதையரவர்களுக்குக் கொடுத்துவந்துள்ளபேருதவிக்குத் தமிழ்நாடு நன்றிபாராட்டற்பாலது. இவர்களுக்குள்ள குணசீலங்களெல்லாம், கீழ்வரும், ஸ்ரீமான் வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள்பாடிய இரங்கற்பாக்களால் நன்குவிளங்கும்.

திரு. நாராயணையங்கார்,
பத்திராதிபர்.

உ

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவும்,
திருநெல்வேலிப்பட்டணத்தில் வித்துவப்பிரபுவாகவும் இருந்த
ஸ்ரீ கவிராசநெல்லையப்பபிள்ளை
(1845—1916), காலஞ்சென்றமையைப்பற்றிய

இரங்கற்பாக்கள்.

1. சாகித் தியம்வல்லார் சங்கீதம் வல்லார்கள்
மோகித் துணையுற்று மொய்ப்பவர்கள்—சோகித்தே
எல்லையற்ற துன்புறவெங் கேய்ந்தாயோ கவிராச
நெல்லையப்ப நீதா நிகழ்த்து.

2. நெல்லையப்ப நேயா நினையன்றிப் பாவாணர்க்
கில்லையப்ப னென்னஅவர்க் கெவ்வெவையும்—ஒல்லை
இனிதுதவி வந்தாய் இனியவ்வா றீயும்
புனிதருளர் கொல்லோ? புகல்.

3. கவிகளியார் சொல்வார்? கவிப்பொருள்ஆர் விள்வார்?
அவிர்பலநூல் வவரா ராய்வார்?—எவர்விருந்தை
ஆசையுடன் ஓம்புவார்? அன்புமிக யாவர்சிவ
பூசைபுரி வார்?நிதம்உன் போல்.

4. இளவல் கவிராச ஈசுரமூர்த் திப்பேர்
வளவன் குமாரசு வாமி—அளவில்
உறவினர்கள் நண்பர் உளர்இவரை யெல்லாம்
பிறியமனம் வந்ததெங்ஙன்? பேசு.

5. கண்ட வுடன்களிகூர் கண்ணும் வருகஎன்று
விண்டு மலர்வாயும் மெய்யன்பால்—அண்டையில்என்
கையைப் பிடித்திருத்துங் கையுமற்றை மெய்யுமினி
வையத்துக் காண்குவதெவ் வாறு?

6. பன்னூலுன் னோடு பயிலுமின்பற் றேன்உன்னை
என்னூல்கள் கேட்பிக்கு மின்பற்றேன்—நின்னூல்கள்
என்னைக்கேட் பிக்கவுறு மின்பற்றேன் எற்கினியின்
புன்னைப்போற் செய்வாருண் டோ ?

7. ஓரைந்நூ றாண்டுன் னொடுபழகி யின்புற்றேன்
ஈரைந்நூ றாண்டிருப்பா யென்றிருந்தேன்—பாரிலொரு
மூக்கானூ றாண்டும் முடியுமுனம் விண்ணுற்றாய்
எக்கால்யா னின்முகங்காண் பேன் ?

8. ஆயிரத்துத் தொண்ணூற்றோ ராமாண் டிடபமதி
ஏயிருபா னன்கா விசைதேதி—சேய்வாரம்
நேரில் கவிராச நெல்லையப்பன் ஓர்பாற்பெண்
சேரிறைவன் தாள்சேர் தினம்.

வெ ப. சுப்பிரமணியமுதலியார்.

உ

மதுரை நாயக்கர்வம்சத்தரசர்கள்.

MADURA NAYAK KINGS.

சொக்கநாதநாயக்கன்.

(1662—1682.)

கி. பி. 1662-ம்ஆண்டில் மதுரைநாயக்கர்வம்சத்தரசனான திருமலை நாயக்கன்மகன் முத்துஅளகாத்ரி இறந்ததும், அவன்மகன் சொக்கநாத நாயக்கன் பட்டத்துக்குவந்தான். அப்பொழுது அவன் சிறுவயதினன். ப்ரதானியாலும், ராயஸக்காரனாலும் ராஜாங்கம் நடத்தப்பட்டுவந்தது. அவர்கள்போதனையால், தலைநகர் திருச்சிராப்பள்ளியாக மாற்றப் பட்டது.

சொக்கநாதநாயக்கனுடைய பேராசை. மஹமதியரைத் தமிழ் நாட்டினின்றுதுரத்தி விஜயநகரஸமஸ்தானத்தை மீட்டவேண்டுமென் பதும், ஜிஞ்சிக்கோட்டையைத் தன்கைவசப்படுத்திக்கொள்ளவேண்டு மென்பதும் அவன் எண்ணம். ஜிஞ்சிக்கோட்டையைப் பிடிக்கும் பொருட்டுத் தளவாய் லிங்கமநாயக்கன்மூலமாய் 40,000 காலாட்படை களை யனுப்பினான். லிங்கமநாயக்கன், பகைவரிடம் லஞ்சம்பெற்றுத் தான்கைக்கொண்டகாரியம்நிறைவேறாது கெடுத்துவிட்டான்.

சதியாலோசனை. லிங்கமநாயக்கன்செய்த துரோகம்தவிர அரண் மனையில் ப்ரதானி, ராயஸன்முதலானவர்களும் சதியாலோசனைசெய்து சொக்கநாதநாயக்கனுக்குத் துரோகம்செய்யத்துணிந்தார்கள். அரசன் சொல்லுக்குவிரோதமாய் அவ்விருவரும் குடிகளை வருத்தத்தொடங்கி னார்கள். சொக்கநாதன் சிறுவனானதால் அவன் அரண்மனையினின்றும் வெளியேவராதபடி, அவனைக் கைதியாகக் காத்துவந்தார்கள். தங்கள் அபிப்ராயங்களுக்குவிரோதமான ராஜஉத்தரவுகளை வெளியேற்று வதேயில்லை. அரசன் எவ்வளவோ நயத்துடனும் பயத்துடனும் சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. கடைசியாய் அவர்களை அரசன் நேரே விரோதித்துக்கொண்டுவிட்டான். உடனே அத்துரோகிகள் லிங்கமநாயக்கனுடன் சேர்ந்துகொண்டார்கள். இந்தவிஷயம் அந்தப் புரமூலமாய் அரசன்காதுக் கெட்டியது. உடனே அரசன் துணிந்து

வேலைசெய்ய ஆரம்பித்தான். துரோகிகள் ஏவுதலால் ராஜ்யப்ரஷ்டர்களாயிருந்த இரண்டுவீரர்களுக்குத் தன்நிலைமையை அறிவித்துச் சில வீரர்களுடன் இரகஸ்யமாய் அரண்மனைவந்து துரோகிகளைக் கைதி செய்யும்படி எழுதினான். அவ்வாறே துரோகிகள் கைதிசெய்யப்பட்டார்கள். ராயஸன் அந்தஇடத்திலேயே உயிரிழந்தான். ப்ரதானி கண்ணிழந்தான்.

லிங்கமநாயக்கனைத் தண்டிக்க அரசன் எண்ணினான். ஆனாலவன் மிக்கபராக்ரமசாலியானதால், தன்கோபத்தை வெளிக்காட்டாது அரசன் சமயம்பார்த்திருந்தான். பிறகு அத்துரோகியைப்பிடிக்கச் செய்தமுயற்சி பயனற்றதாய்விட்டது. லிங்கமன் தப்பியோடி ஜிஞ்சி மஹமதியத்தலைவனான ஸகோஜியுடன்சேர்ந்துகொண்டு இருவரும் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டார்கள். அவர்களுக்கு 12000 காலாட்களும் 7000 குதிரைகளுமிருந்தன. அரசன்சைநியமோ 50000. 'காதலும் துரோகமும் நாவலுக் கடங்கா' என்ற முறைப்படி அரசன் மறுபடியும் தன் உத்யோகஸ்தரின்வஞ்சனைக்குள்ளானான். ஆயினும், மனம்பதறாமல் இனி ஒருவரையும் நம்புவதில்லையென்றதீர் மானத்துடன் போர்புரிய ஆரம்பித்தான். சிலர் விசுவாசத்துடன் உதவி புரிந்தார்கள். லிங்கமனும் ஸகோஜியும் தோல்வியடைந்து தஞ்சை நகருக்கு ஓடிவிட்டார்கள்.

சொக்கநாதன் சிறுவனாயினும் அவன் மனோதைரியமும், ஆழ்ந்த ஆலோசனையும் அவனைக் காப்பாற்றின. அநேகர் அவன்திறமையை மெச்சி அவன்சொன்னபடி நடக்கத்தொடங்கினார்கள். போர்வீரன் என்றபெயர் எங்கும் பரவிற்று. உடனே அவன்சேனை 70000 காலாட்களுடன்கூடியதாயிற்று. தஞ்சாவூர்மேல், படையெடுத்துச்சென்றான். லிங்கமனும் ஸகோஜியும் ஜிஞ்சிக்கு ஓடிவிட்டார்கள். தஞ்சாவூர் அரசன் பணிந்து சமாதானம்செய்துகொண்டான்.

முற்கூறிய ஓயாப்போர்களால் எங்கும் பஞ்சமும், கொள்ளையும், கொள்ளைநோய்களும் பரவின. கடைசியாய்ப் போர்களோய்ந்ததும் ஜனங்கள் ஒருவாறு பயம்தெளிந்து தம்தம் இருப்பிடம்வந்து தம்தம் தொழில்களைச் செய்யத்தொடங்கினார்கள்.

வனமியான். எவ்வளவுகாலம் ஜனங்கள் சுகமடைவார்கள்! 1663ம் ஆண்டில், கஷ்டகாலம் திரும்பிவிட்டது. பீஜபூர்சுல்தான் இதல்கான் ஸேனாபதியான வனமியான் என்பவன் சேனைகளுடன் திடீரென்று தோன்றி திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டான். சொக்கநாதனைத் தஞ்சமடையச்சொன்னான். அரசன் மறுத்துவிட்டான். கடைசியில் மஹமதியத்தலைவன் தோற்றுப்போய்விட்டான். தோற்றுத் திரும்பிப்போகும்வழியில் உள்ள கிராமங்களை நெருப்புக்கிரையாக்கியும், கொள்ளையடித்தும், ஜனங்களைக் கொலைசெய்தும், ஸ்திரீகளை மானபங்கம்செய்தும் இன்னும் பலவிதமாய் ஹிம்சைசெய்துகொண்டும் திருப்தியாய்த் தன்தேசம் சென்றான்.

மஹமதியர்சேனைதொலைந்ததும், தஞ்சைமன்னன் தனக் குதவி புரியாது மஹமதியருக்கு உதவியாயிருந்ததன்நிமித்தம் சொக்கநாதன் அவனைச் சிக்ஷிக்கக்கருதித் தஞ்சைமீது படையெடுத்துச்சென்றான். வல்லம்கோட்டையைப்பிடித்தவுடன் தஞ்சையரசன் சமாதானம் செய்துகொண்டான்.

சேதுபதி. துலுக்கருக்குவிரோதமாய்த் தனக்கு உதவிபுரியாததுரோகத்துக்காகச் சேதுபதியைச் சிக்ஷிக்கும்பொருட்டுச் சொக்கநாதன், படையெடுத்துச்சென்று திருப்புத்தூர், புதுக்கோட்டை, மானாமதுரை, காளையார்கோவில்முதலான கோட்டைகளைப் பிடித்துக்கொண்டான். ஆனால், சேதுபதி பணியாமற் காட்டில் ஒளிந்துகொண்டான். பிறகு அரசன் அவசரநிமித்தமாய்த் தன் தலைநகருக்கு வரநேர்ந்தது. சமயம் பார்த்திருந்த சேதுபதி, தன் மறவர்சேனையுடன் அரசன் சேனையைத் தாக்கி ஹிம்சித்தான். அரசன் தன் மிகுந்தசேனையை வரவழைத்துக் கொண்டுவிட்டான். சேதுபதியின்கர்வத்தை யடக்கமுடியாமற்போய் விட்டது.

சொக்கநாதன், தன்பாட்டன் திருமலைநாயக்கன்கட்டிய அரண்மனையிலிருந்த பொம்மைகளையும், சித்திரப்பணிகளையும்பெயர்த்துத் திருச்சிராப்பள்ளிக்கு அனுப்பினான். இதனால் திருமலைநாயக்கன்மாலின் அழகு குறையஆரம்பித்தது. துரோகி லிங்கமநாயக்கனுக்கும் அரசனுக்கும் எப்படிச் சமாதானமாயிற்றோ தெரியவில்லை. 1666-ம்வருஷம் லிங்கமநாயக்கன்மகளைச் சொக்கநாதன் விவாஹம்செய்துகொண்டதாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. இதல்கான் மறுபடி படையெடுத்த

தீப்பிஜடி பீஜபூர்சுல்தான் இதல்கானைத் தஞ்சமடைந்தான். சுல்தான் மதுரைத்தலைவனைத் துரத்திச் செங்கமலனிடம் தஞ்சையை ஒப்புவிக்கும்படி தன் மஹாராஷ்டிரசேனைத்தலைவனை வேங்காஜி (ஏகோஜீ)யை அனுப்பினான். தஞ்சைத்தலைவன் யுத்தத்துக்குத் தயாராயிருப்பதை யறிந்து வெங்காஜி பக்கத்திற் காட்டில்ஒளிந்து சமயம்பார்த்திருந்தான். இதன்நடுவில் சொக்கநாதனுக்கும் தஞ்சைத்தலைவனுக்கும் விரோதம் நேர்ந்துவிட்டது. தஞ்சைத்தலைவன் ஸ்வாதீனம்பாராட்டிவிட்டான். இந்தநிலைமையில் 1676-ம்ஆண்டில் வெங்காஜி திடீரென்று தஞ்சையைத்தாக்கிக் கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டான். பிறகு வெங்காஜி திருச்சிராப்பள்ளிக்கோட்டையை முற்றுகையிட்டான். அரசன் கோட்டைக்குள் அகப்பட்டுக்கொண்டான். கோட்டை பலமானதால் வெங்காஜி அதைப் பிடிக்கமுடியாமல்விட்டுவிட்டு மற்றச் சிறு கோட்டைகளைப்பிடித்துத் தன்வசப்படுத்திக்கொண்டான். சிறிது காலத்துக்குள், திருச்சிராப்பள்ளிக்கோட்டையைத்தவிர மதுரைராஜ்யத்திற் பெரும்பான்மை வெங்காஜிவசத்தில் வந்துவிட்டது. மறுபடி பஞ்சமும், கொள்ளைகளும் கொலைகளும் தேசமெங்கும் பரவின. ஜனங்கள் பலவிதத் துன்பங்களுக்குள்ளாயினர்.

இதல்கான்சொற்படி, வெங்காஜி தஞ்சையைச் செங்கமலனிடம் ஒப்புவிக்காமல், தன்னதிகாரமாகவே அரசாளத்தொடங்கினான். அவன் காலத்தில் தேசமெங்கும் செழிப்புற்றது. விவசாயம் விருத்தியடைந்தது. பாதைகளும், பாலங்களும், குளங்களும் மராமத்து செய்யப்பட்டன. ராமன் ஆண்டாலென்ன ராக்ஷஸன் ஆண்டாலென்ன? என்ற மாமூலான மனவமைதியுடன் ஜனங்கள் திருப்தியடைந்தார்கள். இதல்கான் வெங்காஜியைச் சிக்ஷிக்கும்பொருட்டுப் படையெடுத்துவருவதாய் வதந்தி பரவிற்று. சொக்கநாதன் ஸ்வாதீனமடைந்து தன் சேனைத் தலைவருடன்சேர்ந்துகொண்டு மறுபடி யுத்தசந்நத்தனானான். மைசூர் அரசன், மதுரைமீதுபடையெடுக்கச் சேனைகளைத் திரட்டிக்கொண்டிருந்தான். 1676-ம் வருஷத்தில் தேசமெங்கும் இவ்வாறு குழப்பமாயிருந்தது.

நிற்க, 1677-ம் வருஷத்தில் மஹாராஷ்டிர மஹாவீரனான சிவாஜி என்பவன் தக்ஷணத்திற் படையெடுத்து அநேகம்கோட்டைகளைப்பிடித்துக்கொண்டு கடைசியாய்த் தஞ்சையைநோக்கிவந்தான். ஜிஞ்சிக்

கோட்டை அவன்வசப்பட்டுவிட்டது. தன்தம்பியும் தஞ்சைத்தலைவனுமான ஏகோஜியைத் தன்னைவந்துபார்க்கும்படி தூதர்கள்மூலமாய் வேண்டிக்கொண்டான். சிவாஜி கொள்ளிடத்தின்வடகரையில் தங்கியிருந்தான். வெங்காஜி சென்றதும் உடனே அவனைக் கைதிசெய்துவிட அவன் இரவில் தப்பி ஆற்றுவெள்ளத்தில் நீந்தி யோடிவிட்டானும். கொள்ளிடத்தின் தென்பாகங்களைச் சிவாஜி தன்வசப்படுத்திக்கொண்டான். சிவாஜி தஞ்சைமீது படையெடுத்துவருகையில் வடக்கே மோகல்சேனை வருவதாயறிந்து அதை எதிர்க்கத் திரும்பிப்போகநேர்ந்தது. போகும்போது தன் தம்பி சந்தோஜியிடம் தான் பிடித்ததேசத்தையும் சேனையையும் ஒப்புவித்து வடக்கேசென்றான்.

சிவாஜி திரும்பியதையறிந்து ஏகோஜி சந்தோஜியின் சேனையைத் தாக்கிக் கொடிய போர்புரிந்தான். சந்தோஜி பின்னடையநேர்ந்தது. ஆயினும் மனோதைரியத்தையிழக்காமல், ஒருயுக்திசெய்தான். தன் சேனையில் ஒரு அணியை ஓர் குழையில் ஒளித்திருக்கச்செய்து தான் புறங்காட்டிஓடினான். தஞ்சைவீரர் யுத்தகோஷத்துடன் தாறுமாறாய்க் கலந்து சந்தோஜியைத்துரத்திக்கொண்டு குழையைக்கடந்துசென்றார்கள். குழையில் ஒளித்திருந்தசேனை தஞ்சைச்சேனையின் பின்புறம் தாக்கிற்று. சந்தோஜி திரும்பி முன்புறம் தாக்கினான். இவ்விதமாய்த் தஞ்சைச்சேனை இரண்டுசேனைகளின்நடுவே அகப்பட்டுத் தோல்வியடைய மிருந்தவர்கள் சிதறியோடினார்கள். சந்தோஜி இவ்வாறு வெற்றியடைந்தான்.

இந்தநிலைமையில், சொக்கநாதன் தஞ்சைமீது படையெடுத்து வந்தான். ஆனால், தன் சேனையில் ஒற்றுமையில்லாததால் ஒன்றும் செய்யமுடியாமல் அவமானத்துடன் திருச்சிராப்பள்ளிக்குத் திரும்பி வந்துவிட்டான்.

சொக்கநாதன் சிற்றின்பத்தில்மூழ்கிவிட்டான். இளவரசனை முத்துஅளகாத்ரி ராஜாங்கத்தை நடத்திவந்தான். பழைய உத்யோகஸ்தர்களைத் தள்ளிவிட்டுத் தனக்குவேண்டியவர்களை நியமிக்க ஆரம்பித்தான். தளவாய் வெங்கடகிருஷ்ணப்பனிடம்மாத்திரம் அவன் அதிகாரம் செல்லவில்லை. தளவாய் உத்யோகம் தனக்குவேண்டுமென்ற ஆசைகொண்ட கோவிந்தப்பையன் அளகாத்ரிக்கு யுக்திசொல்லஆரம்பித்தான். இந்தநிலைமையில் மைசூர்ச்சேனை 1677-ம் வருஷத்தில் மதுரை மீது படையெடுத்துவந்தது.

சொக்கநாதனுக்குப் பைத்தியம்பிடித்துவிட்டதென்று அபவாதம் சொல்லி அவனைச் சிறைப்படுத்திவிட்டு அவன்தம்பி முத்துலிங்கநாயக்கனை அரசனாக்கினார்கள். அவன் கொடிய அரசனானான். மறுபடி முத்துலிங்கனைத்தள்ளிச் சொக்கநாதனை அரசனாக்கினார்கள். முத்துலிங்கன் ஓடிப்போய் ரஸ்தம்கான் என்னும் மஹமதியவீரனுடன்சேர்ந்து இருவரும் திருச்சிராப்பள்ளியை வசப்படுத்திக்கொண்டார்கள். ரஸ்தம்கான் தன் நண்பனான முத்துலிங்கனைச் சிறைபண்ணிவிட்டுத் தானே ஸர்வாதிகாரியானான். இரண்டுவருஷகாலம் ரஸ்தம்கான் கொடுமைக்கு உட்பட்டு ஜனங்கள் தவித்தார்கள்.

1680-ம்வருஷம் மைசூர்ச்சேனைத்தலைவன் குமாரையன் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டான். ரஸ்தம்கான் உள்ளே அகப்பட்டுக் கொண்டான். சொக்கநாதன் முதலானவர்கள் அவனைத்தாக்கி அவனையும் அவன்ஆட்களையும் நாசஞ்செய்துவிட்டார்கள்.

1682-ம்வருஷத்தில் சொக்கநாதன்நிலைமை மிகக்கேவலமாய்விட்டது. மைசூர்ச்சேனை திருச்சிக்கோட்டையைச் சூழ்ந்துகொண்டிருந்தது. உதவிபுரியவந்த மறவர்கள் கொள்ளையடிக்கவும் துரோகம்செய்யவும் ஆரம்பித்துவிட்டார்கள். சாம்பாஜியின்தலைவனான அரசுமலை ஒருபுறம், ஏகோஜி ஒருபுறம் சமயம்பார்த்துநின்றார்கள். இந்தநிலைமையிற் குமாரையனுக்கும் ஜிஞ்சித்தலைவனான அரசுமலைக்கும் கோரமான யுத்தம்நேர்ந்தது. குமாரையன் சிறைப்பட்டான். மைசூர்ச்சேனை ஓடத்தலைப்பட்டது. கோட்டைகள் எல்லாம் அரசுமலை வசப்பட்டன.

இதுவரை அரசுமலை தன்நண்பன் என்றும், தன்ராஜ்யத்தைக்காத்துத் தன்வசம் ஒப்புவிக்கவந்தவனென்றும், சொக்கநாதன் நம்பியிருந்தான். பாவம்! சொக்கநாதன்கதி கேவலமாயிற்று. நாடுகளையிழந்தான். சேனைகள் கைவிட்டன. .செல்வமெல்லாம் அழிந்துவிட்டன. நண்பர்யாருமில்லை. பலவிதத்திலும் கெட்டுப்போனான். சாம்பாஜி மறுபடி திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டான். இந்தநிலைமையிற் பலவிதத்திலும் மனம்நொந்தவனாய் 1682-ம்வருஷம் சொக்கநாதன் மரணமடைந்தான்.

ரங்ககிருஷ்ணமுத்துவீரப்பன்.

(1682—1688.)

கிழவன் ஸேதுபதி. இந்நிலைமையில் இராமநாதபுரம் ஸமஸ்தானச் சரித்திரம் கொஞ்சம்அறியவேண்டிய தவசியமாகும். திருமலைநாயக்கனிடம் விசுவாஸமாயிருந்த சேதுபதி 36 வருஷகாலம் நாட்டையாண்டு இறந்துபோனான். அவனுக்குப்பிறகு அவன்தம்பிமகன் ராஜசூரியன் பட்டத்துக்குவந்தான். அவன் மதுரைத் தளவாய் வெங்கடகிருஷ்ணப்பன்விரோதத்துக் குள்ளானான். தளவாய் ராஜசூரியனைத் தந்திரமாய்ப்பிடித்துத் திருச்சிராப்பள்ளிக்கோட்டைச் சிறையிலடைத்துவிட்டான். பட்டத்துக்குவந்த ஆறுமாதத்தில் ராஜசூரியன் சிறையிலேயே கொலைசெய்யப்பட்டான்.

ராஜசூரியனுக்குப்பிறகு அவனுடைய போகஸ்திரீபுத்ரனான ரகுநாதன் பட்டத்துக்குவந்தான். இவனுக்குக் கிழவன்சேதுபதி என்ற பட்டப்பெயருண்டு. 36 வருஷகாலம் அரசாண்டான். பட்டத்துக்குவந்தவுடன் தான் பட்டம்பெறவுதவியாயிருந்த இருவரைக் கொன்றுவிட்டான். தன் அதிகாரத்துக்குட்பட்ட ஒரு மறவன்மகள் காத்தாள் என்பவளை விவாஹம்செய்துகொண்டான்.

புதுக்கோட்டை ராஜ்யம். இந்தராஜ்யத்தின் முதல்தலைவன் சந்திரப்பன் சேர்வை. அவனுக்குப்பிறகுவந்தவன் பல்லவராயன்தொண்டமான். இவன் தன் நாட்டை இராமநாதபுர அதிகாரத்தினின்றும் பிரித்துத் தஞ்சாவூருடன்சேர்க்க எத்தனித்ததாகஅறிந்து, கிழவன் அவனைத் தொலைத்துவிட்டுத் தன்மைத்துனனான ரகுநாதனைத் தொண்டமான் ஆக்கினான்.

சொக்கநாதன் திருச்சிக்கோட்டையில் ரஸ்தம்கான்கொடுமைக்குட்பட்டுத் தவிக்கையில், கிழவன் அவனைமீட்டிப் பரராஜகேஸரி என்ற பட்டமும் பெற்றான். இதற்கு ப்ரதிஉபகாரமாக, குமாரபிள்ளை என்பவனை இராமநாதபுரம் தளவாயாகச் சொக்கநாதன் அனுப்பினான்.

கி. பி. 1682-ம்ஆண்டில், சொக்கநாதன் இறந்ததும் அவன்மகன் ரங்ககிருஷ்ணமுத்துவீரப்பன் என்ற 15 வயதுச்சிறுவன் பட்டத்துக்கு வந்தான். 4, 5 வருஷகாலத்தில் ராஜ்யம் கொஞ்சங்கொஞ்சமாய் நன்னிலைமைக்குவந்தது.

முத்துவீரப்பன் மிக்கசாமர்த்தியமும் சுறுசுறுப்புமுள்ளவன். எல்லாவிஷயங்களையும் தானேகவனிப்பான். ஒவ்வொரு ஸ்தலத்தையும்பார்ப்பதற்கு உதவியில்லாமல், தானே தனியாய்ச்செல்வான். இவன் காலத்திற் பிறநாட்டரசர்கள் நண்பர்களாகவே யிருந்துவந்தார்கள்.

மோகல்சக்ரவர்த்தியின்செருப்பு. மோகல்சக்ரவர்த்தி தன் செருப்பை யானையின் அம்பாரிமீதேற்றிச் சேனைகளுடன் சிற்றரசர்நாடுகளுக்கு அனுப்புவதுண்டு. தன்நகர்வந்ததும், சிற்றரசன் அதை எதிர்கொண்டழைத்துவந்து, அரண்மனையில், தன்சிங்காஸனத்திற் செருப்பையமர்த்தி உபசாரங்கள்செய்து காணிக்கையுடனும் கப்பத்துடனும் அனுப்பவேண்டுமாம். அதேமாதிரி முத்துவீரப்பன்காலத்திலும் திருச்சிராப்பள்ளிக்குச் செருப்பு ராணுவக்கோலத்துடன் வந்து சேர்ந்தது. முத்துவீரப்பன் எதிர்கொண்டழையாமல், தன் தூதரையனுப்பித் தான் அசௌக்கியமாயிருப்பதால், செருப்பைமாத்திரம் உள்ளே அனுப்பும்படிக்கு வேண்டிக்கொண்டான். சேனைகளை வெளியேநிறுத்திவிட்டுச் சில முக்யஸ்தர்கள் செருப்பைமுன்னிட்டுக் கொண்டு அரண்மனைவந்துசேர்ந்தார்கள். முத்துவீரப்பன் எதிர்கொண்டுவராமல், சிங்காசனத்திலமர்ந்தவாறே கம்பீரமாயிருந்தான். வந்தவர்கள் கோபாவேசத்துடன் அருகில்வந்து செருப்பைச் சிங்காசனத்தின்மீது எறிந்தார்கள். முத்துவீரப்பன் சிரித்துவிட்டுச் செருப்பைக் காலில்மாட்டிக்கொண்டு,'அடேபயல்களா! இன்னொருகாலுக்குச் செருப்பெங்கே?' என்று அலக்ஷியமாய்க்கேட்டான். முக்யஸ்தர்கள் கோபத்துடன் நிந்தித்தார்கள். முத்துவீரப்பன்ஆட்கள் அவர்களை உதைத்து அவமானப்படுத்தித் துரத்திவிட்டார்கள். கோட்டைக்கு வெளியேயிருந்த சைனியமும் நாசம்செய்யப்பட்டது.

1686-ம் ஆண்டில் தளவாய் வெங்கடகிருஷ்ணப்பன் அரசனுக்கு விரோதமாய்க் கலகஞ்செய்யத்தொடங்கினான். கிழவன்சேதுபதி அவனுடன்சேர்ந்துகொண்டான். ஆனால் இராமநாதபுரம் தளவாய் குமாரபிள்ளை மதுரையரசன்மேலுள்ளவிசுவாஸத்தால், அவ்விருவரையும் பிடித்து அரசனிடம் அனுப்ப முயற்சிசெய்தான். இத்தலைமாசாரம் தெரிந்த கிழவன் குமாரபிள்ளையைப்பிடித்துக் கழுவேற்றி அவனுடைய பத்தினியும் பலவாறு ஹிம்ஸித்தான். பிறகு கிழவன்சேதுபதியும், தளவாய் வெங்கடகிருஷ்ணப்பனும் தஞ்சையிலிருந்தும் துரத்தப்பட்ட

செங்கமலநாயக்கனுடன்சேர்ந்து மூவரும் மதுரைமீது படையெடுத்த வந்தார்கள். சிலசண்டைகளானபிறகு சமாதானமாய்முடிந்தது.

முத்துவீரப்பன்மரணம். 1688-ம் ஆண்டில் முத்துவீரப்பன் அம்மைநோயால் இறந்துபோனான். அப்பொழுது அவனுடைய ஒரே பட்டமஹிஷியான முத்தம்மாள் கர்ப்பவதியாயிருந்தாள். உடன்கட்டையேறமுயன்றாள். ஆனால் ப்ரசவமானதும் செய்துகொள்ளலாம் என்ற மற்றவர்கள் தடுத்துவிட்டார்கள். ப்ரசவமாய்ப் பிள்ளைபிறந்தது. முத்தம்மாள் 4-ம்நாள் பன்னீரைக்குடித்து ஜன்னிபிறந்து உயிர்துறந்தாள்

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B. A., B. L

௨

சிலவகுப்பார்களின்பட்டப்பெயர்களைப்பற்றிய குறிப்புகள்

இத்தமிழ்நாட்டார்களுள், பலஜாதியார்களும், வகுப்பார்களும் உள்வகுப்பார்களும் இருக்கிறார்கள். ஒவ்வொருவகுப்பாரும் அவர்களுக்கேயுரிய ஒருபட்டப்பெயரை அவரவர்பெயருடன்சேர்த்துக்கொள்கிறார்கள். இப்பட்டப்பெயரைப்பற்றிச் சற்றுஆராயுங்கால் இந்நாட்டுப்பண்டைநாகரிகசம்பந்தமான பலவிஷயங்கள் வெளியாகின்றன. முற்காலத்தில் மிகக்கீர்த்தியுடன் அரசாண்ட பலஅரசர்களின் குலப்பெயர்களைப் பட்டப்பெயர்களாகப்பூண்டவகுப்பார்கள் சிலர் இன்றும் இருக்கின்றனர். அப்பெயர்களைக்கேட்கும்பொழுதே அதேபெயர்களைப் பூண்ட முற்காலத்து அரசர்களின்செய்திகள் நினைவுக்குவருகின்றன

பல்லவராயன். இத்தென்னிந்தியாவில் முற்காலத்தில் அரசுபுரிந்த பலவமிசங்களுள், பல்லவவமிசம் ஒன்று. பல்லவஅரசர்கள் காஞ்சிபுரம் மாமல்லபுரம் முதலியநகரங்களைத் தங்கள்இராஜதானிகளாகக்கொண்டு தென்தேசத்திற் பெரும்பாகத்தை ஆண்டார்கள். சோணாடு, கொங்குநாடு முதலான பழைய தமிழ்இராஜ்யங்களைக்கைப்பற்றித் தென்தேசத்துச் சார்வபௌமசக்ரவர்த்திகளாய் உத்தேசம் 4-ம்நூற்றாண்டுமுதல் 10-ம்நூற்றாண்டுவரை இவ்வரசர்கள் அரசாண்டார்கள். இக்காலத்தி

பல்லவராயர் என்ற பட்டப்பெயர்பூண்டஜாதியார் முற்காலத்துப் பல்லவசக்ரவர்த்திகளுக்கு எவ்விதத்திலாவது சம்பந்தமுள்ளவர்களா என்பது தெரியவில்லை. இச்சாதியார் கல்வியிலும் செல்வத்திலும் தாழ்ந்தநிலைமையில் இருக்கிறார்கள். பண்டைக்காலத்துப் பல்லவ அரசர்களின்ஞாபகம்கூட இவர்களிடம் இருப்பதாய்த் தெரியவில்லை. இவர்கள் ஒருக்கால்அவ்வரசர்கள்மரபினராகவேயிருந்து பிற்காலத்திற் சீர்குன்றித் தமது முன்மேன்மையின்நினைவையும் இழந்தவர்களாக இருந்தாலும் இருக்கலாம். அரசர்கள் அல்லது சிற்றரசர்களிடம் ஊழியம்புரியும்வேலைக்காரர்கள் அந்தஅரசர்கள் அல்லது சிற்றரசர்கள் பெயரைத் தங்கள்பெயருடன்சேர்த்துக்கொள்ளும்வழக்கம் முற்காலத்திற் பரவியிருந்ததாய்த் தெரியவருகிறது. இவ்வழக்கத்தைக்கைப்பற்றிய பல்லவவரசர்களின் ஊழியக்காரர்களின்மரபினர்களே இக்காலத்துப் பல்லவராயர்களாக இருந்தாலும் இருக்கலாம்.

சாளுவர். இப்பெயர் சாளுக்கியர் என்றபதத்திலிருந்துவந்தது என்று எண்ணப்படுகிறது. சாளுக்கியர் என்பவர்கள், முற்காலத்தில் அரசுபுரிந்த ஒரு பிரபல ராஜவமிசத்தினர். இவர்களுள் மேலைச்சாளுக்கியர் கீழைச்சாளுக்கியர் என்று இரண்டுபிரிவுகள் இருந்தன. கீழைச்சாளுக்கியர் சோழநாட்டின் வடக்கிலுள்ள வெங்கிநாட்டை ஆண்டனர். மேலைச்சாளுக்கியர் அவ்வெங்கிநாட்டிற்குமேற்கே மேல்கடல்வரையுள்ள பெரியநாட்டை வெகுகீர்த்தியுடன் நீண்டகாலம் அரசாண்டார்கள். இவர்கள் ஆளுகைக்குட்பட்டநாட்டிற்குக் குந்தளராஜ்யம்என்றும் ஒருபெயருண்டு. இவர்கள் பன்றிக்கொடியுடையவர்கள். இவர்கள் நாட்டில் வழங்கிய நாணயங்களில் வராகம் (பன்றி) முத்திரிக்கப்பட்டிருந்ததால் அக்காலத்தில் அத்தேசத்து முக்கியநாணயத்திற்கு "வராகன்" என்று பெயர் ஏற்பட்டது. இன்றும் இப்பெயர் நம்நாட்டிலும் வழங்குகின்றது. மேலும் இச் சாளுக்கியஅரசர்கள் ஆதரவிலிருந்து அந்நாட்டிற்குப் பயன்படுமாறு விஞ்ஞானேஸ்வரமுனிவர் என்றபெரியவர், "மீதாக்ஷரம்" என்ற வியவகாரசாஸ்திரம் எழுதினார். இந்தச் சிறந்தகிரந்தம் நமதுதேசம்முழுவதும் பரவி இக்காலத்திலும் இந்தியர்கள்கொண்டாடும் வியவகாரகிரந்தங்களுள், தலைமைபூண்டதாக இருக்கிறது. சோழராஜ்யம் பிரபலமடைந்து மற்றஅரசர்கள் சோழர்களுக்குள் அடங்கினகாலத்திலும் இச்சாளுக்கியர் சோழர்களுடன் ஒயாட்

போர்புரிந்துவந்தனர். சோழஅரசர்கள்பெண்களைச் சாளுக்கியர்மணந்தும் சாளுக்கியஅரசர்கள்பெண்களைச் சோழஅரசர்கள்மணந்தும் இருக்கின்றனர். சோழர்களுள் வெகுகீர்த்திபெற்றுப் பல தமிழ்நூல்களிற் பலவாறு புகழப்பட்டிருக்கிற குலோத்துங்கசோழன், தந்தை வழியிற் சாளுக்கியனும், தாய்வழியிற் சோழனும் ஆவன். பில்ஹணர் என்ற வடமொழிக்கவியும், சாளுக்கியஅரசரின் ஆதரவின்கீழ் முதற்புலவராகஇருந்து வித்யாபதி என்று பட்டம்பெற்றார். இவர், இயற்றிய "விக்கிரமசரிதம்" என்னும் நூலின் கதாநாயகனும் சாளுக்கிய விக்கிரமாதித்தனே. இவ்வாறு பலவிதத்திலும் மேன்மைபெற்று இக்காலத்தும் தங்கள்ஆட்சியின் அறிகுறிகள் பரவிநிற்கும்படி பலநூற்றாண்டுகள் அரசாண்ட சாளுக்கியஅரசர்களுக்கும், இக்காலத்திற் சாளுவர் என்று பட்டப்பெயர்பூண்டு இருக்குமிடமும் தெரியாது ஒடுங்கியிருக்கும் சாதியாருக்கும் எவ்விதத்திலாவது சம்பந்தம் உண்டா என்பது புலப்படவில்லை. இவர்களும் அவ்வரசர்கள்வமிசத்தினரோ அல்லது அவ்வரசர்களின் ஊழியர்களின்மரபினரோ.

காலிங்கராயர். இப்பட்டப்பெயர்பூண்டவர்களும், கல்வியினும் செல்வத்தினும் தாழ்மையுற்றவரே. இப்பெயரும் "களியரான்" என்று வழங்குகிறது. கலிங்கம் என்பது, இப்போது சென்னைராஜதானியின் வடபாகமாயும், ஒரிஸ்ஸாவின் தென்பாகமாயும் உள்ள நாடு. சோழராஜ்யம் பிரபலமடைந்தகாலத்திற் கலிங்கஅரசர்கள் சோழர்களுக்குட்பட்ட சிற்றரசராயினர்கள். குலோத்துங்கசோழராஜன்காலத்தில் அக்காலத்துக் கலிங்கஅரசன் சிலவருடங்களாய்க் கப்பம்கட்டாமல்மறுக்கச் சோழன் தனது தண்டநாயகனை கருணாகரத்தொண்டைமானை அனுப்பிக் கலிங்கத்தை வென்றான். இச்செய்தியைக்குறித்தே சயங்கொண்டார் கலிங்கத்துப்பரணி பாடியிருக்கிறார். தமிழர்களுக்குக் "களியரான்"என்னும் இப்பட்டப்பெயர், கலிங்கஅரசன் இறுமாந்து இறைமறுத்தலையும், குலோத்துங்கசோழன் அவனைவென்று"கலிங்கத்துப்பரணிகொண்டதையும் நினைப்பூட்டுகிறது.

(தொடரும்.)

G. A. சுந்தரம் ஐயர் B. A., B. L.

1916-ஆம் ஜூலைமீ 8உ காலை 10-மணிக்கு நடந்த மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாஹ ஸபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

———:o:———

1. மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் ராஜா ஹிஸ் ஹைனெஸ் பா. இராஜராஜேஸ்வரசேதுபதியாகிய முத்துராமலிங்கசேதுபதியவர்கள் —அக்கிராசனாதிபதி.
2. மகா-ள-ள-ஸ்ரீ கான்பகதூர் H. அப்துல்சுபான் சாஹிப் அவர்கள்.
3. ,, R. இராகவையங்காரவர்கள்.
4. ,, V. S. இராமஸ்வாமி சாஸ்திரியவர்கள் B. A., B. L
5. ,, T. N. சுந்தரராஜையங்காரவர்கள் B. A., B. L.
6. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B. A., B. L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்:—

I. 1916-ஆம் மே, ஜூன்மீங்களின் வரவுசெலவு கணக்குகள் அங்கீகரிக்கப்பட்டன.

II. சென்ற நிர்வாகசபை மீட்டிங்குக்குப்பிறகு சங்கம் மூலதனத்துக்காகவும் கட்டிடத்துக்காகவும்பொருளுதவிசெய்த காரைக்குடி மகா-ள-ள-ஸ்ரீ ஆவி. பள. மு. சிதம்பரம்செட்டியாரவர்களைச் சங்கத்தின் சாசுவத அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளத் தீர்மானிக்கலாயிற்று.

III. 1916—17-ம்வருஷத்திய வரவுசெலவுக்கு உத்தேசமதிப்புத்திட்டம் (Budget) அடுத்த மீட்டிங்குக்குக்கொண்டுவரத் தீர்மானிக்கலாயிற்று.

IV. உதவிப் பத்திராதிபர் இராமாநுஜையங்கார் 10½ நாள் காஷுவல் லீவ் எடுத்துக்கொண்டிருப்பதை அங்கீகரிக்கப்பட்டது.

(Signed) B. Raja Rajeswaran,
President,
Madura Tamil Sangam.

8—7—1916.

(True copy.)

உ

கடவுள்துணை.

*ஆகாப்பத்து.

பெற்றோரைப் பேணா திருத்தல் பிறங்கொளிசேர்
கற்றோரைக் கண்டுவணங் காதிருத்த—லுற்றோர்கள்
சொன்ன மொழிதவிர்தல் சூதாட லிந்நான்கு
முன்னற்கு மாகா வுணர். (1)

ஆசா னடியிணைபோற் றாதிருத்த லன்பகேள்
காசாசை கொண்டு கலங்கிநிற்றல்—கூசாது
முன்னோர்முற் பேசன் முனித லிவைநான்கு
முன்னற்கு மாகா வுணர். (2)

இயற்கையே யன்றி யிறைவனிலை யென்னு
மயற்கைகா ளாதன் மறத்தல்—செயற்கைவிட்டுப்
பொன்னே பிரிதல் புலானுண்ண லிந்நான்கு
முன்னற்கு மாகா வுணர். (3)

கடவுளையெண் ணாதிருத்தல் கன்மனத்த னாத
லிடமிதுவென் றெண்ணி யிடரைத்—திடங்கொண்டு
பின்னின்றூற் காக்கல் பிறழ்ந்துரைத்த லிந்நான்கு
முன்னற்கு மாகா வுணர். (4)

கண்ணருண் டென்றுரைத்த ஞானற்போற் றாதிருத்தன்
மண்ணோர் மகிழநட வாதிருத்த—லெண்ணாதிஃ
தென்னா மெனவிகழ்த லென்மனமே யிந்நான்கு
முன்னற்கு மாகா வுணர். (5)

வயிறு வளர்ப்பானன் மான மிழத்தல்
செயிர்கொண் மனத்தாற் றிரித—லுயிர்காக்கு
மன்னனை தண்டன் மதுவுண்ண லிந்நான்கு
முன்னற்கு மாகா வுணர். (6)

சோகத்த னாத றுடியிடையார் தோண்மேவு
மோகத்த னாதன் முனைபுகழ்ந்து—போகவிட்டுப்
பின்னின் றிகழ்தல் பிதற்ற லிவைநான்கு
முன்னற்கு மாகா வுணர். (7)

சூழ்வயிரங் கொள்ள லமையா திருந்துயங்கல்
வாழ்மனத்த னாகிப் படிக்காது—வாழ்நாளைக்
கொன்னே கழித்தல் கொலைசெய்த லிந்நான்கு
முன்னற்கு மாகா வுணர். (8)

இதனை, ஆக்கியோர் அநுமதியின்றி எவரும் பிரசுரித்தல்கூடாது.

அன்பிறந்த நெஞ்சத்த னாத லனுவெனுமீத்
தின்பமுறு தேங்கி யிரந்துண்ணன்—முன்பிறந்த
நன்னா டிகழ்த னடுநீங்க லிந்நான்கு
முன்னற்கு மாகா வுணர். (9)

வீண னுடனிருத்தல் வீடுவேண் டாதிருத்தன்
மாணின் மனத்தான் மடிந்திருத்தல்—பேணியே
தன்னயத்த னாயிருத்த றக்கோ யிவைநான்கு
முன்னற்கு மாகா வுணர். (10)

சுபம்.

உள. சா. வேங்கடராமன்,
தண்டமிழ்த்தொண்டன்,
கும்பகோணம்.

ஸ்ரீ:

புத்தகமதிப்புரை.

1. இராமசரிதமானசம் என்னும் துளசீராமாயணம்:— (தமிழ் வசனம்) இது, ஹிந்திபாஷையிலிருந்து ஸ்ரீ-உ. வே. நடாதூர் ஸ்ரீநிவாஸாசாரியர் B. A., L. T. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு, இரண்டுமாதத்துக்கொருமுறை ராயல் 160 பக்கங்கொண்டதொரு சஞ்சிகையாக வெளியிடப்பெற்றுவருகிறது. இதன் முதலாவதுசஞ்சிகை வரப்பெற்றுப் பார்வையிடப்பட்டது. மொழிபெயர்ப்பமைதியும் பதிப்பமைதியும் மிகவும்திருப்திகரமாகவே காணப்படுகின்றன. இதன் முதனூலின்பெருமையைத் தமிழர்கள் நன்கறிவதற்கு இது சாதனமாயிருப்பதுமன்றிப் படிப்பவர்க்குப் புலமைத்திறமையைப் புகட்டவல்லதாயுந் தெய்வபக்தியைத் திறப்படுத்துவதாயுமிருக்கிறது. இதிற் சொல்லப்படும்விஷயங்களுக்கு வேதம், உபநிஷத், இதிகாசம், புராணம்முதலிய கிரந்தங்களிலிருந்தும், ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர்நாடகமுதலியவற்றிலிருந்தும் ஆங்காங்கு மேற்கோள்கள் காட்டப்பட்டுவருகின்றன. வடமொழியல்லாத பிறபாஷைகளிலிருந்து தமிழில், சிறந்த மொழிபெயர்ப்புநூல்களையீட்டுதற்குஇது முதலில் வழிகாட்டியாயிருப்பதால், தமிழபிமானிகளெல்லோராலும் இது ஆதரிக்கத்தக்கதே. இதன் ஒவ்வொரு சஞ்சிகைக்கும் விலைரூபா ஒன்றேகால். கிளேஸ்காகிதத்தில் அச்சிடப்பட்ட சஞ்சிகையொன்றுக்கு விலைரூபா ஒன்றரை. 8 சஞ்சிகையில் முடியக்கூடும். வேண்டுவோர், பண்டிட், டி. ஆர். கிருஷ்ணசாரியார், மத்வவிலாச புக்டிப்போ, திருவல்லிக்கேணி, மதராஸ் என்றவிலாசத்துக் கெழுதிப் பெறலாம்.

2. ஐரோப்பியயுத்தம்:—இது, சென்னை ஜநாபிமானிப்பத்திரிகை ன் அதிபராகிய ஸ்ரீ-ஜி. ஏ. வைத்யராமன் பி. ஏ. அவர்களால் தமிழில் ழுதப்பட்டது. இதில், இப்பொழுதுநடந்துகொண்டிருக்கிறஐரோப் பயுத்தம் உண்டானதற்குக்காரணமும், யுத்தத்தில் சம்பந்தப்பட்ட தசங்களினுடைய வலிமையின் அளவும், நூதனயுத்தமுறைகளும், ந்தயுத்தத்தில் சாஸ்திரஞானம் இவ்வளவு உபயோகப்படுகிறதென்ப ம் இன்னும்பிறவும் நன்குவிளக்கப்பட்டுள்ளன. இன்னும், இதில் த்தத்திற்சேர்ந்துள்ள அரசர்முதலிய முக்கியஸ்தர்களைப்பற்றியகுறிப் க்களும், அவர்படங்களும், கப்பற்படை, ஆகாயவிமானங்கள், காட்டைகள், பீரங்கிகள், கிடங்குகள்முதலியவற்றின் விவரமும், தசபடங்களும், விஷயசூசிகையும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப் த்தகம் நாற்பதுஅத்தியாயமுடையது. கிரௌன் பதினாறுபக்கவடிவில்)0 பக்கங்களுடையதாய் நல்லகடிதத்தில் அழகாக அச்சிடப்பட்டிருக் றது. ஆண்பெண் இருபாலாரும்படிக்கும்படி தெளிவானநடையில் ழுதப்பட்டுள்ளது. இதன்விலைரூபா ஒன்றரை. ஜநாபிமானியின் ந்தாதார்களுக்குமட்டும் ஒருரூபா விலைக்குக் கொடுக்கப்படுமென்று தரிகிறது. வேண்டுவோர் மெஸர்ஸ். ஜி. ஏ. வைத்யராமன் அண்ட்கம் பனி, 3. 4. கொண்டிசெட்டிதெரு, ஜார்ஜ்டவுண், மதராஸ் என்ற லாசத்துக் கெழுதிப் பெறலாம்.

---

3. ஜநோபகாரி:—இது, கல்வி, வியவசாயம், வியாபாரம், கைத் தாழில்முதலிய பலவிஷயங்களைக்கொண்டு, மாதம் ஒருமுறைவெளி ரும் தமிழ்ப்பத்திரிகை. இதன் முதற்றொகுதியின்பத்தாம்பகுதி நமது ார்வைக்குவந்தது. இதில் ஜெர்மானியரின்வியாபாரமுறைகள், த்யாக ாஜஸ்வாமிகள், கைத்தொழில்கமிஷன், ஔவை, மாணவர்களும் ஜன மூகஉழைப்பும், இந்தியாவைப்பற்றிய சில கணக்குவிவரங்கள் என்ற லைப்பெயரிட்டவியாசங்களும் பிறவும் சேர்க்கப்பட்டுள்ளன. வியாசங் ளின் நடை எல்லோருமறியும்படியமைந்துள்ளது. உள்நாடுகளுக்கு)தன்வருடச்சந்தா ரூ. 3. தனிப்பிரதி அணா 5. மாதிரிக்காப்பி அணா 1. வெளிநாடுகளுக்கு வருடச்சந்தா ரூ. 4—8—0. தனிப்பிரதி அணா 6. ாதிரிக்காப்பி அணா 2. வேண்டுவோர், மானேஜர், ஜநோபகாரி ஆபீஸ், வலூர் என்றவிலாசத்துக் கெழுதிப் பெறலாம்.

---

4. தியானக்கிரமவிஷயம் :— இது, பென்ஷன்தாசில்தார் ஸ்ரீ . S. இராமசந்திரஐயரவர்களால் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க் ப்பட்டது. இதில், மனம் பரிசுத்தமடைதற்குத்தியானிக்கவேண்டிய ஷயங்கள், தினஸரி அப்பியாசம், வார அப்பியாசம், மாச அப்பியாசம் என மூன்றுவகையாகப்பகுத்து விளக்கப்பட்டிருக்கின்றன. இது முன்பு பூர்ணசந்திரோதயம் என்னும்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு இப்பொழுது புத்தகரூபமாக வெளியிடப்பட்டிருக்கிறது. இதன்விலை அணா 4. வேண்டுவோர் மதுரைப் பிரம்மஞானமந்திரத்தில் விலைக் குப்பெறலாம்.

பத்திராதிபர்.

MADRAS

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கச.] நள௵ ஆடிமீ [பகுதி-கூ.
Vol. XIV. July—August, 1916. No. 9.

கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின்

5-வது ஆண்டுநிறைவின் கொண்டாட்டத்தில்

இராமநாதபுரம் ஸமஸ்தாநாதிபதியும்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் சாசுவதஅக்கிராசநாதிபதியுமான

ஆனரபிள்

ஸ்ரீமத்-ராஜராஜேச்வரஸேதுபதிமஹாராஜா அவர்கள்

சபைத்தலைமைவகித்துச்செய்த

உபந்யாசம்.

சைவத்தின்மேற்சமயம்வேறிலையதிற்சார்சிவமாம்
தெய்வத்தின்மேற்றெய்வமில்லெனுநான்மறைச்செம்பொருள்வாய்
மைவைத்தசீர்த்திருத்தேவாரமுந்திருவாசகமும்
உய்வைத்தரச்செய்தநால்வர்பொற்றாளெம்முயிர்த்துணையே.

சீர்தந்தவெள்ளிதழ்ப்பூங்கமலாசனத்தேவிசெஞ்சொற்
றூர்தந்தவெண்மனத்தாமரையாட்டிசரோருகமேற்
பார்தந்தநாதனிசைதந்தவாரணப்பங்கயத்தாள்
வார்தந்தசோதியம்போருகத்தாளைவணங்குதுமே.

சேதிக்கலாந்தர்க்கமார்க்கங்களெவ்வெவர்சிந்தனையுஞ்
சோதிக்கலாமுறப்போதிக்கலாஞ்சொன்னதேதணிந்து
சாதிக்கலாமிகப்பேதிக்கலாமுத்திதானெய்தலா
மாதிக்கலாமயில்வல்லிபொற்றாளையடைந்தவரே.

*

கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனாதிபதி உமாமகேச்வரம்பிள்ளையவர்கட்கும் இவ் வவையின்கட்கூடியுள்ள கலைவல்லோர்கட்கும் ஏனையோர்கட்கும் விஞ்ஞாபனம்.

கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின் ஐந்தாவது ஆண்டின் நிறைவைக் கொண்டாடும் இக் கழகத்திற்கு யான் தலைமைவகிக்கவேண்டுமென்று கரந்தைத்தமிழ்ச்சங்கத்தார் என்பாலுற்ற அன்பினால் விரும்பியதால் அவ்விருப்பை மறுக்க இயலாதவனாய், யான் மிகவும் கல்வி அறிவு ஒழுக்கம் முதலியவைகளால் நிரம்பிய ஒருவர்க்குரிய இத்தலைமையை வகிக்கத்துணிந்தேன்.

என்னை இவ் வருடக்கொண்டாட்டத்திற்குக் குறிப்பிட்ட காரணம் சிறிதும் யானறியேனாயினும், எனதுமுன்னோர்கள் தமிழ்ப் பாஷையில்வைத்துள்ள அளவிறந்த அன்பினாலும், அவர்கள் தமிழ்ப் பாஷையை நன்கு கற்றோரிடத்து ஈடுபட்டு அவர்கட்குவேண்டும் பொருள்முதலியன ஏராளமாய்க்கொடுத்துள்ள காரணத்தாலும், என்முன்னோர்களில் அநேகமாய் எல்லோருமே தமிழ்ப்பாஷையை நன்கு கற்றோர்களாயுள்ள காரணத்தாலும், இன்னும் இம்மாதிரியான சில காரணங்களாலுமேமட்டும் அப்படிப்பட்ட குலத்திற் பிறந்த என்னைக் கௌரவிக்கவேண்டி இத்தலைமைக்குக் குறிப்பிட்டதாக எண்ணுகிறேன். என் முன்னோர்களில் ஒருவரை, ஓர் கவிஞர் பாடிய காலத்து, "ஆயுந் தமிழினும் போரிலும் பாரிலகத்தியனும், சேயும்" என்றும், "காக்கும் கருணையும் கல்வியும் வாழ்வும் கவிந்தூர, வாக்கும் தழைத்தவன்" என்றும், "பன்னுந் தமிழ்ப்பயிர் வாடாது மாரியிற் பாரின்முத்தும், பொன்னுஞ் சொரியும் ரகுநாதன்" என்றும், "சீதக் கமல வயற்றேவை காவலன் செந்தமிழுங், கீதக் கலையும்வல்லான் ரகுநாதன்" என்றும், எங்கள் சேதுநாட்டைக் கூறுமிடத்து, பால்வாய்ப் பசுந்தமிழ் வீசிய வாசம்பரந்தவைகைக், கால்வாய்த்த நாடென்றும் பாடியிருக்கும் கவிகளையும், சேதுபதிகட்கே பாஷைக் குத்தப்புவார்கண்டன் என்ற ஓர் பட்டமிருத்தலையும், இன்னும் எனதுபிதாமகர் செய்துள்ள அநேகந் தமிழ்நூல்களையும், எனது பிதாவின் தமிழ்க்கலையின் தேர்ச்சியையும், தங்களில் அநேகர்கள் அறிந்தவிஷயமே. அப்படிப்பட்ட நயங்கள் சிறிதும் இலையென்றாலும், தமிழ்ப்பாஷையின் சுவையினும் அதனிடத்துள்ள அநேக

அருமையான விஷயங்களிலும், நன்கு கற்றவர்வாயிலாய்க்கேட்டும் நான் சிலநேரங்களிற் படித்துள்ளநூல்களினிடத்துக் கண்டும் நான் மிகவும் ஈடுபட்டுள்ளவனாக இருக்கிறேன். இதுவும் நான் தலைமைவகிப்பதற்கு ஒரு காரணமாகும்.

இக்கரந்தைத்தமிழ்ச்சங்கமிருக்கும் தஞ்சைநகரின் பழமையையும் பெருமையையும் பொதுவாய்ச் சோழநாட்டின் உயர்வையும் ஒருகாலத்து எல்லா நாட்டினுள்ளும் சிறந்து ஓங்கியிருந்ததன்மையையும் யாவரும் அறிவர். சோழர்கட்குமுன், இப்போதுள்ள மறவர் கள்ளர் இச்சாதியாரின் முன்னோர்கள் நாகர்கள் என்ற பெயரோடு இச்சோழராஜ்யத்தை ஆட்சிபுரிந்ததாகவும், அவர்களின் தலைநகராகத் தஞ்சை திருக்குடந்தை காவிரிப்பூம்பட்டினம் இவ்விடங்களிருந்தனவாகவும் சரித்திரவாயிலாக வெளியாகிறது. சிலப்பதிகாரமென்ற சங்கநூலின்வாயிலாயும் இக்கதை தெரிகிறது. இச்சோழ அரசு எவ்வளவு முற்காலத்தது என்பதற்குச் சான்றாக கி. மு. 247-ம் வருடத்திற்குமுன்பு இலங்கைத்தீவைச் சோழவரசர்கள் படையெடுத்து வென்றிருக்கிறார்களென்பதைக் கூறுவேன். இச்சோழநாட்டின்பெருமையும், அதனிடத்துள்ள அநேகம் சைவ வைஷ்ணவ ஆலயங்களின் உயர்வும், ஆங்கு என்றுமே பஞ்சம் வறுமை முதலியன இல்லாது வளம் கொடுக்கும் அநேக நதிகளிற் சிறந்த பொன்னியாறு என்று கூறும் காவேரியாற்றின் உயர்வும் நீங்கள் யாரும் நன்கு அறிவீர்கள். இந்நாட்டை வர்ணிக்கப்புக்க காலத்து, ஒருகவிஞர்,

> "ஏரியுமேற்றத்தினானும்பிறர்நாட்டு
> வாரிசுரக்கும்வளனெல்லாம்—தேரில்
> அரிகாலின்கீழுகூஉ மந்நெல்லேசாலுங்
> கரிகாலன்காவிரிசூழ்நாடு."

என்று கூறினார். இக்காவேரியாற்றிற்கு இற்றைக்கு 1099-வருடங்கட்குமுன் கரிகாலச்சோழனென்ற அரசனால் அநேகம் கால்வாய்களும் மதகுகளும் ஏற்படுத்தப்பட்டிருக்குமேயாகில் அக்காலந்தொட்டே இச்சோழநாட்டின் வளத்தினும் செழிப்பினும் அரசர்கள் எவ்வளவு ஊக்கமுடையராயிருந்திருத்தல்வேண்டுமென்பது வெளியாகும். சோழ அரசர் ஆட்சி, பர்மாவிலுள்ள கடாரமென்றவூரிலும்,

இலங்கைத்தீவினும், மலேய ஆர்ச்சிபிலகோ என்ற இடத்தினும், நிக்கோபார் என்ற தீவிலும், இன்னும் இந்தியாவில், கன்னியாகுமரிமுதல் இமயப்பொருப்பினின்றுவழியும் கங்கைநதிவரையினும் பரவியுள்ளதென்பது சரித்திரத்தினால் தெரியலாம். 1800-வருடங்கட்கு முன் நலங்கிள்ளியென்றசோழன்மகன் கிள்ளிவளவனென்ற ஓரரசன், இலங்கைஅரசன்புத்திரியை மணந்திருந்தானென்பது தெரிவதால் அவ்வரசாட்சியின் உயர்வு இத்தன்மையது என்று வெளியாகும். மற்றும் அரசாண்ட கோச்செங்கட்சோழன் என்ற அரசனால் இயற்றப்பட்ட தேவாலயங்கள் அநேக நூற்றுக்கணக்கானவை யென்பதையும் சரித்திரங்கள் கூறுகின்றன. பின்னர் அரசாண்ட கோக்கிள்ளி யென்ற சோழ அரசன், நாகர்கன்னிகையை மணந்து தொண்டைமான் இளந்திரையன் என்ற ஒரு குழந்தையைப் பெற்றானென்றும், இப்போது வழங்கும் தொண்டைமண்டலம் என்ற நாட்டிற்கு இது மூலமென்றும் தெரிகிறது. 1050-வருடங்கட்குமுன் முதலாவது ஆதித்யன் என்றஅரசன், கொங்குநாட்டையும் தொண்டைமண்டலத்தையும் கொண்டானென்றும், அவ்வரசனுக்குப் பின்வந்த முதலாவது பராந்தகன், வடஆர்க்காடு, சேலம் ஜில்லாக்களையும், மைசூர் ராஜ்யத்தில் சில பாகங்களையும் பாண்டியநாட்டையும் இலங்கைத்தீவையும் தன் ஆட்சிக்குட்சேர்த்திருந்தானென்றும் தெளிவாய்த்தெரிகிறது. இப்பராந்தகசோழனே சிதம்பரத்தில் விக்கிரமசோழனுலாவிற்கூறிய "கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றங், காதலாற் பொன்வேய்ந்த காவலனும்." என்றபடி சிற்சபை மண்டபத்திற்குத் தங்க ஓடுகளாற் கூரையும், அப்பழநூல், "பாடரவத் தென்னரங்க மேயாற்குப் பன்மணியால், ஆடரவப் பாய லமைத்தோனும்" என்றபடி ஸ்ரீரங்கநாதனுக்குப் பல்வகைரத்நங்களாற் சேஷசயனமும் சமைத்தவன் ஆவன். அக்காலச் சோழஅரசர்களிற்பெரும்பான்மையோர் சைவ வைஷ்ணவமதத்துவேஷமின்றியும் சிறந்த ஒழுக்கமுடையராகவும் இருந்ததாய் அவர்களின் செய்கைகளைக் கூறும் சரித்திரங்களால் தெரிகிறது.

இப்பராந்தகசோழன் இப்போது கொங்குதேசமென்றும் கோளதேசமென்றும் பேர்வழங்கும் மலையாளராஜ்யத்தின்அரசரின் மகளை மணந்து ஹிரண்யகர்ப்பம் துலாபாரம் என்ற யாகங்களைச்

செய்ததாகச் சரித்திரம் கூறும். இதற்குப்பின் 985முதல் 1013வரை அரசாண்ட ராஜகேசரிவர்மன் என்ற முதலாவது ராஜராஜன், கொல்லம்முதல் ஒரிசாவரையிலும் தனது ஆட்சியைப் பரவச் செய்திருந்ததாய்த் தெரிகிறது. இவ்வரசனே 1013ல் கடலிடத்துள்ள 12000 தீவுகளைத் தன்வசப்படுத்தியவன்; இவ்வூரிலுள்ள, சிற்பத்தால் மிகச்சிறந்த ப்ரகதீச்வரஸ்வாமி கோவிலையும், கங்கைகொண்டசோழபுரத்திலுள்ள ஆலயத்தையும் கட்டியவன். தனது தானசாஸனங்களில் தன் சரித்திரத்தைச் சுருக்கி முற்கூறும் வழக்கத்தை இவன் புதிதாய் ஏற்படுத்தியவன். இவற்குப்பின் வந்த ராஜேந்திரசோழன், 1044வரு வரை அரசாண்டும், கஞ்சம்ஜில்லா மகேந்திரகிரிவரையுள்ள நாடுகளை வென்றும், கீழ்ப்பர்மாவிலுள்ள கடாரத்தைக்கொள்வதற்காகக் கப்பற்படை ஒன்று அனுப்பியும், நிக்கோபார் என்ற தீவைக்கொண்டும், அரசாண்டவன். இவற்குப்பின் முதலாவது ராஜாதிராஜதேவர் என்ற அரசரும், ராஜமகேந்திரர் என்றவரும், வீரராஜேந்திரதேவர் என்றவரும் அரசாண்டதாய்த் தெரிகிறது. கடைசியிற் கூறிய இவ்வரசன்புத்திரியைமணந்த ஆறுவது விக்கிரமாதித்தியன் என்ற வடபாலிலுள்ள ஓரரசன் சோழராஜ்யத்தின்மீது படையெடுத்துவந்தபோது, குலோத்துங்கன் என்ற சோழ அரசன், இப்போது மைசூர் ராஜ்யத்தில் தங்கச் சுரங்கங்கள் உள்ள கோலார் என்ற இடத்திலிருந்து துங்கபத்திராநதிவரை 1073-ம் வருடத்தில் அவனைத் தோற்று ஓடும்படி துரத்தியதாகத் தெரிகிறது.

முதலாவதுகுலோத்துங்கனின்மகன் விக்கிரமசோழன் 1118 முதல் 1135 வரையிலும், இரண்டாவது குலோத்துங்கன் 1135 முதல் 1146 வரையிலும், இரண்டாவது ராஜராஜன் 1146 முதல் 1171 வரையிலும், ராஜாதிராஜன் 1171 முதல் 1178 வரையிலும், மூன்றுவது குலோத்துங்கன் 1178 முதல் 1215 வரையிலும், மூன்றுவது ராஜராஜன் 1216 முதல் 1244 வரையிலும், மூன்றுவது ராஜேந்திரசோழன் 1246 முதல் 1267 வரையிலும் சோழராஜ்யத்தை ஆண்டுவந்தார்களென்று தெரிகிறது. அதன்பின் இச்சோழராஜ்யம், விஜயநகரத்து அரசர்களால் 1600-வது வருடம்வரையிலும் அரசாளப்பட்டும் அதன்பின் நாயக்கர்கள் ஆட்சிக்குட்பட்டும் 1691 முதல்

முகல்ஸ் என்ற துருக்கஜாதியார் ஆட்சியிலிருந்தும் பின்னர் மகாராஷ்டிரர் ஆளுகையின்கீழமர்ந்தும் வந்ததாகத் தெரிகிறது. 1749-ல் சோழதேசம், ஏனைய சுற்றுள்ள நாடுகட்கு ஒப்ப இனிமேல் என்றைக்கும் மாறுபாடடையாவண்ணம் நமது ஆங்கிலத் துரைத்தனத்தாரவர்கட்கு வந்ததென்பது இத்தஞ்சைநகரைத் தலைமையாகவுடைய இச்சோழதேசத்தின்சரித்திரத்தின்சுருக்கம்.

இத்தகைய ஒப்பற்ற இச்சோழராஜ்யத்தின் தலைநகரின்கண்ணே தாய்மொழியாகிய தமிழ்ப்பாஷையை அதன் தற்காலந்தளர்ந்தநிலையினின்றும் முன்னிருந்த உயர்ந்தநிலைக்குக்கொண்டுவருவதே முக்கியகாரணமாக இத்தமிழ்ச்சங்கம் ஏற்பட்டுள்ளது தமிழ் அபிமானிகள் எல்லோர்க்கும் பெருமகிழ்ச்சியை அளிப்பதாகும். தமிழ்ப் பாஷையின் உயர்வு இவ்வளவென்று யாரும் அளவிட்டுக்கூறுதல் முடியாதகாரியமாகும். அத்தமிழ்ப்பாஷையை, இப்போது நமது சர்வகலாசங்கத்தார் பள்ளிக்கூடங்களிற் கட்டாயப்பாடங்களில் ஒன்றாகச்சேராதது தமிழ்ப்பாஷைக்குப் பெரிய ஓர் தீங்கை விளைவித்திருக்கிறது. அச்சர்வகலாசங்கத்தில் மிக்க செல்வாக்குடைய எனது நண்பர் ஒருவர் தமிழராயிருந்தும், தமிழ்ப்பாஷை மனத்திற்கு உற்சாகத்தைக்கொடுக்கும் பாஷை(Emotional Language)என்றும், ஆனதால் அதைப் பள்ளியிற் படிக்கும் மாணாக்கர்கள் தாங்களே கற்கவேண்டியதென்றும் சொன்னார். ஆனால் அவர் சொல்லியது எனக்கும் இன்னும் எனது பல நண்பர்கட்கும் உடன்பாடில்லாத காரணத்தால் அதைச் சிறிதும் கவனிக்கவில்லை. உலகத்திலுள்ள எந்தப் பாஷை நன்றாய்க் கற்றநிலையில் மனதிற்கு உற்சாகத்தை அளிக்கத் தகாதது?

ஆங்கிலதேசங்களில் தாய்ப்பாஷை ஆங்கிலமாயிருந்தும், மேற்கண்ட ஆங்கிலபாஷையை வற்புறுத்தி மாணாக்கர்கட்குக் கற்பிப்பதுபோல் ஏன் இத் தமிழ்த்தேசத்தில் தாய்ப்பாஷையாகிய தமிழ்ப் பாஷையைக் கற்பிக்கப்படாது. இதன்காரணம் எனக்கு நன்கு தோற்றவில்லை. அப்படிப் பாடங்கள் ஏற்படுத்தினபோதிலும், தமிழ்ப் பாஷையில் நல்ல பயிற்சியுடையவர்களைக் கலந்து அவர்கள் குறிப்பிடும்புத்தகங்களைப் பள்ளியிற்பாடமாகவைத்தல் மிகவும் முக்கியமானதாகும். நமதுராஜாங்கத்தார் (கவர்ன்மெண்டு) இப்பாஷையின்

அபிவிர்த்தியிற் சிரத்தை காட்டினாலல்லது இப்பாஷையின்விர்த்திக்கு ஒருபோதும் வழிகள் ஏற்படமாட்டாது. அப்படி ராஜாங்கத்தார்க்கு ஊக்கம் ஏற்படும்படி செய்யவேண்டுவது இத் தமிழ்ச்சங்கம்போன்ற கழகங்கட்கும் நம்போன்ற தமிழபிமானிகட்கும் முதன்மையான கடமையாகும்.

இக்காலத்தில் முன்போல் தமிழை வளர்ப்பார் பலர் இலர். இற்றைக்கு 300 வருடங்கட்குமுன் இராமநாதபுரத்தில் அரசுபுரிந்த ரகுநாதசேதுபதி என்றவரைப் பாடிய புலவர்,

> "மூவேந்தருமற்றுச்சங்கமும்போய்ப்பதின்மூன்றொடெட்டுக்
> கோவேந்தருமற்றுமற்றொருவேந்தன்கொடையுமற்றுப்
> பாவேந்தர்காற்றிலிலவம்பஞ்சாகப்பறக்கையிலே
> தேவேந்த்ர தாருவொத்தாய்ரகுநாதசெயதுங்கனே."

என்று கூறியுள்ளார். அக்காலத்தே தமிழ் அபிமானிகளும் தமிழை வளர்க்கும் அரசர்களும் அவ்வளவு குன்றியிருந்தால் இப்போது அதனினும் அபிமானிகள் எவ்வளவு குறைந்திருக்கவேண்டுமென்பது நான் சொல்லாமலே தங்கட்குத் தெரியலாம். இக்காலத்திலுள்ள ராஜாக்களும் ஜெமீன்தார்களும் மிராசுதார்களும் ஒருபோதும் தமிழ்ப்பாஷையைக் கருதி அதன் அபிவிருத்தியிற் கருத்துவைத்து அதற்கு வேண்டும் உபாயங்கள் தேடுவதில்லை. அவருள் அருமையாய்ச் சிலர் தங்கள்மீது புலவர்கள் புகழ்ந்துபாடும் கவிகளைக் கேட்டு மகிழ்வதன்றி வேறு எவ்விதமுயற்சியும் உடையவராய் இருத்தலை நாம் காணவில்லை.

இத் தஞ்சைஜில்லாவிலும் இன்னும் மற்றஇடங்களிலுமுள்ள பெரிய மடாதிபதிகள், இக்காலத்தில் முன்போல் பாஷைவிருத்திகளிலாவது மதாசாரங்கள்முதலிய கோட்பாடுகளின் விருத்தியிலாவது சிரத்தையில்லாதவர்களாயிருப்பது மிகவும் விசனிக்கத்தக்கதே. இப்போது, சமீபத்தில் திருவாவடுதுறையில் எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகரவர்கள்காலத்தில் எத்தனை தமிழ்ப்புலவர்களும் இதரபாஷைவல்லவர்களும் இருந்திருப்பதாய்க் கேள்விப்படுகிறோம். அவ்வாதீனத்திற் கலைபயின்றவர்களுள் இன்றைக்கும் உலகமெங்கும் புகழும்படி கல்விபயின்றபடிஒழுகும் குணமுடையராய் எல்லோராலும்

நன்கு பாராட்டப்பட்ட நமது மகாமகோபாத்தியாயர் **சாமிநாத ஐயரவர்க**ளொருவராவர். அவர்கட்குப்பின் எந்த ஆதீனத்திலிருந்தாவது நன்றாய்க்கல்வி பயின்றவர்கள் வந்திருப்பதாய்த் தெரியவில்லை. எல்லா ஐச்வரியவந்தரிலும் மடாதிபதிகள்மட்டுமே இப்படிப்பட்ட விஷயங்களில் ஏராளமானபொருள் செலவழிக்குந்தகுதியும் கடப்பாடும் உடையவர்களென்பதை யாரால் மறுக்கமுடியும். அப்படியிருந்தும் அவர்களால் இத்தமிழ்ப்பாஷை பராமுகம்செய்யப்படுவதைநோக்குங்கால் இன்னும் இப்பாஷையின்விர்த்திக்கு ஏற்றகாலம்வரவில்லையென்றே மனம் மிகவும் கிலேசத்தோடு எண்ணத்துணிகிறது.

இப்போது திருவாவடுதுறையிலுள்ள **ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள்** கல்வி அறிவால் எவ்வளவோ சிறந்தவர்களாயிருந்தும், தமிழ்ப்பாஷையில் அளவிறந்த ஆராய்ச்சிகள்செய்தும் அப்படிப்பட்ட அரியவிஷயங்களைப் பிறர்க்கு உபயோகப்படுமாறு இன்னும் வெளியிட்டிலர். அவர்களிடத்து இத்தமிழ்ச்சங்கத்தார் தெரிவித்து அவர்கள் கண்டுள்ளவிஷயங்களை வெளியிடுமாறுசெய்தால் அது தமிழுலகிற்கு ஓர் பேருபகாரமாகும். இத்தகையதமிழ்ச்சங்கம் ஒவ்வொரு பெரியநகரங்களிலும் ஏற்பட்டு இந்நகரத்தைத்தமிழ்ச்சங்கத்தார்போன்று ஒவ்வொரு சங்கத்து அங்கத்தினர்களும் ஊக்கத்தோடு பாஷையின்விர்த்திக்குப் பாடுபடுவராயின், தமிழ்ப்பாஷையை முன்னிருந்தபெருமையிலேயே அதிசீக்கிரத்தில்வைக்கலாமென்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை.

இத்தமிழ்ச்சங்கத்துவேலைகளுள் இதரபாஷையிலுள்ள உயர்ந்த புத்தகங்களை எளியநடையில் மொழிபெயர்த்துத் தமிழ்மக்கட்கு உதவவேண்டுவது ஓர் பெரியகடமையாய்க் கருதவேண்டும். அப்படிப்பட்ட முயற்சி மேற்கொண்டுசெய்வதற்கு அநேகம் ஆங்கிலம்கற்றோரும் உடந்தையாயிருப்பரென்று எண்ணுகிறேன். இக்காலத்தில் ஆங்கிலம் கற்றவர்கள் தாங்கள் பரீக்ஷையில் தேறுவதற்குமட்டுமே தமிழ்ப்பாஷையைப்படிப்பதன்றி அப்பாஷையிலுள்ள அரியவிஷயங்களை அறிவதற்குப் பெரும்பான்மையோர் முயல்வதேயில்லை. சமீபத்தில்நடந்த மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் வருடக்கொண்டாட்டத்தின்போது உபந்யாசம் செய்த ப்ரொபசர் (Professor) சுந்தரராமையரவர்கள், கனம் வி. எஸ். ஸ்ரீநிவாசசாஸ்திரிகள், தூத்துக்குடி வக்கீல் சோமசுந்தரபாரதிகள் இப்படிப்பட்டவர்கள் சிறந்த ஆங்கிலம்கற்றோராயிருந்தும், அவர்கள் உபந்யாசத்தால் அவர்கள் எவ்வளவோ தமிழபிமானமும் பாஷாஞானமும்

உடையவர்களென்பதை அறிந்து எல்லோரும் மிக்க அதிசயத்தோடுகூடிய களிப்பையடைந்தார்கள்.

ஆனால், தமிழ்ப்பாஷையை உபபாஷையாய்க்கொண்டு ஆங்கிலம் கற்றுப் பரீக்ஷையில் தேர்ந்தவர்களின்எண் எத்தனை. மேற்கூறியவர்கள் போன்று ஆங்கிலத்திற் சரியானபாண்டித்தியத்தோடுகூடத் தமிழ்ப்பாஷையில் நிரம்பியகல்வியும் உடையார்களின்எண் எத்தனை. இதை யோசிக்குமிடத்து ஆங்கிலம்கற்றோர்கள் தாங்கள்கற்ற அளவிற்குமேல் தமிழ்ப்பாஷையில் விஷயங்கள் உள்ளன என்ற எண்ணம் அவர்கட்கு உண்டாகவேண்டுமென்பதும், தமிழ்ப்பாஷையையே கருதிப்படித்து அதிற் சிறந்த தகுதியடைந்த தமிழ்க்கலைவல்லாரிடத்து ஆங்கிலம் கற்றோர் எவ்வளவு மரியாதையுடனும் அன்புடனும் அவர்களின் கல்வியங்களில் மதிப்புடைமைகாட்டவேண்டுமென்பதும் நான்சொல்லாமலே தங்கட்கு வெளியாகும். அப்படிப்பட்ட எண்ணங்கள் மாறுபட்டிருப்பதை நான் அநேக இடங்களிற் கண்டிருப்பதனால் அவ்வித எண்ணங்கள் எவ்வளவுபிசகு என்பதை இங்குச் சொல்லத்துணிந்தேன். சமீபத்தில் ஆரியம் திராவிடமென்ற இரண்டுபாஷைகளின்காரணமாய் அநேகவிவாதங்கள் ஏற்பட்டுள்ளது யாரும் அறிந்ததே. இவ்விஷயத்தில் அபிப்பிராயங்கள் வேறுபட்டுள்ளனவாயினும், நான் அறிந்தவரை, ஆரியர் திராவிடர் என்ற பிராமணர் தமிழர் இவர்கள் இருவரும் முற்காலந்தொட்டே ஒற்றுமையுடனேயே ஒருவரையொருவர் தழுவிவந்திருக்கிறார்களென்பதை நிச்சயமாய்ச் சொல்லலாகும். அகஸ்தியர் தமிழர், தொல்காப்பியர் தமிழர் என்ற விவாதங்களும், இவர்களின்பேர் முதலியசொற்கட்குப்புதிதானமூலம்கற்பித்தலும்,இன்னும் இத்தகைய புதுமாறுதல்களை உண்டுபண்ணுதலும் தமிழ்ப்பாஷையின்விர்த்திக்கு அநுகூலமானவைகளாகுமென்று எனக்குத் தோற்றவில்லை. இதுவிஷயமாய் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் சென்ற வருஷக்கொண்டாட்டத்தில் எனதுநண்பர் சோமசுந்தரபாரதிகள் மிகவும் அழகாய் எந்தவிதத்தாலும் யாரும் மறுத்தழிக்கமுடியாதவிதமாய் அநேகம் உபமானங்களுடனும் மேற்கோள்களுடனும் மிக அழகாகவும் தெளிவாகவும் செய்த பிரசங்கத்தை அப்படிப்பட்ட வேற்றுமை உண்டுபண்ணும்கூட்டத்தார் கேட்டிருந்தால் அவர்களும் அவர்களுடைய கொள்கைகளை மாற்றிக் கொள்வார்களென்றே நம்புகிறேன். ஆரியர்கள் திராவிடபாஷையை

மேற்கொண்டு அதனிடத்து ஈடுபட்டுத் திராவிடரோடு சேர்ந்து பாஷையின்விர்த்திக்கு உழைப்பார்களேயானால் அவர்களைப் புறம்பே தள்ளுவதனால் அடையும்பயன் என்ன. ஆனால் ஆரியம் திராவிடம் என்ற இரண்டுபாஷைகளுள்ளும் திராவிடபாஷையை ஆரியர்கள் மேற்கொண்டு அதனிடத்து ஈடுபட்டு அதில் மிக்க புலமையும் உடையராய் இருந்திருக்கிறார்களென்பதை எண்ணுங்கால் நாம் எல்லோரும் திராவிடபாஷையி னுயர்வை ஆரியபாஷையைக் குறைத்துச்சொல்லாமலே மிக்க அன்போடுபாராட்டலாகும். எனக்கு நம்தமிழபிவிர்த்தியின்விஷயமாயுள்ள சில அபிப்பிராயங்களைத் தங்கட்கு இப்போது நான் தெரிவித்துள்ளேன். இவைகளில் எந்தவிஷயங்கள் உங்கள்எல்லோருக்கும் உடன்பாடாயுள்ளனவோ அவைகளைத் தாங்கள் தீரக்கருதி அதன்படிசெய்ய வேண்டிய ஏற்பாடுகளைத் தாங்கள்செய்யவேண்டுவதாய்க் கேட்டுக்கொள்வதோடு, தாங்கள் இச்சபைக்குத் தலைமைவகிக்கும் கௌரவத்தை எனக்கு அளித்ததற்காக எனது என்றும்மறவாத நன்றியையும் தங்கட்குச் செலுத்துகிறேன். சுபம்.

உ

குறுந்தொகை.

அச்சிடப்பட்ட குறுந்தொகையிலே நமக்குத்தோன்றும் பாடாந்தரங்களுள்ளே சிலவற்றையும், உரையிலே நமக்குத்தோன்றும் வேறுபாடுகளுள்ளே சிலவற்றையும் ஈண்டுக் காட்டுதும். அவை குறுந்தொகையும் உரையும் படிப்பார்க்கு உறுந்துணையாகுக.

நோமென்னெஞ்சே (கவி-ச) என்பது நோமேநெஞ்சே எனவும், ஓயான் (கூ) என்பது ஓர்யான் எனவும், காப்பாடும்மே (கூ) என்பது கரப்பாடும்மே எனவும், கூன்முள் என்பது கூர்முள் எனவும், பரிக்கும் (ருக) என்பது பரக்கும் எனவும், இடைபட என்பது இடைப்பட எனவும், முயங்கற்குமினிதே (கூஉ) என்பது முயங்குவமினிதே எனவுஞ் சிலபிரதிகளில் வரைந்திருத்தல் கண்டாம்.

இன்னும், விரிந்திலங்குவெண்பல் (ருஉ) என்பது நிரந்திலங்கு வெண்பல் எனவும், நாடுநாள் (கூக) என்பது நடுநாள் எனவும், அரிப்பவர்பாம்பின் (கூக) என்பது அரிப்பவர்ப்பிரம்பின் எனவும், அஞ்சிக்கொன்முனை (கூக) என்பது அஞ்சிகொன்முனை எனவும், அரும்பவிழ் (கூசக) என்பது அடும்பவிழ் எனவும், சிதைய என்பது சிதைஇ எனவும், மின்னுயிரிழந்தே என்பது மன்னுயிரிழவே எனவும் அப்பிரதிகளிற் கண்டாம்.

செங்களம்படக்கொன்று (க) என்புழிச் செங்களம் என்பதற்குச் "செழிய போர்க்களம்" என்றும், குருதிப்பூவின் என்பதற்குக் "குருதியைப்போன்றுபூக்கும்பூ" என்றும் உரைகூறல் இயையுமா? செங்களம்-யுத்தகளம். "செருக்கள மடுகளஞ் செங்களம்" என்பது பிங்கலம். குருதி-சிவப்பு. இவை செம்பொருள்களல்லவா?

கொங்குதேர்வாழ்க்கை (உ) என்னுங்கவியிலே காமஞ்செப்பாது என்பது விரும்பியதைச்சொல்லாது என இரண்டாம்வேற்றுமைப் பொருள்படத் தொகுவதன்றி "விருப்பத்தாற்கூறாது" என மூன்றாம் வேற்றுமைப்பொருள்படவுந் தொகுமா?

கூந்தலினறியவும் என்பதற்குக் கூந்தலினு மணமுடையனவும்என உரைகூறி ஐந்தனுருபு உவமப்பொருள் என்றலும் பொருந்துமா?

"நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று-நீரினு மாரளவின்றே" (கூ) என்புழி நீரினுமாரளவின்றே என்பது அளவினாற் கடலினும்மிக்கது என்னும் பொருட்டன்றோ! அதற்குக் கடலினும் அரிய அளவினையுடையது என உரைகூறலும் இயையுமா? இங்கே ஆரைக்கிளவி "அசைநிலைக் கிளவி யாகுவழி யறிதல்" என்ற தொல்காப்பியவிதிப்படி அறியநின்றது என்றல் பொருந்தாதா?

அதுகொறோழி (ரு) என்னுங்கவியிலே மெல்லம்புலம்பன் என்பதற்கு "மெல்லியகடற்றுறைவன்" என்றதும் இயையுமா? மென்மை எதனைவிசேடித்துநின்றது? "மெல்லங்கழி என்பதூஉம் ஒரு பண்புத்தொகைமுடிபு" என்ற பேராசிரியர்கருத்து யாது?

வேரல்வேலி வேர்க்கோட் பலவின் (கஅ) என்னுங்கவியிலே வேரல்வேலி என்பதற்கு மூங்கிலாலாகியவேலி என்றவன் முந்தூழ்வேலிய (உகூக) என்பதற்கு 'முந்தும்முறைமையாகியகாவல்' என்றதென்னோ? முந்தூழ் என்பது மூங்கிலன்றோ! மூங்கில் என்பதுவே நன்று.

இங்ஙனம்

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

உ

தமிழர் ஆரியரே.

ஆரியதேசம் இமயமுதல், கன்னியாகுமரிவரையுமுள்ளதேசமாம். அதில் இமயமுதல் விந்தமலைவரைக்குமுள்ளபகுதி ஆரியாவர்த்தமெனப்படும். (மநு. 11. 22.) ஆரியதேசமே ஆரியர்க்குப் பூர்வமுதலாக வுரிமையுள்ளதேசம். விந்தியமலைக்குத்தெற்கே குமரிவரையுமுள்ள பகுதி தக்ஷிணமெனப்படும். ஆரியர்கள் மிகநெருங்கிக் குடிகொண்டிருந்தமையால் உத்தரதேசம் ஆரியாவர்த்தமெனப்பட்டது. ஆவர்த்தம் என்பது குடிநெருங்கியவிடம். தக்ஷிணதேசத்திலே நருமதைக்கும் கோதாவிரிக்குமிடையேயுள்ளபிரதேசம் தண்டகாரணியமெனப்படும். இத்தண்டகாரணியத்துக்குத்தெற்கின்கண்ணே குமரிவரையுமுள்ளதேசம் தமிழகமெனப்படும். தமிழகம் இடையிடையே சிறியகிராமங்களும் காடுகளுமுடையதாயிருந்தது. தமிழகத்திலே அகத்தியர்வரும்போது குடிகளிருந்தார்களென்பது காஞ்சிப்புராணத்தால் நன்குதுணியப்படும். அதுமாத்திரமன்று; அவர் தாம்புகுந்தநாட்டிலுள்ளாரோடு பயிலும்போது அவர்கள்பாஷையையும் நன்காராய்ந்தவராதல்வேண்டுமன்றோ. அதனை ஆராயப்புகுந்து அடைவுபிறழ்ந்தோ ஓதற்கெளிதாகாதோ கிடந்த பூர்வஇலக்கணத்தை மிகச் சிறப்பமையவிரித்து அகத்தியமெனத் தம்பெயராற்செய்தமையாலுந் துணியப்படும். வேற்றுநாட்டிற் புகுந்து அந்நாட்டாரால் நன்குமதிக்கப்படவிரும்பும் புலவர் அந்நாட்டுப் பாஷையைக்கற்று நூல்செய்தல் இயல்பு. வீரமாமுனி என்னும்பெஸ்கி, அவர்க்குப் பன்னெடுங்காலத்துக்கு முன்விளங்கிய யவனாசாரியர், போகர், என்னும் அந்நியதேசத்தார் இந்தியாவில்வந்ததும் நூல்செய்ததும் நோக்கத்தக்கன. இவர்கள்பெயர்கள் இன்றும் நின்றுநிலவுகின்றன. அதுநிற்க,

ஆரியர், ஆசியகண்டத்தின் மத்தியப்பிரதேசத்தில் நெடுங்காலம் வாழ்ந்திருந்து பின்னர்ப் பிரிந்து பலதிசைகளிலுஞ்சென்று குடியேறிய ஒரு மனிதகணத்தினரென்பது ஐரோப்பியபண்டிதர்கொள்கை. ஆயினும் அப்பண்டிதர்களும் மத்தியஆசியாவென அநுமானிக்கின்றார்களேயன்றித் திட்டமாகத்துணியவில்லை. (The ancestors of the Aryan

races of Europe and Asia are believed by many to have had their seat in Central Asia—Hints on English Etymology—Charles Annandale, M. A., L. L. D.) சிருஷ்டியாதிசம்பவங்களைக் கிரமமாகவெடுத்துக்கூறும் மநுநூல் ஆரியர்க்குரியதேசமிதுவென்றும், அதற்கெல்லை இவையென்றும், அஃது ஆரியாவர்த்தமெனப்படுமென்றும், மிக்கதிட்பநுட்பமாகக் கூறியிருக்கின்றமையால் ஐரோப்பியபண்டிதரது வெள்ளநுமானத்திலும் மநுநூற்கூற்று மிக்கவலியுடைத்தன்றோ. பூர்வத்தில் ஆரியர் வேறிடத்திருந்து ஆரியாவர்த்தத்துக்கு வந்ததாகப் பிரபலநூல்களிற்கூறப்படவில்லை. ஆரியாவர்த்தம் என்னுஞ்சொல் ஆரியர் நெருங்கிக் குடிகொண்டவிடமெனப் பொருள்தருவதென மேலேகூறப்பட்டது. இதனால் உத்தரம் குடிப்பெருக்கமும் தக்ஷிணம் குடிச்சுருக்கமுமுடையனவென்பது பெறப்படும். அதனால் உத்தரத்தில் ஆரியர் காலந்தோறும் பெருகினர். பெருகுந்தோறும் எல்லைகடந்து தென்னாட்டிலுஞ்சென்று குடிகொள்வாராயினர். "ஒருகாலத்து மேருத்தாழ்ந்து தெற்குயர்ந்தது. இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்குரியரெனத் தேவர்களால் வேண்டப்பட்டதும், அவ்வாறே பதினெண்கோடிவேளிருள்ளிட்ட அருவாளரையு முடன்கொண்டு அகத்தியனார் தென்னாட்டில்வந்து வதிந்தார்" என்பதும் மேற்கூறியதை வலியுறுத்தும்.

தெற்கின்கண்ணே ஆதிதொட்டுவாழ்ந்தஆரியர்க்குத் தமிழும் வடக்கின்கண்ணேவாழ்ந்த ஆரியர்க்குச் சமஸ்கிருதமும் சிவபிரானால் அருளிச்செய்யப்பட்டன. இவ்வுண்மை "இருமொழிக்குங்கண்ணுதலார்முதற்குரவர்" என்னுஞ் செய்யுளாற் றுணியப்படும்.

தமிழைத் தென்மொழியென்றும், சமஸ்கிருதத்தை வடமொழியென்றும் திசைபற்றிவழங்குவாராயினர். இதனால், பூர்வத்தில் இந்த இருமொழிகளுமே ஆரியதேசத்தில் வழங்கினவென்பதும் துணியப்படும். கம்பர் "வடசொற்குந்தென்சொற்கும்வரம்பாகும்—வேங்கடம்" எனக்கூறியது இதனைவலியுறுத்தும்.

இருபாஷையாளரும் ஆரியரேயாதலின், ஒத்தசரீரவடிவமும், ஒத்தகுணமும், ஒத்தகொள்கையும், ஒத்தபழக்கமும், ஒத்தவுடையுமுடையராய்ப் பண்டுதொட்டு வாழ்ந்துவருகின்றனர். இருவர்க்கும்

வேதமொன்றே. புராணமொன்றே. மிருதியொன்றே. இதிகாசமொன்றே. சரியையொன்றே. கிரியையொன்றே. யோகமொன்றே. ஞானமொன்றே.

தமிழர் ஆரியரின்வேறாயின் இவையெல்லாமொத்திரா. மற்றெல்லாம் சார்பினால் ஒருவாறொத்திருக்குமெனக்கொள்ளினும், சரீரவடிவம் சிறிதும் ஒத்திராது. மலாயர், சீனர், காப்பிரியர்முதலிய மனுஷகணங்களிலே தமிழர் சேர்த்தெண்ணவும்படார். தமிழர்தாம் எக்கணத்திற் சேர்த்தெண்ணப்படத்தக்காரென்னிற் சுத்த ஆரியகணத்திலேயே சேர்த்தெண்ணப்படத்தக்காரென்பது வெள்ளிடைமலைபோற் றெள்ளிதாம்.

அநாரியர் என் றொருவகுப்பாருளரன்றோ, அவ்வகுப்பிலே தமிழர்சேராரோவெனிற் சேரார். அநாரியராவார் தேகப்பொலிவால் ஆரியரோடொப்புடையரேனும் வேதபாகியராய் அநாசாரமுடையராய்க் கோமாமிசம்புசிப்பவராயுள்ளவர். (பௌதாயனர்.) இவ்விலக்கணங்கள் சிறிதுமில்லாமையால் தமிழர் அநாரியரெனப்போகார். பூர்வத்தில் தமிழர் அநாரியராயிருந்து பின்னர் அகத்தியரால் ஆரியராக்கப்பட்டவராகாரோவெனில், வேதம் ஆரியருள்ளும் முதன்மூன்றுவருணத்தாருமே ஓதுமுரிமையுடையர். ஆதலின் அநாரியர் வேதம் ஓதுதற்குச் சிறிதும் அருகமில்லாதவரன்றோ. அவர்க்கு வேதநெறியை உபதேசித்தலுங் கூடாதன்றோ. அன்னோர்பால் அகஸ்தியர்சென்றதும் சென்று வேதநெறியை உபதேசித்ததும் சிஷ்டாசாரத்துக்கும் சாஸ்திரத்துக்கும் விரோதமாமன்றோ. அகஸ்தியர் தென்னாட்டிற்புகுந்தது தமிழர் ஆரியரென்னு முரிமைபற்றியேயாம். இதனாலுந் தமிழர் ஆரியரென்பது நன்கு துணியப்படும்.

தமிழரும் ஆரியரும் ஜாதியால் ஒருவரேயாயினும் பாஷையால் வேறாயினர். வேறாயினும் சமயத்தாலும் ஆசாரத்தாலும் ஒருவரே.

> மூரிமுழங்கொலிநீரானான் கண்டாய்
> முழுத்தழல்போன்மேனிமுதல்வன்கண்டாய்
> ஏரிநிறைந்தனையசெல்வன்கண்டாய்
> இன்னடியார்க்கின்பம்விளைப்பான்கண்டாய்

> ஆரியன்கண்டாய்தமிழன்கண்டாய்
> அண்ணாமலையுறையெம்மண்ணல்கண்டாய்
> வாரிமதகளிறேபோல்வான்கண்டாய்
> மறைக்காட்டுறையுமணாளன்றானே.

இத்தேவாரத்தால் இருவர்க்குஞ் சிவபெருமானே கடவுள் என்பதும் இனிதுநாட்டப்படும்.

பூர்வத்திலே ஆரியரென்னும்பெயர் பரதகண்டத்திலே வைதிகநெறியுடையராயுள்ளமக்களுக்கெல்லாம் பொதுப்பெயராம். பின்னர் ஆரியாவர்த்தத்திலே ஆரியர் மிக்குப்பெருகிப்பொலிந்தமையால் ஆரியரென்னும்பெயர் அவர்க்குச் சிறப்பாயிற்று. அவர் பேசுமொழியும் ஆரியமொழியென வழங்குவதாயிற்று. பின்னர் அம்மொழிநோக்கி அதுபேசுவார் ஆரியரெனப்பட்டனர். தெற்கின்கண்ணேயுள்ள ஆரியரும் அவர்பேசுந்தமிழ்மொழிநோக்கித் தமிழரெனப்பட்டனர்.- ஆரியமொழியால்வழிபட்டார்க்கு ஆரியனாயும் தமிழால்வழிபட்டார்க்குத் தமிழனாயும் வெளிப்பட்டருள்புரியும் வேதமுதல்வனதுஇயல்பு இத்தேவாரத்தால் வெளியாகின்றது. அதுமாத்திரமன்று, இருமொழியாளரும் வைதிகமாக்களென்பதும், அதனால் அவர்கள் ஆரியமாக்களென்பதும் ஒருதலை.

தத்தம் மொழிப்பெருமைநோக்கிப் பண்டிதருள் ஒருசிலர் எம் ஆரியமொழிசிறந்தது எம்தமிழ்மொழிசிறந்தது என்று ஒருவரோடொருவர் மாறுடிப் பகைத்துநிற்றல் பண்டைக்காலத்துமுள்ளது. இவ்வுண்மை,

> "ஆரியநன்றுதமிழ்தீதெனவுரைத்த
> காரியத்தாற்காலக்கோட்பட்டானைச்—சீரிய
> வந்தண்பொதியிலகத்தியனாராணையாற்
> செந்தமிழேதீர்க்கசுவாகா"

என நக்கீரர்பாடிய மந்திரச்செய்யுளால் நன்கு துணியப்படும்.

இன்னும் உத்தரத்தாரும் தக்ஷிணத்தாரும் தம்முட் பெண்கொள்ளுதலும் கொடுத்தலும் வழக்கமாகவுடையர்.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

ஸ்ரீ:

மாட்சிமையோங்கும் ராமநாதபுரம் மஹாராஜா

ஆனரபிள் ஸ்ரீமான்-ராஜராஜேச்வரஸேதுபதியவர்கள்

மஹாசமுகத்தின்மீது

அவர்கள் சென்னைச் சட்டநிருமாணஸபையின் மெம்பராக

நியமனம்பெற்றதைப்பற்றிப் பாடிய

வாழ்த்துப்பாக்கள்.

நேரிசைவெண்பா.

1. ஸ்ரீராம நாதனருள் சேர்ந்தோங்கும் செம்மலெங்கோன்
ஸ்ரீராஜ ராஜப்பேர்ச் சேதுபதி—மாராஜ!
சீரொன்றச் சேர்ந்தமர்ந்தாய் சென்னைநகர்ச் சட்டசபை
நே*ரின்றி மெம்பர் நிலை.

2. மதுரைத் தமிழ்ச்சங்க மாதலைவ! மாசில்
மதுரத் தமிழ்நாட்டு மன்னு!—துதியுறநீ
சென்னைக் கவர்னர்சபை சேரத் தமிழ்மொழியும்
மன்னும் மகிமை மலிந்து.

3. ஆண்டில் இளையாய்! அறிவாற்ற லோடுதன்னு
டாண்ட அனுபவத் தாலிளையாய்†!—ஆண்டவைக்கீ
சார்தலால் அந்தச் சபைசிறக்கும்; நீயுமதைச்
சேர்தலால் சேர்ப்பாய் சிறப்பு.

4. தண்முத்துந் தண்கடலும் தண்டமிழும் தண்மையொடு
உண்மைத்தாம் சைவ உயர்நெறியும்—ஒண்மைபெறும்
சேதுவளச் சேர்ப்ப!‡இனிச் சேர்ந்தொளிர்க இச்சபைபோல்
ஏதமில்பல் சங்கத் தினிது.

5. செல்வத்தாற் கல்வியினாற் செந்தமிழ்போற் றுந்திறனால்
மல்குபுகழ் வாய்ந்தநின் மாண்மரபோர்—தொல்லை
அணிகிலாச் சீர்த்தி அணிந்துபய¶ வம்ச
மணிவிளக்காய் வாழ்க மகிழ்ந்து.

வே. முத்துஸாமி ஐயன் எம். ஏ. எல். டி.
பள்ளிக்கூட உதவிப்பரிசோதகர்,
அறப்புக்கோட்டை.

---

* நேரின்றி - போட்டி யொருவரும் இல்லாமல்.
† இளையாய் - எதிர்மறை (இளைக்கமாட்டாய்).
‡ சேர்ப்ப - கடற்கரையுடையாய்.
¶ உபயவம்சம் - இருவழியும், தாய்வழியும் தந்தைவழியும்.

உ

கல்விப்பயிற்சிக்குரியது தாய்மொழி*

பெரியோர்களே!

நாம் இன்று ஆராயப்புக்க விஷயம், "கல்விப்பயிற்சிக்குரியது தாய்மொழி" என்ப துணர்வீர்கள். இவ்விஷயத்தைப்பற்றி விவகரிக்கப் புகுமுன்னர் இச்சொற்றொடராற் குறிக்கப்படும்பொருளை அறிந்து கொள்ளுவோம்.

மொழி என்பது, மாந்தருள் ஒருவர்கருத்தினைப் பிறரொருவருக்குத் தெரிவிக்கும் கருவியாயுதவுவது; மக்களை விலங்கினின்றும் வேறுபடுத்திவிளக்குவது; பெரியார்கண்டுணர்ந்த அரும்பெரும் உண்மைகளைப் பிறர்க்குப் பயன்பெறுத்தி உய்விக்குங்கருவியாவது.

இனி, உலகில் வேறுவேறுதேயத்தில் வேறுவேறுமாந்தரும் தத்தம் நாகரிகஅளவிற்கேற்பத் தனித்தனிமொழிகள்வகுத்து அவைகளின் உதவிகொண்டு தம்முள் அளவளாவிக் களித்துவாழாநிற்பர். இவ்வாறு வகுக்கப்பட்டமொழிகள் அவ்வந்நாட்டினர்க்குத் தாய்மொழிகளாகின்றன.

இனி, கல்வி என்பது அறிவு, வித்தை எனப் பொருள்படும். இது "கல்"என்னுந் தாதுவினின்றும்பிறந்தது. கல்லுதலாவது தோண்டுதல், எனவே கல்வியாவது விஷயங்களை ஆராய்ந்தறிவதாம். இவ்வாராய்ச்சிதானும் மனிதர்கள் நாகரிகநிலை எய்தப்புக்ககாலந்தொடங்கி நிகழப்பெற்றுவருகிறது. இவ்வாறு ஆராய்ந்துகாணப்பெற்றன நூல்களிற் பொதிந்துவைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே கல்வியாவது நூல்களைக் கற்றுணர்தலாம். இத்தகைய கல்வியறிவினைத்தேடுவதற்குத் தாய்மொழியே சிறந்தகருவி என்பது இன்று நாம் காணக்கிடக்கும்விஷயமாகும்.

---

* இது, கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின் ஐந்தாம்வருடக்கொண்டாட்டத்தில் இராமநாதபுரம் ஸமஸ்தாநாதிபதியும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசநாதிபதியுமான ஆனரபிள் ஸ்ரீமத்-ராஜராஜேச்வரசேதுபதி மஹாராஜா அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் ஸ்ரீமத்-இராதாகிருஷ்ணபிள்ளையவர்களாற் படிக்கப்பட்டது.

இப்பொழுது நமதுபள்ளிக்கூடங்களில் கல்விப்பயிற்சிக்கு ஆங்கிலத்தையே முக்கியகருவியாக உபயோகிக்கின்றனர். நந்தேயம் கீழிந்தியாவர்த்தகக்கூட்டத்தாரின் ஆளுகையிலிருந்தபோது பத்தொன்பதாவது நூற்றாண்டின் துவக்கத்திற் கல்வியானது தாய்மொழிகளிலோ, அன்றி ஆங்கிலத்திலோ, கற்பிக்கப்படவேண்டியதென்பதைப்பற்றிப் பெரியதோர்ஆசங்கை நிகழ்ந்தது. சுமார் 12 வருஷம் இவ்வாதம் நிகழ்ந்து கடைசியாக 1835-௵ ஸ்ரீ பெண்டிங் பிரபு அவர்கள்காலத்தில் பிரதமவகுப்புக்களிற் பாடங்கள் தாய்மொழியில் நடைபெறினும் உயர்தரக்கல்வி ஆங்கிலத்திலேதான் போதிக்கப்படவேண்டுமென்று முடிவுசெய்யப்பெற்றது. இத்தீர்மானத்தால், தாய்மொழிகள் விசேஷமாக வலிகுன்றிச் சீரிழக்கப்பெற்றன.

மொழி என்பது விஷயங்களை அறிவதற்குக் கருவியாயுள்ளதென்று நாம் கண்டாமன்றோ? இப்பொழுது, தாய்மொழியும் பிறமொழியும் என இருமொழிகள் உளவாக, நம் கல்வியறிவினைப் பெருக்கிக்கொள்ள எம்மொழியினைத் துணைக்கோடாகக்கொள்ளுவது சிறப்புடைத்தென்பது கடா.

தாய்மொழியோ நாம் குழவிப்பருவந்தொட்டுப் பயின்றுவந்தது; பாலொடு அருந்தி, சோறொடு அயின்று, துயிலொடு உறங்கியதாம்; இன்பிலும், துன்பிலும், யாண்டும், என்றும், நம்மொடு பயிலுவதாம். இக்கருவியினை விசேஷமாக வருந்தித் தேடப்பெறுவதும் வேண்டுவதில்லை; தேடுவதில் அளவுமிஞ்சியபொருட்செலவும் இன்று. பழக்கினாலும் இயல்பாலும் குணத்தாலும் தாய்மொழிக்கருவியினை உபயோகிப்பதிலும் மிகக் கைவந்துள்ளோம். பிறமொழிக்கருவிகளோ, மிகவரிதில்முயன்றே பெறப்படுவன; அளவில் ஊதியச்செலவு நிகழ்விப்பன; அன்றி இவ்வாறு வருந்திப்பெறினும் அவைகளைக் கையாடுவதிலும் வல்லேமல்லேம். தாய்மொழிகளால் விஷயங்களை உணருமாறுபோற் பிறமொழிகளால் அறியுமாறில்லை. சுருங்கச்சொல்லிற் பிறமொழிவாயிற் கல்வி கேவலம் உயிரற்றசெய்கையாகும். இதுமட்டுமோ? அன்னியமொழிகளால் நுண்ணியஆராய்ச்சிகள் நிகழ்த்துவதும், அரியவிஷயங்களைக்கற்றுணர்வதும், நமதிளமாணவர்களின்மூளைக்கு அளவில்லாச் சுமையைக் கொடுக்கின்றன. ஆகையான் அவர்கள் மேலும் மேலும் கற்றுத் தேறவியலாதவர்களாவதோடு, அவர் சரீரசக்தி குன்றி விரைவில்

முடிவுமெய்துகின்றனர். நமதுமாணவர்கள் தாய்மொழியிலேயே கல்வி பயிலுவதென்றால் அவர்கள் பிறமொழிகளைக்கற்றுத்தேறுவதிற் செலவாகும்காலத்தையும்பணத்தையும்காப்பாற்றிக்கொள்வதோடு அதனால் ஏய்தப்பெறும்அளவிறந்தபிரயாசத்தையும்நீக்கிக்கொள்வார்களன்றோ?

இக்கருத்தினையே சென்றவாண்டு சென்னைச்சர்வகலாசங்க உயர்தரப்பரீக்ஷைகளில்தேறிய மாணவர்களுக்குத் தகுதிச்சீட்டு அளிப்பதற்காகக்கூடிய மகாசபையில் கனம் Harold Stuart துரையவர்கள் பின்வருமாறு தெரிவித்தார்கள்:—

"நமதுபரீக்ஷைகளில் எவ்வளவுபெயர்கள் தவறிப்போகிறார்களென்பது எனக்குச் சிறிதும் ஆச்சரியமில்லை; இத்தனைமாணவர்கள் தேறுவதே எனக்கு வியப்பைவிளைப்பதாகும்! உங்களிற் பெரும்பாலர் உமக்கு உரியதல்லாததொரு அன்னியமொழியிற் கல்விகற்கவேண்டியிருக்கிறது. 240 லக்ஷம் தெலுங்கர்களும், 180 லக்ஷம் தமிழர்களும் தங்கள் கல்வியிற் பெரும்பாகத்தை அன்னியமொழியொன்றின் உதவிகொண்டே தேடவேண்டுமென்பது நம்புவதற்கும் மிகக்கடினமாயிருக்கிறது. இவ்வளவுதொகையுள்ளசனங்களின் தாய்மொழியைமாற்றுவதென்பது அசாத்தியம். இவர்கள் கல்வியிற்பெரும்பாகம் பிறமொழியொன்றின் உதவிகொண்டேதேடப்பெறவேண்டியதாயின், கல்வி அவர்கள்மாட்டு இலேசாகப்பரவுவதற்கில்லை. பிள்ளைகளுடைய முயற்சியெல்லாம் மொழியைக்கற்பதிலேயே செலவாய்விடுவதன்றி, நூல்களிற் கூறப்படும்விஷயங்களை அறிவதற்குச் சக்தி ஒன்றும் இல்லாதுபோய்விடுகிறது. இத்தகையபழக்கம் வீணே காலத்தையும் அறிவையும் செலவுசெய்விப்பதன்றி யாதும் பிரயோசனம் உள்ளதாகத் தெரியவில்லை."

சின்னாண்முன்னர் மதுரையிற் கல்விப்பயிற்சிசம்பந்தமாகக்கூடிய மகாசபையில் (Educational Conference) சபாநாயகம்வகித்த ஸ்ரீமான் P. T. சீனிவாசையங்கார் அவர்களும் இவ்வபிப்பிராயத்தைத் தழுவியே பேசினார்கள். கனம் ஹார்டிங்பிரபு அவர்கள் சென்றவாண்டு லாகூரில் விலங்குகளின் சிகிச்சாமுறைமைகளைப்பற்றிப்போதிக்கும் பாடசாலையொன்று தாபகமானபோது பிறபாடசாலைகளைப்போலாது அங்குத் தாய்மொழியிலேயே மாணவர்களுக்குக் கல்விபோதிப்பதாகச்

செய்திருந்த ஏற்பாட்டினைப்பற்றி மிக வியந்து பேசியுள்ளார்கள். உலகெலாம்போற்றும் மகாபண்டிதரான கனம் இராமேந்திரநாத் டாகூர் அவர்களும் தாய்மொழியிற்கல்வியே சிறந்ததெனக்கொண்டவர்களென்பது அறிஞர்பலரும் நன்குணர்ந்ததொன்றாம். இவ்வாறு பிரபல அறிஞர்கள்பலரும் பிறமொழியிற் கல்விபயிற்றுவது அவசியமில்லாதபாரத்தை நம இளமாணவர்களுக்குக்கொடுத்து அவர்களுடைய அறிவாற்றல்கள் நன்குபிரகாசியாது கெடுக்கிறதென்று அபிப்பிராயப்பட, திருவல்லிக்கேணிப் பெண்பாடசாலையிற் கல்விப்பயிற்சி ஆங்கிலத்தில்நிகழ்வதைப்பற்றிச் சிலமாதங்களுக்குமுன் சென்னைச் சட்டநிரூபணசபையில் எழுந்த ஆசங்கைக்குவிடையளிக்குமுயன்ற சென்னை வித்தியா இலாகாத்தலைவர் கனம் Stone துரையவர்கள் இதற்கு முற்றும் முரண்படப் பேசியமை மிகவும் வியப்பை விளைப்பதாகும்.

நமது இந்தியநாட்டிலுள்ள தாய்மொழிகளுள், பல மிகப்பழமைவாய்ந்தனவும் அளவற்ற இலக்கிய விலக்கணக்கிரந்தங்களையுடையனவுமாவன. தாய்மொழிகளில் அமைந்துள்ள நூல்கள் அவ்வம்மொழிக்குரிய இனத்தார்கண்டறிந்த உயர்ந்தகருத்துக்களையும், அவருட்பெரியார்பலரும் போதித்த அரும்பெரும் உண்மைகளையும் அடக்கிநிற்பனவாம். இவைகள் யாவும் அவ்வவ்வினத்தினர் உலகில் முன்னேற்றமடைவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவன. இத்தகைய இலக்கியங்களைப் படித்துத்தேறி அவைகூறும்வழியொழுகி மாந்தர் முன்னேற்றமடைவது தாய்மொழிப்பயிற்சியினாலேயே எய்தப்பெறுவதொன்றாம். இவ்வுண்மையினை நன்கறிந்தன்றோ ஸ்ரீமான் காந்தியவர்களும் தாம் புதிதாகவாரம்பித்த ஆச்சிரமத்தில் தாய்மொழியினையே கல்விப்பயிற்சிக்கேற்றகருவியாகக்கொண்டனர்.

பின்னரும் பாருங்கள்! ஒவ்வொருமொழியும், ஒவ்வொருநாடும், ஒவ்வொருமக்கட்டொகுதியும் உலகின்நாகரிகத்தைவளர்க்குந்தொழிலில் உரிமைபூண்டனவாம். அவ்வம்மக்கள், நினைத்தவுங் கண்டவும், அறிந்தவும் அவரவர் தாய்மொழியிலேயே பொதிந்திருக்கின்றன. ஆகவே, உலகின் நாகரிகவளர்ச்சி, அதன்மாட்டு உலவுகின்ற அவ்வத்தாய்மொழியின்வாயிலானே தொழிற்படுவதன்றிப் பிறவாற்றான் இயலாததாகும்.

அன்றியும், நம தருமைத்தாய்மொழிகள் நஞ்சிறுவர்களின்கல்வியில் ஏற்றஸ்தானத்தைவகிக்கப்பெறாமையால் அவை பெரிதும் வளர்ச்சிகுன்றித் தேய்ந்தொழியக்காரணமாகின்றன. ஒரு தேயத்தின் உயர்வும் அதற்குரியமொழியின்வளர்ச்சியும் ஒன்றற்கொன்று நீங்காத சம்பந்தமுடையனவென்பது சரித்திரநூல்வல்லுநர் நன்கறிந்தஉண்மையாம். நமது தாய்மொழியின் ஒளிகுன்றி நாளும் தேய்ந்துவருவதாயின் நமது நாடும் தனதுபொலிவிழக்கக்காரணமாமன்றோ. இத்தகைய சம்பவம் நமது முயற்சிக்குறைவினால் ஏற்படுவதாயின், உலகிலுள்ள பற்பலநாட்டினரின்வரிசையில் நாம் சற்றும் ஆண்மையற்றவர்களாகவன்றோ காணப்பெறுவோம்! தம்மையீன்ற நாட்டின் பெருமையினையும் தம் ஆண்மையினையும் ஒருங்கிழக்கத்துணிபவர் நம்மவருள் யார்? வீரவெற்றிகாட்டி அரசவாகைசூடித்திகழ்ந்த தமிழ்ப்பெருவேந்தர்களின் வழித்தோன்றல்களாகிய நாமோ இவ்விழிதகைக்கு ஆளாகுவோர்?

கல்வியின்நோக்கமாவது உலகிற் பற்பலவிஷயங்களை ஆய்ந்தறிவதும், நற்குணநற்செய்கைகள் அமையப்பெறுவதும், அறிவாற்றல்களை நம்மாட்டுப் பெருக்கிக்கொள்வதுமாம். பிறமொழிப்பயிற்சி சர்வகலாசங்கத்தினர் நியமிக்கும் பரீக்ஷைகளில் தேறுவதற்குமட்டும் பழக்குவதன்றி வேறுவிசேடப்பிரயோசனம் பயப்பதைக் கண்டிலம். இப்படிப்பெல்லாம் பள்ளிக்கூடத்தோடே நின்றுவிடுகின்றன. ஆயுள்முற்றும் நிலைத்திருந்து நம்பால் இயற்கையிலேயே அமைந்துகிடக்கும் ஆற்றல்களைக்கிளப்பி நம் வாழ்நாளைப் பயன்பெறுத்துவதில்லை.

கல்வியானது பிறமொழிவாயிலாய் எய்தப்பெறுங்கால் அதற்குரிய சக்தி எங்கேயோபோய்விடுகிறது; நமக்குப்பழக்கமில்லாத ஆகாரங்களைச் சாப்பிடுங்கால் அது எவ்வாறு சீரணமாகாதுவெளிப்படுகிறதோ அவ்வாறே கல்வி பிறமொழிவழிப்பெறின் அஃது நமக்குரியதாய்நின்று பயன்பெறுத்துவதில்லை.

அறிவுடைப்பெரியீர்!

இதுகாறும் நாம் தாய்மொழியிற் கல்விபயிலவேண்டுவதன் அவசியத்தினைப்பற்றிப் பேசினோம். இனி இதற்கு ஏதாவது இடர்ப்பாடுகள் உண்டாவென ஆராய்வோம். நம் நாட்டிற் பிறமொழிவாயிலானேயே கல்விகற்கவேண்டுமென்று சாதிப்பவர்கள்கூறும் ஆக்ஷேபனைகள் இரண்

டுண்டு. அவைகள் இந்தியநாட்டிலுள்ள தாய்மொழிகளுள் பெரும்பாலன சாத்திர நூற்கருத்துக்களை வெளியிட ஏற்றவல்லவென்பதும், இவைகளைப்போதிப்பதற்கு ஏற்ற பாடபுத்தகங்கள் இல்லை என்பதுமாம்.

பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் பாடஞ்சொல்லிக்கொடுப்பதை நாம் நன்குகவனிப்போமாகில் இவ்வாக்ஷேபங்களுள் முன்னது எத்துணைவலியற்றதென்பது புலப்படும். பிள்ளைகள் விஷயங்களைத் தம் மொழிவாயிலானன்றிப் பிறமொழிகளின்வழியேதான் நன்குணரவல்லவர்கள் என்பது இயற்கைக்கு முற்றும் மாறானதொருகொள்கையாம். உபாத்தியாயர்கள் உயர்தரப்பாடசாலைகளில் ஒவ்வொரு சாத்திரங்களையும் கற்பிக்குந்தோறும் பிள்ளைகளின் தாய்மொழிவாயிலானே விஸ்தரித்துக்கூறுவது நம்மவருள், பலர்க்கும் அனுபவசித்தம். இஃதிவ்வாறாக, தாய்மொழிகள் சாத்திரக்கருத்துக்களை வெளியிட ஏற்ற கருவிகள் அல்லவென்றுகூறுவது யாங்ஙனம் பொருத்தமுடையதாகும்.

இனி இக்கக்ஷியாருடைய மற்றொருகூற்றையும் விசாரிப்போம். அதாவது தமிழ்முதலியமொழிகளில் மேலைநாட்டுச்சாத்திரங்களைக் கற்பிக்க ஏற்ற பாடப்புத்தகங்கள் இல்லை என்பதாம். இக்கொள்கையினை உடையார் உலகில் காரியகாரணநிகழ்ச்சிமுறை அறியாதவர்கள் ஆவார்கள். ஓரூரில், உண்ணவோ, உடுக்கவோ, அணியவோ, ஆடவோ, ஒருபொருண்மேல், பொதுவாய்ச் சனங்களுக்கு விழைவுண்டாகுமிடத்துக் கூடியவிரைவில் அவ்வூர்க்கடைகளில் அப்பொருள்கள் வேண்டிய அளவு நிறையப்பெறுவது நாம் தினமும் கண்கூடாகக்காண்பதொன்றாம். படிப்பவரின்றிப் பாடப்புத்தகங்கள் எழுத முன்வருவார்யார்? மொழியின் அபிவிருத்திகருதி எழுதத்துணிந்த ஒருசிலபுலவரும் தங்கள் முயற்சியாற் கிடைக்கப்பெறும் ஊதியம் யாதுமின்றாய்த் தம் கைப் பொருளுந்தோற்று வருந்துகின்றதும் நாம் அறியாததோ? நமது சர்வகலாசங்கத்தினர் இப்பொழுது தாய்மொழியினை உயர்தரக்கல்விக்குக் கருவியாகவகுக்குமிடத்துப் பாடப்புத்தகங்கள் விரைவில் வெளிவந்துலவுமென்பதற்குச் சற்றும் தடையின்று. தாய்மொழியிற் சாத்திரங்களைப்போதிப்பதற்கேற்ற பாடப்புத்தகங்கள் எழுதுவது அசாத்தியமென்றுகூறுவது முற்றும் தப்பாகும். பங்காளபாஷையிற் சரித்திரம், பூகோளம், இரசாயனம், பீஜகணிதம், நிலவளவைநூலாதிய பலசாத்திரங்களிலும் பாடப்புத்தகங்கள் ஏற்படவில்லையா? பரோடா இராச்சி

யத்தில் "கலாபலன்" என்னும் கைத்தொழிற்பாடசாலையில் மேனாட்டுச் சாத்திரங்கள் அத்தனையும் தாய்மொழியிலேயே போதிக்கப்பெறவில்லையா? வெகுநாள்வரையில் மிகவும் சாதாரணநிலையிலிருந்த சப்பானியமொழியில் இப்பொழுதேறப்பெறாத மேனாட்டுச்சாத்திரநூல் யாதுளது?

1882-ம் ௵ சப்பான்தேயத்துப் பிரதானமந்திரியாகிய கனம் கவுண்ட். ஒகூமாபிரபுஅவர்களால் வசீடா (Waseda) சர்வகலாசங்கம் தாபிக்கப்பெற்றபொழுது அதிற் போதிப்பதெல்லாம் தாய்மொழியிலேயேயிருக்கவேண்டுமென்பது அதன் தாபகருடையநோக்கங்களுள் ஒன்றாம். அப்பொழுது அம்மொழியில் ஏற்ற பாடப்புத்தகங்களில்லாதது அவர்கொண்டகருத்தினை நிறைவேற்ற ஓர் பெருந்தடையாயிருந்தது. ஆனால் கவுண்ட் ஒகூமாபிரபுஅவர்கள் நமது இந்திய சர்வகலாசங்கத்தார்களைப்போலப் பிறமொழிவாயிலாய்க் கல்வியூட்டமுயலவில்லை. புத்தகங்களை வெளியிடுவதற்காகவென ஒருசபைகூட்டுவித்து அதன்மூலம் வேண்டியபுத்தகங்களை எழுதித் தம்மொழியில் எல்லாச் சாத்திர நூல்களையும் அமைத்துக்கொண்டனர். இரண்டுவருடத்திற்கு முன்பு எடுத்தகணக்கில் 180 பண்டிதர்களும் 7000 மாணவர்களும் அங்கு இருப்பதாகத்தெரிந்தது. சப்பானியர்களின்முயற்சி "மனமெங்குளது வழியங்குளது" (Where there is a will there is a way) என்னும் ஆங்கிலப்பழமொழியின் உண்மையினைவிளக்கும்.

நாம் இதுகாறும் கூறிப்போந்தவற்றால், தாய்மொழி கல்விப்பயிற்சிக்கு இன்றியமையாததென்றும், அதற்குத் தாய்மொழிகள் பலவாற்றானும் ஏற்றபெற்றிவாய்ந்தனவென்றும், அம்மொழிகள் சாத்திரப்பயிற்சிக்கு ஏலாதனவென்பது பொருந்தாஉரை என்றும் கண்டோம். இனி நந்தாய்மொழிகள் நஞ்சிறுவர்களின் கல்வியில் ஏற்ற ஸ்தானத்தை வகிக்குமாறு நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய முயற்சியினைப்பற்றிச் சிறிதுயோசித்து விஷயத்தை முடிவுசெய்வோம். இந்தியநாட்டிலுள்ள சர்வகலாசங்கங்கள் தாய்மொழிகளை ஆதரிப்பதிலாவது அன்றி அவைகளை முன்னுக்குக்கொண்டுவருவதிலாவது விசேஷ தீவிரங்காட்டியதில்லை. ஆகையால் இவ்வழியில் நம் சர்வகலாசங்கங்களின்உதவியை எதிர்பார்ப்பதில் அதிக பலனில்லையாகும். தாய்மொழிவிருத்திகருதி ஏற்பட்டுள்ளசபைகளே இப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ளத்தக்கன.

நம்நாட்டில் தாய்மொழிகளைவளர்க்க முன்வந்தவரில், வங்காளியரும், மகாராட்டிரரும், தெலுங்கர்களுமே தம் முயற்சிவலியால், தத்தம் மொழிகளுக்கு அளவற்ற நன்மைபெறுத்தியவர். தமிழ்நாடு இன்னும் பேச்சளவிலேதான் நிற்கிறது. ஒருசிலர் முயற்சியால் தமிழ்ப்பாடசாலைகள் சில அங்கு மிங்கும் தாபிக்கப்பெற்றுள்ளன. ஆனால் தமிழைமட்டும் போதிக்கும் பாடசாலைகள் இக்காலத்து மிகுதியும் பயன்படுவனவன்று. பிள்ளைகளுக்குச் சீவனோபாயமாகும் வழியொன்றுங்காட்டாது வாளா தமிழைமட்டுங் கற்பிப்பின் அவர்களுக்கு அக்கல்வியினாலாகும் இலௌகிகப்பிரயோசனம் யாது? நங் கரந்தைச்சங்கத்தார் தீர்மானித்திருக்கிறபடி கைத்தொழிலும், தமிழும் ஒருங்கேகற்பிக்கும் கலாசாலைகளே இக்காலத்துப் பயன்படுவன. உயர்ந்த கைத்தொழில்களைக் கற்றுக்கொள்ளவேண்டுவோர் அவ்வத்தொழிலுக்கேற்றசாத்திரங்களையும் கற்றுத்தேறவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே பலசாத்திரங்களைத் தமிழிற் கற்பிப்பதற்கும், அவைகளைக்கற்பிப்பதற்கேற்ற பாடபுத்தகங்களை நம்மொழியில் ஏற்படுத்திக்கொள்ளவும் நமக்கு அவசரமுண்டாகிறது. இவ்வாறு இச்சங்கத்தார்கொண்டவழி, நந் தாய்மொழியினைக் கல்விப்பயிற்சிக்குவுற்ற கருவியாக்க முயன்ற பலவழிகளுள்ளும் சிறந்ததாமாறு கண்கூடாம்.

அருந்தமிழாளப்பெருந்தகையோர்களே! பன்னெடுநாள்முன்னர் உலகெல்லாம் தன் திப்பியவொளிநிழற்றிவிளங்கிய நம் பண்டைத்தமிழரசி பரிபவமெய்தினள். அவள் நும் அருநம்பெறல்அன்னை. நீவிர் அவள்தம் அருமைப்புதல்வர். அவள் துன்பு துடைத்துத் துயரகற்றுவது நுங்கடன். நீவிர் தொல்குடிவந்தீர், துகளில்மரபினீர்! நும்மரபின்சீருக்கிலக்காகுமின்! அன்னைக்குதவமுந்துமின்! அவள் தொண்டுதருசீரினைச்சூடுமின்! புகழ்மின்!! பாடுமின்!!! பரவுமின்!!!!

அறிவுடைப்பெரியீர்!

இனி யான்கூறவல்லதியாது? கரந்தைத்தமிழ்த்தொண்டர் அவர்தம் அரும்பணிமுற்றுவிக்க நும்உதவிவேண்டுகின்றனர். "வம்மின்! புலவீர்! நும்மெய்வருந்திக் கைசெய்து உய்மினே!!" என்னும் பெரியார் கட்டளையினை உங்களுக்கு ஞாபகப்படுத்தி என்பிரசங்கத்தை முடித்துக் கொள்ளுகிறேன்.

மதுரை நாயக்கர்வம்சத்தரசர்கள்.

MADURA NAYAK KINGS.

"செந்தமிழ்" (தொகுதி-கச பகுதி அல்) கூஉஉ-ம்பக்கத் தொடர்ச்சி.

மங்கம்மாள்.

(1689—1704).

1689-ம் ஆண்டில் முத்தம்மாளுக்கு விஜயரங்கச்சொக்கநாதன் என்ற மகன் பிறந்தான். மூன்றும்மாதத்திலேயே அவனுக்குப் பட்டம் கட்டப்பட்டதாயினும், அவனுக்குப் பிரதிநிதியாக அவன் பிதாமஹியான மங்கம்மாள் ராஜகாரியங்களனைத்தையும் நிர்வஹித்துவந்தாள்.

மங்கம்மாள் அரசாட்சித்திறமை. மங்கம்மாள் பெண்பாலாயினும் புத்தி, மனோதைரியம், ராஜதந்திரம் முதலான சிறந்தகுணங்கள்வாய்ந்தவள். அவள்காலத்தில் ராஜ்யமெங்கும் செழிப்புற்றோங்கியது. உள்நாட்டிற் கலகம்விளைந்தாவது அயல்நாடுகளிலிருந்து பகைவர் படையெடுத்துவந்தாவது ராஜ்யத்தின்சீரைக் குலைக்கவில்லை. 'காசிமுதற் கன்னியாகுமரிவரைக்கும் ராமேசுவரம்வரைக்கும்' எங்கும் பாட்டைகளும் சாலைகளும் இவள்காலத்தில் ஏற்பட்டன. இன்றும் 'மங்கம்மாள் சாலைகள்' என்று எங்கும் பிரசித்திபெற்றிருப்பது யாவரும் கேட்டிருக்கலாம். வழிகளிலும் மற்ற இடங்களிலும் ஆங்காங்கு, சத்திரங்கள், சாவடிகள், ஆராமங்கள், குளங்கள், கிணறுகள்முதலியன ஏற்படுத்தப்பட்டன. அந்தணர்க்கும் அறிஞர்க்கும், ஏழைகளுக்கும், பரதேசிகளுக்கும் விசேஷ தானதர்மங்கள்செய்துவந்தாள்.

1693. ஜான்-டி-ப்ரிட்டோ (John-De-Britto). அக்காலத்தில் இராமநாதபுரத்திற் கிழவன் என்றவன் அரசாண்டுவந்தான். அப்பொழுது ஜான்-டி-ப்ரிட்டோ என்னும் பாதிரி ராஜவம்சத்தைச்சேர்ந்த திரயத்தேவனைக் கிறிஸ்தவமதத்திற் சேர்த்துவிட்டான். அப்புதியமத விதிப்படி தன்மனைவிகளில் ஒருத்தியைத்தவிர மற்றவர்களை யவன் திரஸ்கரித்துவிட்டான். அவர்களுள் ஒருத்தியாகிய கடலை என்பவள், கிழவன்சேதுபதியின்மருமகள். இச்செய்திகேட்ட கிழவன் கோபாவேசத்துடன் டி-ப்ரிட்டோவைச் சிறைப்படுத்தி ராஜ்யத்துக்கப்பாற் கொண்டுபோகச்சொல்லிக் கடைசியாய்ப் பாம்பாற்றின்கரையிலுள்ள உறையூரிற் சிரச்சேதஞ்செய்வித்தான்.

1697: திருவாங்கூர் அரசன் மதுரையரசருக்குக் கப்பங்கட்டி வருவது வழக்கம். அது சில்வருஷமாகச் செல்லாமற் போய்க்கொண்டுவிட்டது. மங்கம்மாள் அதை வசூலித்துவருமாறு தன் வடுகர்சைந்யத்தை யனுப்பினாள். இச்சேனை ஆரவாய்பொழிக்கணவாய்வழியாய்க் கற்குள(கொல்லம்?)த்தருகே வந்துசேர்ந்தது. காரியம் மிஞ்சிவிட்டதென்று அரசன் பயந்து பலத்தால்முடியாக்காரியத்தை வஞ்சனையாற் சாதித்துக்கொள்ளஎண்ணி,வடுகர்சேனைத்தலைவருடன் நட்புப்பாராட்டியவர்களைக் கோட்டைக்குள் அழைத்துச்சென்றான். அப்பொழுது திருவாங்கூர் அரசனுக்கு 'எட்டுவீட்டுப்பிள்ளைமார்'என்ற எட்டுப்பரம்பரைமந்திரிகளில் ஆகாத சிலமந்திரிகள் வலுத்தவராயிருந்தனர். ஒரே கல்லால் இரண்டுகுருவியடிப்பதுபோலத் திருவாங்கூர்அரசன் ஒரே வஞ்சனையால் இரண்டுகாரியங்களைச் சாதித்துக்கொண்டான். வடுகர் சேனைத்தலைவருடன் கூடாலோசனைசெய்து அவர்களைக்கொண்டு, அம்மந்திரிகளைக் கொலைசெய்வித்தான். பிறகு ஒருநாள் வடுகர்சேனை பயமில்லாமல் உல்லாசமாய்க் கற்குளக்கோட்டைக்குள் திரிந்துகொண்டிருக்கையில் திருவாங்கூர்ச்சேனை திடீரென்றுதாக்கி, வடுகர் சேனைமுழுவதையும் ஈவு இரக்கமின்றி நாசஞ்செய்துவிட்டது. தப்பியோடிய சிலர்மூலமாய் இக்கொடுஞ்செய்திகேட்ட மங்கம்மாள், திருவாங்கூர் அரசனுக்குத் தக்கசிக்ஷைசெய்யக்கருதி ஓர்பெருந்தசேனையைத் தளவாய் நரசப்பையரோடு 1698-ல் அனுப்பினாள். தளவாய் நரசப்பையர் திருவாங்கூர்ஸமஸ்தானத்திற் பிரவேசித்துக் கடும்போர் புரிந்து ஜயித்து, மிகுந்தத்ரவியத்துடனும் ஜயகோலத்துடனும் திருச்சிராப்பள்ளிவந்துசேர்ந்தார்.

1700-ம்ஆண்டில் பூச்சே (Bouchet) என்ற பாதிரி, ப்ராம்மண மந்திரியான தளவாய் நரசப்பையர்பேட்டிபெற்றுக் காணிக்கைகள் செலுத்தி, மரியாதைபெற்றுச் சென்றார்.

1700-ல் தஞ்சையுத்தம். இதன்காரணம் இன்னதென்று தெரியவில்லை. இராமநாதபுரத்துக்கும் தஞ்சைக்கும்ஏற்பட்ட எல்லைவழக்கால் ஏற்பட்டிருக்கலாமென்று மதிக்கப்படுகின்றது. 1700-ம் ஆண்டில் நரசப்பையர் தன்சேனைகளுடன் காவேரியின் தென்கரையில் தங்கியிருந்தார். எதிரே வடகரையில் தஞ்சைச்சேனை காத்திருந்தது. தஞ்சைச்சேனையிற் குதிரைப்படை அதிகமாயிருந்ததால் நரசப்பையர் அதை எதிர்க்கத்துணியாமல், தருணம்பார்த்திருந்தார். ஒருசமயத்தில் தஞ்சைச்சேனை பிரிந்து மதுரைச்சேனையை இருபுறமும்சூழஎண்ணிக் காவேரியைத்தாண்டிவந்தது. நரசப்பையர் ரகஸ்யமாய்க் காவேரியைத் தாண்டி நேரே தஞ்சையைத் தாக்கினார். பிரிந்திருந்த தஞ்சைச்சேனை மறுபடி தங்கள் நகரைக்காக்க ஓடிவந்தது. காவேரியில் திடீரென்று வெள்ளம்வந்து தஞ்சைச்சேனையில் அநேகரை அடித்துக்கொண்டு போயிற்று. நரசப்பையரும் மிகுந்தவரைத் தாக்கி நாசஞ்செய்தார். பிறகு தஞ்சைமன்னன் சமாதானம்செய்துகொள்ளவிரும்பினான். சமாதானம்செய்துகொண்டு வெற்றிக்கோலத்துடன் நரசப்பையர் ஊர் வந்துசேர்ந்தார்.

1701-ம்ஆண்டில் தஞ்சைமன்னனும் மதுரை மங்கம்மாளும் மைசூர் அரசனுக்குவிரோதமாய் யுத்தஉடன்படிக்கைசெய்துகொண்டார்கள். இதற்குக்காரணம் மைசூர்அரசன், காவேரிநதியின்குறுக்கே ஓர் பேரணைகட்டித் தஞ்சை திருச்சிராப்பள்ளி என்னும் நாடுகளுக்குக் காவேரியிற் போதுமானஜலம்வராதபடி தடுத்துவிட்டதே. இதனாற் கோரமானயுத்தம் நேரிடக்கூடியதாயிருந்தது. காவேரியில் திடீரென்று பெருந்தவெள்ளம்வந்து யுத்தகாரணமான அப்பேரணையை அடித்துக் கொண்டுபோய்விட்டபடியால் யுத்தம் நேரவில்லை.

1702. நரசப்பையர்மரணம். இராமநாதபுரம் கிழவன்சேதுபதியை யடக்கும்பொருட்டு, நரசப்பையரும் தஞ்சைமன்னனும் தக்கசேனைகளுடன் இராமநாதபுரத்தின்மீது படையெடுத்துச்சென்றார்கள். மறவர்கள் ராஜாபிமானத்துடனும் தேசாபிமானத்துடனும் ஜாதிக்கட்டுடனும் ஏகோபித்துக் கடும்போர்புரிந்தார்கள். அப்போரில் நரசப்பையர் உயிரிழந்தார். நரசப்பையர் மரணத்தால் மதுரைச்சமஸ்தானத்துக்கே ஒருபெருங்குறையேற்பட்டது. மதுரைச்சேனை தோல்வியடைந்தது.

அச்சையன். நரசப்பையர் இறந்தபின் அச்சையன் என்பவர் தளவாய்ஸ்தானத்தை வகித்துவந்தார். இவ்வாறு இரண்டு மூன்று வருஷங்கள் கழிந்தன. 1704 (1705?)-ம்ஆண்டில், விஜயரங்கச்சொக்கநாதன் பட்டத்துக்குரிய வயதினனானான். அவனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டு, மங்கம்மாள், மதுரையில் தன் அரண்மனையில் தானதர்மங்கள் செய்துகொண்டு வைதிகசிரத்தையுடன் காலங்கழித்தாள்.

விஜயரங்கச்சொக்கநாதன்.

(1704—1731)

1704-ம் ஆண்டில் விஜயரங்கச்சொக்கநாதன் ராஜ்யத்தைக் கைக்கொண்டான். அதேவருஷத்தில் மங்கம்மாளும் காலஞ்சென்றாள். இவன் தெய்வபக்தியும் மதவிஷயங்களிற் சிரத்தையு முள்ளவன். புண்யஸ்தலங்களுக்கு யாத்திரைசெய்வதும் விசேஷ தானதர்மங்கள்செய்வதுமாய் இவன்காலங் கழிந்துவந்தது.

1709-ம் ஆண்டில், அரசன்றிறமைக்குறைவால் மதுரைநகரிற்கலகமுண்டாயிற்று. மந்திரிகள் அரசனுடன்கூடித்து ராஜ்யபாரத்தை வஹிக்கவில்லை. இவன்காலத்தில் தளவாயாயிருந்த நாரணப்பையனைத் தொலைத்து, கஸ்தூரிரங்கநாயக்கன் தளவாய் ஆனான். அவனையும் தொலைத்து வெங்கடராகவாசாரியார் தளவாய் ஆனார். இவ்வாறு நிர்வாஹஅதிகாரிகளுள் ஒற்றுமையில்லாமல், தேசம் சீர்குலைந்துவிட்டது.

பன்னிரண்டுவருஷப்பஞ்சம். (1709—1720) இக்காலத்தில் மறவர்நாட்டிற் கொடும்பஞ்சம்நேர்ந்தது. ஜனங்கள் நாட்டைவிட்டோடி மதுரைநாட்டிலும் தஞ்சைநாட்டிலும் குடியேறினார்கள்.

1710-ம் ஆண்டில் இராமநாதபுரத்தையாண்ட கிழவன்சேதுபதி மரணமடைந்தான். அவனுக்குவயது 80-க்கு மேலாயிருந்தது. அவன் மனைவியரில் 47 பேர் அவனுடன் உடன்கட்டையேறினதாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

கிழவன் இறக்குமுன் தன்போகஸ்திரீபுத்ரனை பவானி சங்கரத்தேவனைத் தன்வாரிஸாய்நியமித்தான். ஆனால் மறவர்கள் அதை யங்கீகரிக்காததால் அவர்களிஷ்டப்படி ஸ்வீகாரபுத்ரனை விஜயரகுநாதன் என்றவன் சேதுபதியாய் நியமனமானான்.

1720-ம் ஆண்டிற் பஞ்சம் நிவிர்த்தியாயிற்று. அதேவருஷத்திற் கலகமுமுண்டாயிற்று. பவானிசங்கரத்தேவன் ஏவுதலாற் புதுக்கோட்டைஅரசன் தஞ்சைமன்னனுடன்சேர்ந்துகொண்டு சேதுபதிமேற் படையெடுத்துவந்தான். விஜயரகுநாதன் அறந்தாங்கியில் அவர்களை எதிர்த்துப் போர்புரிகையிற் சேனையிற் கொள்ளைநோய் பரவிற்று. சேதுபதி நகருக்குத்திரும்பிவந்து சிறிதுகாலத்துக்குள் சந்ததியில்லாமல் இறந்துபோனான்.

மறுபடி இராமநாதபுரஆட்சியைப்பற்றித் தாண்டத்தேவனுக்கும் பவானிசங்கரத்தேவனுக்கும் விவாதம்நேர்ந்தது. புதுக்கோட்டைத் தொண்டமானும் மதுரையரசனும் தாண்டத்தேவனுடன்சேர்ந்து கொண்டார்கள். பவானிசங்கரன் தஞ்சையரசன்சகாயம்பெற்றான். இரண்டுசேனைகளும்செய்தபோரிற் பவானிசங்கரத்தேவன்கட்சி ஜயித்தது. பவானிசங்கரன் மறுபடியும் சேதுபதியானான்.

சிவகங்கைச்சீமையுண்டானது. 1729. பவானிசங்கரனுக்கும் சசிவர்ணப்பெரியஉடையான் என்ற ஓர் பாளையக்காரனுக்கும் விரோதமுண்டாயிற்று. சசிவர்ணன் தன்பாளையத்தினின்றும் துரத்தப்பட்டுத் தஞ்சையில் அடைக்கலம்புகுந்து அங்கிருந்த முன் சேதுபதியின் மாமனை கட்டையத்தேவனுடன்சேர்ந்துகொண்டு தஞ்சைச்சேனையுதவிபெற்று இருவரும் பவானிசங்கரன்மேற் படையெடுத்துவந்தார்கள். உறையூரில்நடந்தபோரிற் பவானிசங்கரன் தோல்வியடைந்து கைதியாக்கப்பட்டான். இப்போருக்குப்பின் இராமநாதபுரம்ராஜ்யமானது பங்குபோடப்பட்டது. பாம்பாற்றுக்குவடக்கேயுள்ள சீமையெல்லாம் தஞ்சையைச்சேர்ந்துவிட்டது. மீதமுள்ளதில் 5-ல் 3 பங்கு கட்டையத்தேவனுக்கும், 5-ல் 2 பங்கு சசிவர்ணத்தேவனுக்கும் கிடைத்தன. இதுதான் சிவகெங்கைச் சீமையெனப்படும்.

1713, 1717-ம் ஆண்டுகளிற்பிறந்த இரண்டு தெலுங்குத் தாம்ரசாஸனங்களால், மதுரைராஜ்யமானது அக்காலத்திற் சந்திரகிரிஅரசுக்குட்பட்டதெனத் தெரியவருகின்றது. அச்சாஸனங்கள் மதுரைத் தேவஸ்தானத்திலிருக்கின்றன.

1731-ம் ஆண்டில் விஜயரங்கச்சொக்கநாதன் சந்ததியின்றி மரணமடைந்தான். அவன்மனைவி மீனாக்ஷி பட்டத்துக்குவந்தாள்.

மீனாக்ஷி.

(1731—1736)

1731-ம் ஆண்டிற் சொக்கநாதன்இறந்ததும் அவன்மனைவி மீனாக்ஷி வாரிஸ்க்ரமமாய்ப் பட்டத்துக்குவந்தாள். தனதுகணவன்கொடுத்துச்சென்ற அநுமதிப்படி ராஜவம்சத்தைச்சேர்ந்த வங்காருதிருமலையின் மகனை ஸ்வீகாரஞ்செய்துகொண்டாள். தனதுசகோதரன் வெங்கடராயப்பெருமாள்நாயக்கன் மூலமாய் அரசாட்சிசெலுத்திவந்தாள்.

கட்சி. மீனாக்ஷிக்குவிரோதமாய் ஒருகட்சி ஏற்பட்டது. அதற்குத் தலைவன் தளவாய் வெங்கடராயாசாரியார் என்பவர். மீனாக்ஷியைப் பட்டத்தினின்றும்நீக்கி வங்காருதிருமலையைப் பட்டத்தில்வைக்க வேண்டுமென்பது இக்கட்சிக்காரர்கொள்கை. ராணி திருச்சிராப்பள்ளிக்கோட்டையிலிருக்கையில் திருமலையின்கட்சிக்காரர், அவளறியுமுன்னர்க் கோட்டைக்குள், பலாத்காரமாய்ப்புகுந்துவிட்டார்கள். சங்கதிதெரிந்தபிறகு நடந்தசண்டையில், திருமலையையும் அவன்கட்சிக்காரரையும் தோற்கடித்துத் துரத்திவிட்டார்கள்.

அக்காலத்தில் ஆர்க்காட்டுச்சீமையை நவாப் தோஸ்த்ஆலீகான் அரசாண்டுகொண்டிருந்தான். அவன் தக்ஷிணதேசமுழுவதையும் தன் ஆட்சிக்குட்படுத்திக்கொள்ளவேண்டுமென்ற பேராசைகொண்டு தன் மூத்தமகனான ஸதர்ஆலிகானையும், தன்மாப்பிள்ளையும் மந்திரியுமான சந்தாஸாஹிபையும் தக்கசேனையுடன் அனுப்பினான். மஹமதியவீரர் தஞ்சையைப் பிடித்துக்கொண்டார்கள். திருச்சிராப்பள்ளியைப் பிடிக்க முடியவில்லை. ஆயினும் தெற்கே திருவாங்கூர்வரைசென்று ஊர்களையும் பட்டணங்களையும் நாசஞ்செய்துவிட்டுத் தக்க கொள்ளைப்பொருளுடன் திரும்பிவந்தார்கள்.

1734-ம்வரு வங்காருதிருமலை, ஸதர்ஆலிகானுடன், ஒரு ரகஸ்ய ஒப்பந்தம் செய்துகொண்டான். துருக்கர்தலைவன் மீனாக்ஷியைப் பட்டத்தினின்றும்விலக்கித் தனக்குப் பட்டங்கட்டினால், அதற்கு ப்ரதிப்ரயோசனமாய்த் திருமலை 30 லட்சம்ரூபாய்கொடுப்பதாய் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

ஸதர்ஆலிகான் ஓர்யுக்திசெய்தான். மதுரை அரசாட்சியைப்பற்றித் திருமலைக்கும் மீனாக்ஷிக்குமேற்பட்ட விவாதத்தைத்தீர்த்துவைக்கத் தான் வந்திருப்பதால் அதில் இருதரப்பிலும் ஸாக்ஷியம்சொல்லக்கூடியவர்கள் தன்முன்ஆஜராகும்படிக்குப் பறையடிக்கச்செய்தான். இதையொன்றும்கவனியாது மீனாக்ஷி அலக்ஷ்யமாயிருந்துவிட்டாள். பேருக்கு ஒரு விசாரணைமாதிரிசெய்துவிட்டு எதிர்பார்த்தவண்ணமே திருமலைக்கு அநுகூலமாய்த் தீர்ப்புச்சொல்லிவிட்டான். ஒப்பந்தப்படி திருமலைக்குப் பட்டங்கட்டிவிட்டு 30 லக்ஷரூபாயைவாங்கிவரும்படி சந்தாஸாஹிபைநிறுத்திவிட்டு ஸதர்ஆலிகான் ஆர்க்காடுபோய்ச்சேர்ந்தான்.

காரியம் மிஞ்சிவிட்டதென்றுபயந்து மீனாக்ஷி சந்தாஸாஹிபுடன் ஓர் ஒப்பந்தம்செய்தாள். மீனாக்ஷி கோடிரூபாய்கொடுத்துவிடு

கிறது என்றும், அதைப்பெற்றுக்கொண்டு சந்தாஸாஹிப் ஒன்றும்செய்யாமற் போய்விடுகிறது என்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டது. வஞ்சனையிருந்த சந்தாஸாஹிப் அதற்கிணங்கினான். ஆயினும் மீனாக்ஷி சந்தேகங்கொண்டு அவனைக் கோரான்மேல் ப்ரமாணம்செய்யச்சொன்னாள். அங்ஙனமே காவேரிக்கரையிலுள்ள தளவாய்மண்டபத்திற் சந்தாஸாஹிப் ப்ரமாணம்செய்துகொடுத்தான். ப்ரமாணம் தன்னைக் கட்டுப்படுத்தாமலிருக்கும்பொருட்டு ஒருசெங்கல்லைப் பட்டுத்துணியாற்சுற்றி அதன்மேல் ப்ரமாணம்செய்து ஏமாற்றிவிட்டதாகவும் சொல்லுவதுண்டு.

சந்தாஸாஹிப் கோட்டைக்குள் விடப்பட்டான். கோட்டையும், அதிலுள்ள யானைகுதிரைகளும் கஜானாக்களும் தன்கைவசமானதும், தன் அந்தரங்கமான கபடஎண்ணத்தைவெளியிட்டான். தான் சொந்தம் பாராட்டவந்தவனேயொழிய மீனாக்ஷியையாவது திருமலையையாவது காப்பாற்றவந்தவனல்லவென்று தெரிந்துவிட்டது. திருமலையும் அவன் மகனும் மதுரைக்கு ஓடிவிட்டார்கள். பாவம்! ராணி மீனாக்ஷி கோட்டைக்குள் அகப்பட்டுக்கொண்டாள். மீனாக்ஷியின் அரண்மனையைக் காக்கத்தக்கசேனையை நிறுத்திவிட்டு, மிகுந்தசேனையுடன் மதுரை நோக்கிப் புறப்பட்டான்.

மதுரையிலிருந்து ராணிகட்சியைச்சேர்ந்த கோவிந்தையர், ராவணையர்என்ற இரண்டுசேனாபதிகள் 8000 குதிரைப்படையுடன் திண்டுக்கற் பக்கத்தில் துருக்கர்படையைஎதிர்த்துத்தோற்றுப்போனார்கள். துருக்கர் மதுரைநோக்கிவரவே திருமலையின் இன்னொருபடை, அவர்களை அம்மையநாயக்கனூரில் எதிர்த்து வீராவேசத்துடன்போர்புரிந்தும் கடைசியில் தோற்றுப்போயிற்று. சந்தாஸாஹிப் மதுரைவந்து சேர்ந்தான். திருமலை நகரைவிட்டுத் தப்பியோடிச் சிவகெங்கைபோய்ச் சேரவே, அங்கிருந்து அவன் வெள்ளிக்குறிச்சியில் ஒளித்துவைக்கப்பட்டான். மதுரைத்தேசமுழுதும் மஹமதியராற் பாழடைந்தது.

மதுரைராஜ்யத்துக்குத் தானே அதிகாரியென்று பகிரங்கமாய்ப் பறையறைவித்தான். மீனாக்ஷி உயிருடன்இருக்கும்வரை யாராவது வஞ்சஞ்செய்துகொண்டேயிருப்பார்களென்றெண்ணி, அவளைக் கொலைசெய்ய உத்தேசித்தான். ஆனால் அவன்கையாற்சாகும்வரை காத்திராமல், மீனாக்ஷி தானே விஷமுண்டு இறந்தாள்.

திருமலை, மஹாராஷ்டிரர்களைத் தஞ்சமடைந்து அவர்களுதவியையவேண்டினான். தோஸ்த்ஆலிகானுக்குத் தக்கசிக்ஷைவிதிக்க

வேண்டுமென்று முன்னமேயே ஹைதராபாத் நிஜாம்உல்மல்க் கேட்டுக் கொண்டிருந்தான். கர்னாடதேசத்தின்மீது படையெடுக்கத் தக்கசமயமும் காரணமும் ஏற்பட்டன. ராகோஜிபோன்ஸ்லே என்னும் மஹாராஷ்ட்ரத்தலைவன் 60000 குதிரைப்படையுடனும் ஒன்றரைலட்சம் காலாட்களுடனும் 1739-ம் வருஷம் கர்னாடதேசத்தின்மீது படையெடுத்து வந்தான். இதையறிந்த தோஸ்த்ஆலிகான் முக்யமான கணவாய்களை மஹமதியர்சேனையைக்கொண்டு காக்கச்செய்து, எதிர்பாராதஇடத்தில் ஓர் ஹிந்துசேனையை நிறுத்திவைத்திருந்தான்.

இந்தரஹஸ்யமறிந்த மஹாராஷ்ட்ரத்தலைவன் ஹிந்துசேனைத்தலைவனிடம்சென்று அவனிடம் பலவிதமாய்ச் சினேகம்பாராட்டி, இந்துவுடன் இந்து எதிர்ப்பது சரியல்ல எல்லோரும் ஒன்றுகூடி மஹமதியரைஎதிர்த்துத் துரத்தவேண்டுமென்று போதித்தான். ஹிந்துசேனைத் தலைவன் அதற்கிணங்கிச் சண்டையிடாமலே வழிவிட்டுவிட்டான்.

புதுச்சேரிப்பக்கத்தில், துருக்கர்படைக்கும் மஹாராஷ்ட்ரர்படைக்கும் கோரமானயுத்தம் நடந்தது. தோஸ்த்ஆலிகானும் அநேக துருக்கவீரரும் சண்டையில் மடிந்தார்கள். துருக்கர் தோல்வியடைந்தார்கள். இரண்டுநாளைக்குப்பிறகு ஸதர்ஆலிகான் சேனையுடன் அவ்விடம்வந்தான். தகப்பன் அபஜயமானதறிந்து பயந்து அவன் வேலூருக்கு ஓடிவிட்டான். மஹாராஷ்ட்ரர் அவனைத் துரத்திச்சென்று தங்களுக்குக் கோடிரூபாய் ஸதர்ஆலிகான் கொடுக்கவேண்டுமென்றும், தஞ்சை மதுரைராஜ்யங்களை உரியவர்களிடம் விட்டுவிடவேண்டுமென்றும் உடன்படிக்கைசெய்தார்கள்.

திருச்சிராப்பள்ளியைக் காத்துக்கொண்டிருந்த சந்தாஸாஹிப் அதற்கிணங்கவில்லை. உடனே மஹாராஷ்ட்ரர் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டார்கள். சந்தாஸாஹிப் சகோதரன் பாதாஸாஹிப் தமையனுக்கு உதவிபுரியவந்தான். ஆனால் யுத்தத்தில் மடிந்தான். மஹாராஷ்ட்ரர் 1741ம்ஆண்டில் திருச்சிராப்பள்ளிக்கோட்டையைப் பிடித்துக்கொண்டு சந்தாஸாஹிபைச் சிறைப்படுத்தி ஸதாராவுக்கு அனுப்பிவிட்டார்கள். ராகோஜிபோன்ஸலே அவஸரமாய் ஸதாராவுக்குப் போகநேர்ந்தது. திருமலையோ ஆளத்திறமையற்று ஓடிஒழிந்துவிட்டான். ஆர்க்காட்டுநவாபைச்சேர்ந்தவர்களும் ஆளமுடியவில்லை. இந்நிலைமையில் 1741-ம்ஆண்டுக்குப்பிறகு மதுரைராஜ்யமானது சிதிலமடைந்து பலவீரர்களாற் பங்குபோடப்பட்டது. அக்காலத்தில் மதுரைத்தேசம்முழுதும், பஞ்சம், கொலை, கொள்ளை, கொள்ளைநோய் முதலான பலதுன்பங்களுக்கு இரையாயிற்று.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B. A., B. L.

௨

திருவெண்காட்டுச்சாஸனங்கள்.

அடியிற்பதித்திருக்கும் சாஸனமானது திருவெண்காட்டு ஈசுவரன் கோவிலின் முதற்பிராகாரத்தின் வடசுவரில் வரைந்துள்ளது. எண்ணெய், சுண்ணாம்புமுதலிய அழுக்குகளின்றி, எழுத்துக்கள் மறைந்துபோகாது நல்லஸ்திதியி லிருக்கின்றன. இது இராஜகேசரிவர்மனாகிய இராஜராஜன்காலத்தது; இவ்வரசனுடைய மெய்க்கீர்த்தி இதுவரை வெளிவராதிருப்பதாலும், நல்ல தமிழ்ச்செய்யுளாயிருப்பதாலும், தமிழபிமானிகட்கு இன்பந்தருமென்று பதிக்கப்படுகிறது. இச்சாஸனம் இராஜகேஸரிவர்மனாகிய இராஜராஜன் ஆட்சியின் நாலாமாண்டில் விருச்சிகஞாயிற்றுப் பூர்வபக்ஷத்தில், தசமியும் திங்கட்கிழமையுங்கூடிய இரேவதிநாளிற் பிறந்தது. இவ்விவரங்களைக்கொண்டு ஸ்ரீமான் சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள், அடியில்வருமாறு காலகணனம் செய்திருக்கிறார்கள். "பூர்வபக்ஷத்துத் தசமியானது விருத்திகமாதத்து 22-வது நாளாகும். அன்று தசமி சூரியோதயமாய் 47 நாழிகைக்குப்பின் கழிந்தது: இரேவதிநக்ஷத்திரமானது திங்கட்கிழமை சூரியோதயமாய் 25 நாழிகைக்குப்பின் தொடங்கிச் செவ்வாய்க்கிழமை $21\frac{1}{2}$ நாழிகைக்குப் பிறகு முடிந்தது. இவ்விசேஷங்களைக்கொண்டுள்ளநாளானது மூன்றும் இராஜராஜன் ஆட்சியின் 4-வதுவருஷத்தில், அதாவது கி. பி. 1219ல், நவம்பர்மாதம் 18ம்தேதி திங்கட்கிழமையேயன்றி வேறொருநாளுமல்ல: மற்றைநாட்களில் மேற்கூறிய திதி வார நக்ஷத்திரங்கள் கூடிவருவனவாகக்காணோம். ஆகையால், இச்சாஸனம் இரண்டாம் இராஜராஜன் காலத்ததுஎன்றுசொல்லவியலாது. மூன்றும்இராஜராஜனதேஎன்பதிற் சம்சயமில்லை." பிள்ளையவர்கள்செய்திருக்கும் காலநிர்ணயத்தாற் சரித்திரமொன்றும் அடங்கியிராத இம்மெய்க்கீர்த்தியுடையவரசன் மூன்றும் இராஜராஜனேயென்று தெளிவாகும்.

திருவெண்காட்டுச்சாசனம்.

I

மெய்க்கீர்த்தி

(1) *சீர்மன்னு மலர்மகளும் சிறந்ததனி நிலச்செல்வியும்
பார்மன்னு பசுந்துளவச் சயமடந்தையு மனங்களிப்பப்
புகழ்மடந்தை புகழ்பாடப் புலமகளும் பூங்காரு
முகமலர்ந்து கண்களிப்ப முனிவர்கணந் துதியெடுப்பத்
தனித்துலக முழுதாளத் தடங்கரைப்பா(2)ற் கடல்பிரிந்த
பனித்துளவ நறுந்தாமப் பரந்தாம மெனவந்து
கடிமுளைச மொருமூன்றுங் கடனான்கு மெனமுழங்கப்
படிமுழுது மிருணீங்கப் பருதிதனிக் குலம்விளங்கக்
கொடியேந்து புலிமையக் குலமைமேல் வீற்றிருப்ப
முடிவேந்த ரடிசூட முறைமையினால் (3) முடிசூடி
வடவரையின் படவரவின் மணிமுடியும் பொடியாகத்
தடவரையின் நெடுந்தோளின் வாரணிகலன் தரித்தருளிப்
பாரேழும் பொழிலேழும் படிபரிக்குங் கிரியேழு
நீரேழுந் தனிகவித்து நிறைமதிவெண் குடைநிழற்றப்
புறவாழியும் வரையாழியும் பூதலமும் பொதுநீக்கி
அறவாழியுஞ் (4) செங்கோலு மனந்தகற்ப [காலம்] புரக்க
ஒப்பரிய மறைநாலும் உரைதிறம்பா மனுநூலுஞ்
செப்பரிய வடகலையும் தென்கலையுந் தலையெடுப்ப
நீதிதரு குலநான்கும் நிலைநான்கு நிலைநிற்ப
ஆதியுகங் குடிபுகுத அறுசமயந் தழைத்தோங்கப்
பொருதுறையுஞ் சினவேங்கையு மட(5)மானும் புகுந்துடனே
யொருதுறைநீ ரினிதுண்டு பகையின்றி யுறவாடப்
புயல்வாரி பொழிவிக்கும் பொற்றொடியவர் கற்புயர
வயல்வாரி வளம்பெருகி மறையவர்முத் தமிழ்வளர்க்கும்
நெறிமுறைமை யினிதீண்டித் தனதாணை திசைநடப்ப
நிருபர்குலம் பெலம்ப[டர] நிலங்காவற் றொ(6)ழில்பூண்டு
செருவலியில் முருகனென்றுந் திருவடிவில் மதனனென்றும்

* இச்செய்யுணடை கொம்மைப்பாட்டிசையுடையதாய்ச்சென்று குறளடியான் முடிக்தனது.

பெருகொளியிற் பருதியென்றும் பெருந்தகைமையிற் றருமனென்றும்
தண்ணளியில் மதியென்றும் தனந்தருதலிற் றருவென்றும்
மன்னுலகத் திகல்வேந்தரு மறைவாணரும் போற்றெடுப்ப
மீனவருஞ் சிங்களரும் விக்(7)கலரும் கற்கடரும்
வானவருங் குந்தளரும் வங்களரும் பார்மருங்கு
பல்லவரும் மாகதரும் பாஞ்சாலரும் காம்போதரும்
கொல்லணரும் திரைலூரும் கூபகருஞ் சாவகரும்
பண்லடயரும் திருவடிக்கீழ்ப் பரிந்திறை சொரிந்திறைஞ்ச
எண்டிசையும் புரந்தளிக்கும் இராஜராஜதுங்கன் ராஜராஜன்
மலைபேரினும் வான்பேரினும் (8)மாதுரங்கா......
நிலைபேரி னும்பேராத நெஞ்சுடைய செஞ்சேவகன்
அளவில்பெரும் புகழாகாம மங்கையருக் கரசாகி
உலகுடைய பெருமாளுடன் ஒக்கமணி முடிகவித்தாள்
உறந்தைவள நகரம்போல் உலகமொரு பதினான்கும்
பிறந்துடையாள் இராஜராஜன் பிரியாவேணக்காறி
இயல்வாழவும் இசைவாழவும் (9)இமயமலை மகளறத்தின்
செயல்வாழவும் ராஜராஜன் திருத்தாலி பெற்றுடையார்
அரச ரிலைறஞ்சழக னருணிலைறந்த வுலகுதன்னில்
உரைசிறந்த தனியாணை உடனாணை பெற்றுடையாள்
தலைவய பரிகண்டற காத்தறிக்குங் கற்பகாலம்
புவனியெழத் தனதாணையிற் புரக்குலந்தவந் தப்புரப்பெருமாள்
பொய்யாநெடு நிலனான்கும் (10)பொருகுடையி னிருநான்கும்
மாதிரமும் விளங்கவந்த வாணர்குல நிலைவிளக்கு
குலகரியொட் டும்பரித்த குலவட்ட மலர்கவிலைதச்
சக்கரவர்த்தி தனந்தப்புரமுகவர்த்திகாசெறிய
கொடயலவானவாச்சி குலதிபராதாராதிபதிமா [ன்
மாதேவியார் தொழுதிறைஞ்சும் மடந்தைமங்கையர் தம்பெருமா
அவ்வுலகத் (11) தருந்ததியும் அதிசயிக்கும் பெருங்கற்பா
லிவ்வுலகத் தருந்ததியென விசைதந்த திசைவிளங்கத்
திருந்தியவேல் இராஜராஜநு ராஜேந்த்ரநு திருவருளோனும்
பெருந்தனிப்பாற் கடல்படிந்து விளையாடும் பெடையன்னம்
ஆணையெங்கும் தனதாக்கிய ஆதிஇராஜநு மாதேவி

வளா [வ]ங்கசூளாமணி மறையவர்தொழுஞ் சிந்தாமணி
(12) சோழனுடன் இராஜராஜ ஸுரிமலர்ப்பூந் துழாய்மார்பில்
பூணார மெனவிளங்கிய புவனமுழு துடையாளும்
அனந்தகற்பக நாள்பிரியாது
மனங்களித்து மணம்புணரச்
செம்பொன்வீர ஸிம்ஹாஸனத்துப்

புவனமுழுதுடையாளோடும் வீற்றிருந்தருளிய கோராஜகேஸரி வந்மரான த்ரி[பு]வனச்சக்ரவர்த்தி[க]ள்(ஃ) ஸ்ரீராஜராஜதே(13)வற்கு யாண்டு நாலாவது வ்ருஷிகநா[ய*]ற்று பூர்வ்வபக்ஷத்து த்ஸமியும் திங்கட்கிழமையும்பெற்ற இரேவதிநாள் இராஜாதிராஜவளநாட்டு உடையார் திருவெண்காடுடையநாயனார்க்கு, இராஜேந்த்ரசோழவளநாட்டுச் சோழமங்கலமுடையான் தாயிலுநல்லபெருமாளான இளங்கோவேளார்பாரியை மாத்தூர் கிழவன் (14) அரையன் உதையஞ்செய்தானை சோழகோனார்மகளார் திருவெண்காட்டுநாச்சியார் (என்பவள் திருவெண்காட்டு ஈசுவரர்க்கு ஒரு திருநந்தாவிளக்குவைத்தாளென்று சொல்லப்பட்டிருக்கிறது.)

திருவெண்காட்டு இரண்டாவது மூன்றாவதுசாஸனங்கள், இராஜகேஸரிவர்மனான வீரராஜேந்திரன்காலத்தன. இவ்வரசன்ஆட்சியின் மூன்றாமாண்டில், திருவெண்காட்டுநங்கைமகன் சிவலோகநாதன் என்பவன் அரசனுக்குவிண்ணப்பஞ்செய்து, திருவெண்காட்டீசுவரருடைய தேவதானநிலங்களிற் பிரியும் அந்தராயம்முதலாயவரிகளினின்றும் வரும்ஆதாயத்தை வீரராஜேந்திரதேவருடைய பிறந்தநாளான ஆயிலியநக்ஷத்திரத்தின்நாள்களில் மாதந்தோறும் ஈசுவரர்க்குத் திருநாள், திருப்பள்ளியெழுச்சி, முதலியசெய்விக்கவும், பத்துச்சிவயோகிகட்கு அமுதுசெய்விக்கவும், ஐவர் பிராமணர்கட்குச் சந்தர்ப்பணைசெய்வதற்கும் மற்றும் பலவிஷயங்களில் விநியோகமாகும்படிக்கும் உத்தரவுபெற்று, இவைநடப்பிக்க ஏற்பாடுசெய்தான். இச்சிவலோகநாதனே, அரசன்வீரராஜேந்திரன் ஜன்மநக்ஷத்திரத்தினுட்களில் திருவெண்காட்டீசுரர்க்குத் தேன், பால்முதலியபதார்த்தங்களால் அபிஷேகஞ்செய்விக்கவும் திட்டஞ்செய்தான். வீரராஜேந்திரன்காலம், சரித்திரம் முதலியவைகளைச் "சோழவம்சசரித்திரத்"திற் கண்டுகொள்க.

திருவெண்காட்டுச்சாசனம்.

II

(1) ஸ்வஸ்திஸ்ரீ[*]வீரராஜேந்த்ர நுகுலதிலக ப்ரதாப ஸூர்ய,
ஸ்ரீமத்வேதவநமாலிகத்ருஷ்ட (2) ஸ்வஸ்வீகார ॥

பூப்பாலவ கோன்வீர ராஜேந்தி ரர்க்காப் புராரிகல
நா(3)ப்பால் னவிற்றுஞ் சிவலோக நாத னெனநு(ன்) றுதேன்
ஆப்பாலோ டைதொ(4)டும் வெண்காட் டரற்கமைப் பித்தலறங்
காப்பா னவனென்னை ஆளுடையானி(5)க் கடவிடத்தே.

திருவெண்காட்டுச்சாசனம்.

III

1–4 (இவ்வரசன் மெய்க்கீர்த்திக்குப்பின்) (5) கோவிராஜகேஸரி வந்மரானஉடையார் ஸ்ரீவீரராஜேந்த்ரதேவற்குயாண்(6)டுமூன்றாவது திருவெண்காட்டுநங்கைமகன் சிவலோகநாதன்விண்ணப்ப (7) த்தால் உடையார் திருவெண்காடுடையார்தேவதாநமான ஊர்களில் அந்தராயம்பங்(8)பண்டவெட்டிஉள்ளிட்டபாட்டங்களால்வந்த காசு உடையார் ஸ்ரீவீரராஜேந்த்ரதேவர் பிறந்தநாளா (9) ன ஆயிலேயத்திருநாள்களால் திருவெண்காடுடையார் திங்கள்தோறும் (உத்சவமும், திருப்பள்ளி எழுச்சியும், பத்துச்சிவயோகிகட்கும் ஐவர் பிராமணர்க்கும் ஊட்டும், கன்னியாபூஜைமுதலியவைகளும் நடப்பதாக ஏற்பாடுசெய்தான்).

T. A. கோபிநாதராவ்.

உ

இரண்டு வேதாரணியத்துச்சாசனங்கள்.

I

(1) ஸ்வஸ்திஸ்ரீ த்ரி[பு]வன சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவதின் எதிராமாண்டு உம்பளநாட்டு குன்றூர்நாட்டு ஸ்ரீ உடையார் திருக்கோடிக்குழகர் தேவதானத் தோம் இக்காட்டு......

(2) பட்டன் நம்பியான் உத்தமன் குழகநாயனுருக்குவினியோகம்பண்
ணிக்கு(கொ)டுத்த பரிசாவது. இந்நாயனுர் திருக்கோயில்முன்
யொருபத்தைந்தாவது கானவத்து(கருநட?)கண்ணதெண்டு நாய
கர்படைநடந்து கோயிலிலேசிலகை(சிலா லேகை).........பின்பு
ஆளுடையநாய

(3) னுரையும் நாச்சியாரையும் எழுந்தருளிவிக்கப் பார்த்தவிடத்து
ஸ்ரீ பண்டாரத்து உடலில்லாதபடியாலே இந்த தர்(ன்)மத்தைச்
சில (செல)வறக் கொடுத்தாகிலும் நாயனுரை எழுந்தருளிவித்
துப்பூசைசெய்யப்பண்ணவேணுமென்றுபார்த்து இந்த உத்தம
நம்பிபக்கலே தானமாக கொடுத்தோம். நீ

(4) ரும் உம்முடையவர்க்கத்தாரும் இந்தத் தன்மத்தைக் கைக்
கொண்டு எழுந்தருளப்பண்ணவேணுமென்று சொல்ல, இவனும்
இப்படிக்கு எழுந்தருளப்பண்ணுகைக்குவேண்டும் செலவுக்கு
இவர்பக்கல் நாங்கள் கைக்கொண்டகாசு நூயது. இக்காசு ஐம்பதி
னுயிரமும் கைக்கொண்டு

(5) இந்நாயனுரையும் நாச்சியாரையும் திருநயனதிருநயனமெதவி
பூர்வமாக திருப்பணி குறைவரச்செய்கைக்கு இ(ரு)ந்தமைய(ா)ல்
இத்திருக்கோயிலிலே (வேதாரணியம்கோயிலிலே) இந்நாயனுரை
யும் நாச்சியாரையும் இத்தேவ கன்மி நம்பி......எழுந்தருளப்
பண்ணுவித்து திருப்பணிபண்ணித் தருவோமாகவும்

[இச்சாசனம் இரண்டாம்பிரகாரம் வடபுறம்சுவரில் நடுவிலிருக்கிறது.]

II

(1) ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு
யாண்டு ௩-வது உம்பளநாட்டுக் குன்றூர்நாட்டு உடையார் திரு
மறைக்காடுடையார்கோயில்

(2) ஆதிசண்டேசுர தேவகன்மிகளுக்கு மேற்பாடிகாவல் அரியான்
பிச்சனுனஎதிரிலி சோழகங்கைநாடாழ்வானேன் ஆள்விலைப்பிரமா

(3) ண இசைத்திட்டுக்கு(கொ)டுத்த பரிசாவது எனயடம் பளரில்
(ஊர்) சிதையாண்டிக் கூட்டத்துவே......னுன் பட்டநாயக்கண்
ணப்பனையும் மாரம்பன் ஆதிநாயகக்

(4) கண்ணப்பனையும் உடையானுன சொக்கநாயகக் கண்ணப்பனையும்
கங்கையும் திருவனையும் முன்னுளிலே எங்கள் முதலியார் தந்தப்
பிள்ளை ஆளக்

(5) கங்கைநாடாழ்வார்க்கு அடிமையாகக் கு(கொ)டுத்தமையால்
இவர்களையும் இபகழ்தி? ஆண்மையையும் பற்று......னையும்
ஆண்டாளியையும் ஆண்

(6) டானையும் தருக........................களையும் இவர்கள் வர்க்
கத்தாரையும் விற்றுக்கொடுத்தும், அதற்காவதான விலைகாசு ௲.
இக்காசு ஆயிரமும்

(7) ஸ்ரீ பண்டாரத்தேகொண்டு இவர்களை விற்றுக்கொடுத்தேன்
அரியான் பிச்சனுன எதிரிலி சோழ நாடாள்வானேன் இப்படிக்கு
இவை

(8) எதிரிலி சோழ கங்கை நாடாள்வானேனெழுத்தும், சோழன்
ஆனை காத்தான் ஆன சோழியவரையனும், உத்த(ம)ன் திருவே
கம்பமுடையான் ராஜராஜ கங்கை நாடாழ்வன் எழுத்து.

சோமசுந்தரதேசிகன்,

இலக்கணவிளக்கபாரம்பரை, திருவாரூர்.

உ

புத்தகமதிப்புரை.

—:(o):—

1. சைவப்பிரகாசம்:—இது மேலைச்சிதம்பரமாகிய பேரூரிலிருந்து மாதமொருமுறைவெளிவரும் தமிழ்ப்பத்திரிகை. இதில், சைவசம்பந்தமானவிஷயங்களோடு, வைஷ்ணவம் அத்வைதம்முதலிய மதங்களின் உண்மைகளும், வருணுச்சிரமதர்மவொழுக்கங்கள், ஆசாரச்சீர்திருத்தம், ஜீவியசரித்திரங்கள், தமிழ்நூலாராய்ச்சி தேசவர்த்தமானம்முதலிய விஷயங்களும் வெளியிடப்படுமென்றுதெரிகிறது. மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பண்டிதபரீக்ஷையில் முதற்றரத்திற்றேறியவரும், இப்பொழுது கோயம்புத்தூர்க்காலேஜில் தலைமைத்தமிழ்ப்பண்டிதராயிருப்பவரும் தமிழ்நூலாராய்ச்சியிற் றேர்ச்சியுள்ளவருமான மகா-ள-ள-ஸ்ரீ அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள் பத்திராசிரியராயிருந்து இதனை நடத்திவருவதாகத்தெரிவதால் இது கற்றோரும் மற்றோரும் விழைவுறுமாறு செவ்விதினடைபெறுமென்று நினைக்கிறோம். இதன்முதற்பகுதியில், சைவசமய மேம்பாடு, வேதமும் ஆகமமும், கல்வி, தமிழ்ப்பாஷையைப்பற்றிய அபிப்பிராயம்முதலிய விஷயங்களோடு வர்த்தமானமும் விநோதக்கூற்றுக்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதன்வருடசந்தா ரூ. 2—8—0 கலாசாலைமாணவருக்கு ரூ. 2—0—0 தனிப்பிரதி அணு 4. இதன் வருமானத்தில் ஒருபாகம் அறுபத்துமூவர் குருபூஜைக்குச்செலவழிக்

கப்படுமென்றுதெரிவதால், சைவர்களும் தமிழபிமானிகளும் சந்தாதாரராகச்சேர்ந்து சந்தாவை முன்பணமாகஅனுப்பிப் பத்திரிகையை ஆதரிப்பார்களாக. வேண்டுவோர் சைவப்பிரகாசமானேஜர் கோயம்புத்தூர் என்றவிலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

---

2. ஞானசம்பந்தவெண்பா:—இது மதுரை ஸெயிண்டுமேரிஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ மு. கோவிந்தசாமிஐயரவர்களாற் புதிதாகப் பாடப்பட்டது. ஐயரவர்கள் ஸ்ரீ: திருஞானசம்பந்தர் திவ்வியசரித்திரத்தைப் பெரியபுராணத்திற் கூறியமுறைப்படியே 246 வெண்பாக்களால் அழகாகப்பாடிமுடித்திருக்கிறார்கள். இதனைச்செய்வித்தார் மதுரை:திருஞானசம்பந்தஸ்வாமிகளாதீனகர்த்தராகியஸ்ரீலஸ்ரீ சாமிநாததேசிகரேன்றுதெரிகிறது. பல சிறந்தவித்துவான்களாற்கொடுக்கப்பட்டசாற்றுக்கவிகளும் சிறப்புப்பாயிரமும் இதிற் சேர்க்கப்பட்டுள்ளன. ஐயரவர்கள் இன்னும் இத்தகைய பலநூல்களைச்செய்து உலகுக்குபகரிக்கும்வண்ணம் சைவாபிமானிகளும் தமிழபிமானிகளும் இப்புத்தகத்தை ஆதரித்து ஐயரவர்களுக்கு மகிழ்வூட்டுவார்களென்று நம்புகிறோம். இதன்விலை விவரமுதலியன வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதித்தெரிக.

---

3. ஜோதிடயவனகாவியம்:—இது, கோயம்புத்தூர் மு. அருணசலக்கவிராயரவர்களால் வடமொழியிலிருந்து தமிழிற் செய்யுள்வடிவாக மொழிபெயர்க்கப்பட்டதாகத்தெரிகிறது. முதனூலோடு ஒப்புநோக்கும் ஆற்றலுடையாரால் இதன்குணகுணங்கள் அறியத்தக்கன. இதன்விலை அணா 8. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

---

4. ஜீவோஜ்ஜீவனசன்மார்க்கப்பிரகடனம் முதலியன:—இவை, மழவை ஸ்ரீ சாமிநாதையரவர்களால் இயற்றப்பட்டவை. ஜீவோஜ்ஜீவனசன்மார்க்கப்பிரகடனம்,நகைச்சுவைக்குறுப்பானசொற்றொடர்களால் இருபொருள்படும்படி வசனநடையில் எழுதப்பட்டது. மற்றவை செய்யுள்ரூபமாகச்செய்யப்பட்ட தோத்திரநூல்கள். இதன்விலை அணா 8. வேண்டுவோர் ஆக்கியோர்க்கு எழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

உ

கடவுள்துணை.

செந்தமிழ்

REGISTRAR OF ... 1916 MADRAS.

தொகுதி-கச.] நளஹு ஆவணிமீ [பகுதி-கo.

Vol. XIV. August—September, 1916. No. 10.

ஒரு பொதுக்கூட்டத்தின் தீர்மானம்.

1916-ஹு அக்டோபர்மீ 22உ ஞாயிற்றுக்கிழமை தஞ்சைக் கரந்தைத்தமிழ்ச்சங்கத்தில் அறிஞர்பலர்கூடிய ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பண்டிதர் சவரிராயன் M. R. A. S. அவர்கள் அக்கிராசனமமர, அப்பொழுது நடுத்தரப்பரீட்சைக்கு (Intermediate Examination) த்தமிழ்வியாசம் எழுதுமுறையிற் பேச்சுவழக்குச்சொற்களைக் கலந்தெழுதும் ஓர் அளவினைத்தீர்மானிப்பதற்கென்று சென்னைச் சர்வகலாசங்கத்தாரின் ஆலோசனைச்சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட காரிய ஆலோசனைச்சபையாரின் தீர்மானங்கள் ஆராயப்பட்டன. இவ்வாராய்ச்சியும் இத்தமிழ்ச்சங்கத்தின் சிறந்த அக்கிராசனாதிபதி கனம் T. V. உமாமகேசுவரம்பிள்ளை B.A., B.L., அவர்களால் தொடங்கப்பட்டு ஐந்துமணிநேரத்தின்மேலாக நடைபெற்றது. சர்வகலாசங்கத்தின்பதிவுஅதிகாரியால், கலாசாலைகளுக்குவிடுக்கப்பட்ட சுற்றுக்கடிதத்திலடங்கியபல ஆதாரவுகளும் ஆழ்ந்துஆராயப்பட்டுப் பின்கண்டதீர்மானங்கள் எல்லாராலும் ஒருமையாய் ஒப்புக்கொள்ளப்பட்டன.

1. தமிழ்வியாசமெழுதுமுறையிற் பேச்சுவழக்குச்சொற்களின் அளவைத் தீர்மானிக்க ஏற்பட்ட காரியஆலோசனைச்சபையானது போதுமான பிரதிநிதிகளுடன்கூடியதல்லாததுபற்றியும், யாதொரு தீர்மானமும்கொள்வதற்குமுன், கலாசாலைப்பண்டிதர்களும், தமிழ்ச்சங்கங்களும், பிரசித்திபெற்றதமிழறிஞர்களும், ஆசிரியர்களும் கலந்து ஆலோசிக்கப்படாததுபற்றியும், இக்கூட்டமானது மிகவும் விசனிக்கின்றது.

2. தமிழ்வியாசமெழுதுவதற்குப் பேச்சுத்தமிழில் ஓர் அளவு ஏற்படுத்திக்கொள்ளலாமெனக் கருதியமாத்திரத்திற் சர்வகலாசங்கத்தின் ஆலோசனைச்சபையார்தொடக்கத்திலேயே பிசகிவிட்டனரென்றும், இதுவரையிலும் கொண்டுவந்த ஓர் எழுத்துநடையைவிட்டுப்

*

புதியதோர்மார்க்கம்புகுந்தது தமிழ்மொழியில் உயர்தரமான செவ்விய நடையைக்கற்றறிந்துகொள்வதற்கு அழிவைத்தேடித்தருகிறதென்றும் இக்கூட்டம் கருதுகின்றது.

3. மேலேகூறப்பட்ட காரியஆலோசனைச்சபையாரின் இரண்டாவதுதீர்மானத்தை இந்தக்கூட்டம் சிறிதும் ஒப்புக்கொள்ளாததுடன் இப்பொழுதுள்ள தமிழ் நெடுங்கணக்கை ஒருவிதத்திலும் பின்னப்படுத்தக்கூடாதென்றும், பிறமொழிகளிலிருந்து ஏற்றுக்கொள்ளப்படும் வார்த்தைகள் தமிழ்மொழியின் ஒலிஇலக்கணத்திற்குப்பொருந்தியனவாகத்தோன்றும்படியே செய்யப்படவேண்டுமென்றும், பிறமொழி எழுத்துக்களின் உச்சாரணத்தை ஏற்றுநிற்கப் புதியஎழுத்துக்களைக் கற்பித்துக்கொள்ளச்செய்யும் முயற்சியானது தமிழ்மொழியின்ஒப்பற்ற விசேஷநிலையைக்கெடுத்து அதன் இலக்கணத்தின்தோரணையழகையும் சின்னாபின்னமாக்குமென்றும் தீர்மானிக்கிறது.

4. இலக்கணத்தாலும், வழக்காலும் ஒப்புக்கொள்ளப்படாத காரணத்தால், மொழிகள் புணரும்போது சந்திவிதிகளைக்கவனித்தாலும் கவனிக்காவிட்டாலும் பாதகமில்லையெனவெழுதிவிடுவதை இந்தக்கூட்டமானது உறுதியாகமறுத்துநிற்கின்றது.

5. காரிய ஆலோசனைச்சபையாரின் அறிக்கையின் இரண்டாவது அநுபந்தத்தில் உதாரணமாகக்காட்டப்பட்ட 'மரத்தைகண்டான்' என்பதுபோன்றவற்றிற் சந்திவிதியை இஷ்டப்படிதழுவிக்கொள்வது இயற்கைக்குவிரோதமானதென்றும், 'மரத்தைக்கண்டான்' எனக் ககரவொற்று இரட்டித்தலைவேண்டுகின்ற சாதாரணசெவியின்ப உச்சரிப்பிலக்கணத்திற்குமாறாகஉள்ளதென்றும் இந்தக்கூட்டமானது அபிப்ராயப்படுகிறது.

6. இரண்டாவதுஅநுபந்தத்தில் மூன்றாவதுவிஷயமாக விலக்கப்பட்டசந்திகளுக்குக்கொடுக்கப்பட்ட உதாரணங்களுமவைகொடுக்கப்பட்ட உத்தேசமும் தெளிவில்லனவாயும் அறியக்கூடாதனவாயுமிருக்கின்றன.

இத்தீர்மானங்கள் சர்வகலாசங்கத்தின் பதிவுஅதிகாரியாருக்குத் தெரிவித்துக்கொள்ளப்பட்டன.

கரந்தைத்தமிழ்ச்சங்கம்,
தஞ்சை கரந்தட்டாங்குடி,
[illegible] நவம்பர்௴ 6௳

தங்கள் உண்மையுள்ள,
ஆ. ச. ஆறுமுகம்பிள்ளை,
உதவிக்காரியதரிசி.

ஸ்ரீ:

இப்பொழுதுகிடைத்த வளையாபதிச்செய்யுண்முதலியன.

பண்டைக்காலத்து அருந்தமிழிற் பெரும்புலவர்களாற்செய்யப்பட்டநூல்களுட் பல இற்றைக்குப் பன்னெடுநாண்முன்பே இறந்தும் சிதைந்தும்போயினவென்று சிலப்பதிகாரமுதலிய நூல்களாலும் அவற்றின் உரைகளாலும் தெரியவருகிறது. எஞ்சியவற்றில் மஹாமஹோபாத்தியாய ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்களாலும் பிறராலும் பல அருந்தமிழ்நூல்கள் வெளியிடப்பட்டன. இறந்துபோக இறக்குந்தருவாயிலிருந்த தமிழ்நூல்களைத் தம் அரும்பெருமுயற்சியால் வெளியிட்டுயிர்பெற்றெழச்செய்த ஐயரவர்கள்முதலியோர்க்குத் தமிழுலகம் பல்லாற்றானும் நன்றிபாராட்டக்கடமைப்பட்டிருக்கிறது. இன்னும் வளையாபதி, முத்தொள்ளாயிரம், குண்டலகேசி, பரிபாடல் முதலிய சில நூல்களிலிருந்து புறத்திரட்டிலும், பழந்தமிழ்நூலுரைகளிலும் ஆங்காங்கு மேற்கோளாக எடுத்தாளப்பட்ட சிற்சிலசெய்யுள்களே இப்பொழுது நமக்கு அகப்படக்கூடியவையாயுள்ளன. இவற்றில் வளையாபதிச்செய்யுள்களையும், முத்தொள்ளாயிரச் செய்யுள்களையும் முன்பு செந்தமிழ்ப்பத்திராசிரியராயிருந்த சேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீ உ. வே. ரா. இராகவையங்காரவர்கள் அப்போது கிடைத்தமட்டில் தொகுத்துச் செந்தமிழ்ப்பிரசுரமாக வெளியிட்டுள்ளார்கள். அது தமிழர்களால் மிகவும் பாராட்டற்பாலதே. இன்னோரன்னசெய்யுள்கள் இன்னும் அகப்படாவோவென யான் புறத்திரட்டுப்பிரதிகளை ஆராய்ந்துவருகையில், பழமொழியாராய்ச்சிக்குப்போகப்படும்படி, தமிழபிமானியும், செந்தமிழ்க்கு நெடுநாளாய் விஷயதானம் புரிந்துவருபவருமான திருவாரூர் இலக்கணவிளக்கபரம்பரை ஸ்ரீமத்-சோமசுந்தரதேசிகரவர்களாற் கொடுக்கப்பட்டிருந்த புறத்திரட்டுப்பிரதியிற் பொதுமகளிர் என்னும் அதிகாரத்தின்கீழ்ச் சில வளையாபதிச் செய்யுள்களும், நகர் என்னுமதிகாரத்தின்கீழ்ச் சில முத்தொள்ளாயிரச் செய்யுள்களும் அச்சில்வாராதனவாய்க் காணப்பட்டன. அவற்றுள், வளையாபதிச்செய்யுள்களிற், பல வுவமானங்களாற் பொதுமகளிரியல்பு நன்கு விளக்கப்பட்டுள்ளது. இவை ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படுமென்று புறத்திரட்டுப்பிரதியிற்கண்டவாறே கீழேபதிப்பிக்கப்பட்டுள்ளன. அதில் ஏதேனும் பிழைகளிருப்பின் அறிஞர்கள் திருத்திக்

கொள்ளுமாறுவேண்டுகிறேன். இதுபோல் இன்னும் பலபிரதிகளிலும் செய்யுள்கள் அகப்படக்கூடுமென்று தோன்றுவதால், புதைந்துகிடக்கும் பழந்தமிழ்ச்செய்யுள்கள்பலவும் ஒருங்குசேர்ந்து பயன்படுமாறு அறிஞர்கள் தம்மிடத்துள்ள பிரதிகளை ஆராய்ந்து தாங்கண்ட செய்யுள்களைத் தொகுத்துச் செந்தமிழ்வாயிலாய் வெளியிடுமாறு வேண்டிக்கொள்கிறேன். சோமசுந்தரதேசிகரவர்கள் புறத்திரட்டிற்கண்ட வளையாபதிச்செய்யுள்கள் வருமாறு:—

1. யாரொடியாழ்வெனலிகோணிலவார்கொடிப்
பாரொடுபத்தினிமாபோலொழுகென்று
கூறினள் கூத்திமுதிர்ந்தாண்மகட்கவை
வேறொன்றிடத்துவெளிப்படநன்றாய்.

2. நாய்குரங்கஞ்சிறைவண்டினம்போல்கென்று
பாயிரமன்றிப்பயிற்றிமொழிந்தனன்
மேவரும்வான்பொருடந்தின்றுணம்பி
யாவமொருவரடைந்தவரெல்லாம்.

3. *வாரிபெருகப்பெருகியகாதலை
வாரிசுருங்கச்சுருங்கிவிடுதலின்
மாரிபெருகப்பெருகியறவாறும்
வார்புனலாற்றின்வகையும்புரைப.

4. எங்ஙனமாதிப்பொருளப்பொருட்
கங்ஙனமாகியவன்பினராதலி
னெங்ஙனம்பட்டனன்பாண்மகன்பாண்மகற்
கங்ஙனமாகியயாழும்புரைப.

5. கரணம்பலசெய்துகைகற்றவர்கட்
*கரணமெனுமில்லாறறிறகறது
திரணியுபாயத்திற்றிண்பொருள்கோடற்
கரணிவெனலிகோலமைவரவொப்ப.

6. நாடொறுநாடொறுநந்தியகாதலை
நாடொறுநாடொறுநையவொழுகலி
னாடொறுநாடொறுநந்தியுயர்வெய்தி
நாடொறுந்தேயுநகைமதியொப்ப.

7. தங்கட்பிறந்தகழியன்பினோர்களை
வன்கண்மைசெய்துவழியவிடுதலி
னின்பொருளேற்றியெழுநின்றவாணிகர்க்
கங்கட்பரப்பகத்தாழ்கலமொப்ப.

8. ஒத்தபொருளானுறுதிசெய்வார்களை
யெத்திறத்தானும்வழிபட்டொழுகலிற்
பைத்தரவல்குற்பொற்பாவையினல்லவர்
பத்தினிப்பெண்டிர்படியும்புரைப.

9. வீபொருளானையகன்றுபிறனுமோர்
மாபொருளான்பக்கமாணநயத்தலின்
மேய்புலம்புல்லறமற்றோர்புலம்புகு
மாவும்புரைபமலரன்னகண்ணார்.†

10. நாயும்போல்வர்பல்லெச்சிலுநக்கலாற்
றீயும்போல்வர்செய்நன்றிசிதைத்தலா
னோயும்போல்வர்நுகர்தற்கருமையால்
வீயும்போல்வரிவ்வேனெடுங்கண்ணினார்.†

11. நொய்ப்பொருளானை‡நுகர்ந்திட்டுவான்பொரு
ளன்குடையானைநயந்தனர்கோடலின்
வம்பினமென்முலைவாணெடுங்கண்ணவர்
கொம்பிடைவாழுங்குரங்கும்புரைப.†

* இப்பாட்டின்கருத்து, நாலடியினும்,

"புதுப்புனலும்பூங்குழையார்நட்புமிரண்டும்
விதுப்புறநாடின்வேறல்ல—புதுப்புனலும்
மாரியறவேயறுமேயவரன்பும்
வாரியறவேயறும்"

என்னும்பாட்டில் வந்துள்ளது. (37-ம் அதிகாரம் பன்னெறி செய்யுள்—10.

* இவ்வடியின்சொரூபம் விளங்கவில்லை.

† இவ்வடையாளமிடப்பட்ட மூன்றுசெய்யுளும் பன்னூற்றிரட்டிலும் வரைவின்மகளிர் என்னும் அதிகாரத்தில் வளையாபதிச்செய்யுளாகக் காட்டப்பட்டுள்ளன.

‡ 'நன்பொருளானை'யென்பது பன்னூற்றிரட்டுப்பாடம்.

12\. முருக்கலர்போற்சிவந்தொளிர்பவரேனும்
பருக்காட்டிலவலர்பங்கினையா
ருருப்பினமென்முலையஞ்சொலவர்தாம்
வரிச்சிலைறவண்டின்வகையும்புரைப.

13\. மக்கட்பயந்துமனையறமாற்றுதல்
தக்கதறிந்தார்தலைமைக்குணமெனப்
பைத்தரவல்குற்படிற்றுரையாரொடு
துய்த்துக்கழிப்பதுதோற்றமொன்றின்றே.

மேலேகண்ட பதின்மூன்றுசெய்யுள்களும் சங்கத்திலுள்ள புறத்திரட்டுப்பிரதியில் இல்லாதவை. இனி முத்தொள்ளாயிரச்செய்யுள்கள் வருமாறு.

1\. களிகள்களிகட்குநீட்டத்தங்கையாற்
களிகள்விதிர்த்திட்டசெங்கட்—டெளிகலந்
தோங்கெழில்யானைமிதிப்பச்சேறாயிற்றெம்
பூம்புனல்வஞ்சியகம்.

2\. மாலைவிலைபகர்வார்கிள்ளிக்களைந்தபூச்
சாலமிகுவதோர்தன்மைத்தாய்—காலையே
விற்பயில்வானகம்போலுமேவேல்வளவன்
பொற்பாருறந்தையகம்.

3\. மைந்தரொடுமகளிர்திமிர்ந்திட்ட
குங்குமவீர்ஞ்சாந்தின்சேறிழுக்கி—யெங்கு
தடுமாறலாகியதன்மைத்தேதென்ன
னெடுமாடக்கூடலகம்.

இம்மூன்றுபாடல்களும் சங்கத்திலுள்ள புறத்திரட்டுப்பிரதியிலும் நகர் என்னுமதிகாரத்தில் உள்ளன. ஆயினும் நூலின்பெயர் குறிக்கப்படாதுவிடப்பட்டிருக்கிறது.

இராமாநுஜய்யங்கார்,
உதவிப்பத்திராதிபர்.

ஸ்ரீரங்கத்துச்சாசனங்கள்.

அடியில் ஸ்ரீரங்கத்துச்சாஸனங்களிரண்டு பதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் முதலாவது, ஸ்ரீவைஷ்ணவர்களால் ரங்கநாதஸ்வாமியுடைய திருவிடையாட்டநிலங்களின் குத்தகைவிஷயமாய்ச்செய்த வியவஸ்தையைப்பற்றியது. மாறவன்மரான ஸுந்தரபாண்டியன்காலத்தது; கி. பி. 1225வது வருஷம், மார்ச்சுமாதம் 28உ வெள்ளிக்கிழமைதினம் மேற்கூறியவியவஸ்தைசெய்யப்பட்டதென்று சாஸனத்திற்கொடுத்திருக்கும் பஞ்சாங்கவிவரங்களால் ஏற்படுகிறது. திருவரங்கத்தெம்பெருமானார் பூஸ்திதிகளைக் குத்தகையெடுத்தபேர்கள் அவ்வந்நிலங்களை அபகரித்துக்கொண்டு பற்பல அநியாயங்கள்செய்துவந்தபடியாற் பூசைமுதலியவைகள் குன்றுதலடைந்துபோயின. அப்பொழுது, அந்நாட்டையாண்டுவந்தவனோ, மற்றெவ்விதத்திலாவது ஸ்ரீரங்கத்துக்கோயில்விஷயத்தில் அதிகாரமுள்ள இராஜசாமந்தனோ ஒருவன் அநியாயஞ்செய்துவந்தவர்களை நிராகரித்து, நிலங்களையெல்லாம் கோவிலாட்சிக்குவசப்படுத்திக்கொடுத்துப் பூஜை, திருநாட்கள்முதலியவைகள் மறுபடியும் விமரிசையாய்நடக்கும்படி செய்வித்தான். இப்படி இவன் செய்யத்தூண்டியபேர்களில் முக்கியமானவர்கள், ஜீயர்நாராயணதாசர், பெரியதிருப்பதிப்பாகவதநம்பிமார்கள், திருவரங்கத்துச்சபையார்முதலியவர்கள். சீர்திருத்தங்கள்செய்த சாமந்தனார், சாஸனத்திற்கூறப்பட்டிருக்கும் அழகியசோழபிரம்மாதராயராயிருக்கலாமோவென்று ஐயகம் தோன்றுகிறது. இவர் வியவஸ்தைசெய்தகாலத்துக் கோயில்நிலங்கட்கு விசாரணைக்கர்த்தாஉத்தியோகம் ('கோயில்கூறு') வகித்திருந்தார்.

இச்சாஸனத்திற்கூறப்பட்டுள்ள ஜீயர் நாராயணதாசரென்பவர், திருவரங்கத்திருப்பதியிற் பலகைங்கர்யங்களைச்செய்தும், ஸுதர்சனசதகமுதலியஸ்தோத்திரங்களைஎழுதியும், ஸுதர்சனோபாஸ்தியால்மஹாமாந்த்ரீகராய் எழுந்தருளியிருந்த நலந்திகழ் நாராயணஜீயரோவென்று சங்கிக்கலாமென்றால் அதுஇயலாதென்றேதோன்றுகிறது. ஏனெனில்,இச்சீயர் ஸ்ரீரங்கம்கோயிலொழுகின்படி கூரத்தாழ்வான்சிஷ்யர் என்றும், பெரியதிருமுடியடைவின்பிரகாரம் பராசரபட்டர்சிஷ்யர்என்றும்விளங்குகின்றது. ஆழ்வான்காலஞ்சென்றது உடையவருக்கும் முன்னமேயே; அதாவது கி.பி.1137க்குமுன்னமேயென்றால் ஆழ்வான்சிஷ்யனென்னப்பட்டவர் இச்சாஸனகாலத்திற்குறைந்தபக்ஷம் 100வயதிற்குமேற்பட்டவராக

வேண்டும். ஆனாலும் இவரே தானாகவேண்டுமென்பதற்கும் இடமுண்டு; ஏனென்றால், பெரியதிருமுடியடைவில் இவர் சிஷ்யர்கள்பெயர்களைக் குறிக்கும்போது சுந்தரபாண்டியதேவனும் ஒருவனென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் உண்மையாகிற் சாஸனத்திற்கூறிய ஜீயர் நாராயணதாசர், கூரநாராயணஜீயரும், அவர்சிஷ்யன், சோணாடுவழங்கிய மாறவன்மனான சுந்தரபாண்டியனுமாவார்கள். இச்சீயர்பெயரை முதலிற்கூறியிருக்கிறபடியாலும், ஆட்சியும் சுந்தரபாண்டியனதாகையாலும், ஜீயர் நாராயணதாசர் குருவும் அரசன் சிஷ்யனுமாக இடமுண்டு.

சாஸனத்தில் 'திருவாசல்ஆரியர்' என்றிருப்பதனால், கோயிற்றிருவாசற்காவல் வேலையும் பிராம்மணர்களுக்கேகொடுக்கப்பட்டுவந்ததென்று நன்றாய்விளங்குகிறது. இப்பெயரே இக்காலத்தும் 'ஆரியபட்டாள்வாசல்'என் றோர்வாசலுக்கு வழங்கிவருகிறது. இவ்வாசலையும், ஆரியபட்டாளையுங்குறித்து ஒரு நம்பத்தகாதகதையைக் கோயிலொழுகிற் காணலாம்.

ராஜமஹேந்திரன்திருவீதி யென்பது இரண்டாவதுபிராகாரம். இதன் வடமேற்குமூலையிலிருந்துதான் மணவாளமாமுனிகள் ஈடுசாதித்தது. இவ்வீதியின்மேலைப்பக்கத்தில் இச்சாஸனத்திற்கூறிய மஹாலிங்கம் கூடியது.

இவ்வியவஸ்தையையும் இதுபோன்றபலவற்றையும் ஆழ்ந்துநோக்கும்போது, அக்காலத்து ராஜரீகத்தில் தெற்றுநேர்ந்தபொழுது எப்படி மகாஜனசபைகள்கூடித் தங்களுக்குண்டான கஷ்டநிஷ்டூரங்களையெடுத்து வெளியிற்காண்பித்துவந்தார்களென்பதும், அவ்வாறுகூடிய மகாஸபைகளில் அநியாயங்களெவ்வாறு பரிகரிக்கவேண்டுமென்று தீர்மானங்களைச்செய்து அரசனுக்கறிவித்து அவைகளைப் போக்கிக்கொண்டுவந்தார்களென்பதும், வெகுஜனஅபிப்பிராயங்களை எவ்வாறு அரசர்களும் மதித்துவந்தார்களென்பதும் வெளியாகும். இக்காலத்து ஆங்கிலம்படித்த சிற்சில பிராக்ஞர்கள், பழங்காலங்களில் அரசன்மனப்போக்கே இராஜரீதியென்றும், அதனைத்தடுக்க ஒருவிதஹேதுவும் கிடையாதென்றும் தாராளமாய்த் தங்களபிப்பிராயத்தை வெளியிடக் கண்டுள்ளோம். ஆராய்ச்சியற்ற இவ்விதஅபிப்பிராயங்களால் என்ன பயனுண்டாகுமென்பதைப் புத்திமான்கள் அறியலாம்.

சாஸனத்தின்வாக்கும், நடந்த அநியாயங்களுக்குத்தக்கவண்ணம் அமைந்துள்ளது.

I-வது சாஸனம்.

1. ஸ்வஸ்திஸ்ரீ: பார்க்கஃ வ்யவஸ்தைப்படி [।*] ஸ்ரீகோமாரபன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் சோணாடுவழங்கிஅருளிய ஸ்ரீசுந்தர பாண்டியதேவர்க்கு யாண்டு ஒன்பதாவது-

2. மேஷநாயற்று அபரபக்ஷத்து த்ருதீயையும் வெள்ளிக்கிழமையும் பெற்ற விசாகத்துநாள் [।*] ஜீயர் நாராயணதாஸரும், கோயில் [க்] கூறு உடையார் அழகியசோழப்ரஹ்ம-

3. ராயரும், பெரியதிருப்பதி ஸ்ரீபாகவதநம்பிமாரும், திருவரங்கத்து ஸபையாரும், விண்ணப்பஞ்செய்யும் நம்பிமாரும், ஸ்ரீபாதந்-

4. தாங்குநம்பிமாரும், திருவாசல்ஆரியருள்ளிட்ட பலபணிநிபந்தக்காரரும், கோயிலகரத்து ஸட்டர்களும், எம்பெருமானார்திருவடிகளை ஆச்ரயித்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களும், பெரியதிரு-

5. நாள்சேவிக்க நடந்த..........மண்டலத்து ஸ்ரீவைஷ்ணவர்களும் ராஜமஹேந்திரன்திருவீதி மேலைத்திருவீதியில் குறைவறக்கூடி இருந்து வ்யவஸ்தைபண்ணினபடி [।*] முன்னா[ள]ால் கோயிலுக்கு நிவந்தம-

6. காராய் பதின்முசெய்துபோந்த பத்துப்பேருமாக அவவர்காலத்துப்பெயரோடேகூடிநின்று கோயிலிலும் நிமந்தக்காரர்பக்கலிலும்ஒட்டுக்காசுகூட்டிக்கொடுக்கையாலும் நிலையாள்ஒன்றுகூட்டி திருவிடையா-

7. ட்டங்களில் நெல்லை எடுத்து ஒட்டர்[க்*]கு கொடுக்கையாலும் மற்றும் பலவழிகளாலே திருவிடையாட்டத்தில் உடல்களை அழிக்கையாலே இரண்டு ஸம்வத்ஸரத்திலாக முன்னூற்றுச்சின்னம் நா-

8. ள் திருவாராதனம் ஒருநாள்படிகொண்டு பலநாள்படிசெலுத்த இப்படி நாள்விழுகையாலும், பலமண்டலங்களில் திருவிடையாட்டங்கள் தங்களுக்குப்பற்றாக கூறிட்டு அடைத்துக்கொண்டு தங்கள் ஆள்க-

9. ள்போகவிட்டு தண்டிவந்த உடல்களை தாங்களும் ஒட்டருமாக கொள்கையாலும், இப்படி திருவாராதனந் தட்டுப்பட்டதென்றும் ஸ்ரீபண்டாரஉடல்கள் இப்படி அழியாநின்றதென்றும் மாற்கல் கொதித்துக் கூப்பிடதெரிய-

10. ச்செய்தேஇவர்கள் தாங்கள் பருமைபடத்திரிகையாலும் இப்போது ஒட்டற்கு காலமென்றியே ராஜீயமாய் நஞ் சாமந்தரே கோயிலைக் கைகொண்டு இரண்டுகரைநாட்டுத் திருவிடையாட்டங்களையும் தந்து அமுதுபடிசாத்து-

11. ப்படிகளும் குறைவற்று திருப்பணிகளும்சென்று நல்லகாலமாயிருக்க முன்பு ஒட்டருடனேகூடிநின்று அன்னியாயகாரிகளாய்ப் போந்த இவர்கள் நெடுநாள்பட காணிபோலேசெய்துபோருகையாலே இப்படி அனியாய-

12. ங்கள் பிறந்தது. இப்படிசெய்துபோந்த இவர்களைதவிர்த்து ஸர்வதாவயவஸ்தமாக பெரியதிருநாள் ஸ்ரீபுஷ்யமஞ்சமைந்தவாறே பதினெட்டுமண்டலமும்கூடிஇருந்து இத்திருப்பதிகொத்திலே ஆ-

13. ரைத்தட்டி இடக்கடவதாகவும்[॥*] ஆண்டாசறுதியானவாறே மாறிஆவாரை பா[ர்*]த்து இடக்கடவதாகவும் [॥*]ஸ்ரீவைஷ்ணவவாரியத்துறைகளும் இப்படியே ஸர்வஸம்வத்ஸரமாக மாறி

14. இடக்கடவதாகவும் [॥*] இப்படி வ்யவஸ்தைபண்ணினோம் [॥*] பணியால்இவைகோயில்கணக்கு அரிசாஞலயப்பிரியனெழுத்து. [॥*] இப்படி இரண்டாயிரம் எழுத்திட்டுவிட்டது [॥*].

ஸ்ரீரங்கத்து இரண்டாவதுசாஸனத்திற், காஞ்சிபுரத்தில், திருப்பாடகத்தினவரும், ஸகலவித்தியாசக்கரவர்த்திகளென்று பட்டப்பெயர் படைத்தவருமான சொக்கவில்லிபட்டரென்பவர், தாம் முன்னாள் வீரபாண்டியனிடமிருந்துபெற்ற ரத்னமிழைத்த கரண்டமகுடம் ஒன்றையும், பொன்சுருக்கினகாம்புடைய சாமரங்களிரண்டையும், ஒரு காளாஞ்சியையும், பெரியபெருமாளாகிய ரங்கநாதனுக்கு, ஹொய்சள வீரராமநாததேவர் ஆட்சியின் பதினைந்தாமாண்டிற்கொடுத்தாரென்று எழுதியிருக்கிறது.

இச்சாஸனத்திற்கூறியிருக்கும்வீரபாண்டியன் முடிசூடியவருடம் கி. பி. 1253; ஹொய்சளவீரராமநாதன் ஆட்சியின் 15-ம்வருடம் கி.பி. 1270. ஆதலால் கி. பி. 1253-க்குப்பிற்பட்டதும் 1270-க்குமுற்பட்டதுமான இடைக்காலத்தில், தான் வீரபாண்டியனிடமிருந்து பரிசுபெற்றகிரீடம், சாமரம் முதலியவைகளைச் சொக்கவில்லிபட்டர் கொடுத்தாரென்பதுதான் சாஸனத்தின் சாரம்.

தமிழ்ச்சாஸனத்தின்விஷயங்களையே ஒரு ஸம்ஸ்கிருதசுலோகத்திலடக்கிக்கூறியிருக்கிறது.

II-வது சாஸனம்.

(1) [illegible] [॥*] [illegible]

[illegible]

(2) [illegible]

[illegible]

(3) [illegible] I

(4) [illegible] [॥*] [illegible]

(5) வது ஸ்ரீநகாயற்று வ-ஒவ்வ-வஷதது வ்யமெசெயும திங்கள்கிழமெயும்பெற்ற அஸ்வதிநாள், பாடகத்துச் சொக்-

(6) கவில்லிவிட்டானான முதலியார் கரியமாணிக்கவித்யாவக்ரவர்த்திகள் தமக்குப் பெருமாள் வீரபாண்டியதேவர் குடுத்தமவையா-

(7) ய்ப் பெருமாளுக்குத்தந்த பொற்பண்டாரத்துக்கு முதலாக ஒடுக்கின ரத்நங்கட்டின காளாஞ்சிகொடிம்ஒன்றும் பொன்சுருக்கினகா-

(8) ம்புடைய திருமவெண்சாமரை இரண்டும் பொன்னின் காளாஞ்சி ஒன்றும் ஆக உ௫ நாலு உ

I இந்தஸ்லோகம், மூலசாஸனத்தில் தேவநாகரஎழுத்தில் வரையப்பட்டுள்ளது. இதன்பொருள் :— ஸுத்ராமகோடிந்யஸ்த பாதாரவிந்த: - இந்திரன்முடிமேல் (வளை)எதிர்ந்தகரகமலங்களையுடையவனாகவும். வித்யா- கல்வித்திறமைகண்டு களிப்படைந்தவனாகவும்உள்ள வீரபாண்ட்யாத்- வீரபாண்டியனிடத்தினின்றும், புவி - உலகில், ஸகலகலாஸார்வபௌம - ஸகலகலாசார்வபௌமன்என்றபட்டம்பெற்றவனாகிய சொக்கவில்லிபட்டனாலே, வித்யாஸாம்ராஜ்யயோக்யம் - வித்வத்சக்ரவர்த்தியாயிருத்தற்கு அதிகுதியானபரிசாக, லப்தம், உத்யோதக்கோடீரம் - ஒளிமிக்கமணிமகுடமும், சந்த்ராம்ஸுதாரம் - சந்திரகிரணங்களையபகரித்தனவாய்விளங்குகின்ற, சாமரயுக்மம் - உபயசாமரங்களும், ஸ்வர்ணகலாஞ்சிம் - காளாஞ்சியோடு, லப்தம் - அடையப்பட்டனவோ, தத் - அவை, தேந - அந்தச்சொக்கவில்லிபட்டனாலே, த்ரிதாமாதி ஸ்வேதத்வீபம்,அநந்தாஸனம்,வைகுண்டம்என்கிறமூன்று ஸ்தானங்களையுடைய,ரங்கதாமாதி - திருவரங்கப்பெருங்கோயிலுடையானாகிய அழகியமணவாளனுக்கு, உபஹ்ருதம் - ஸமர்ப்பிக்கப்பட்டன என்பதாம்.

T. A. கோபிநாதராவ், எம். ஏ.

ஸ்ரீ:

மகளிர்மனம்.

—(o)—

ஒத்தபிறப்பினையுடைய மக்கட்சாதியுள் ஆண்பெண் என்னு மிரு திறத்தாரும் உருவமாகியவடிவத்தால், தம்முள் வேறுபட்டிருப்பது போல அருவமாகிய மனத்தாலும் வேறுபட்டவர்களெனப் பல புத்தகங்களிலும் படித்திருக்கிறோம். அவ்வேறுபாடென்னவெனவிசாரிக்குமிடத்துப் பெண்மக்களறிவு, மடம் நாணம் அச்சம் பயிர்ப்பு (அதாவது கூச்சம்) என்னுங் குணவிசேடங்களொடுகூடியதென்றும், ஆண்மக்களறிவு, அவற்றிற்கெதிரான ஒண்மை பெருமிதம் வீரம் கூசாமை என்னுங் குணவிசேடங்களொடுகூடியதென்றும் சிலர் சொல்லுகிறார்கள். இங்கு மகளிர்க்குச்சொல்லியவையெல்லாம் இந்நாடுபோன்ற சில நாட்டின்கணுள்ள மகளிர்க்குள்ளனவாயினும்,பெண்கல்விமிக்க பிறநாட்டிலுள்ள மகளிர்க்கெல்லா மில்லாமையாலும், பொதுவாக மகளிர்மனத்துக்குள்ள வேறுபாடென்றுசொல்ல இடமில்லாதிருக்கிறது. வேறு சிலர்,

> "அன்புநூலாகவின்சொலலர்தொடுத்தமைந்தகாத
> லின்பஞ்செய்காமச்சாந்திற்கைபுனைந்தேற்றமாலை
> நன்பகற்சூட்டிவின்னாதொழுகினாங்கைமார்க்குப்
> பின்செலும்பிறர்கணுள்ளம்பிணையனார்க்கடியதன்றே"* எனவும்,

> "எங்தெழின்மிக்காளிளையாளிசைவல்லான்
> காங்கைதயர்கண்கவர்நோக்கத்தான்—வாய்ந்த
> நயனுடையின்சொல்லான்கேளெனினுமாதர்க்
> கயலார்மேலாகுமனம்"†

எனவும் சொல்லிய ஆதரவுகளைக்காட்டிப் பிறரைவிரும்புமியல்புடைமை என வேறுபாடுகூறுகிறார்கள். இதுவு மொருவாற்றானுளதாயிருப்பினும் அது கற்புடைமகளிர்க்கேலாமையாலும், "திருவினுநல்லாண் மனைக்கிழத்தியேனும், பிறர்மனைக்கேபீடழிந்துநிற்பர்"‡ என ஆடவர் மனத்துக்கும் பிறரைவிரும்பும் அவ்வியல்புண்டென்று சொல்லப்பட்டமையாலும், அது மகளிர்மனத்துக்கேயுரிய சிறந்த வேறுபாடாகாதென்று தோன்றுகிறது.

---

* சீவகசிந்தாமணி 7-வது கனகமாலையாரிலம்பகம் செய்யுள்—40.
† நீதிநெறிவிளக்கம் செய்யுள்—82.
‡ நீதிநெறிவிளக்கம் செய்யுள்—80.

மகளிர்மனத்துக்கேசிறந்த வேறுபாடொன்றிருக்கவேண்டுமென்பதை “இனம்போன்றினமல்லார்கேண்மை, மகளிர் மனம்போல வேறுபடும்”* என்பதனால் அறிகிறோம். இதனால் மகளிர்மனத்தின்கண் வேறுபாடில்லையென்றுசொல்ல இடமில்லாதிருப்பதேயன்றி, அது உவமையாகக்காட்டப்பட்டமையால் முற்காலத்து வெளிப்படையாயெல்லாராலு மறியப்பட்டுள்ளதென்றுந் தோன்றுகிறது. அது இக்காலத்தில் அரிதற்கரியதாயிருப்பதால், அக்குறளுரையைப்படித்துப் பார்த்ததிலும் அது இன்னதென நன்குவிளங்கவில்லை. அதனையறியவேண்டுமென்னு மவாமேலீட்டால் ஆராய்ச்சிசெய்ததில் ஆங்கிலத்திற்படித்த அழகியசரிதமொன்று ஞாபகமாயிற்று. அதாவது:—

இங்கிலாந்தில் ஆர்தர் (Arthur)என்பவன் அரசுசெலுத்துநாளில் ஒருவீரன் தான்செய்த கடுங்குற்றத்தின்பொருட்டுத் தன்றலைதுணிப்புண்ணுமாறு தீர்மானிக்கப்பெற்றான். ஆயினு மரசன் தன்மனைவியின் வேண்டுகோளால் அவள்விரும்பியவண்ணம்செய்யுமாறு அக்குற்றவாளியை யவளிடமனுப்பினன். அரசி அவ்வீரனைநோக்கி உலகத்துள்ளமகளிர்யாவரும் எல்லாவற்றுள்ளும் பெரிதும்விரும்புவது யாதென்பதற் கேற்றவிடையை (ஒருகுறித்தகாலத்துள்) அறிந்துவந்து சொல்வையானால் உன்னை விடுதல்செய்வேனென்றாள். அதற்கிணங்கிய வீரன் விடைநாடிச்சென்றவிடமெங்கும் ஏற்றவிடை கிடைத்திலதாக, அவன் உயிர்துறத்தற்கிசைந்து தன்னகரைநோக்கிமீளவரும்போது, ஒரு தெய்வமுதுமகளா லரசிகருதியவிடையையறிந்து அவட்குரைத்து உயிர்பிழைத்தான் என்பதாம்.

அங்ஙன மவன் உயிர்பிழைத்தற்கேதுவாயிருந்த விடையுரையாவது; “பெண்கள்யாவரும் தம்கணவரைத் தா மடக்கியாளவிரும்புவர் என்பதே” இதனால் மகளிர் தங்கணவரைத் தம்வயமாக்கிக்கொள்ளவிரும்புங் கருத்துடையர் என்பது பெறப்பட்டதாயிற்று. ஆகவே இடம்பார்த்திருந்து சேர்த்தவிடத்து ஆடவரைத் தம்வயப்படுத்தற்கு அவாவிநிற்கும் தன்மையிலேயே மகளிர்மனத்தின்கணுள்ள வேறுபாடென ஆங்கிலத்தில்

* திருக்குறள் 83-ம் அதிகாரம் (கூடாநட்பு) குறள்—2.

தெய்வம்வந்து சொல்லித் தெரிந்ததாக அருமைபாராட்டப்பட்டிருக்கிறது. இது பண்டைக்காலத்துத் தண்டமிழ்ப்புலவர்களும் கொண்ட கருத்தென்பது பின்வருமவற்றானு மறியத்தகும்.

சிந்தாமணியுள் “ அண்ணலங்களிற்றினை யடக்கினான்சீவகன், வண்ணமேகலையினார்மனமெனப் படிந்ததே”* என்று சீவகனிடத்துப் பிறர்க்கடங்காத மதயானைபடங்கிய அடக்கத்திற்கு மகளிர்மனம் உவமையாகக் காட்டப்பட்டிருக்கிறது. இதனால் யானையும் மகளிர்மனமு மொருதன்மையுடையவென விளங்கும். இனி நாலடியுள்,

“யானையனையவர்நண்பொரீஇநாயனையார்
கேண்மைதழீஇக்கொளல்வேண்டும் —யானை
யறிந்தறிந்தும்பாகனையேகொல்லுமெறிந்தவேன்
மெய்யதாவால்குழைக்குநாய்”†

என யானை கூடாநட்பிற்கு உவமையாகச்சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் யானையும் கூடாநட்பும் ஒருதன்மையுடையவாயின. ஆகவே மகளிர்மனமும் கூடாநட்பும் ஒருதன்மையுடையவாமாகையால், கூடாநட்புக்குத் திருக்குறளில் “இனம்போன்றினமல்லார்கேண்மை மகளிர், மனம்போலவேறுபடும்” என மகளிர்மனம் உவமையாகச்சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் யானையின்றன்மையும், கூடாநட்பின்றன்மையும், மகளிர்மனத்தின்றன்மையும் ஒன்றுபட்டிருக்கவேண்டும். அதாவது உரியோர்க்கடங்கியிருப்பதுபோன்றவர்சோர்வுபார்த்து வாய்த்தவிடத்து அவரைத் தன்வயமாயடங்கச்செய்யும்நோக்கமுடைமையென விளங்குகிறது. இதனைப் “பெண்மனம்பேதின்றொருப்படுப்பேனென்னுமெண்ணிலொருவன்”‡ எனத் திருக்குறளுரையாசிரியர்காட்டிய மேற்கோளும் ஆதரிக்கிறது. எங்ஙனமெனில், பேதின்றொருப்படுப்பேனென்றதில், பேது என்பது ஒருமைப்படுதற்கு மறுதலையாயுரைக்கப்பட்டிருத்தலால் அதனைப் பேதைமைஎனக்கொள்ளாது, “பேதுசெய்துபிளந்திடப்பெட்டதே”§ என்புழிப்போலப் பொருளொடுபொருந்தவேறுபடுதற்பொருளே குறித்துநிற்குமாற்றாலறியலாம். இதனால்ஆடவர்மனத்தி

* சீவகசிந்தாமணி, 7 கனகமாலையாரிலம்பகம் செய்யுள்—276.
† நாலடியார் 22-வது அதிகாரம் (நட்பாராய்தல்) செய்யுள்—3.
‡ திருக்குறள் 83-ம் அதிகாரம் (கூடாநட்பு) 2-வதுகுறளின் உரைபார்க்க.
§ சீவகசிந்தாமணி, 8 விமலையாரிலம்பகம் செய்யுள்—32.

னின்றும் மகளிர்மனத்துக்குள்ள வேறுபாடு அவர் கணவரைவயப்படுத் தக்கருதுதலென்பது பெறப்படுமாயினும் அத்தன்மை ஆடவர்மனத் தின்கண்ணு மிருக்குமாயின் மகளிர்மனத்திற்குச் சிறந்ததன்றாய்விடும். ஆடவர்மனத்தின் றன்மையை யாராயின், அவர்மனத்துக்கு இத்தன்மை யின்றி அம்மகளிர்க்கே தாம்வயமாகுந்தன்மையே யியல்பாயுள்ளதென வும், அது தீமைபயப்பதெனவு முணர்ந்தே அதனைநீக்குதற்குத் திருக் குறளுள்ளேயே பெண்வழிச்சேறல் என்னும் அதிகாரமும் படிக்கப்பட் டிருத்தலால் வயமாக்குந்தன்மை மகளிர்மனத்துக்கே சிறந்ததாயிருக் கிறதெனவிளங்குகிறது.

ஆயின், கொழுநர்வழிநிற்குங் கற்புடைமகளிர்மனத்து மித்தன்மை நிகழலாமோவென்ற சந்தேகமுண்டாகலாம். அது அங்கு நிகழாதாயின் “மகளிர்மனம்போலவேறுபடும்” என்றது நிரம்பாதாகும். ஆதலால் அவர்மனத்தும் அத்தன்மையுள்ளதென்றே கொள்ளவேண்டும். ஆனால் அது கற்பொடுபொருந்துவதெப்படியென்றால் அவர் கணவரை நெறியி னீங்கியசெய்யவிடாது நெறிவழியொழுக்கற்பொருட்டுத் தம்வயமாக்க விரும்புவராதலா லது குற்றமாகாதாயிற்று. இதனை, “அறவோர்க் களித்தலு மந்தணரோம்பலுந், துறவோர்க்கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர்கோடலு மிழந்தவென்னை”* எனப் பத்தினிப் பெண்டின்கூற்றுள்ளே அறவோர்க்களித்தன்முதலியவற்றைத் தனக் குரிமையாக்கிக் கணவன் றன்வயமின்மையா லவற்றைத் தா னிழந்த தாகக்கூறியகூற்றா லறியலாம். அன்றியும், கணவர்வழியொழுகுங் கற் புடைமகளிரும் வாய்த்தவிடத்து அக்கணவரைத் தம்வயப்படுத்தும் நோக்குடையரென்பதைத் திருக்குறளுட் ‘புலவி,’ ‘புலவிநுணுக்கம்’ என்னு மதிகாரங்களா லறியலாம். ஆகவே ஆண்மக்கள்மனத்தினின்றும் பெண்மக்கள்மனத்துக்குள்ளவேறுபாடு, கொழுநரைத் தம்வயமாக்கு நோக்குடைமை தொன்றுதொட்டுண்டென்பதைப் பற்பலநூற்றாண்டு கட்குமுன்னமே நந்தமிழ்ப்பாவலர் கண்டறிந்ததென்பது தெளிவா யிற்று.

T. N. அப்பன்.

---

* சிலப்பதிகாரம் 16-வது கொலைக்களக்காதை அடி 71—78.

மதுரை நாயக்கர்வம்சத்தரசர்கள்.

MADURA NAYAK KINGS.

“செந்தமிழ்” (தொகுதி-கச பகுதி கூ) ௱௫௦-ம்பக்கத் தொடர்ச்சி.

(1559—1736).

நாயக்கர்வம்சஸ்தாபனம். கி. பி. 16-ம் நூற்றாண்டின் நடுவில் பாண்டியவம்சத்தைச்சேர்ந்த சந்திரசேகரபாண்டியன் மதுரையில் பட் டந்தரித்தான். அக்காலத்தில் மதுரைராஜ்யம் க்ஷீணதசையடைந்து பல வேற்றரசர்கள் ஹிம்சைக்குட்பட்டுக் கடைசியாய் விஜயநகரஸம்ஸ் தானத்துக்கு ஓர் சிற்றரசாகவும் ஆய்விட்டது. பாண்டியஅரசர்கள் பலஹீனர்களாகவும் தங்கள் அரசைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள வலிமையற்றவர்களாகவும் ஆய்விட்டார்கள். இந்தநிலைமையில் முற் கூறிய சந்திரசேகரன் பட்டத்துக்குவந்தான். அக்காலத்தில் விஜயநகர ராஜ்யத்தில் ராமராஜா அரசாண்டுகொண்டிருந்தார்.

சுமார் 1557-ம்ஆண்டில் தஞ்சையிலரசாண்ட வீரசேகரசோழன் மதுரைமீதுபடையெடுத்துவந்து பாண்டியன்மீது வெற்றிபெற்றுப் பாண்டியநாட்டைத் தனது ஆதீனத்துக்குட்படுத்திக்கொண்டான். சந்திரசேகரபாண்டியன் தன்மகனுடன்தப்பியோடி விஜயநகரம்சென்று ராமராஜனைத் தஞ்சமடைந்தான்.

ராமராஜன் அபயம்கூறி, உடனே ஒருபெருத்தசேனையைத் தன் தனகர்த்தன் நாகமநாயக்கனுடன் அனுப்பினான். நாகமன் தஞ்சை மன்னனைவென்று மதுரைக்கோட்டையையும் மதுரைராஜ்யத்தையும் கைவசப்படுத்திக்கொண்டான். பிறகு தன் அரசன்கட்டளைப்படி பாண்டியராஜ்யத்தைச் சந்திரசேகரனிடம் ஒப்புவிக்காமல், தானே சுவாதீனமாய் அரசாள ஆரம்பித்துவிட்டான்.

இத்துரோகத்தையறிந்த ராமராயர் அதிககோபங்கொண்டு தன் சபையோரைவரவழைத்து நாகமன்செய்ததுரோகத்தை யவர்களுக்கு அறிவித்து “ அத்துரோகியின் சிரசைக்கொய்துவரக்கூடிய திறமை வாய்ந்தவர் இச்சபையில் ஒருவருமில்லையா?” என்று கோபத்துடனும் ஆக்கிரோசத்துடனும் வினவினான். ஆங்குள்ளோர் ஒருவரையொருவர்

பார்த்தாரேயொழிய ஒருவராவது பதிலுரைக்கத் துணியவில்லை. இந்நிலைமையில் அதிஆச்சரியமானசம்பவம் ஒன்று நேர்ந்தது. துரோகி நாகமன்புதல்வனான விசுவநாதநாயக்கன் சபைநடுவே எழுந்துநின்று தான் அக்காரியத்தைச்செய்வதாய் அரசனுக்குஅறிவித்தான். அரசன் முதலில் அவன்மீது சந்தேகங்கொண்டபோதிலும் பிறகு விசுவநாதன் மீது நம்பிக்கைகொண்டு தக்கசேனையுடன் அவனை அனுப்பினான். விசுவநாதன் மதுரைமீதுபடையெடுத்துச்சென்று தன்தகப்பனைத்தோற்கடித்து அவனைச் சிறைபிடித்துவந்து ராமராஜனிடம் ஒப்புவித்தான். ராமராஜன் மிக்கசந்தோஷத்துடன் விசுவநாதனைநோக்கி "உனக்கு என்னவேண்டுமானாலும் அதைக்கூறுவாயாகில் நான் மனமுவந்து அளிக்கின்றேன்" என்றான். விசுவநாதன் தன்தகப்பனுக்கு உயிர்ப்பிச்சையளிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க அவ்வாறே நாகமனைக் கொல்லாதுவிட்டுவிட்டான். அத்துடன் கலகமும் ஒடுங்கிவிட்டது. 1599ம்ஆண்டில் பாண்டியராஜனை மதுரைராஜ்யத்தரசனாக முடிசூட்டி விசுவநாதநாயக்கனை விஜயநகரராஜ்ய ப்ரதிநிதியாகவும் பாண்டியனுக்கு உதவியாகவுமிருந்து மதுரையைப் பரிபாலனம்செய்துவரும்படி ராமராஜன் நியமித்தான்.

விசுவநாதநாயக்கன்.

(1559—1563).

முற்கூறியவாறு பாண்டியராஜனுக்கு உதவியாகவும் விஜயநகர ப்ரதிநிதியாகவும் விசுவநாதன் மதுரையைப்பரிபாலித்துவந்தான். தனது சௌரியத்தாலும் ஆட்சித்திறமையாலும், கலகக்காரரையெல்லாம் அடக்கி எங்கும் அமைதியை நிலைநாட்டினான். பாண்டியர்கள் கேவலம் பேருக்குமாத்திரம் சிலகாலம் அரசர்களாயிருந்தார்கள். மதுரைராஜ்யபரிபாலனமுழுமையும், விசுவநாதனாலும் அவனுக்குப் பின்வந்த நாயக்கர்களாலுமே நடத்திவரப்பட்டது.

பொதுநன்மைகள். விசுவநாதன்காலத்தில் தேசக்ஷேமகரமான காரியங்கள் பல செய்யப்பட்டன. இவனுக்கு உதவியாய் இவனுடன் ஒத்துத் தர்மசிந்தனையுடன் வேலைசெய்தவர் ஆர்யநாயகமுதலிஎன்பவர். இவர் தாழ்ந்தநிலைமையிற்பிறந்து விஜயநகரஸம்ஸ்தானத்தில் உயர்ந்த பதவிக்குவந்தவர். விசுவநாதனுக்கு உதவித்தளகர்த்தராய் மதுரைமீது

படையெடுக்கையில்வந்தவர். விசுவநாதன் ப்ரதிநிதியானதும் ஆர்ய நாயகமுதலி விசுவநாதனின் *தளவாய்ஆக நியமிக்கப்பட்டார்.

துஷ்காலங்களில் தங்கள் ஊரைவிட்டு ஓடிப்போயிருந்த குடிகளெல்லோரும் திரும்பிவந்து விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலான தம்தம்தொழில்களைச் செய்யத்துடங்கினார்கள். சிறிதுகாலத்துக்குள் தேசமெங்கும் செல்வமும் செழிப்பும் தழைத்தோங்கின. ஆலயங்களும் அக்ரகாரங்களும் ஆங்காங்கு நிர்மிக்கப்பட்டன. வைகையாற்றில் முற்காலத்தில்கட்டப்பட்டுள்ள பேரணை, சிற்றணையென்பவை இவர்களாலென்றே ஊஹிக்கப்படுகின்றது. வைகையாற்றிலநேகம் பாசனக்கால்வாய்கள்வெட்டி நீர்வளமில்லாதிருந்த பலபாகங்களை நீர்வளமுடையதாக்கினார்கள்.

திருச்சிராப்பள்ளி. ஸ்ரீரங்கம், ராமேசுவரம்முதலான ஸ்தலங்களுக்குப்போகும் மார்க்கங்களெல்லாம் கள்ளர்பயத்துக்குட்பட்டிருந்தன. அதையடக்கவேண்டியமுயற்சிகள் விசுவநாதனும் ஆரியநாயகனும் செய்தார்கள். தஞ்சைமன்னனுக்கு வல்லம்கோட்டையைக்கொடுத்துத் திருச்சிராப்பள்ளியைப் பரிவர்த்தனையாய்ப்பெற்று, அதன்கோட்டையைப் பலவிதமாய்ப் பலப்படுத்தினார்கள்.

ஆங்காங்கு பலவிடங்களில் தக்கபாதுகாவல்செய்து கள்ளர்பயத்தை நீக்கினார்கள். யாத்திரைசெய்பவர்கள் நிர்ப்பயமாய்த் தேசஸஞ்சாரம் செய்ய ஆரம்பித்தார்கள்.

திருநெல்வேலி. விசுவநாதன் இவ்வாறு திருச்சிராப்பள்ளிச்சீமையைச் சீர்படுத்திக்கொண்டிருக்கையில் தளவாய் ஆரியநாயகமுதலி திருநெல்வேலிப்ரதேசத்தைச் சீர்படுத்தச்சென்றான். 'பஞ்சபாண்டவர்கள்' என்ற பேர்வஹித்த ஐந்துதலைவர்கள் திருநெல்வேலி கயத்தார் என்னும் நகரத்தில் ஸ்வாதீனமாய் ராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொண்டு நாயக்கர் அதிகாரத்தைத் தடுப்பதாய்ச் சபதம்செய்தார்கள். மதுரையிலாண்ட சந்திரசேகரரின் பாட்டனுடைய தாஸி புத்திரர்கள் இவ்வைவர்கள் என்றும், இவர்கள்வஞ்சனையால்தான் சந்திரசேகரன் ராஜ்யத்தைவிட்டோடி விஜயநகரத்தரசனைத் தஞ்சமடைய நேர்ந்ததென்றும் சொல்லுவதுண்டு. இவர்களையடக்க ஆரியநாயகமுதலி பலமுயற்சிசெய்தும்

* குறிப்பு—தளவாய், ராணுத்வமும் மந்திரித்வமும் கூடிய உத்யோகம்.

பயன்படவில்லை. இச்செய்திகேட்ட விசுவநாதன் பெருந்தசேனையுடன் திருநெல்வேலிக்கு விரைந்துவந்தான். தலைவர்கள் எதிர்த்துப் போர் புரியப் போதுமானசேனையும் பணமுமில்லாதவர்களானதால், காடுகளில் மறைந்திருந்து சௌகரியமானபோது திடீரென்றுதாக்குவதும் ஓடிப்போவதுமாயிருந்து, இவ்வாறு விசுவநாதன்சேனையைப் பலவாறு உபத்திரவப்படுத்திவந்தார்கள்.

விசுவநாதன் ஒருயுக்திசெய்தான். தலைவர்கள் ஐவரும் ஒன்றுகூடித் தான் ஒருவனுடன் சண்டையிட்டு அவர்கள் ஜயித்தால் அவர்கள் ராஜ்யத்தை யவர்களே ஆளவிட்டுவிடுவதாயும், தான்ஜயித்தால் அவர்கள் ராஜ்யத்தை இழந்துவிடவேண்டுமென்றும் சொல்லியனுப்பினான். ஐவரும் தங்களில் ஒருவரை சண்டைசெய்ய முன்வருவதாய் அந்த நிபந்தனைகட்குட்பட்டார்கள். பிறகு நடந்த த்வந்த்வயுத்தத்தில் ஐவர் தலைவன் மரணமடைந்தான். ஒப்பந்தப்படி மற்றநால்வரும் தங்கள் சீமையையிழந்து பரதேசஞ்சென்றார்கள். இவ்வாறு திருநெல்வேலிச்சீமையும் மதுரைநாயக்கர் ஆட்சிக்குட்பட்டுவிட்டது.

பாளையக்காரர்கள். நாயக்கர்வருவதற்குமுன்னமேயே, மதுரை ராஜ்யத்தில் அநேக ப்ரதேசங்களை யநேக தலைவர்களென்ற சிற்றரசர்கள் ஆண்டுவந்தார்கள். இவர்கள் மதுரைஅரசாட்சிக்குட்பட்டவர்களாய் மதுரைஅரசர்க்குக் கப்பம்செலுத்தியும் வேண்டும்போது சேனையுதவிபுரிந்தும்வந்தார்கள். முற்கூறியவாறு பாண்டியவம்சம் வரவரக்ஷீணதசையடைந்தபோது இத்தலைவர்கள் ஸ்வாதீனமடைந்து கப்பங்களைச் சரியானபடிசெலுத்தாமலும், கலகங்கள்செய்தும் வந்தார்கள்.

விசுவநாதனுக்குமுன்னமே, மகமதியர்உபத்ரவம் பொறுக்காமல் ஆந்திரதேசத்தினின்றும் அநேகநாயக்கர்கள் ஓடிவந்து பாண்டியதேசத்தில் குடியேறியிருந்தார்கள். விசுவநாதனுடன்வந்தவர்களும் பலர். இவர்கள் எல்லோரும் தங்கள்ஜாதியரான விசுவநாதனிடம் விசுவாஸமாயும் பக்திமாயுமிருந்தார்கள். விசுவநாதனும் ஆரியநாயகமுதலியும் மதுரைராஜ்யத்தை 72 பாளையப்பட்டுக்களாகப்பிரித்து முன்னிருந்தவரில் யோக்யமானவரை அவரவர்ஸ்தானத்தில் உறுதிப்படுத்தினதுடன், மற்றப்பாளையங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருநாயக்கரை நியமித்தார்கள். தம்தமக்குஅளிக்கப்பட்ட ஜமீனை (பூமியை)

ஆளுவதும், நாயக்கர்ராஜாங்சத்துக்கு வருஷந்தோறும் வரிசெலுத்துவதும், யுத்தகாலத்தில் சேனையுதவிசெய்வதுமே இவர்கள் கடமை. இவர்கள்தான் *ஜமீன்தார்கள் என்றும் பாளையக்காரர்என்றும் ‡சொல்லப்படுவார்கள். நல்லஎண்ணத்துடன்செய்த இவ்வேற்பாடு, பின்பு நாயக்கர்வம்சம் பலஹீனமடைந்ததும், மதுரைஸமஸ்தானத்துக்கே உபத்ரவமாய்முடிந்தது.

முற்கூறியவாறு விசுவநாதன்காலத்தில் திருச்சிராப்பள்ளி மதுரை திருநெல்வேலி என்னும் மூன்றுஜில்லாப் பாகங்களும் மதுரைநாயக்கர் ஆட்சிக்குட்பட்டுக் கலகங்களெல்லாம்நீங்கி அமைதி நாட்டப்பட்டுச் செல்வம் சீருடன்செழித்தோங்கத் தலைப்பட்டன. இவ்வாறு அமைதியுடனும் தன்தளவாய் ஆரியநாயகமுதலியின் உதவியுடனும் சிறிதுகாலம் அரசாண்டு விசுவநாதன் 1563-ம்வருஷம் மார்கழிமாஸவாக்கில் மரணமடைந்தான்.

2. குமாரகிருஷ்ணப்பநாயக்கன்.

(1563—1573.)

1563-ம் ஆண்டில் விசுவநாதநாயக்கன்மகன் குமாரகிருஷ்ணப்பநாயக்கன் பட்டத்துக்கு வந்தான். விஜயநகரஸமஸ்தானத்தின்மீது மகமதியர் படையெடுத்துவருவதையறிந்து விஜயநகரத்துக்குதவியாய் மதுரைத்தளவாய் ஆரியநாயகமுதலி சென்றுவிட்டார்.

தும்பிச்சிநாயக்கன் கலஹம். தும்பிச்சிநாயக்கன் 72 பாளையக்காரரில் ஒருவன். இவன் கலஹஞ்செய்து மதுரைமீதுபடையெடுத்துவரும்வழியில் பரமக்குடிக்கோட்டையைப் பிடித்துக்கொண்டான். குமாரகிருஷ்ணப்பன், தன் சேனைத்தலைவனை பெரிய கேசவப்பனவசம் தக்கசேனையனுப்பக் கேசவப்பன் பரமக்குடிசென்று போர்புரிந்திறந்தான். பிறகு கேசவப்பன்மகன் 18000 வீரர்களுடன் சென்று தும்பிச்சிநாயக்கனைத் தோற்கடித்து அவனைப்பிடித்து

குறிப்பு— * ஜமீன் = பூமி, க்ஷேத்ரம்.
ஜமீன் தார் = ப்ரதேசஸ்வான் தார்.
‡ பாளையம் = சேனை.
பாளையக்காரன் = சேனைத்தலைவன்.

ன் தலையைவெட்டி மற்றப்பாளையக்காரருக்கு எச்சரிக்கையாக ரைக்கு அனுப்பினான். இத்துடன் பாளையக்காரர்கலஹமும் க்கத்திலேயே அடங்கிவிட்டது.

கண்டிராஜன்போர். தும்பிச்சிநாயக்கன் நண்பனான கண்டிராஜன் னை இகழ்ந்துபேசினான் என்று கேள்விப்பட்டுக் குமாரகிருஷ் பன் தக்க சேனையுடன் நவபாஷாணத்தின்வழியாய்க் கடலைத் ண்டி இலங்கைசேர்ந்து கண்டிமீது படையெடுத்துச் சென்றான். டிராஜன் தன் நாலுமந்திரிகளையும் எட்டுத்தேச நாதர்களையும் 00 போர்வீரர்களுடன் மதுரைச்சேனையை எதிர்க்க அனுப் ன். குமாரகிருஷ்ணப்பன் பிருந்த சேனையை மூலபலமாய்ப் னே நிறுத்திவிட்டு, 20000 போர்வீரருடன் கண்டிச்சேனையை ர்த்தான். கோரமான யுத்தம் நடந்தது. இருதிறத்திலும் ந்தசேதம். கடைசியில் மதுரைச்சேனை வெற்றியடைந்தது. கண்டி ிரிகளில் இருவரும் ஐந்துதேசநாதர்களும் சிறைப்பட்டார்கள். து கண்டிராஜன் 60000 சிங்களருடனும் 8000 காபிர்களுடனும் னை போர்புரிய வந்தான். கண்டிச்சேனை நாசஞ்செய்யப்பட்டுக் டிராஜனும் குமாரகிருஷ்ணப்பன் எய்த அம்பினால் இறந்தான். டிநகர் நாயக்கராஜன் வசப்பட்டது. தன் மைத்துனனை விஜய பாலநாயக்கனைக் கண்டிப்பிரதிநிதியாய் நியமித்துவிட்டுக் குமார ஷ்ணப்பன் மதுரை வந்துசேர்ந்தான்.

1565-ல் நடந்த தலைக்கோட்டை யுத்தத்தில், விஜயநகரச்சேனை மதியரால் தோற்கடிக்கப்பட்டு விஜயநகரமன்னன் ராமராஜனும் ரிழந்தான். விஜயநகரும் மஹமதியரால் பாழாக்கப்பட்டது. அத் ன் விஜயநகரஸமஸ்தானத்தின் பெருமையும் குலைந்துவிட்டது. துடன் விஜயநகரத்துக்கு ஆதீனமான மைசூர்ராஜ்யம் ஸ்ரீரங்க ணத்தலைவனுக்கும், தஞ்சைநாடு வீரராகவநாயக்கனுக்கும், ரைநாடு குமாரகிருஷ்ணப்பனுக்கும் அநேகமாய் ஸ்வாதீனமாயின. ியநாயகமுதலி தலைக்கோட்டைப்போரினின்றும் 1566-ல் ரைக்குத்திரும்பிவந்தான். அவனை இம்மூன்றுதேசங்களுக்கும் வாயாக இருந்து காத்துவந்தான். தன் குடும்பத்தாரையும் பரையும் காஞ்சீபுரத்துக்கடுத்த பெருநாட்டிலிருந்து வரவழைத்து ரைக்கடுத்த சோழவந்தானில் குடியேற்றினான்.

ஆரியநாயகமுதலியுதவியால், மதுரைராஜ்யத்தில் கலஹம் பஞ்சம் முதலான கொடுமைகளெல்லாம் நிவர்த்தியாய்விட்டன. குமார கிருஷ்ணப்பன் தேசக்ஷேமகரமான காரியங்களைச் செய்யத்தொடங்கி னான். கிருஷ்ணாபுரம், கடயங்கிருஷ்ணாபுரம் என்னும் கிராமங்களைத் திருநெல்வேலியில் ஸ்தாபனம்பண்ணினான். அநேக ஆலயங்களும், அக்ரஹாரங்களும் தடாகங்களும் நிர்மாணம்செய்தான்.

இவ்வாறு செங்கோல் செலுத்திவந்து 1573-ம் ஆண்டில் குமார கிருஷ்ணப்பநாயக்கன் மரணமடைந்தான்.

3 { கிருஷ்ணப்ப (பெரியவீரப்ப) நாயக்கன்
விசுவநாதநாயக்கன் II.

(1573—1595)

1573-ம் ஆண்டில் குமாரகிருஷ்ணப்பன் புதல்வர் கிருஷ்ணப்பன் என்ற பெரியவீரப்பனும் இரண்டாம் விசுவநாதநாயக்கனும் சேர்ந்து பட்டத்துக்குவந்தார்கள். ஆரியநாயகமுதலியே ராஜ்யகாரியங்களை நிர்வஹித்துவந்தார்.

மாவிலிவாணராஜன் கலஹம். மதுரையில் முன் அரசாண்டு வந்த மாவிலிவாணனது வம்சத்தவர்கள் காளையார்கோவிலில்குடியேறி யிருந்தார்கள். அவர்கள் தங்கள் ராஜ்யத்தைக் கைப்பற்றக் கலஹம் செய்ததாகவும், கலஹம் அடக்கப்பட்டதாகவும் மாவிலிவாணராஜ னுக்குத் தக்கசிக்ஷை செய்யப்பட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. 1595-ல் கிருஷ்ணப்பனும் அதற்கு முன்னமேயே விசுவநாதனும் காலஞ்சென்றார்கள்.

4 { லிங்கய (குமாரகிருஷ்ணப்ப) நாயக்கன்
விசுவப்பன்என்றவிசுவநாதநாயக்கன் III.

(1595—1602.)

1595-ம் ஆண்டில் கிருஷ்ணப்பன் இறந்ததும் அவன் மக்கள் லிங்கயன் என்ற குமாரகிருஷ்ணப்பநாயக்கனும், விசுவப்பன் என்ற மூன்றாம் விசுவநாதநாயக்கனும் சேர்ந்து பட்டத்துக்கு வந்தார்கள்.

1600-ம் ஆண்டில் ஆரியநாயகமுதலி மரணமடைந்தான். அவன் உள்ளவரை மதுரைராஜ்யமானது கன்னியாகுமரிமுதல் வடக்கே வாலிகொண்டபுரம் வரைக்கும் கிழக்கடல்முதல் மேற்குமலைத்தொடர் வரைக்கும் பரவியிருந்தது. மதுரை நாயக்கர்கள் விஜயநகரராஜ வம்சத்தவர் ஆதீனத்தை அங்கீகரித்தே வந்தார்கள். இவன் இறந்ததும் மதுரையின் ஸ்வாதீனம் அதிகரித்துவிட்டது. மதுரை ஆயிரக்கால் மண்டபம் அரியநாயகமுதலியால்தான் கட்டப்பட்டதென்று சொல்லப்படுகிறது. மதுரைப் பாளையக்காரர் ஏற்பாடு இவரால்தான் ஏற்பட்டது. மதுரைப் புதுமண்டபத்தில் இவர் உருவச்சிலையொன்று இருப்பதைப்பார்க்கலாம்.

1602. மதுரைப்பெருமாள்கோவில் வாயில்நிலைப்படியில் தோன்றும் சிலாநிரூபத்தால், விஜயநகர ஆதீனம் இன்னும் போகவில்லையென்று வெளியாகும்,

1602-ம் ஆண்டில் லிங்கயனும் அதற்குமுன்னமேயே விசுவநாதனும் காலஞ்சென்றார்கள்.

5. முத்துக்கிருஷ்ணப்பநாயக்கன்.
(1602—1609).

1602-ம் ஆண்டில் லிங்கயன் இறந்ததும் அவன்மகன் முத்துக்கிருஷ்ணப்பன் பட்டத்துக்குரியவனாயினான். ஆயினும் முத்துக்கிருஷ்ணப்பன் சிற்றப்பன் கஸ்தூரிரெங்கயன் என்ற ஒருவன் மதுரை ராஜ்யத்தை அபகரித்துக்கொண்டான். முத்துக்கிருஷ்ணப்பன் நண்பரில் சிலர் இதையறிந்து, கஸ்தூரிரெங்கயனைப் பட்டத்துக்குவந்த ஒருவாரத்துக்கெல்லாம் கொலை செய்துவிட்டார்கள். பிறகு முத்துக்கிருஷ்ணப்பன் சந்ததிமுறைப்படி பட்டத்துக்கு வந்தான்.

ஸேதுபதி ஸமஸ்தானம். ராமேசுவரம் என்பது தென்இந்தியாவில் கிழக்குக்கரையடுத்த ஓர் சிறு தீவு என்பதும், அது புண்ணியஸ்தலங்களில் ஒன்று என்பதும், ஸ்ரீஇராமன் இலங்கைமீது படையெடுத்துச் சென்றபோது இங்கேதங்கி ராமலிங்கஸ்வாமி ப்ரதிஷ்டை செய்தாரென்பதும், அதுமுதல் நமது இந்துதேசத்தில் பலவிடங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான யாத்ரிகர்கள் அனுதினமும் வந்துகொண்டிருக்கிறார்கள் என்பதும் யாவரும் அறிந்தவிஷயம்.

நமது சரித்திரகாலத்திலும் அதற்குமுற்காலத்திலும் ராமநாதபுரம் சீமைமுழுதும் பெரியவனமாகவும், துஷ்டர்களும், திருடர்களும், துஷ்டமிருகங்களும் வசிக்கும் இடமாகவும், யாத்ரிகர்களுக்குப் பாதுகாப்பற்றதாகவும் இருந்தது. அப்படிப்பட்ட காட்டை முற்காலமுதல் ஸேதுபதியென்ற சில தலைவர் காத்துவந்து, மதுரைப் பாண்டிய ஆட்சிக்குட்பட்டுக் கப்பமும் கட்டிவந்தார்கள்.

ஸேதுபதிராஜ்யத்தைப்பற்றிய சில சரித்திரக்குறிப்புகள் நெல்ஸன் துரையவர்கள் தன் மதுரை மான்யுவல் என்னும் நூலில் பின்வருமாறு வரைந்திருக்கின்றார்.

முதல் ஸேதுபதி இராமனால் நியமிக்கப்பட்டான். கரையோரமுள்ள வனப்ரதேசம் அவனுக்களிக்கப்பட்டது.

சோழன் ஒருவன் பாண்டியன்மீது படையெடுத்து வந்தபோது அதிவீரரகுநாதஸேதுபதி என்பவன் பாண்டியனுக்கு உதவியாயிருந்து சோழனைத்தோற்கச்செய்தான். அதற்குப்ரதிப்ரயோஜனமாகத்தொண்டித்துறைமுகம் ஸேதுபதிக்குப் பாண்டியனால் அளிக்கப்பட்டது.

கன்னடமன்னர் பாண்டியன்மீது படையெடுத்துவந்தபோது பரபீதிஸேதுபதி என்பவன் பாண்டியனுக்கு உதவியாய்ப் போர்புரிந்து கன்னடமன்னரைத் துரத்திப் பாண்டியவம்சப்ரதிஷ்டாபகன் என்ற பெயரும் பெற்றான். அக்காலத்தில் திருச்சுழி, பள்ளிமடம், திருப்புவனம் என்னும்நாடுகள் ஸேதுபதிக்கு விடப்பட்டன.

தெலுங்கர் சோழன்மீது படையெடுத்துச் சோழனைத்துரத்தியபோது சோழன் பாண்டியன் உதவிகேட்கப் பாண்டியன் வரதுங்கரகுநாதஸேதுபதியையனுப்ப, ஸேதுபதி தெலுங்கரை முறியடித்துத் துரத்திவிட்டு 'சோழவம்சஸ்தாபகன்' என்றபேர் பெற்றான்.

பின் ஒருக்கால் ஒரு சோழன் பாண்டியன்மீது படையெடுத்து வந்தபோது குலோத்துங்கரகுநாதஸேதுபதி என்பவன் அவனைத் தோற்கடித்துப் பட்டுக்கோட்டையையும், அறந்தாங்கியையும் பிடித்துத் தன் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டு, 'கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான்' என்ற பேரும்பெற்றான்.

பின்பு சோழனுக்கும் பாண்டியனுக்கும் நேர்ந்த எல்லைவழக்கை ஸமரகோலாஹலரகுநாதஸேதுபதி என்பவன் ஒருவன் பக்ஷபாத

* குறிப்பு. ஸேது = அணை = ராமேசுவரம் போகும் அணை. பதி = காவலன். ஸேதுபதி = அணைக்காவலன்.

மண்ணியில் தீர்த்து வைத்ததாகவும், அதற்குச்சோழன் மன்னார்கடல் முத்துச்சிலாபஉரிமையைச் சேதுபதிக்கு அளித்ததாகவும், ராஜ ராஜன் ராஜமார்த்தாண்டன், ராஜகம்பீரன் என்ற பெயர்கள் பாண்டிய னளித்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

விஜயநகர ஸமஸ்தானச்சேனை மதுமதியர்மீது படையெடுத்த போது பாண்டியன் ஆணைப்படி சேதுபதி தனது மறவர்சேனையுடன் சென்று விஜயநகர அரசன்பக்கம் போர்புரிந்தான். அப்பொழுது மன்னார்கோவில், திருவாரூர், தேவகோட்டை என்னும்சீமைகளும் வானரக்கொடியும் கருடக்கொடியும் விருதாக அணியும் உரிமையும் சோழன் அளித்தான்.

இவைகளெல்லாம் ராமநாதபுரம்ஸமஸ்தானத்தில் உத்தேசம் 50வருஷங்களுக்குமுன் திவானாயிருந்த பொன் னுசாமித்தேவரால் கொடுக்கப் பட்டகுறிப்புகள். இவைகளின் உண்மையும்மற்றுமுள்ளவிவரங்களும் சரித்திரஆராய்ச்சிகளால் விசேஷமாய் நிர்ணயிக்கப்படவேண்டியவை.

இதனால் நாம் முக்கியமாய் அறிவதாவது:-(1) சேதுபதிகள் வெகு காலமாய்ப் பாண்டியஅரசாட்சிக்குட்பட்ட சிற்றரசராகவேஇருந்திருக் கிறார்கள். எக்காலத்திலும் மறவர்கள் தென் இந்தியாவில் ஸ்வாதீன அரசர்களாயிருந்ததில்லை என்பதும். (2) 16-ம் நூற்றாண்டுத் துவக்கத்தில் விஜயநகர அரசரின் அதிகாரம் பெயருக்குமாத்திரமிருந்ததேயொழிய வேறல்ல. அக்காலத்தில் போகலூர் என்னும் ஊரில் சிற்றரசனாயிருந்த சடையத்தேவன் உடையான் என்பவனை முத்துக்கிருஷ்ணப்பன் சேது பதியாகஸ்தாபித்தான். இவன் 72பாளையக்காரருக்கும் தலைவனானான். சடையத்தேவன் உற்சாகமாகவும் விசுவாஸத்துடனும் வேலைசெய்து கள்ளர்களையெல்லாம் அடக்கிப் பாதைகளெல்லாம் நிர்ப்பயமாக்கி, மதுரை ஸமஸ்தானத்துக்குக் காலந்தவறாது கப்பமும்கட்டிவந்தான். இவன்காலத்தில்தான் ராமநாதபுரம் கோட்டையும் கட்டப்பட்டது என்பதுமே.

முத்துக்கிருஷ்ணப்பன்காலத்தில் அநேக ஆலயங்களும், அக்ரஹாரங்களும் தடாகங்களும், சாலைகளும் நிர்மாணம் செய்யப்பட்டன.

1609-ம் ஆண்டில் முத்துக்கிருஷ்ணப்பன் காலஞ்சென்றான்.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B. A., B. L.

கடவுள் துணை.

நட்பு.

நட்பாவது:- இருவர்மனம் வேற்றுமையின்றிக் கலத்தலானுண் டாவதொரு சிறந்த குணமாம். அது கேண்மை, தொடர்பு, சிநேகம் முதலிய சொற்களானும் வழங்கப்படும்.

இந்நட்பு, யாதொரு காரணமும்பற்றாது நிகழும் இயற்கையும், ஏதேனுமொரு காரணம்பற்றி உண்டாகும் செயற்கையும் என இரு வகைப்படும்.

அவற்றுள், இயற்கையாவது: பெற்றார், பிறந்தார் முதலிய உற வினரிடத்து இயல்பாக நிகழும் மனப்பற்றாம்.

செயற்கையாவது: ஒரு சம்பந்தமுமில்லாத அந்நியர்களோடு, அவர்கள் நற்குண நற்செய்கைகளும், உபகாரசித்தமும் காரணமாக உண்டாகும் மனவொற்றுமையாம்.

இவ்விரண்டனுள், முன்னையது மானுடப்பிறப்பில் அறிவாள ரிடத்தும், அறிவிலரிடத்தும் ஒப்பநிகழ்வதோடு, ஏனையவிலங்கு பறவைகளுட் சிலவற்றினிடத்தும் காணப்படுதலானும், நாம் விரும்பி ஆராய்ந்துகொண்ட செயற்கைநட்புப்போல ஒருதலையாக நன்மை பயக்கும் சிறப்பில்லாமையானும், அதனைச்சுற்றறந்தழுவுதல், என வேறுபெயர்தந்து நிறுத்தி, அறிவினால் ஆராய்ந்துசெய்யப்பட்டு இம்மை மறுமைகட்கு உறுதிபயக்கும் சிறப்புவாய்ந்த செயற்கைநட் பினையே 'நட்பு' எனக்கொண்டு ஆராய்ந்து தெளிதல் பொருத்த முடையதாம்.

அதுதான் உண்டாவதற்குக் கல்வி, செல்வம், அறிவு, ஒழுக்கம், வயது, ஜாதி, மதம் முதலிய பற்பல காரணங்கள் உள்ளனவாயினும், அவற்றையெல்லாம் தொகுத்துப், புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி யொத்தல் என மூன்றனுளடக்குவர் அறிவுடையோர்.

அம் மூன்றனுள், புணர்ச்சியென்பது: கல்விப்பயிற்சியும், உத்தி யோகமும், வியாபாரமும், முதலியவைகாரணமாகப் பலர் ஓரிடத்து உடன்வசித்தலாம்.

பழகுதலென்பது: ஓரூரிலாயினும், ஒரு தேசத்திலாயினும், வெவ்வேறு ஊர்களிலாயினும், வெவ்வேறு தேசங்களிலாயினும் வசிப்பவர்தாம் ஒருவரையொருவர் அடுத்தடுத்துப் பலமுறை பார்த்தும் உசாவியும் மருவுதலாம்.

உணர்ச்சியொத்தலென்பது: மிக்க தூரத்திலுள்ள வெவ்வேறு தேசங்களில் வசிப்பவராயினும், மேற்கூறிய இரண்டுகாரணமும் வேண்டாது, கல்வி, அறிவு, ஒழுக்கங்கள் காரணமாக இருவர்மனம் எவ்வாற்றானும் பேதிக்கப்பெறாமல் ஒன்றுபடுதலாம்.

நட்பை உண்டாக்கும் இம்மூன்று காரணங்களுள், முதலிரண்டும்பற்றியுளவாகும் நட்புக்கள் அவ்வக்காரணங்கள் குறையுமிடத்து, எக்காலத்தும் நீரைவிரும்பும் கமுகமரமும், சிலவேளைகளில் நீரை விரும்பும் தென்னைமரமும் எவ்வாறு தமக்கு நீர்வார்த்தல் முதலிய உபசாரைகுறையிற் பயன்றராதொழிகின்றனவோ ? அவைபோலப் பயன்றராதொழியினுமொழியும்; உணர்ச்சியொத்தலால் உளதாகும் நட்போவெனின், ஒரு காரணமும் வேண்டப்பெறாது நாளுக்குநாள் வளர்வதாய், உயிரையுங்கொடுத்துதவும் உரிமையைப் பயக்கின்றது. எனவே புணர்ச்சி, பழகுதல்களால் உண்டாகும் நட்பினும், உணர்ச்சியொத்தலால் உளதாகும் நட்பே சிறப்புடைத்தென்பது தெளிவாம். இக்கருத்தினை,

“புணர்ச்சிபழகுதல்வேண்டாவுணர்ச்சிதான்
நட்பாங்கிழமைதரும்”

என்ற பொய்யாமொழியார்வாக்காலும் நன்குணரலாம். ஆதலின் ஈண்டு எடுத்து விவரிக்கப்படும் ‘நட்பும்’ அதுவேயாகும்.

மனக்கலப்பு: நண்பர்களின் மனம் பாலுநீருங்கலந்தாற்போல ஒன்றுபட்டிருத்தல்வேண்டும். எங்ஙனமெனில், பாலும்நீரும் தம்முட் கலவாது தனித்தனியிருந்த நிலைமையில் ஒன்றற்கொன்று உதவாமலிருந்தும், இரண்டும் ஒன்றாகச்சேர்ந்தவிடத்து, பால்வேறு நீர்வேறு என்று அறியப்படாதவண்ணங் கலத்தலும், அங்ஙனம் நீரொடு கலந்த பாலைக்காய்ச்சுவதற்காக அடுப்பிலேற்றிச்சுடவைத்தபொழுது, கலப்புற்றநீர், தன் நண்பனாகிய பாலுக்குத்துன்பம்வருவதையுணர்ந்து, அந்நண்பன் துயருறுவதைப்பார்க்க மனம் சகியாமல்

“பகைசுந்தாரிற்,றீர்தலிற்றீப்புகுதனன்று” என்பதை உட்கொண்டாற்போல, அப்பால்துயருறுவதற்கு முன்னமே அத்துயரத்தைத் தானேற்று இறந்துபடுவதும், அதுகண்டபால் அந்நண்பனதுபிரிவிற்காற்றாது, தானும் தீப்புகுந்துஉடனிறக்கக்கருதியதுபோலப் பொங்கி மேலெழுவதும், உடனே அயலவர் பாலினது நட்பின் பிரிவாற்றாமைக்கு இரங்கியவர்போல அப்பாலின்மீது நீர்தெளிக்கப் பின்னர் பால் கோபந்தணிந்து நண்பனோடுகலந்து சந்தோஷித்து வாழ்வதும் போல, தோழமைகொண்ட இருவர் வேற்றுமையின்றிக்கலந்து ஒருவர்க்கு நேர்ந்த சுகத்தை இருவர்க்கும் நேர்ந்ததாக நினைத்து அனுபவித்தும், அங்ஙனமே ஒருவர்க்குநேர்ந்த துன்பத்தை இருவர்க்கும் நேர்ந்ததாக நினைத்து விலக்கியும் ஒரு தன்மையராய் மனமகிழ்ச்சியுற வாழ்வதாம். இக்கருத்தை வெளிப்படுத்தும்,

“பாலினீர்தீயணுகப்பால்வெகுண்டுதீப்புகுந்து
மேலுநீர்கண்டமையுமேன்மைபோல்—நூலினெறி
யுற்றோரிடுக்கணுயிர்கொடுத்துமாற்றுவரே
மற்றோர்புகலமதித்து”

என்ற பெரியார்பாடல் பொன்போற் போற்றத்தக்கதாம்.

நட்பின்றிட்பம்: இந்நட்பு மேற்கூறியபடி இருவர்மனம் ஒன்றாகக் கலத்தலால் உண்டாயினும், பின்னர் அக்கலப்புச் சற்று நெகிழ்ந்துகூடுமாயின், “நெல்லினுமிசிறிதுநீங்கப்பழமைபோற் புல்லினுந்திண்மைநிலைபோம்” என்றபடி தன் ஆற்றல் குறையுமாதலால், அக்கலப்போடு அந்நெகிழாமைக்குக் காரணமாகிய உறுதிப்பாடும் உடைத்தாயிருத்தல்வேண்டும். அன்றியும், நண்பன்செய்த காரியங்களெல்லாவற்றையும் தான்செய்தனவாகவே கருதவும்வேண்டும். இதற்கு, சுக்கிரீவனைச்சந்தித்தகாலையில்,

“மற்றினியுரைப்பதென்னேவானிடைமண்ணினின்னைச்
செற்றவரென்னைச்செற்றார்தீயரேயெனினுநின்னோ
டுற்றவரெனக்குமுற்றாருன்கிளையெனதென்காதற்
சுற்றமுன்சுற்றம்நீயேயின்னுயிர்த்துணைவனென்றான்.”

எனவும், விபீஷணன் தன்னைவந்தடைந்தபொழுது,

"குகனொடுமைவரானோம்வனத்திடைக்குன்றூழ்வான்
மகனொடுமறுவரானோம்வாரிகடந்தபிற்றை
யகனமர்காதலையநின்னொடுமெழுவரானோம்
புகலருங்கானந்தந்துபுதல்வராற்பொலிந்தானுந்தை"

எனவும், உறுதிமொழிகள்கூறி அவர்களோடு சிநேகங்கொண்ட ஸ்ரீராமபிரானது திண்ணியநட்பினையே உதாரணமாகக்காட்டல் சாலப் பொருத்தமுடையதாம்.

இனி, மிக்க நேசங்கொண்ட இருவர் தங்கள் நேசப்பான்மையை வியந்து, இவர் நம்மிடத்து இத்துணையன்புடையர்; நாம் இவரிடத்து இத்துணையன்புடையேம் என்று ஒருவரையொருவர் வேற்றுமை கருதாது புகழ்ந்துகூறினும், "இனையரிவரெமக்கின்னம்யாமென்று, புனையினும்புல்லென்னுநட்பு" என்றாங்கு, அப்புகழ்ச்சி ஒருகாலத்து வேறுபாட்டையுண்டுபண்ணி நட்பின்வலியைக் குறைக்குமாதலின், அங்ஙனம் புகழ்ந்துரைத்தலும் கூடாதென்பதாம்.

நட்பின் அருமை: இத்தகைய நட்பினைச்செய்துகொள்ளுதல் எளிதா? அரிதா? என்றாராய்வோமாயின், இக்காலத்துப்பெரும்பாலார், நட்புக்கொள்ளுதல் மிக எளிதென்றும், அதில் என்ன அருமைப்பாடுள்ளதென்றும் அலக்ஷியமாகப்பேசுவதை நாம் கேட்டிருக்கலாம். ஆனால், அங்ஙனம் கூறுவார்கொண்ட நட்பு எங்ஙனம் செய்துகொள்ளப்பட்டதென்பதையும், அங்ஙனம் செய்துகொண்ட நட்பின் உறுதியையும் கருதின், அது போஜனசாலையில் ஒருங்கு புசித்தலும், கல்லூரியிற்சிலகாலம்பயின்றதுப், நாடகசாலைக்கு நண்பொடு செல்வதும், உத்தியோகத்தினில் உடனமர்ந்திருத்தலும், இன்னுஞ் சிலவற்றில் இணைபிரியாமையுங் காரணமாகச்செய்துகொள்ளப்பட்டதாகவே கருதப்படுகிறது. இவை காரணமாகப்பிறக்கும் நட்பு எவ்வளவிற் பயன்படுகிறதென்றால், ஒருவர்க்கொருவர் சிறிது பொருள் கடனாகக்கொடுத்துதவுதற்கும், வீண்பேச்சுப்பேசியும் சீட்டு சதுரங்கம் முதலியன ஆடியும் காலங்கழிப்பதற்குமே பயன்படுகிறது. அச் சிறுபயனும், கண்டவிடத்துமட்டுமே நிகழ்ந்து காணாவிடத்து நிகழாதொழியும். கண்டவிடத்திலும், அப் பொருளளவும், பழக்கமும் சற்று அதிகப்படுமானால் அதுபற்றிப் பயன்படாது அவர்களைவிட்டு நீங்கவும் நீங்கும். ஆதலின், எளிதிற்செய்யப்பட்டுப் பின்

நிலைபெறாதுநீங்கும் சிறியோர் தொடர்பைப்போல், ஆபத்துக்காலத்துதவுதலின்றிக் கண்டவிடத்து இன்மொழிகூறி முகமலர நட்கும் புறநட்பாகிப் பெரும்பயன்றராது நீங்குதலின் இங்ஙனம் எளிதிற் செய்யப்படும் நட்பு உண்மைநட்பாகாது.

நாம் கூறிய நட்போ, செயற்கரிய காரியங்களைச்செய்யும் பெரியோர் கைக்கொள்ளத்தக்கதாகலின், செய்துகொள்ளுதற்கு அருமையுடையதேயாகும். எங்ஙனமெனில், நட்புக்கொள்ளுதற்குரியவர்களைப் பல வழியினும் பன்முறையாராய்ந்து பெறுதலும், பெற்றால் அவர்களிடத்து நடந்துகொள்ளும் உபாயங்களையறிதலும், பின்னர், என்றும் மாறாதிருத்தலும் அரிதாதலானென்க.

ஆனால், இவ்வளவு அருமைப்பாடுள்ளநட்பை யாவருங்கைக்கொள்ளுதல் எங்ஙனமெனில், "தொடங்குங்காற்றுன்பமாயின்பம் பயக்கும்" கல்வியின் அருமைகருதி அதனைவேண்டாமென்றொழியாது, எவ்வாறு அதன்பயன்கருதி யாவரும் கற்கவிருப்பங்கொள்ளுகின்றனரோ, அதுபோல, இந் நட்பினையும் செய்தற்கருமைபற்றி வெறுக்காது விரும்பிக்கைக்கொள்ளுதல் வேண்டும். கொண்டால், அது பின் பெரும்பயனைக்கொடுத்துத் தன்னைப்பாதுகாப்பதில் தனக்கு நிகரில்லாது விளங்குமென்பது நிச்சயம்.

"செயற்கரியயாவுளநட்பினதுபோல்
வினைக்கரியயாவுளகாப்பு"

என்பது மதனை வலியுறுத்தும்.

நட்பினரைத்தெரிதல்: நம்முடன் பழகுவோரனைவரையும் நட்பினரென்றே சொல்லுதல் வழக்கம். ஆனால், பலருடன் பன்முறை பழகினாலும், அப்பலருள்ளும், நமது லாபநஷ்டங்களைத் தனதெனக் கருதும் உண்மையான நண்பனொருவனைப்பெறுதல் மிகவும் அரிதாகவிருக்கின்றது. ஆதலால், ஒருவரோடு சிநேகங்கொள்ளுவதற்கு முன்னதாகவே அவர் குணங்களையும் செயல்களையும் ஆராய்ந்துகொள்ளவேண்டும். சிநேகங்கொண்டபின், நாளடைவில் ஆராய்ந்து தெளிந்தாலென்னையெனின், சிநேகித்தபின், தாம் அவர் என்னும் வேற்றுமையின்றி, அவர் செய்த காரியங்களைத் தான் செய்தன

வாகக்கருதும் உரிமையுண்டாய்விடும். உண்டாகவே, அவர் தீக்குணமுள்ளவராயிருப்பின், அவர் செய்யும் தீச்செயல்களின் பயன் தன்னையும்சார்ந்து, இம்மையில் அரசர் முதலியோராலும், மறுமையில் அறக்கடவுளாலும் ஏற்படுந்துன்பங்களைத் தானுமனுபவிக்க நேரும். அம்மட்டோ? அத்துடன் இருமைப்பயன்களையிழக்கவும் நேருகின்றது. ஆதலின் சிநேகித்தபின் ஆராய்வது கூடாதென்பதை,

"எண்ணித் துணிககருமந் துணிந்தபின்
எண்ணுவமென்பதிழுக்கு."

"நாடாதுநட்டலிற்கேடில்லைநட்டபின்
வீடில்லைநட்பாள்பவர்க்கு."

"ஆய்ந்தாய்ந்துகொள்ளாதான் கேண்மைகடைமுறை
தான்சாந்துயரந்தரும்."

என்னும் தமிழ்வேதவாக்கியங்களால் நன்குணர்க.

இனி, அவர்களையாராயுங்கால், நல்லறிவுள்ளவரா? நற்குடியிற் பிறந்தவரா? நல்லவர்களோடு சினேகங்கொண்டவரா? ஏதேனும் பயனைக்கருதி அப்பயன் பெறுமளவும் சிநேகங்காட்டுபவரா? அன்றி நிலைபெறும் நட்பிற்குரியவரா? தன் பகைவர்களாலனுப்பப்பட்டுத் தன்னிடத்து இரகசியங்களையறிவதனிமித்தம் சிநேகங்காட்டுபவரா? தன்னிடத்துள்ள உரிமைப்பொருள்களை யபகரிப்பதற்கெண்ணிச் சிநேகிக்கவந்தவரா? இவரிடத்து எத்துணைக் குற்றமுள்ளன? என அவரது நன்மையையுந் தீமையையும் அவ்வவற்றிற்குத்தக்க உபாயங்களால் நன்காராய்ந்து தெளிந்து, பொறுக்கக்கூடியவையும், திருத்தக்கூடியவையுமான சில குற்றங்கள் காணப்படின், அது கருதிவிட்டுவிடாது நற்குணங்களின் மிகுதியே காரணமாக அவர்களோடுநட்புக் கொள்ளல்வேண்டும். இதுபற்றி,

"குணனுங்குடிமையுங்குற்றமுங்குன்றா
இனனுமறிந்தியாக்கநட்பு." எனவும்,

"நன்மதியுடைமைகுடிகுணங்குற்றநல்லினத்தானுமெத்திறத்தும்
பன்முறையாய்ந்துநட்பினைக்கொள்க".

எனவும் கூறிய ஆன்றோர் செய்யுளும் ஆராயத்தக்கன.

நட்பிற்குரியவர்:-மேற்கூறியமுறையாக ஆராய்ந்து நட்புக்கொள்ளுதற்குரியவர்கள்; கல்வி, அறிவுநுட்பம், நல்லொழுக்கம், ஈசுவரபக்தி, சாந்தம், ஹிதவசனம், நல்லிணக்கம், உபகாரசித்தம், ஜீவகாருண்யம், பொறுமை முதலிய நற்குணவான்களென்று தெளிதல்வேண்டும். இக்குணங்கள் கருதாது செல்வமுடைமையொன்றேகருதிச் சிநேகிக்க விரும்புதல் கூடாது. ஏனெனில், பொருட்குறைவுள்ள சிநேகிதர்கள் செல்வநட்பாளரை மிகவும் நன்குமதித்துத் தன் வீட்டிற்கழைத்துச் சென்று உபசரிப்பதோடு, தமது தாய்தந்தையர்கள், மனைவிமக்கள் முதலியோரை அறிமுகஞ்செய்வித்து உரிமைபாராட்டுதலும்; செல்வர்கள் அந்நட்பினர் தாமே தங்கள் வீட்டிற்கு வந்தபொழுதும், அவர்களைப்பொருட்படுத்தாமலும், தம் மனைவிமக்களை அவர்கள் கண்டாலும் கற்பழிந்துவிடுமென்றெண்ணியும் பெருந்தன்மையிழந்தவர்களாய், ஒரு குலத்தவராயினும் அவர்களோடு பந்திபோஜனம் செய்வதும் தமக்குக் குறைவெனக்கருதிப் புறங்கடையில் வைத்து உணவளித்தலும் உண்மையாமென்க. இதனைக் கண்கூடாக அறிந்த அறிஞர்கள்,

"யாமாயினெம்மில்லங்காட்டுதுந்தாமாயின்
காணவேகற்பழியுமென்பார்போல்—நாணிப்
புறங்கடைவைத்தீவர்சோறுமதனால்
மறந்திடுகசெல்வர்தொடர்பு." எனவும்,

"யானையனையவர்நண்பொரீஇநாயனையார்
கேண்மைதழீஇக்கொளல்வேண்டும்—யானை
அறிந்தறிந்தும்பாகனையேகொல்லுமெறிந்தவேல்
மெய்யதாவால்குழைக்குநாய்."

எனவும், பரிந்துகூறியவற்றால், சிநேககுணமற்ற செல்வர்களின் தொடர்பு கனவிலும் நினைக்கத்தக்கதன்றென்பது விளங்குகின்றது.

பெரியவர் நட்பு:—இங்ஙனம் பல்லாற்றானும் ஆராய்ந்து பெருந்தகையாளரையே சிநேகிக்கவேண்டும். அப்பெரியவர் கேண்மை: குறைந்த ஒளியுள்ள பிறைச்சந்திரனும், மாலைக்காலத்து நிழலும் போல ஆரம்பத்தில் சுருங்குவதாகக்காணப்பட்டு வரவரப் பெருகுமியல்பினையும், அறிவுநூற்பொருள்தன் கற்குந்தோறுமின்பந்தருதல்

போலப் பழகுந்தோறுமின்பமளித்தலையும், மரஞ்செடிகளிற் புஷ்பிக்கும் மலர்கள் மலர்ந்தபின் குவியாதவாறுபோல முன்விரிந்து பின் சுருங்காமையையும், வயல் தூரத்திலிருப்பினும் நீரொடுசென்று அதை விளைவிக்கும் நீர்வாய்க்கால்போல நண்பன் தூரதேசத்திலிருப்பினும் பொருளொடுசென்று அவனுக்குதவிசெய்தலையும், நிலத்திலூன்றப் பெற்றதையொழிய வேறுபகாரத்தைப்பின் அடையாதிருந்தும், பனைமரமானது, அதுகருதாது, ஒருநாட்பழக்கங் காரணமாக அந் நட்டார்க்குத் தானுள்ளளவும் பயன்படுதல்போல, சிநேகிதரிடத்து அடிக்கடி உதவியை எதிர்பாராது, 'ஒருநாட்பழகினும் பெரியோர்கேண்மை, யிருநிலம்பிளக்க வேர்வீழ்க்குமே' என்றபடி நிலைபெற்று அந்நட்டார்க்குதவிசெய்தலையும், ஒரு குளத்திலுள்ள கொட்டி, நெய்தல், ஆம்பல் முதலிய கொடிகள் குளம் நீர்நிறைந்த காலத்துத் தாம் செழித்தும், நீர்வற்றியகாலத்துத் தாம் புலர்ந்தும் உறவுகொள்வதுபோல நண்பன் இன்புற்றகாலத்துத் தான் மகிழ்வதும் துன்புற்றகாலத்துத் தான் வருந்துவதும் ஆகிய உரிமையையும் தனக்கு இயல்பாகக்கொண்டு இருவர்க்கும் இருமையிலும் இன்பம் பயக்குந்தன்மையுடையதாம்.

சிறியவர்நட்போவெனின், பூர்ணசந்திரனும் காலைநிழலும் போலத் தொடக்கத்தில் விரிவாகக்காணப்பட்டுப் பின் வரவரச் சுருங்குதலையும்; மரஞ்செடிகளிற்றோன்றும் தளிர்கள் நாள் செல்லச் செல்ல ஒளியும் மென்மையும் குறைந்து வற்றுதல்போல முன் பளபளப்புக்காட்டிப் பின்மறைதலையும், நீரிலுண்டாகும் மலர்கள்போல முன்மலர்ந்து பின் குவிதலையும், கமுகு முதலிய விருக்ஷங்களைப்போல எப்பொழுதும் உதவியை எதிர்பார்த்துக்கொண்டிருந்து அவ்வுதவி சிறிதுகுறையினும் தான் பயன்படாதொழிதலையும், பலவருஷங்கள் பழகினாலும் நீரின்கட் பாசிபோல வேரூன்றாமையையும், குளம் நீர் வற்றியகாலத்து அங்குள்ள பறவைகள் நீங்குவதுபோல நண்பன் வறுமையுற்றகாலத்து அவனைவிட்டு நீங்குதலையும், கரும்பை அடிப் பக்கத்திருந்து தின்றாற்போல வரவரப் பிரியங்குறைதலையும் தனக்கியல்பாகக்கொண்டு பயன்படாமையின் அதன் சிறுமையறிந்து அந் நட்பினைக்கொள்ளாமை வேண்டும்.

நட்பினர்கடமை:—மனமொன்றுபடக்கலந்த நண்பர்கள் ஒவ்வொருவரும் தம் சிநேகிதரைக்கண்டவிடத்து, சூரியோதயங்கண்ட தாமரைமலரும், சந்திரோதயங்கண்ட சமுத்திரமும்போல உள்ளும் புறமும் ஒருங்கு மகிழ்தலும், ஒருவர் மிகுந்த காரியங்களுள்ளவராயிருந்தால் அக்காரியங்களைத் தாமும் உடனிருந்து செய்து முடித்தலும், ஒருவர்க்கொருதுன்பம் நேரிட்டகாலத்துப் பரபரப்போடு விரைந்துசென்று அத்துன்பத்தை நீக்குதலும், நீக்கமுடியாத ஊழ்வினை காரணமாகவந்ததுன்பமாயின் தாமும் உடனனுபவித்தலும், நண்பர் சன்மார்க்கத்தினின்றும் விலகித் துன்மார்க்கத்திற் செல்லக் கண்டால் அதனால் வருந்துன்பம் தமதெனக்கருதி இன்சொற்களால் ஆவன கூறியும், அவை பயன்படாக்கால் வன்சொற்களால் இடித்துரைத்தும், அவரைத் துன்மார்க்கத்திற் செல்லவொட்டாது தடுத்தலும், சமயநேரிடுங்கால், உடல்,பொருள், ஆவி மூன்றையுங் கொடுத்துதவப் பின்வாங்காமையும் முதலிய உரிமைகளைத் தங்களுக்குச் சிறந்த கடமையெனக் கொள்ளுதல்வேண்டும்.

" முகநகநட்பதுநட்பன்றுநெஞ்சத்
தகநகநட்பதுநட்பு."

" நகுதற்பொருட்டன்றுநட்டல்மிகுதிக்கண்
மேற்சென்றிடித்தற்பொருட்டு."

" உடுக்கையிழந்தவன்கைபோலவாங்கே
இடுக்கண்களைவதாநட்பு."

" அழிவினவைநீக்கியாறுய்த்தழிவின்கண்
அல்லலுழப்பதாநட்பு."

அழிதருநெறியிற்செலவினைவிலக்கி
யாம்வழிச்செலுத்தியூழ்வினையால்
அழிவுவந்தடுப்பினதற்குடனல்லாந்
தாக்கைவேறன்றியாருயிர்கள்
ஒழிவகையின்றியுணர்ச்சியொத்தரு
ணர்தொறுமுறுநயம்போலக்
கழிமகிழ்நாளும்பயிரெறும் வளரக்
கலப்பதேநட்பெனப்படுமால்.

என்பனவும் நட்பின்கடமையை நன்குவிளக்கும்.

நட்பினின்றியமையாமையும் பயனும்:- இந்நட்பினைத் தேடிக் கொள்ளுதல் அவசியந்தானா?என்றால்,மிகவும் அவசியமே.ஏனெனில், உலகத்தில் எந்தவருணத்திற் பிறந்தவராயினும், எந்த ஆசிரமத்தி லிருப்பவராயினும், தத்தம் வருணாச்சிரமங்கட்கேற்ப அறம்பொரு ளின்பங்களைக் கைக்கொண்டு உலகவாழ்க்கையிற் பொருந்துதல் ஒரு தலையாம். அங்ஙனம் உலகவாழ்வை மேற்கொண்டவர்களுக்கு, அவ்வாழ்க்கை இனிது நிறைவேறப் பிறருதவி வேண்டத்தக்கதாம். அங்ஙனமாயின், நான்காம் நிலையிலுள்ள துறவிகளுக்குப் பிறருதவி வேண்டாமேயெனின், அவர் துறவறங்கடைபோதற்கு வேண்டப்படு மென்பதை "இல்வாழ்வானென்பா னியல்புடைய மூவர்க்கும், நல் லாற்றினின்ற துணை" என்பதால் அறிக. வேண்டவே அவ்வக் காலத்துச் சிற்சில உதவிகளைச்செய்ய வல்லசிநேகரைப்பெறுவதிலும் என்றும் நமக்குதவிசெய்யும் நட்பினைத் தெரிந்துகொள்ளுதல் சிறப்புடையது.

மேலும், ஒருவனுக்கு உள்ளத்தில் கவலையேனும் சந்தோஷ மேனும் அதிகரித்தவிடத்துப் பிறருடன் சொல்லி ஆறுதலடைய வேண்டும். எங்ஙனமெனில், துன்பமதிகரித்தவிடத்து அத்துன்பத் தைப் பிறரிடம் சொன்னால், இயல்பாகவே அது குறைதலோடு, அவர்கள் அதனைத் தீர்க்கமுடிந்தால் தீர்க்கவும் முடியாவிடத்து ஆற்றவுங்கூடுமாதலாலும்,சந்தோஷத்தை நண்பர்களிடம்சொன்னால் அது மென்மேலும் பெருகுமாதலாலும், துன்பநிவிர்த்திக்கும் இன் பப்பெருக்கிற்கும் உரியவர் நட்பாளராதலின் அவரோடு நட்புக் கொண்டு வாழ்வதே சிறந்ததாம். இது உலகில் வறியவன்முதல் அரசன்வரையுமுள்ள எல்லார்க்கும் இன்றியமையாததொன்றாம்.

இந்நட்பின் அவசியத்தை உலகர்க்கறிவிக்கக்கருதிக் கடவுளரும் நட்புக்கொண்டு காட்டினரென்பதைக், கண்ணபிரான் குசேலரோடும் அர்ச்சுனனோடும் நட்புக்கொண்டு அவர்க்குதவிய செயல்களாலும், பரமசிவன் குபேரனோடும் சுந்தரமூர்த்திநாயனாரோடும் நட்புக் கொண்டு அவர்க்கருளிய முறைமையாலும் நன்கு தெளியலாம். "ஆரூரன் தோழன்," "தம்பிரான்றோழர்," என்னும் அந்நண்பர் களின்பெயர்களும் இதனை ஞாபகப்படுத்தும்.

இனி, இந்நட்பின் பயனைச் சுருங்கக்கூறுமிடத்து, ஒருவன் இம்மைக்குறுதியாகிய பொருளைச்சம்பாதிப்பதிலும், மறுமைக்கேது வாகிய அறத்தைச்செய்வதிலும் தளர்ச்சியுற்றுழி, அத்தளர்ச்சியி னீக்கி அவனை அவற்றில் நிலைபெறச்செய்து இருமைப்பயனையும் எய்துவிக்குமென்பதாம். செய்யத்தக்கது இதனினும் சிறந்ததொன் றின்மையின் இதுவே சிறந்தபயனும். இக்கருத்தடங்கிய,

> "நட்பிற்குவீற்றிருக்கையாதெனிற்கொட்பின்றி
> ஒல்லும்வாயூன்றுநிலை".

என்னும் குறளின்பொருள் சிந்திக்கத்தக்கதாம்.

நட்பிற்பிரிவாற்றாமை:- நண்பர் ஒருவரையொருவர் பிரியநேர்ந் தால் அதுவே பெருந்துயரத்தை விளைவிப்பதாகும். அப்பிரிவு: சிநே கப்பிரிவும், நண்பர் லோகாந்தரங்களுக்குச் செல்லநேரின், அதுபற்றி யுளவாகும் பிரிவும் என இருவகைப்படும். இவ்விருவகைப் பிரிவிலும் உண்டாவது வருத்தமேயன்றிவேறில்லை. நட்புக் கொண்ட இருவர் எக்காரணம்பற்றியாவது நட்பினையிழக்க நேரு மாயின், அவர்கள் தனித்திருந்து அப்பிரிவை நினைக்க நினைக்க அது மனதைச்சுட்டு வருத்துதலைத் தாம் அனுபவித்த சிலர் பிறரிடத்தும் கூறுவதை அநேகர் கேட்டிருக்கலாம். சிநேகிதரைப்பிரிந்து வருந்தி யதற்கு, ஔவைப்பிராட்டி, கபிலர் முதலிய அறிவிற்சிறந்தோர்கள் தாங்கள் நட்புக்கொண்ட அரசர்களையும், புலவர்களையும் இழக்க நேர்ந்தசமயத்து ஆற்றாது வருந்திப்பாடிய வரலாற்றைப், 'புற நானூறு' முதலிய பழையநூல்களிற் பரக்கக்காணலாம்.

> "பேயோபெழகுறினும்பிரிவதரிதரிது" எனவும்,
>
> "விலங்கிற்கும்விள்ளலரிது" எனவும்,
>
> "பரீஇயுயிர்செகுக்கும்பாம்பொடுமின்னு
> மரீஇப்பின்னைப்பிரிவு". எனவும்,
>
> "பசைந்தாரிற்,றீர்தலிற்றீப்புகுதனன்று".

எனவும், கூறிய ஆன்றோர்வாய்மொழிகளும் சான்றாதலறிக.

நட்பிற்பிழைபொறுத்தல்:-நண்பன் தன்னிடத்து முறை தவறி நடத்தலும், தன்னைக்கேளாமலே தன் பொருளையெடுத்துச் செல

விடலும், தன் காரியங்களைத் தன்னனுமதியின்றிச்செய்தலும், முதலிய தவறுகளைச்செய்வானாயின், உடனே அவன்மீது கோபங்கொள்ளாது, அவை அறியாமைகாரணமாகச் செய்யப்பட்டனவென்றாவது, உரிமைமிகுதியாற் செய்யப்பட்டனவென்றாவது கொள்ளுதல்வேண்டும். அச் செயல்கள் தீங்கிற்கேதுவாயிருப்பின், இதமாகச்சொல்லித் தடுத்தலும்வேண்டும். இனி, தனக்குத்துன்பமிகுதியைப்பயக்கும் செயல்களைச்செய்தால், அப்பொழுதும் பொறுமையைவிடாது, ஊழ்வினை காரணமாகவரும் பேதைமை யாவர்க்குமுள்ளது எனவும், ஊழ்வினைகாரணமாகத் தானனுபவிக்கவேண்டிய துன்பம் அவன்மூலமாக வந்ததேயன்றி அவன் வேண்டுமென்று செய்யவில்லையெனவும்,

"பேதைமையொன்றோபெருங்கிழமையென் றுணர்க
நோதக்கநட்டார்செயின்."

"நல்லாரெனத்தானனிவிரும்பிக்கொண்டாரை
யல்லாரெனினுமடக்கிக்கொளல்வேண்டும்
நெல்லுக்குமியுண்டுநீர்க்குநுரையுண்டு
புல்லிதழ்பூவிற்குமுண்டு."

"இன்னாசெயினும்விடுதற்கரியாரைத்
துன்னாத்துறத்தறகுவதோ."

எனக்கூறிய முதுமொழிகளாற்றெளிந்து சமாதானமடைதல் வேண்டும்.

ஆனால், தனக்குத்தெரியாமலும், சொல்லியும் கேளாமலும் துன்புறுத்தலையே மேற்கொண்டவிடத்துச்செய்வதென்னையெனின்,

"ஆற்றுந்துணையும்பொறுக்கபொறானாயின்
தூற்றாதேதூரவிடல்"

என்பதையுட்கொண்டு, தன்னாலியன்ற அளவும் பொறுத்துப் பொறுக்கமுடியாதநிலையில், அவனையிழித்துரைக்காமலும், அவன்குறைகளைப் பிறரிடங்கூறாமலும், அவனுக்குத்தீங்குசெய்யாமலும் தான் விலகிக்கொள்வதே முறையாகும்.

நட்பில் உயிர்துறத்தல்:— உடலிரண்டும் உயிரொன்றுமாகக் கலந்தநண்பருள்,ஒருவர் இறந்தனராயின், மற்றவரும் உலகவாழ்வை வெறுத்து நண்பருடன்செல்லுதல் மரபு. இங்ஙனம் நண்பர்பால்

உயிரையும் பொருட்படுத்தாதொழுகினமைக்குப், பாண்டிநாட்டிலுள்ள பிசிர் என்னும் ஊரிலிருந்தமையாற் பிசிராந்தையார் என்னும் பெயர்பூண்ட புலவரொருவர், சோழநாட்டு உறையூரில் அரசுசெலுத்திவந்த கோப்பெருஞ்சோழனோடு, புணர்ச்சி, பழகுதல் முதலிய காரணங்களொன்றுமின்றி, அவனது கல்வி, ஒழுக்கம், செங்கோன்மை, முதலிய குணங்களைக்கேட்டுணர்ந்த உணர்ச்சிகாரணமாகவே நட்புக்கொண்டொழுகுநாளில், சோழன் உலகவாழ்வை வெறுத்து நற்கதியினிமித்தம் உயிர்துறக்கத்துணிந்ததைக் கேள்வியுற்ற புலவர் உடனே உறையூர்சென்று தானுமவ்வரசனுடன் உயிர்துறந்த வரலாற்றை,

"நினைக்குங்காலமருட்கையுடைத்தே
யெனைப்பெருஞ்சிறப்பினோடீங்கிது துணிதல்
அதனினுமருட்கையுடைத்தேபிறனாட்டுத்
தோற்றஞ்சான்றசான்றோன்போற்றி
யிசைமரபாகநட்புக்கந்தாக
இனையதோர்காலையீங்குவருதல்
வருவனென்றகோனதுபெருமையும்
அதுபழுதின்றிவந்தவனறிவும்
வியத்தொறும்வியத்தொறும்வியப்பிறந்தன்றே
அதனால், தன்கோலியங்காத்தேயத்துறையும்
சான்றோனெஞ்சுறப்பெற்றதொன்றிசை
யன்னோனையிழந்தவிவ்வுலகம்
என்னாவதுகொலளியதுதானே."

என்னும் புறப்பாட்டானும்,

பொத்தியென்னும் புலவர் கோப்பெருஞ்சோழன் இறக்கத் துணிந்தநிலையில், தானும் உடன்செல்லக்கருதவே, அதையறிந்த சோழன், நீர் புத்திரனைப்பெற்றபின் வரலாமென்றுகூற, அந் நண்பரின் சொல்லைக்கடவாதொழுகிப், புத்திரப்பேறடைந்தபின் நடுகல்லாயிருந்த சோழனிடம்சென்று நான் புத்திரனைப்பெற்றுவந்தேன்,நண்பினைமறவாது எனக்கிடந்தரவேண்டுமென்று கேட்க, அந் நடுகல் பினக்கிடங்கொடுத்த அளவில் அப்புலவர் அதனுட்சென்று தங்கின வரலாற்றை; அப்புலவர்கூறிய,

"பலர்க்குநிழலாகியுலகமீக்கூறித்
தலைபோகன்மையிற்சிறுவழிமடங்கி
நிலைபெறுநடுகலாகியக்கண்ணும்
இடங்கொடுத்தளியமன்றவுடம்போ
டின்னுயிர்விரும்புங்கிழமைத்
தொன்னட்புடையோர்தம்முழைச்செலினே."

என்னும் செய்யுளானும்,

தசரதச்சக்கரவர்த்தி உயிர்நீத்ததையறிந்த சடாயு நட்புரிமை பற்றி நெருப்பிற்குதித்து உயிர்துறக்கத்துணிந்ததை,

"மருவினியகுணத்தவரையிருசிறகாலுறத்தழுவிமக்காணீரே
யுரியகடன்வினையேற்குமுதவுவீருடலிரண்டுக்குயிரொன்றானான்
பிரியவுந்தான்பிரியாதேயினியிருக்குமுடற்பொறையாம்பீழைபாரா
தெரியதனில்வீழ்ந்தேபுக்கிறவேனேலித்துயரமறவேனென்றான்".

என்னும் கம்பர்வாக்கானும் நன்கறிந்து உதாரணமாகக்கொள்ளுதல் பொருத்தமுடையதாம். இன்னும் இத்தகைய சான்றுகள் பல காட்டலாமாயினும், விரியுமென்றுவிடப்பட்டன. இன்னோர் சரிதங்களால் உயிரினுஞ்சிறந்தது நட்புரிமையென்பது விளங்குகின்றது.

கூடாநட்பு:- இந்நட்பினை யெதிர்மறை முகத்தாலாராயின், நட்பின்பயனைக் கருதாது தான் பெறத்தக்க பயனையே நாடுகின்றவர்கள் நட்பானது: தமக்குப் பொருள்கொடுப்போரைக் கருதாது அவர்கள் கொடுக்கும் விலைப்பொருளையே கருதும் வேசையர்களையும், பொருளுடையாரது கேட்டைக்கருதாது அவர் சோர்வுபார்த்து அபகரிக்கக்கருதும் கள்வரையும் ஒக்குமாதலால் அத்தன்மையரோடும், உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேசுவோரோடும், கள், காமம், சூது, பொய்க்கரிகூறல், புறங்கூறல், முதலியன கைக்கொண்டொழுகும் அறிவிலிகளோடும், நட்புக்கொள்ளாமை வேண்டும்.

இத்தகையரோடு நட்புக்கொள்ளாது விலகுதல் தமக்குப் (
றுதியமென்றும் கருதல்வேண்டும். இவை,

"உறுவதுசீர்தூக்குநட்பும்பெறுவது
கொள்வாருங்கள்வருநேர்."

"கனவினுமின்னாதுமன்னோவினைவேறு
சொல்வேறுபட்டார்தொடர்பு."

"புறநட்டகம்வேர்ப்பார்நச்சுப்பகைமை
வெளியிட்டுவேறுதல்வேண்டும்."

"ஊதியமென்பதொருவற்குப்பேதையார்
கேண்மையொரீஇவிடல்."

என்ற செய்யுட்களாலும் நன்குவிளங்கும்.

இத்தீயாரோடு சிநேகங்கொண்டு இருமைப்பயனுமிழ
சகுனியோடு நட்புக்கொண்டு இம்மையில் நாடு நகரப்
பிள்ளை சுற்றம் முதலிய நன்மைகளையிழந்து, மறுமையிலு
காளாகிய துரியோதனனையும், சட்டியங்காரனோடு நட்
நாடு முதலியவற்றையிழந்ததோடு, பூர்ணகர்ப்பிணியா
யை மயிற்பொறியேற்றி வெளிப்படுத்திவிட்டுத் தன்
இழந்த ஏமாங்கதநாட்டுச் சச்சந்தமஹாராஜனையும் இ
காட்டலாம்.

முடிவுரை:- அன்பர்களே! இதுகாறும் நட்பு இன்ன
இத்தனைவகைத்தென்பதும், அதனிலக்கணமும், செய்
செய்தால் திரிபின்றிநிற்றலும், அதன் உறுதிப்பாடும், அ
திறமும், அது செய்தற்குரியாரிவரென்பதும், பெ
மையின் பெருமையும், சிறியவர்கேண்மையின் சிறுமை
யின்றியமையாமையும், அதன்பயனும், அது உயிரினும்

யனும், நட்பிற் பிழைபொறுத்தலும், நட்பாராய்தலும், நட்டகாதாரியல்பும், நல்லோர் நட்பின்பயனும் என்பனவாகப் பலவகைப்படுத்தி ஒருவாறு நட்பின் பெருமையுரைக்கப்பட்டது.

இதனையின்னும்விரித்துநயம்படவுரைப்பர் அறிவாளர்.

இத்தகையநட்பினும் சிறந்ததொன்றில்லையாகையால் நாமெல்லோரும் ஒருவரோடொருவர் பழகுங்கால், உள்ளன்போடு நட்புக்குணமதிகரிக்கும்படி பழகியும், நம்மிளைஞர்களை அவ்வழியிற பழக்கியும் வருதல்வேண்டும். வருவோமாயின், இந்நட்பு வரவர விரிந்து தேசமுழுதும் பரவி ஒற்றுமையை ஊன்றச்செய்யும். செய்யவே, இப்பொழுது இந்தியர் நட்புக்குணமில்லாமையால் தங்கள் உரிமைகளையிழந்திருக்கின்றனரென்று கூறப்படும் வசைச்சொல்லினின்றும் நீங்கினவர்களாவோம்.

ஆதலின், இந்நட்பினை ஊராரிடத்தும், நாட்டாரிடத்தும், தேசத்தாரிடத்தும், தந்நலமறந்து தேசநன்மைக்கே உழைக்கும் உத்தமர்களிடத்தும், நமக்குப்பல நன்மைகளையும் செய்துவரும் அரசரிடத்தும் முறையேசெய்து, நாம் நமக்கும் தேசத்துக்கும் நண்பினராவோமாக.

சுபமஸ்து.

ஸ. ஹரிஹரையர்,

உபாத்தியாயர்,

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

நெற்குன்றைவாணமுதலியார்.

தமிழ்கற்க ஆரம்பஞ்செய்வோர், முன்னாளில், முதலில் திருப்புகலூர் அந்தாதி, திருச்செந்திலந்தாதி, மறைசையந்தாதிமுதலியனகற்றே பின்னர்க் காவியபாடம்படித்தல் மரபு. இவற்றில், திருப்புகலூரந்தாதி யியற்றினார் நெற்குன்றைவாணமுதலியாரென்பது. நெற்குன்றைவாணர் என்பது ஒருபெயரெனக்கொண்டு இதுகாறும் எண்ணிவந்தோம். ஆயினும் ஆராய்ச்சியால் அவர் இயற்பெயர் வேறு என்றும், நெற்குன்றம் என்னு மூரைஉடையார் என்றும், பின்னர் அரசனால் வேண்டப்பட்டுச் சோணாடுபுக்குத் திருப்புகலூரில், தம் காலத்தைக் கழித்தனரென்றும், அக்காலத்தில் திருப்புகலூரந்தாதி பாடினரென்றும் அறியக்கிடக்கின்றன.

தொண்டைமண்டலசதகத்திலே,

களப்பார் இளப்ப வடிமடிக் காகக் கொழுமியசொல்
வளப்பா மதுரத் துடன்பூக் கமலமென் றூய்ந்தெடுத்த
களப்பாள னெற்குன்ற வாணனந் தாதிக் கவித்துறையே
வளப்பார் புகலூ ரளர்ப்பிக்கு மாற்றொண்டை மண்டலமே.

[சிப்பன்பிறல் பிரதி 26-வது செய்யுள்.]

என்று காணப்படுவதால், களப்பாளனென்பது அவர்இயற்பெயரென்று கொள்ளவேண்டியிருக்கிறது. நெற்குன்றமென்னுமூருக்கு அரசனெனப் பொருள்படும். வாணன், அரசனென அகராதியிற்காணப்படுகிறது. இவரதூர் தொண்டைநாட்டுள்ள நெற்குன்றம் தானென்பதும், இயற்பெயர் களப்பாளர் என்பதும் திருப்புகலூரிலுள்ள ஸ்ரீஅக்னிபுரீசுவரசுவாமிகோவில் உள்பிரகாரம் வடபுறச்சுவரில்வெட்டப்பட்டிருக்கும் "ஸ்வஸ்திஸ்ரீ சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு மலைதுமிதுநாயிற்று பூர்வபக்ஷத்து அத்தத்துநாள்குலோத்துங்கசோழவளநாட்டு பனையூர்நாட்டு ஸ்ரீ ஹஸ்தெயத்து தேவலோகம்........மகாசபையோம் இறையிலிநிலம் விலை ஆவணம், உடையார் ஸ்ரீபுகலூர்தேவர் மத்யான்னசந்தி அமுதுசெய்தருளும்போது உத்தமாக்ரமாகம்........லோகமாணிக்கச் சதுர்வேதிமங்கலத்து வரகூர்நம்பியார்குளத்தின் தெற்குக்கரையிலே நித்தம் 12 பிராமணர் உண்பதாக ஜயங்கொண்டசோழமண்டலத்துப் புலியூர்க்கோட்டத்துப் பேரூர்நாட்டு நெற்குன்றத்து நெற்குன்றங்கிழான் அற்புதக்கருவுளையகாரண களப்பாள

ராஜர் செய்வித்தசாசனம்............* என்பதனால் நன்குபுலப்படும். ஜயங்கொண்டசோழமண்டலம் என்பது ராஜராஜனை உள்ளிட்ட மத்தியகாலச்சோழவரசர்கள் பல்லவராஜ்யத்தை வேரறக்களைந்து பிடித்துக்கொண்ட தொண்டைநாட்டிற்குப்பெயரெனச் சரித்திரவாசிரியர்களாற் கூறப்பட்டிருக்கிறது. தொண்டைநாடானது 24 கோட்டங்களாகப் பகுக்கப்பட்டிருக்கின்றது. அதனில், புலியூர் என்பது 2-வது கோட்டமாகும். முதற்கோட்டம் புழல். மேலேகூறிய வாணன் என்பது அரசனெனப் பொருள்படுமென்றதற்கேற்றவாறே இச்சாஸனத்திலும் களப்பாளராஜரென்றார்.

இவர் பெரிய கொடைவள்ளலாகவிளங்கியவரென்று தெரிகிறது. தனது ஊர், வீடுமுதலியவற்றைப் பாவலர்க்கீந்ததன்றித் தன்னையும் அடிமையாகத்தந்து பின்னர் அவ்வித்துவானால் அடிமையினின்றும் நீக்கப்பட்டுத் திருப்புகலூரையடைந்து "இம்மையேதரும்சோறும் கூறையுமேற்கலாம்இடர்கெடலுமாம் அம்மையேசிவலோகமாள்வதற் கியாதுமையுறவில்லை" என்று வாகீசப்பெருமானால் துதிக்கப்பெற்ற சரண்யபுரவாசனை சின்மயனைத் துதித்துவாழ்ந்தனர்போலும்.

பன்னூர் தமிழ்க்கவன் மாமனையாதி பரிசளிப்ப
முன்னம்பி காளிக்கு நெற்குன்ற வாணமுதலியென்போன்
பின்னுஞ் சிலபல பொன்னுங் கொடுத்துத்தன்பேர்நிறுத்த
மன்னூர் தமிழு முரைத்தா னவன்றொண்டை மண்டலமே.

மேற்கோள்.

கற்குங் கவிவல்லே யாதவர் கோனம்பி காளிக்கியாம்
விற்கும் பரிசன மாகிவிட் டோம்வட வேங்கடமும்
பொற்குன் றமும்புகழ் கங்கா நதியும் பொதியமும்போ
னெற்குன் றமுநம் மரபுமெந் நாளு நிலைநிற்கவே.

என்னும் பாக்களால் இவர் யாதவர்கோனை நம்பி காளிக்குத் தம்மையுள்பட அடிமையாக்கிக்கொண்டனரென்றால் இவரது கல்வியறிவும், வள்ளன்மையும் மற்றொருமுறையும் சொல்லவேண்டுமோ.

மேலேகூறிய ஆதாரங்களைக்கொண்டு புகலூரந்தாதியியற்றியவர் இயற்பெயர் களப்பாளரென்பதும், நெற்குன்றமவரது ஊரென்பதும் ஒருவாறு துணியலாம்.

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்,
இலக்கணவிளக்கபரம்பரை.

---

* செந்தமிழ், தொகுதி XII பக்கம் 268.

கோச்செங்கணான் காலமெது?

செந்தமிழ் 12ம்தொகுதியின் 173ம்பக்கத்திற்றொடங்கிய (ம-௱-௱-ஸ்ரீ ஸதாசிவப்பண்டாரத்தாரவர்கள் எழுதியுள்ள) வியாசத்தில் 177-ம் பக்கத்திலே "ஆறாற் செங்கணான், கி.பி. முதல்நூற்றாண்டிலிருந்தசோழன் கரிகாலனுக்குப்பிந்தியவனென்பது யாவருமறிந்தவிஷயம்" என்று கூறியிருக்கிறது. அவர் இன்னஆதாரத்தின்மீது இவ்வளவுநிச்சயமாய்க் கூறியிருக்கிறாரென்பது தெரியவில்லை.

கலிங்கத்துப்பரணியிற் கரிகாலனுக்குமுந்தியவனாகக் கோச்செங்கணானைச் சொல்லியிருக்கிறது. Dr. ஹூல்ஷ்துரையவர்கள் பிரசித்தஞ் செய்திருக்கிற 'தென்னிந்தியாசிலாசாஸனங்கள்' என்னும் புத்தகவரிசையில் 2வதுதொகுதி 2வதுபகுதியில் 153வதுபக்கத்தில், தமக்குக் கிடைத்த தாமிரசாஸனம் சிலாசாஸனம்முதலியவைகளுள் ஒன்றிற் கோக்கிள்ளி, கோச்செங்கணான், கரிகாலனென்னும்வரிசையும், மற்றொன்றில்கோக்கிள்ளிகரிகாலன்கோச்செங்கணானென்னும்வரிசையும், வேறொன்றில் கரிகாலன் கோச்செங்கணான் கோக்கிள்ளியென்னும் வரிசையுங் கொடுத்திருப்பதால் உண்மையில் யார்முந்தியவர் யார்பிந்தியவரென்று சொல்லமுடியவில்லையென்று அவர் சொல்லியிருக்கிறார்.

இதுநிற்க, கடைச்சங்கப்புலவர்பெருமானாய நக்கீரனார்செய்த பல பிரபந்தங்கள் பதினோராந்திருமுறையின் ஒருபாகமாக அமைக்கப்பட்டிருக்கின்றனவென்பதும் அது சைவர்கள்எல்லாராலும் நிஸ்ஸந்தேகமாய்ப் பலநூற்றாண்டுகளாக ஒப்புக்கொள்ளப்பட்டுவந்திருக்கிறதென்பதும் யாவருக்கும் தெரிந்தவிஷயமே. அந்தப்பிரபந்தங்களுள் 'கோபப்பிரஸாதம்'என்பது மொன்று. அதிற் சிவபெருமானை அவர் பலவகையாய்த் தோத்திரஞ்செய்பவர், "சீர்மலி சிலந்திக் கின்னர சளித்தும்" என்றும் தோத்தரித்திருக்கின்றனர். சிலந்தி சிவபெருமானுக்கு வழிபாடுசெய்ததும் அச்சிலந்தியைச் சோழர்குலத்திற் கோச்செங்கணானாய்ப்பிறக்கும்படி அவர் கிருபைசெய்ததும் திருவானைக்காப்

புராணத்துள் கஜாரணியப்படலத்திலும், பெரியபுராணத்துட் கோச்செங்கட்சோழநாயனார்புராணத்திலும் பரக்கக்காணலாம்.

நக்கீரனார் பாண்டியன் நெடுஞ்செழியன், சோழன் கரிகாலன் முதலானவர்களதுகாலத்திலிருந்தவரென்பதை நெடுநல்வாடைமுதலிய அவர்செய்யுட்களா லறியலாம்.

மேற்கூறிய நெடுநல்வாடையை நக்கீரனார்பாடுவதற்குக்காரணமாயிருந்த நெடுஞ்செழியன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியனுடைய பேரன் தலையாலங்கானத்துச்செருவென்றநெடுஞ்செழியனாயிருப்பினும் சோழன்கரிகாலனுக்கும் அவனுக்கும் இடையேயுள்ளகாலம் மிகச்சொற்பமேயாம். சோழன்கரிகாலனுக்குப்பின் சோழன்நெடுங்கிள்ளி புகாரில் ஆட்சிபுரிந்தது மணிமேகலைமுதலியவற்றால், தெளிவாய்விளங்கும். நெடுங்கிள்ளியின்காலத்திலேயே புகாரைக் கடல்கொண்டது. அவன்மகன் தொண்டைமானிளந்திரையன் காஞ்சியில் ஆட்சிபுரிந்தது பெரும்பாணாற்றுப்படையால் தெள்ளிதில்விளங்கும். பிரஸ்தாபகாலத்தில் உறையூரிற் சோழன்பெருநற்கிள்ளியிருந்ததாகவுந்தெரிகிறது. கோச்செங்கணான் அக்காலத்திலிருந்தானென்றுகூறுவதற்குக் கொஞ்சமேனு மிடமில்லை.

இதைக்கவனிக்கும்போது கோச்செங்கணான் கரிகாலனுக்குமுந்தியவனென்று ஒருதலையான முடிவுக்குவரக்கூடியதாயிருக்கிறதென்று தோன்றுகிறது. ஒருகால் எனதபிப்பிராயம் பிசகாயிருக்கும்பக்ஷத்தில் அதைப்பத்திராசிரியரவர்களாவது பண்டாரத்தாரவர்களாவது திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கரிகாலனுக்குப்பின்னர்ச் சோழர்கள் நால்வர் முறையே அரசாண்டதாக அவர்கள் சொல்லுகிறார்கள். அந்நால்வருடையபெயர்களையும் அவர்கள் செந்தமிழ்வாயிலாய் வெளிப்படுத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பண்டித S. சுப்பிரமணியசாஸ்திரி.

உ

வண்டின் ஒலி.

நன்னூல்விருத்தியுரைகாரர், "அகமுனர்ச் செவிகை வரினிடையனகெடும்'' (உஉஉ) என்னுஞ் சூத்திரத்து விசேடவுரையில், அகம்+சிறைத்தும்பி—அஞ்சிறைத்தும்பி என்று ஆகும் எனக்குறித்து, அகஞ்சிறை—'ஏனையவற்றின்சிறைபோலப் புறத்தின்கண்ணவன்றி அகத்தின் கண்ண' என விளக்கினர்.

தும்பி—வண்டுகளில் ஒருசாதி. இங்கே ஒழிந்த வண்டினங்களையுங் குறிக்கும். "அஞ்சிறைவண்டினரிக்கணம்" என்பது திருமுருகாற்றுப்படை.

எனவே, வண்டுகளுக்குப் புறத்தேஇரண்டு அகத்தேஇரண்டு ஆக நான்குசிறைகள் உண்டு என்பது கூறப்பட்டது.

அச்சிறைகளுள், புறச்சிறைகள்இரண்டும் பறத்தற்குக் கருவியாக உள்ளன என்பது வெளிப்படை. அகச்சிறை இரண்டின்பயன் யாதென ஆயும்போது, அவை ஒலித்தற்குக் கருவியாகக் காணப்பட்டன.

வண்டுகள் வாளாவிருக்கும்போழ்து ஒலியாதிருத்தலும், பறக்கும்போழ்தே ஒலித்தலும், அவ்வொலியும் புறச்சிறைகள்மட்டுமே உடையவற்றிற்கு இன்மையும் காண்க.

நன்னூலார் உடம்பின் உள்ளகத்திருந்து எழும்ஒலி நிறையுயிர் முயற்சியாலேதோன்றும் என்றார். "நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப, எழுமணுத்திரள்'' (எச). நிறையுயிர்—நிறைந்த அறிவினையுடையவுயிர். நிறைந்தஅறிவு—ஐயறிவும் ஆறறிவும். வண்டு—நாலறிவுயிர். நிறைந்தவுயிரன்று. "ஆற்ற லுடையுயிர் முயற்சியி னணுவிசைக், தேற்றனவொலி'' என்பது அவிநயம். 'உந்திமுதலா முந்துவளி' என்பது தொல்காப்பியம். உந்தி வண்டுகட்கு உண்டென உரைத்தற்கில்லை. ஐயறிவுயிர்கட்கு உண்டென்ப.

இவற்றால், வண்டுகளின் ஒலி அகத்தேதோன்றி வாய்வழியாக வரும் என்பதின்றி அவற்றிற்குச் சிறப்பாக அமைந்த அகச்சிறைகளால் தோன்றும் என்பது கூறப்பட்டது. ஆயின், "மல்லிகையே வெண்சங்கா வண்டூத," "நாற்ற நாட்டத் தறுகாற் பறவை சிறுவெள்ளாம்பல் ஞாங்க ரூதும்" (புறம் எ0) "வரிவண்டு..........கறமுல்லைப் பாய்ந்தூதி'' (கலி கூக) என வருவனவெல்லாம் [illegible]மெனக்கொள்க.

R. வேங்கடாசலம்பிள்ளை,

மோகனூர்.

ஸ்ரீ:

பிழை திருத்தல்.

—(o)—

(1) சென்ற ஆடிமாசச்செந்தமிழிலே ௩௩௯-ம் பக்கத்திலே ௨௮-ம் வரியிலே "மூங்கிலாலாயவேலி என்றவன்" என்புழி "என்றவன்" என்பதை என்றவர் எனப்படிக்க.

(2) ஷை ௩௫௪-ம் பக்கம் ௩௩-ம் வரியில் இப்பொருப்பினை என்றிருப்பதை இப்பொறுப்பினை எனத் திருத்திக்கொள்க.

புத்தகமதிப்புரை.

—(:o:)—

1. செல்வவிருத்திவிளக்கம்:-இது, தி. சே. சுப்பிரமணிய ஐயரவர்களாற் செல்வவிருத்திக்குரிய காரணங்களை விளக்கித் தெளிவான தமிழ் நடையிலெழுதப்பட்டது. இதில் முதற்பாகத்திற் செல்வ வளர்ச்சியைப்பற்றிக் கதாரூபமாகக்காட்டி, பிறகு செல்வத்தின் உற்பத்தியையும், பண்டமாற்றையும், செல்வத்தின் வகைநிலைகளையும் யாரும் தெளிவாயுணரும்படி எழுதி, அவற்றிற்கேற்ற படங்களும் அட்டவணைகளும் ஆங்காங்கு காட்டப்பட்டுள்ளன. இப்புத்தகம் இக்காலத்திற் சாதாரண ஜனங்களின் அறிவுவளர்ச்சிக்கும் தொழில்விருத்திக்கும் உதவியாயிருப்பதுபற்றிப் பாராட்டற்பாலதே.

---

2. உபதேசரத்நம்:—இது, முஹம்மத்நபி அவர்களின் உபதேசங்களை அறபி, பார்ஸி, உர்தூ முதலிய பாஷைகளிலுள்ள இஸ்லாமிய மதநூல்களிலிருந்து ஏர்வாடி மௌலவிமுகம்மத் ஷாஹ் ஆதம் அவர்களின் சிஷ்யரான M. A. மலிக்சாஹிப் அவர்களால் தமிழில் திரட்டி எழுதப்பட்டது. இதில் இஸ்லாமிய மதவிஷயமான வரலாறுகளும் பிரசங்கங்களும் ஒழுக்க வழக்கங்களைப்பற்றிய உபதேச வாக்கியங்களும் படிப்பவர்மனதை நல்வழிப்படுத்தும்படி நன்கு எழுதப்பட்டுள்ளன. இதன் விலை அணா 10.

---

3. சத்யஹரிச்சந்திரன்:—இது, முடிகொண்டான் பிரஹ்மஸ்ரீ பண்டிட் M. M. நாராயணஸாமி ஐயரவர்களால் படிப்பவர் விருப்புறுமாறு நன்கு எழுதப்பட்டிருக்கிறது. ஆறங்கங்களுடையது. இதன் விலை அணா 6.

பத்திராதிபர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-௧௪.] நள வருடம் புரட்டாசி மீ [பகுதி-௧௧.

Vol. XIV. September—October, 1916. No. 11.

OFFICE OF THE REGISTRAR O... 3-FEB 1917 MADRAS

தமிழ்நாடுகள்.

இது, தஞ்சை ராவ்பகதூர் மகா-ள-ள-ஸ்ரீ K. S. ஸ்ரீநிவாஸபிள்ளையவர்களது உதவிபெற்று எழுதப்படுகிறது.

முற்பகுதி.

குமரிக்குத்தென்றிசைக்கண் நாற்பத்தொன்பது தமிழ்நாடுகளிருந்தனவென்றும், ஆங்குத் தென்மதுரையெனப்பட்டதோர்நகரத்தில் முன்னர்த் தலைச்சங்கமும், பின்னர்க் கபாடபுரமெனப்பட்ட மற்றொருநகரத்தில் இடைச்சங்கமுமிருந்தனவென்றும், அவற்றைக் கடல்கொண்டபின் பாண்டியர்கள் கூடன்மதுரையைத் தமது தலைநகராக்கிக் கடைச்சங்கத்தை அதன்கண் இருத்தினரென்றுங் கூறுவோர் சிலர். முதலில் தென்மதுரையிலும், அதனைக் கடல்கொண்டபின்னர்க் கபாடபுரத்திலும், அதனையுங் கடல்கொண்டபின்னர்க் கூடன்மதுரையிலும் பாண்டியர்களுஞ் சங்கப்புலவர்களுமிருந்துவந்தனரென்றுங் கூறுவார்சிலர். முந்தியவர்கள் ஒருகடல்கோளையும் பிந்தியவர்கள் இரண்டு கடல்கோள்களையுங்கூறுவது அவர்தம்முட் பேதம். இக்கதைகள் பழையநூல்களினால் எவ்வளவுமட்டில் ஆதரிக்கப்படுகின்றனவென்பதை இங்காராய்வாம்.

இக்காலத்துள்ள தமிழ்நூல்களுள் மிகப்பழமையானது தொல்காப்பியமென்பர். அதனை யாவரும் உயர்ந்த நூலென மதிக்கின்றனர். அது தலைச்சங்ககாலத்துக் கடல்கொண்டமதுரையில் இயற்றப்பெற்றதெனச் சிலரும், இடைச்சங்ககாலத்துக் கபாடபுரத்தினியற்றப்பெற்றதென வேறுசிலருங் கூறுகின்றனர். கடல்கொண்ட மதுரையுங் கபாடபுரமும் குமரியின் தென்றிசைப்பாலனவாய தமிழ்நாடுகளிலிருந்தனவாதலின் ஆங்கே அந்நூல் புலப்பட்டதென்பது அவர்களது கொள்கையாம்.

தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனாரியற்றிய சிறப்புப்பாயிரத்தில், தமிழுலகத்திற்கு "வடவேங்கடந் தென்குமரி, யாயிடைத், தமிழ்கூறு நல்லுலகத்து" எனக் குமரியே தெற்கெல்லையாகக்கூறப்பட்டுள்ளது. அதற்குரையெழுதிய இளம்பூரணவடிகளும் நச்சினார்க்கினியரும் குமரியைக் குமரியாறெனக்கொண்டனர். பொருளதிகாரத்து மரபியலிற் கண்ட "வினையி னீங்கி விளங்கிய வறிவின்—" என்னுஞ் சூத்திரத்தினுரையிற் பேராசிரியர், இப்பாயிரத்திற்கண்ட 'வடவேங்கடந்தென்குமரி'யென்னுந் தொடர்மொழியையெடுத்துக்கொண்டு குமரியென்பதற்குக் குமரியாறெனவே பொருளுரைத்தார். சிவஞானமுனிவரும், பாயிரத்திற்கண்ட குமரியைக் குமரியாறெனக்கொண்டு "தெற்கட் குமரியாறாகலின் அதுவே யெல்லையாயிற்று" என்று பாயிரவிருத்தியில் வரைந்துள்ளார். சிலப்பதிகாரத்து வேனிற்காதையிலுள்ள "நெடியோன்குன்றமுந் தொடியோள்பௌவமும்" என்பதற்குரையெழுதிய அடியார்க்குநல்லாரும், "தொடியோள்-பெண்பாற்பெயராற் குமரியென்பதாயிற்று. ஆகவே தென்பாற்கண்ணதோர் ஆற்றிற்குப்பெயராம்" என்றனர். மேற்கண்ட உரையாசிரியர்களெல்லாரும் குமரியைக் குமரியாறெனக்கொள்ளச் சோழவந்தான் அரசஞ்சண்முகனாரொருவரே உரையாசிரியர்கருத்துக்குமாறாய்த் 'தென்குமரி'யென்பதற் கோர் புத்துரையெழுதினார். அவருரை இன்னதென்பதையும் அது சிறிது மேலாதென்பதையும் இதன் பிற்பகுதியிற்காணலாம்.

பனம்பாரனார் தமிழுலகத்திற்குக் குமரியாற்றைத் தெற்கெல்லையென்றுகூறியதனால் அக்குமரியாற்றிற்குத்தெற்கில் அவர்காலத்துத் தென்மதுரை கபாடபுரங்களடங்கிய தமிழ்நாடுகளாவது பாண்டியர்களாவது சங்கங்களாவது இருந்தனவெனக்கூறுதல் அவரதுகொள்கைக்கு முற்றும் முரணுவதெனத் தெளிவாகின்றது. அக்காலத்திற் குமரியாற்றிற்குத்தெற்கிலும் தமிழ்நாடுகளிருந்திருப்பின், அவர் அந்நாடுகளுக்குத்தெற்கிலிருந்த மலை யாறுமுதலியவற்றையேதெற்கெல்லையாகக்கூறியிருப்பாரன்றிக் குமரியாற்றினைக்கூறுதற்கு ஒருசிறிது மிடமில்லை. மேலேகண்டபடி குமரிக்குத்தென்றிசைக்கணிருந்ததெனக் கூறப்பட்ட மதுரையிலோ கபாடபுரத்திலோ தொல்காப்பியமியற்றியரங்கேற்றப்பெற்றதெனின், அது அரங்கேறியகாலத்திற் கூடவேயிருந்து சிறப்புப்பாயிரமியம்பிய பனம்பாரனாரும் ஆங்கேயிருந்திருத்தல்வேண்டும். அவர் குமரியாற்றிற்குத் தெற்கிலிருந்துகொண்டு

தமக்கு வடக்கிலிருந்தகுமரியைத் தமிழுலகத்திற்குத் தெற்கெல்லையாகக்கூறினாரெனக்கொள்ளின் அஃது எவ்வாற்றானும் பொருந்துவதன்று. ஆகவே வேங்கடத்திற்குத்தெற்கும் குமரியாற்றிற்குவடக்குமானதோரிடத்துத் தொல்காப்பியம் புலப்பட்டதென்பதை இப்பாயிரம் தெளிவாய்க்காட்டுகின்றது. தொல்காப்பியத்திற்கு ஆதியுரையாசிரியராகிய இளம்பூரணவடிகள், இப்பாயிரத்தினுரையில், "கடல்கொள்வதன்முன்பு பிறநாடுமுண்மையின், தெற்கும் எல்லைகூறப்பட்டது. கிழக்கும் மேற்கும் பிறநாடின்மையிற் கூறப்படாவாயின...... இவை யகப்பாட்டெல்லை" என்றுகூறியுள்ளார். இங்கு அவர் 'பிறநாடு' என்றது தமிழ்நாடல்லாத பிறநாடென்றே பொருள்படும். இதனால், தொல்காப்பியம்புலப்படுத்தியகாலத்திற் குமரியாற்றிற்குத் தெற்கிலிருந்தநாடு தமிழ்நாடன்றென்பது இளம்பூரணவடிகளதுகொள்கையென்று தெற்றெனவிளங்கும்.

தொல்காப்பியர் தமிழுலகம்முழுதையும் பதின்மூன்றுநாடுகளாகப் பிரித்தாரென்று பின்வருமவற்றால் விளங்குகின்றது:—சொல்லதிகாரம் எச்சவியலிலே "அவற்றுள், இயற்சொற்றாமே - செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித் - தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே" என்னுஞ்சூத்திரத்தில் இயற்சொல்லுக்கு இலக்கணங்கூறுமுகத்தானே அவர் செந்தமிழ்நிலத்தைக்காட்டியபின்னர், "செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந் - தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி" என்னுஞ் சூத்திரத்தில், திசைச்சொல்லுக்கு இலக்கணங்கூறுமுகத்தானே செந்தமிழ்நிலஞ்சேர்ந்த பன்னிருநிலங்களையுங் காட்டியுள்ளார். அவரது கொள்கைப்படி தமிழ்கூறுநல்லுலகம்முழுதும், செந்தமிழ்நிலமும் அந்நிலஞ்சேர்ந்த பன்னிருநிலமுமாகப் பதின்மூன்றுநிலங்களையடங்கியதென்பதாம். செந்தமிழ்நிலத்தைச்சார்ந்த பன்னிருநிலத்திற்கும் உரையாசிரியர்கள் கொடுந்தமிழ்நிலமென்று பெயரிட்டிருக்கின்றனர். சங்கமும் பாண்டியர்களுமிருந்தநாட்டைச் செந்தமிழ்நாடென்றும் அதனையடுத்துள்ள தமிழ்நாடுகளைக் கொடுந்தமிழ்நாடுகளென்றுமவர்கள்கூறுகின்றனரென்பது. கொடுந்தமிழ்நாடுகளின்பெயர்களைத் "தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி-பன்றி யருவா வதன்வடக்கு-நன்றாய சீத மலாடு புனனாடு செந்தமிழ்சே - ரேதமில் பன்னிருநாட் டெண்" என்னுஞ்செய்யுளுட்காண்க. (சேனாவரையரும் நச்சினார்க்கினியரும்

இந்நாடுகளின்பெயர்களைக்கூறுவதன்கண் இரண்டொருபேதங் காணப்படுகின்றது.) பின்னூலாராகிய நன்னூலாரும், இக்கொள்கையையேகொண்டாரென்பது பின்வரும் நன்னூற்சூத்திரங்களால் விளங்கும்:— "செந்தமி ழாகித் திரியா தியார்க்குந் - தம்பொருள் விளக்குந் தன்மைய வியற்சொல்", "செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினு-மொன்பதிற் றிரண்டிற் றமிழொழி நிலத்தினுந் - தங்குறிப் பினவே திசைச்சொல் லென்ப." இலக்கணவிளக்க நூலாசிரியரதுமதமு மதுவேயாம். ஆகவே தமிழுலகம்முழுதும் குமரியாற்றிற்குவடக்கிலுள்ள மேற்கண்ட பதின்மூன்றுநாடுகளேயாமென்பது ஆன்றோரதுடன்பாடென்றும், அதற்குத்தெற்கில், தமிழ்நாடுகளிருந்தனவென்பது அவர்களதுகொள்கைக்கு முழுதும் மாறுபட்டதென்றும் தெளியக்கிடக்கின்றது.

தொல்காப்பியத்திற்குப் பின்தோன்றிக் கடைச்சங்ககாலத்து நூல்களென வழங்கிவரப்பெற்ற கலித்தொகையிலுஞ் சிலப்பதிகாரத்திலும் கடல்கோள்கூறப்பட்டுள்ளது. கலித்தொகைக்கண் முல்லைக்கலியில் நல்லந்துவனார் பாண்டியநாடு கடல்கொள்ளப்பட்டவதனைச்சொல்லியவாறு—

"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்" என்பது.

இவ்வடிகளாற் பாண்டியனதுநாட்டி னோர்பகுதியைக் கடல்கொண்டதென்றும், அக் கடல்கொண்டபகுதிக்குக் குறைவின்றி அதற்குப்பிரதியாய்ப் பாண்டியன் உடனே சேரசோழர்களிடத்தினின்று நாடு பிடித்துக்கொண்டானென்றும் அறியக்கிடக்கின்றது. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்துக் காடுகாண்காதையில்—

"வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள—"

எனக் கூறியுள்ளார். இதனால், பாண்டியனது பஃறுளியாற்றையுங் குமரிக்கோட்டையுங் கடல்கொண்டதெனத் தெரிகிறது. ஆகவே தலையிடைச்சங்கங்கள் குமரியாற்றிற்குத் தெற்கிலிருந்துள்ள பாண்டியநாட்டிலிருந்தனவென்பாரதுகூற்றிற்கு இவை ஒருசிறிதும் ஆதாரமாகாவென்பது தெளிவாய்விளங்கும்.

மேற்கண்ட சிலப்பதிகார அடிகளுக்கு அடியார்க்குநல்லாரெழுதியவுரையில் " அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழநாட்டெல்லையிலே முத்தூர்க்கூற்றமும் சேரமானாட்டுக் குண்டூர்க்கூற்றமுமென்னுமிவற்றை இழந்தநாட்டிற்காக ஆண்ட தென்னவன் வாழ்வாருக" என்றெழுதப்பட்டுள்ளது. கூற்றம் அல்லது நாடு பலசேர்ந்தது ஒரு வளநாடாகும். பல வளநாடுகள்சேர்ந்தது ஒரு மண்டலமாகும். இப்பொழுது தஞ்சாவூர்ஜில்லாவென்றுகூறப்படுவது, ஒருபொழுது பாண்டியகுலாசனிவளநாடு நித்தவிநோதவளநாடு க்ஷத்திரியசிகாமணிவளநாடு உலகுய்யக்கொண்டசோழவளநாடு இராஜேந்திரசிங்கவளநாடு அருமொழித்தேவவளநாடு இராஜாதிராஜவளநாடுமுதலிய பலவளநாடுகளாகப் பிரிந்திருந்தது. மேற்கண்டபடி பலகூற்றங்கள் அல்லது நாடுகள்சேர்ந்தது ஒருவளநாடாகுமென்றால் இரண்டுகூற்றமென்பது இப்பொழுது ஒருதாலூகாவென்று வழங்கும் நிலவளவிற்குமேற்படாதென்றுகொள்ளுதலமையும். இதனாற் குமரியாற்றிற்குத்தெற்கிற் பாண்டியனுக்குச் சிறிதுநாடிருந்து கடல்கொள்ளப்பட்டதெனக் காண்கிறோம்.

மேலும் கடைச்சங்கமிருந்ததாகக்கூறப்பட்டமதுரையைச் சங்கப்புலவராகிய சாத்தனார் மணிமேகலையில், 'தக்கணமதுரை'யென்றும், 'தக்கணப்பேரூர்' என்றும், 'தென்றமிழ்மதுரை' யென்றும் சொல்லியிருக்கின்றார். இதனால், கடைச்சங்கமிருந்ததாகச்சொல்லப்படுகிற காலத்தில், 'தென்மதுரை'யென்று வழங்கப்பெற்றது கூடன்மதுரையென்றும், வேறொருதென்மதுரையை அவரறியாரென்றும் விளங்குகிறது. அம்மதுரையை இளங்கோவடிகள் சிலப்பதிகாரப்பதிகத்திலுள் 'அதிராச்சிறப்பின்மதுரைமூதூர்' என்றும், 'மதுரைமூதூர்' என்னுமிதனை, வேறிடங்களிலும் 'புறஞ்சிறைமூதூர்' 'திருமலிமூதூர்' என்றும், 'பொற்கொடிமூதூர்' 'நிலைகெழுகூடல்' 'பழவிறன்மூதூர்' என்றுங் கூறியிருக்கின்றார். இக்கூடன்மதுரை பாண்டியர்களுக்குப் புதிதாயேற்பட்ட தலைநகரமாயிருப்பின், 'பழவிறன்மூதூர்' என்புழி அதன் பழமையைக்காட்ட இரண்டு அடைமொழிகளைக் கொடுத்திருப்பாரா? 'நிலைகெழுகூடல்' என்பது புதிதாயுண்டாகியநகரத்தையோ குறிக்கும்?

மகா-ா-ா-ஸ்ரீ கனகசபைப்பிள்ளையவர்கள், சங்கப்புலவர்களுடைய பெயர்களைத் தாம் குறித்துப்பார்த்ததில் ஐஞ்ஞூற்றுப்பதினொன்றுக்குக் குறையாத வெவ்வேறுபெயர்கள் காணப்பட்டனவென்று சொல்லி

யிருக்கின்றார். அவர்களுளொருவராவது அக்காலத்திருந்த வேறுபுலவர்கள் யாராவது நாற்பத்தொன்பது தமிழ்நாடுகளையுங் கடல்கொண்ட மதுரை கபாடபுரங்களையும்பற்றி ஒன்றும் சொல்லாதிருப்பது முக்கியமாய்க் கவனிக்கவேண்டியவிஷயங்களுளொன்று. அவர்களுக்குப்பிந்திக் களவியலுரையேற்பட்டகாலம்வரையிலுள்ள புலவர்களுள்ளும் ஒருவராவது மேற்கண்டவற்றில் ஒன்றையுங்கூறாமலிருப்பதுங் குறிப்பிடத்தக்கது.

மேலேகாட்டியபடி நாற்பத்தொன்பதுதமிழ்நாடுகள் பரந்துகிடந்திருப்பின் அவற்றின்கண் எத்தனையாறுகளும் மலைகளும் திவ்வியக்ஷேத்திரங்களும் தீர்த்தங்களும் தடாகங்களும் பெரியோர்களும் இருந்திருத்தல்வேண்டும். பாண்டியர்கள் ஆயிரக்கணக்கானஆண்டுகளாக ஆங்கு அரசுபுரிந்தனரெனில் அவர்களுடைய வெற்றிச்செய்திகளும் தருமச்செய்திகளும் பிறவும் எத்தனையோ ஆங்கு நிகழ்ந்திருத்தல் வேண்டுமே. வேலைவடிம்பலம்பநின்றபாண்டியனால்வெட்டப்பட்ட பஃறுளியாற்றைத்தவிரப் பிறவற்றைப்பற்றிய விசேடமொன்றும் வரிவடிவெழுத்துருவமைந்த நூல்களிலேனும், தொன்றுதொட்டு வாய்மொழியாய்வழங்குங்கதைகளிலேனும் ஏனோ காணவுங் கேட்கவுங் கிடைத்திலது? கடல்கொண்டனவென்றுரைக்கப்படுகின்ற நாற்பத்தொன்பதுதமிழ்நாடுகளுக்கும் அளவில் மிகச்சிறியதேயான இந்தியாதேசத்திற் கங்கை சிந்துமுதலிய பல பேராறுகளும் எண்ணிறந்த சிற்றாறுகளுமுள்ளன. விந்தியபருவதம் சையபருவதம்முதலிய பெரியவுஞ் சிறியவுமான மலைகளும் பலவுள்ளன. எத்தனையோ தீர்த்தங்களும் ஸ்தலங்களும் புகழோங்கியநகரங்களுமிருக்கின்றன. அவற்றுள், பாம்பாறுவெள்ளாறு நொய்யல்ஆமிராவதிமுதலிய பலசிற்றாறுகளும்,பன்றிமலை கொல்லிமலைமுதலிய சிறுகுன்றுகளும் புலவர்கள்பாடிய பாட்டுக்களிற் காணக்கிடக்கின்றனவே. அந்த நாற்பத்தொன்பதுநாடுகளில் இன்னவையிருந்தனவெனக்குறித்தற்கு ஒருகுறியையுமேனோ காண்கிலம். பரந்துகிடந்த அந்நாடுகளில் ஆறு குளங்களொன்றுமில்லையென்றால் அவை வசித்தற்குரியவையாவது யாங்ஙனம்? ஆங்கிருந்த பஃறுளியென்னும் வெட்டாறுமாத்திரம் புலவர்பாடப்பெற்றிருக்க மற்றவையுமங்ஙனமாகாதிருப்பதேன்? நாற்பத்தொன்பதுநாடுகளும் ஆங்கிருந்ததுண்மையாயினன்றோ அவற்றையெல்லாம்பற்றித் தலையிடைச்சங்கப் புலவர்கள் பாடியிருப்பாரென்க.

கி. பி. 9-ம் நூற்றாண்டிலோ 10-ம் நூற்றாண்டிலோ களவியலுரையென்றுவழங்கப்பெறுகின்ற இறையனாரகப்பொருளுரையொன்றுபேர்தெரியாதவொருவரால் நக்கீரரெழுதியதெனப் புலப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வுரை நக்கீரராலெழுதப்பட்டதன்றென்பதற்கு அவ்வுரையிற்றானே சாக்ஷியங் காணப்படும். இக்காலத்தியபுலவர்கள்பலரும் அஃது அவராலியற்றப்பட்டதன்றென்றுகருதுவது நம்மிற்பலருக்குந்தெரியுமாதலின் அதனையிங்கு விவரித்தலைவிடுத்தேன். ம-ா-ா-ஸ்ரீ டி. அ. கோபிநாதராவ், M. A. அவர்களும், ஸ்ரீமாந் மு. இராகவையங்காரவர்களும் மேற்கண்டவுரை கி. பி. 8-ம் நூற்றாண்டிற்கு முந்தி இயற்றப்பட்டிருத்தல் கூடாதெனப் பலகாரணங்களுடன் செந்தமிழ்த்தொகுதியில் எழுதியிருக்கின்றனர். யானேற்றுக்கொள்வதும் அவர்களதுகொள்கையேயாம். இக்களவியலுரையிலே இதற்கு முற்காலத்திய தமிழ்நூல்களொன்றிலுங் காணப்படாத சில புதியவிஷயங்கள் வரையப்பட்டுள்ளன. அவை வருமாறு:—

“தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கமென மூன்றுசங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள், தலைச்சங்கமிருந்தார், அகத்தியனாருந் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளுங் குன்றமெறிந்த முருகவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின்கிழவனுமென இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்றுநாற்பத்தொன்பதின்மர் என்பது. அவருள்ளிட்டு நாலாயிரத்துநானூற்றுநாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்பது. அவர்களாற்பாடப்பட்டன வெத்துணையோபரிபாடலும் முதுநாரையும் முதுகுருகுங் களரியாவிரையுமென இத்தொடக்கத்தன; அவர் நாலாயிரத்துநானூற்றுநாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தாரென்பது; அவர்களைச் சங்கமிரீஇயினார் காய்சினவழுதிமுதலாகக் கடுங்கோனீறாக எண்பத்தொன்பதின்மரென்ப; அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரையென்ப; அவர்க்கு நூல் அகத்தியமென்ப.”

“இனி இடைச்சங்கமிருந்தார், அகத்தியனாருந் தொல்காப்பியனாரும் இருந்தையூர்க் கருங்கோழிமோசியும் வெள்ளூர்க்காப்பியனுஞ் சிறுபாண்டரங்கனுந் திரையன்மாறனுந் துவரைக்கோமானுங் கீரந்தையுமென இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்தெழுநூற்றுவர் பாடினாரென்ப; அவர்களாற்

பாடப்பட்டன கலியுங் குருகும் வெண்டாளியும் வியாழமாலையகவலு மென இத்தொடக்கத்தன என்ப; அவர்க்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமும் மாபுராணமும் இசைநுணுக்கமும் பூதபுராணமுமென இவை; அவர் மூவாயிரத்தெழுநூறியாண்டு சங்கமிருந்தாரென்ப; அவரைச் சங்கமிரீஇயினார் வெண்டேர்ச்செழியன் முதலாக முடத்திருமாறனீறாக ஐம்பத்தொன்பதின்மரென்ப; அவருட் கவியரங்கேறினார் ஐவர்பாண்டியரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்பது. அக்காலத்துப்போலும் பாண்டியநாட்டைக் கடல் கொண்டது.”

“இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார், சிறுமேதாவியாருஞ் சேந்தம்பூதனாரும் அறிவுடையானாரும் பெருங்குன்றூர்கிழாரும் இளந்திருமாறனும் மதுரையாசிரியர் நல்லந்துவனாரும் மருதனிளநாகனாரும் கணக்காயனார்மகனார் நக்கீரனுமென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு நானூற்றுநாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்ப; அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகைநானூறுங் குறுந்தொகைநானூறும் நற்றிணைநானூறும் ஐங்குறுநூறும் பதிற்றுப்பத்தும் நூற்றைம்பதுகலியும் எழுபதுபரிபாடலுங் கூத்தும் வரியும் பேரிசையுஞ் சிற்றிசையுமென்று இத்தொடக்கத்தன; அவர்க்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமுமென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற்றைம்பதிற்றியாண்டென்ப; அவர்களைச் சங்கமிரீஇயினார் கடல்கொள்ளப்பட்டுப்போந்திருந்த முடத்திருமாறன்முதலாக உக்கிரப்பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதின்மரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தரமதுரையென்ப; அவருட் கவியரங்கேறினார் மூவர்பாண்டியரென்ப.” என்பனவாம்.

இதன்கண், கடல்கொள்ளப்பட்டமதுரை கபாடபுரம் தலைச்சங்கம் இடைச்சங்கம்முதலிய பலவிவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை தமக்கு இன்னவிடமிருந்து கிடைத்தனவென்று அவர் கூறவுமில்லை, அவற்றிற்கு ஆதாரம் நமக்குப்புலப்படவுமில்லை. எங்குங் காணக் கிடையாத புதுவிஷயங்களைக் கூறப்புகுந்த அவரே அவற்றிற்கு மேற்கோள்காட்டக் கடமைப்பட்டவர். அங்ஙனமவர் காட்டாதுவிட்டதுமன்றி நக்கீரரதுபெயரைக்காட்டிப் பலரையு மயங்கவைத்தனர்.

அவர் ‘பாண்டியநாட்டைக்கடல்கொண்டது’ என்றார். அந்நாடொன்றோ பலவோவென்னும் விவரமொன்று மவர் கூறவில்லை. அவரது நூலினிடத்து இடைச்சங்ககாலத்திற்குப்பிந்தி ஒருகடல்கோளே கூறப்பட்டது. தொல்காப்பியத்தை அவர் இடைச்சங்ககாலத்து நூல்களுள் ஒன்றாகக்கூறியிருக்கின்றார். இக் களவியலுரையையியற்றியவர் இளம்பூரணவடிகளென்றும் இக்காலத்துச் சிலர் கருதுகின்றனர். குமரியாற்றிற்குத்தெற்கில் (தமிழ்நாடல்லாத) பிறநாடிருந்து கடல்கொள்ளப்பட்டதெனக்கூறிய இளம்பூரணவடிகளும், ஆங்குத் தலையிடைச்சங்கத்து மதுரையுங் கபாடபுரமுமிருந்த தமிழ்நாடு கடல்கொள்ளப்பட்டதெனக்கூறிய களவியலுரையுடையாரும் ஒருவரெனக்கருதுவது எவ்வாற்றானு மமையாதென்க. இனிச் ‘சங்கம்’ என்னுஞ்சொல் தொல்காப்பியர்காலத்திலாவது அதற்கு முன்னாவது தமிழ்வழக்கிலிருந்ததில்லையென்று தெரிகிறது. “சகரக் கிளவியு மவற்றோ ரற்றே - அ ஐ ஔவெனு மூன்றலங் கடையே” என்னுந் தொல்காப்பிய வெழுத்ததிகாரத்துச்சூத்திர மதற்குச் சான்றாகும். அவர்காலத்திற்குப்பின்னரே அன்னசொற்கள்சில, “கடிசொ லில்லைக் காலத்துப் படினே” என்னுஞ் சொல்லதிகாரத்து எச்சவியற்சூத்திரவிதிபற்றிப் புலவர்களா லங்கீகரிக்கப்பட்டு உபயோகத்தில் வந்திருக்கின்றன. தலைச்சங்கமும் இடைச்சங்கமும்இருந்ததாகச் சொல்லப்பெற்றகாலத்தில் அவற்றிற்குச் சங்கமென்னும்மொழி வழக்கிலில்லையாகவே அவை வேறுயாதுபெயர்கொண்டு வழங்கப்பெற்றன? களவியலுரைகாரர் அதனையல்லவோ காட்டியிருத்தல்வேண்டும்.

களவியலுரையெழுதியவருக்குப்பின்னர்த் தோன்றிய பேராசிரியர் தொல்காப்பியத்தின் பொருளதிகாரமரபியலிற்கண்ட “வினையி னீங்கி விளங்கிய வறிவின்—” என்னுஞ்சூத்திரத்து உரையில் இவ் விஷயத்தைப்பற்றி எழுதநேரிட்டபொழுது பனம்பாரனார்பாயிரத்திற்கு இளம்பூரணவடிகளெழுதிய உரையும் களவியலுரையும் அவர் முன்னிருந்தனவென்று தெரிகின்றது. களவியலுரை நக்கீரரது பெயராலெழுதப்பட்டிருந்தமையின் நக்கீரரதுபெருமைநோக்க அதனை அவர் தள்ளுவதற்கில்லை; இளம்பூரணவடிகளது உரையையும் அகற்றுவதற்கில்லை. களவியலுரையைச்சார்ந்து மூன்றுவகைச்சங்கமிருந்ததென்றும், இடைச்சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் தொல்

காப்பியம் நூலாயிற்றென்றும் அவர் எழுதிவைத்தார். இளம்பூரணவடிகளது உரையைச்சார்ந்து "அது (தொல்காப்பியம்) தானும், பனம்பாரனார் 'வடவேங்கடந்தென்குமரி'யெனக் குமரியாற்றினை யெல்லையாகக்கூறிப் பாயிரஞ்செய்தலையிற் சகரர் வேள்விக்குதிரைநாடித் தொட்ட கடலகத்துப்பட்டுக் குமரியாறும்பனிநாட்டோடுகெடுவதற்கு முன்னையதென்பதூஉம்" என்றெழுதியுள்ளார். அவர் 'பனிநாடு' என்றதனால் மணற்பாங்கான அப்பூமியிற் பனைமரங்கள் செறிந்திருந்தனவென்றும், ஆங்குக் கள்ளிறக்குவோரும் மற்றைக் கீழ்ப்பட்டசாதியாரும் ஆங்காங்குத் தங்கியிருந்தனரென்றும், அவர்கள் சிதைவுற்ற தமிழையோ வேறெப்பாஷையையோ பேசிவந்தனரென்றும், அது புலவர்கள் தமிழ்நாடென்றுகணக்கிடப்பெறாமையுடையநாடன்றென்றும் நாம் நினைத்தற்கு இடந்தருகின்றது. பேராசிரியர் எழுதியதினின்றும் கடல்கோள் ஒருமுறைபேசிநிகழ்ந்ததென்பது விளங்குகின்றது.

இனிச் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர், "பஃறுளியாறு குமரிப்பக்கத்ததோர்யாறு" என்று குறித்துள்ளார். இதனாற் குமரியாற்றிற்கும் பஃறுளியாற்றிற்குமிடையே சொற்பதூரந்தானிருந்ததெனக் கிடைக்கவே அவற்றிற்கு இடைப்பட்டநாடு விசாலமானதென்றுசொல்வதற்குச் சற்றுமிடமில்லை. பேராசிரியர் பனிநாடென்றது இதனையேயாம்போலும்.

அரும்பதவுரையாசிரியருக்குப்பின்னர்ச் சிலப்பதிகாரத்திற்குரையெழுதிய அடியார்க்குநல்லார் இதனைப்பற்றி யெழுதியுள்ளார். இவர் கி. பி. 12-ம் நூற்றாண்டிற்குமுந்தியவரல்லரென்பது கலிங்கத்துப்பரணியிற்கண்டபாடல்களை அவர் மேற்கோளாகக்காட்டுவதனால் விளங்குகின்றது. சிலப்பதிகாரவேனிற்காதையுரையிற் பின்கண்டவாறு அவர் எழுதியுள்ளார்:—

"நெடியோன்குன்றமும் தொடியோள்பௌவமுமென்றது என்னையெனின், முதலூழியிறுதிக்கண் தென்மதுரையகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனாரும் இறையனாரும் குமரவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின்கிழவனும் என் றிவருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையுமுள்ளிட்டவற்றைப்

புணர்ந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இரீஇயினார் காய்சினவழுதிமுதற் கடுங்கோனீறாயுள்ளார் எண்பத்தொன்பதின்மர்; அவருட் கவியரங்கேறினார் எழுவர்பாண்டியருள் ஒருவன் சயமாகீர்த்தியனாகிய நிலந்தருதிருவிற்பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீஇயினான். அக்காலத்து அவர்நாட்டுத் தென்பாலிமுகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னுமாற்றிற்குங் குமரியென்னுமாற்றிற்குமிடையே எழுநூற்றுக்காவதவாறும் இவற்றின் நீர்மலிவானென்மலிந்த ஏழ்தெங்கநாடும் ஏழ்மதுரைநாடும் ஏழ்முன்பாலைநாடும் ஏழ்பின்பாலைநாடும் ஏழ்குன்றநாடும் ஏழ்குணகாரைநாடும் ஏழ்குறும்பனைநாடுமென்னும் இந்த நாற்பத்தொன்பதுநாடும் குமரி கொல்லமுதலிய பன்மலைநாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின்காறும் கடல்கொண்டொழிதலாற் குமரியாகியபௌவமென்றாரென்றுணர்க" என்பது.

கடல்கொண்ட தென்மதுரையினின்று கபாடபுரத்திற்குப் பாண்டியர்களும் சங்கமும்வந்ததற்குக் களவியலுரையிற் காரணங்கூறுதிருப்பதனை அவர்கண்டு அதற்குத் தாம் ஒருகடல்கோள் கற்பித்து முதற்சங்ககாலத்தை முதலூழியிறுதியென்றார். அந்தப் பெருமகன்காலத்திற்றான் அதுவரைக்கும் 'பிறநாடு' 'பனிநாடு' 'பாண்டியநாடு' எனப்பட்டுவந்தது நாற்பத்தொன்பது தமிழ்நாடுகளாய்ப் பெருகியது; குமரியாற்றிற்குப் பக்கத்ததாயிருந்த பஃறுளியாறு தெற்கில் எழுநூற்றுக்காவதவாறு அகற்றப்பட்டது; ஒன்றாயிருந்த கடல்கோள் இரண்டுழிகளாய் மாறிவிட்டது; இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் முதற்சங்கத்திற் புலப்படுத்தப்பட்டதொன்றாயிற்று; சயமாகீர்த்தியனான நிலந்தருதிருவிற்பாண்டியன், தலைச்சங்கத்துக்கவியரங்கேறியபாண்டியரெழுவருளொருவனாக்கப்பட்டான்; பஃறுளியாற்றிற்குத் தெற்கில், தென்பாலிமுகமென்னும் பிறநாடொன்றுண்டாக்கப்பட்டது; அவரால் சிருஷ்டிக்கப்பட்டநாற்பத்தொன்பது விசாலமான தமிழ்நாடுகளுக்கும் நாமகரணமுஞ்செய்யப்பட்டது. ஆச்சரிய மாச்சரியம்! அவரே சிலப்பதிகாரவுரைப்பாயிரத்தில் "இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம்புலப்படுத்திய சயமாகீர்த்தியாகிய நிலந்தருதிருவிற்பாண்டியனவைக்களத்து அகத்தியனாரும் தொல்காப்பியனாரும்......" என்றெழுதியுள்ளார். முற்கூறியதும் இதுவும் நேர்

விரோதமாயிருப்பதாக என்போலியருக்குத் தோன்றுகிறது. வேனிற் காதையுரையில் மேலேகண்டதனைக்கொண்டு தொல்காப்பியம் புலப் படுத்தப்பட்டது முதலூழிக்கடல்கோளுக்கு முன்னரோ பின்னரோ வென்றுதெளிவதற் கிடமில்லை. தாம் இவற்றைக்கூறியதற்காதாரத் தினை, "இஃது என்னைபெறுமாறெனின் 'வடிவே லெறிந்த வான்பகை பொறாது, பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள' என்பதனானும், கணக்காயனார்மகனார் நக்கீரனா ருரைத்த இறையனார்பொருளுரையானும் உரையாசிரியராகிய இளம் பூரணவடிகள்முகவுரையானும் பிறவாற்றானும் பெறுதும்" என்றிவ் வாறு எழுதியிருக்கின்றார். பெயர்குறித்து மேற்கோளாகக் காட்டி யுள்ள மூன்றனுள்ளும் இதனைப்பற்றிக் கூறப்பட்டிருப்பதையெல்லாம் யான் மேலே காட்டியிருக்கின்றேன். அவற்றில் இவர் இளம்பூரண வடிகள்முதலியோருரைத்ததற்கு நேர்விரோதமாய்க் கூட்டியதொன் றுங் காணப்படவில்லை. பிறவாற்றானுமென்பது எஞ்சிநிற்கின்றது. அது இன்னதென்பதனை ஈசனேயறியவேண்டும். இவர் கூட்டியதற்கு மேற்கோளொன்றுங்காட்டாது பிறவாற்றானுமென்பதிற் றள்ளிவிடுதல் இவருக்குச் சிறிதும் நியாயமன்று. இவர்பெருக்கியதற்கன்றோ பல மேற்கோள்களையுங் காட்டியிருத்தல்வேண்டும்.

அடியார்க்குநல்லார்க்குப்பின்னர்வந்த நச்சினார்க்கினியரோ அவ ருக்குச் சற்றும் பின்வாங்கவில்லை. அவரெழுதியவற்றைத் தமதாக்கிய தோடமையாது தாமும் தமதுவீதத்துக்கு வேண்டியவளவு கூட்டியுள்ளார். அவற்றுட் சிலவற்றை இங்குக் குறிக்கின்றேன்:— தொல்காப்பியச் சிறப்புப்பாயிரவுரையின்கண் (1) "இவரிந்நூல் (தொல் காப்பியம்) செய்தபின்னர் வேதவியாதர் சில்வாழ்நாட்பல்பிணிச் சிற் றறிவினோருணர்தற்கு நான்குகூறாக (வேதத்தை)ச் செய்தார்" என்றார். அதாவது இருக்கு யஜுஸ் ஸாமம் அதர்வம் என்னும் நான்கு பகுதிக ளாகச் செய்தனரென்பது. (2) "பாண்டியன்மாகீர்த்தி யிருபத்துநாலா யிரம்யாண்டு வீற்றிருந்தான்" என்றார். தலைச்சங்கமிரீஇய காய்சின வழுதிமுதலாகக் கடுங்கோனீறாக எண்பத்தொன்பதின்மருள், கவியரங் கேறினார் எழுவரெனின், அவ்வெழுவருள் மாகீர்த்தியுமொருவ னெனின், அவனும் அவ்வெண்பத்தொன்பதின்மருள், கடைசியவனல்ல னென்பதாயிற்று. அவர்களெல்லோரும் நாலாயிரத்துநானூற்றுநாற் பதிற்றியாண்டு சங்கமிரீஇயினரெனின் ஒவ்வொருவனுக்கும் சராசரி ஐம்பது வருஷந்தானேயாகின்றது; அப்படியிருக்க இடையிலிருந்த மாகீர்த்தியென்பானுக்கு இருபத்துநாலாயிரமாண்டு ஆயுளை நச்சினார்க் கினியர் ஏனோகொடுத்துள்ளார்? அத்தனைகாலமும் அவனிருந்திருப் பின் அக்காலத்திற்குள் தலைச்சங்கம் ஐந்துதடவை நிகழ்ந்திருக்கலாமே! (3) அகத்தியமுனிவருக்கும் தொல்காப்பியனாருக்குமொரு பெருங்கலகம் நேரிட்டதாக அவர் எழுதியிருக்கின்றார். (4) பொருளதிகாரப்புறத் திணையியலில் "அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்னுஞ் சூத்திரத்தினுரை விரிப்பவர் "இனித் தமிழ்ச்செய்யுட்கண்ணும் இறைய னாரும் அகத்தியனாரும் மார்க்கண்டேயனாரும் வான்மீகனாரும் கௌதம னாரும்போல்வார்செய்தன தலையும், இடைச்சங்கத்தார்செய்தன இடையும், கடைச்சங்கத்தார்செய்தன கடையுமாகக்கொள்க" என்றார். இவைபோல்வன பலவுள்ளன. இவரும் இவற்றிற்கு மேற்கோளொன் றுங் காட்டாதொழிந்தார். எங்கிருந்து இவர் இத்தனைவிஷயங்களையுந் தெரிந்துகொண்டாரென்பதை இவரே யறிவார்போலும். அடியார்க்கு நல்லாராகிலும் 'பிறவாற்றானும்' என்றதோர்மொழியைக் கூறினார்; இவரோ அதனையுங்கூறாது விடுத்தார்! நாளுக்குநாள் ஒருவருக்குப்பின் னொருவரால், தலையிடைச்சங்கக்கதை இவ்வாறு கூட்டுமாற்றுக்களை யடைந்து இப்பொழுதுள்ளநிலைமைக்குவந்துவிட்டதெனத் தெளிவுற விளங்குகின்றது.

கடல்கோள்நேரிட்டதற்குக்காரணமாய் இளங்கோவடிகள்கூறுவ தியாதெனில்:—

"வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள" (11, 18—19) என்பது.

திருவிளையாடற்புராணத்தின்கண்ணும் இக்கதையைக் காணலாம். மீனாக்ஷிசுந்தரேசுவரர் உக்கிரபாண்டியனுக்கு வேல் வளைசெண்டென்னு மிம்மூன்றினையுங் கொடுத்தகாலத்துச்சொல்லியது பின்வரும்பாடலால் விளங்கும்:—

"மைந்த கேட்டி யிந்திரனுங் கடலு முனக்கு வான்பகையாஞ்
சிந்த மேருத் தருக்கடையுஞ் சதவேள் விக்கோன் முடிசிதற
விந்த வளைகொண் டெறிதடலி லிவ்வேல் விடுதி யிச்செண்டா
லந்த மேரு தனைப்புடையென் றெடுத்துக்கொடுத்தா னவைமூன்றும்."(12, 61.)

பின்னர் மதுரையைக் கடலழிக்கவந்தவுடனே உக்கிரபாண்டியன் வேலெறிந்ததனால் அது சுவறியதனைப் பின்வரும் பாடல்களாலறியலாகும்:—

"வங்கவேலை வெள்ளமாட மதுரைமீது வருசெயல்
கங்குல்வாய திங்கண்மீது காரிவாய காருடல்
வெங்கண்வா ளராவிழுங்க வீழ்வதொக்கு மலதுகா
ரங்கண்மூட வருவதொக்கு மல்லதேது சொல்வதே." (13, 8.)

"எடுத்தவேல் வலந்திரித் தெறிந்தவேலை வேன்முனை
மடுத்தவேலை சுஃறென வறந்துமான வலிகெட
வடுத்துவேரி வாகையின்றி யடிவணங்கு தெவ்வரைக்
கடுத்தவேல் வலான்கணைக் காலின்மட்ட தானதே." (13, 14.)

உக்கிரபாண்டியன் இந்திரன்முடிமேல்வளையெறிந்ததும், மேருவைச் செண்டாலடித்ததும், மேகங்களைத் தளையிட்டதும் முதலிய கதைகள், திருவிளையாடற்புராணத்தின்கண் அவ்வப்படலங்களில் விரிவாய் வரையப்பட்டிருக்கின்றன. இளங்கோவடிகள்கூறிய துமிக்கதையினையே யென்பது மேற்கண்ட அடிகளாலும் அவற்றையடுத்து அவராலெழுதப்பட்ட பின்வரும் அடிகளாலும் விளங்கும்:—

"முடிவளை யுடைத்தோன் முதல்வன் சென்னியென்
றிடியுடைப் பெருமழை யெய்தா தேகப்
பிழையா விளையுட் பெருவளஞ் சுரப்ப
மழைபிணித் தாண்ட மன்னவன் வாழ்கென." (11, 26—29.)

இக்கதையொன்றையன்றி வேறொன்றும் இதுபற்றியுள்ளது எங்குங் காணப்படவில்லை. இதுவோ கூடன்மதுரையில் நிகழ்ந்தது. இது கடல்கொண்டமதுரையின்கண் நடந்ததெனக் கூறமுடியாது. இதுநிகழ்தற்குமுன்னரே தொட்டுப் பாண்டியர்கள் இங்கேயிருந்துவந்தனரெனத் தெரிகிறது. அங்ஙனங்கூறுவதாயின் வேல்வளைசெண்டுகொடுத்த மீனாக்ஷிசுந்தரேசுவராதியரையும் ஆங்குக் கொண்டுபோதல்வேண்டும். தென்மதுரையழிதற்குக் காரணமுண்டாகுமுன்தொட்டுப் பாண்டியர்கள் கூடன்மதுரையின்கண் இருந்துவந்தனரெனின், தென்மதுரையினின்று கபாடபுரத்திற்கும் அங்கிருந்து கூடன்மதுரைக்கும் அவர்கள்வந்தனரெனக்கூறுங்கூற்று ஒருசிறிதும்பொருந்தாதாம். இவ்விரண்டிலொன்று பொய்யார்தல்வேண்டும். களவியலுரைகாரர்வகுப்பாராதுகற்பனையே

பொய்யென்றுகொள்ளப்படுமென்பதில் இனி ஐயமுண்டாகாது. இளங்கோவடிகளதுகாலத்துக் கடல்கொண்டமதுரைக்கதை வழக்கிலிருந்து அவருமதனையேற்றுக்கொண்டிருப்பின் இங்ஙனம் அவர் கூறுதற்கே யிடமில்லையென்பது தெளிவாகும். அவர் கூடன்மதுரையைப் பாண்டியர்களது பழைய ராஜதானியென்றுநினைத்திராவிட்டால் மேலே குறித்தபடி அதனைப் 'பழவிறன்மூதூர்' என்று ஒருகாலுங் கூறியிருக்கமாட்டார். அங்ஙனமாயின் மீனாக்ஷிசுந்தரேசுவரர்கலியாணம்முதலிய பலகதைகளும் கூடன்மதுரையில் நடந்தது இடைச்சங்ககாலத்திற்குப் பின்னரேயென்று சொல்லவேண்டியும் வரும்.

மதுரைக்காஞ்சியில் மாங்குடிமருதனார் பின்கண்டவாறுகூறியுள்ளார்:—

"தென்னவர்ப் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந,"

அதற்குச் "(சுந்தர)பாண்டியனென்னும் பெயரையுடைய, கிட்டுதற்கரிய வலியினையுடைய, யாவருக்கும் முன்னவரான சிவபெருமானது வமிசத்தில்வந்த, பக்கமலையிலேவிழுகின்ற அருவியினையுடைய பொதியின்மலையையுரிமையாகக்கொண்ட ஒப்பற்றவனே," என்னும்பொருள் வெளிப்படையாம். இதனாலே பிந்தியபாண்டியர்கள் சிவபெருமானுடைய வமிசத்தினரென்று சொல்லப்படுவது மமையும். பாண்டியவமிசத்தலைவராயுள்ள இவரே கூடன்மதுரையிலிருந்தனரென்றால் அவருக்குப் பிந்தியவர்கள் கடல்கொண்டமதுரை கபாடபுரங்களினின்று இங்கு வந்தனரென்பது எப்படிப்பொருந்தும்?

இதுநிற்க, முதலூழியிறுதிக்கண் நிகழ்ந்ததென அடியார்க்குநல்லார்கூறுங்கூற்றினைச் சற்று ஆராய்வாம்:—காவதமென்பதனை உலக வழக்கப்படி 10 மைல்தூரமெனக்கொள்ளின் 700 காவதமும் 7000 மைலாகின்றது. இஃதே குமரியாற்றிற்கும் பஃறுளியாற்றிற்குமிடையிற்கண்டதூரம், அல்லது நாற்பத்தொன்பது தமிழ்நாடுகளின் தென்வடற்பரப்பாகின்றது. குமரிக்கும் தென்றுருவத்திற்குமுள்ளதூரமோ 6900 மைலுக்குங் குறைந்துள்ளது. நாற்பத்தொன்பது தமிழ்நாடுகள் மட்டுமே தென்றுருவத்திற்கப்பால் நூறுமைல்தூரத்திற்குமேல் வியாபித்திருத்தல்வேண்டும்; அதற்கப்பால் தென்பாலிமுகமென்னும்நாடும்

அதற்குமப்பாற் கடலுமிருந்திருத்தல்வேண்டுமென்பதாயிற்று. இனிக் குமரிக்கும் ஆசியாகண்டத்தின்வடவெல்லையான உத்தரமகாசமுத்திரத் திற்குமுள்ள தூரம் 5000 மைலுக்குங் குறைந்தது. நாற்பத்தொன்பது தமிழ்நாடுகள்மாத்திரமே அதனினும் 2000 மைலுக்குமேற்பட்ட தென் வடலளவுபெற்றிருந்தனவென்று சொல்லப்படுகிறது. இதனுடன் தென் பாலிமுகத்தினளவையும் சேர்ப்போமாயின் இன்னும்பெருகுமன்றே! இப்பரதகண்டத்திலுள்ள சகலபாஷைகளும்வழங்கப்பெற்ற நிலங் களைச்சேர்த்துத் தென்வடலளவுநோக்கின், அது நாற்பத்தொன்பது தமிழ்நாடுகளினளவிற்கு நான்கிலொருபகுதிதா னிருத்தல்கூடும். இந் தியதேசத்தையாண்ட சக்கரவர்த்திகளுள் ஒருவரேனும் நாற்பத் தொன்பதுநாடுகளினளவிற் பாதி அல்லது மூன்றிலொருபங்குநில முடையவராய் எக்காலத்து மிருந்திலர். பாண்டியனுக்குக் கடல்கொள் ளப்படாத நிலம் தென்வடல் 250 மைலுக்குமே யில்லை.

பூசாஸ்திரம்வல்லோர் மிகப்பழையகாலத்திற் குமரிக்குத்தெற்கே லெமூரியாகண்டமென்னும்பூமியிருந்து கடல்கொண்டதாகச் சொல் கின்றனர். மேற்கண்ட நாற்பத்தொன்பதுதமிழ்நாடுகளும் அதைச் சேர்ந்தனவாயிருந்திருக்கவேண்டுமென்பது நம்மவர் பலரது அபிப்பி ராயமாம். லெமூரியாகண்டம் முழுதுமிருந்தகாலத்தும் தென்வடலிற் குமரியிலிருந்து 7000 மைல்தூரமிருந்ததென்றுசொல்லுவார் ஒரு வரையுங்காணேம். நாற்பத்தொன்பது தமிழ்நாடுகளுக்குக் கொடுத் திருக்குமளவுள்ள நிலம் குமரிக்குத்தெற்கில் எப்பொழுதாவது இருந்த தாகச் சொல்லுவதற்கிடமேயில்லை. லெமூரியாகண்டத்தைக் கடல் கொண்டதாகப் பூசாஸ்திரம்வல்லோர்சொல்வது பல லக்ஷம்வருஷங்க ளுக்குமுன்னரேயாகும். 'Geology of India' என்னும் நூலில் H. B. Medlicott என்பவரும் W. T. Blandford என்பவரும் பின் வருமாறுகூறுகின்றனர்.

"Naturalists have before now appealed to a former land area stretching across what is now the Indian Ocean, to explain certain relationships between the living fauna of the Indian Peninsula on the one hand, and South Africa and Madagascar on the other, and the name "Lemuria" given to this suppositious continent, is familiar to many." (P. 209.)

"We see then that throughout the later part of the palæozoic and the whole of the Mesozoic era, there was continuous stretch of dry land over what is now the Indian Ocean, which finally broke up and sank beneath the sea in the tertiary period." (P. 211.)

"It is probable that at the close of the cretaceous or the commencement of the eocene period the great Indo-African continent was finally broken up, and all but *the remnants in India* and South Africa sunk finally beneath the sea." (P. 494.)

இதுதவிர 'Lost Lemuria' என்னும்புத்தகத்திற் பின்கண்டவை கள் காணப்படுகின்றன:—

"Note. Dismemberment of Lemuria is said to have taken place before the beginning of eocene age." (P. 8.)

"India, South Africa, and Australia were connected by an Indo-Oceanic continent in the Permian epoch and the former two countries remained connected to the end of the Miocene period." (P. 10.)

லெமூரியாகண்டம் கடல்கொள்ளப்பட்டு வெகுகாலமானபின்னர் ஐரோப்பா அமெரிக்காகண்டங்களுக்கிடையில் இப்பொழுது அட்லான் டிக் சமுத்திரமிருக்குமிடத்தில் அட்லான்டிஸ் (Atlantis) என்றொரு கண்டமுண்டாகி அழிந்துவிட்டது. அதைப்பற்றியும் லெமூரியாவைப் பற்றியும் பின்கண்டவாறு Lost Lemuria என்னும் புத்தகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது:—

"A period between 4 and 5 million years probably represents the life of the continent of Atlantis. But in the case of Lemuria no dates can be stated even with approximate accuracy." (P. 13.)

அட்லான்டிஸ் என்னுங்கண்டத்தைக் கடல்கொண்டபின்னர் அதில் எஞ்சியிருந்த Poseidonis என்னுந்தீவைக் கி. மு. 9564-ம் வருஷத்திற் கடல்கொண்டதாகச் சாஸ்திரக்ஞர்களாற் சொல்லப் படுகிறது. மேற்கண்டவைகளால் லெமூரியாவைக் கடல்கொண்டது

லக்ஷக்கணக்கானவருஷங்களுக்குமுன்னரென்றும், ஏதாவது இந்தியாவையொட்டிச் சொற்பநிலம் முதற்கடல்கோளிற் சேராமலிருந்திருக்கலாமென்றும் ஏற்படும். லெமூரியாகண்டம் மூழ்கியபின்னர் அவ்விடத்தில் வேறுநிலமிருந்ததில்லையென்று தெரிகிறது. இடைச்சங்கம் 3700 வருஷமும் கடைச்சங்கம் 1850 வருஷமும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இரண்டுஞ்சேர்ந்து 5550 வருஷந்தானாகிறது. இடைச்சங்கமிரீஇய முடத்திருமாறனென்னும் பாண்டியனே கடைச்சங்கமிரீஇய முதற்பாண்டியனெனச் சொல்லப்படுவதால் அவ்விரண்டுசங்கங்களுக்குமிடையில் அதிககாலம் நிகழ்ந்ததற்கிடமில்லை. தலைச்சங்கத்திற்குமிடைச்சங்கத்திற்குமிடை நிகழ்ந்தகாலத்தளவு தெரியவில்லை. சுமார் நாலாயிரம் அல்லது ஐயாயிரம் வருஷமென்று வைத்துக்கொண்டாலும் நாற்பத்தொன்பது தமிழ்நாட்டுக்கடல்கோள் பதினாயிரம்வருஷத்திற்கு முன்னர் நிகழ்ந்ததாகும். அப்பொழுதோ லெமூரியாகண்டமிருந்ததென்று சொல்வதற்கிடமில்லை. 700 காவதவாறு தென்வடலளவுள்ள தமிழ்நாடுகளிக்காலத்திலிருந்ததென்றுசொல்லுவது பொய்யென்றேற்படும். அந்தக்கண்டத்தில் எஞ்சியிருந்த சொற்பநாடு சில வருஷங்களுக்குமுன்னர்க் கடல்கொள்ளப்பட்டிருக்கலாம். அது கலித்தொகையிலும்சிலப்பதிகாரத்திலுங்கூறிய கடல்கோளாயிருத்தல்வேண்டும். இந்தியாவின்கடற்கரையோரப்புறங்களிற் சிறிதுதூரம் ஆங்காங்குக் கடல்கொள்ளப்பட்டதாகச் சரித்திரவாயிலாய் நாமறிகின்றோம். அவையெல்லாம் அடியார்க்குநல்லார்கூறிய நாற்பத்தொன்பதுநாட்டுக் கடல்கோளாக ஒருபோதுமாகாதென்க.

மேலும் முதலூழியிறுதிக்கடல்கோளைப்பற்றித் ‘தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின்காறுங்கடல்கொண்டொழிதலால்’ என்று அடியார்க்குநல்லார்கூறியுள்ளார். இதனாற் குமரியாற்றின் வடகரைவரையிற் கடல்கோள் கூறப்பட்டதாயிற்று. அக்கடல்கோளுக்குப்பிந்தியுள்ள கபாடபுரமெங்கிருந்தது? குமரியாற்றிற்குத்தெற்கிலா? வடக்கிலா? தெற்கிலிருந்ததென்பதற்கோ அங்கு நாடேயில்லை. வடக்கிலிருந்ததென்பது அவரதுகொள்கைக்கு விரோதிப்பதோடு குமரியாற்றிற்கு வடக்கிலுள்ளநாட்டுக்கு ஒருபோதுங் கடல்கோளில்லை; ஆகவே கபாடபுரத்தைக் கடல்கொண்டதென்பது பொய்யாய்முடியும். களவியலுரைகாரர்கூறியபடி மதுரை கபாடபுரமிரண்டிற்கு மொருகடல்கோள்கூறினால் இச்சங்கடம் நேரிடாது.

மகாபாரதயுத்தகாலமும் தலைச்சங்ககாலமும் ஒன்றென்று பல பண்டிதர்களாற் சொல்லப்பட்டிருக்கிறது. தலைச்சங்கப்புலவராகிய முரஞ்சியூர் முடிநாகராயர் பாரதயுத்தத்திற் படைக்குணவளித்த பெருஞ்சோற்றுதியனை முன்னிலைப்படுத்துப்பாடியிருப்பது முதலிய காரணங்கள் அதற்குக் கூறப்படுகின்றன. அதனைப் பிசகென்று சொல்லுவதற்கிடமில்லை. பாரதயுத்தகாலத்திற்குமுன்னரே அர்ஜுனன் தென்றிசைநோக்கிச்சென்று மணலூரபுரத்திற் சித்திராங்கதையென்னும் பாண்டியராஜகுமாரத்தியைமணந்து பதின்மூன்றுமாதம் ஆங் கவளுடன்வசித்துப் பப்புருவாகனனென்னும் புத்திரனைப்பெற்ற சரித்திரத்தை நமதுநாட்டு மகாபாரதம் ஆதிபருவத்திலடங்கிய அர்ஜுனன்வனவாசபருவத்திற்காணலாம். சபாபருவத்திலடங்கிய திக்குவிஜயபருவத்திற் சகதேவன் தென்றிசைநோக்கிச்சென்று பல அரசர்களையுந் தன்வசப்படுத்துக்கொண்டு பாண்டியனுடடைந்ததும் அவ்விடத்துப் பாண்டியனுஞ் சித்திராங்கதையும் அவனையாதரித்து இரத்தினமுதலிய கொடுத்தனவற்றைப்பெற்று அவற்றுட் பலவற்றையும் தன் தமையன் புத்திரனாகிய பப்புருவாகனனுக்குக்கொடுத்துவிட்டுத் தெற்கே பொதியமலைநோக்கிச்சென்று அதனைவலஞ்செய்து தாமிரபருணியைக்கடந்து சமுத்திரதீரத்தையடைந்து இலங்கைக்குக் கடோற்கசனையனுப்பியது முதலியகதைகள் காணப்படும். அக்காலத்திற் பாண்டியர்கள் தாமிரபருணிக்குவெகுதூரம் வடக்கில்வசித்ததாகத் தெளிவாய்த்தெரிகிறது. ஆகவே அக்காலத்திற் பாண்டியர்கள் குமரியாற்றிற்குத் தெற்கில் வசித்தனரென்னுங்கதை பொய்யாகத்தானேயிருத்தல்வேண்டும்.

நாற்பத்தொன்பதுதமிழ்நாடுகளைக் கடல்கொண்டது காலக்கிரமத்திலா, திடும்பிரவேசத்தாலா? முன்னையதானால் அக்காலத்துத் தமிழ்நூல்கள்முதலியன அதனாலழிந்துபோயினவென்று கொள்ளுதல் கூடாது. திடும்பிரவேசத்தாலென்றாற் பாண்டியவமிசமும் சங்கப்புலவர்களும் இரண்டுகடல்கோள்களுக்கும் தப்பியிருந்தனரென்று கொள்ளுதல் இயையுடைத்தன்று. கூடன்மதுரை கபாடபுரமழிந்த பின்னருண்டானதென்றாற் குமரிக்குத் தெற்கிலிருந்த மதுரைக்குத் ‘தென்மதுரை’ யென்னும்பெயர் எப்பொழுது யாரால் எதற்காகக் கொடுக்கப்பட்டது? களவியலுரைக்குமுந்திய நூல்களில் அதனைத் ‘தென்மதுரை’யென்றாவது கூடன்மதுரையை ‘வடமதுரை’யென்றாவது கூறப்பட்டிருக்கிறதா?

கடைச்சங்கம் 1850யாண்டு இருந்ததென்று சொல்லப்படுகிறது. கடைச்சங்கத்து இறுதிக்காலம் கி. பி. 2-ம் நூற்றாண்டென்று கொண்டால் அச்சங்கம் கி. மு. 17-ம் நூற்றாண்டில் துடங்கியிருத்தல்வேண்டும். மகாபாரதயுத்தம் நடந்தகாலம் வாயு, மத்ஸ்ய, விஷ்ணு, பாகவத, புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கிறபடி கணக்கிட்டால், கி. மு. 15-ம் நூற்றாண்டாகும். விளந்தை கோபாலையாவர்கள் 'The chronology of Ancient India' என்னும் ஓர் புத்தகம் வெளியிட்டிருக்கின்றார். அது பல பண்டிதர்களாலும் நன்குமதிக்கப்படுகின்றது. ஐயரவர்கள் பலகாரணங்களை விரிவாய்க்காட்டிப் பாரதயுத்தகாலம் கி. மு. 12-ம் நூற்றாண்டென்று நாட்டியிருக்கின்றார். எவ்வகையாய்ப் பார்த்தாலும் கடைச்சங்கந்துடங்கிப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர்ப் பாரதயுத்தம் நிகழ்ந்ததெனலமையும். முரஞ்சியூர் முடிநாகராயர் பாரதயுத்தகாலத்திலிருந்தவரென்றால் அவர் தலைச்சங்கப்புலவரா? கடைச்சங்கப்புலவரா?

நாற்பத்தொன்பது தமிழ்நாட்டுக்கதையை ஏற்றுக்கொண்டால் இவற்றைப்போலின்னு மநேக அசம்பாவிதங்களுக்குப் பதில் கூற வேண்டிவரும். மேற்காட்டியவை புத்திமான்களுக்குப்போதுமென்று நினைத்து இம்மட்டி லிதை நிறுத்துகிறேன்.

கபாடபுரமிருந்ததென்பதற்காதாரம் வான்மீகிபகவானியற்றியுள்ள ராமாயணத்திற் காணப்படுகிறதென்று சிலர் எழுதியுள்ளார். அவர்கள் காட்டுவது கிஷ்கிந்தாகாண்டத்து 41-வது சருக்கத்திற் சுக்கிரீவன் சீதாபிராட்டியையுந்தேடும்படி வானரர்களையனுப்பும்போது இன்ன இன்னவிடத்தில் தேடுங்களென்று விவரமாய்க்கூறுமிடத்துக்கண்ட பின்வரும் சுலோகமாம்:—

"ததோ ஹேமமயம் திவ்யம் முக்தாமணிவிபூஷிதம்।
யுக்தம் கவாடம் பாண்ட்யாநாம் கதா த்ரக்ஷ்யத வாநரா:॥"

தாமிரபருணிநதியைக்கடந்துசெல்லுங்கள், "பின்னர், வானரர்காள்! சென்று பொன்மயமானதும் முத்துமணிகளாலலங்கரிக்கப்பெற்றதும் சேர்க்கப்பட்டிருப்பதுமான பாண்டியரது கவாடத்தை (கதவை)க்காண்பீர்கள்."—கதவென்று பொருள்படும் பதம் ராமாயணத்தில் 'கவாடம்' என்றிருக்கிறது. ராமாயணத்திற்குள்ள பலவியாக்கியானங்களுள் தீர்த்தீயத்தில்—"கவாடம்—பாண்டியனது நகரத்துவாரக் கதவு" என்று எழுதப்பட்டிருக்கிறது; திலகத்தில்—மூலத்தில் 'யுக்தம்' என்றிருக்கும் பதத்திற்கு "நகரத்தின் கோட்டைச்சுவரிற் சேர்க்கப்பட்டிருக்கிற" என்பது பொருளென்று கண்டிருக்கிறது; கோவிந்தராஜீயத்தில் "கவாடம், இதனாலே நகரங் குறிக்கப்படுகிறது" என்று கண்டிருக்கிறது. இதனைத்தவறுபடப் பொருள்செய்து ராமாயணத்திற் கபாடபுரத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறதென்று கூறுகின்றனர். கதவொன்று காணப்படுமென்றால் எதனுடைய கதவென்னும் வினாவெழும்; நகரத்தின் கதவென்பது அதற்கு விடையென்பதைக்காட்டக் கோவிந்தராஜர் மேற்கண்டவாறு எழுதினார். கவாடமென்னும் பதம் ஒரு நகரத்தின் பெயராயிருப்பின் அவ்வாறு தெளிவாயன்றோ எழுதியிருப்பார். கவாடமென்னும் பதம் குறிக்கிறதென்றால் ஒருபொருள்வாயிலாய் மற்றொருபொருளைக்காட்டுகிறதென்றல்லவோ கொள்ளப்படும். கோட்டைக்கதவுகோட்டைக்குள் அடங்கிய நகரமொன்றுள்ளதென்று குறிப்பிக்காதோ? கவாடத்தைக் கபாடமெனத்திரித்துப் புரமென்னுஞ்சொல்லொன்றைச்சேர்த்துக் கபாடபுரமென்றுபண்ணுதற்கு ராமாயணத்திலிடமிருக்கிறதென்றால் அது வியப்பாயிருக்கிறது.

மேற்கண்டவற்றையெல்லாம் நன்குகவனித்தாற் குமரிக்குத்தெற்கிற் சொற்பநாடு ஒருகாலத்திலிருந்ததென்றும், அதனை ஒருகாலத்திற் கடல்கொண்டதென்றும், அப்படி யதனைக் கடல்கொள்வதற்குமுன்னராவது பின்னராவது பழையதமிழ்ப்புலவர்கள் அதனைத் தமிழ்நாடென்றுகொண்டதில்லையென்றும், கி. பி. 9-ம் அல்லது 10-ம் நூற்றாண்டிற் களவியலுரையெழுதிய ஊர்பேர்தெரியாதவொருவர் கடல்கொண்டநாட்டைத் தமிழ்நாடெனநினைத்துத் தலையிடைச்சங்கங்களை அதில் தாபித்தாரென்றும், பிறகு அந்தக்கதை பல கூட்டையுந் திரிபையுமடைந்து இப்பொழுதிருக்கும்நிலைமைக்குவந்திருக்கிறதென்றும் நினைக்கவேண்டியிருக்கிறது. நக்கீரனார்பெயரைக் களவியலுரைக்கேற்றியதனாற் பலரும் மயங்க இடமாயிற்று.

ஆனால், தலையிடைச்சங்கங்களிருந்தனவல்லவோவென்றால் அவை அந்தப்பெயர்களுடன் கடல்கொண்டதாகச்சொல்லப்படுகிற மதுரை கபாடபுரங்களிலிருந்தனவென்று நினைக்க இடமில்லை. குமரிக்குவடக்கிற் பாண்டியர்களிருந்தவிடத்துப் பல நூற்றாண்டுகள் சங்கமிருந்துவந்ததெனத் தெரிகிறது. அதைக் கடைசியாயிருந்த சங்கப்புலவர்களும்

ஓரே சங்கமாகக்கொண்டனரென்றும், தலையிடைகடையென்று பிரிக்க வில்லையென்றும் நினைப்பதற்கு ஆதாரமிருக்கிறது. தலைச்சங்கப்புலவர்க ளென்றும் இடைச்சங்கப்புலவர்களென்றும் இப்போது கூறப்படுகிற வர்களாலியற்றப்பட்ட செய்யுள்களும் அந்தப்பேதமின்றியே (கடைச் சங்ககாலத்தில் தொகுக்கப்பட்ட) அகநானூறு புறநானூறு முதலிய நூல்களிற் கிடைக்கின்றன. நெடுநாள் சங்கமிருந்ததென்றால் தலைக் காலத்திருந்த புலவர்களும் இடைக்காலத்திருந்தபுலவர்களும் கடைக் காலத்திருந்த புலவர்களுமென்று விவகரிப்பது அவசியமாயிருக்கலாம். அதற்காகச் சங்கத்தைத் தலை இடை கடையென்று மூன்றாகப்பிரித் தல் வேண்டியதேயில்லை.

(இன்னும்வரும்.)

பண்டித S. சுப்பிரமணியசாஸ்திரி,

தஞ்சை.

ஸ்ரீ:

பழமொழிமுதற்பாட்டும் சிலபிழைதிருத்தமும்.

இப்பொழுது மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்றும் பழமொழி மூலமுமுரையும் செந்தமிழ்ப்பிரசுரமாய் வெளியிடப்பெற்றுவருவதில் அதன் முதற்பாட்டுப் பிரதிகளிற் காணப்படாமையாற் கிடைத்த பொழுது எழுதிக்கொள்ளும்படி அதற்கு இடம்விட்டுப் பதிக்கப்பட் டிருப்பது செந்தமிழ்நேயர்பலர்க்குந் தெரிந்தவிஷயம். அப்பாட்டு,மஹா மஹோபாத்யாயர் ஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்கள் பழையநன்னூ லுரையுண் மேற்கோளாகக்காட்டப்பட்டிருப்பதாய்ச்சொல்லத் தாம் தெரிந்ததாக ஸேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமத்-ரா. ராகவையங்கா ரவர்கள்சொல்ல நானறிந்து மிகுந்தசந்தோஷத்தையடைந்தேன். இவ் வாறு யானதையறிதற்குக் காரணபூதரான ஐயரவர்களுக்கும் ஐயங்கா ரவர்களுக்கும் நன்றியறிதலுடையனாய் என்மனப்பூர்வமானவந்தனத் தைச் செலுத்துகின்றேன்.

அப்பாட்டு, நன்னூலின்பழையவுரையுள், பொதுவியல் 67-ஆஞ் சூத்திரத்தினுரைமேற்கோளாகக்காட்டப்பட்டது. அதுவருமாறு:—

அரிதவித் தாசின் றுணர்ந்தவன் பாதம்
விரிகடல் சூழ்ந்த வியன்கண்மா ஞாலத்
துரியதனிற் கண்டுணர்ந்தா ரோக்கமே போலப்
பெரியத னாவி பெரிது. என்பதாம்.

இது பழமொழியின் முதற்பாட்டுரையொடுபொருந்திய சொற் றொடர்களுடையதாய்க் காணப்படுவதாற் பழமொழியின் முதற்பாட் டென்றே கொள்ளத்தக்கதாயுள்ளது. இதனுள், பெரியதனாவிபெரிது என்றது தேகபரிமாணமாத்மா என்னும் ஜைனமதக்கொள்கையைத் தழுவியுள்ளது.

முக்கியமான சிலபிழைதிருத்தங்கள்.

முதற்பாட்டுரையிற் கெடுத்தற்குரிய என்றிருப்பதைக் கெடுத்தற் குரிய எனவும், பெருடம்பினையுடையதாதலிற்பெரிதாயது என்றிருப்ப தைப் பேருடம்பினையுடையதனாவிபெரிதாயது எனவும், 5-ம்பக்கம் 30-ம்வரியில் [illegible] என்றிருப்பதை [illegible] என வும், 7-ம்பக்கம் முதல்வரியிற் பழமொமி என்றிருப்பதைப் பழமொழி எனவும், 16-ம்பக்கம் 28-ம்வரியில் இத்திதக்க என்றிருப்பதை இழித் தக்க எனவும், 50-ம்பக்கம் 5-ம்வரியில் நீர்க்காலாகியஓடையை என் றிருப்பதை நீர்க்காலாகியஓடைவிசேடத்தை எனவும்,20-ம்வரியில் நீமை முகமுரைக்கும் என்றிருப்பதைத் தீமைமனமுரைக்கும் எனவும், 55-ம் பக்கம் 28-ம்வரியில் யெரிக்க என்றிருப்பதை யெறிக்க எனவும், 99-ம் பக்கம் 14-ம்வரியில் ஒருகூறாகக்கோள்வதற்கும் என்றிருப்பதை ஒரு கூறாகக்கோடற்கும் எனவும், 120-ம்பக்கம் 6-ம்வரியில் உலகு என்றிருப்பதை அரிது எனவும், 125-ம்பக்கம் 20-ம்வரியில் என்றது வேண்டும்பகைவரை என்றிருப்பதை என்றது பகைவரை எனவும், 128-ம்பக்கம் 32-ம்வரியில் [illegible] என்றிருப்பதை [illegible] எனவும் 135-ம்பக்கம் 13-ம்வரியில் விளங்கினாய் என்றிருப்பதை விளங்கிழாய் எனவும் திருத்திக்கொள்க.

பத்திராதிபர்.

உ

பழமொழி.

பழமொழி என்பது பழைய நூல்களாகிய நாலடியார், நான்மணிக் கடிகை முதலிய பதினெண்கீழ்க்கணக்குக்களுள் ஒன்று. கணக்கு = நூல். இது நேரிசைவெண்பாவும் இன்னிசைவெண்பாவுமாக நானூறுவெண் பாக்களையுடையது; பண்டைக்காலப் பழமொழிகள் ஒவ்வொன்று பாக்கடோறும்வரலாற் பழமொழி என்னும் பெயர்த்தாயிற்று என்பர். "பண்டைப் பழமொழி நானூறும்" என்றுரைக்கும் பாட்டும் ஒன்றுண்டு. இதனை இயற்றினவர் ஆருகதராகிய முன்றுறையரையனார் என்பவர்.

வெண்பா.

பிண்டியி னீழற் பெருமா னடிவணங்கிப்
பண்டைப் பழமொழி நானூறும்—கொண்டினிதா
முன்றுறை மன்னவ னான்கடியுஞ் செய்தமைத்த
இன்றுறை வெண்பா விவை.

இதன்கண் "பெருத்தது பெரிது" "கன்றுசாவப் பால்கறப்பாரா" என்பன முதலியனவாகப் பற்பலபழமொழிகள் வருகின்றன. பழமொழி என்பதற்கு முன்னோர்வாக்கு என்னும்பொருளுங் கூறலாம். தென்மொழியில்வரும் பழமொழிகள்போல வடமொழியினும் நூலுரைகளிலே ஆங்காங்குவரும் தண்டாபூபிகநியாயம், காகதாலீய நியாயம், சதிபதிநியாயம் முதலிய நியாயங்களையும் பழமொழி என்று சிலர் கூறுவர். நியாயம், ஜநப்பிரவாதம், உலோகவாதம் என்பன வற்றிற்கு வடநூலார்சிலர் பழமொழி என்னும் பொருளுங் கூறுவர்.

இதன்கண்வருங்கவிகளுள்ளே சிலபலகவிகளைப் பரிசீலனஞ் செய்தேம். பெரும்பாலுந் திருட்டாந்தம் என்னும் அணியே ஆங்காங்கு வருகின்றது. உவமை, வேற்றுப்பொருள்வைப்பு என்னும் அணிகளுஞ் சிறுபான்மைவருகின்றன. திருட்டாந்தவணியை நச்சினார்க் கினியர் தொல்காப்பியத்திலே "வேறுபடவந்த உவமத்தோற்றம்" என்புழியமைப்பர்.

திருட்டாந்தவணி.

கண்பொன்றித் தம்மாலே நாட்டப்பட் டார்களைக்
கண்கண்ட குற்ற முளவெனினுங் காய்ந்திலார்
பண்கொண்ட தீஞ்சொற் பணைத்தோளா யாருளரோ
தங்கன்று சாக்கறப் பார்.

இங்கே "யாருளரோ தங்கன்றுசாக்கறப்பார்" என்பது திருட் டாந்தம். சாவக்கறப்பார் என்பது சாக்கறப்பார் என விகாரமாயிற்று. "சாவவென்மொழியீற்றுயிர்மெய்சாதலும்விதி" என்று நன்னூலா ரும் கூறுவர். இஃது இன்னிசைவெண்பா.

OFFICE OF THE REGISTRAR
3 - FEB 1
MADR

உவமையணி.

மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலும்
உப்பொழிதல் செல்லா வொலிகடல்போன் —மிக்க
இனநல நன்குடைய வாயினு மென்றும்
மனநல மாகாவாங் கீழ்.

இங்கே "மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலும்—உப்பொழிதல் செல்லா வொலிகடல்போல்" என்பது உவமை. இது நேரிசைவெண்பா.

வேற்றுப்பொருள்வைப்பணி.

அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுந் தீங்குறுதல் காண்டுமாற்—பொங்கி
அறைப்பா யருவி யணிமலை நாட
உறற்பால யார்க்கு முறும்.

இங்கே "உறற்பால யார்க்கு முறும்" என்பது பொதுப்பொருள். இப்பொதுப்பொருளால் "திங்களுந் தீங்குறுதல்" என்னுஞ் சிறப்புப் பொருள் முடிக்கப்பட்டது. இதனை வேறணியாகக்கொள்வாருமுளர். நாலடியாரில்வரும் "அங்கண்விசும்பினகனிலாப்பாரிக்கும்" என்னும் அடிக்கும் இதன் முதலடிக்கும், மேலும் நாலடியாரில்வரும் "தம்மை யிகழ்வாரை" என்னுங் கவியின் இறுதியடியாகிய "உறற்பால யார்க்கு முறும்" என்னும் அடிக்கும் இதன் இறுதியடிக்கும் வேறுபாடில்லை. மகடூஉ முன்னிலைகளும், "அலைகடற்றண்சேர்ப்ப" "கடற்சேர்ப்ப" என் பனபோலவரும் முன்னிலைகளும் நாலடியாரில்வரும் முன்னிலைகள் போன்றிருக்கின்றன. இதுவும் நேரிசைவெண்பா.

ஆஅ மெனக்கெளி தென்றுலக மாண்டவன்
மேஎந் துணையறியான் மிக்குநீர் பெய்திழந்தான்
தோஒ முடைய தொடங்குவார்க் கில்லையே
தாஅந் தரவாரா நோய்.

இங்கே "தோஒமுடைய தொடங்குவார்க்கில்லையே—தாஅந் தரவாரா நோய்" என்பது பொதுப்பொருள். இப்பொதுப்பொருளால் மாவலி தன்னுலகம் இழந்தான் என்னுஞ் சிறப்புப்பொருள் முடிக்கப் பட்டது. வேற்றுப்பொருள்வைப்பை வடநூலார் அர்த்தாந்தர நியாசம் என்பர்.

பெரும்பாலுந் திருட்டாந்தம் அணியமைத்து முடித்தலைக் கருதிப் பழமொழி என்னும் பெயரிட்டனரோ என்றும் எமக்கோர் ஐயப்பாடு தோன்றுகின்றது. திருட்ட + அந்தம் = திருட்டாந்தம். இது காணப்பட்டமுடிபு எனப் பொருள்படும். பழமொழிப்பொருளும் முன்னோராற் காணப்பட்ட முடிபுடைய பொருளாகும். உவமையணியுந் திருட்டாந்தவணியும் வேறன்று. வேற்றுப்பொருள்வைப்பின்கண் வைக்கும் பொதுப்பொருளும் பழமொழியாயே பெரும்பாலும் இருக்கும்.

இந்நூலின்கண்வரும் பழமொழி எனப்படுவனவற்றுள்ளும் பல அப்பொழுதைப் பழமொழிகள் என்றே கொள்ளற்பாலன. இப்பொழுது வழங்கும் பழமொழிகள்சிலவற்றை இறுதியிற்பெற்று இலாகவநடையில்முடியும்நூலும் ஒன்றுளது. அதன்பெயர் "பழமொழிவிளக்கம்"; தண்டலையார்சதகம் எனவும்படும். ஆக்கியோர் சாந்தலிங்கக்கவிராயர். இதன்கண், "கங்கையிலேமுழுகினாலும் பேய்ச்சுரைக்காய் நல்லசுரைக் காயாகாது" "காதவழிபேரில்லான் கழுதையோடொப்பன்" "பெற்ற தாய் பசித்திருக்கப் பிராமணபோசனஞ் செய்தல்" என்பன முதலியனவாகப் பல பழமொழிகள்வருகின்றன. சில காட்டுதும்.

பழமொழிவிளக்கம்.

சங்கையறப் படித்தாலுங் கேட்டாலும் பிறர்க்குறுதி தனைச்சொன் னாலும்
அங்கனுல கினிற்சிறியோர் தாமடங்கி நடந்துகதி யடைய மாட்டார்.
திங்களணி சடையாரே தண்டலையா ரேசொன்னேன் சிறிது காலம்
கங்கையிலே படிந்தாலும் பேய்ச்சுரைக்காய் நல்லசுரைக் காயா காதே.

ஓதரிய தண்டலையா ரடிபணிந்த நல்லவனென் றுலக மெல்லாம்
போதமிகப் பெயருடனே புகழ்படைத்து வாழ்பவனே புருட னல்லால்
ஈதலுட னிரக்கமின்றிப் பொன்காத்த பூதமென்ன விருந்தா லென்ன
காதவழி பேரில்லான் கழுதையோ டொப்பனெனக் கழற லாமே.

இப்பழமொழிவிளக்கம் நிற்க. இந்தப் பழமொழி என்னும் நூலிலே வருஞ் சொற்களும், சொற்றொடர்களும், கதைகளும், குறிப்புப் பொருள்களும் பெரும்பாலும் அரிதுணரற்பாலன. இங்கேவரும் புல்லம், அணல், புகா, ஈன் முதலிய சொற்கள் நிகண்டுநூல்களும், இலக்கியங்களும்நோக்கி உணரற்பாலன. கற்றடி சாக்கறப்பார் முதலியன இலக்கண நூல்கள்நோக்கி உணரற்பாலன. பலராமன்கதை,

இராவணன்கதை முதலியன பாரதராமாயணாதிகள் நோக்கி உணரற்பாலன. குறிப்புப்பொருள்களெல்லாம் பல நூல்கள் பரிசீலனஞ்செய்து உணரற்பாலன. புல்லம்-எருது. அணல்-மிடறு. புகா-சோறு. ஈன்-இவ்விடம். "ஈனோர்க்குரைப்பாம்" எனச் சீவகசிந்தாமணிகாருங் கூறுவர். கற்றடி-கன்றினடி.

பழைய நூலுரையாசிரியர் பலர் இப்பழமொழியிலிருந்து கவிகளுங் கவிப்பாகங்களுமாகத் தத்தம் உரைகளிலே பல உதாரணங்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அவைகளைச் சீவகசிந்தாமணியுரை, சிலப்பதிகாரவுரை முதலியனநோக்கியறிக.

இதற்குப் பழையவுரையும் ஒன்றுண்டு. அதனையுந் தழுவிக் கொண்டு குறிப்புரை ஒன்று இந்தச் செந்தமிழிலே பதினன்காந் தொகுதிதொடங்கிப் பாகம்பாகமாகவருகின்றது. இக்குறிப்புரை வடமொழி தென்மொழி நூல்களுக்கு இணக்கமும், தருக்க இலக்கண நுணுக்கமும், பெருக்கமும், பழமொழிகளும், பிறவுமுடையது. அதனை நாமும் வாசித்துவருகின்றோம். அதன்கண் வான்மீகம், நீதிசாரம், குவலயானந்தம் முதலியவாகச் சில வடமொழி உதாரணங்களும், சிந்தாமணி, கலித்தொகை, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களும், நாலடியார் நான்மணிக்கடிகை முதலிய நீதி நூல்களுமாகப் பல தென்மொழி உதாரணங்களும் ஆங்காங்குக்காட்டப்பட்டிருக்கின்றன. தொல்காப்பியச் சேனாவரையம், பரிமேலழகருரை முதலிய உரைச்சான்றுகளும் காட்டப்பட்டிருக்கின்றன. இவ்வுரை இலக்கியலக்கணங் கற்பவர்களுக்கும் நீதிகளைக் கற்பவர்களுக்கும் பெரிதும் பயன்கொடுக்கும்.

இதனை எழுதிப் பிரகடனஞ்செய்துவருவோர் செந்தமிழ்ப்பத்திராதிபர் ஸ்ரீமான். திரு. நாராயணையங்காரவர்கள். ஐயங்காரவர்கள் இவ்வாறாய உரைகளையும், தமிழ்வளர்ச்சிக்குரிய வேறுவிடயங்களையும் எழுதிப் பிரகடனஞ்செய்தல் செந்தமிழ்வளர்ச்சிக்குரியதேயாம். இறைவனும் அருள்புரிக.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

சுன்னாகம்.

சிவமயம்.

கோகழிவிளக்கம்.

புண்ணியபூமியாகிய நம் பரதகண்டத்திற் சைவமுதலிய வைதிகசமயங்கள்குன்றிச் சமண் பௌத்தமுதலிய புறச்சமயங்கள் மலிந்து தலையெடுத்தோங்குங்காலத்துத் திருவவதாரஞ்செய்து அங்ஙனம் குன்றிய சைவமுதலிய வைதிகசமயங்களை நிலைநிறுத்தினவர்களில், நம் ஸ்ரீ மணிவாசகப்பெருந்தகையாருமொருவர். இப்பெருமானை, இறைவன் "மதுரைமாநகரிற் குதிரைமாறியும், விண்பொரு முடிமிசை மண்பொறை சுமந்தும், நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டும்" தொண்டராகக்கொண்டமை யாவருமறிந்ததொன்றேயாம். இப்பெருமான் வைதிகசைவராகிய யாமெல்லாம் இறைவன் அடிப்புணையைச்சேர்ந்து பிறவிப் பெருங்கடல்நீந்தி உய்யும்வண்ணம் திருவாசகம், திருக்கோவையார் என்னும் அரும்பெருநூல்களைத் திருவாய்மலர்ந்தருளினர். இந்நூல்களின் அருமைபெருமைகளை நம் தமிழுலகம் நன்கறியுமாகலான் இவைகளைச் சிறப்பித்துக் கூறுதல் மிகையென விடுத்தேன்.

அவற்றுள், திருவாசகமென்னும் அரும்பெருநூலின் முதற்கண்ணுள்ள திருவகவலின்கண் ஒரு தொடர்மொழிக்கு அறிஞர்பலரும் பற்பலவிதமாகப் பொருள்கூறுகின்றனர். அதன் உண்மைப்பொருளைக் காணவேண்டுமென்னும் ஆசை எளியேனையும் பிடர்பிடித்துந்த, அதன்வயப்பட்டு என் அறிவின்சிறுமையையும், அந்நூலின்பெருமையையும் ஓராது, யானும் இதனை மேற்கொள்வேனாயினேன். இதனை யான் மேற்கோடல்,ஒரு நரி தன்வாலளவுகொண்டு கடலின் ஆழத்தைக் கண்டபேனெனக் கூறுவதையொத்து ஆன்றோர்பலர்க்கும் விடாநகைப்பைவிளைக்குமென்பது அடியேன்றுணிபு. இதுநிற்க.

அத்தொடர்மொழிதான் யாதோவென்னில், "கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க" என்பதேயாம். இத்தொடர்மொழிக்கு அறிஞர்பலரும் உரைக்கும் உரையுள் ஒருசாரார்,

கோகழி—திருவாவடுதுறையின்கண்ணே, ஆண்ட—(திருவடிசூட்டித்தீட்சைசெய்து) அடிமைகொண்ட, குருமணிதன்—பரமாசாரியனுடைய, தாள்வாழ்க—திருவடிவாழ்க, எனவும், மற்றொருசாரார்,

கோகழி—பெரிய (திருப்பெருந்) துறையிடத்து, ஆண்ட—(திருவடிசூட்டித்தீட்சைசெய்து). அடிமைகொண்ட, குருமணிதன்—பரமாசாரியனுடைய, தாள்வாழ்க—திருவடிவாழ்க, எனவும், பொருள்கூறுகின்றனர். இவ்விருசாராருள் முன்னையோரை இத்தொடர்மொழிக்குத் திருவாவடுதுறையைப் பொருளாகக்கோடற் கேதுவென்னையென வினவின் "கோகழி" என்பது வேறோர்தானத்தையும் வரைந்துசுட்டாது, திருவாவடுதுறையையே வரைந்துசுட்டல்வேண்டும்; ஏனெனின் கோ வென்பது பசுத்தன்மை; கழி யென்பது கழிந்தவிடமாம்; ஆதலால் அம்பிகைக்குப் பசுத்தன்மைநீங்கிய இடமாகிய அதனையே சுட்டவேண்டுமென விடை யிறுக்கின்றனர். இனி, மற்றொருசாராரை வினவின், அவர், அப்பெருமானோடு ஓர்இயைபுமில்லாத திருவாவடுதுறையை இத்தொடர்மொழிக்குப் பொருளாகக் கோடல் சிறிதும் ஏலாதாம்; ஏனெனில் ஸ்ரீ மணிவாசகப்பெருந்தகையை இறைவன் ஆட்கொண்ட முதற்றானம் திருப்பெருந்துறையாகலான், அத்தொடர்மொழி அதனையே வரைந்துசுட்டல்வேண்டும்; வேறொன்றை வரைந்துசுட்டுதல் பொருத்தமின்றாமென்கின்றனர். இவ்விருவர்கூற்றுள், முன்னையோர்கூற்று, பெயரொற்றுமையொன்றையேகொண்டு பொருள்கொள்ளுவதாகப் புலனாகின்றது. இத்தொடர்மொழியைத் திருவாய்மலர்ந்தருளிய நம்பெருந்தகையாரொடு யாதோரியைபும் நன்குபுலப்படுமாறின்றாமென்க. பின்னையோர்கூற்று, அப்பெருமானை ஆட்கொண்டமுதற்றானம் திருப்பெருந்துறையாதலான், அவ்வியைபுபற்றிக்கூறுவதாகப் புலனாகின்றது. அஃதொருவாறு பொருத்தமாகக் காணப்படினும் இத்தொடர்மொழி இவர்கூறும் பொருளைப்பயந்து நிற்கின்றதா? இன்றா? என்பதைப்பற்றியாய்தலொருதலையாமாகலானதனைப்பற்றிச் சிறிதாராய்வாம்.

கோ என்பது ஓரெழுத்தொருமொழி பலபொருளுணர்த்துமாயினும், இவர்கூறுஞ் சிறுமைக் கெதிர்மறையாகிய பெருமையென்னும் பண்புணர்த்திவருவதாக யாண்டும்புலப்படவில்லை. அச்சொல்

பாவைவழக்கினும், புலனெறிவழக்கினும், தலைமைப்பண்புணர்த்தி வருவதாகப் புலப்படுகின்றது. இப்பண்புபற்றியே ‘பெருங்கோப் பெண்டு’ ‘கோப்பெருஞ்சோழன்’ ‘கோநகரி’ முதலிய சொற்கள் எழுந்தனவென்க. இனி, கழியென்பதற்கு “கழியென்ப மிகுதி காயல் கானலுப் பளமென்றுரும்” என்று காணப்படுகின்றனவேயன்றி, துறையென்னும்பொருள் காணப்படவில்லை. இனி, இவர் ‘கழி’ யென்பது ஆகுபெயராய்த் துறையையுணர்த்திற்றென்று கூறுவாராயின், வடமொழிநிகண்டுகளினும், தமிழ்நிகண்டுகளினும், ஆகுபெயர்களையெல்லா மியற்பெயர்போல ஆசிரியர்கள் எடுத்தோதியிருத்தலான் இதனையும எடுத்தோதியிருக்கவேண்டும். அங்ஙனமோதாமையான் ஆகுபெயரெனக்கோடலு மேலாதென்க. இனி, இவ ராகுபெயர்களையெல்லாம் நிகண்டுகளில் எடுத்தோதவேண்டுவது நியமமின்று, ஆதலான், “கழி”யென்ப தாகுபெயராய்த் துறையையே உணர்த்திற்றென்றுகோடுமென்பாராயின், இத்தொடர்மொழியைத் திருவாய்மலர்ந்தருளிய போதவூர்மேவிய வாதவூரடிகள் இவர் கூறியாங்குக் ‘கோகழியே’ திருப்பெருந்துறையென்று கொண்டனரா? கோகழிவேறு, திருப்பெருந்துறைவேறு, என்று கொண்டனரா? என்று நோக்குவோமாயின் ‘பண்டாயநான்மறை’ என்னுந் திருப்பதிகத்துள்,

“நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
வெண்ணி யெழுகோ கழிக்கரசைப்—பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண்”

என்னுந்திருப்பாட்டில், திருப்பெருந்துறை வேறு; கோகழி வேறு; எனக்கொண்டிருப்பது,—இத்திருப்பாட்டினை “உத்தரகோசமங்கை மன்னியிருந்தானை, கோகழிக்கரசை நம்மிடர்கள் போயகல, பெருந்துறையை நண்ணிக்காண்” எனக் கொண்டுகூட்டின் வெள்ளிடைவிலங்கலாமென்க. இதனும் கழி யென்பது ஆகு பெயராய்த் துறையை உணர்த்திற்றெனப் தொடர்மொழியும் பொருத்தமில் கூற்றேயாமென்க.

இனி, இத்தொடர்மொழிக்கு வேறு நூல்களை ஆதாரமாகக்கொண்டு பொருள்காணாது, நம்பெருந்தகையார் திருவாக்கைக்கொண்டே பொருள்காண்டல் மிக்கவலியுடைத்தாமாகலின், அதனைக்கொண்டே

அத்தொடர்மொழிப்பொருளை நிறுவுகின்றேன். நம் பெருந்தகையார் சிரியதிருக்கோவையாரில்,

“சங்கந்தருமுத்தியாம்பெறவான்கழ் தான்கெழுமிப்
பொங்கும்புனற்கங்கைதாங்கிப்பொலிகலிப்பாறலவு
துங்கமலிதலையேந்தலினேந்திழைதொல்லைப்பன்மா
வங்கமலிகலிநீர்தில்லைவானவனேர்வருமே”

என்னுந்திருப்பாட்டில் ‘கோகழி’ யென்பதனையே ‘வான்கழி’ யெனக் கூறியிருப்பதாகப்புலனாகின்றது. அத்திருப்பாட்டிற் குறைகண்ட நல்லறிவுடைய தொல்பேராசிரியராகிய பேராசிரியர், இப்பகுதிக்கு இருவிதமாகப் பொருள்கண்டிருக்கின்றனர். யாங்ஙனமெனின், வான்கழி தான்கெழுமி—ஆகாயத்தைக்கடந்துநின்ற தான் ஒரு வடிவு கொண்டுபொருந்தியெனக்கொண்டு வான்கழியென்பது சிவலோகமெனினும்பொருந்துமென்று அமைதிகூறலின், தான் கெழுமி யென்பதற்கு அச்சிவலோகத்துத் தானொரு வடிவுகொண்டு அதனிடத்துப்பொருந்தியெனவும் பொருள்கோடலாசிரியர்துணிபாமென்க. கோ வென்பது ஆகாயத்தின் பரியாயப்பெயராகலான் ‘வான்கழி’ யென்பதனையே நம்பெருந்தகையார் ‘கோகழி’ எனக் கூறினாரென்க. பேராசிரியர் ‘வான்கழி’ யென்பதற்குச் சிவலோகமெனப் பொருள்கோடலின், “கோகழியாண்ட குருமணிதன் றாள்வாழ்க” என்பதற்கும் சிவலோகத்தையாண்ட பரமாசாரியன் திருவடிவாழ்கஎனப் பொருள்கோடலே பொருத்தமுடைத்தாம் என்க. அன்றியும், நம்பெருந்தகையார் ‘செல்வர் சிவபுரத்துள்ளார்’ என்றும், ‘சிட்டனே சிவலோகனே’ என்றும், “சிவலோகநாதனை வரக்கூவாய் குயிலே” என்றும் கூறியதூஉம் இதனை வலியுறுத்துமென்க. இங்ஙனம் பரியாயப்பெயராற் கூறுதல் பண்டையார்வழக்காமென்பது, அத்தினபுரியைக் “குருதிக்கோட்டுக் குஞ்சரநகரம்” என்றும், விளம்பழத்திற்கு வரும் யானைநோயினைத் “தூம்புடைத்துளைக்கைவேழம்” என்றும் கூறியிருத்தலான் இனிதுபுலனாமென்க.

[illegible]சாரியார்,
உபாத்தியாயர்,
தமிழ்ச்சங்கக்கலாசாலை,
மதுரை.

உ

பாண்டியன்மாகீர்த்தி.

தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனாரியற்றியுள்ள சிறப்புப்பாயிரத்தினிடையில் "நிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்து" எனக் கண்டிருக்கிறது. இதனால் 'நிலந்தருதிருவிற்பாண்டியன்' என்னும் இயற்பெயருடையானோர் தென்னவனது அவைக்கண்ணே தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டதென்பது வெளிப்படை. ஆயினும் அதற்கு முதன்முதலில் உரையெழுதிய இளம்பூரணவடிகள் "மாற்றாரதுநிலத்தினைத் தன்கீழ்வாழ்வார்க்குக் கொண்டுகொடுக்கும் போர்த்திருவினையுடைய பாண்டியன்மாகீர்த்தியது அவைக்கண்ணே" என வரைந்துள்ளார். இவரது கருத்துப்படி அப்பாண்டியனது இயற்பெயர் 'மாகீர்த்தி' யென்பதாயிற்று. அங்ஙனமன்றெனின் அவர் 'நிலந்தருதிருவின்' என்பதனைப் பாண்டியன்பெயருக்கு அடைமொழியாகக் கொள்ளச் சிறிது மிடமில்லையென்பது. அன்றியும் முற்காலத்துப் பாண்டியர்களின் இயற்பெயர்களெல்லாம் பழமையான தமிழ்நூல்களிலே தமிழ்ச்சொற்களாகவே வழங்கப்பெற்றிருக்க, அவனொருவனுக்கு மட்டிலும், 'மாகீர்த்தி' யென்னும் பெயரை அவ்வுரையாசிரியர் ஏனோ கொண்டனரென்பது இதுகாறும் யாருக்கும் விளங்கப்பெற்றிலது. இவ்வுரையை எழுதும்போது அவரது மனக்கண்முன்னர் "நல்வேள்வித் துறைபோகிய - தொல்லாணை நல்லாசிரியர் - புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பி - னிலந்தரு திருவி னெடியோன் போல-வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோர்-பலர்வாய்ப் புகரறு சிறப்பிற் றோன்றி" என்ற அடிகள் நிற்கப்பெற்றிருப்பின் அவருக்கு இங்ஙனம் உரைகூறத்தோன்றியிராது. அவ்வடிகளோ பாண்டியன்நெடுஞ்செழியனை மாங்குடிமருதனார்பாடிய மதுரைக்காஞ்சியிலுள்ளன. அவற்றைப் பிற்றுரையினுதவியின்றி உற்றுப்பார்க்கு மாராய்ச்சிவல்லோருக்குத் தொல்காப்பியத்தைப் புலப்படுத்திய புகழ்சால்சிறப்பின் (எனின் மாகீர்த்தியனான) நிலந்தருதிருவிற்பாண்டியனையே அவை குறிக்கின்றனவென்று தெற்றெனவிளங்கும். ஆங்குப் பாண்டியனென்னாது 'நெடியோன்' என்றதென்னையெனின், "நாவிஷ்ணு: ப்ருதிவீபதி:"-நெடியோனல்லன் நிருபதியாகான்—என்னும் பண்டையவழக்குப் பற்றிப் பாண்டியனும் நெடியோனதுகூறேயாவனெனக் கொள்ளவும் திருவென்னுஞ்சொல்லுக்கியையவும் அது வரப்பெற்றதென்க.

இதனை, "மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற்-றாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்" என்னும் வெட்சிக்கரந்தையிற்கூறிய சூத்திரத்தானு முணர்க. இனி நெடியோனென்பது பெரியோனெனப் பொதுவாய்ப் பொருள்பெற்று அடையேற்றபின்னர்ப் பாண்டியனைக் குறித்ததெனினு மமையும். "எங்கோ வாழிய......முந்நீர் விழவி னெடியோ-னன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே." என்று புறநானூற்றில் நெட்டிமையார் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியைப்பாடிய ஒன்பதாம்பாட்டில் வேலைவடிம்பலம்பநின்ற பாண்டியனை 'நெடியோன்' என்று கூறியதும் உணரற்பாலது. ஆகவே 'நிலந்தருதிருவிற்பாண்டியன்' என்பதே அவனது இயற்பெயராமென்பது பெறப்பட்டது.

இளம்பூரணவடிகளுக்குப் பிற்காலத்து கி. பி. ஒன்பதாம்நூற்றாண்டிலோ பத்தாம்நூற்றாண்டிலோ களவியலுக்குரையெழுதிய யாரோவொருவர், அதன் முப்பத்தைந்தாஞ்சூத்திரத்து உரையை விரிக்கும்போது, "தேவரும் அசுரரும் அமர்செய்தகாலத்துத் தேவர்களையும் அசுரர்களையும் ஒருவிர் ஒருவிர் மிக்காரை ஒருப்பல்யானெனப் பாண்டியன் 'மாகீர்த்தி' சந்துசெய்வித்ததுபோல்" என ஓர் கதைகூறுமுகத்தானே 'மாகீர்த்தி'யென்பதனைப் பாண்டியனது இயற்பெயரெனத் திரிபுடவுணர்த்தினர். அக்களவியலுரை நக்கீரருரைத்ததெனை மயங்கி அடியார்க்குநல்லார், தமது சிலப்பதிகாரவுரைப்பாயிரத்தில் "இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம்புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தருதிருவிற்பாண்டியனவைக்களத்து" என்றும், வேனிற்காதையுரைத்தொடக்கத்தில் "நாலாயிரத்துநானூற்றுநாற்பதிற்றியாண்டு (தலைச்சங்கம்) இரீயினர் காய்சினவழுதிமுதற் கடுங்கோனீறாயுள்ளார் எண்பத்தொன்பதின்மர்; அவருட் கவியரங்கேறினர் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமாகீர்த்தியனாகிய நிலந்தருதிருவிற்பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீயினன்" என்றும், ஓரிடத்து மாகீர்த்தியு மிடைச்சங்கமுமெனின் மற்றோரிடத்துச் சயமாகீர்த்தியனும் தலைச்சங்கமுமென ஒருவனையேபற்றி முன்னுக்குப்பின் பிறழ்ந்தும் கூட்டியும் எழுதியுள்ளார். ஆயினும் அவர் 'மாகீர்த்தியான' 'சயமாகீர்த்தியான' என்னுஞ்சொற்களைப் பாண்டியனது இயற்பெயருக்கு

அடைமொழிகளாகக் கொடுத்திருக்கின்றமையின், பனம்பாரனாரது கொள்கைக்கு அதுபற்றியமட்டில் அவர் மாறுபடக்கூறினரென்பதற்கில்லை. மாங்குடிமருதனாரதுநோக்கமும் இதனையொத்திருப்பது உற்றுணரற்பாலது. களவியலுரையென்பது இளம்பூரணவடிகளியற்றியதென இக்காலத்துச் சிலர் கருதுவாராயினர். குமரியாற்றிற்குத்தெற்கில் (தமிழ்நாடல்லாத) பிறநாடிருந்து கடல்கொள்ளப்பட்டதெனக்கூறிய இளம்பூரணவடிகளும், ஆங்குத் தலையிடைச் சங்கத்துத் தென்மதுரைகபாடபுரங்களிருந்த தமிழ்நாடு கடல்கொள்ளப்பட்டதெனக்கூறிய களவியலுரைகாரரும் ஒருவரெனக்கருதுவது எவ்வாற்றானுமமையாதென்க.

இது நிற்க, நச்சினார்க்கினியர் "மாற்றாரது நிலத்தைக்கொள்ளும் போர்த்தொழிலினையுடைய பாண்டியன் மாகீர்த்தியவையின்கண்ணே" என்னுமிடத்து 'மாகீர்த்தி' யென்பதனை இயற்பெயராக்கொண்டதன்றி 'அரிறப' என்பதனை விரித்துரைக்குமிடத்து அப்பெயரிய பாண்டியனுக்கு இருபத்துநாலாயிரம் யாண்டு ஆயுளுங் கற்பித்துள்ளார்! அதனையும் மெய்யாகக்கொள்ளின், களவியலுரைகாரரது கற்பனைப்படி தலையிடைகடைச்சங்கமொன்றனுக்கு (4440+3700+1850=) 9990 வருஷங்களாக அவனது காலத்திலேயே இரண்டு மூன்று தலையிடைகடைச்சங்கங்கள் வேண்டப்படுமெனவே அஃது ஒருசிறிதும் பொருந்தாதாம். இனி இளம்பூரணவடிகள்காட்டிய வழியில் நச்சினார்க்கினியர்போற்சென்றுள்ள சிவஞானமுனிவரையும் அரசஞ்சண்முகனாரையும்பற்றிக் கூறுதற்கு யாதுமிலது.

ஆகவே'மாகீர்த்தி'என்னும்பெயர் பின்னோர்வழக்கில் வழிபிறழ்ந்துவந்ததெனவும், தொன்றுதொட்டுப்பயின்றுவந்தபெயர் 'நிலந்தரு திருவிற்பாண்டியன்' என்பதேயாமெனவும் காட்டப்பட்டதென்க.

பண்டித, S. சுப்பிரமணிய சாஸ்திரி.

தஞ்சை.

ஸ்ரீ:

மும்முரசம்.

நம் பழைய தமிழரசர்கள் இம்மைக்கும் மறுமைக்கும் உறுதியெனக்கொண்டுகடைப்பிடித்து,ஊக்கத்துடன்செய்துவந்த அறங்கள் மூன்றும். அவை கண்ணோடாதுமுறைசெய்தல், வரையாதுஅளித்தல், எதிர்த்தெழுந்துவேறல் என்பனவாம். இப் பிறகூறியவேறலும் அறமாமோவெனின், ஆம்; என்னை? 'வருதார்தாங்கி' என்னும் புறப்பாட்டில்(62) 'அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்' என்றவிடத்து 'அறத்தின்மண்டுதலாவது படைபட்டபின் பெயராது சென்று, இருவேந்தரும் பொருதல்' என்று அதன் உரையாசிரியர் கூறுமாற்றான் அறிக. அம் மூன்று அறங்களும் அக்கால அரசரது மனத்திற் பசுமரத்தாணிபோலப் பதிந்திருந்தனவென்பதற்குப் பலப்பலசான்றுகள் காணலாம்.

தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன் தன்னைச் சேரனும் சோழனும் இளைஞனென்றிகழ்ந்ததைக் கேட்டபோது,

"படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாக!
*   *   *   *
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா இன்மையா னுறவே" (புறம்-72.)

என்று வஞ்சினங்கூறினன்

இக் கூற்றினின்றும் 'சினங்கெழுவேந்தரை அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு ஒருங்ககப்படேஎனாயின்' என்றதனால் அவனது மறக்கூறுபாடும், 'என்னிழல்வாழ்நர் சென்னிழற்காணாது கொடிய

னெம்மிறையெனக் கண்ணீர்பரப்பிக் குடிபழிதூற்றுங் கோலே னாகுக' என்றதனால் அவனது முறைதிறம்பாமையும், 'புரப்போர் புன்கண் கூர, இரப்போர்க் கீயா இன்மையா னுறவே' என்றதனால் அவனது கொடைக்கடனிறுத்தலும் வெள்ளிடைவிலங்கல்போல் விளங்கிக்கிடப்பன.

சோழன் நலங்கிள்ளிசேட்சென்னி என்பான், தன்தாயத்தானாண நெடுங்கிள்ளிமேற்கோபித்து வஞ்சினம்மொழியும்போது,

"மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி
யீயென இரக்குவ ராயிற் சீருடை
முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்
இன்னுயி ராயினும் கொடுக்குவ னிந்நிலத்
தாற்ற லுடையோர் ஆற்றல் போற்றாதென்
உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதிற்
றுஞ்சுபுலி யிடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே மைந்துடைக்
கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலச் சென்றவண்
வருந்தப் பொரேஎ னாயிற் பொருந்திய
தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தன் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகவென் தாரே" (புறம்-73.)

என்று மொழிந்தனன். இதனின்றும் அவனது அருங்கொடையும், பெருந்திறலும், நெறியிற்பிறழாக் கடைப்பிடியும் அதன் விளைவாய முறைபிறழாமையும் விளங்குவனவாம். இவ்வாறே ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன் தன்பகைவனான சோழன்மேற் பகைத்தபோது,

"என்னொடு பொருதும் என்ப வவரை
ஆரமர் அலறத் தாக்கித் தேரோ
டவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிக
அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக--
* * *
மன்பதை காக்கும் நின்குடிச் சிறந்த

தென்புலங் காவலின் ஒரீஇப் பிறர்
வன்புலங் காவல் மாறியான் பிறக்கே" (புறம்-71.)

என்று வஞ்சினம் மொழிந்தனன். இம்மொழியினின்றும் மேற் சொல்லிய மூன்றறங்களும் அரசர்க்குத் தலைமைபெற்றன என்பது புலனாம்.

அக்கால அரசரையன்றிப் புலவர்களும் வேந்தருக்கு அம் மூன் றறங்களுமே சிறப்புடையனவென்று எடுத்துக்காட்டாநிற்பர். முதலாவது முறைசெய்தலைப்பற்றி வற்புறுத்தும்போது நரிவெரூஉத்தலையார் என்றபுலவர், சேரமான் கருவூரேறிய ஒள்வாட்கோப்பெருஞ் சேரலிரும்பொறையை விளித்துப்பாடும்போது,--'அருளும் அன்பும் நீக்கி நீங்கா, நிரயங் கொள்பவரோ டொன்றாது காவல், குழவி கொள்பவரின் ஓம்புமதி' (புறம்-5) என்றும், காரிகிழார் என்றபுலவர், பாண்டியன்பல்யாகசாலைமுதுகுடுமிப்பெருவழுதியைவிளித்துப்பாடும் போது,—'விரிசீர்த், தெரிகோல் ஞமன் போல ஒருதிறம், பற்ற லிலியரோ' (புறம்-6) என்றும், பிசிராந்தையார் அறிவுடை நம்பியைநோக்கி,

"அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான் உலகமுங் கெடுமே" (புறம்-184)

என்றும், வெள்ளைக்குடிநாகனார், தமது நிலங்களுக்கு இறைசெலுத்த மாட்டாமற்போனபோது குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை நோக்கி,

"அறம்புரிந்தன்ன செங்கோல் நாட்டத்து
முறைவேண்டு பொழுதிற் பதனெளி யோரீண்
டுறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே"

என்றும்,

"நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பாரமோம்பிக்
குடிபுறந் தருகுவை யாயினின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே" (புறம்-35)

என்றும் கூறுவதினின்றும் அதனை அறிந்துகொள்ளலாம்.

கொடைக்கடனைப்பற்றி, உறையூர் முதுகண்ணன்சாத்தனார், சோழன் நலங்கிள்ளிசேட்சென்னியைநோக்கி,

"வல்லா ராயினும் வல்லுந ராயினும்
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
யருள வல்லை யாகுமதி—அருளிலர்
கொடாமை வல்லர் ஆகுக
கெடாத துப்பினின் பகையெதிர்ந் தோரே" (புறம்-27.)

என்றும்,

"அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்
ஆற்றா மைநிற் போற்றா மையே" (புறம்-28.)

என்றும் கூறி, 'அறஞ்செய்யாதானை அறஞ்செய்கவென' வற்புறுத்தினர்.

ஆவூர் மூலங்கிழார், பாண்டியன் இலவந்திகைத்துஞ்சிய நன்மாறன் பரிசில்நீட்டித்தபோது,

"ஒல்லுவ தொல்லும் என்றலும் யாவர்க்கும்
ஒல்லா தில்லென மறுத்தலு மிரண்டும்
ஆள்வினை மருங்கிற் கேண்மைப் பாலே
ஒல்லா தொல்லும் என்றலும் ஒல்லுவ
தில்லென மறுத்தலும் இரண்டும் வல்லே
இரப்போர் வாட்டல் அன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயில் அத்தை
அனைத்தா கியரினி இதுவே" (புறம்-196.)

என்று உளையக்கூறி இடித்தனர்.

இனி வீரத்தைப்பற்றிக் கூறும்பொழுது மதுரைக் கணக்காயனார்மகனார் நக்கீரனார், நன்மாறனைநோக்கி,

"கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்
வலியொத் தீயே வாலி யோனை
புகழொத் தீயே இகழுந ரடுநனை
முருகொத் தீயே முன்னியது முடித்தலின்" (புறம்-56.)

என்றும், குமட்டூர்க்கண்ணனார், நெடுஞ்சேரலாதனைப் பாடுங்கால்,

"அரிமான் வழங்குஞ் சாரற் பிறமான்
தோடுகொள் இனநிரை நெஞ்சதிர்ந் தாங்கு
முரசுமுழங்கு நெடுநகர் அரசுதுயி லீயாது
மாதிரம் பனிக்கும் மறம்வீங்கு பல்புகழ்
கேட்டற் கினிது"

என்றும், மாறோக்கத்துநப்பசலையார், குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் இறந்தபோது,

"செற்றன் றாயினும் செயிர்த்தன் றாயினும்
உற்றன் றாயினும் உய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழு தேத்தி
இரந்தன் றாகல் வேண்டும் பொலந்தார்
மண்டமர் கடக்குந் தானைத்
திண்டேர் வளவற் கொண்ட கூற்றே" (புறம் 226.)

என்றும் பாடி, அவ்வீரத்தைச் சிறப்பிப்பர்.

இவ்வாறு புறத்திணைத்துறையிலேயன்றி அகத்திணைத்துறையிலும் நெறிமுறையின்வழீஇயினாரை,

"அரிலை, புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்
கொன்பதிற் றொன்பது களிற்றொ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீயர்" (குறுந்-292,)

என்று, பரணரும், கொடைமையைப்பற்றிப் பிரிவச்சங்கூறும் தலைமகன் கூற்றாக, 'நிற்றுறந் தமைகுவெ னாயி னெற்றுறந், திரவலர் வாரா வைகல், பலவா குகயான் செலவுறு தகவே'(குறுந்-137)என்று பாலைபாடிய பெருங்கடுங்கோவும், வீரத்தைப்பற்றிக்கூறுமிடத்து, 'பெரும்புண், ஏர்த்தழும்பன் ஊணூரங்கண், பிச்சைசூழ் பெருங்களிறுபோல எம், அட்டில் ஓலை தொட்டனை நின்மே' என்று பரணரும் கூறுவர். இவற்றிற்கு இன்னோரன்ன பலப்பல உதாரணங்கள் காட்டலாம்.

இக்கூறிய மூன்று அறங்களையும் தாம் மேற்கொண்டதற்கு இலச்சினையாக அரசர்கள் தமதுகடைத்தலையில் மூன்றுமுரசங்களை வைத்திருந்தனர். அம்மூன்றற்கும் நீதிமுரசம், கொடைமுரசம், வீரமுரசம் என்று பெயர்வழங்கிவந்தது. அம்முரசங்கள் அரசர்களாற் சூளிமொழிந்த சபதங்களிலே கொள்ளப்படுவனவாய், வெவ்வேறு

குரல்தரும்படி முழக்கப்பெற்று, இக்காலத்தில் அரசன்கோயிலில் இன்னது நிகழ்கின்றது என்பதை அறிவித்தற்குச்சிறந்தகருவிகளாக உதவிவந்தன. 'ஒருநாள் முதலன பத்துநாழிகையும் அறத்தின்வழி ஒழுகிப் பின்பத்துநாழிகையும் இறையின்முறைகேட்டுச் செய்தபொருளைப் பரிசிலர்க்குக்கொடுத்து மகிழ்ந்திருத்தல்' (புறம்-69-உரை) மரபாதலால், அக்கடும்பகலின் முதலிலும் கடையிலும் நீதிமுரசத்தையும் கொடைமுரசத்தையும் முறையேமுழக்கி, முறைவேண்டுவோர்க்கு முறைசெய்து, பின்பு பரிசிலர்க்குக்கொடுத்துவந்தார்கள்.

வீரமுரசமோ (1) நாட்டிற் போர்நிகழ்ந்துள்ளதென்பதை அறிவித்தற்கும், 'செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி, வேல்கைக்கொடுத்து வெளிது விரித்துடீஇப், பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி, ஒருமகன் அல்லது இல்லோள், செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே'(புறம்-279)பொதுவிற் றூங்கும் விசியுறு தண்ணுமை, வளிபொரு தெண்கண் கேட்பின், அதுபோ ரென்னும் என்னையும் உளனே' (புறம்-89) (2) போர்முனையின்கண் முழக்குதற்கும், 'புயலேறு...... குன்றுதுஞ் எறியும் அரவம் போல, முரசெழுந் திரங்கும் தானையொடு தலைச்சென்று,அரசுபடக் கடக்கும் உரைசால் தோன்றல்.(புறம்-211) மயிர்க்கண் முரசும், நாளொடு பெயர்த்து நண்ணார்ப் பெறுகவிம், மண்ணக மருங்கினென் வலிகெழு தோள்'(சில. இந்தி) (3) வென்றவுடன் வெற்றிதோன்ற ஒலித்தற்கும், 'பலர்மொசிந் தோம்பிய திரள்பூங் கடம்பின், கடியுடை முழுமுதல் துமிய வெய், வென்றெறி முழங்கு பணை' (பதி-11) 'இவ்வெண் நிலவின், வென்றெறி முரசின் வேந்தர்' (புறம்-112) (4) வென்றநாட்டின் குடிகளைத் தங்குடைக்கீழ் வருகவென்று பிரசுரஞ்செய்தற்கும், 'வலம்படு வியன்பணை கடிப்புக் கண்ணுறூஉந் தொடித்தோ ளியவு, ரணங் காணுது மாதிரந் துழைஇய நனந்தலைப் பைஞ்ஞிலம் வருகவிர் நிழலென' (பதிற்-17) உபயோகிக்கப்பட்டு வந்தது. 'அரசர்க்குச்சிறந்த மறப்புகழ் மற்றைப்புகழினும் மிக்கது' (பதிற்-12, உரை) என்பனவாகலான் இவ் வீரமுரசம் அவ்வரசராற் பெரிதும் அபிமானித்து வணங்கப்பெற்றுவந்தது.

இனி இவ் வீரமுரசம்செய்துகோடலின்வரலாற்றை ஆராய்வாம். இதன்விளிம்புமரமோ காழ்கொண்ட கருமரத்தாற்செய்யப்பெற்று

இருட்சிபொருந்தி உட்குவரத்தோன்றும். இதனை 'மாசற விசித்த வார்புறு வள்பின், மைபடு மருங்குல்' என்னும் 50-ம் புறப்பாட்டின் 'மைபடுமருங்குல்' என்பதற்கு, 'கருமரத்தாற்செய்தலான் இருட்சிபொருந்தியபக்கம்' என்று அதன் உரையாசிரியர் கூறுமாற்றான் அறிக. இக் கருமரந்தான் பகைவரதுநாட்டினின்றும் வென்று கொணர்ந்ததாகும். அப் பகைவரது காவன்மரத்தையே வெட்டித் தறித்துத் துண்டாடி, அவற்றை வண்டிகளிலேற்றி அவ்வண்டிகட்கு அப் பகையரசரது பட்டத்தியானைகளைக் கடாக்களாகப்பூட்டித் தம் நாடுகொணர்ந்துசேர்த்து முரசுசெய்துகொள்ளுதல் சிறந்த வீரமெனப்படும். இப்படிச்செய்தான் சேரன் கடல்பிறகோட்டிய செங்குட்டுவன். இதனை,

"மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்தவன் வேம்புமுதல் தடிந்து
முரசுசெய முரச்சிக் களிறுபல பூட்டி
ஒழுகை யுய்த்த"

என்ற 44-ம் பதிற்றுப்பத்தாலும், இதன்கண்வந்துள்ள 'பூட்டி' என்றதற்கு "வாளிழைகழித்தநறும்பல்பெண்டிற், பல்லிருங்கூந்தல் முரற்சியாற் குஞ்சரவொழுகைபூட்டி' என இதன்பதிகத்துவந்தமையால் அம் மகளிர்கூந்தன் மயிர்க்கயிற்றாற்பூட்டியென்று அதன் உரையாசிரியர் கூறுமாற்றாலும் அறிக. இம் மோகூர்மன்னன் செங்குட்டுவனது கட்பினனான 'அறுகை' என்பானது பகைவனாய் அவ்வறுகை என்பானை வருத்திவந்தவன். அதனாற் செங்குட்டுவனுக்குச் சினஞ்சிறந்தது.

இம் முரசினுக்குப்போர்த்தற்குரிய தோல்கொணர்வதோ பெருவியப்பானது. எத்தகைய இடபமானது தனது மொய்ம்பினாலே சினமிக்க புலியொன்றனோடுபொருது அதனைத் தனது கூர்ங்கோட்டாற்குத்திக்கொன்று, கோட்டுமண்கொண்டு முக்காரமிட்டுச் செடாற்குத்திக்கொன்று? மாந்துசெல்லுமோ அவ்விடபாாசனது ஆவியிகந்தபின்பு அதன் தோலை உரித்து, மயிர்சீவாதேகொணர்ந்து அம்முரசினுக்குப் போர்த்து, முடக்கம்முதலிய குற்றங்களுண்டாகாவண்ணம் வலித்துப் பிணித்திறுக்குவார்கள். இதனைச் சிலப்பதிகார இந்திரவிழவூரெடுத்த காதை அடி 88-ல் 'மயிர்க்கண்முரசு' என்பதற்கு அடியார்க்குநல்லா

OFFICE OF THE REGI... 23-FEB ... MAD

எழுதிய குறிப்புக்களாலும், 'மாசறவிசித்தவார்புறுவள்பின்' என்ற புறம் 50-ம் பாட்டாலும் அறிக. 'புனைமருப் பழுந்தக் குத்திப் புலியொடு பொருது வென்ற, கணைகுரா லுருமுச் சீற்றக் கதழ்விடை யுரிவை போர்த்த, துணைகுரல் முரசம்' (சிந்-முத்தி-301). என்றார் பிறரும்.

இனி இம் முரசினைப்பேணி வழிபடுவழக்கைச் சிறிதுகூறுதும். இம் முரசம் வெண்மைமிக்கதும் பூக்களாற் பொலிந்துவிளங்குவது மான மெல்லியசேக்கைபரப்பப்பெற்ற சிறந்தகட்டிலிலே வைக்கப் படும். நீராடுமம்மங்கல முழக்கத்துடன் நீர்த்துறைக்கு எடுத்துச் சென்று பயபக்தியுடன் கழுவியபிறகு, மயிற்றோகையும் உழிஞைத் (கொற்றான்) தளிருமாய்ச் சேர்த்துத்தொடுத்தமாலைசூட்டிப் பின்பு மந்திரங்கள்சொல்லி, அம்முரசினை அதிஷ்டித்துநிற்கும் தெய்வத் தைப்பூஜித்து, அக் கடவுட்கு இரத்தமும் கறவுங்கலந்த பயங்கரமான பிண்டத்தை (சோற்றுண்டையை) மந்திரபூர்வகமாகப் பலியிடுவது மரபு. அந்தக்குருதிப்பிண்டத்தைக்கண்டு கொடியகண்களையும் முருக்கநெற்றுப்போன்ற விரலையுமுடைய பேய்மகளும் அஞ்சியகல் வாள். எறும்புங்கூட அதனை மொய்ப்பனவல்ல. காக்கையும் பருந்து மே அப்பலியைத்தீண்டி உண்ணும். அவை உண்டால்தான்பலியிட்ட அரசனுக்குப் பின்நிகழும்போரில் வெற்றியுண்டாமென்பதற்கு ஒரு நல்நிமித்தமெனப்படும். அம் முரசுறைகடவுளே தன்ஆணையாற் பின்னிலையும்வெற்றிக்குச் சூசகமாகத் தன்பலியை உண்ணும்படி அக் காக்கையினையும் பருந்தினையும் ஏவுமென்பது சித்தாந்தம்.

இப்படிப் பலியிடுங்காலத்து அவ்வீரமுரசம் மிகஉரக்க அடிக்கப் பெறும். அதன் தொனிகேட்க யார்க்கும் பேரச்சந்தோன்றும். இக் காலத்தில் வீரரும் படைத்தலைவரும் வஞ்சினங்கூறி அப் பலியினை யறிவர்கள். இவற்றை,

"மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
யொலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்
பொலங்குழை உழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை உருகெழு முரசம், மண்ணி" (புறம்-50.)

என்பதனாலும்,

"கடலவும் காட்டவும் அரண்வலியார் நடுங்க
முரண்மிகு கடுங்குரல் விசும்படை பதிரக்
கடுஞ்சினம் கடாஅய் முழங்கும் மந்திரத்து
அருந்திறன் மரபிற் கடவுட் பேணியர்
உயர்ந்தோ னேந்திய அரும்பெறற் பிண்டம்
கருங்கட் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க
நெய்த்தோர் தூஉய நிறைமகி ழிரும்பலி
எறும்பும் மூசா இறும்பூது மரபிற்
கருங்கட் காக்கையொடு பருந்திருந் தார
ஓடாப் பூட்கை யொண்பொறிக் கழற்காற்
பெருஞ்சமந் ததைந்த செருப்புகன் மறவர்
உருமுநிலன் அதிர்க்கும் குரலொடு கொளைபுணர்ந்து
பெருஞ்சோ றுகுத்தற் கெறியும்—முரசு"

(பதிற்-30-ம் உரையும்) என்பதனாலும் அறிக. இதேகாலத்தில் (அதாவது பலியிட்டு அப்பலியைக் காக்கையும் பருந்தும் உண்ணுங் காலத்து) பகையரசரதுநாட்டிற் புதுப்புள்வந்துசேரப் பழம்புட்கள் அகன்றுபோமாம். இதனைப், 'புதுப்புள் வரினும் பழம்புட் போகினும், விதுப்புற வறியா ஏமக் காப்பினை' (புறம்-20) என்பதனாலும், 'உட் பகை ஒருதிறம் பட்டெனப் புட்பகை' (புறம்-68) என்பதனாலும் அறிக. நாண்மீனை (ஜன்மநக்ஷத்திரத்தை) வீழ்மீன் நலிவதும் உண்டென்ப. அதனை 'ஆடியல் அழற்குட்டத்து' என்னும் 229-ம் புறப் பாட்டான் அறிக. இவையேயன்றி உன்னம் எனப்படும் மரத்துப் பூவும் அப் பகைவர் நிமித்தம்பார்த்தவழிக் கரிந்துகாட்டுமாம். இத னைப் 'புன்கால் உன்னஞ் சாய' என்பதனாலும், 'உன்னஞ்சாயவென் றது தன்னொடுபொரக்கருதுவார் நிமித்தம்பார்த்தவழி அவர்க்கு வென்றியின்மையின், கரிந்துகாட்ட' என்னும் அதன் உரையாலும் அறிக. (பதிற்-40).

இவ்வாறெல்லாம் மண்ணிப் பீலிசூட்டிப் பலியிட்டு நிமித்தம் பார்த்து 'வாளும்குடையும' மயிர்க்கண்முரசும் *நாளோடுபெயர்த்து'ப்

* நாளோடுபெயர்த்தலாவது - 'வாளும் குடையும் முரசும் பெயர்த்தல். வாள்நாட்கோள், குடைநாட்கோள், முரசுநாட்கோள் என்பன. இவை நாட் கோளொடுபெயர்தல். இவற்றுள் வாள்நாட்கோடல் 'செற்றார்மேற் செல வமர்ந்து கொற்றவாள் நாள்கொண்டன்று'..........முரசுகோடலென்பது 'மாசறவிசித்த........என்றிதுசெயலே' (சிலப். இந்திர. அடி-91, 92-உரை.

பகைப்புலஞ்சென்றவேந்தன் மாற்றானது வீரமுரசத்தைவென்று கொணர்வதுதான் போரில் முழுதும் வெற்றிபெற்றதற் கடையாளமாகும். இதனை 'அருஞ்சமம் சிதையத்தாக்கி முரசமொடு ஒருங்கு அகப்படேஎனாயின்' (புறம்-72) என்பதாலும் 'இருபெருவேந்தரையும் உடனிலைவென்று, முரசுங்குடையும் கலனுங்கொண்டு' (பதிற்-8-ம் பத்துப்பதிகம்) 'மோகூர் மன்னன் முரசங்கொண்டு' (ஷ 5-ம் பத்து 4-ம்பாட்டு) என்பதனாலும், அரசுபட அமருழக்கி, உரைசெல முரசுவௌவி' (புறம்-26) என்பதனாலும் அறிக. மற்றும் இவ் வீரமுரசம் நீராட்டப்பெறாமலும், குருதிப்பலியூட்டிப் பூசிக்கப்பெறாமலும் வறிதேகிடக்குமாயின் அஃது அரசருக்கு இழுக்குத்தருமாம். இதனை, (பதிற்றுப்பத்து 31) 'துளங்குகுடி விழுத்திணை திருத்தி *முரசுகொண்டு' என்பதன் உரையால் உய்த்துணர்க. யாம் இதுகாறும் கூறிப்போந்தவற்றாற் பண்டைக்காலத்துவேந்தரது வேட்கையையும், நீதிசெலுத்தும் முறையையும், கொடைக்கடனிறுக்கும் ஆண்மையையும் ஒருவாறு அறிந்துகொள்ளலாம்.

வை. இராஜகோபாலன்,

கம்பர்விலாசம், மைலாப்பூர்.

---

*'முரசுகொண்டு என்றது சிலகாலத்துப் பயன்கொள்வாரின்மையிற் பண்ணழிந்துகிடந்த பழமுரசினைத் தான்தோன்றி அதன் அழிவுதீர்த்து அதன்பயன்கொண்டென்றவாறு' என்பது பழைய உரை.

காவேரிபாக்கத்துச்சாஸனம்.

——(:0:)——

தமிழகத்தைமுழுதும் ஏகசக்கிராதிபதியாயாண்ட முதல் இராஜராஜன் என்னும் வேந்தனுக்கு, சிவபாதசேகரன், மும்முடிசோழன், அருமொழிதேவன், நித்தவிநோதன் என்னும் பற்பல மறுபெயர்களுண்டாயிருந்தன. அவற்றுள், ஜனநாதன் என்பதும் ஒன்றென்றுசொல்லத் தேவையான ஆதாரங்கள் கிடைத்திலவெனினும் அஃது இவ்வரசன்பெயரே என்று ஒருவாறு மனதிற்குப் புலப்பட்டுக்கொண்டிருந்தது. இதுகாறுங்கிட்டாத அவ்வாதாரமும் அடியிற் பதித்துள்ள காவேரிபாக்கத்துச் சாஸனத்துள், இப்பொழுது காணக்கிடக்கின்றது. உடைந்துபோன ஒரு சிறுகல்லின்புறத்து எழுதப்பட்டு, லக்ஷியஞ்செய்வாரின்றி ஏரிக்கரையிற் கிடக்கின்றது. அழகான கிரந்தாக்ஷரங்களில் எழுதியுள்ளது; முதலிலும் கடைசியிலும் கல் உடைந்துபோனபடியால் இவ்விரு அற்றங்களிலும் உள்ள எழுத்துக்கள் கிடைக்காமற்போய்விட்டன. ஆகிலும் ஒருபடியாய்ச் சாஸனத்தின் தாத்பரியத்தைக் கிரகிக்கச் சாத்தியமாயிருக்கிறது. சாஸனத்திற் சொல்லப்பட்ட விஷயத்தைச் சுருக்கமாக அடியிற் சொல்லுவோம்.

சோழமண்டலத்தில் உம்பளநாடென்று ஒரு நாடுண்டு. அந்நாட்டில் நடார் என்று ஓரூர் உண்டு. அவ்வூரிற் செம்பியனும்பளநாட்......மூவேந்தவேளானென்னும் பட்டப்பெயர்தரித்தவனும் சாத்தன் என்ற இயற்பெயருடையவனுமான அரசர்களாற் சன்மானிக்கப்பட்ட ஒருவனிருந்தான். இவன் தம்பியாகிய மும்முடிசோழ உம்பளநாட்டு மூவேந்தவேளானென்பவனுக்கு அப்பட்டப்பெயர் ஜனநாததேவனாற் கொடுக்கப்பட்டது; அதாவது, முதல் இராஜராஜதேவனால்

அளிக்கப்பட்டது. இவ்விருவர்களில் மூத்தவனாகிய சாத்தனுக்கு இரண்டுமக்களிருந்தனர்; அவர்களில் மூத்தவன் மறைக்காடனாகிய பராந்தகப்பல்லவரையன். இளையவன் ஆதித்தனாகிய பராந்தகப் பல்லவரையன். ஆதித்தன், மும்முடிசோழதேவனுடைய பிரதான மந்திரிஸ்தானத்தை வகித்துவந்தான். இவன் லோகோபகாரமாக ஏதோ ஒரு நற்செய்கை செய்ததாகத் தெரியவருகிறது. மழையைப் பற்றிச் சொல்லத்தொடங்கிய சாஸனம், முறிந்துபோனதினால், இன்னதுதான் கூறப்புகுந்ததென்று ஊகிக்கமுடியவில்லை. மழை வளர்ந்தவறினும் மாந்தர்க்கு நீர்வளங்குன்றாதிருத்தற்பொருட்டுக் காவேரிபாக்கத்துப் பெரியஏரியைக் கட்டுவித்தானோவென்று சம்சயிக்கவேண்டியிருக்கிறது. இவ்விஷயம் எப்படியாயினு மாகட்டும்; முதல் இராஜராஜன்பெயர்களுள், மும்முடிசோழன், ஜனநாதன் என்பனவு மடங்கியுள்ளனவென்பது இச்சாஸனத்தால் நன்குபுலப்படும்.

இச்சாஸனம், ஏழு சுலோகங்களால் எழுதப்பட்டுள்ளது. இவை பல விருத்தங்களால் இயற்றப்பட்டுள்ளன.

சாஸனம்.

1\. ..... [illegible] ....

2\. ..... [illegible] —(1) [illegible] ......

3\. ..... [illegible] —(2) [illegible] ...(3)

4\. ..... [illegible] ......

5\. ..... (4) [illegible] —(5) [illegible] ...(6)

6\. ..... [illegible] —(7) [illegible] ......(8)

7\. ..... [illegible] [1*] [illegible] (9) [illegible] (10)

8\. ..... [illegible] ......

9\. ..... [illegible] ......

10\. ..... [illegible] 11] ......12 [illegible] ......

து. அ. கோபிநாதராவ் எம். ஏ.,

1. அநுஷ்டுப்.
2. த்ருதவிலம்பிதம்.
3. "[illegible]" என்றிருக்கலாம்.
4. "[illegible]" என்றிருக்கும்.
5. இந்திரவச்சிரா.
6. "[illegible]" என்றிருக்கலாம்.
7. [illegible].
8. "ஸ்ரீமாநு [illegible]" என்றிருக்கலாம்.
9. அநுஷ்டுப்.
10. "[illegible]" என்றிருக்கலாமோவென்ற சம்சயம்.
11. "[illegible]" என்றிருக்கலாம்.
12. சார்த்தூலவிக்கிரீடிதம்.

பிழை திருத்தம்.

செந்தமிழ்த் தொகுதி-௧௪ பகுதி-௧௦-ல் ௪௧௪-ம்பக்கத்து 10, 12-ம்வரிகளில் நெடுங்கிள்ளி என்றிருப்பதை நெடுமுடிக்கிள்ளி என்றும், ௸ தொகுதி ௧௧-ம்பகுதி ௪௨௦-ம்பக்கம் ௭ வதுவரியில் மொன்பதிற்றிரண்டிற் என்றிருப்பதை மொன்பதிற்றிரண்டினிற் என்றும், ௪௩௪-ம்பக்கம் ௧௯-வதுவரியில் தமிழ்நாடுகளக்காலத் திருந்ததென்று என்றிருப்பதை தமிழ்நாடுகளக்காலத்திருந்தன வென்று என்றும், ௪௩௫-ம்பக்கம் ௧௪-வதுவரியில் பாண்டியனுடைந் ததும் என்றிருப்பதைப் பாண்டியநாடடைந்ததும் என்றும் திருத்திக் கொள்க.

பத்திராதிபர்



உ
கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கசு.] நளஞு ஐப்பசிமீ [பகுதி-கஉ.
Vol. XIV. October—November, 1916. No. 12.

தமிழ் நாடுகள்.

"செந்தமிழ்" (தொகுதி-கச பகுதி-கக-ல்) சாஙஅ-ஆம்பக்கத்தொடர்ச்சி.

——(o)——

பிற்பகுதி.

சோழவந்தா னரசஞ்சண்முகனாரென்னுஞ் சண்முகம்பிள்ளையவர்கள், தலையிடைச்சங்கங்களினுண்மையை யொப்புக்கொண்டவர்களில் ஒருவர். தம்மாலியற்றப்பட்ட தொல்காப்பியப்பாயிரவிருத்தியென்னும் புத்தகத்தில் தமதுகொள்கையைவிளக்கியிருக்கின்றனர். வாசிப்போரதனைத்தெரிந்துகொள்ளுமாறு அவர் புத்தகத்திலிருந்து பின்வருவனவற்றைவரைகின்றேன். அவை வருமாறு:—

Page 165 "இனியாசிரியரிந்நூல் (தொல்காப்பியம்) செய்தகாலத்து வேங்கடமலையின்வடக்கிருந்து இமயமலைவரையாரியமும், வேங்கடமலையின்றெற்கிருந்து குமரிமலைவரை தமிழும், பரவியிருந்தபடியானு,மக்காலத்துவடதிசைக்கட் கங்கையாறுமிமயமலையும்போலத் தென்றிசைக்கட் பஃறுளியாறுங்குமரிமலையுங் கடலாற்கொள்ளப்படாமல் எல்லாராலுமறியப்பட்டுக்கிடந்தமையானும், வடக்குந்தெற்கும் பிறவெல்லையுளவாக வவற்றைக்கூறாமல் எல்லாருமுணர்தற்பொருட்டு மறைவின்றி நெடுந்தூரந்தோன்றற்பாலவாய மலைகளைக்கூறினார்."

Page 165-6 "இனியிந்நூல் (தொல்காப்பியம்) செய்தபின்னர்ப் பல்யாண்டுகழிந்த பிற்காலத்துத் தென்கடலின்வடபாற் பிறமொழிகள் வழங்கியநாட்டையு,மதன்வடபாலுள்ள குமரிமலையையு,மதன்வடபால் வடிம்பலம்பநின்றபாண்டியனுக்கியபஃறுளியாற்றையு, மதன்வடபாலவன்முன்னோர்முதலாகத் தொன்றுதொட்டு வளம்படைத்த வெழுநூற்றுக்காவதப் பரப்புடைய நாற்பத்தொன்பதுதமிழ்நாடுகளையு,மவற்றின்றலைநகரமாகிய தென்மதுரையையுங் கடல்கொண்டது

புரம் பாண்டியர்க்குத் தலைநகரமாயிற்று. பல்யாண்டு கழிந்தபின் ஞெரூழியில் கபாடபுரத்தையுங் குமரியாற்றையு மின்னோரன்ன யாறு மலைபிறவற்றையு மக்கொடுங்கடலேகொண்டது என்பன.''

“வடவேங்கடந்தென்குமரி” யென்புழிக்குமரியை உரையாசிரியர்கள் போல் குமரியாறெனக்கொண்டால் தங்கொள்கை யொருகணமுநிலையா தென்பதை நன்குணர்ந்தசண்முகனார் குமரியைக்குமரிமலையாக்கி யதைப்பஃறுளியாற்றிற்குத் தெற்கிருக்கச்செய்தலொன்றே தன்கொள் கைநிலைத்தற்குவழியென்று கருதினர். அவர்புத்தகத்திலுள்ள பின் கண்டவரிக ளவர்கருத்தைவிளக்கும். அவை Page 203-4 “இனிக் குமரியை மலையெனக்கொள்ளாமல் யாறெனக்கொள்ளில் பாண்டியநாட் டைக்கடல்கொள்ளாதகாலமாயின் குமரியாற்றிற்குத்தென்பாலக்காலத் துள்ளனவாகிய 49 தமிழ்நாடுகளும் தலைச்சங்கமிருந்த தென்மதுரையு மவ்வெல்லையுட்படாதொழிதலேயன்றி வேங்கடத்தின் வடபாலுள்ள நாடுபோலவே பிறநாடெனப்படலுங் கடல்கொண்டபின்னராயிற்குடக் கும்குணக்கும்போலத் தெற்கினுங்கடல்கூறுது , யாறுகூறியதா லவ் வியாற்றிற்குத்தெற்கும் சிலபிறநாடுளவெனப் பொருள்பயத்தது முணர்க என்பன.''

இளம்பூரணவடிகள், நச்சினார்க்கினியர்முதலிய உரையாசிரியர்கள் குமரியைக் குமரியாறெனக்கொண்டதற் கவர்களையிகழ்ந்தனர். பனம் பாரனார்தமிழுலகத்துத்தெற்கெல்லையை யாறெனக்கூறியிருப்பரென்ற கொள்வதற்குச் சிறிதுமிடமில்லையென்றுசொல்லினர். அவர் அதற் குச்சொல்லும்நியாயம் பின்கண்ட அவர்மொழிகளேவிளக்கும்; அதா வது Page 201-2 வடக்கின்கண்ணெல்லையாக வொருமலைகூறினார்க்குத் தெற்கின்கண்ணு நிலையுடைத்தாயவொரு மலைகூறலே முறையாவ தன்றி யோரிடத்துநிற்றலின்றி நீளச்செல்லும்யாற்றினைக்கூறின் எல்லை யாகாமையானு “மென்பதே”. சண்முகனார் இருந்தகாலத்துத் தமிழ் நாட்டுச்சிறந்தபுலவர்களிலொருவரென்றும், நுட்பமதியுடையாரென் றும் பலராற்புகழப்பெற்றவிவர் யாறு என்னுமியற்சொல்லின் பொரு ளின்னதென்றுதெரியாம லிவ்வாறுரைப்பது மிகவும் வியக்கத்தக்கதே இரண்டுபக்கமடைகரைகளையு மதற்கிடைப்பட்ட தடத்தையுமுடைய தாய் மலையினின்று கடல்வரை நீர்த்திரள் செல்வதற்கிடமாயிருப்பது யாறு. நீர்த்திரள் செல்லும் இடத்தைமட்டுமே யாறென்று கூறுதல்

பொருந்தாது; அதிற்செல்லும் நீர்த்திரளுஞ் சேர்ந்துதான் யாறென் றாகுமென் றொருவர் சொன்னால், அவர் கூற்றை யான் மறுக்கவேண் டுவதில்லை. யாறென்பது நீர்த்திரளைமட்டுஞ் சுட்டுமென்னும் சண்முக னாரைப்போல்வார் கூற்றை மறுப்பது எனது கடமை. உற்பத்தியாகு மிடமும், முடியுமிடமும் வேறுபடலாம். யாற்றி லெவ்வளவு ஜலம் ஓடுகிறதென்றொருவனையுசாவ, அவன் யாற்றிலிடுப்புமட்டுஞ்சலமோடு கிறதென் றுத்தரங்கூறுகின்றனன். சிலவேளை யாற்றில் ஜலமேயில்லை யென்று சொல்லுகின்றனன். ஒருவனை நீ யெங்கேநீராடினாயென் றுசாவ, அவன் யாற்றிலென்று விடையளிக்கின்றனன். அவனவ்வாறு கூறியதற்குப் பொருள் இருகரைக்குட்பட்டதடத்திலென்பது. யாற் றிற்செல்லும் நீரே யடுத்தகால்வாய், அல்லது குளத்தையடைந்ததாக அங்குநீராடியவொருவனை, நீ யெங்குநீராடினாயென்றால் கால்வாயில் அல்லது குளத்தில் நீராடினேனென்று சொல்லுகின்றனன். சண்முக னார் உண்மையா யாற்றையாறெனக்கொள்ளாது, அதிற்செல்லும் நீர்த் திரளைமட்டுமே யாறெனக்கொண்டனரென்பது, அவருடைய Page 202 “ஓரிடத்துநிற்றலின்றி நீளச்செல்லும் யாறு'' என்னுமொழிக ளால் ஐயமறவிளங்கும். குமரியை யாறெனக்கொண்ட வுரையாசிரிய ரொருவரும்அதிற்செல்லும் நீர்த்திரளைச்சுட்டவில்லையென்பது பட்டப் பகல்போல் விளங்கும். யாற்றிற்செல்லும் நீர்த்திரளை யெல்லையாகக் கூறியவ ரிவ்வுலகத்திலில்லை. நீர்த்திரள் செல்வதற்கிடந்தந்திருக்கும் நிலமாகிய யாற்றை யெல்லையாகக்கூறுவது பொருந்தாதென்றுகொண் டாரு மிவ்வுலகத்தில் இல்லை. நீண்டுகிடக்கும் யாறு நிலையுடையதன் றென்று ஐயமுறுவாருமில்லை. பரந்துகிடக்குநாட்டுக்கு நீண்டுகிடக்கும் யாற்றைவிடப் பொருத்தமான வெல்லைகிடைப்பது அரிது. இளம் பூரணவடிகள், நச்சினார்க்கினியர், பேராசிரியர் முதலியவுரையாசிரியர் கள் யாற்றை யெல்லையாகச் சொல்லியிருப்பதுமன்றி சண்முகனரால் நன்குமதிக்கப்பெற்ற அடியார்க்குநல்லாரு மவ்வாறே யாற்றை யெல்லை யாகச்சொல்லியிருக்கின்றனர். அவர் குமரிக்குத்தெற்கேயுள்ள 49 தமிழ்நாடுகளுக்குப் பஃறுளியாற்றையுங் குமரியாற்றையும் எல்லை யாகச்சொல்லிப்போந்தனர்; அவர் சொல்லியபடியும், அடியார்க்கு நல்லார் சொல்லியபடியும் நாற்பத்தொன்பது தமிழ்நாடுகளின் அமை தியைப்பக்கத்தில்வைத்திருக்கும் படத்தைக்கண்டறிந்துகொள்க. சண் முகனார்கருத்துப்படி யெல்லைகூறுவதாயிருந்தால் பஃறுளியாற்றைத்

தெற்கண்ணடுத்திருந்ததாகச் சண்முகனார்சொல்லுகிற குமரிமலையையுங் குமரியாற்றுப்பக்கத்து ஒருமலைகண்டுபிடித்து அதையும் எல்லையாக வவர்சொல்லியிருத்தல்வேண்டும். பாண்டிநாட்டுக்குவடக்கெல்லையுஞ் சோணாட்டுக்குத் தெற்கெல்லையுமாயுள்ளது வெள்ளாறு. சோணாட்டுக்கு வடவெல்லை பெண்ணையாறு. கிருஷ்ணாநதியைத் தென்னெல்லையாகவுங் கோதாவரியை வடவெல்லையாகவுமுடையது வேங்கைநாடு, கோதாவரியைத்தென்னெல்லையாகவு மகாநதியைவடவெல்லையாகவுமுடையது கலிங்கநாடு என்பது சரித்திரம்வல்லோர்கொண்டது. அந்தந்தநாட்டுக் கரசர் வெற்றிதோல்விகளினால் எல்லைமாறுவதுண்டு. ஓரிடத்தினிற்றலின்றி நீளச்செல்லும் யாறு எல்லையாயிருப்பதற்குத் தகாதென்பதற்கல்ல; மேல்பக்கத்தில் தஞ்சாவூர்ஜில்லாவுக்கும் திருச்சிராப்பள்ளிஜில்லாவுக்கும், கீழ்பக்கத்தில் தஞ்சாவூர்ஜில்லாவுக்கும் தென்னாற்காடுஜில்லாவுக்கும், நடுவில் எல்லையாயிருப்பது கொள்ளிடமென்னும் யாறு. இவைகளினால் சண்முகனாரைப்போ லிவ்விஷயத்தி லபிப்பிராயப்படுவாரில்லையெனத் தெரிகிறது.

Page 201-2 மேலும் "வடக்கின்கண்எல்லையாக வொருமலைகூறினார்க்குத் தெற்கின்கண்ணு மொருமலைகூறல்" முறையென்றனர். எல்லைகூறவேண்டியவிடத்து மலையிருந்தால் மலையையும், யாறிருந்தால் யாற்றையு, மிரண்டுமில்லாவிட்டால் அவ்விடத்துக்குத்தக்கபடி ஊர்முதலிய பிறவு மெல்லைகூறுதலியையுமேயன்றி வடக்கெல்லைகூறவேண்டியவிடத்தில் மலையிருந்து தெற்கெல்லைகூறவேண்டியவிடத்து யாறுமட்டுமேயிருந்தால் சண்முகனார்சொல்லுகிறபடி வடக்கெல்லை தெற்கெல்லை யிரண்டையு மலையாகக்கூறுதல்முடியாதே; பனம்பாரனார் தெற்கெல்லை சொல்லவேண்டியவிடத்தில் யாறுஇருந்தது யாற்றையெல்லையாகச்சொன்னார். சண்முகனார்கொள்கைக்கு அதுசரிப்படவில்லை. குமரிமலையென வொன்றையுண்டுபண்ணி யதைப்பஃறுளியாற்றிற்குத் தெற்கேவைத்தார். பஃறுளியாற்றிற்குத்தெற்குக் குமரிமலையெனவொன்று இருந்ததாகச்சொன்னவர்கள் சண்முகனாரைத்தவிர ஒருவரையுங்காணோம்.

குமரிமலையென்றொன்றுண்டென்று காட்டமுயன்றதில் சிலப்பதிகாரம் காடுகாண்காதையில் "குமரிக்கோடுங் கொடுங்கடல்கொள்ள"

வேனிற்காதைக்கு அவர்செய்திருக்குமுரையின் றுடக்கத்திலுங் "குமரிக்கோடு" என்னுமொழி சண்முகனார்க்குப்புலப்பட்டது. அவைகளைப் போதுமான வாதாரமெனக்கொண்டு "வடவேங்கடந் தென்குமரி" யென்னுமிடத்துக் குமரியென்பது குமரிமலையெனநாட்டவெத்தனித்தனர். குமரிக்கோடு என்று மேற்சொல்லப்பட்டிருப்பது மலையல்லவென்பதைப் பின்னர்க்காட்டுகின்றேன். இப்போது சண்முகனார் கோட்பாட்டுப்படி மலையெனவைத்துக்கொண்டாலு மவர் கொள்கை நிலைக்கிறதாவென்றுபார்ப்போம். தெற்கின்கண்ணுள்ளகடலதன்வடபாலுள்ள நிலத்தைக்கொள்ளுமுறைசொல்லிய இளங்கோவடிகள் முதலில் பஃறுளியாற்றைச்சொல்லிப்பிறகு குமரிக்கோட்டைச் சொன்னதனாலே

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"

பஃறுளியாற்றிற்கு வடக்கேயுள்ளது குமரிக்கோடு என்றுகொள்ளுதல் முறை; இளங்கோவடிகள் ஒருயாற்றையு மொருமலையையுஞ்சொல்வதில் முறைபிறழ்ந்துசொன்னார்என்றுகொள்ளுதல் பொருந்தாது. இதற்குரைசெய்த அடியார்க்குநல்லாரும் இளங்கோவடிகள் முறையையே முறையாகக்கொண்டனர். வேனிற்காதையுரையில் கடல்கோள் சொல்லுமிடத்துப் பின்கண்டவாறு எழுதியிருக்கின்றனர். "அக்காலத் தவர் நாட்டுத் தென்பாலிமுகத்துக்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னுமாற்றிற்குங் குமரியென்னும் யாற்றிற்குமிடையே எழுநூற்றுக்காவதவாறும் இவற்றின் நீர்மலிவானென்மலிந்த ஏழ்தெங்கநாடும், ஏழ்மதுரைநாடும், ஏழ்முன்பாலைநாடும், ஏழ்பின்பாலைநாடும், ஏழ்குன்றநாடும், ஏழ்குணகாரைநாடும், ஏழ்குறும்பனைநாடும் என்னுமிந்த 49 நாடும் குமரிகொல்லமுதலிய பன்மலைநாடுங் காடும்நதியும்பதியுந் தடநீர்க்குமரிவடபெருங்கோட்டின்காறும் கடல்கொண்டொழிதலால்" என்பதுதெற்கேயிருந்து கடல்கொள்ளுமுறையாய்ச்சொல்லு முரையாசிரியர் "தடநீர்க்குமரி வடபெருங் கோட்டை" வடக்கிறுதியில்வைத்துமுடித்தனர். பஃறுளியாற்றிற்குத்தெற்குக் குமரிக்கோடொன்றிருந்ததில்லையென்பது அடியார்க்குநல்லார்சொல்லியதால் நன்றாய்த்தெரியும். தென்பாலிமுகத்தில் குமரிக்கோடு சண்முகனார் நூதனசிருஷ்டி. அப்படியொன்றிருந்ததாக விதுவரையில் வேறொருவராலும் சொல்லப்பட்டதாகக்

கன்னியாகுமரி பக்கத்துவீற்றிருப்பதுவே குமரியாற்றிற்கப்பெயர் வாய்ந்ததற்குக் காரணமெனக்கொண்டா லதற்கு எழுநூற்றுக்காவத வாற்றுக்குமேல் தெற்கே விலகியிருக்கும் குமரிமலைக்கு அப்பெயர் வாய்ந்ததற்குக்காரணம் சண்முகனார்தானறிவர்.

இதுநிற்க; குமரிக்கோடென்னுந்தொடர்மொழிப்பொருள் என்னவென்று விசாரிப்போம். சிலப்பதிகார வரும்பதவுரையாசிரியர் குமரிக்கோடுங்கொடுங்கடல்கொள்ளவென்புழி கோடு=கரை. என்றெழுதினர். குமரியைக் குமரியாறெனக்கொண்டு "கோடு" அவ்வியாற்றின்கரையென்றெழுதினரென்பது தெற்றெனவிளங்கும். அடியார்க்குநல்லார் வேனிற்காதையுரையில் "தடநீர்க்குமரிவடபெருங்கோட்டின்காறும்" என்றெழுதியதில் குமரியை யாறெனக்கொண்டு "கோடு" அதன்கரையெனக்கொண்டனரென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோலவிளங்கும். குமரியையாறாகக்கொள்ளாவிடில் "தடநீர்" என்னுமடைகளைக் குமரிக்குக் கொடுத்திருக்கமாட்டாரென்பது திண்ணம். ஆற்றைச்சொல்லியதன் வடகோடென்றாலவ்வியாற்றின் வடகரையென்பதைத்தவிர வேறு என்னபொருள்படும். நாடுகாண்காதையில் இளங்கோவடிகள்

"கொழும்புனற்காவிரி
வடபெருங்கோட்டுமலர்ப்பொழினுழைந்து"

என்றுசொல்லியிருப்பதற்கு அடியார்க்குநல்லார் காவிரியினதுபெரிய வடகரையில்என்று அர்த்தமெழுதியதோடு, கோடு=கரையென்றெழுதியிருக்கின்றனர். நிகண்டில் கோடு-மலையுச்சி, நீர்க்கரை என்றெழுதியிருக்கிறது. மலையின்பெயர்களில் கோடுகாணப்படவில்லை. இலக்கியங்களில் குன்று, கோடு என்று பேதமின்றியேவழங்குகிறது. பெருமலை, கோடென்று சொல்லப்பட்டிருப்பதைக்காணேம். காடுகாண்காதையுரையில் கோடு, மலையென்று அடியார்க்குநல்லார் எழுதியதுபோலக் கண்டிருக்கிறது. வேனிற்காதையுரையில்சொன்னதற்கு, நேர்விரோதமாயவரே யப்படியெழுதுவாரென்று நினைப்பதற்கிடமில்லை. இடைவைப்பு என்றுதோன்றுகிறது. "பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடு" என்று இளங்கோவடிகள் சொல்லியிருப்பது குமரியாற்றின்வடகரை மலைத்தொடர்பாலாகியதைக்குறிக்கும்.

குமரியென்பது, பெண்பாற்பெயர். பெண்யாற்பெயரையுடையமலை சண்முகனார் தமதுகொள்கையையாதரிக்கப்படைத்த குமரிமலையைத்

தவிர இப்பரதகண்டத்தி லெங்குங்காணப்படவில்லை. உரையாசிரியரனைவரும், குமரியை யாறெனக்கொண்டதற்குரிய காரணங்களிலதுவுமொன்று.

இளங்கோவடிகள், பஃறுளியாற்றையுங்குமரிக்கோட்டையுங் கடல்கொண்டதென்றுசொல்லுகின்றனர். சண்முகனார்சொல்லுகிறபடி குமரிமலை பஃறுளியாற்றிற்குத்தெற்கேயுள்ளதானாலவையிரண்டையுங் கடல்கொள்வதனாலவையிற்றிற்கு வடக்கேயிருக்குந் தமிழ்நாடுகளுக்கு ஓரழிவுண்டாயிற்றென்று சொல்வதற்குச் சிறிதுமிடமில்லை. குமரிக்கோடு 49 தமிழ்நாடுகளுக்கும் வடக்கிலிருப்பதாகக்கொண்டா லப்போது 49 தமிழ்நாடுகளுக்கு மழிவுசொல்லியேதீரவேண்டும். அடியார்க்குநல்லாரவ்வாறுகொண்டனரென்பது அவர் 49 தமிழ்நாடுகளுக்கு அழிவுசொன்னதால் தெற்றெனவிளங்கும்.

குமரியைமலையெனக்கொண்டதனால் இளம்பூரணவடிகளும், நச்சினார்க்கினியரும், வேங்கடங்குமரி தமிழ்கூறு நல்லுலகத்துக்கு அகப்பாட்டெல்லையாயினவென்று கூறியதற்குச் சண்முகனார் திரிபுடப்பொருள் கூறுவாராயினர். உரையாசிரியர்கள், வேங்கடமுங்குமரியுந் தமிழ்கூறு நல்லுலகத்தைத் தம்மகப்படுத்துதலையுடைமையா, லவையிற்றை யவ்வுலகத்துக்கு அகப்பாட்டெல்லையெனக்கூறினர். அகப்பாட்டெல்லையென்னுந் தொடர்மொழியின்பொருளை முற்றுமறியாத சண்முகனார் அகவெல்லையென்பது அதன்பொருளெனக்கொண்டனரென்பது அவர் புத்தகத்திலடங்கிய பின்கண்டவற்றால்விளங்கும். Page 201 "இனி இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் குமரியையாறெனக்கொண்டமையால் அவ்வியாற்றின்றென்பாலுள்ள பஃறுளியாரும் 49 தமிழ்நாடுகளுமவ்வெல்லையுட்படாமைநோக்கி யவற்றைப் புறவெல்லையுட்பட்டன எனத்திரிபுடக்கருதி வேங்கடங்குமரியை யகப்பாட்டெல்லையென்றார். அதுபொருந்தாது" மற்றோரிடத்தில் தலைச்சங்கமிரீஇய தென்மதுரையை யகவெல்லையுட்படுத்தாது புறவெல்லையுட்படுத்தலு, மக்காலத்துக் குமரியாற்றின்வடபால் பாண்டியர்க்குத்தலைநகரமும் சங்கமுமின்றிப் பெரும்பான்மைகாடெனக்கிடந்தவந்நாட்டினை யகப்பாட்டெல்லையெனலும் கூடாமையால் என்பன. அகவெல்லையெனக்கொண்டதனால் புறவெல்லையொன்று கற்பிக்கும்படிநேரிட்டது. அகவெல்லை, புறவெல்லையென்னும் பதங்களுக்குப் பொருள் என்னகொண்டனரென்று தெரியவில்லை. தம்மால் கற்பிக்கப்பட்ட புறவெல்லையைக் கனவிலுமறியாத

இளம்பூரணவடிகள், நச்சினார்க்கினியர் இவர்களுக்கு அவர்களவற்றைப் புறவெல்லையுட்பட்டனவெனத் திரிபுபடக்கருதினாரென்றார். உரையாசிரியர்கள் தமிழ்நாட்டுக்குத்தெற்கெல்லை யகம்புறமென இரண்டுகூற நினைத்தார்களென்றுகொள்வதற் கிடமேயில்லை. இளம்பூரணவடிகள் குமரியாற்றிற்குத் தெற்கேயுள்ளது தமிழ்நாடல்லாத பிறநாடென்று கொண்டமையால் அப்புறநாட்டுக்கு எல்லைகூறநினைத்தாரென்று சொல்வது சொல்பவரறியாமையைக்காட்டுகிறது. நச்சினார்க்கினியர், குமரியாற்றிற்குத் தெற்குள்ள 49 தமிழ்நாடுகள் தொல்காப்பியகாலத்துக்கு முன்னரே கடல்கொண்டதென்றுநினைத்ததனா லில்லாதநாட்டிற்கு எல்லைகூற அவர் கருதினாரென்பது வியப்பைத்தரும். நச்சினார்க்கினியர் பின்கண்டமொழிகளாலவர்கருத்துவிளங்கும். "வடவேங்கடந்தென் குமரி யிவையிரண்டு மகப்பாட்டெல்லையாயின, என்னை? குமரியாற்றின் றெற்கு நாற்பத்தொன்பதுநாடு கடல்கொண்டதாகலின்" என்பது.

இதுநிற்க, செந்தமிழ்நிலம் 1 செந்தமிழ்நிலஞ்சேர்ந்த நிலம் 12 ஆக 13, ஆகத் தமிழுலகமுழுவதையுந் தொல்காப்பியர் பிரித்தாரென்பது பின்கண்ட 2 சூத்திரங்களால்விளங்கும்.

1. அவற்றுள், இயற்சொற்றாமே செந்தமிழ்நிலத்துவழக்கொடுசிவணித்
 தம்பொருள்வழாமையிசைக்குஞ்சொல்லே. தொல். எச்சவியல்.
2. செந்தமிழ்சேர்ந்தபன்னிருநிலத்துந்
 தங்குறிப்பினவேதிசைச்சொலென்ப. ஷை ஷை

உரையாசிரியர்களனைவரும் தமிழுலகமுழுவதையுந் தொல்காப்பியர் 13 நாடுகளாகப்பிரித்தனரெனச்சொல்லி, யவற்றில் செந்தமிழ்நிலஞ் சேர்ந்த 12 நிலத்துக்குக் கொடுந்தமிழ்நாடெனப் பெயர்கொடுத்தனர். இலக்கணப்பின்னூலாராகிய நன்னூலார், இலக்கணவிளக்கநூலாசிரியர் முதலியவனைவரும் அப்பதின்மூன்றுபிரிவினையே யொப்புக்கொண்டனரென்பது பின்கண்ட நன்னூல், இலக்கணவிளக்கசூத்திரங்களால் விளங்கும்.

1. செந்தமிழாகித்திரியாதியார்க்குந்
 தம்பொருள்விளக்குந்தன்மையவியற்சொல்.
2. செந்தமிழ்நிலஞ்சேர்பன்னிருநிலத்தினும்
 ஒன்பதிற்றிரண்டினிற்றமிழொழிநிலத்தினும்
 தங்குறிப்பினவேதிசைச்சொலென்ப.



மேற்கண்ட 13 நிலங்களின்னவையென்றுகாட்டு மடியில்கண்டஇரண்டு செய்யுள்கள் தமிழாசிரியர்களுக்குள் வழங்கிவருவதையடியில் வரைகின்றேன்.

1. சந்தனப்பொதியச்செந்தமிழ்முனியும்
சௌந்தரபாண்டியனெனுந்தமிழ்நாடனும்
சங்கப்புலவருந்தழைத்தினிதிருக்கும்
மங்கலப்பாண்டிவளநாடென்ப.

2. தென்பாண்டிகுட்டங்குடங்கற்காவேண்பூழி
பன்றியருவாவதன்வடக்கு—நன்றாய
சீதமலாடுபுனனாடுசெந்தமிழ்சேர்
ஏதமில்பன்னிருநாட்டெண்.

இப்பொழுது கடையாகவென்றுகாட்டப்பட்டசெய்யுளில்தொல்காப்பியனார் சூத்திரத்தில்கண்டபடிக்குச் செந்தமிழ்நிலத்தைச்சேர்ந்தநிலங்களை யுரையாசிரியர்போல் கொடுந்தமிழ்நிலமெனச்சொல்லாது "செந்தமிழ்சேர்நாட்டெண்" எனமுடித்தனர். இவ்வாறு வெகு காலங்களாய்த் தமிழுலகமுழுவதும் 13 பிரிவுகளாகப்பிரிக்கப்பட்டு ஆன்றோர்வழக்கிலமைந்துவந்திருப்பது எல்லாருமறிந்தவிஷயம். மேற்கண்ட 13 நிலங்களின்பிரிவில் சில மாறுபட்ட அபிப்பிராயங்களிருப்பினு மவையாவுங் குமரிக்குவடக்கேயுள்ளனவென்பதில் பண்டிதர்களுக்குச் சிறிதுமாறுபட்ட அபிப்பிராயமில்லை. இந்நிலங்களினமைதியையும் பக்கத்தில் வைத்திருக்கும்படத்தாலறியலாம். சண்முகனார் ஆன்றோர்யாவராலு மொப்புக்கொள்ளப்பட்டு வந்திருப்பதைக் கவனியாது, தொல்காப்பியச் சூத்திரங்களைத் திரிபுபடவுணர்ந்து தமிழுலகத்தை வேங்கடமுதல் பஃறுளியாற்றிற்குத் தெற்குத்தம்மால் ஸ்தாபிக்கப்பட்ட குமரிமலைவரை நீட்டி, முழுவதையும் பன்னிரண்டுசெந்தமிழ்நிலங்களாகப்பிரித்தனர். தொல்காப்பியம் செய்தபொழுது, குமரிக்குத்தெற்கே 49 தமிழ்நாடுகளிருந்திருந்தால் அந்த 49 ஓடு குமரிக்குவடக்கிருந்த தமிழ்நாடுகளின் கணக்கையுஞ்சேர்த்து இவ்வளவென்றுசொல்லாது 12செந்தமிழ்நிலங்களாக அவற்றையே மாற்றிப்பிரிப்பானேன்? 12 நாடுகளுக்குப்பெயரென்ன எல்லையென்ன? அப்பனிரண்டில் குமரிக்குவடக்கெத்தனை, குமரிக்குத் தெற்கெத்தனை? குமரிக்கு வடக்குள்ளனவற்றிற்காவது பெயருமெல்லையுஞ் சொல்லக்கூடுமா? தென்பாண்டிநாடென்னும்பெயர் எவ்வளவுகாலமாக வழங்குகிறது? தமது கொள்கையை நாட்டுதலொன்றையேகருதித் தம் மனம்போனவாறுதிரித்துச் சூத்திரங்களுக்

மேலும், ஆன்றோர்யாவரும் செந்தமிழ்நாடு, கொடுந்தமிழ்நாடு எவ்விடத்திலும்வழங்குவதும் யாவராலுமறியப்படுவதுமாயுள்ளசொற்களையியற்சொல்லென்றுஞ், செந்தமிழ்நிலத்துவழக்கில்இல்லாது கொடுந்தமிழ்நாடுகளில் வழங்குஞ்சொற்களைத் திசைச்சொல்லென்றும்கொண்டனர். செந்தமிழ்நிலத்தைக்குறித்துக் கொடுந்தமிழ்நிலங்கள்பலதிசைகளிலுள்ளனவாதலா லவற்றில்வழங்குஞ்சொற்களுக்குத் திசைச்சொல்லென்னும்பெயர்வந்தது. எல்லாநிலங்களுக்கும் பொதுவாதலின் இயற்சொல்லென்னும்பெயர் மற்றொன்றிற்குவந்தது. சண்முகனார்செய்த திரிபுரையையொப்புக்கொண்டால் ஆன்றோர்சொன்னதிசைச்சொல் இல்லாமற்போகும். இயற்சொல்லுந் திசைச்சொல்லு மெல்லாநிலத்திலுங்காணப்படல்வேண்டும்.

செந்தமிழ்நிலம் 12 என்றுசொல்வதாயிருந்தால் இயற்சொல்லுக்கு இலக்கணங்கூறியசூத்திரத்திற்சொல்லாது திசைச்சொல்லுக்கிலக்கணங்கூறியசூத்திரத்தில் தொல்காப்பியனார் சொல்லுவானேன். மேலும், நூலாசிரியர் இயற்சொல்லிலக்கணஞ்சொல்லியசூத்திரத்து "செந்தமிழ்நில"மென்றுதாம்சொல்லியதைத் திசைச்சொல்லிலக்கணங்கூறுஞ் சூத்திரத்துச் சுருங்கச்சொல்ல லென்னு மழகுடனமைத்துச் "செந்தமிழ்"என்றனர். அம்மொழி ஆகுபெயராய்ச் செந்தமிழ்வழங்குநிலத்தையுணர்த்துதலால் ஆன்றோரனைவரும் அதையவ்வாறேயுணர்ந்தனர். சண்முகனார் அவ்வாறுகொள்ளாது செந்தமிழ்நிலமென்று முன்சூத்திரத்திற்சொன்னதைத் திசைச்சொற்சூத்திரத்தி லாசிரியர் "செந்தமிழ்சேர்ந்தநிலம்" என்றுசொல்லியதாகக்கொண்டனர். செந்தமிழ்நிலமென்று தாம் முன்சூத்திரத்திற்கூறியது தெளிவுபடக்கூறியதாகாதென்றுகருதி, Page 211-15 "சேர்ந்த" என்னுமொருசொல்லைச் சேர்த்துக்கூறினாரென்றுசொல்வதுபொருந்தாது. சூத்திரம்செய்யுமாசிரியர் "செந்தமிழ்நிலம்" என்னுமொழி தெளிவாயிருக்க, மிகைபடக்கூறலென்னும் தோஷத்துக்குட்பட்டு அனுவசியமாய்ச் "சேர்ந்த" வென்னும்பதத்தைச்சேர்த்தாரென்று சண்முகனார்தான் சொல்லத் துணிந்தார். செந்தமிழ்வழங்கும்நிலத்தைச் "செந்தமிழ்சேர்ந்தநில" மென்று தொல்காப்பியனார்வேறுஎந்தவிடத்திலாவதுபிரயோகஞ்செய்திருக்கின்றனரா? சண்முகனார் பரக்கவெழுதியிருக்கும்பாயிரவிருத்தியிலின்னுமநேக பிசகுகளிருப்பினும் நான் மேற்கொண்டகாரியத்துக்கு அவைகளில் காலம்போக்குதல் அவசியமில்லையாதலாலவற்றைவிடுத்தேன்.

பண்டித S. சுப்பிரமணியசாஸ்திரி,

தஞ்சை.

அந்தகக்கவி வீரராகவமுதலியார்காலம்.

தொகுதி-௧௨ல் ௫௦-ம்பக்கத் தொடர்ச்சி.

மகாவம்சமுதலிய சிங்கள இதிகாசங்களில், தமிழரையும் தமிழரசரையுங்குறித்துள்ள பலவிசேஷச்செய்திகள் அறியக்கிடக்கின்றனவென்பது சரித்திரவாராய்ச்சி வல்லுநர்க்குத் தெரிந்தவிஷயமே. விரித்துரைக்கிற் பெருகுமாதலாற், கூடியவளவு சுருக்கமாய், எடுத்துக்கொண்டவிஷயத்துக்கேற்ற சிலவுண்மைகளைச் சற்றே நுணுகி ஆராய்வாம்.

கி. மு. 543-ல் "வங்க கலிங்க" அரசர்கள்வம்சத்தில்வந்த "சிங்கவாகு"வின்மகன் "விஜயன்"என்போன் இலங்கைக்குவந்து தென்மதுரைக்கரசன் பாண்டியனதுமகளை வதுவைசெய்து இலங்கையில் அரசாண்டனன். இவன்காலத்தில் பாண்டியநாட்டிலிருந்து தமிழர் அநேகர் இலங்கைக்குவந்து குடியேறினர். இவனுடையதலைநகரம் "தம்மன்னநகரி" யென்றழைக்கப்பட்டது.

கி. மு. 237-ல் "சூரத்திசன்"அரசனாயினன். இவன், தன் அசுவப்படைக்குச் "சேனகுத்திகர்" என்னும் இரண்டு தமிழவீரரைத் தலைவராகநியமித்தனன். இவர்கள், அரசனைச் சதிசெய்துகொன்று இருபத்திரண்டாண்டு தாங்களே அரசுநடாத்திப் பின்பு "அசேல"னென்னும் சிங்களவரசனாற் கொலையுண்டனர். இச்"சேனகுத்திகர்" குதிரைப்படை, கடற்படையென்ற இருபடைகளிலும் மிக்கபலமுடையராயிருந்தனரென்று இதிகாசங்கூறுகின்றது. இவர்கள்காலத்திலும் தமிழர் பலர் ஈழத்திலே குடியேறியிருந்தனரென் றெண்ணுதல் தவறன்று.

கி. மு. 205-ல் "ஏலாலன்"என்னுமோர் தமிழவீரன் சோழதேசத்திலிருந்து ஈழத்தின்மேற் படையெடுத்துவந்து "அசேல"னைக்கொன்று மகாவலிகங்கைக்கும் தெத்துராற்றுக்கும் வடபுறமாயுள்ள தீவின் பாகம்முழுவதையுங் கைப்பற்றி நாற்பத்துநான்குவருஷம் அரசாண்டு "துத்தக்காமினி"யென்னும் சிங்களவரசனாற் சமர்க்களத்திற் கொலையுண்டிறந்தனன். இவ்வேலாலன்காலத்திலே தமிழர் பல்லாயிரவர் இலங்கைத்தீவிற்குடியேறி மிகவும் பிரபலமாய் வாழ்ந்திருந்தனரென்று இதிகாசங்கூறும்.

கி. மு. 103-ல் ஏழுதமிழவீரர் படையெடுத்துவந்து முதலாம் "வலகம்வாகு"என்னும் சிங்களவரசனைப் போர்முகத்திற் றோல்வியுறச் செய்து சிங்காசனத்தைக்கைப்பற்றினர். இவ்வெழுவரி லொருவன் வலகம்வாகுவின்பட்டத்துத்தேவியாகிய "சோமதேவி"யைக்கவர்ந்து கொண்டு தன்னூர்க்குத்திரும்பினன். இன்னொருவன் புத்தருடைய பானபாத்திரத்தையெடுத்துக்கொண்டு திரும்பினன். புலகத்தன், வகியன், பணியாமாறன், பிழையாமாறன், ததியன்என்னும் மற்றைறவரும் ஒருவர்பின் ஒருவராகப் பதினாலரைவருஷம் அரசாண்டபின் "ததிய"னென்பவன் வலகம்வாகுவினாற் போரில் அபசெயப்பட்டு மாண்டனன்.

கி. மு. 62-ல் "சோரநாகன்"என்பவன் அரசனாகிப் பன்னிரண்டு வருஷம் அரசாண்டபின் அவன்மனைவி "அனுலை"என்பவளால் நஞ்சூட்டப்பட்டிறந்தனன். பின்பு இவ்வரசி ஒருவர்பின் ஒருவராகத் தமிழக்குலத்தவனான ஓர் கம்பியனையும், ஓர் பிராமணனையும் விவாகம்பண்ணிக்கொண்டு அவர்களைச் சிங்காசனமேற்றி அவர்களையும் நஞ்சூட்டிக் கொன்றனள்.

கி. மு. 42-ல் ஈழத்திலிருந்து தமிழகத்துக்கு ஓடிப்போன "எல்லொணன் காலகண்ணித்திஸ்ஸன்" என்னும் சிங்களவரசன் ஒருபெரிய தமிழச்சேனையோடுவந்திறங்கி அனுலையைத் தோல்வியுறச்செய்து தனது உரிமைச்சிங்காசனத்தைத் திரும்பப்பிடித்துக்கொண்டனன்.

கி. பி. 110-ல் அரசாண்ட "வங்கநாசிகன்"என்னும் அரசன்காலத்திற் சோழவரசன் இலங்கையைத்தாக்கிச் சிங்களவர் பல்லாயிரவரைப் பிடித்துச் சோழதேசத்துக்குக்கொண்டுபோயினன். கி. பி. 113-ல் முதலாங்"கயவாகு" சோழதேசத்தின்மேற் படையெடுத்துப்போய்க் காவிரித்தீரத்திற்குடியிருந்த பன்னீராயிரம் தமிழக்குடும்பங்களைச் சிறைபிடித்துச்சென்று ஈழத்திலுள்ள அளுக்குத்துக்கோறளையென்னு மிடத்திற் குடியிருத்தினன்.

கி. பி. 209-ல் தமிழகத்துக்குஓடிப்போய் அங்கேயே சில்லாண்டுகள் காலங்கழித்த "அபயன்"என்னும் ஈழத்தரசகுமாரன், தருணங்கண்டு பெரிய வோர் தமிழச்சேனையுடன் ஈழத்தின்மேற்சென்று சமர்புரிந்து அரசனைத்தோல்வியுறச்செய்து தானே அரசனாயினன்.

கி. பி. 433-ல் "மித்தசேனன்"என்பவன் அரசனாயிருந்தபொழுது பாண்டென்னு மோர்தமிழன் ஈழத்தின்மேற்படையெடுத்துப்போய் அரசனைக்கொன்று அரியாசனத்தைக்கைப்பற்றினன். இப்பாண்டு காலஞ்சென்றுபோக அவன்மக்கள் பாரிந்தன், குட்டபாரிந்தன் என்போர் அரசுநடாத்தினர். இவர்கள் மாண்டுபோக ததியன், பிதியன் என்னும் தமிழவரசர் சிலகாலம் செங்கோலோச்சித் தாத்துசேனன் என்னும் சிங்களவரசனாற் போர்க்களரியிற் பட்டுமுடிந்தனர். இத்தாத்துசேனன் தமிழரை வேரறுத்துப் பௌத்தத்தை நிலைநிறுத்தித் தமிழரோடு சேர்ந்திருந்த சிங்களப் பிரபுக்களையும், நாட்டாண்மைக்காரர்களையும் துன்புறுத்தித் தாழ்நிலைவைத்துச் சிங்களவரசை அதன் முன்னிலைக்குத் திரும்பக்கொண்டுவந்தனனென்று இதிகாசங்கூறும்.

கி. பி. 497-ல் மொக்கல்லனன் என்னும் சிங்களவரசன் சமணசமயத்தவரான நிகந்தருடைய உதவியினாற் சம்புத்தீவிலிருந்து ஓர்பெரிய சேனையுடனிறங்கித் தனது உடன்பிறந்தானாகிய காசியப்பனென்னும் சிங்களவரசனைச் சமர்க்களத்திற்கொன்று சிங்காசனமேறினான். இவன் கடற்கரையிற் காவற்சேனைகளைவைத்து தமிழச்சேனைகள் தீவின்மேற் படையெடுத்துவாராதபடி தடுத்தனன்.

கி. பி. 616-ல் சிலாமேகவண்ணன் என்னும் ஈழத்தரசன்காலத்தில் சிரீநாகன் என்னும் ஈழத்திராசகுமாரன் தமிழகத்துக்குச்சென்று பெரிய தமிழச்சேனையொன்றைத் திரட்டி ஈழத்தின்மேற்படையெடுத்துச்சென்று அதன் வடக்குப்பாகத்தைப்பிடிக்கமுயன்று போர்க்களத்தில் அபசெயப்பட்டுக் கொலையுண்டனனாக; சிறைப்பட்ட தமிழவீரர் பல்லரைச் சிலாமேகன் சற்றேனுமிரக்கமின்றி வதைசெய்து எஞ்சினோரை விகாரங்களுக்கு அடிமைகளாகக்கொடுத்துவிட்டான்.

கி. பி. 623-ல் மூன்றாம்அக்கபோதி அரசனாயினன். செதத்திஸ்ஸனென்பவன் இவ்வரசனுக்கு விரோதமாகப் பெரிய ஓர் படையைத் திரட்டி மிகவும் உக்கிரமாய்த் தாக்கியதனால் அரசன் உயிர்தப்பத் தமிழகத்துக்கு ஓடிப்போய்அங்கே தமிழச்சேனையொன்றைத்திரட்டி ஈழத்தின்மேற்றிரும்பினான். இதைச் செதத்திஸ்ஸன் கேள்வியுற்று உடனே தனதுசேனாபதி ததசிவன் என்பவனைத் தனக்குமோர் தமிழச்சேனையைச் சேர்க்கும்படி தமிழகத்துக்கு அனுப்பிவிட்டுக் கசாருடனாய்ச் செருக்களத்திற்புகுந்து தமிழவீரரைச் சங்காரம்பண்ணினான். இதைக் கண்ட வேலப்பன் என்னு மோர் தமிழவீரன் மிகவும் கோபங்கொண்டு

தன்னுயிரைவாங்கும்படி விரைந்து முன்வருவதை அரசன்கண்டு வாளை உருவித் தன்கழுத்தைத் தானே வெட்டிக்கொண்டு மடிந்தனன். அரசன்மடியவே, அவன்பின்நின்ற சேனையெல்லாம் ஓட்டம் பிடிக்கத் தமிழர் செயபேரிகைகொட்டினார்கள். இதன்பின்னர்த் தமிழகத்துக்குப்போயிருந்த ததசிவன்என்னும் தளபதி தமிழச்சேனையொன்றுடன் ஈழத்தின்மேற்படையெடுத்துவந்து அக்கபோடியரசனை அமர்க்களத்திற் புறங்காட்டச்செய்து சிங்காசனமேறினான். அக்கபோடியரசன் தமிழகத்துக்குத் திரும்பவும் ஓடிப்போயினன். ததசிவன் தனக்குதவிசெய்த தமிழச்சேனாவீரர்களுக்குப் பௌத்தாலயங்களிலிருந்த விலைபெற்ற பாத்திரங்களையும் பொருள்களையும் உபகரித்து மதத்துக்குப் பெருங்கெடுதிசெய்தனன். தமிழகத்துக்கு ஓடிப்போன அக்கபோடி, ஒருபெருந் தமிழச்சேனையுடன் திரும்பிவந்து ததசிவனைச் சமரில் வென்றனன். பின்னர்த் ததசிவன் அக்கபோடியைத் தோற்கடிக்க அக்கபோடியின்தம்பி காசியப்பன், ததசிவனைத் தோற்கடிக்க இவன் தமிழகத்துக்குத் திரும்பவும் ஓடிப்போயினன். சிறிதுகாலத்துக்குள், ததசிவன் பெரியவோர் தமிழச்சேனையுடனே ஈழத்திலிறங்கக் காசியப்பன் சமர்க்களத்தில் அவனைக்கொன்றனன்.

கி. பி. 661-ல் முதலாந்தப்புலுவும் அவன்மகன் மானா என்பவனும் தமிழரைச் சிறுமைப்படுத்த முயன்றனர். இதைக்கண்ட தமிழர் ஒருமித்தெழும்பி இராஜதானியைப் பிடித்துக்கொண்டு காசியப்பனுக்குப் பயந்து தமிழகத்தில் அடைக்கலம்புகுந்திருந்த கத்ததத்தனென்னும் ஈழத்திராசகுமாரனை ஆளனுப்பி அழைத்தனர். ஆயினும் ‘தப்புலுவும்’ மானாவும், தமிழருக்குள் பிரிவினைகளையுண்டாக்கி அவர்களைக் கீழ்ப்படுத்தினர். கத்ததத்தன் மிகவும் துரிதமாய் ஒரு தமிழச்சேனையைச் சேர்த்துக்கொண்டு ஈழத்தில்வந்திறங்கவே ஈழத்திற் குடியேறியிருந்த தமிழப்பிரபுக்களெல்லாரும் அவன்பக்கமாய்த்திரண்டு இராஜதானியைப்பிடித்து அவனை அரசனாக்கினர். இவன் தனக்குதவிசெய்த தமிழ்மக்களெல்லோருக்கும் தகுந்த வெகுமானங்கள்கொடுத்து அவர்களை உயர்ந்த உத்தியோகங்களில்வைத்தனன்.

நாலாம்அக்கபோடி இறந்தபின்பு பொத்தக்கூத்தனென்னுமோர் தமிழப்பிரபு அரசுக்கு உரியனான ததசிவனென்பவனைச் சிறைப்படுத்தித் தத்தனென்னுமோர் இராஜகுமாரனைச் சிங்காசனமேற்றித் தானே அரசுநடாத்திவந்தனன். இத் தத்தன் சிலகாலம் உயிரோடிருந்து

மாண்டுபோகப் பொத்தக்கூத்தன் கத்ததத்தனென்னும் வேறொருவனைச் சிங்காசனமேற்றித் தானே இராஜாங்ககாரியங்களை நடப்பித்து வந்தனன்.

கத்ததத்தன்மாண்டுபோக “மானவர்மன்” அரசனாயினன். இம்மானவர்மனைப்பற்றி இதிகாசம் பின்வருமாறுகூறுகின்றது. முதலாங்கத்ததத்தனை ஈழத்திலிருந்த தமிழப்பிரபுக்கள் தமிழகத்திலிருந்தழைத்து அரசனாக்கினபொழுது மானவர்மன் தமிழகத்துக்குப்போய் நரசிங்கனென்னும் அரசனோடு நேசித்து அவன்சேவைக்குள்ளாகி அதிகப்பிரயாசத்தோடு அவனுடைய தயவைச்சம்பாதித்துக்கொண்டு பின்பு தனது பாரியாகிய சங்கையென்பவளையும் தமிழகத்துக்கு வரவழைத்துக்கொண்டு நரசிங்கஅரசனுக்கு இரவும்பகலும் ஊழியஞ்செய்துகொண்டு எட்டுப்பிள்ளைகாலத்துக்கு அங்கேயேயிருந்துவிட்டான். இவ்வாறு இருக்குங்கால் கண்டுவெட்டி என்னும் நாமதேயமுள்ள இன்னொருஅரசனுடனும்மித்திரத்துவம்பூண்டு பெருங்கொடைகளுக்கிலக்காய் வாழ்ந்துவருங்காலத்தில், வல்லபன் என்னுமோர் அரசன் நரசிங்கவரசன்மேற் படையெடுத்துவந்தனன். மானவர்மனும் நரசிங்கவரசனோடு போர்முகத்துக்குச்சென்று பெருஞ்சமர்புரிந்து வல்லபனைப் புறங்கொடுக்கச்செய்து அரசன்பேரில் தனக்குண்டாயிருந்த வஞ்சமில் சிநேகத்தைப் பிரத்தியக்ஷமாக்கினன். நரசிங்கவரசனும் மானவர்மன் தனக்குச்செய்த பேருதவியைக்கண்டுமி அகமகிழ்ந்து நன்றிபாராட்டநினைந்து பெருஞ்சேனையொன்றுதிரட்டி ஈழத்தை ஜெயித்துக்கொடுக்கும்படி ஆஞ்ஞாபித்து அவனுடன் அனுப்பினான். மானவர்மன் ஈழக்கரையில் இப் பெரியசேனையுடனிறங்கிச் சமர்புரியத்தொடங்கினனாக, ஈழத்தரசன் ஓட்டம்பிடித்தனன். மானவர்மனுடன்வந்த தமிழச்சேனை அவனுக்குச் சதிசெய்து விரோதித்ததினால் அவன் தமிழகத்துக்குத் திரும்பிப்போய் நரசிங்கஅரசனிடம் வேலையிலமர்ந்திருந்தனன். சில்லாண்டுகள் கழிந்தபின் நரசிங்கவரசன் ஈழத்தை ஜெயித்து இவனுக்குக் கொடுக்கும்படி பெரும்படையொன்றை இரண்டாம்முறை அனுப்பினான். ஈழத்தரசனது சேனாபதி பொத்தக்கூத்தனென்போன் மானவர்மனையெதிர்த்துச் சமர்புரிந்து தோல்வியுற்று மடிந்தனன். மானவர்மனே அரசைக்கைப்பற்றி முப்பத்தைந்துஆண்டு செங்கோல் செலுத்திக் கி. பி. 726-ல் மரணமடைந்தனன்.

(தொடரும்.)

வே. ஜோ. தம்பிப்பிள்ளை (M. R. A. S.)

மதுரை நாயக்கர்வம்சத்தரசர்கள்.

MADURA NAYAK KINGS.

"செந்தமிழ்" (தொகுதி-௧௪ பகுதி ௧௦-ல்) ௩௯௪-ம்பக்கத்தொடர்ச்சி.

6. முத்துவீரப்பநாயக்கன்.
(1609—1623).

1609-ம்ஆண்டில்இறந்த முத்துக்கிருஷ்ணப்பனுக்கு முத்துவீரப்பன், திருமலை, குமாரமுத்துஎன்னும் மூன்றுபுதல்வர் இருந்தார்கள். அவர்களில் ஜேஷ்டனான முத்துவீரப்பன் பட்டத்துக்குவந்தான். இவன்காலத்தில் அதிசயமான ஸம்பவங்கள் ஏதேனும் நேர்ந்ததாகத் தெரியவில்லை.

சண்டைகள். ஆட்சித்துவக்கத்தில் தஞ்சைமன்னனோடும் மைசூர் மன்னனோடும் சிலசண்டைகள்நடந்தனவென்று தெரிகின்றது. மைசூரிலிருந்து மகமதியப்படைகள் வடமேற்குப்ரதேசங்களின்மேல் படையெடுத்துத் திண்டுக்கல்வரை வந்தனவென்றும், விரூபாக்ஷிப்பாளையக்காரன் அவைகளை முறியடித்துத் துரத்திவிட்டதாகவும், அதனால் அவனுக்குப் பாளைகாவல் என்னும் பட்டமளிக்கப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. இதுதவிர, மோகல்சேனை படையெடுத்துவந்தபோது நக்கட்டளைப்பாளையக்காரன் சின்னக்காத்திரன் அவர்களை முறியடித்துத் துரத்தினதாகவும், அதற்காக அவன் திண்டுக்கல் சீமைமுழுமைக்கும் தலைவனாக்கப்பட்டானென்றும் சொல்லுவதுண்டு.

கிறிஸ்தவமதம். 16-ம்நூற்றாண்டு இறுதிமுதல் மதுராராஜ்யத்தில் கிறிஸ்தவமதம் பரவத்தொடங்கினதாய்த் தெரியவருகின்றது. அக்காலத்து அரசர்கள் புறமதங்களுக்கு இடையூறுகள்செய்யாப் பெருந்தன்மைவாய்ந்தவராயிருந்தனர். முதன்முதல் கிறிஸ்தவமதப்பிரசங்கத்தைப் போர்த்துக்கீஸ்ஜாதியாரே கைக்கொண்டிருந்தனர். பரவர் என்ற செம்படவச்சாதியாரே அம்மதத்தில் விசேஷமாய்ச் சேர்ந்திருந்தார்கள். 1609-ம்ஆண்டுக்கு முன்னதாகவே மதுரையில் ஓர் கிறிஸ்தவாலயம் நிர்மாணமாயிருந்ததாய்த் தெரியவருகின்றது.

நமது சரித்திரகாலத்தில் பெர்னாண்டஸ்துரை பாதிரி உத்யோகம் செய்துவந்தார். அவர் தமக்கு அந்நியமதஸ்தராயிருந்த வடுகர் முதலானவரைத் தம் மதத்தில் சேர்க்க அதிக முயற்சிசெய்துவந்தார்.

ஆயினும் இவர்தேசத்தவரான போர்த்துக்கீஸ்ஜாதியார், பசுமாம்ஸம், மதுபானம் முதலான கெட்ட ஒழுக்கங்களாலும் மற்றுமுள்ள கெட்ட ஆசாரங்களாலும் பரங்கியர்என்று எல்லாராலும் இகழப்பட்டார்கள். இதனால் பெர்னாண்டஸ்பாதிரியார் முயற்சி பலன்பெறாமற் போய்விட்டது.

இந்தநிலைமையில் 1606-ம்ஆண்டில் ராபர்ட் டி நோபிலிபஸ் என்னும் பாதிரியார் வந்துசேர்ந்தார். இவர் வரும்பொழுதே காஷாயம் முதலான ஸந்யாஸியுடை தரித்து வேஷதாரியாய்வந்துசேர்ந்தார். தான் பரங்கியர்ஜாதியல்லவென்றும், ரோமாபுரிப்ராம்மணஸந்யாஸி என்றும் அத்தேசமன்னன் இப்புதியமதத்தை இத்தேசத்தில் ப்ரசங்கம்செய்யும்படி தன்னை அனுப்பியிருப்பதாகவும் சொல்லிக்கொண்டார். கழுத்தில் ஐந்துவடங்கள்உள்ள பூணூலும், அதில் சிலுவையும் அணிந்திருந்தார். கொஞ்சம் பாலும் அன்னமும் காய்கறிகளும் புசித்துவந்தார். மாம்ஸம் உண்டதேயில்லை. இவர்வேஷத்தைக்கண்டு ஜனங்கள் நம்பி மயங்கினார்கள். அந்தணரும், மற்றுமுள்ள அறிஞர்களும், அரசர்களும், ப்ரபுக்களும் அவரைப்பார்க்கவந்தார்கள். அதிசீக்கிரத்தில் தமிழ்கற்று, ப்ரசங்கமும் விவாதமும் தமிழிலேயேசெய்ய ஆரம்பித்தார். இவரால் வெகுவிரைவில் கிறிஸ்தவமதம் பரவிவிடும்போல் தோன்றிற்று.

இந்தநிலைமையில் ஓர் இடையூறுநேர்ந்தது. நோபிலிப்பாதிரியார் இந்துமதயாசாரியரான அந்தணக்குருக்களுக்கும் விரோதமானார். தன் ஜாதியான பெர்னாண்டஸ்பாதிரிக்கும் விரோதமானார். இவர்கதி திரிசங்குஸ்வர்க்கமாய் முடிந்தது. இவர்மேல் பலவிதக்குற்றங்கள் இவர் ஜாதியாரே சாற்றினார்கள்:—அவையாவன

(1) பாதிரிஎன்னும் பெயரைவிட்டு புறமதப்பெயரான குருஎன்னும் பட்டத்தை வஹித்தார்.

(2) தான் பரங்கியல்லவென்று பலதடவை மறுத்திருக்கின்றார்.

(3) தன்மதசம்பந்தமான பரிபாஷைகளை அநாகரிகமான தமிழ்ப் பாஷையில் மொழிபெயர்த்துபயோகித்து அதனால் தன்மதத்துக்கே குறைவை ஏற்படுத்திவிட்டார்.

(4) தன்னால் கிறிஸ்தவமதத்தில் சேர்க்கப்பட்டவர்கள் அவரவர் பூர்வமதாசாரணைப்படி குடுமிவைத்துக்கொள்ளவும், பூணூல்தரிக்கவும் நெற்றியில் சந்தனம் முதலானவையணியவும், சிராத்தம், சந்தியாவந்தனமுதலான க்ரியைகள் செய்யவும் இடங்கொடுத்தார் என்பனவாம்.

கோவாவிலுள்ள விசாரணைகர்த்தர்கள் இக்குற்றங்களை நன்கும் விசாரணைசெய்து நோபிலிபஸ்செய்தது குற்றந்தானென்று தீர்மானித்து, அவர் அதுமுதல் 10-வருஷகாலம் பிரசங்கமே செய்யக்கூடாதென்று உத்தரவுசெய்துவிட்டார்கள். நோபிலிபஸ் முயற்சியும் இத்துடன் முடிந்துவிட்டது. இதனால் கிறிஸ்தவமதப்பெருக்குக்கே ஒரு தடையும் ஏற்பட்டுவிட்டது.

1623-ம்ஆண்டில் முத்துவீரப்பன் காலஞ்சென்றான்.

7. திருமலைநாயக்கன்.
(1623—1659).

1623-ம்வருஷம் ஜனவரிமீ முத்துவீரப்பன்மகன் திருமலைநாயக்கன் பட்டத்துக்குவந்தான்.

மதுரை இராஜதானியாக்கப்பட்டது. சுமார் 10, 12 வருஷம்வரை திருச்சிராப்பள்ளியிலேயே திருமலையிருந்து அரசாண்டுவந்தான். பிறகு மதுரை தலைநகரானதற்கு ஓர் காரணங்கூறுவதுண்டு. திருமலை பீனஸ வியாதியால் வருந்திக்கொண்டிருந்தான். அவன் ஒருகாலத்தில் மதுரைக்குவரும்வழியில் திண்டுக்கல்லில் தங்கியிருந்தான். ஓரிரவில், மீனாக்ஷிசுந்தரேசுவரர் அவன் கனவிற்றோன்றி அவன் மதுரைக்கேவந்துவிடும் விஷயத்தில் அவன்வியாதி நிவாரணமாய்விடுமென்றுவாக்களித்துவிபூதியுங்கொடுத்துச் சென்றதாய்க் கனவுகண்டான். மறுநாட்காலைமுதல் அவன்வியாதிவிலகத்தொடங்கிற்று. மதுரைவருமுன் முற்றிலுஞ்சௌக்கியமாய்விட்டது. உடனே மதுரையிலேயே மீனாக்ஷியம்மனிடம் செங்கோல்பெற்று அரசுபுரிந்துவந்தான். அதுமுதல்மதுரை தலைநகராயிற்று.

மதுரைநகர் சிறப்பிக்கப்பட்டது. 'மாடமாளிகைகள் கூடகோபுரங்கள்' என்னும் சிறந்த கட்டிடங்கள் பலதேசத்தினின்றும் வந்த சிற்பிகளைக்கொண்டு ஆங்காங்கு அமைக்கப்பட்டன. கோவில் வெளிப்பிரகாரம் புதுப்பிக்கப்பட்டது. 'திருமலைநாயக்கன்மால்' கட்டப்பட்டது. உயர்ந்த ஆபரணங்களும் பரிவட்டங்களும், வாஹனங்களும், தேர்களும், திருப்பணிகளும் கோவிலுக்கு ஸமர்ப்பிக்கப்பட்டன. புதிதுபுதிதாய் ஆலயங்களும், அக்ரஹாரங்களும், வீதிகளும் ஆங்காங்கு அமைக்கப்பட்டன. வித்துவான்களும், வணிகரும் பலதேசத்தினின்றும்வந்து குடியேறத்தலைப்பட்டனர். இவ்விதமாக மதுரைநகர் அதுமுதல் தென்னிந்தியாவில் சிறப்புற்றோங்கிவருகின்றது.

விஜயநகரராஜ்யத்தை யாண்டுவந்த பெண்ணகோண்டாவம்சம் 1613-ம்ஆண்டோடு முடிந்துவிட்டது. பிறகுவந்த அரசர்கள் பலஹீனராயும் அரசாட்சித்திறமை குறைந்தவராயும் இருந்தார்கள். திருமலைநாயக்கன் ஆட்சிக்குவந்ததும் ஸ்வாதீனம்பாராட்ட ஆரம்பித்துவிட்டான். இதனால் விஜயநகரராயருக்கும் மதுரை ஸம்ஸ்தானத்துக்கும் யுத்தம்நேரிடும்போல் தோன்றிற்று. திருமலை ஆங்காங்கு தன் கோட்டை கொத்தளங்களைப் பலப்படுத்திவந்தான்.

மைசூர்ச்சண்டை. முதல்முதல் மைசூர்அரசனுடன் சண்டை நேர்ந்தது. அக்காலத்தில் சாமராஜஉடையார் மைசூரில் அரசாண்டுவந்தார். மதுரைராஜ்யத்தின் செல்வத்தையும் செழிப்பையும் கேட்டுச் சிலவருஷங்களுக்குமுன் தனக்கு மதுரையரசால் நேர்ந்த அவமானத்தையும் நினைத்து மதுரைத்தேசத்தை ஜயித்துவரும்படி மைசூர் அரசன் தன் சேனாபதியான ஹரஸூரநந்திராஜனுடன் ஓர் பெருத்த சேனையை யனுப்பினான். அச்சேனை மைசூர்க்கணவாயைத்தாண்டி மதுரைநாட்டின் வடமேற்குப் பிரதேசங்களைக் கைவசப்படுத்திக்கொண்டு கடைசியாய்த் திண்டுக்கற்கோட்டையை முற்றுகை போட்டது. அக்காலத்தில் மதுரைத் தளவாய் இராமப்பையர். இவர் ஒருசேனையுடன் சென்று ஆங்குள்ள பாளையக்காரர்களையும் சேர்த்துக்கொண்டு மைசூர்ச்சேனையை எதிர்த்துக் கோரமானயுத்தம்செய்து வெற்றிபெற்றார். மைசூர்ச்சேனை முறியடிபட்டு வந்தவழியே ஊர்போய்ச்சேர்ந்தது. இராமப்பையர் அவர்களைத் துரத்திச்சென்று மைசூர்ச்சீமைக்குட் பிரவேசித்துத் தலைநகரையே தாக்கி முற்றுகைபோட்டார். இந்தநிலைமையில் இராமப்பையர் விரோதிகள் மதுரையில் அரசனுக்குத் துர்ப்போதனைகள்செய்து இராமப்பையர்மேல் சந்தேகங்கொள்ளும்படி செய்துவிட்டார்கள். முற்கூறியவாறு மைசூர்த்தலைநகரை அநேகமாய்ப் பிடிக்குந்தருணத்தில், இராமப்பய்யரைச் சேனைத்தலைமையினின்றும் நீக்கிவிட்டதாய் இராஜசாஸனம் வந்துசேர்ந்தது. என்ன செய்வார் பாவம்! இராஜகட்டளையை மீறுவாரா அல்லது பகைவர் அவமானத்துக்குள்ளாவாரா? ஆயினும் அரசன்மீது தனக்குள்ள விசுவாஸத்தால், முற்றுகையை மும்மரமாய் நடத்திப் பகைவரை வென்று ஜயபேரிகையுடன் திரும்பிவந்தார். மதுரைக்குச் சிறிது தூரத்திற்றங்கி, தன் சேனைகளெல்லாம் அனுப்பிவிட்டுத் தன்நண்பனான

இரங்கண்ணநாயக்கனை அரசனிடம் முன்னதாகவே யனுப்பிப் பிறகு தானும் இராஜசந்நிதானம் போனார். அரசன் அகமகிழ்ந்து இருவரையும் நல்வரவுகூறியுபசரித்தான்.

இராமநாதபுரம் கலகம். மைசூர்ச்சண்டை முடிந்ததும் இராமநாதபுரம் கலகம் கிளம்பிற்று. முதற்சேதுபதி 1621-ம் ஆண்டில் இறந்ததும் அவன்மகன் கூத்தன்என்பவன் 1621-முதல் 1635-வரை இராமநாதபுரத்தையாண்டு 1635-ல் காலஞ்சென்றான். பிறகு அவன் மகன் இரண்டாம் சடையத்தேவன் (அல்லது சேதுபதித்தளவாய்) பட்டத்துக்குவந்தான். இரண்டுமூன்று வருஷமானதும், தன் ஸ்வீகார மகன் இரங்கநாதத்தேவனிடம் சீமையை ஒப்புவிக்கப்போவதாய் விளம்பரஞ்செய்தான். இதன்காரணம்பின்னதென்று தெரியவில்லை. காலஞ்சென்ற கூத்தனுடைய தாசிபுத்ரனான தம்பிஎன்பவன் ஆட்சேபித்தான். தம்பி மதுரைக்கு ஓடிவந்து சிலமந்திரிகளைத் தன்பக்கஞ்சேர்த்துக்கொண்டு, தன் உரிமையை ஸ்தாபிக்கும்படி அரசனை வேண்டிக்கொண்டான். அரசன் அதற்கிணங்கித் தன் சேனைத்தலைவன் இராமப்பையரையும் இரங்கண்ணநாயக்கரையும் பெரியசேனையுடன் அனுப்பினான். மதுரைச்சேனை இராமநாதபுரத்தை முற்றுகைபோட்டுப் பிடித்துக்கொண்டுவிட்டது. இரகுநாதத்தேவன் ஓடிப்போய் இராமேசுவரம் தீவில் ஒழித்துக்கொண்டான். இராமப்பையர் துரத்திச்சென்று, பாம்பன்வரை ஒரு அணைகட்டி இராமேசுவரத்துக்குட் பிரவேசித்தார். இத்தருணம் இராமப்பையர் தேகஅசௌக்யமாய்க் காலஞ்சென்றார். அவர் மாப்பிள்ளைசிவராமப்பர்சேனைத்தலைமையைவஹித்தார். இராமேசுவரத்தீவில் நடந்தபோரில், மதுரைச்சேனை வெற்றிபெற்றது. இரகுநாதனைச் சிறைபிடித்து வெற்றிக்கோலத்துடன் மதுரைக்குத் திரும்பிவந்தார்கள்.

தம்பி அரசாளத்தொடங்கினான். அவன் சரியானவாரிஸ் அல்லவென்றும் அக்ரமமாய்ச் சீமையைக் கைக்கொண்டானென்றும்எண்ணி ஜனங்கள் அவனுக்குக் கீழ்ப்படியாமலும், வரிசெலுத்தாமலும் கலகம் செய்யத்தொடங்கினார்கள். பழைய இரகுநாதத்தேவன் மருமக்களான இரகுநாதத்தேவனும், நாராயணத்தேவனும் கலகத்தலைவரா யமர்ந்தார்கள். தம்பியா லவர்களையடக்கமுடியாமல் மதுரைக்கு ஓடிவந்து மறுபடி சேனையனுப்பும்படி அரசனைவேண்டிக்கொண்டான். இந்தநிலைமையில் இராமேசுவரமார்க்கமெல்லாம் கள்ளர் கொள்ளைக்கிடமாய்விட்டன.

உத்தரதேசத்தினின்றும்வந்த அநேகபைராகிகள் நாயக்க வரசனை வேண்டிக்கொள்ள அரசன் தம்பியின் ஆட்சித்திறமையின்மையை யுணர்ந்து சிறையிலிருந்த பழைய இரகுநாதத்தேவனையே சேதுபதியாய் நியமித்தனுப்பினான். தம்பியைக் கலகஞ்செய்யாமலிருக்கும்படி உத்தரவும் செய்யப்பட்டது. இவ்வாறு 5, 6-வருஷங்கள்சென்றன. 1645-ம் ஆண்டில் தம்பி கபடாலோசனைசெய்து இரகுநாதனைக் கொலைசெய்துவிட்டுத் தான் சிம்மாசனமேறவந்தான். மறுபடி கலகம் உண்டாயிற்று. 1646-ம் ஆண்டில் திருமலைநாயக்கன், இராமநாதபுரத்தை மூன்றுகப்பங்கிட்டு, இராமநாதபுரத்தை இரகுநாதத்தேவனுக்கும், சிவகங்கையைத் தம்பிக்கும், திருவாடானையைத் தணக்கத்தேவன் நாராயணத்தேவன் என்ற இருசகோதரருக்கும் அளித்தான். தம்பியின்உதவியால் இரகுநாதன் மன்னார்கோவில், பட்டுக்கோட்டை, தேவகோட்டை, அரந்தாங்கி, திருவாரூர் என்னும் நாடுகளை இராமநாதபுரத்துடன் சேர்த்துக்கொண்டான். தணக்கத்தேவனும் தம்பியும் இறந்தவுடன் மறுபடி மூன்றுபிரிவுகளும் இரகுநாதத்தேவனுக்கே சேர்ந்துவிட்டன.

விஜயநகர ஆதிபத்யம். நமது சரித்திரகாலத்தில் விஜயநகரஸம்ஸ்தானம் வரவர க்ஷீணதசையடைந்துவந்த போதிலும் மதுரை, தஞ்சை ஜிஞ்ஜி, மைசூர்மாகாணங்களை ஆண்டுவந்தவர்கள் விஜயநகரஸாம்ராஜ்யத்தை அங்கீகரித்துக் கப்பமும் செலுத்திவந்தார்கள். திருமலைநாயக்கன் பட்டத்துக்குவந்ததும் அதை மறுத்துக் கப்பஞ்செலுத்தாமலும் கீழ்ப்படியாமலும் ஸ்வாதீனம்பாராட்டத் தொடங்கினான். இதனால் பெரும்போர் விளையுமென்று எண்ணியே தஞ்சைத்தலைவன் ஜிஞ்ஜித்தலைவருடன் நட்புப்பாராட்டிவந்தான். 1638-ம் ஆண்டில் விஜயநகரராஜ்யத்தலைநகரான சந்திரகிரியில் இரங்கராஜன் பட்டத்துக்குவந்தான். இவன் வீரமும் தீரமும்வாய்ந்தவன். திருமலையின் கொட்டத்தையடக்க எண்ணிப் பெருத்தசேனையுடன் தெற்கே படையெடுத்துவந்தான். தஞ்சைராஜன்பயந்து சரணமடைந்துவிட்டான். இரங்கராஜன் ஜிஞ்ஜிக்கோட்டையை முற்றுகைபோட்டான். திருமலைநாயக்கன் கொஞ்சமேனும் தேசாபிமானமும் ஜாதியபிமானமுமில்லாமல் கோல்கொண்டாவில்ஆண்ட மஹமதியத்தலைவனை யுதவிகேட்க அவன் வடக்கேயிருந்து சந்திரகிரிமீது படையெடுத்துவந்தான். இரங்கராஜன் இருபுறமும்

தாக்கப்பட்டதால், ஜிஞ்ஜி முற்றுகையைவிட்டு வடக்கேசெல்லநேர்ந்தது. கோல்கொண்டா சுல்தானுற் றோல்வியடைந்தான். தன்சிற்றரசர்கள் உதவிகேட்டான். மைசூர்அரசன்மட்டும் உதவிபுரிந்தான். மற்றவர் மறுதலித்துவிட்டார்கள். இரங்கராஜன் தோல்வியடைந்து தன் நாடுதுறந்து மைசூருக்கு ஓடிவிட்டான்.

'தன்வினை தன்னைச்சுடும்' என்ற நியாயப்படி தனக்கு மித்ரனாய் உதவிசெய்யவந்த கோல்கொண்டா சுல்தான் மூன்று நாயக்கஅரசையும் தன் ஆதீனத்துக்குட்படுத்தவெண்ணித் தெற்கே 1644ம்ஆண்டில் படையெடுத்துவந்து ஜிஞ்ஜிக்கோட்டையை முற்றுகைபோட்டான். அப்பொழுது திருமலைநாயக்கன் பீஜபூர்சுல்தான்உதவியைக்கோரினான். பீஜபூர்சுல்தான் உதவியாய் ஜிஞ்ஜியைவிடுவிக்கவந்தான். ஆயினும் ஜாதியபிமானத்தால் சுல்தானும் சுல்தானும்சேர, நாயக்கர்பாடு நட்டாற்றுநிலைமையாய் முடிந்தது. ஜிஞ்ஜிக்கோட்டைக்குள்ளிருந்த நாயக்கர் சேனைக்குள்ளேயே சச்சரவு வந்துவிட்டது. சிரமமில்லாமலேயே ஜிஞ்ஜிக்கோட்டை மஹமதியர்வசப்பட்டுவிட்டது. திருமலைநாயக்கன் மனமிடிந்து மதுரைவந்துசேர்ந்தான். தேசாபிமானமும் ஜாதியபிமானமுமில்லாது தன்னயமே பாராட்டும் தேசத்ரோஹிகளின் கதி இதுதானல்லவா?

இத்துடன் ஒழியவில்லை. மஹமதியர் மதுரைமீது படையெடுத்து வந்தார்கள். மதுரைநாடுமுழுதும் மஹமதியர்படைகளால் பாழாக்கப்பட்டது. திருமலை சண்டையில்லாமலே தஞ்சமடைந்தான். வருஷந்தோறும் பீஜபூர்சுல்தானுக்குக் கப்பங்கட்டுவதாகவும் ஒப்புக்கொண்டான். 'வீடு இரண்டுபட்டால் கூத்தாடிக்குஎளிது' என்ற வழக்குப்படி மஹமதியர் ஆதிபத்யம் தென்னிந்தியாவில் நாட்டப்பட்டது.

கொஞ்சக்காலத்துக்குப்பிறகு மைசூர்ச்சேனை மதுரைமீது படையெடுத்துவந்தது. இக்காலத்தில் சேதுபதியின் உதவியைத் திருமலை கோரினான். சேதுபதியின் உதவியால் மைசூர்ச்சேனை முறியடிபட்டு ஓடிற்று. திருமலை தம்பி குமாரமுத்து மதுரைச்சேனையுடன் துரத்திச்சென்று மைசூர்மீது படையெடுத்து, வெற்றிபெற்று மைசூர்அரசனையும் சிறைகொண்டான். வெற்றிக்கோலத்துடன் குமாரமுத்து திரும்பிவருமுன்னமேயே திருமலை 1659-ம்ஆண்டில் காலஞ்சென்றான்.

திருமலைநாயக்கன்காலத்தில் மதுரைராஜ்யத்தில் தற்கால மதுரை ஜில்லா, இராமநாதபுரம் சிவகங்கைஜமீன்கள். திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளிஜில்லாக்கள், புதுக்கோட்டை, திருவாங்கூரின் ஓர்பாகம் இவ்வளவும் அடங்கியிருந்தன.

திருமலைநாயக்கன்கட்டிய கட்டிடங்கள்.

1. திருமலைநாயக்கன் மஹால்என்று இன்னும் சிறப்புற்றோங்கும் அரண்மனை.

2. பெரியதெப்பக்குளம் அல்லது மாரியம்மன் தெப்பக்குளம் என்ற அழகியதடாகம்.

3. புதுமண்டபம் என்ற கருங்கற்சிற்பத்திற்சிறந்த அழகிய மண்டபம்.

4. இராயர்கோபுரம்.

5. இப்பொழுது ஜில்லாக்கலெக்டர் வசிக்கும் தமக்கம்பங்களா முதலியன.

8. முத்துஅழகாத்ரி.
(1659—1662).

1659-ம் ஆண்டில் திருமலைநாயக்கன் இறந்ததும் அவன்மகன் முத்துஅழகாத்ரி பட்டத்துக்கு வந்தான். திருமலையின்தம்பி குமாரமுத்து வெற்றிக்கோலத்துடன் மைசூரிலிருந்து திரும்பிவந்தான். அவன் யாதொருசச்சரவும் செய்யாமல் சிவகாசியின் பிரதிநிதியாயமர்ந்தான். மஹமதியரையடக்கவெண்ணி அழகாத்ரி தஞ்சைமன்னனுடன் உடன்படிக்கைசெய்தான். இதையறிந்த மஹமதியர் மறுபடி படையெடுத்துவந்து தஞ்சாவூரையும் வல்லத்தையும் பிடித்துக்கொண்டு செல்லும்வழியெல்லாம் பாழாக்கிகொண்டு திருச்சிராப்பள்ளி மதுரைமீது படையெடுத்துவந்தார்கள். அழகாத்ரி பகைவரையெதிர்க்க யாதொருமுயற்சியும் செய்யாமல் கோட்டைக்குள் ஒழித்துக்கொண்டான். ஏதோ அதிருஷ்டவசத்தால் நேர்ந்த பெரும்பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் மஹமதியசேனை பீடிக்கப்பட்டுப் பயந்து வந்த வழியே திரும்பிவிட்டது.

1662-ம்ஆண்டில் முத்துஅழகாத்ரி காலஞ்சென்றான்.

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B. A., B. L.

குடிதாங்கியைப்பற்றியோர்குறிப்பு.

உலகி லிலமென் றுரையாமே யுதவல் குணத்தோர்க் குளதாமே
யிலகு மெறும்புக் காற்பதம்வே றில்லை யெனயா வதுமீந்தான்
புலவன் மகிழ்ந்து பிற்பாதி புகலக் கேட்ட புகழாளன்
மலைகோள் புயத்துக் குடிதாங்கி வளஞ்சேர் சோழ மண்டலமே.

இதுகாறும் இக்கவியில் கூறப்பட்ட குடிதாங்கியைப்பற்றி இதற்கு மேற்கோளாகக்காட்டப்பட்ட செய்யுளைத்தவிர்த்து வேறொன்றும் அறிவதற்கு ஏற்றசாதனமொன்றும் கிட்டாமலிருந்தது. அதுபற்றியே யானெழுதிய சோழமண்டலசதக வரலாற்றிலுங்கூட அவன்வாழ்ந்த இடத்தைக்கூறி மேற்செல்லவேண்டியதாயிற்று. இப்பொழுது திருவாரூர் ஸ்ரீ தியாகேசனதுகோயிற் கல்வெட்டுக்களைப் பரிசோதித்து வருகையில் முதற்பிராகாரத்துக்கும் இரண்டாம்பிராகாரத்துக்கும் நடுவிலுள்ள மதிலில் தென்புறம் கீழ்க்கோடியிலுள்ள சாசனத்தில் 3-வது வரியில் தனதானிய மானன்போருக்குடையான் குடிதாங்கியும் என்றும் 7, 8-வது வரிகள் அரையன்குடிதாங்கியும், அரையன் அமரடக்கியும் என்றும் காணப்படுகிறது. இச்சாசனம் முதலாங்குலோத்துங்கன் காலத்தது. இவனது 3-வதுமெய்க்கீர்த்தி பொறிக்கப்பட்டிருக்கிறது. இச்சாசனம் முழுமையும் படிக்கக்கூடாதபடி இடையிடையே உடைந்தும் சிதைந்தும்போயிருப்பதால் சாசனம்முழுவதும் ஈண்டுத்தருவது கூடாததாகிறது. ஆயினும், இக்குடிதாங்கி முதலாங்குலோத்துங்கன் காலத்தவனென்றும், கி. பி. 1070—1118-க்கும் இடைப்பட்ட காலத்திருந்தவனென்றும், சோழனால் பெரிதும் அபிமானிக்கப்பட்டு அளரசன் என்ற பட்டமும் பெற்றவனென்றும் சிறந்த கொடைவள்ளலென்றும் இப்போது வெளியாகிறது.

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்,
இலக்கணவிளக்கபரம்பரை.

ஒரு திருவாரூர்ச்சாஸனம்.

இச்சாசனமானது திருவாரூர் ஸ்ரீ தியாகேசனதுகோயில் இரண்டாம்பிராகாரம் உண்மதில் வெளிப்புறம் மேல்பக்கத்தில்தென்பாரிசமாய் இரண்டுபத்தியாக வெட்டப்பட்டிருக்கிறது. கோயிலில் நடக்கவேண்டிய உற்சவங்களைச் செவ்வனேவிளக்குவது:—

(1) பூமன்னு பூத்த வேழுல கந்தா
முன் செய் தவத்தால் பருதிவழித் தோன்றி
நெடுமா லிவனெனச் சுடர்முடி சூடி
இருநில மகளை உரிமையிற் புணர்ந்து
திருமகள் பணைமுலைச் செஞ்சாந் தணைந்து
பருமணி மார்வம் பனிவரை நிகர்ப்ப
சயம கள்செழுஞ் சந்தனச் சுவட்டால்
புயமிரு கயிலைப் பொருப்பெனத் தோன்றி
பவளச் சேயொளி படைத்தன னியானெனத்
தவள நன்னிறந் தனித்தொடை யோரென
புகழ்மகள் சிந்தை மகிழு நாளிலும்
ஒருகுடை நிலவும் பொருபடைத் திகிரி
வெயிலுங் கருங்கலி இருளினைத் துரப்ப
நீடுபல் லூழி ஏழ்கடற் புறத்தினுங்
கோடாச் செந்தனிக் கோலினி துலாவ

(2) மீனமும் சிலையுஞ் சிதைத்து வானுயர்
பொன்னெடு மேருவிற் புலிவீற் றிருப்ப
உம்ப ரியானை ஓரெட் டினுக்குத்
தம்ப மென்னத் தனித்த னித்திசை
தோறும் விசையத் தம்ப நிற்ப
பசிபகை யானது தீங்கு நீங்க
மன்னுயிர் தழைப்ப மனுவாறு விளங்க
மாதவர் தவமும் மங்கையர் கற்பும்
ஆதி யந்தணை ராகுதிக் கனலு
மீதெழு கொண்டல் வீசுதண் புனலும்

மேதினி வளருஞ் சாதி ஒழுக்கமும்
நீதி அறமும் பிறழாது திகழப்
பாவும் பழனப் பரப்பும் பணைக்கை
மாவு மல்லது வன்றளைப் படுதல்
கனவிலுங் காண்டற் கரிதென வருந்திப்
புடையினும் பல்வேறு புள்ளிலு மல்லது

(3) சிறையெனப் படுத லின்றிநி (3)றைபெருஞ்
செல்வமோ டவனி வாழப் பல்லவர்
தெலுங்கர் மாளுவர் கலிங்கர் கோசலர்
கன்னடர் கடாரர் தென்னர் சேரலர்
சிங்களர் கொங்கணர் சேதிகர் திரிகர்த்தர்
வங்க ரங்கர் வத்தவர் மத்திரர்
கங்கர் சோனகர் கைகையர் சீனரென்
றனைகழல் வேந்தரும் எல்லா வரசரும்
முறைமையில் வருந்தித் திறைகொணர்ந் திறைஞ்ச
அம்பொன் மலர்க்கொடிச் செம்பியன் கிழானடி
ஒருமருங் குடனமர்ந் திருப்ப அருள்புரி
சிமையப் பொற்கொடிச் சிமையப் பாவையுஞ்
சிவனும் போலப் புவனமுழு துடையா
ளிவன் திருமணி மார்வத்
துலக முழுதுடை யாளென வுடனிருப்பச்
செம் பொன்வீர சிம்மா சனத்துப்
புவன முழு துடையாளொடும்

(4) வீற்றிருந்தருளிய கோராஜகேசரிவன்மரான திரிபுவன சக்கர வர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு 7வது திரு வாரூர் உடையார் ஸ்ரீ *மூலத்தான முடையார் கோயிலில் எழுந் தருளியிருக்கும் ஆளுடைய நம்பிக்கும் பரவை நாச்சியாருக்கும் அன்றாடம் நிவந்தத்துக்கு இறையிலியாக பழம்பெயரும் முன் னிறை கட்டினபடியுந்தவிர்ந்து யாண்டு 7-வதுமுதல் அன்பிரய

* இப்பொழுது இந்த ஆளுடையநம்பிகோயில் பெரியகோயிலுக்குத் தெற் கில் வீதிக்கு உள்ளிட்டு தனிக்கோயிலாக விருக்கிறது.

நல்லூர் என்னுந் திருநாமத்தால் ஒருதாய்க் கூடினசெயமாணிக் கவளநாட்டுத் திருமருகல்நாட்டு...ங்கலம் ஆற்றின்நிலம் உட்பட குழி* இரண்டரையே கால்வீசம் கீழரையே அரைக்காலில் நெல் கலம் நூற்றிருகலனே இருதூணி. ஆறேடுங்கூட ஒட்டி இறுத்த உருத்திர ஆமூர் ஆற்று நிலம் உட்பட குழிபன்னிரண்டே முக் காலே காணியரைக்காணி கீழுங்காலரைக்காலுக்கு நெல் கலம் $11\frac{1}{2}$ ஆக

(5) ஆக குழி பதினைந்தேகாலேவீசம்முக்கால்வீசம் கீழ்முக்காலே யரைக்காலுக்கு நெல் 113 கலனே தூணிக்குறுணி இப்படித் தவிற யாண்டு 7வது யாண்டுமுதல் வேலி 1-க்கு நெல்லாக இறை கட்டின காணிக்கடன் நெல் 1503 கலனே குறுணியே நாழு யிலால் பதினாறுக்கி நெல் கார் பதின்மூன்றேகலனே இருதூணி நாழி யாழாக்கும் யாண்டு 12வது முதல் இறையிலி இட்ட இங் நாட்டுத் தெ.........கங்கை கொண்ட சோழ நல்லூர் நின்றும் வேறுபிரிந்த அரங்கமங்கலம் முன்னுடையரும் பழம்பெயரும் முன்னிறைகட்டினபடிக்கு.........தானவிநோத நல்லூர். நெல்

(6) 1114 கலனே குறுணி............நிவந்தங்கட்டும்படி ஆளுடைய நம்பிக்கும் பரவைநாச்சியாருக்கும் அமுதுபடி ஸந்தி 4க்கு பொங் கப்பம் அரிசி கலனேகுறுணியேஇருநாழி பருப்பமுது......பல வர்க்கத்துக்கு கறியமுது நிறை 112 பலம் உப்பமுது கடுகு சது ரம் $\frac{1}{8}$ வீதமும் மிளகு $\frac{3}{4}$ சதுரம் வீதமும் சீரகம் சதுரம் $\frac{1}{8}$ம் நாடன்மஞ்சள் $\frac{1}{4}$ பலம்வீதமும் மாங்காய்வற்றல் 4ம் புளி நிறை 4ம் சிறை தேங்காய் 3ம் கருவாழைப்பழம் 12ம் சர்க்கரை நிறை ......ம் நெய்யமுது......தயிரமுதுஇருநாழி பிச்சி...பாலுக்கு ......கண்டசர்க்கரைநிறை 10 அடைக்காயமுது

(7) பாக்கு 20ம் இலையமுதும் பற்று 40ம் தயிலம் விராகனிடை அரைக்காலும் சிதாரி சதுரம் அரைக்காலும் கூட்டுசந்தனம் பலம் அரையும் அகில்பலம் முக்காலும் நெரியாஸம் பலம் அரை யும் தேன் பலம் அரைக்காலும் சாத்தியருள சாந்து† கால்பலம்

* இலக்கத்திலிருப்பதெல்லாம் எழுத்தாக இப்பொழுது குறித்திருக்கிறேன்

† திருச்சாந்து.

திருநுந்தாவிளக்கு 2க்கு இருதூணியும் ஸந்திவிளக்கு 23க்கு வீதம் ஆக கலம்.........யமுதுபடிக்கு அரிசி* சர்க்கரை நிறை சிறை தேங்காய் 50 மிளகு, சீரகம், கரும்பு 40, பாக்கு திருவமுதுக்கு பொங்கப்பம் அரிசி பருப்பு சந்திநிறை...வீதமும், உப்பு, மிளகு, சீரகம், நாடன்மஞ்சள், நெய், சிறைதேங்காய், 4, சர்க்கரை கருவாழைப்பழம் 4, தயிர், பாக்கு 32, பற்று; திருக்கார்த்திகைத்திருநாளைக்கு அமுதுபடிக்கு

சர்க்கரை நிறை மிளகு, சீரகம், சிறைதேங்காய் 2, பாக்கு 20, பற்று 45, திருஅமுதுக்கு பொங்கப்பம் அரிசி பருப்பு, கறிநிறை, உப்பு, மிளகு, நாடன்மஞ்சள், நெய், சிறைதேங்காய் 4, சர்க்கரை தயிரமுது, கருவாழைப்பழம்; திருமார்கழித்திருவாதிரைத் திருநாளைக்கு அமுதுபடிக்கு பொங்கப்பம் அரிசி, பால், பருப்பு, பால் போனகத்துக்கு பொங்கப்பம் அரிசி பால், நெய், கறிநிறை, உப்பு, மிளகு, சீரகம், நாடன்மஞ்சள், சிறைதேங்காய் 2, பொரிக்கறி அமுதுக்கு நெய், அமுதுபடிக்குநெய், கருவாழைப்பழம் 6, தயிரமுது, உப்பிருசி,† அப்பஅமுதுக்கு பொங்கப்பம் அரிசி.

நெய், மிளகு, சீரகம், பாக்கு, பற்று, தயிலம், சிதாரி, எண்ணை, கைக்கொற்றுப் பெறுவார்க்கு, அர்ச்சனைபண்ணப்பெற்ற ஒருவனுக்கு, திருப்பரிசாரகம் பொங்குகிறவர்க்கு-ம், பொற்பண்டாரம் செய்வான் ஒருவனுக்கு-ம், திருப்பூமண்டபத்தான் ஒருவனுக்கு-ம், காசு 2, திருநந்தவனஞ்செய்து எழுந்தருளு நாள்களில் திருப்பணித்தொங்கல்செய்வானுக்கு-ம், கோயிற் கணக்கனுக்கு நெல் குறுணி காசு 4ம் திருமடைப்பள்ளிபெருக்குவார்க்கு நெல் குறுணி, திருப்பரிவட்டம்வாட......வண்ணத்தானுக்கு நெல் குறுணி, திருமடைப்பள்ளிக்கு விறகுகொண்டிடுவார் பேர் இருவர்க்கு 2...... யெருக்கரியும் பெருக்குவாள் ஒருத்திக்கு நெல் படி 2. சங்குகாளம் திருச்சின்னமூதுவான் பே

* இதுமுதல் அளவுகணக்குகள் குறிக்காமல் பேர்களைமாத்திரம் குறிக்கின். நமக்கு அளவை தேவையிராததாலும், விஷயமே வேண்டியதாலும் விதம் செய்கிறேன்.

† இது இப்பொழுது இன்னதென்று தெரியவில்லை.

(10) ரிருவர்க்குநெல்கலம் எழுந்தருளுந்திருநாள் அமாவாசைத் திருநாள் 12ம் கார்த்திகைத்திருநாள் 12ம் விஷுவயனத்திருநாள் 4ம்† திருமார்கழித்திருவாதிரைத்திருநாள் 1ம், ‡தைப்பூசத்திருநாள் 1ம் சித்திரைச் சித்திரைத்திருநாள் தீர்த்தமருளக் கச்சாத்தி அருளுந்திருநாள் 1ம் ஆடிப்பூரத்திருநாள் 1ம் ஆவணி அவிட்டத்திருநாள் 1ம் பவித்திரஞ்சாத்தி யருளுந்திருநாள் 1ம் ஐப்பிசிச்சதையத்திருநாளில் எழுந்தருளுந்திருநாள் 6ம் திருப்பங்குனி உத்திரத் திருநாளில் திருக்கொடி ஏற்றுக்கு திருமுகர்சாத்த எழுந்தருளுந் திருநாள் 1ம் தீர்த்தத்துக்கு திருமுகர்சாத்த எழுந்தருளுந்திருநாள் 1ம் திருநாளில் எழுந்தருளுந் திருநாள் 10ம் திருவாடித்திருநாளில் எழுந்தருளுந் திருநாள் 6ம் ஆகத் திருநாள் 56க்கு எழுந்தருளிவிக்கும் ஸ்ரீ பாதந்தாங்குவார் பேர்வழி 1க்கு நெல்கலம் 3 ஆக

(11) நெல் நூற்றறுபத்தெட்டுக்கலமும் இது விழுக்காடு நெல் ஆயிரத்து......கலனேகுறுணி ஓராழிமூவொழக்கு ஆக நிவந்தக்காரர் பேர் 26வர்க்கு நெல்...கலனே 6 நாழியேயுரியாழாக்கு. இதில் திருப்படி பற்றுக்குவிட்டு சோற்றடைப்புக்கு உடனும் பொங்கப்பத்துக்கு அரிசி கலனேகுறுணி 2 நாழி, போனகத்துக்கு பருப்பு 2 நாழி ஆகப் பருப்புதூணி இராழி ஆழாக்கு ரொட்டி நெல் 4 கலம் நீக்கி நெல் இருகலனே 6 நாழியுரி, ஆகநெல்—, ஆட்டைக்கும் புடவை முதல் காசு 10, திருப்பரிவட்டத்துக்கும் திருப்பாவாடைக்கும் காசு 10, திருமடைப்பள்ளிக்கு விறகுகொள்ள காசு $\frac{87}{16}$. திருஅணுக்கர் அழிவு சேரா பிலி$(\frac{2}{1})$ கொள்ளக்காசு 3 11:-இக்கோயில் எழுந்தருளியிருக்கும் ஆளுடையபிள்ளையார்க்கும் திருநாவுக்கரசுதேவர்க்கும் வேண்டும் அற்றுனைகளுக்கு இறப்பதாக அர்ச்சனபோக இறையிலி இட்டநிலத்துக்கு முன்னுடையாறும் பழம்பெயரும் முன் இறை

† இந்த விஷுவயனபுண்ணியகாலத்தில் ஸ்ரீ தியாகேசனுக்கு அபிஷேகமின்றும் நடந்துவருகிறது.

‡ இதே சுவரில் வடபுறம் பொறிக்கப்பட்டிருக்கும் மற்றொரு சாசனம் ஸ்ரீ தியாகேசப்பெருமான் தைப்பூச உற்சவத்தில் திருவுலாச்செய்யும் வழக்கமுண்டென்பதை வலியுறுத்துகிறது, இப்பொழுது அதற்குப்பதிலாகத் திருஞானசம்பந்தப்பெருமானை வீதிவலஞ்செய்விக்கின்றனர்.

(12) கட்டினபடியுந் தவிர்ந்து 12-வது......ர்ச்சனாபோக இறையிலி இட்டசெயமாணிக்கவளநாட்டு* †மருகல் நாட்டு கங்கைகொண்ட சோழநல்லூரான சிவபாத சேகர நல்லூர் குழி இருபத்தாறே காலேமுன்றுவீசங்காணிகீழ் மூன்றுவீசத்தினால் நெல் ஆயிரத்து இருநூற்றுப்பதினாறுகலனேஇருதூணி, நிச்சயித்த நெல் ஆயிரத்து இருநூற்று பதின்மூன்றுகலனே தூணி (யாண்டு) 37-வது நிச்சயித்த நெல் 1306 கலம் 8 மரக்கால். இப்படித்தவிர 12வது பிசானமுதல் வேலி ஒன்றுக்கு நெல் கலம் 100 ஆக இறைகட்டின காணிக்கடன் நெல்...........இதில் ஆளுடைய பிள்ளையாருக்கு இருக்கும் குழி 56காலேமுன்றுவீசம்காணிகீழ்மூன்றுவீசத்தினால்-காலாக்கிநெல்......க்கு நிவந்தங்கட்டும்படி சந்தி 3க்கு சந்தி 1க்கு பொங்கம், பருப்பமுது, முளைப்பற்று,

(13) கறியமுது நிறை, உப்பமுது, மிளகமுது, சீரகம், ‡நாடன் மஞ்சள், மாங்காய்வற்றல், புளிநிறை, சிறைதேங்காய், கருவாழைப்பழம், சர்க்கரை, நெய்யமுது, உப்பிருசி, பாலமுது, அடைக்காயமுதுக்குபாக்கு, பற்று, தயிலம், சிதாரி, கூட்டசந்தனம்,§ அகில், நெரியாஸம், திருநுந்தாவிளக்கு 2க்கு எண்ணை, ஸந்திவிளக்கு 12க்கு எண்ணை, சிறப்புத்திருநாள், திருப்படியமுதுக்குஅரிசி, சிறைத்தேங்காய் 5, மிளகமுது, சீரகம்,

(14) கரும்பு 20, அடைக்காயமுதுபாக்கு 10, இலையமுது பற்று, திருவமுதுக்குபொங்கப்பம், பருப்பமுது, கறியமுதுநிறை, உப்பமுது, மிளகமுது, சீரகம், நாடன்மஞ்சள், நெய்யமுது, சிறைதேங்காய், சர்க்கரை, கருவாழைப்பழம், தயிரமுது, அடைக்காயமுது, பாக்கு, இலையமுதுபற்று, திருக்கார்த்திகைத்திருநாளைக்கு பொரி யவல் அமுது, சர்க்கரை, மிளகமுது, சீரகம், சிறைதேங்

* செயமாணிக்கவளநாடு அரிசிலாற்றுக்குதெற்கு பாண்டவாயாற்றுக்கு வடக்கிலுள்ளது. கீழ்பாலெல்லை சமுத்திரம்.

† மருகல்நாடு,—திருமருகல்நாடு. இது நன்னிலம் ரயில்வேஸ்டேஷனிலிருந்து 7வது மைல்.

‡ நாடன் மஞ்சள்: குறகுறப்பான மஞ்சள்.

§ கூட்டசந்தனம்: வாசனை கலந்தது.

காய், அடைக்காயமுது, பாக்கு 10, இலையமுதுபற்று, திருவமுதுக்கு பொங்கப்பம், பருப்பமுது, கறியமுது நிறை, உப்பமுது, மிளகமுது, சீரகம், நாடன் மஞ்சள், நெய்யமுது, சிறைதேங்காய்,

(15) தயிரமுது, கருவாழைப்பழம், அடைக்காயமுதுபாக்கு, இலைபற்று, திருவிளக்கெண்ணை, ஐப்பிசித்திருநாள் 1க்கு அமுதுபடிக்கு பொங்கப்பம், பால்போனகத்துக்கு பொங்கப்பம், பருப்பமுது, பாலமுது, திருவமுதாக்கநெய், கறியமுதுநிறை, பருப்பமுது, உப்பமுது, மிளகமுது, சீரகம், நாடன் மஞ்சள், பொரிக்கறியமுதுக்குநெய், அமுதுபடிக்குநெய், சர்க்கரை நிறை 4 பலம், கருவாழைப்பழம் 3, தயிரமுது, உப்பிருசி, அப்பவமுதுக்கு பொங்கப்பம், சர்க்கரை நிறை, நெய்யமுது, மிளகு, சீரகம், கருவாழைப்பழம் 100, தேங்காய் 50,

(16) அடைக்காயமுது பாக்கு 50, இலை பற்று, தயிலம், சிதாரி, திருவிளக்கெண்ணை,......நாள் ஒன்றுக்கு அமுதுபடிக்கு பொங்கப்பம், பால்போனகத்துக்கு பொங்கப்பம், பருப்பமுது, பால், திருவமுதாக்கநெய், கறியமுது, பருப்பமுது, உப்பமுது, மிளகமுது, சீரகம், கறியமுதுக்கு நெய், அமுதுபடிக்கு நெய், கருவாழைப்பழம் 6, தயிர், உப்பிருசி, அப்ப அமுதுக்கு பொங்கப்பம், சர்க்கரை நிறை, நெய், மிளகு அமுது, சீரகம், கருவாழைப்பழம் 200,

(17) தேங்காய் 100, பிலாப்பழம் 10, அடைக்காயமுதுபாக்கு 50, இலைபற்று, தயிலம், சிதாரி, திருமார்கழித்திருவாதிரைத்திருநாளில் எழுந்தருளுந்திருநாளைக்கு அமுதுபடிக்கு பொங்கப்பம் அரிசி, பால்போனகத்துக்கு பொங்கப்பம் அரிசி, பருப்பமுது, பாலமுது, திருவமுதாக்கநெய், கறியமுது, கறியமுதுக்கு பருப்பு, உப்பமுது, மிளகமுது, சீரகம், நாடன்மஞ்சள், தயிர், உப்பிருசி, அப்பவமுதுக்கு பொங்கப்பம் அரிசி, நெய்,

(18) திருநாட்களில் எழுந்தருளிசிறப்புவிக்கும் ஸ்ரீபாதந்தாங்குவார்க்கு பத்து நெல்கலம்—, இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் திருநாவுக்கரசுதேவர்க்கு அர்ச்சனா போக இறையிலி இட்ட கங்கைகொண்ட சோழ நல்லூரான சிவபாத சேகரநல்லூர் குழியினால்

காணிக்கடன்பத்தாருக்கி நெல் 600 கலத்தினால் [illegible]க்காலாக்கி நெல் 1200 கலத்துக்கு நிவந்தங்கட்டினபடி அமுதுபடிக்கு ஸந்தி 3க்கு சந்தி 1க்கு பொங்கப்பம் அரிசி, கறியமுதுக்கு பருப்பு, முளைப்பயறு, பலவர்க்ககறியமுது, மிளகமுது, சீரகம்,

இரண்டாவதுபத்தி

(1) கருவாழைப்பழம், சர்க்கரை, நெய்யமுது, தயிரமுது, உப்பிருசி, அடைக்காயமுதுபாக்கு, இலையமுது, தயிரமுது, திருநந்தா விளக்கு-எண்ணை, சற்புத்தி

(2) ருநாள் திருப்புத்தி.........சர்க்கரை, சிறைதேங்காய், மிளகமுது, சீரகம், கரும்பு, அடைக்காயமுதுபாக்கு, இலைபற்று, திருவமுதுக்கு பொங்கப்பம் அரிசி,

(3) பருப்பமுது, கறியமுது, பால், மிளகமுது, சீரகம், நெய், நாடன் மஞ்சள், சிறைத்தேங்காய், சர்க்கரை, தயிரமுது, அடைக்காயமுது,

(4) இலை, திருக்கார்த்திகைத்திருநாளைக்கு அவல், சர்க்கரை, மிளகமுது, சீரகம், சிறைத்தேங்காய், அடைக்காயமுது, இலை, திருவமுதுக்கு பொ,

(5) ங்கப்பம் அரிசி, பருப்பமுது, மிளகமுது, சீரகம், நாடன்மஞ்சள், நெய், சிறைத்தேங்காய், சர்க்கரை, தயிரமுது, கரும்பு 4, அடைக்காயமுதுபாக்கு,

(6) இலை, திருவிளக்கெண்ணை, *ஐப்பிசி சதையத்திருநாளில் திருவீதி பார்க்க எழுந்தருளுந்திருநாள் 1,* திருப்பங்குனித்திருநாளில் திரு வீதிபார்க்க எழுந்தருளுந்திருநாள் 1க்கும்* திருவாடித்திருவாதிரைத் திருநாளில் திருவீதி பா

* இந்த 3 திருநாட்களில் சதையத்திருநாள்தவிர மற்ற இரண்டுதினங்களிலும் திருநாவுக்கரசுதேவர் திருவீதிபார்க்க எழுந்தருளும் வழக்கம் இன்றும் நடைபெற்றுவருகிறது.

(7) ர்க்க எழுந்தருளுந் திருநாள் 1க்கும் ஆகத்திருநாள் 3க்கும் பொங்கப்பம் அரிசி, பருப்பமுது, கறி, உப்பமுது, மிளகமுது, சீரகம், நாடன்மஞ்சள், சிறைத்தேங்காய், நெய், சர்க்கரை,

(8) தயிரமுது, உப்பிருசி, அப்பவமுதுக்கு பொங்கப்பம், அரிசி, சர்க்கரை, நெய், மிளகமுது, சீரகம், அடைக்காயமுது பாக்கு, இலையமுது, தயிலம்,

(9) சிதாரி, கூட்டசந்தனம், அகில், நெரியாசம், தேன், கைக்கொற்றுப் பெறுவார்க்கு கலம் 1,........ஒருவர்க்குநெல்கலம் முக்கலனே நாழி புடவை முதல் காசு 4½, திருப்பரிசாரகன் இருவர்க்கு கலம், புடவை முதல் காசு 2,

(10) திருமடைப்பள்ளிவிறகுகொண்டிடுவானுக்கு நெல் 3 கலம், திருமடைப்பள்ளிக்கு...நெல் நானாழி, வண்ணத்தானுக்கு நெல் நாழி, பொங்க...........4 நாழி-கோயிற் கணக்கனுக்கு நெல் 4 நாழி, புடவை முதல் காசு 5, ஆக காசு 4½......இதில்

(11) ....நெல்கலம் நீக்கிக் காசு 4........ திருமடைப்பள்ளிக்கு விறகுகொள்ளக்காசு 4. ஸ்ரீபாதந்தாங்குவார்க்கும் திருப்பணித் தொங்கல்செய்வார்க்கும் நெல்......:—ஸ்ரீ[illegible] [illegible].

(12) [illegible] ஸ்ரீ[illegible]...[illegible] [illegible]......[illegible] ஆளுடைய நம்பிமாதாக்கள் இசைஞானியார் [illegible]

(13) [illegible] :—

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்,

இலக்கணவிளக்கபரம்பரை.

உ

சிவமயம்.

நக்கீரர்செய்த நிகண்டு.

தஞ்சை சரஸ்வதிமஹாற் பெயரியபுத்தகசாலையில்நக்கீரராலியற்றப்பட்ட சிறந்த ஸம்ஸ்கிருதநிகண்டு ஒன்று இருக்கிறது. பிரதிவேண்டுபவர்கள் தஞ்சை சப்ஜட்ஜியவர்களின் அநுமதிபெற்று பிரதிசெய்து கொள்ளலாம். காளத்தி அம்மன் தோத்திரத்துடன் நிகண்டு ஆரம்பிக்கிறது. நக்கீரர் பிராமணனேவென்று ஐயுறுவார்க்குக்காரணமில்லையென்று சொல்லுதற்கிடமில்லை. தென்னாட்டிலும் சம்ஸ்கிருதகிரந்தங்கள் ஆதிகாலத்தில் செய்யப்பட்டுவந்தனவென்பதற்கிதொரு சாக்ஷியமாயிருக்கிறது.

தமிழ்கற்போன்.

உ

மகாசனங்களுக்கு விண்ணப்பம்.

தமிழ் ஆங்கில மொழிகளையும், வைதிக மதாசாரக்கொள்கை ஒழுக்கம் முதலியவற்றையும், தற்காலம் பாலர்களுக்கு இனிமாய்ப் போதித்துவருகிறதென்றும், போதுமான பொருளுதவி ஏற்பட்டபின் மேனாட்டுச் சாத்திரங்களையுங் கைத்தொழில்களையும் இனிமாய்ப் பயிற்றுவிக்கிறதென்றும், மாணவர்களுக்கு உண்டி, உடை, புத்தகம், கருவிகள் முதலிய சாதனங்களையுஞ் செய்து கொடுக்கிறதென்றும் உத்தேசித்து நாளது நள-ஞு புரட்டாசிமீ 21உ (1916-ஞு அக்டோபர்மீ 6உ) யாகிய விசயதசமி யன்றையத்தினம் ஓர் தர்மபாடசாலை கரந்தைத்தமிழ்ச்சங்கத்தாரால் தொடங்கப்பட்டிருக்கிறது.

இந்தக் காரியத்தில் பொதுநன்மையையும் மேம்பாட்டையுங் கருதி மகாசனங்கள் தங்கள்தங்களால் இயன்ற பொருளுதவிகளைச் செய்யும்படி கோருகிறேன்.

கரந்தை,
நள-ஞு ஐப்பசிமீ சஉ } சங்கத்தலைவர்.

உ

த மி ழ க ம் .

வாழிய அன்னாய்! வாழிய அன்னாய்!
தொழுதனை வழுத்தினம் தூயசீர் அன்னாய்!
மிடியிருள் நீங்கி விடியல்வந் துற்றது.
என்னினித் துயில்வது? எழுந்துமுன் பாராய்!
நின்புகழ்க் கதிரவன் நேரவந் துற்றனன்.
அன்புருஉக் கொண்ட அன்னாய் எழுக!
எம்மனங் குடிகொளும் இறைவியே எழுக!
எம்வாய் புகழ்தர இனியைநீ எழுக!
எங்கரங் குவிதர ஏற்பாய் எழுக!
நின்னுடைச் சீரெலாம் நேரிதில் யாங்கள்
பிள்ளை முறையினிற் பெறுதலும் இலமோ?
பண்டுநின் சிறப்பெலாம் பரிக்கும் அடியேம்
மறந்தனைத் துறப்பமோ? மயங்கலை அன்னாய்!
வான்மீன் திரியினும், வானம் பொய்ப்பினும்,
நின்னருந் தொண்டினை நீங்கலம் அம்ம!
களைக! களைக! கடுந்துயிற் பிணியினை!
எழுக! எழுக! ஏறுக ஆதனம்!
கவிக! கவிக! காமர்வெண் குடைநிழல்!
ஓங்குக தமிழ்மணம்! உயர்கநின் குடிகளே!

வே. இராதாகிருஷ்ணன், B. A.

உ

ஓசனையென்பது காவதமோ நாற்காவதமோ?

அடியில் வருவன, சீவகசிந்தாமணி விமலையாரிலம்பகத்து 13-கவியும் அதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியருரையும் பிரஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய சாமிநாதைய்யரவர்களது குறிப்புமாம்.

சாரலந்திமிசிடைச்சந்தனத்தழைவயின்
னீரதீம்பூமரந்நிரந்ததக்கோலமு
மேரிலவங்கமும்மின்கருப்பூரமும்
மோருநாவிகலந்தோசனைகமழுமே.

திமிசு - ஒருமரம்.

இ-ள். திமிசுசூழ்ந்த சந்தனமரத்திற் றழைக்கு நடுவே நின்ற நீர்மையையுடைய தீம்பூமரமும், தக்கோலமரமும், இலவங்கமரமும் கருப்பூரமரமும், புழுகோடேகூடி நாற்காதவெல்லை நாறுமெனக.

(கு-பு.) நாற்காதத்தை யோசனையென்பது சைனநூல்வழக்கம்.

I. (1) மேலே எழுதியுள்ள விமலையாரிலம்பகத்து 13-ம் கவியுரையில், ஓசனையென்பதற்கு நாற்காவதமென ஆசிரியர் நச்சினார்க்கினியர் பொருள்கொண்டனரோவென்பதும், (2) சைனாசிரியர்கள் தம்நூல்களுள் எதிலேனும் ஓசனையினளவு இவ்வளவென வகுத்துக்காட்டியுள்ளனரோவென்பதும் ஆராயத்தக்கனவாம்.

(1) நறுமணமுடைப்பொருளொன்று ஓசனை மணங்கமழ்ந்ததென்றால், அது தானிருக்குமிடத்திருந்து தன்னைச்சுற்றிலும் ஓரோசனையளவு மணங்கமழ்ந்ததென்றே பொருள்படும். அம்மணம் நாற்புறத்தும் காதவளவு கமழுமென எவரும் தெளியுமாறு நாற்காதவெல்லையென்று பெருநோக்காய் ஆசிரியர்நச்சினார்க்கினியர் உரைவகுத்தாரென்றல்லாது, நாற்காதத்தைத்தான் யோசனையென்று அவர் கொண்டாரென எவ்வாறு துணியலாகும்? ஆகவே, "நாற்காதத்தை யோசனையென்பது சைனநூல்வழக்கம்" என்று கூறவேண்டுமாயின், வேறாதாரங்கள் வேண்டப்படுவனவாம்.

(2) சிந்தாமணிநாமகளிலம்பகத்துத் தனிப்பதிப்பொன்றில், 70-வது கவியினுரைக்குக்கீழ் "விமலையாரிலம்பகத்து 13-ம் கவியுரையில் ஆசிரியர்நச்சினார்க்கினியர் ஓசனைக்கு நாற்காதமென்று பொருள் செய்திருத்தலால், அதுவே ஈண்டுக்கொள்ளத்தக்கது," என்று

பிரஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய சாமிநாதையரவர்கள் தம்குறிப்பில் எழுதியிருத்தல் காணலாகும். வேறாதாரமொன்றும் ஆங்கெடுத்துக் காட்டப்படாமையின், வேறாதாரங்களொன்றும் கிடைக்கப்பெற்றில வென்பதும் ஊகிக்கலாகும். இக்காரணங்களை முன்னிட்டுநோக்கின், ஓசனையென்பது காவதமேயாமெனவிளங்கும்.

II. இனி ஓசனையின் அல்லது காவதத்தின் பரிமாணத்தைப் பற்றிச் சிறிதிங்காராய்வாம். இப்பரதகண்டத்து, புறநாட்டாரது ஆளுகை விரவிவரவே, ஓசனைமுதலியவைகளினது வழக்கொழிந்து விட்டதனால், தற்காலத்திய ஆங்கில நீட்டலளவையையொட்டி ஓசனையினளவு இவ்வளவென முடிவுறத்திட்டமாய்க்கண்டறிந்து எவருமிதுகாறும் கூறினாரில்லை. பெரும்போக்காகவே பரிசோதகரெவரும் கூறுவாராயினர்.

1912-வது வருஷத்து 'ராயல் ஏஷியாடிக் ஸொஸைடி ஜர்னல்' பகுதி I, பக்கம் 229-239-ல் ஓசனையினதளவைப்பற்றியதோராராய்ச்சி செய்யப்பட்டுளது. அதினின்றும், முன்னாட்களில் சின்னக்காவதம் (Short Yogana), பெரியகாவதம் (Long Yogana) என இருவகைப்பட்ட ஓசனைகள் அல்லது காவதங்கள் இருந்தனவாக வெளியாகின்றது. சின்னக்காவதம் 16,000 முழவளவினதும் பெரியகாவதம் 32,000 முழவளவினதுமாம். சின்னக்காவதத்திற்கு "மாகதயோஜநம்" என்பது மற்றொருபெயராம். இச்சின்னக்காவதமே பௌத்தநூல்களில் ஏராளமாகக் காட்டப்பட்டுளதாம். 24 அங்குலங்கொண்டது முழமாகும். நவீநபரிசோதகர்கள் ஏறக்குறைய $\frac{3}{4}$ இஞ்சு ஓரங்குலமாகுமெனக் கொண்டு, சிறிய ஓசனை $4\frac{6}{11}$ மயிலளவினதெனவும் பெரிய ஓசனை $9\frac{1}{11}$ மயிலளவினதெனவும் ஒருவாறு கணக்கிட்டிருக்கிறார்கள். (ராயல் ஏஷியாடிக் ஸொஸைடி ஜர்னல் பகுதி I, பக்கம் 236—237 பார்க்க.)

சந்திரகுப்தவரசனதுகாலத்து மௌரியவம்சஸ்தாபநாசாரியன் எனப்பேரும்புகழும் பெற்று அமைச்சனாக விளங்கின கௌடிலியனால் (சாணக்கியனால்) "அர்த்தசாஸ்திரம்" எனப் பெயரிய வடமொழி நூலொன்று இயற்றப்பெற்றுளது. அந்நூலில், 12 அங்குலம் 1 விதஸ்தி (சாண்), 2 சாண் 1 அரத்நி(முழம்), 4 முழம் 1 வில் (தண்டம்), 1,000 தண்டம் 1 கோருதம் (குரோசம்), 4 குரோசம் 1 (யோஜநம்) ஓசனை என்று வரையறுத்திருத்தலால், 16,000 முழங்கொண்ட சின்ன

ஓசனையே அதனில் குறிக்கப்பட்டதாகும். தவிரவும், இக்காலத்திய மைசூர் இராஜ்யமும் கன்னட ஜில்லாக்களும் சேர்ந்திருந்த இரட்டபாடி ஏழரையிலக்கம் என்னும் நாட்டில் கி. பி. 814-15 முதல் கி. பி. 877-78 வரையிலரசாண்ட அமோகவர்ஷன் என்னும் ஜைநவரசனது ஆட்சிக் காலத்து, அவ்வரசனது ஆதரவுபெற்று மஹாவீராசாரியரென்னும் ஜைநாசாரியராலியற்றப்பெற்ற 'கணிதஸாரஸங்கிரஹம்' எனப் பெயரிய வடமொழி நூலில் 24 அங்குலம் முழமெனவும், 4 முழம் தண்டமெனவும், 2,000 தண்டம் குரோசமெனவும், 4 குரோசம் ஓசனையெனவும் காட்டப்பட்டுளது. அதன்படி 32,000 முழங்கொண்டது ஓசனையாகும். இவ்வாசிரியர் தென்னாட்டிலிருந்த சைனராவர். 32,000 முழங்கொண்ட இவ்வோசனையே பின்னாளில் "லீலாவதி"யென்னும் கணித நூலிலும் கூறப்பட்டுளது.

இவ்விருவகையான ஓசனைகளல்லாது நாற்காவதங்கொண்டவோரோசனை வழக்கத்திலிருந்ததெனக் கூற ஆதாரமொன்றுமேயில்லை. ஆகலின் சிந்தாமணியில்வந்துள்ள ஓசனையென்பது 32,000 முழவளவினதாகிய காவதமேயாம்போலும்.

இதனை மூதுணர்வுடையராகிய பெரியோர் ஆராய்வாராக.

டி. எஸ். குப்புசாமிசாஸ்திரி.

௨

பதார்த்ததீபிகை.

"செந்தமிழ்" (தொகுதி-௧௪ பகுதி-௫-ல்) ௧௮௧-ஆம்பக்கத்தொடர்ச்சி.

முற்றொடர்.

கருமாதி நான்கு.

மீயெழல் வீழ்தல் வளைத னிமிர்தல் வினைநடத்தல்
ஆய்வுழி யைவகை யென்பர்சா மானிய மாயிரண்டே
ஏயும் பராபர மென்ன விசேடமெண் ணில்லனவாய்
வாய்தரு நித்தப் பொருளி னிடைச்சம வாயமொன்றே.

கருமம்.

கருமமாவது கூடுதலின்வேறாய்க் கூடுதற்கு அசமவாயிகாரணமாய் வழங்கும் பதார்த்தம். கூடுதல்பிரிதல்கட்கு அசமவாயிகாரணமான பதார்த்தம் என்பதும் பொருந்தும். இக்கருமம் மண், புனல், அனல், காற்று, மனம் என்னும் உருவத்தன்மையுடைய பொருள்களில் ஒற்றுமையாய் இருக்கும் என்பர். கண்களுக்குந் தோலுக்கும் புலப்படும் என்பதும் கூறுவர். இதன்வகை ஐந்து.

கருமவகை.

ஆய்வுழி வினை மீயெழல் வீழ்தல் வளைதல் நிமிர்தல் நடத்தல் ஐவகை என்பர். எ-து.

கருமம் எழுதல், விழுதல், வளைதல், நிமிர்தல், நடத்தல் என ஐந்து வகையாகும் என்பர் என்க.

ஆய்வுழி-ஆராயுமிடத்து. வினை-கருமம். மீ-மேலே. எழுதலை உத்க்ஷேபணம் என்றும், விழுதலை அபக்ஷேபணம் என்றும், வளைதலை ஆகுஞ்சனம் என்றும், நிமிர்தலைப் பிரசாரணம் என்றும், நடத்தலைக் கமனம் என்றும் வடநூலார் கூறுவர். எழுதல் மேலிடத்தை அடைதற்குக் காரணம். விழுதல் கீழிடத்தை அடைதற்குக் காரணம். வளைதல் நேர்மையற்று மடங்குதற்குக் காரணம். நிமிர்தல் நீளுதற்குக் காரணம். சுழலுதல், பறத்தல், ஊறுதல், முதலியனவாக வேறுங் கருமங்களுளவெனின்; அவையெல்லாம் நடத்தலின்கண் அடங்கும். கர்மம் அநித்திய பதார்த்தம். அது தான் தோன்றற்கு இடமாயிருந்த திரவியத்தின் அழிவினாலும், பின் வேறொன்றொடு கூடுதலாலும், சில விடங்களிலே தன்வேகத்தினாலும் அழிகின்றது.

சாமானியம்.

சாமானியமாவது நித்தியமாய் ஒன்றாய்ப் பலவற்றிற் சமவேதமாயிருக்கும் பொதுமை. தனக்கு வேறோர் பொதுமையில்லதாய் விசேடத்தின்வேறாய் நித்தியமாய்ப் பலவற்றில் ஒற்றுமையாயிருக்கும் பொதுமை எனவும் பொருந்தும். இதனை நையாயிகர் சாதி என்பர். இதன்வகை இரண்டு.

சாமானியவகை.

சாமானியம் பரம் அபரம் என்ன இரண்டேயாய் ஏயும் எ-து.

சாமானியம் என்பது பரசாமானியம் அபரசாமானியம் என இரண்டுவகையாய்ப் பொருந்தும்.

பரசாமானியமாவது அதிக தேசத்திலிருக்கும் பொதுமை. தேசம்-இடம். உண்மைத்தன்மை எனவும் பொருந்தும். உண்மை-உளதாந்தன்மை. வடநூலார் சத்தாஜாதி என்பர். சத்தா-உண்மை. பரம்-மிக்கது, பெரியது. அபரசாமானியமாவது அற்பதேசத்திலிருக்கும்பொதுமை. அஃது உளதாந்தன்மையை அவாவிநிற்கும். அபரம்-அற்பம், குறைந்தது. வியாபகசாமானியம், வியாப்பியசாமானியம்,

வியாப்பியவியாபகசாமானியம் எனச் சாமானியத்தை மூவகையாகவுங் கூறுவர். வியாபகசாமானியமாவது அதிகவிடத்திருக்கும்பொதுமை. வியாப்பியசாமானியமாவது அற்பவிடத்திலிருக்கும் பொதுமை. வியாப்பியவியாபகசாமானியமாவது ஒன்றற்கொன்று குறைவும் நிறைவுமாயிருக்குந் திரவியத்தன்மை முதலியன.

விசேடம்.

விசேடமாவது தன்னையும், தனது சார்பிடத்தையும் தன் வடிவத்தாலே வேறுபடுத்தும் பதார்த்தம். காரிய பதார்த்தத்தில் இருத்தலில்லதாய்ப் பதார்த்தங்களை வேறுபடுத்தும் உபாதியுடையபதார்த்தம் எனலும்பொருந்தும். நான்குபூதங்களின் பரமாணுக்களிலும் ஆகாசம் முதலிய நித்தியத்திரவியங்களிலும் இருத்தலால் நித்தியமாகும். இஃது இந்திரியங்கட்குப் புலப்படாமையால் அதீந்திரியம்.

விசேடம் எண்ணில்லனவாய் நித்தப்பொருளினிடைவாய்தரும் எ-து.

விசேடம் என்னும் பதார்த்தம் எண்ணில்லனவாய் நித்தியப் பொருள்களினிடம் இருக்கும் என்க. நித்தியத்திரவியங்கள் எண்ணிலவாதலால் விசேடமும் எண்ணில்லனவாயின. வாய்தரல்-பொருந்தல்.

பதினாறு பதார்த்தவாதியாகிய கௌதமமுனிவரும் வேறுசில தார்க்கிகரும் விசேடபதார்த்தத்தை அங்கீகரித்திலர். விசேடபதார்த்தம் அங்கீகரித்தவர் கணாதர் முதலிய தார்க்கிகர். அதனால் அவர்நூல் வைசேடிகம் எனப்பட்டது. அதனை அநுசரிப்போர் வைசேடிகர் எனப்பட்டார்.

சமவாயம்.

சமவாயமாவது நித்தமாயசம்பந்தம். ஒன்றனையொன்று பற்றியிருக்கும் இரண்டுபதார்த்தங்களின் இயைபு எனலும் பொருந்தும். அப்பதார்த்தங்கள் உறுப்பு உறுப்பி, வினை வினைமுதல், சாதிவியக்தி, விசேடநித்தியப்பொருள் என்பன. வியக்தி-வடிவம். சமவாயம் ஒன்று.

சமவாயம் ஒன்றே எ-து.

சமவாயம் என்பது ஒன்றுதானே என்க.

திரவியம் முதலிய ஐந்துபதார்த்தங்களிலும் உண்மைத்தன்மை போன்று ஒற்றுமையின் ஒருமை தோன்றலால் ஒன்றே என்றார். சமவாயத்தினை நையாயிகர் பிரத்தியக்கம் என்பர். வைசேடிகர் அதீந்திரியம் என்பர். பிரபாகரர் சமவாயம் பல என்பர். அநித்தியம் என்பதுங் கூறுவர். (வரும்.)

அ. குமாரசுவாமிப்பிள்ளை.
சுன்னாகம்.

162399
O31m211,N12